திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி
பேரூராதீனம் முதுமுனைவர் கயிலைக் குருமணி
தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை சீர்வளர்சீர்

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார்



நூற்றாண்டு விழா

1925-2025

திருவள்ளுவராண்டு 2056
புரட்டாசித்திங்கள் 31-ம் நாள்
17-10-2025 வெள்ளிக்கிழமை


ஞாலம் நின் புகழே வேண்டும்
உரைக் கோவை





கயிலை மாமுனி சீர்வளர் சீர்

சாந்தலிங்க அடிகளார்



ஞாலம் போற்றும் ஞானத்தந்தை

கயிலை குருமணி

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி
பேரூராதீனம் முதுமுனைவர் கயிலைக் குருமணி
தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை சீர்வளர்சீர்

சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

நூற்றாண்டு விழா



கட்டுரைத் தொகுப்பு

இராமசாமி அடிகளார் நூற்றாண்டு விழா

பக்கம் : 404

வெளியீடு : 2025

<u>தொகுப்பாக்கம்</u>

பேரூராதீனம்
கோயம்புத்தூர்

<u>அச்சிட்டோர்</u>

பிவி கிராஃபிக்ஸ்
கோயம்புத்தூர் - 641 001.

91/1

அருள் வாழ்த்துரை

பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம் என்பது மாணிக்கவாசகர் திருவாக்கு. இவ்வாக்கிற்கேற்ப நமது பழவினைகளை நீக்கி முத்திநெறியை வழங்கும் நெறி பத்திநெறி. இத்தகைய பத்திநெறி அனைவருக்கும் சமமானதாகவும் பொதுவானதாகவும் அமைதல் வேண்டும். திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் பத்திநெறியை அனைவரும் கொண்டு சேர்க்கும் நோக்கில் அனைவரும் அருச்சகர் ஆகலாம், அனைவரும் திருக்கோயிலில் சென்று வழிபாடுகள் செய்தல், தமிழ்த்திருக்குடநன்னீராட்டு ஆதியவற்றை நடத்திய பெருமைக்குரியவர்கள்.

1953ஆம் ஆண்டு பல்வேறு தடைகளுக்கு இடையில் வெள்ளக்கிணறு வெ.சி.சுப்பையகவுண்டர், கோவைகிழார் ஆதிய சான்றோர்களின் ஒத்துழைப்போடு பேரூர்ப் பட்டிப்பெருமான் திருக்கோயிலில் தமிழில் மலரருச்சனை வழிபாட்டைத் தொடங்கி ஆதீனத்தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்தவர். அடுத்த ஆண்டாகிய 1954ஆம் ஆண்டில் ஏன் தமிழில் வழிபாடுகளைச் செய்யக்கூடாது என்ற கேள்வியுடன் முதன்முதலாக கணபதியில் சிரவையாதீனம் மூன்றாம் குருமகாசந்நிதானங்களை இணைத்துக் கொண்டு திருநெறிய ஒண்தீந்தமிழ்நெறி வழிபாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்த பெருந்தகையாளர். தமிழ்நெறி வழிபாடுகள் தமிழகம் மட்டுமல்லாது அயலகத்திலும் சென்று சேர வேண்டும் என்பதற்காக அயலக அடியார்களை அழைத்துவந்து அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கினார்கள். அடிகள் பெருந்தகை மீட்டெடுத்த தமிழ் வழிபாட்டு முறைமைகள் இன்று உலகெங்கும் நடைபெற்று வருகிறது.

அதுபோல அனைவரும் அருச்சகர் ஆகலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியவுடன் அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சென்று அனைவரும் அருச்சகர் ஆகலாம் என்ற திட்டத்திற்கு ஒரு குழு அமைத்து, இன்று ஆறு இடங்களில் அரசு அருச்சகர் பயிற்சிப் பள்ளி நடக்கப் பெரிதும் காரணமாக அமைந்தவர். மேலும் எப்பொழுதெல்லாம் தமிழ்வழிக் கல்வி, தமிழ் வழிபாட்டு உரிமைகளுக்குத் தடை வருகிறதோ அப்பொழுதெல்லாம் முன்னின்று அவற்றைத் தகர்த்த பெருமையாளர். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் கருவறை புகுந்து வழிபாடுகளைச் செய்யவேண்டும் என்ற நோக்கில் கடந்த 30 ஆண்டுகளாகப் பெண்களைக் கொண்டு வேள்வி வழிபாடுகளைச் செய்வதோடு பெண் பயிற்சியாளர்களைக் கொண்டு அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கியவர்.

அடிகள் பெருந்தகை அவர்கள் விசுவ இந்து பரிசித் அமைப்பின் தமிழ்நாடு அறவழி காட்டும் ஆன்றோர் பேரவைத் தலைவராகவும், மத்திய அமைப்பின் உறுப்பினராகவும் இருந்து சமயப்பணிகளை ஆற்றியவர். மேலும் அயோத்தி திருக்கோயில் குழு, காசித் திருக்கோயில் குழு உள்ளிட்ட பல்வேளறு குழுக்களில் அமைந்து ஆலோசனைகளை வழங்கியவர்கள். நாமும் அவர்தம் வழியில் இக்குழுக்களில அமைந்து செயலாற்றி வருகின்றோம்.

மேலும் அடிகள் பெருந்தகை அவர்கள் தீண்டாமை ஒழிப்பைத் தலையாய கடமையாகக் கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் என்று கூறப்படுகின்ற மக்கள் வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்களில் இல்லங்கள் தோறும் சென்று திருவிளக்கு வழிபாடுகளைச் செய்து அனைவரிடத்தும் சமத்துவம் மேலோங்க வழிவகைகளைச் செய்தவர். தென்ஆப்பிரிக்கா, ரீயூனியன், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆதிய அயல்நாடுகளில் இருந்து 300க்கும் மேற்பட்ட அன்பர்களை அழைத்து வந்து வாழ்வியல் அருளியல் பயிற்சிகளை வழங்கியவர். அதன் தொடர்ச்சியாகத் தற்பொழுது இருபத்தைந்தாம் குருமகாசந்நிதானங்களாகிய நாமும் இணைய வழியாகவும் நேரடியாகவும் இப்பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

அடிகள் பெருந்தகை அவர்களின் எண்பதாம் அகவை முத்துவிழாவின் போது ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமையைப் போக்கும் வகையில் அதற்குண்டான செயல்திட்டங்களைச் செய்தார்கள். மேலும் கிராம மையம் ஒன்று தொடங்கப்பட்டது. அதுபோல தொண்ணூறாம் அகவை மரகத விழாவின்போது மருத்துவமனை, வனம் இந்தியா, விருப்புடன் திருப்பணி, பல்கலைக்கழகம் அமைப்பது என்ற நான்கு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றுள் முதல் மூன்று திட்டங்கள் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு அடிகள் பெருந்தகையின் நூற்றாண்டு விழா. இதையொட்டிப் பல்கலைக்கழகம் அமைக்கும் பணியை முன்னெடுக்க உள்ளோம். அன்பர்கள் துணைநிற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பல்வேறு அருட்செயல்களைச் செய்த அடிகள் பெருந்தகை அவர்களுக்கு இவ்வாண்டு நூறாம் நாண்மங்கல ஆண்டாக அமைவதையொட்டி அடிகள் பெருந்தகையின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக நெதர்லாந்து சூரியத்தமிழ் இணையவழித் தொலைக்காட்சி 100 அறிஞர்கள் பெருமக்களைக் கொண்டு அடிகளார் குறித்த சொற்பொழிவு நிகழ்ச்சியை மிகச் சிறப்பான முறையில் நடத்தியது. நமது கல்லூரியின் மேனாள் மாணாக்கரான முனைவர் சந்திரா கிருட்டிணன் அவர்கள் இந்நிகழ்வின் நெறியாளராக இருந்து மிகச் சிறப்பான முறையில் நடத்தினார்கள். நமது ஆதீனக் கல்லூரியின் மேனாள் மாணாக்கர் முனைவர் அ.புவனா சீவானந்தம் அவர்கள் இந்நிகழ்வுக்குத் துணைநின்றார்கள். அவ்வாறு பேசிய 100 பேரின் உரைகளைத் தாங்கி இம்மலர் வெளிவர இருப்பது பெருமகிழ்வுக்குரியது.


அடிகள் பெருந்தகையின் இந்நூற்றாண்டு நிகழ்வை ஒட்டி நமது திருமடத்தில் கோடி அருச்சனைப் பெருவிழா, தொடர் திருவிளக்கு வழிபாடு, தொடர் திருமுறை முற்றோதல் ஆதியவற்றை நடத்தினோம். சிரவையாதீனம், தென்சேரிமலை ஆதீனம் போன்ற ஆதீனங்கள் அடிகள் பெருந்தகையின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்தினார்கள். அதுபோலத் திருக்கோயில் பக்தர் பேரவை, மேன்மைகொள் சைவ நீதி திருக்கூட்டம், தொல்காப்பியர் தமிழ்ச்

சங்கமம், கணபதி தமிழ்ச் சங்கம், ஆதிசிவப்பிரகாச சுவாமிகள் அருட்பணி மன்றம், ஈசா யோகா மையம் எனப் பல்வேறு மன்றங்கள், அமைப்புகள், திருக்கோயில்கள், நமது ஆதீனத்தைச் சார்ந்த அன்பர்களின் தனிப்பட்ட ஏற்பாட்டில் செய்யப்பட்ட நிகழ்வுகள் என ஆண்டு முழுவதும் உலகம் முழுவதும் பல்வேறு இடங்களிலும் பல்வேறு வகைப்பட்ட பொருண்மைகளில் அதேசமயம் அடிகளாரின் உளக்கிடக்கையை வளப்படுத்தும் வகையில் சமூகத்திற்குப் பயனளிக்கும் நோக்கில் நிகழ்வுகளை ஒருங்கிணைத்து நடத்திய, அவற்றில் கலந்துகொண்ட அனைவருக்கும் நமது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவ்வகையில் இதுபோன்ற நிகழ்வுகளை நடத்தியோரும் இம்மலர் சிறக்கவும், இம்மலர் உருவாக உழைத்த முனைவர் வெ.சுகந்தா அம்மையார், திருமதி லோ.சிறீவித்யா உள்ளிட்ட அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளையும் அருட்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் நூற்றாண்டு நாயகர் கயிலைக்குருமணி தமிழ்நெறிவழிபாட்டுத் தந்தை தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,



வாழ்த்துரை

இராமசாமி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்துக் கொண்டு 100 பேர் 100 கட்டுரை பேசிய விழா எமது சூரியத்தமிழ் இணையவழித் தொலைக்காட்சியில் இடம் பெற்றது. இவ்விழாவினை ஏற்பாடு செய்த சாந்தலிங்க திருமடத்தின் தலைவர் மருதாசல அடிகளார் அவர்களுக்கும், முனைவர் சந்திரா கிருட்டிணன் அம்மாவிற்கும்,முனைவர் புவனா ஜீவானந்தம் அம்மா அவர்களுக்கும் மனமுயர்ந்த வாழ்த்தையும்,பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வளர்தமிழ் நன்னூல் வளர்க்கின்ற ஆசான்
இளநகை காட்டி இனியசொல் பேசி
உளமுடன் ஈர்த்திடுவார் ஒண்டமிழால் பாரில்
வளம்தந்த ஆசான் வரம்

அழகுடன் அன்னை தமிழ்ப்பாலை ஊட்டி
பழக்கமும் மேன்மை பழகிடவும் நன்றாய்
வழங்கிடும் வள்ளல் வளர்பிறையாய் நீண்டு
உழவரைப் போல உயர்வு

உயர்குண தங்கம் உளமறிந்த சான்றோர்
மயக்கிடும் சொல்லால் மனம்கவர்ந்த பாட்டில்
கயமுகன் தந்தம் கமலமுமாய் உள்ளம்
நயமுடன் வாழ்த்துவோம் நாம்

அன்புடன்

நெதர்லாந்து சூரியத்தமிழ் இணையவழித்
தொலைக்காட்சி நிறுவனர்
முனைவர் சாந்தி இரவீந்திரன்

தொகுப்புரை

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் எங்களுடைய ஆசிரியர். அவர் கொங்கு மண்டலத்தில் தமிழ் வளர தமிழ்க் கல்லூரியை அமைத்தவர். கொங்கு நாட்டு அப்பர் அடிகள் என்ற பெயருக்கு உரியவர். சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்தவர், எளியவர். பழகுவதற்கு தந்தை போன்றவர். அவரது நூற்றாண்டு விழாவையொட்டி நெதர்லாந்து சூரியத் தமிழ் தொலைக்காட்சியில் 100 சான்றோர்கள் அடிகளார் குறித்து சொற்பொழிவாற்றினர். சமயத் துறவிகள், துணைவேந்தர்கள், கலைஞர்கள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியப் பெருமக்கள், பள்ளிக் கல்வி இயக்குனர், தலைமை ஆசிரியர், பள்ளி ஆசிரியர், கோவில் அறங்காவலர்கள், தொல்பொருள் ஆய்வுத் துறையினர், நீதித்துறை சார்ந்தோர், சமூக சேவகர், அரசியல்வாதி, வங்கித் துறை சார்ந்தோர், பட்டயக் கணக்காளர் எனப் பலத்துறையினர் இடம் பெற்றனர்.

இந்நிகழ்வு 19/10/2024 முதல் 12/11/2024,வரை நடைபெற்றது. சான்றோர்கள் பேசிய சொற்பொழிவு தற்போது நூல் வடிவில் தங்கள் கைகளில் தவழ்கிறது. சொற்பொழிவாளராகவும் கட்டுரை ஆசியராகவும் அமைந்த ஒவ்வொருவருக்கும் நன்றி பாராட்டுகின்றோம். கேட்டவுடன் களம் தந்தும் வாழ்த்துரை நல்கியும் சிறப்பித்த நெதர்லாந்து சூரியத் தமிழ் நிறுவனர், முனைவர் சாந்தி ரவீந்திரன் அவர்களுக்கு நன்றி மலர்கள். இந்த நிகழ்வை நடத்தவும், கட்டுரைத் தொகுப்பை தொகுக்கவும் அருளாசி நல்கிய சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் பொன்னார் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றோம்.தோன்றாத் துணையாய் இருந்து செயல்படச் செய்த எம் குரு, முதல்வர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் திருவடிகளை

வணங்கி மகிழ்கின்றோம். வாழ்த்தும் உள்ளங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அறிமுகவுரை நிகழ்த்திய முனைவர் மனோன்மணி அவர்களுக்கு நன்றி மலர்கள். சான்றோர் பெருமக்களை அழைக்க எண் கொடுத்து உதவியவர்கள் திரு. எல் சிவசாமி, திருமதி வனஜா ராணி சந்திரசேகர், திரு. சத்தியமூர்த்தி, திரு. சிற்பி ரங்கநாதன், முனைவர் தங்கவேலு, புலவர் திருமதி பத்மா ஆறுமுகம், திருமதி சுகந்தி ராஜ், திரு. விஜய சண்முகம், திருமதி கீதா கைலாஷ், திரு. முத்து பழனியப்பன், திரு. சிவபார்த்திபன், திரு. அழகிரிசாமி, திரு. சரவணகுமார், திரு. ஆதி, திருமதி ஸிரி வித்யா ஆகியோர் பல உதவிகளைச் செய்தனர். 100 நிகழ்வுகள் என்ற பேரைக் கொண்டு செல்ல உதவிய ஒவ்வொருவருக்கும் நன்றி மலர்கள்.

நல்லதொரு வாய்ப்பை அருளாசி வழங்கி செயல்படுத்த ஆணையிட்ட அடிகள் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றோம்.

முனைவர் புவனா ஜீவானந்தம்

முனைவர் சந்திரா கிருட்டிணன்

பதிப்புரை

கொங்கு மலிய எங்கும் மலியும்' என்பது முதுமொழி. கொங்கு நல்லன எல்லாம் நிறைந்திருக்கின்ற சிறப்புப் பெற்றது. அத்தகைய கொங்கில் சைவமும், தமிழும் தழைத்தோங்க அடிகோலியது பேரூர் மடம். அத்திருமடத்திலே 'அன்பே சிவம்' எனத் தெளிந்து நமக்கெல்லாம் அறிய வைத்தவர், நமது "நூற்றாண்டு விழா நாயகர்" தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை தெய்வத் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்.

அடிகளாரின் சிறப்பினையும், மேன்மையினையும் அகில இந்திய அளவில் அனைவரும் அறியும் பொருட்டு அடிகள் பெருந்தகையுடன் தொடர்புடைய நூறு அன்பர்களைப் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் தொடர்புகொண்டு '100 தொடர் நிகழ்வுகள்' நெதர்லாந்து சூரியத் தமிழ்த் தொலைக்காட்சி இணைய வழி ஒளிபரப்ப இன்றைய குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் மருதாசல அடிகளார் அவர்கள் திருவுளம் கொண்டார்கள். அவ்வன்பர்கள் ஒளிபரப்பில் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பற்றிப் பேசியது பல்வேறு சிறப்புகளை செயல்பாடுகளை 400 பக்கங்களில் 100 கட்டுரைகள் அடங்கிய அழகிய நூலாக்கி வெளியிட அருளாணை தந்தார்கள். அவ்வகையில் இந்நூல் 'ஞாலம் நின் புகழே வேண்டும்' எனும் தலைப்பில் வெளிவருகிறது.

ஒவ்வொரு கட்டுரையும் கட்டுரையாளரின் உணர்வுபூர்வமான குருபக்தி நிறைந்த தன்மையினையும், அவர்தம் அருட் குணங்களையும், தொண்டினையும், கருணையினையும், சமூக

அக்கறையினையும் எடுத்தியம்புகின்றன. இக்கட்டுரைத் தொகுப்பினைப் பேரூரடிகளின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம். தூய துறவறச் செல்வராக, பழுத்த தமிழ்ப் பேரறிஞராக பேரூர் திருமடத்தின்வழி அழியாப் புகழ்பெற்ற தமிழையும் சைவத்தையும் ஒருங்கே வளர்த்த குருவினை வணங்குகின்றோம்.

இக்கட்டுரை மாலையினை அழகுறத் தொகுத்த அனைவருக்கும் அன்பு வாழ்த்துக்கள். இதனைப் படிக்கும் வாசகர்களுக்கும் நன்றி நவிலக் கடமைப்பட்டுள்ளோம்.

முனைவர். வெ. சுகந்தா

வெ.லோ. சிறீவித்தியா

பொருளடக்கம்

1

தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகள்

பேரூர் ஆதினம்

காலம் செய்த தவத்தின் காரணமாக ஞாலம் போற்றும் ஞானத் தந்தையாக நமக்குக் கிடைத்தவர் திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்து நான்காம் குரு மகா சந்நிதானங்கள் கயிலைக் குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள். இதனை இதனால் இவன்முடிக்கும் என்று வள்ளுவரின் வாக்கிற்கேற்ப இறைவனால் தமிழ்வழிபாட்டிற்காக அனுப்பி வைக்கப்பட்டவர் நமது அடிகள் பெருந்தகை அவர்கள்.

இளமையிலேயே தனது வாழ்க்கைகான நெறியை வகுத்துக் கொண்டு தன்னை ஆன்மீக நெறியில் ஆட்படுத்திக் கொண்டவர்கள். சிரவையாதீனத்தின் ஆதிகுருமுதல்வர் தவத்திரு இராமானந்த அடிகளார் அவர்கள் முதலிபாளையம் இராமனந்த மடாலயத்திற்கு வருகை புரிந்தபோது அவருக்கு அணுக்கத் தொண்டு செய்து பத்துமாதங்கள் தங்கியிருந்து அங்கிருந்து இராமானந்த அடிகளார் அவர்கள் சென்றபோது அவர்தம் அடியொற்றி சிரவையாதீனம் சென்று அங்கும் அவருக்கு அணுக்கத் தொண்டாற்றினார்கள்.

பின்னர் நமது ஆதீனத்தின் இருபத்து மூன்றாம் குரு மகா சந்நிதானங்களாக அருளாட்சி செய்த தவத்திரு ஆறுமுக அடிகளார் அவர்களின் அருளாட்சியில் இளையபட்டமாகப் பொறுப்பேற்றார்கள்.

தமிழகத்தில் முதன்முதலாக ஒரு ஆதீனத்தால் தொடங்கப் பெற்ற தமிழ்க்கல்லூரி என்ற பெருமைக்குரியது மயிலம் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி. அந்தத்

தமிழ்க்கல்லூரிக்குச் சென்று தமிழ் பயின்றார்கள். தமிழமுதம் மிகவும் சுவையானது. அதை நாம் மட்டும் சுவைத்து இன்புறலாம் என எண்ணாமல் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற வாக்கிற்கேற்ப அனைவரும் பயன்பெறும் நோக்கில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரியைத் தொடங்கிய பெருந்தகையாளர்.

கோவையில் தமிழ்நெறி வழிபாட்டிற்காகவும் தமிழிசைக்காகவும் தமிழின் மேன்மைக்காவும் அயராது குரல் கொடுத்துக் கொண்டு இந்தியாவின் முதல் நிதியமைச்சராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் சிவமிகு ஆர்.கே.சண்முகம் செட்டியார். இந்துசமய அறநிலையத்துறை ஆணையராகப் பணியாற்றி அதை மேலும் வளப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் தமிழுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் வரலாற்றுப் பேரறிஞர் கோவைகிழார் என்றழைக்கப்படும் கோ.ம.இராமசந்திரஞ் செட்டியார். கொங்குநாட்டில் வேளாண்மையும், வேளாண்மையோடு நமது வாழ்க்கையும் சிறந்து விளங்க வேண்டும், கொங்குநாட்டில் சைவமும் தமிழும் தழைக்க வேண்டும், கொலையும் புலையும் இல்லாது இருக்க வேண்டும் என்பதற்காக வள்ளலார் இடத்தில் ஈடுபாடும் சாந்தலிங்கப்பெருமானிடத்தில் அர்ப்பணிப்பும் கொண்டு திகழ்ந்தவர்கள் சிவமிகு வெ.சி.சுப்பைய கவுண்டர். இவர்கள் முப்பெரும் தூண்களோடு இணைந்து அப்போது அருளாட்சி செய்துகொண்டிருந்த இருபத்து மூன்றாம் குரு மகா சந்நிதானங்களின் அருளாணையின் வண்ணம் 1953ஆம் ஆண்டு இருபத்து நான்காம் குரு மகா சந்நிதானங்களால் தொடங்கப்பெற்றது நமது ஆதீனக் கல்லூரி.

ஆதீனங்களின் வழி நிறைய கல்லூரிகள் நடைபெறுகின்றன. அமைப்புகளின் வழி நிறைய கல்லூரிகள் நடைபெறுகின்றன. ஆனால் அடிகள் பெருந்தகை அவர்கள் கல்லூரி தொடங்கியபோது அதைக் கல்லூரித் தொடக்கமாக மட்டும் கொள்ளவில்லை. அப்போது தமிழகத்தில் ஒரு மறுமலர்ச்சி உருவாகிக் கொண்டிருந்தது. அது தமிழால் அனைத்தும் இயலும் என்பது. இம்மறுமலர்ச்சிக்கு

அடிகோலியவர்கள் மறைமலையடிகள். அவர்கள் வாழ்வியல் நிகழ்வுகளைத் தமிழில் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தித் தொடங்கி நெறிப்படுத்தி வந்தார்கள். அதே காலகட்டத்தில் சைவத்தையும் தமிழையும் கொண்டு செல்லவேண்டும். அருள்நெறியிலும் தமிழ் வளர வேண்டும் என்பதற்காகத் தன்னை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டு தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் சென்று தமிழின் சிறப்பையும் தமிழ் வழிபாட்டின் சிறப்பையும் எடுத்துரைத்தவர்கள் குன்றக்குடி அடிகளார் அவர்கள்.

இத்தகைய சிறப்புமிக்க குன்றக்குடி அடிகளாரின் வலதுகையாகவும் இடதுகையாகவும் திகழ்ந்தவர்கள்தான் நமது அடிகள் பெருந்தகை அவர்களும் சிரவையாதீனம் மூன்றாம் குருமகாசந்நிதானங்கள் தவத்திரு சுந்தரம் அடிகளார் அவர்களும். குன்றக்குடி அடிகளார் அவர்கள் கொள்கை வகுத்துக் கொடுக்க, அதற்குக் களம் அமைத்துக் கொடுத்த பெருமை இவர்கள் இருவரையும் சாரும். அவ்வகையில் நமது ஆதீனத் தமிழ்க்கல்லூரி தொடங்கப்பட்ட நாளில் தமிழகத்தில் முதன்முதலாகப் பேரூர் பட்டிப்பெருமான் திருக்கோயிலில் மலர் வழிபாடு என்றழைக்கப்படும் தமிழ் மலர் அருச்சனையைத் தொடங்கி தமிழ்நெறி வழிபாட்டிற்கு வித்திட்டவர்கள் நமது அடிகள் பெருந்தகை அவர்கள்.

அவ்வாறு தொடங்கியதோடு மட்டுமல்லாமல் அதன் வளர்ச்சியாக அடுத்த ஆண்டு 1954இல் இருபெரும் சந்நிதானங்களும் இணைந்து திருநெறிய தமிழ்த் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவை நடத்தி, இன்று பல்லாயிரக்கணக்கில் நடைபெறும் திருநெறிய தமிழ்த் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவிற்கு அடிகோலினார்கள். இன்று தமிழர்கள் வசிக்கும் 197 நாடுகளிலும் ஏழு கண்டங்களிலும் தமிழ்நெறி வழிபாடு சிறப்பான முறையில் நடைபெற்று வருவதற்குக் காரணம் அடிகள் பெருந்தகை அவர்கள் மறுமலர்ச்சி செய்த தமிழ்நெறி வழிபாடு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

நமது ஆதீனத்தின் ஆதிகுருமுதல்வர் சாந்தலிங்கப்பெருமான்

வள்ளுவரின் நெறியை அப்படியே எடுத்துக் கையாண்டிருப்பார்கள். ஒன்று நூலுக்குப் பெயர் வைப்பது, கொலை மறுத்தல் என்பது கொல்லாமை, புலால் மறுத்தல் இரு அதிகாரங்களின் பெயரையும் இணைத்துச் செய்தது; வைராக்கிய சதகமும் வைராக்கிய தீபமும், யாதெனின் யாதெனின் நீங்கினான் நோதல் அதனின் அதனின் இல என்ற குறளின் வெளிப்பாடாக அமைந்தவை; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கருத்தின் அடிப்படையில் தோன்றிய நூல் அவிரோத உந்தியார். இவ்வாறு நான்கு நூல்களில் வள்ளுவரின் தாக்கம் இருப்பதையும் வள்ளுவத்தைச் சாந்தலிங்கபெருமான் கையாண்டிருப்பதையும் காணமுடியும். சாந்தலிங்கப்பெருமான் உம்பரும் போற்றும் ஒருதமிழ் வேதம் எனத் திருக்குறளைப் போற்றியுள்ளார்.

இத்தகைய சிறப்புமிக்க வள்ளுவப்பெருந்தகைக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் அடிகள் பெருந்தகை அவர்கள் கல்லூரி தொடங்கிய முதல்நாளில் குன்றக்குடி அடிகளார் மூலம் முதன்முதலாகத் திருக்குறள் வகுப்பெடுத்துக் கல்லூரியைத் தொடங்கி வைத்தார்கள். மயிலம் 18ஆம் பட்டம் குருமகாசந்நிதானங்கள் கல்லூரியைத் திறந்து வைத்தார்கள். இவ்வாறு தமிழைக் கொண்டுசேர்க்க வேண்டும் தீரா வேட்கை கொண்டு அயராது உழைத்தவர்கள் நமது அடிகள் பெருந்தகை அவர்கள்.

உலகத்தில் ஏழு கண்டங்கள் இருக்கின்றன. இந்த ஏழு கண்டங்களுக்கும் சென்று சமயப் பணியும் தமிழ்ப் பணியும் ஆற்றியவர்கள் வெகு சிலரே. அதில் முதன்மையாகத் திகழ்பவர் நமது அடிகள் பெருந்தகை அவர்கள். அங்கு நடைபெற்ற சைவ மாநாடுகள், சமயக் கருத்தரங்குகள், தமிழ் மாநாடுகள் என அனைத்திலும் கலந்து சிறப்பித்த பெருமைக்குரியவர்கள். இவ்வாறு மாநாடுகள், கருத்தரங்குகளுக்குச் செல்லும்போது அங்குள்ள மக்களைச் சந்தித்து ஆங்காங்கு திருக்கோயில்கள் அமைவதற்கும் அங்கெல்லாம் தமிழ்நெறி வழிபாடு சிறப்பதற்கும் வித்திட்டவர்கள்.

உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்ற போது

அப்போதைய முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று மாநாட்டை வழிநடத்தினார்கள். அப்போது அவரிடம் அனுமதி பெற்று மாநாட்டிற்கு வருகைதந்த அனைவரையும் திருமடத்திற்கு அழைத்துவந்து மிகப்பெரிய அளவில் அவர்களுக்கு வரவேற்பு அளித்தார்கள். அதுபோல 1970களில் தமிழருச்சனை வழிபாட்டை அனைத்துத் திருக்கோயில்களிலும் கொண்டு சேர்க்க வேண்டும் என நினைந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அது தற்போது எல்லா இடங்களிலும் சிறந்து விளங்குகின்றது. அடிகள் பெருந்தகை அவர்களின் தமிழார்வத்தையும் தமிழ் ஊக்கப்பணிகளையும் கண்டு வியந்த சென்னைப் பல்கலைக்கழகம் ஒரு அரிய பணியைச் செய்தது.

கன்னியாகுமரியில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்க கலைஞர் அவர்கள் அடிகளார் அவர்களைக் கேட்டுக் கொண்டதன் பேரில் அடிகளார் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்ததும், கோவையில் நடைபெற்ற உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் பத்திநெறிக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்க கலைஞர் அவர்கள் அடிகளார் அவர்களைக் கேட்டுக் கொண்டதன் பேரில் அடிகளார் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்ததும் அடிகள் பெருந்தகை அவர்களின் சிறப்பையும் சீர்மையையும் உணர்த்தும்.

ஒரு காலத்தில் தமிழ்ப் படித்தவர்களுக்கு வித்வான்கள், புலவர்கள், பண்டிதர்கள் ஆதிய சான்றிதழ் பட்டங்கள் தான் வழங்கப்பட்டன. அவர்கள் அனைவரும் சங்க இலக்கியம் முதல் பத்தி இலக்கியம் வரை ஆழங்கால் பட்டவர்கள். ஆனால் ஒரு பள்ளியில் அவர்கள் பணிபுரியும்போது கடைநிலை ஊழியருக்கும் அடுத்தநிலையில் அவர்களை வைத்துப் பார்த்தார்கள். இந்த அவலநிலை பலகாலம் தொடர்ந்துகொண்டே இருந்தது. அதுமட்டுமல்லாமல் அவர்கள் தமிழாசிரியர் பணியில் சேர்ந்து அதே தமிழாசிரியராகவே ஓய்வு பெற வேண்டிய சூழல் இருந்தது. அதை மாற்ற அடிகள் பெருந்தகை அவர்கள் குரல் கொடுத்தார்கள். அப்போது நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் கல்லூரிக் கல்வி இயக்குநராக இருந்தார்கள். மால்கம் ஆதிசேசையா அவர்கள் பல்கலைக்கழகத்தின்

துணைவேந்தராக இருந்தார்கள். மேனாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் கா.மீனாட்சி சுந்தரம் போன்றோர் இணைந்து இந்நிலையை மாற்ற கோரிக்கை வைத்தார்கள். அப்போது அடிகள் பெருந்தகை அவர்களின் பெயரில் குழு அமைத்து அறிக்கை கேட்டார்கள்.

அப்போது சில தாள்களை எழுதினால் பட்டப்படிப்பாக மாற்றலாம் என்று கோரிக்கை வைத்தார்கள். அப்போது துணைவேந்தர் மால்கம் ஆதிசேசையா அவர்கள், இதையெல்லாம் செய்தால் உங்களின் பதவியை இழக்க நேரிடும் என்றார்கள். அப்போது அடிகள் பெருந்தகை அவர்கள், என்னுடைய பதவி போனாலும் பரவாயில்லை, எல்லாருக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கவேண்டும் என்றார்கள். அதன்விளைவுதான் இன்று தமிழாசிரியர்கள் எல்லோரும் தலைமையாசிரியர்களாக உயர்வு பெறவும் பட்டங்கள் பெறவும் வழிவகுத்தது.

அதுபோல தமிழில் வழிபாடுகள் இருப்பது போல தமிழ்வழிக்கல்வியை மேம்படுத்தக் கல்லூரியின் அறுபதாம் ஆண்டுவிழாவில் தமிழ்ப்பயிற்றுமொழி வழிபாட்டுமொழி மாநாட்டை மிகப்பெரிய அளவில் நடத்தினார்கள். இவ்விழாவிற்கு நமது நாட்டின் மேனாள் குடியரசுத்தலைவர் மேதகு ஆ.பெ.செ.அப்துல்கலாம் ஐயா அவர்களை அழைத்து அவர்களின் மூலம் வளர்தமிழ் இயக்கத்தைத் தொடங்கி அதன்வழி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அதில் ஒன்று கல்விபயிலும் மொழி தமிழாக இருக்கவேண்டும் என்பது. மருத்துவம், பொறியியல், கலை அறிவியல் படிப்புகள் என அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும் என்பது. அதன் பயனாக இன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் பல்வேறு படிப்புகளைத் தமிழில் படிக்கின்றார்கள்.

அதுபோல நமது கல்லூரியில் அறிவியல் தமிழ் வேளாண் மாநாடு நடைபெற்ற போது வேளாண்பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம், நீங்கள் உழவர்களுடன் இணைந்து செயல்படுபவர்கள். உழவர்களுக்குப் பெரும்பாலும் தமிழ்தான் தெரியும். ஆனால் நீங்கள் அனைத்துப் பாடங்களையும் ஆங்கிலத்தில்

வைத்துள்ளீர்களே. இதை மாற்றலாமே என்றார். அதன் விளைவாகத் தற்போது சான்றிதழ் படிப்புத் தமிழில் உள்ளது. பட்டப்படிப்புகளையும் தமிழில் மாற்றுவதற்கான நடைமுறைகள் நிகழ்ந்து வருகின்றன. இவ்வாறு எல்லாத் துறைகளிலும் தமிழ் முன்னிற்க வேண்டும் என்ற நோக்கில் தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வந்தார்கள்.

அதுபோல தமிழ்நெறி வழிபாட்டைப் பிற்காலத்தில் கடவுள் மறுப்புக் கொள்கையுடையவர்கள் மீட்டெடுத்தார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தர், அப்பரடிகள் ஆதிய அருளாளர்கள் நல்கியது. அவர்கள் காலத்தில் போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின் புகுவேன் என்ற அடிப்படையில் ஆண்கள், பெண்கள் பேதமின்றி அனைவரும் இறைவனின் திருமேனியைத் தீண்டி வழிபாடுகளைச் செய்துள்ளனர். இத்தகைய நெறியை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று அயராது உழைத்த பெருந்தகையாளர் அடிகள் பெருந்தகை அவர்கள். இதற்குக் குரல்கொடுத்து முன்னின்று செயலாற்றி இன்றும் உலகெங்கும் தமிழ்நெறி வழிபாட்டைக் கொண்டு சேர்த்துள்ளார்கள்.

அவர்தம் கருத்தின் அடிப்படையில் இன்னும் நாம் செல்லவேண்டிய தூரங்கள் நிறைய உள்ளன. அவற்றை நாம் சாதிக்க வேண்டும். அதுபோல எல்லா நாட்டு ஊடகங்களும் அவரவர் மொழிகளில் நிகழ்ச்சிகளை நடத்துவது என்ற நிலையில் நாம் மட்டும் நமது ஊடகங்களில் 70 விழுக்காடுக்கும் மேற்பட்ட பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தி வருகின்றோம். இதை மாற்றவேண்டும் என்பதற்காக அந்த நோக்கத்தை உருவாக்கிக் கொடுத்தவர்கள் அடிகள் பெருந்தகை அவர்கள். அதுபோல அண்டை மாநிலங்களில் வணிக நிறுவனங்களில் அந்தந்த மொழிகள்தான் முன்னிறுத்தப்பட்டிருக்கும். அதற்கடுத்துதான் பிற மொழிகள்தான் இருக்கும். ஆனால் நமது மாநிலத்தில் இப்படி இல்லை. ஆகவே வணிக நிறுவனங்களில் பெயர்ப்பலகைகள் மூன்று இரண்டு ஒன்று என மூன்று வகையில் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

வேளாண்மை எப்படி மக்களோடு பின்னிப் பிணைந்துள்ளதோ அதுபோல சட்டமும் மக்களோடு பின்னிப் பிணைந்தது. அத்தகைய சட்டம் வழக்காடு மன்றங்களில் வழக்காடும் போது அவரவர் தாய்மொழியில் இருக்கவேண்டும் என்பதற்காக, உயர்நீதிமன்றத்தின் அமைச்சு மொழியாக, அரசு மொழியாக தமிழ் வரவேண்டும் என்று குரல் கொடுத்தார்கள். எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற வாக்கிற்கேற்ப நமது பெயர்கள் பொருளுடையனாவக அமைதல் வேண்டும். இக்காலத்தில் பொருள் இல்லாப் பெயர்களை குழந்தைகளுக்குச் சூட்டி வருகின்றனர். பெயருக்குண்டான பொருள் குழந்தைகளுக்கும் தெரிவதில்லை, பெற்றோருக்கும் தெரிவதில்லை. இச்சூழலில் பொருள் தெளிவுடைய தமிழ்ப்பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள்.

சமயத்திற்கு இத்தகைய பெரும்பங்கினை ஆற்றிய அடிகளார் அவர்கள் சமுதாயத்திற்கும் மிகப்பெரிய பங்காற்றியுள்ளார். சமுதாயத்தில் இருநிலைகள் உள்ளன. நாங்கள் உயர்ந்தவர்கள், நீங்கள் தாழ்ந்தவர்கள் என்பது. இந்த ஏற்றத்தாழ்வு நிலை மாற வேண்டும் என்பதற்காக எங்களைப் போன்ற துறவியர்களை அழைத்து ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் இடங்களுக்குச் சென்று அரவர் இல்லங்களில் விளக்குகளை ஏற்றி அவர்தம் ஏற்றத்தாழ்வு நீங்கவும் நமது தீண்டாமை உணர்வு நீங்கவும் வழிவகை செய்து கொடுத்தார்கள். மலையத்துவசனின் வழித்தோன்றல்களாகத் திகழும் மலைவாழ்மக்களின்பால் பெரிதும் ஈடுபாடு கொண்ட அடிகள் பெருந்தகை அவர்கள் அவ்வப்போதும் விழாக்காலங்களிலும் அவர்கள் வாழுமிடங்களுக்குச் சென்று திருவிளக்கு வழிபாடு உள்ளிட்ட வழிபாடுகளை நடத்தி அவர்களுக்கு உணவு, உடை, பொருட்கள் உள்ளிட்டவற்றை வழங்கியதோடு அவர்களின் பொருளாதாரம் முன்னேறவும் வழிவகை செய்தவர்கள்.

பெண்ணின் பெருந்தக்க யாவுள என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதில் அடிகள் பெருந்தகை அவர்கள் முனைந்து செயல்பட்டவர்கள். ஆண்டுதோறும் நடைபெறும் ஒன்பான் இரவுப் பெருவிழாக்களில் நமது கல்வி நிறுவன

மாணவிகளை வேள்வி உள்ளிட்ட வழிபாடுகளில் ஈடுபடுத்தினார்கள். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டுதோறும் மகளிர் கருத்தரங்கைச் சிறப்பான முறையில் நடத்தினார்கள். அதில் ஒவ்வொரு துறையில் மேலோங்கி உள்ள மகளிர் பெருமக்களை அழைத்து அவர்கள் மூலம் மாணவிகளுக்கு ஊக்கத்தை வழங்கிய பெருந்தகையாளர்.

இவ்வாறு சமயம், மொழி, சமூகம் என அனைத்துப் பணிகளையும் மிகச் சிறப்பான முறையில் அயராது செய்து இன்று நமக்குத் தோன்றாத் துணையாக இருந்து அருள்வழங்கி வரும் அடிகள் பெருந்தகை அவர்களின் நூற்றாண்டாக இவ்வாண்டு அமைகிறது. இவ்வாண்டில் அவர்தம் எண்ணங்களைச் செயலாக்க நாளும் சிந்திப்போமாக.

போற்றி ஓம் நமச்சிவாய.

2

தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்

சிரவை ஆதீனம்

பேரூரடிகள் கோவை மாவட்டம் அன்னூர் வட்டம் முதலிபாளையம் என்று சொல்லுகின்ற கிராமத்திலே 1925 ஆம் ஆண்டு பிறந்தார்கள். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் இளம் வயதிலேயே சமய ஈடுபாடு அவருக்கு கிட்டியது. அவருடைய பூர்வாசிரமத் தந்தையார் அவர்கள் நம்முடைய சிரவை ஆதினத்தினுடைய மாணாக்கராக இருந்த கீரணம் மருதாசல சுவாமிகளிடம் அளவில்லாத அன்பும், பக்தியும் அங்கு சென்று வருவதையும் ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார்.

கீரணம் மருதாசலம் சுவாமிகள் அவர்கள் இளம் வயதிலேயே இராமானந்தரிடத்தில் உபதேசம் பெற்று கீரணத்திலே, வருகின்ற பக்தர்களுக்கு எல்லாம் அருளாசி வழங்கி வந்தார்கள். அவர்கள் தினந்தோறும் கருட தரிசனம் கண்டு வழிபாடுகளைச் செய்வது வழக்கம். அவர்களிடத்தில் தீர்த்தம் வாங்கி அருந்தினால் பல நோய்கள் குணமாகியது.அங்கு தினமும் பலரும் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அந்தவகையிலே பேரூரடிகளார் பூர்வாசிரமத் தந்தையாரும் அங்கே சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது பேரூரடிகளின் தந்தை சிரவை ஆதீனத்தினுடைய ஆதிகுருவினுடைய சிறப்பை உணர்ந்து அவர்களை கௌமார மடாலயம் வந்து பலமுறை சந்தித்திருக்கின்றார்கள். அதன் பின்பு அவர்களை தம்முடைய பூர்வாசிரம இடத்திற்கு முதலிபாளையத்தில் உள்ள சிறைதோட்டத்திற்கு 1940 ஆம் ஆண்டு அவரின் அழைப்பின் பேரிலே சந்நிதானங்கள் அங்கு சென்றார்கள்.

அங்கு சென்ற நம்முடைய சிரவை ஆதீனத்தின் ஆதிகுரு திருபெருந்திரு இராமானந்த சுவாமிகள் ஒரு குடிலை அமைத்து பத்து மாதங்கள் தங்கி இருந்தார்கள். எளிமையான வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றார். குடிலில் ஒருபகுதி தங்குவதற்கும் ஒருபகுதி நூல்களை எல்லாம் படிப்பதற்குமாக வைத்திருக்கின்றார்கள். அடியார் சிலர் இன்னும் வசதியான முறையிலே குடில் அமைத்துக் கொடுக்கின்றோம் என்று சொன்னபொழுது இதே தனக்குத் தேவையான அளவு இருக்கின்றது என்று மறுத்துவிட்டார்கள். அப்பொழுது தம்முடைய இளம் வயதில் 15 வயதிலேயே பாலகனாக இருந்த நம்முடைய பேரூராதீனம் இருபத்தி நான்காவது பட்டம் சுவாமிகள் அங்கு சந்நிதானங்களுக்குப் பணிவிடை செய்து கொண்டு இருந்துள்ளார்கள். அந்தக் காலகட்டத்திலே சிரவை ஆதீனத்தின் இரண்டாவது பட்டமாக விளங்கிய கொங்கு நாட்டு கச்சியப்பர் என்று போற்றப்படுகின்ற கந்தசாமி சுவாமிகள் அங்கு சந்நிதானங்களால் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

அங்கு சென்ற கந்தசாமி சுவாமிகளுக்கு சந்நிதானங்களின் ஆணையின் வண்ணம் விநாயகருடைய ஆலயமும், வேலும் அங்கு அமைக்க வேண்டும் என்றும், மேலும் அவர்கள் அங்கு அடிக்கல் நாட்டி அதற்கான பணிகளைத் தொடங்கி இருக்கின்றார்கள். அதன் பின்பு இரண்டாம் பட்டம் சுவாமிகள் அங்கிருந்து மடத்திற்குத் திரும்பி விட்டார்கள். ஒரு நான்கு, ஐந்து மாதத்தில் அந்த திருப்பணிகள் எல்லாம் நிறைவேற்றி இருக்கின்றார்கள். அங்குள்ள விநாயகருக்கு ஒரு மாலையும் வேலுக்கு வேல் தெய்வமாலை என்கின்ற இரண்டு பா மாலைகளை நம்முடைய இரண்டாம் சந்நிதானங்கள் இயற்றி இருக்கின்றார்கள்.

சந்நிதானங்கள் அங்கு இருக்கின்ற பொழுது, விநாயகர் திருக்கோவிலுக்கும் நீராட்டு விழா நடைபெற்றிருக்கின்றது. பத்து மாதங்கள் தங்கி இருந்து அவர்கள் சிரவையாதீனத்திற்குத் திரும்புகின்ற பொழுது அவரோடு நம்முடைய சிறு வயதிலேயே இருக்கின்ற பேரூர் அடிகளாரையும் மடத்திற்கு அழைத்து வந்திருக்கின்றார்கள். இங்கு வந்து சிறிது காலம் அவர்கள் தங்கி

இருந்த பொழுது நம்முடைய பிற்காலத்தில் மூன்றாம் பட்டமாக இருந்த சுந்தர சுவாமிகளும், இளம் வயதில் இருவரும் ஒத்தவயது ஒரு ஐந்து வயது குறைவாக நம்முடைய சுந்தர சுவாமிகள் இருந்தார்கள். தவத்திரு கந்தசாமி சுவாமிகளிடத்திலே அருட்கல்விகளை எல்லாம் கற்றுக் கொண்டனர். அடிகள் அவர்கள் இங்கு இருந்தபொழுது சந்நிதானங்களுக்குப் பணிவிடை செய்திருக்கின்றார்கள். இதைப் பலமுறை அவர்கள் சொல்ல நாம் கேட்டு இருக்கின்றோம். சந்நிதானங்கள் அதிகாலையில் எழுந்து நீராடுவார்கள் வெந்நீர் வைத்துக்கொடுக்க வேண்டும். வெந்நீர் மிக வெப்பமாக இருந்தால் அது குளிர்ச்சியான தன்மை அடைந்த பின்புதான் நீராடுவார்கள். குளிப்பதற்கு ஏற்ற வகையில் இல்லாவிட்டால் குளிர்ந்த தண்ணீரை விட்டு ஆற்றக்கூடாது என்பது அவருடைய கருத்தாகச் சொல்லுவார்கள். சனிக்கிழமைதோறும் தலைக்கு நெய் தேய்த்துக் குளிப்பார் என்று அந்த பக்குவத்தை எல்லாம் சொல்லி குருவிடத்தில் அவர் கொண்டிருந்த பக்தியைத் பேரூர்அடிகள் அவ்வப்பொழுது நினைவுபடுத்துவார்.

அவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டு இருக்கின்றது என்றால் தவத்திரு இராமானந்த சுவாமியினுடைய வழிகாட்டுதலும் அவர்களுடைய உபதேசமும்தான் வாழ்க்கையிலே சமய உலகத்திலே அடிஎடுத்து வைப்பதற்கு ஒரு முதல் படியாக அமைந்திருக்கின்றது. அதன் பின்பு இரண்டாவது குருமகா சந்நிதானங்களிடத்திலே இரண்டு சுவாமிகளும் கற்ற கல்வியானது ஞானக் கல்வியை, சமயக் கல்வியை கற்றுக் கொள்வதற்கு மற்றொரு வாய்ப்பாக அமைந்தது.

அடிகள் இராமானந்த சுவாமிகளிடத்திலே கொண்டிருந்த குருபக்தி அளவிட முடியாததாக இருந்தது. பலசமயங்களில் அவர்கள் சொல்லக் கேட்டிருகின்றேன், குரு முதல்வர் தான் நம்முடைய சுவாமிகளை உணவிலே காரத்தை குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி அவர்களை நெறிப்படுத்தி இருக்கின்றார்கள். அதன் பின்பு ஓரிருமுறை அதைப் பயன்படுத்தியபொழுது உடம்பிலே பல உபாதைகள், எரிச்சல் ஏற்பட்டதன் காரணமாக, அவர்கள் கடைசி வரை

மிளகாயை சேர்த்துக்கொள்ளவில்லை என்பதை நாம் பலரும் அறிந்தது. பேரூரடிகளார் நம்முடைய சந்நிதானங்களிடத்தில் கொண்டிருந்த பக்தியை நாம் அளவிட்டுச் சொல்ல முடியாது. தன்னுடைய வாழ்நாளிலேயே இறுதி மூச்சு வரை வரை 95 ஆவது வயது (தனது மறைவுக்கு முன்பு வரை) சந்நிதானங்களின் குருபூசை விழாவில் தவறாமல் கலந்து கொள்வதை ஒரு குருபக்தியாகவே கொண்டிருந்தார்கள். எத்தனை பணி இருந்தாலும் இதற்காக ஒதுக்கி வைத்து விடுவார்கள். ஆரம்ப காலகட்டத்தில் சுவாமிகள் சந்நிதானங்கள் குருபூசைக்கு அங்கு இருந்து அடியார்களையும், மாணவர்களையெல்லாம் முதல் நாளே அழைத்து நடந்து வருவார்கள்.

நொய்யலிலே இருந்து தீர்த்தமும், இளநீர், சந்தனம் வழிபாட்டுக்குரிய பொருளையெல்லாம் எடுத்து வந்து இங்கு முதல் நாளே குருபூசைப் பணிகளில் எல்லாம் ஈடுபட்டுள்ளார்கள். பிற்காலத்தில் அதிகாலை நேரத்திலே வந்து இந்த குருபூசையினுடைய வேள்வி வழிபாட்டிலேயும் திருமஞ்சன வழிபாட்டிலும் கலந்து கொண்டு வழிபாட்டினை நிறைவு செய்துதான் செல்வதை அவர்கள் தவறாமல் கடைபிடித்து இருக்கின்றார்.

சுவாமிகள் கூறுகின்ற பொழுது 63 ஆண்டுகள் தவறாமல் சந்நிதானங்களுடைய குருபூசைகளில் கலந்து கொண்டேன் என்ற செய்தியை தந்து கடைசிமுறை குருபூசை விழாவிற்கு வந்தபொழுது குறிப்பிட்டார்கள். சிரவை மடாலயத்தில் சிறுகாலம் தங்கிப் பாடம் கேட்டபின் இங்கே இருந்து மயிலத்திற்குச் சென்று உயர்கல்வி கற்று, அங்கே இருந்து வந்து இளையபட்டமாகப் பேரூர் மடத்தில் பொறுப்பு ஏற்று அதன் பின்பு 24 ஆம் பட்டமாக பொறுப்பேற்றார்கள்.

ஆனாலும்கூட முதல் குருநாதர் இடத்தில் பெற்று உபதேசத்தின் காரணமாக கௌமார மடத்தினுடைய அன்பர்களுக்குச் சிறப்பு செய்து கொண்டே இருந்தார். நாம் இளம் வயதிலேயே 24 ஆவது வயதிலே பட்டம் பெற்று பேரூருக்குச் சென்ற பொழுது அவரிடத்திலே என்னைப் பக்கத்தில் அமரச் செய்தார். எனக்கு அச்சமாக இருந்தது. அவர்கள்

வயது மூத்தவர்கள் 70 வயது நிறைவுபெற்றவர்கள். அவரிடத்தில் அமர்வதற்கு எனக்கு அச்சமாக இருந்த பொழுது, இல்லை இது உங்களுக்காகக் கொடுக்கப்படவில்லை ஆதிகுரு முதல்வர் அவர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதை என்று சொல்லி அவர்கள் என்னை ஆற்றுப்படுத்தினார்கள். அப்பொழுதெல்லாம் எனக்கு ஏதேனும் தடுமாற்றங்கள் வருகின்ற பொழுதெல்லாம் என்னை நெறிப்படுத்தி நல்வழிப்படுத்தினார். சமய உலகிலே அவர்கள் முதல் வழிகாட்டியாக தந்தையாக இருந்து வழிகாட்டினார். ஆகவே அவருடைய காலத்தில் அவர்கள் செய்த அருட்பபணிகள் எல்லாம் பலரும் அறிந்த ஒன்று.

சமய உலகிலே வழிபாட்டு நெறிமுறையிலே தமிழ்நெறி வழிபாட்டைக் கொண்டு வருவதிலே அவர்கள் முழுமூச்சாக இருந்தார்கள். எந்த நிலையிலும் தன்னுடைய நிலையிலிருந்து அவர்கள் மாற்றம் கொள்ளவில்லை என்பதை நாம் உலகோர் அனைவரும் அறிந்த ஒன்றாக இருக்கின்றது. அப்படிப்பட்ட அருளாளர் ஆகிய அடிகள் இன்று நூற்றாண்டு விழா காண்கின்றார்கள். அவருடைய அருள் வாழ்க்கை நமக்கு எல்லாம் ஒரு பாடமாக இருக்கும்.

ஒரே ஒரு செய்தி அவர் பலமுறை சொல்லி இருக்கின்றார்கள், சந்நிதானங்கள் மட்டும் முதலிபாளையம் வரவில்லை என்றால் நாங்கள் எல்லாம் அந்த சிறு கிராமத்திலே ஒரு மம்முட்டி எடுத்து சாதாரண ஒரு கூலியாளராக இருந்து, நாங்கள் ஒரு வேளாண் தொழில் செய்து கொண்டிருக்கின்ற மக்களாக இருந்திருப்போம். நாங்கள் எல்லாம் இன்று சமய உலகிலே இன்று நல்ல நிலையில் இருந்து உலகம் முழுவதும் சென்று சைவத்தையும், தமிழையும் பரப்புகின்றோம் என்றால் குருகாட்டிய அருள்வழிதான் எங்களுடைய வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது என்று அவ்வப்போது சொல்லிக்கொண்டே இருப்பார்.

இவ்வளவு உயர்ந்த நிலையிலே வந்தாலும் கூட குருவினுடைய பக்தியையும், சாதாரண நிலையில இருந்து உயர்ந்து நிலைக்கு

வருவதற்கெல்லாம் அவர்கள் தான் காரணம் என்பதை ஒவ்வொருமுறையும் நினைவுபடுத்தினார். அவருடைய நூற்றாண்டினை நாம் கொண்டாடுகின்ற இந்த வேளையிலே அவருடைய வாழ்க்கை வரலாறு நமக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். மிக எளிமையான முறையிலே வாழ்ந்தார்கள் என்றால் குருநாதர் என்ன வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் எப்படி வாழ்ந்து வழிகாட்டினார்களோ அந்த வாழ்க்கையில், அவர்கள் தடம்பதித்து உலகுக்கெல்லாம் வழிகாட்டிய அருளாளர்களாக திகழ்ந்தார் என்பதை நாம் பார்க்கின்றோம். அப்படிப்பட்ட அருளாளருடைய நூற்றாண்டைக் கொண்டாடுகின்ற அனைவருக்கும் நம்முடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதலிபாளையம் சிறைத்தோட்டத்திலுள்ள மடத்திற்கு தனது குருவினுடைய பெயரையே சூட்டியுள்ளார். ஆம் அம்மடத்தின் திருப்பெயர் இராமானந்த மடாலயம் ஆகும். குருவைப் போற்றும் அவர்கள் காட்டிய நல்வழியில் செல்வோமாக.

3

பூ.அ. இரவீந்திரன்

தமிழ்ச் சிற்றிதழ் சங்கத் தலைவர் மற்றும்
உலகத் தமிழ்க் காப்புக் கூட்டியக்கத்தின் அமைப்புச் செயலர்
கோவை

பேரூர் ஆதீனம் என்னும் பெயர் தமிழகம் ஒன்றிய உலகம் என்ற நிலைகளில் பரவிக் கிடக்கும் ஆன்மீகப் பெயர். மெய்வழி நின்றும் நடந்தும் எழுதியும் சென்ற சாந்தலிங்கப் பெருந்தகையால் தோற்றுவிக்கப்பட்டது. கொலையும் புலையும் மலிந்த காலத்தில் இம் முனி புங்கவர் 'புலால் மறுத்தல்' என்னும் பண்பினைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றி வாழ்ந்தார்.

இத்தகு ஆன்மீக அணி வரிசைத் தொடரில் 24 ஆம் குரு மகா சன்னிதானம் ஆக எழுந்து அருளியவர் சீர் வளர் சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார். நாற்றாங்கால் எனும் நன்னிலத்தில் செம்பயிராக வளர்ந்தவர். பக்தி வழிபாடு ஆகியவற்றைப் பிழையறக் கற்றுக் கொள்கிறார். மனநிறைவு கொள்ளாத இவர் இலக்கண இலக்கியம் வரலாறு ஆகிய தமிழ் மொழியின் மரபார்ந்த புலமையினை விழைந்தவர். மயிலம் தமிழ்க் கல்லூரியில் புலவர் பட்டம் பெறுகின்றார். கற்று முடிந்ததும் பேரூர் ஆதீனம் வருகின்றார். சீர் உலவும் கொங்குத் திருநாட்டில் தமிழ்க் கல்லூரி இல்லை என்ற எண்ணம் இவரை அலைக்கழிக்கிறது.

கோவைக்கிழார், ஆர்கே சண்முகம் செட்டியார், சுப்பையா கவுண்டர் என்னும் பெருமக்களுடன் இணைந்து சாந்தலிங்கர் தமிழ்க் கல்லூரியைத் தொடங்குகின்றார். பேரூர் பட்டி பெருமான் திருக்கோயில் தமிழ் அர்ச்சனையுடன் கல்லூரி தொடங்குகிறது.

'எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும் திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல் அறிவு வேண்டும்' என்ற பாரதியாரின் வரிகளே ஓர் வடிவமாகி நின்றார் அடிகளார்.

சாந்தலிங்கர் திருமடம் இப்பெயர் எண்திசையும் சென்று விளங்க ஆவன செய்தவர் அடிகளார். இவரே பூக்கொய்து இவரே சரம் தொடுத்து இவரே வழிபாடு செய்த பெரும் சிறப்பு இவருக்கே உரியது. காலையும் மாலையும் வழிபாடு என்பதில் எள்ளளவும் தவறியது இல்லை. தேவாரத் திருவாசகங்களை ப் பாடி வழிபடுவார். இழுமெனச் செல்லும் இன்னிசை. நாவுக்கரசரின் உழவாரப் பணி போன்று ஆதீன வளாகத்திலும் தென்னந்தோப்பிலும் இவரது உழவாரப்பணி நின்ற பாடு இல்லை. ஒழுங்கு தூய்மை வழிபாடு இவற்றில் எப்பொழுதும் அடிகள் சமரசம் செய்து கொண்டதில்லை. நீறில்லா நெற்றி பாழ் என்பார். அடிகளார் பாடம் நடத்தும் கல்லூரி வகுப்புகளில் எல்லோரது நெற்றியிலும் இருக்கும் திருநீறு. குறையும் குற்றமும் காணுங்கால் தவராது திருத்தும் தகைமையாளர்.

நான் நாள்தோறும் மிதிவண்டியில் கல்லூரிக்கு வந்து செல்பவன். ஒரு நாள் விடுதியில் தங்கினேன். அடுத்த நாள் காலை எல்லோரும் குளிக்கப் போவார்கள். கிணத்தில் நீர் இறைக்கும் இயந்திரம் வேலை செய்யவில்லை. சில கருவிகளை எடுத்துக் கொண்ட அடிகளார் அவற்றை என்னிடம் கொடுத்து உடன் வரச் சொன்னார். கிடு கிடுவெனக் கிணற்றிற்குள் இறங்கினோம். இயந்திரத்தில் ஓர் பத்து நிமிடம் பணி செய்தார். பின் என்னிடம் போய் சுச் போடு என்றார். போட்டவுடன் தண்ணீர் வந்தது. இவர் தான் அடிகளார்.

அடிகளாரின் வாழ்நாள் சாதனைகளில் ஒன்று சன்மார்க்க சங்கம் அமைக்கப்பட்டது. சமயத் தமிழ் இலக்கியம் மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பதே அடிகளாரின் குறிக்கோள். வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகின் அத்தனை சமயச் சான்றோர்களும் இலக்கண இலக்கியப் புலமையாளர்களும் சைவ சித்தாந்திகளும் சன்மார்க்க சங்கத்தில் உரையாற்றி உள்ளனர். மறைமலை அடிகள் ஞானியார் அடிகள் குறிப்பிடத் தக்கவர்கள்

பேருரைச் சுற்றிலும் உள்ள கிராமத்து மக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டது சன்மார்க்க சங்கத்தின் மாபெரும் வெற்றி ஆகும்.

சாந்தலிங்கர் தமிழ்க்கல்லூரி கொங்கு மண்டல வரலாற்றில் சீர் மிகுந்த தமிழ் மையமாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள் தமிழ் நிலம் முழுவதிலும் தமிழ்ப் பணி ஆற்றிக் கொண்டு உள்ளனர். கல்லூரியின் தலை மாணாக்கர் புலவர் புலமைப்பித்தன், புலவர் புவியரசு, புலவர் குப்புராசு ஆகியோர் பேரூர் தமிழ்க் கல்லூரி மாணவர்கள் என்றால் தமிழ்ப் பற்றிலும் தமிழ்ப் பணியிலும் நிகர் அற்றவர்கள். இன்றும் தமிழ் சார்ந்த தாய்மொழி சார்ந்த கூட்டங்கள் கோரிக்கைகள் ஆர்ப்பாட்டங்கள் என்றால் பேரூர் தமிழ்க் கல்லூரி மாணவர்களே முன்னின்று நடத்துகின்றனர் என்பது வெளிப்படையான உண்மை ஆகும். அன்றியும் குறிப்பாகவும் சிறப்பாகவும் சொல்கின்றேன். அடிகளார் அவர்கள் ஆதீனத் தலைவர் ஆகவும் ஆன்மீகத் தலைவர் ஆகவும் அருளாட்சி செய்தவர்.

திருமடத்தின் நில புலங்களைப் பாதுகாப்பதிலும் விரிவு படுத்துவதிலும் அடிகளார் தனிக்கவனம் செலுத்தி உள்ளார். ஆதினத்திற்கு என்று ஒப்புக் கொடுக்கப்பட்ட நிலங்களின் மீது வந்த வழக்குகள். இவ்வழக்குகளில் அடிகளார் தாமே முன் நின்று பல ஆண்டுகள் நடத்தி உள்ளார். சென்னை வரை பலமுறை சென்று வழக்கறிஞர்களைக் கலந்து வழக்குகளில் வெற்றி பெற்று சொத்துக்களைக் காப்பாற்றிய சிறப்பு அடிகளாரைச் சாரும். அடிகளின் காலடியில் அமர்ந்து, சென்றது வென்றது நின்றது ஆகிய செய்திகளை எல்லாம் நான் பெற்றுக் கொண்டேன். மாலைப் பொழுதுகளில் சாய்வு இருக்கையில் இருப்பார். நான் என்ன கேட்டாலும் புன்னகையுடன் சொல்லிக் கொண்டு போவார். போக்கிடம் எதுவும் அற்றவன் நான். நேரம் இருக்கிற போதெல்லாம் எனது மிதிவண்டி ஆதீனத்துக்கு வந்துவிடும். தோப்பைச் சுற்றிப் பார்க்கப் போகிற போது உடன் என்னை அழைத்துக் கொண்டு போய் விடுவார்.

1968 ஏப்ரலில் எனது நான்காண்டுகள் நிறைவடைகின்றது. அப்போது தமிழாசிரியர் கழக மாநிலத் தலைவர் துரைசாமி நாயுடு. இவர் கோவை மணி மேல்நிலைப் பள்ளிக்குத் தமிழாசிரியர் ஒருவர் வேண்டும் என்கின்றார். உடன் அடிகளின் நினைவுகளுக்கு முன் நான் நிற்கிறேன். வரச் சொல்லி அனுப்புகிறார். போய் துரைசாமி நாயுடுவைப்

பார்க்கச் சொன்னார். மணி உயர்நிலைப் பள்ளியில் 10 மாதம் தமிழ் ஆசிரியர் பணி. அப்போதைய தலைமை ஆசிரியர் சின்னசாமி நாயுடு. பயிற்சி முடிந்து மணி பள்ளிக்கு வரச் சொல்லுகிறார். 1969இல் பயிற்சி பெற்று வருகிறேன். மணி பள்ளிக்குப் போவதா என்று கேட்கிறேன். வேண்டாம் நீ அரசுப் பள்ளிக்குப் போய்விடு. இது அடிகளின் ஆணை. அவ்வாறே நடக்கிறது.

1977-ல் எனது திருமணம். அடிகளாரிடம் சென்று மண்டபம் பார்த்துள்ளேன் எனக் கூறினேன். அடிகளார் ஓர் புன்னகையுடன் உனது திருமணம் தமிழ்க் கல்லூரியில் தான். இந்த அரங்கில் திருமணம். அந்த அரங்கில் உணவு. இந்த அறை மணமகளுக்கு. இந்த அறை மணமகனுக்கு. கல்லூரி விடுதியின் சமையல் கூடம் சமையலுக்கு. உனக்கு வேறு என்ன வேண்டும் என்று கேட்டார். அடிகளின்பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினேன். நான் பெற்ற பெரும் பேறு.

1995இல் நான் கோவை சர்க்கார் சாமக்குளம் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர். உள்ளூர் அரசியலில் சில அதிகாரப் பிளவுகள். இதனால் நான் மாறுதல் செய்யப்பட்டேன். எனது ஒரே போக்கிடமான அடிகள் பெருந்தகையிடம் சென்றேன். அப்போது கோயில் பாளையம் கால காலேஸ்வரர் திருப்பணி அடிகளார் தலைமையில் நடைபெற்று க் கொண்டிருந்தது. கற்பகம் பல்கலைக்கழக வேந்தர் வசந்தகுமார் அவர்கள் திருப்பணிகளின் செலவுகளை ஏற்றுக் கொண்டிருந்தார்.

வேலை வரவு செலவு ஆட்கள் பொருட்கள் முதலிய பல பணிகளை அடிகளார் என்னிடம் ஒப்படைத்து இருந்தார். எனக்கு மாற்றம் என்ற உடன் சினம் கொண்டார். கோவை அமைச்சரை அழைத்தார். நீங்கள் முறையற்ற காரியம் செய்து விட்டீர்கள். அவர் எனது மாணவர் அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியாது என்று அமைச்சர் அவர்கள் அவரை அனுப்பி வையுங்கள். அவர் கேட்கும் இடம் போட்டுத் தருகிறேன் என்றார். என்னுடன் புலவர் இளங்கீரன் நாராயணசாமி கணேசன் சென்றோம். எங்களுடன் 30 நிமிடங்கள்

அமைச்சர் பேசினார். இறுதியில் எந்த பள்ளி வேண்டும் எழுதிக் கொண்டு வாருங்கள் போட்டுத் தருகிறேன் என்றார். அன்னூர் சொக்கம்பாளையம் காந்தியடிகள் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு தலைமை ஆசிரியராக பணி ஆணை பெற்று வந்தேன். இவ்வாறு அடிகள் எனக்குச் செய்தது, நான் தவம் செய்து பெற்ற வரம்.

'உண்ணும் சோறும் தின்னும் கறியும்
பருகும் நீரும் பயணிக்கும் காரும்
எல்லாம் அடிகளின்
அருள் வழங்கிய பொருள்கள்'

எண்ணுகின்ற நல்லவற்றை எல்லாம் செய்து முடிக்கும் வல்லமை பெற்றவர் அடிகளார். உண்மையும் மனத்திண்மையும் இறையருளின் வன்மையும் அடிகளாரின் கைப்பொருட்கள் மற்றும் மெய்ப்பொருட்கள். ஆதீனத்திலும் கல்லூரியிலும் ஆயிரக்கணக்கான அடியவர் நெஞ்சிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் நெஞ்சிலும் நிலைத்து நிற்பவர் அடிகளார். இவரது அருமை பெருமைகளையும் சீர் சிறப்புகளையும் பெயர் புகழையும் எண்ணி எண்ணி வணங்கி வாழ்வதே எனது வாழ்நாள்! வாழ்க நீ எம்மான்!

4

பொன்முடி. சி. சுப்பையயன்

தலைவர் தமிழ்நாடு இலக்கிய பேரவை

பேரூர் மாமுனிவர் இறைநிலை
ராமசாமி அடிகள் தாள் மலர் வாழ்க

பேரூர் மாமுனிவர் இறைநிலை சாந்தலிங்க ராமசாமி அடிகளின் நூற்றாண்டு நிறைவில் வழக்குரை நிகழ்த்தும் வாய்ப்புக்கு மகிழ்வோம் இது நான் பெற்ற பேறு!

அடிகளாரோடு அன்பு பூண்டு நெருங்கி பழகும் வாய்ப்பு இல்லாவிடிலும் அவரை வணங்கும் ஆயிரம் ஆயிரம் அன்பர்களின் ஒருவனாக என்னையும் ஆக்கிக் கொண்டு மகிழ்ந்தவன் நான்.

சில நிகழ்வுகள் நினைவுக்கு வருகின்றன

1965 ஆம் ஆண்டு மே மாதம், கோவை மாவட்டத்தின் பீடம் பள்ளி நடுப்பாளையம் ஊரில் இளைஞர்கள் மே தின விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அதே நாளில் அவ்வூரில் பிள்ளையார் கோயிலில் மண்டல பூஜைக்கு அவ்வூர் பெரியவர்கள் அடிகளாரை அழைத்திருந்தனர். மே தின விழா பேச்சுக்கு நான் சென்றிருந்தேன். இரவு 7 மணி போல நான் பேசிக் கொண்டிருக்கையில் பெரியவர்கள் அடிகளாரை அம்மேடைக்கு ஆசி வழங்க அழைத்து வந்து விட்டனர் கூட்டம் எழுந்து நின்று அடிகளாருக்கு வணக்கம் கூறியது நான் பேச்சை நிறுத்திவிட்டு அடிகளார் அவர்களை வரவேற்றேன். அடிகளார், பெரியவர்களும் சேர்ந்து ஆன்மீகம் வளர்க்கும் நிலையில் (இளைஞர்களும்) ஒரு சமுதாய விழாவை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற வகையில் நம் நாயன்மார்களின் திருப்பணி ஒருபுறம் இருக்க, காலம் தோறும்

சான்றோர்கள் அடியவர்கள் தோன்றி பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள், பொது உடைமை என்னும் பெரிய கொள்கையை உருவாக்கிய காரல் மார்க்ஸும் எங்களிடம் உலக நலம் நாடிய மாபெரும் முனிவர்கள் ஆவார்கள் என்று பேசியவர், மார்க்ஸ் மாமுனிவர் என்று குறிப்பிட்டபோது அவையே மகிழ்ந்து கரவொலி எழுப்பியது.

அடிகளாரின் மிகப்பெரிய பரந்த மனம் வணக்கத்திற்குரியது. விழாமுடிந்து அடிகள் புறப்பட்டபோது என்னையும் தம் காரில் ஏற்றிக் கொண்டு கண்ணம்பாளையத்தில் என் வீட்டில் விட்டு சென்றார்கள். இந்த ஊரில் பழனியாண்டவர் கோயிலையும் நன்றாக கட்டுங்கள் என்றார். அவ்விருப்பம் 2022 தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் முன்னிலையில் நிறைவேறியது. கோவை பழனி என்று அது புகழ் பெற்று விளங்குகிறது.

1991இல் என் மகளை பேரூர் தமிழ் கல்லூரியில் சேர்த்தேன் அங்கு அடிகளாரின் நல்லாட்சியால் படிப்பை முடித்து முதுகலை பட்டம் பெற்ற பின் தமிழில் முனைவர் ஆய்வு பட்டத்திற்கு முயன்ற போது பன்னிரு திருமுறைகளில் நாட்டுப்புறக் கூறுகள் என்பது ஆய்வு எடுத்துக் கொள்ளப்பட்டதுக்கு அடிகளின் வழிகாட்டுதலில் அடிப்படை ஆனதே. முனைவர் க. சு. சிவகாமி சுந்தரி இப்போது கோவை அரசு கல்லூரியில் தமிழ் பேராசிரியை எல்லாம் அடிகள் அருள் அதனால் பன்னிரு திருமுறைகளை முழுமையாக படிக்கும் வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டது நான் பெற்ற பேறாக நினைக்கிறேன்.

தமிழில் வழிபாடு என்பதை பேரூர் ஆதீனம் முனைப்பாக இருந்து இயக்கியது. ஒரு நாள் மடத்தில் நண்பர் அப்பாவுடன் அப்பா அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோதே பாரதிதாசன் தமிழ் இயக்கத்தில் இருந்து ஒரு பாடலை அவரிடம் சொன்னேன்.

'சொற்கோவின் நற்போற்றி திருவலகல் செந்தமிழில் இருக்கும் போது
கற்கோயிலில் உட்புறத்தை கால் வைத்தது எவ்வாறு சகஸ்ரநாமம்
தற்போதும் தேவாரம் திருவாய் நன் மொழியான தேன் இருக்க'

என்று கூறும் பொழுது அறையில் உள்ளிருந்து அடிகளார் இது கேட்டுக் கொண்டிருந்தார் உடனே என்னை அழைத்தார். நல்லா இருக்கிறது இதை எழுதிக் கொடுங்க நம்ம பிள்ளைகளுக்கு கொடுத்து பாடச் சொல்லலாம் என்று எழுதியும் பெற்றுக் கொண்டார்.தமிழில் ஆக்கத்திற்கு முதன்மை கொடுக்கும் பேரு ள்ளம் அடிகள் உள்ளம்.

ஓலைச்சுவடிகள் அச்சேறுவதும்,பழைய நல்ல நூல்களை மதிப்பிடுவதும், கொங்கு மண்டலத்தில் உரமிட்டு வளர்ப்பதும், சுற்றுச்சூழல் பேணுவதும், சமூக நல வாழ்விற்கு வழி வகுப்பதும், எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்க்கல்விக்கு ஆக்கமூட்டுவதும் அடிகளாரின் குறிக்கோள்களாக இருந்தன.

அதே பணியை தற்போது செம்மையாகவும் சிறப்பாகவும் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார். 25 ஆம் பட்ட குரு மகா சந்நிதானங்கள் சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் ஆவார் அவர்களுக்கும் என் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கி மகிழ்வுகின்றேன்.

5

சிறுத்தொண்டன் (எ) புலவர் அ. சாமியப்பன்

தலைமையாசிரியர் (ஓய்வு)
என்.ஜி.ஜி.ஓ காலனி, கோவை

மற்ற பிறப்புக்களினும் மானுடப்பிறப்பு உயர்வுடைத்து. சிந்தனை ஆற்றல்,இன்ப துன்ப உணர்வினை வெளிப்படுத்தும் திறன், எண்ணியாங்கு கருத்தினை வெளியிடும் மொழியறிவு ஆகியன; மனித இனத்திற்கே உரியன. இதில் வாழும் நெறியறிந்து வாழ்வோர் சிலர்; இவர்கள் மானிடர். வாழ்வில் தடம் பதிப்போர் மாமனிதர். இத்தன்மையர் வெகுசிலரே! இவர்கள் தான் சரித்திர நாயகர் என்பர். அவ்வரிசையில் போற்றப்படும் மாமனிதரே! திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்டார் வழி 24 ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் சீர் வளர் சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார் ஆவார். இவரின் செயல்திறன், பண்புநலன் பற்றி குறளின் பார்வையில் இக்கட்டுரை அமைகிறது.

ஓர் இல்லறஞானி

அன்னூர் வட்டம் காட்டம்பட்டி முதலிபாளையம் எனும் சிறுகிராமத்தில் பண்புநலன் இயல்பாகப் பெற்ற பெருநிலக்கிழார் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் இங்கு வாழ்ந்தார். இவர் தான் சிவராமசாமி என்னும் குணசீலர். இல்லறக்கடமையை இனிதாற்றியதுடன் சில செயற்கரிய செயல்கள் செய்த புண்ணியசீலர் ஆவார். அவற்றில் குறிப்பிடத்தக்கன தன் மக்கள் ஐவரில் ஒருவரை சிறுவயதிலேயே தன் குருமுதல்வராம் கௌமார இராமானந்தர் மடாலய சமய ஞானப்பணிக்கு அர்ப்பணித்தார். அவர்தான் அங்கு சமயக்கல்வி கற்று, மயிலம் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்று பின் பேரூர் சாந்தலிங்கர் திருமடத்திற்கு இளைய பட்டமாக தவத்திரு ஆறுமுகசாமி காலத்தில் மாணவரானார். சிவத்திரு சிவராமசாமி அய்யா அவர்கள்

குரு உபதேசம் பெற்று தன் நிலத்தில் தவச்சாலை அமைத்து தவம் நோற்றார். ஊர்ப்பணியாகத் தன் ஊரில் கட்டிடம் அமைத்து சாந்தலிங்கர் பெயரில் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். அப்பள்ளிதான் இன்று அரசு மேனிலைப் பள்ளியாகப் புகழுடன் விளங்கக் காணலாம். அடுத்து ஊரினைச் சார்ந்துள்ள கணேசபுரம் என்னும் ஊர் சிவத்திரு சிவராமசாமி அய்யாவின் ஆலோசனையில் தான் கணேசர் ஆலயத்துடன் உருவாக்கப் பட்டதாகும்.

இப்பெருமகனார் வாழ்வு காட்டும் குறட்பாக்கள்,

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது,

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் என்பனவாகும்.

அடிகள் செயல்திறன்

சிவத்திரு.சிவராமசாமியின் மகனாராகிய இவர் 24 ஆம் பட்டத்திற்குரிய இளைய அடிகளாக 1950 இல் அமர்ந்தார். ஓரிரு ஆண்டில் தொடக்கப் பள்ளி தொடங்கி பின் உயர்நிலைப் பள்ளியாக்கினார். அப்பொழுது மயிலம் கல்லூரியில் பயின்று திரும்பி வந்தது முதலாக கொங்கு நாட்டில் ஒரு தமிழ்க்கல்லூரி கொண்டு வர வேண்டும் என்ற சிந்தனையே, அடிகள் உள்ளத்தில் ஓங்கி இருந்தது. அதனால் அப்பணிக்குத் தகுதியான பெரியோர்களை இணைத்துச் செயல்படுத்த முற்பட்டார். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார்(இந்தியாவின் முதல் நிதியமைச்சர்), கோவைகிழார் இராவ் பகதூர் சி.ஆர்.இராமச்சந்திர செட்டியார், அருட்செல்வர் ந.மகாலிங்கம் கவுண்டர், பெருநிலக்கிழார் வெள்ளக்கிணறு வி.சி.சுப்பைய கவுண்டர் போன்றவர்கள் ஆவர். இவர்களைக் கொண்டு முயன்று 1953 ஆம் ஆண்டு தமிழ்க்கல்லூரி தொடங்கப்பட்டது. அத்தருணத்தில் தான் ஆலயங்களில் தமிழில்

அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிரவையாதீனம் தவத்திரு சுந்தர அடிகளார் ஆகியோருடன் இணைந்து இன்னும் பல தமிழ்ச் சான்றோர்களுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. பின்னர் அடிகளாரின் பெருமுயற்சியால் படிப்படியாக வாழ்வியல் சடங்குகள், ஆலய வழிபாடு, குடமுழுக்கு போன்றவை திருமுறை வழி நிகழ ஆண்டுதோறும் கொடைக்கானலில் முகாம் அமைத்து சமயப் பயிற்சி அளித்து பலரை உருவாக்கினார். தமிழ் நெறி வழிபாட்டிற்கு இவரே வித்தாக அமைந்து ஆலமரம் போன்று பல்கி பெருகி உலகம் முழுவதும் பரவக் காரணமானார்.

எண்ணிய எண்ணியாங் கெய்துவர் எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

இதனை யிதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்ற குறட்பாக்களுக்குச் சான்றாக விளங்கினார்.

தென்னாட்டு அப்பர்

அடிகளார் மடாலயத்தில் ஏதேனும் பணியாற்றிய வண்ணமாகவே இருப்பார். மடாலய வளாகத்தின் கட்டிடங்களெல்லாம் அவர் பார்வை பட்டே எழுந்தவையாகும். தொடக்ககாலத்தில் தானே முன்னின்று ஆங்காங்கு துப்புரவு பணிகளைச் செய்வார். எங்களையும் அப்பணியில் இணைத்துக் கொண்டு செய்விப்பார். கொங்கு நாட்டுக் கோயில்கள் பலவற்றை உழவாரப் படை கொண்டு சீரமைத்த பெருமை இவரையே சாரும். இவர் காட்சிக்கு எளியவராய் வாயில் முன்பே அமர்ந்திருப்பார். நூல்களைப் பார்வையிடல், மெய்ப்புப் பார்த்தல், கட்டுரை புனைதல் என ஏதேனும் ஒரு பணியைச் செய்து கொண்டே யாவர்க்கும் எளியவராய் காட்சி தருவார். மாதாந்திர மகம் வழிபாட்டினைச் சீராகச் செம்மையாக நடத்த வழிவகை செய்ததுடன் அவ்வப்பொழுது சிறந்த நூல்களை வெளியிடவும் ஆவணம் செய்த பேரறிவாளர்.

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்

வாழ்நாள் வழியடைக்கும் கல்

என்னும் குறட்பாவிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் நம் அடிகள். எனவே தான் இவரை அனைவரும் தென்னாட்டு அப்பர் எனப் போற்றுகின்றனர்.

நன்றி போற்றல்

இளம் பருவத்திலேயே தன்னை அருள் நெறியில் ஈடுபடுத்திய தன் தந்தையை நெஞ்சாரப் போற்றி வந்தவர். தன் ஞானத்தந்தையார் அவர்கள் மாசி சிவனிரவு பூசனை நிறைவில் முத்தி பெற்றார். அந்நாளினை அடியார்கள் உற்றார் உறவினர் புடைசூழ குருபூசையாகத் தனது இறுதிக்காலம் வரை வெகுசிறப்புற நடத்தி வந்தார். பொதுப்பணிகள் செய்வோர், மடாலயம், கல்விப்பணிகளில் ஈடுபட்டு பணிசெய்வோர், ஆலய ஓதுவார்கள் என எல்லோரிடமும் புன்முறுவலித்து அன்புகாட்டி நேசித்தவர்.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு

காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்குச் சான்றாகத் திகழ்ந்தவர்.

விருந்து போற்றல்

அடிகளாரைக் காண பல்வேறு ஊர்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் மக்கள் வருவர். உள்ளூர் மக்கள் எனில் அவர்களுக்கான உபசரிப்புத் தனி. வெளிநாட்டார் வரின் நம் கிராம மக்களின் பழைமைக்குரிய கீரை, கொள்ளு, பாசிப்பயிறு, சுவையமுது இடம் பெறும். மேலும் பருவகாலங்களுக்கேற்ப சுக்கு நீர், கம்பங்கூழ் வழங்கப்படும். வருபவர் மனதிற்கேற்ப உபசரிப்பதில் அடிகளார் வல்லவராவார்.

அகமலர்ந்து செய்யா ளுறையு முகமலர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்

என்னும் குறட்பாவழி வாழ்ந்தவர் நம் அடிகள்.

அடிகள் உலக நாடுகளில் ஐந்து கண்டத்திற்குச் சென்று வந்தவர். இவர் உண்ணும் உணவு மிக மிக எளிமையானது. பருப்புப்பொடி, எலுமிச்சை, மிளகு சீரகம், இளநீர், பழங்கள் என்பனவே! அடிகளார் அவர்களுக்கு உணவு ஒரு பொருட்டன்று. இதனைத் தான் வள்ளுவரும்,

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய் என்கிறார்.

ஆளுமைப்பண்பு

எத்தகைய சிக்கலான இடத்திலும், சூழல்,ஆட்கள்,தகுதி அறிந்து யாவரும் ஏற்கும் வகையில் ஏற்ற கருத்துகளைச் சொல்லும் திறன் அடிகளுக்கே உரியதாம். தென்னம நல்லூர், கோவில் பாளையம், போன்ற இடங்களில் திருப்பணி, குடமுழுக்கு நடைபெற்ற பொழுது நேர்ந்த இடையூற்றினை அடிகள் சாமார்த்தியமாக வென்றமை பலர் அறிவர். இதனையே வள்ளுவர்,

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்

சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது

என்ற குறட்பாக்களில் எடுத்துரைக்கிறார்.

நிறைவுரை

தோன்றின் புகழொடு தோன்றுக என்ற குறள் காட்டும் நெறியில் துறவறம் மேற்கொண்டு பக்தி நெறியில் வாழ்ந்து இறைநிலை அடைந்த பெருமகனார் நம் 24 ஆம் பட்டம் கயிலைக்குருமணி சீர் வளர் சீர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் எனில் அது மிகையாகாது.

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்.

6

தமிழ்ச்செம்மல் சிவமிகு

முனைவர் சொ.க. முருகன்

முதுகலை ஆங்கில ஆசிரியர் ப.நி

கோயம்புத்தூர்

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி
பேரூராதீனம் குருமகாசந்நிதானங்கள்
முதுமுனைவர் கயிலைக்குருமணி சீர்வளர்
சீர் தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

கொங்கிலுள்ள சாமிகளில் உயர்ந்தசாமி – தமிழ்க் குலங்காக்க வந்த எங்கள் பெரியசாமி எங்கும் தமிழ்பரவ அருள் செய்த சாமி எவர்தடையும் வென்றுநின்ற தர(ன்)சாமி பெரியசாமி அவர்கள் 31.08.2018 அன்று அருள்மிகு அம்பலவாணர் திருவடி நிழலை அடைந்த நிகழ்வை முன்னிட்டு 10.09.2018 அன்று நடைபெற்ற ஒளிவழி பாட்டு நிகழ்வில் வெளியிடப்பட்ட 'ஒளிவழி பாட்டு மலரில்' ந.ம.க. கல்லூரி (பொள்ளாச்சி) பணிநிறைவு தமிழ் இணைப் பேராசிரியர் முனைவர் ப. வடிவேல் வழங்கிய இரங்கற்பாவின் தொடக்க வரிகள் இவை.

அடிகளாரின் அருள் வரலாறு

கற்பினி அம்மாள் என்னும் தாயாரின் வயிற்றில் குரோதன ஆண்டு புரட்டாசித் திங்கள் மகம் நாளில் 16.09.1925ல் அடி களார் அவதாரம் செய்தார். 1947ல் தென்னாற்காடு மாவட்டம் மயிலம் சிவஞானபாலய அடிகளார் தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து, தனித் தமிழ்க் கல்வி ஐந்தாண்டுகள் பயின்றார். 1952ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழகப் புலவர் பட்டம் பெற்றார்கள்.

விரோதி ஆண்டு மாசித்திங்கள் 20ம் நாள் (1950) அடிகளார் பேரூராதீனத்தின் இளையபட்டமாகப் பொறுப்பேற்றார்கள். அப்போது

மயிலம் பொம்மபுரம் ஆதீனம் 18ஆம் பட்டம் சிவஞானபாலய அடிகளாரிடம் வீரசைவ தீட்சை பெற்றார்கள். 1967ஆம் ஆண்டு ஆறுமுக அடிகளார் அடிகளாருக்கு குருமுதல்வராகப் பட்டம் சூட்டினார்கள்.

1951ஆம் ஆண்டு 6ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளியாகத் தொடங்கப்பட்ட பள்ளி இன்று மேல்நிலைப் பள்ளியாக உள்ளது. 1977-இல் ஞானாம்பிகை அம்மையார் பெயரில் நுழைவுரிமை (மெட்ரிக்) 1999ல் ஆறுமுக அடிகளார் பெயரில் தாய்த் தமிழ்ப் பள்ளியும் தொடங்கப்பட்டன. 1953ல் திருமடத்தில் தமிழ்க் கல்லூரி தொடங்கப்பட்டது. 1961 முதல் பணிக்காலம் முடியும்வரை முதல்வராகவும், பின்னர் செயலாளராகவும் வாழ்நாள் முழுமையும் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

மாநாடுகள்

1957ல் நடைபெற்ற கீழ்த்திசை மொழி மாநாட்டில் கலந்து கொண்டார். 1953-இல் உலக இந்து மகளிர் மாநாட்டை நடத்தினார்கள். உலக சைவ மாநாடு, உலக இந்து மாநாடு, துறவியர் மாநாடு எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் ஓதுவார்களை நியமித்து திருமுறைகளைப் பாடுமாறு செய்தார்கள்.

சமயப் பணிகள்

சமயமும் சமுதாயமும் வேறானவை அல்ல என்ற சிந்தனையோடு அடிகளார் சமுதாயத்திற்கு ஆற்றியுள்ள நற்பணிகள் எண்ணிலடங்கா. உழவாரப் பணி செய்வித்தல், சமய வகுப்புகள் நடத்துதல், வாழ்வியல், அருளியல் சடங்குகளைத் தமிழ்வழி நடத்துதல், தமிழ் முறைப்படி திருக்குட நீராட்டு நடத்துதல், தமிழில் அர்ச்சனை முறையைப் பரப்புதல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

150 மகளிர் உட்பட 900 பேர் வாழ்வியல் அருளியல் சடங்குகளைத் தனித்தமிழில் நடத்த பயிற்சி பெற்றுள்ளார்கள். 5000க்கும் மேற்பட்ட கோயில்களில் தமிழ்வழியில் திருக்குட

நன்னீராட்டு செய்யப்பட்டுள்ளன. பழுதடைந்த பழமையான கோயில்கள் திருமடத்தால் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 50 ஆண்டுகளில் இதுவரை 12,000 பேர் திருமடத்தின் மூலம் தாய்மதம் திரும்பியுள்ளனர்.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் பயின்ற 4000க்கும் மேற்பட்டோர் புலவர்களாகி உள்ளனர்.

எளிமை, உழைப்பு, சிந்தனைத் தெளிவு, மக்களை நன்னெறிப்படுத்தும் திறம் ஆகிய உயர்குணங்களைக் கொண்டவர் அடிகளார் அவர்கள். அனைவரிடமும் இன்முகம் காட்டிப் பழகியவர்.

நன்றிமலர்கள் உரித்தாகுக

சீர்வளர் சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அருளாட்சி ஏற்பு நிகழ்வு (10.09.2018) நாளன்று வெளியிடப்பட்ட அருள் வரலாறு.

அடிகளார் அவர்களுக்கும் அடியேனுக்கும் ஏற்பட்ட அருள்நிறை தொடர்பு


பேரூராதீனம் 25ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் நெறிகாட்டுதல்படி பெரியசாமி அவர்களின் திருக்கரங்களால் 25.07.2017-இல் சமய தீட்சை பெற்றேன். 02.02.2018 தைத்திங்கள் மகம் விண்மீன் அன்று வீர சைவ தீட்சையும் பெற்று நாள்தோறும் பிறவாவரம் வேண்டு ஆத்மலிங்க வழிபாடு செய்யும் பெரும்பேற்றையும் அடியேனுக்கு சாந்தலிங்கப் பெருமானின் திருவருள் வழங்கியது.

வீரசைவ தீட்சை பெற்ற ஒரு வாரத்தில் அடியேன் அமெரிக்கா சென்று சில மாதங்கள் தங்கியிருந்தேன்.

08.04.2018 அதிகாலைக் கனவில் அந்த அற்புதம் நிகழ்ந்தது. ஒரு சிவ ஆலயத்தில் நான்கைந்து அடியார்களுடன் அடியேன் அமர்ந்திருக்கின்றேன். பெரியசாமி அவர்கள் அடியேனைப் பார்த்து கை அசைத்து, "அருகில் வா. ஈசனாரின் பூசைக்கு மலர்மாலை கட்டிட

உதவி செய்" என்று ஆணையிடுகிறார். உடனே கண்விழித்தேன். கை கால் முகம் கழுவி, நெற்றி நிறைய திருநீறிட்டு, அமர்ந்து 'கண்டேன் கயிலாயநாதனை' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினேன். கழிநெடிலடி எண்சீர் ஆசிரிய விருத்தப் பாவாக 24 வரிகளில் அமைந்த அக்கவிதையிலிருந்து சில வரிகள் மட்டும் தருகின்றேன்.

பாட்டுக்கு மண்சுமந்த பெருமகனார் முன்னே
பிச்சையினை வேண்டித்தான் மடியேந்தி நின்றேன்
பட்டொளியைப் பரப்பித்தான் படர்ந்திட்டார் அவரும்
பாவிப்பார் பாவங்கள் களைகின்ற சிவனும்
கிட்டிடுமோ இதுபோலப் பிறவியினி எனக்கும்
கிழவனுக்குக் கிடைத்திட்ட பரிசென்றே இனிக்கும்
சுட்டபின்பு தேடிவரும் சுவர்க்கத்தை நானும்
சுப்பனவன் அப்பன்தர இந்நாளில் பெற்றேன்.
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!



ஞாலம் போற்றும் ஞானத்தந்தை கயிலை குருமணி



தமிழகத்தின் தகைசால் துறவியர் பெருமக்கள்

கொங்கு நாட்டின் இரு கண்கள் பேரூர் அடிகளார், சிரவை ஆதீனம், திருப்பாராயத்துறை குகானந்த சுவாமிகள், சதானந்த சுவாமிகள், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயா சுவாமிகள், மயிலம் பொம்மபுரம் ஆதீனம் பத்தொன்பதாம் பட்டம் சுவாமிகள், சூரியனார் கோயில் சுவாமிகள், அருட்செல்வர் அய்யா உள்ளிட்ட அன்பர்கள் பங்கு கொண்ட சித்பவானந்த சுவாமிகள் நிகழ்வு



திருநெறிய தெய்வ ஒண்தீந்தமிழ் வழிபாட்டை 1954லில் தொடங்கிய இருபெரும் சந்நிதானங்கள் அன்னம்பாலிப்பில்



தேமதுர தமிழோசை உலகெங்கும் பரப்ப துணை நின்று கொண்டிருக்கும் இருபெரும் சந்நிதானங்கள் – பேரூர் ஆதீனம், சிரவை ஆதீனம் வடத்தல பயணத்தின் போழ்து

7

முனைவர் சென்னியப்பனார்

மேனாள் முதல்வர்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி பேரூர்

1954 இல் அவிநாசி மாவட்ட கழக உயர்நிலைப்பள்ளி இறுதி தேர்வு (SSLC) முடித்தேன். சிவசம்பு என்னும் தமிழாசிரியர் உனக்கு தமிழ் நன்றாக வருவதால் பேரூர் தமிழ் கல்லூரியில் சென்று படி என்று கூறினார். அவிநாசியில் இருந்து சைக்கிளில் வந்தேன். கல்லூரிக்குள் வரும்போது அடிகளார் மற்றும் மாணவர் சிலர் பேரூர் கோவில் செல்லக் கிளம்பி நின்றனர். சைக்கிளை நிறுத்திவிட்டு அவர்களை வணங்கினேன். கல்லூரியில் சேர விண்ணப்பம் கேட்டேன். அடிகளார் தந்தார்கள். அதன் பிறகு புவியரசு பட்டியப்பனார் சுந்தர சுவாமிகள் என பலரும் கல்லூரியில் படித்தவர்கள். நான் சேரும்போது கல்லூரி இரண்டாவது வருடம். அனைத்து வேலைகளையும் அடிகளார் செய்யும் சூழல். அதாவது ஒரு கட்டட தொழிலாளி மாதிரியும் ஒரு பசுமாட்டை மேய்ப்பவன் போலவும் தென்னை தோட்டத்தை பாதுகாப்பவர் போலவும் என பன்முக நோக்கில் பல வேலைகளையும் செய்தவர் நம்முடைய அடிகளார் அவர்கள். மாணவர்களிடத்தில் தமிழ் உணர்வை ஊட்டுவதில் வல்லவர். மாணவர்கள் ஆங்கிலம் கலக்காமல் பேச வேண்டும் என்பதில் மிகப்பெரிய கட்டுப்பாட்டை உடையவர். எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். நான் கல்லூரியில் படித்தேன். பிறகு கல்லூரி விரிவுரையாளராக, பேராசிரியராக, துறைத் தலைவராக, முதல்வராக என கல்லூரியில் நீண்ட நெடிய பயணம் புரியும் வாய்ப்பு பேரூர் இறைவன் பட்டியப்பனார் அருளால் கிடைத்தது. எனது திருமணமும் மடத்தில் தான் நடந்தது. என்னுடைய வாழ்க்கையில் தமிழ் உணர்வை ஊட்டியது தமிழ்க் கல்லூரி. தமிழ் முறைப்படி சடங்குகள் செய்யவும் தமிழ் முறைப்படி குடமுழுக்கு செய்யவும் என பல பணிகளை கற்றுத் தந்தது தமிழ் கல்லூரி.

தமிழ்க் கல்லூரி மாணவர்கள் உலகளாவிய நிலையில் இன்று காணப்படுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் நம்முடைய குரு மகா சன்னிதானங்கள் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களையே சாரும்.

இன்றைய குரு மகா சன்னிதானங்கள் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்து வருபவர். சன்னிதானங்கள் திருவடிகளை வணங்குகிறேன்.

8

மருத்துவர் கோபி

ஸ்ரீ இராமகிருஷ்ணா முதியோர் இல்லம்
ஆவாரம்பாளையம், கோவை.

தமிழ் மொழி மிகச்சிறந்த பாரம்பரியத்தை உடையது. மிகச் சிறந்த பண்பாட்டு மரபை உடையது. தொடர்ச்சியான இந்த மரபானது எதிர்கால சந்ததியினரால் பெரிதும் போற்றப்பட வேண்டும். ஆட்சித் தமிழாகத் தமிழ் மொழி பெரிதும் பாதுகாக்கப்பட வேண்டும். இளைய சமுதாயத்திற்குத் தமிழ் உணர்வு கட்டாயம் வேண்டும்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனியான உணவு உடை பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. இவற்றை பொதுநிலையில் வைத்து நாம் பார்க்க முடியாது. தமிழர்களாகிய நாம் நமது மொழியை நமது பண்பாட்டை நமது கலாச்சாரத்தைப் போற்ற வேண்டும். அப்போதுதான் நமது நாடு முன்னேற முடியும். இன்றைய நிலையில் நாம் ஒவ்வொருவரும் ஒன்றாக சிந்தித்து நமது நாட்டை முன்னேற்ற முயல வேண்டும். ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை என்று சொன்னார் பாரதியார். வறுமை வேலையின்மை கலாச்சார சீரழிவு லஞ்சம் ஊழல் முதலான அனைத்திலிருந்தும் நமது நாட்டை பாதுகாக்க வேண்டும் அதற்கு இளைய சமுதாயம் தமிழ் உணர்வோடு இருக்க வேண்டும். தமிழ் இனம் என்று தோன்றியதோ அன்றே தமிழ் தோன்றியது. தமிழ் மொழி உலகம் மொழிகளில் மூத்த மொழி. தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெருந்தகையாளர் நம்முடைய தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார். அவர் மீது பக்தி கொண்ட நாம் அனைவரும் தமிழையும் தமிழ் பண்பாட்டையும் தமிழ் கலாச்சாரத்தையும் போற்றுவோம்.

9

சிற்பி. நா. ரங்கநாதன்
அன்னூர்

கொங்கு மண்டலத்தில் வள்ளி கும்மி என்ற நிகழ்ச்சியை 40 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். 24 ஆவது குரு மகா சன்னிதானங்கள் அவர்கள் இவ்வாறு நடத்துவதற்கு ஆன்மீக வழிகாட்டுதலும் ஆசி உரையையும் நல்கி எப்போதும் என்னை அரவணைத்து வந்தவர். 25 ஆம் சன்னிதானங்களும் என்னை தொடர்ச்சியாக வழிநடத்தி வருகின்ற தன்மை உடையவராக திகழ்கின்றார். குன்று இருக்கின்ற இடத்தில் எல்லாம் குமரன் இருப்பான். குமரன் இருக்கின்ற இடத்தில் எல்லாம் வள்ளி இருப்பாள். வள்ளிக் கும்மி வாயிலாக நாட்டுப்புற கலைகள் பெரிதும் பரப்பப்படுகிறது.

பேரூர் பெரியசாமி அவர்களது ஆசியின்படி தமிழ்நாட்டுக் கலைகளை உலகளாவிய நிலையில் கொண்டு சென்று வருகின்றோம். அதற்கு அடிகளாரின் ஆசியும் வழிகாட்டுதலும் எங்களுக்கு எப்போதும் உதவியாக அமைகின்றது. வள்ளி கும்மி நடத்துவதன் வாயிலாக நாங்கள் நமது சமயத்தையும் கலையையும் உலகளாவிய நிலையில் பரப்பி வருகின்றோம். அதற்கு பேரூர் அடிகளாரின் சீரிய வழிகாட்டுதல் காரணமாக அமைகின்றது.

இந்த நேரத்தில் அடிகளார் அவர்களுடைய திருவடிகளை மன மெய் மொழிகளால் வணங்கி மகிழ்கின்றோம்

10

பேராசிரியர் குழந்தைசாமி

பஞ்சலிங்கபுரம், மொடக்குறிச்சி.

உலகில் வாழ்கின்ற உயிரினங்களில் மனிதப் பிறவி மேன்மையானது; வளர்நோக்குடையது. கருவிகளை ஆக்குவதிலும் ஆள்வதிலும் வல்லமைகொண்டது. ஆயினும் புற வளர்ச்சிக்கேற்ற அகச் செம்மை இயல்பாக அனைவருக்கும் வாய்ப்பதில்லை. அதனால் ஆன்மீகச் சீர்மை மானுட மேன்மைக்குத் தேவையாகின்றது. இத்தகைய அருள்நெறியைத் தமது தவத் தகைமையால் எளிதாக அனைவருக்கும் வாரிவழங்கிய முனிவர்களுள் பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் சீரியவர். கொங்கு நாட்டின் பெருமைகளில் பெரும் பெருமையாக இவர் திகழ்ந்தார். ஈர்ப்பு மிக்க ஆன்மீகக் குருநாதராக, ஆற்றலார்ந்த மடத் தலைவராக, வேளாண் வல்லுநராக, ஊரக வளர்ச்சியின் ஆர்வலராக, கல்வியாளராக, தமிழை அனைத்துத் துறைகளிலும் வளர்த்தவராக, பதிப்பராக, பெண்மையைப் போற்றிய அருள்தந்தையாக, விருந்தோம்பலின் இலக்கணமாக, ஒட்டு மொத்தமாக உயர்ந்த ஆன்றோராக வாழ்ந்து மானுடத்தை வளப்படுத்தியவர் இராமசாமி அடிகளார் ஆவார். முதுமுதல்வனான சிவபெருமானின் திருநெறிய தமிழ் மரபுப்படி தமிழ்க் குடமுழுக்கு நெறி தழைக்க ஊக்கமளித்த பெருந்தகை. பன்னாடுகட்கும் சென்று சைவநெறி பரப்பியவர் பலருடைய வாழ்விலும் ஒளிவிளக்கேற்றியவர்.

அடிகளாரை 1982ஆம் ஆண்டு பேரூர் திருமடத்தில் கண்டேன்; உருகினேன். அடிகளார் அரை மணி நேரம் என்னோடு உரையாடியதில், 25 நிமிடம் வாழ்க்கை வளநுட்பங்களை விளக்கினார்கள். வாழ்வாங்கு வாழ்ந்து சிறக்க வாழ்த்தி அருளமுது படைத்தார். வைகறையில் தென்னந்தோப்பில் உயிரிரக்கப் பணிகளில்

ஈடுபட்டிருந்தார். கிராமங்களுக்குச் சென்று ஆன்மீகத்தோடு அருட்பணியும் ஆற்றினார். பல்கலைக்கழகக் குழுக்களில் இடம்பெற்றுத் தமிழ்க் கல்வி சிறக்க வழிவகுத்தார். வாய்த்தபோதெல்லாம் வகுப்பு நடத்தியதோடு பல கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் நடைபெற ஊக்குவித்துச் செயற்பாட்டாளராகத் திகழ்ந்தார். பேரறிஞர் / பெரும்புலவோர் போற்றிய சீராளர்.

நக்கீரர் ஆவினன்குடி முனிவோரை,

இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்;
யாவதும் கற்றோர் அறியா அறிவினர்;
கற்றோர்க்குத் தாம்வரம்பு ஆகிய தலைமையர்;
காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்;
யாவதும் அறியா இயல்பினர்;
மேவரத் துனியில் காட்சி முனிவர்

என்று பாரட்டுவது இராமசாமி அடிகளாருக்கும் பொருந்தும். திருவடிகளுக்கு வணக்கம்.

11

பத்மஸ்ரீ கே.ஜி.பக்தவத்சலம்
நிறுவனர் மற்றும் தலைவர்
கே ஜி மருத்துவமனை, கோயம்புத்தூர்

என் பெயர் டாக்டர் கே.ஜி. பக்தவத்சலம். கோவையில் கடந்த 50 வருடங்களாக கே.ஜி. மருத்துவமனையை நடத்தி வருகிறேன்.

1943இல் பிறந்தேன். வயது 81. எம்.பி.பி.எஸ். முடித்து 60 வருடமாயிற்று. பொதுவா டாக்டர்களெல்லாம் பொய் பேசுவாங்கன்னு சொல்லுவாங்க. ஆனா நா உண்மையைத்தான் பேசுவேன். பொய் பேசணுன்னு அவசியமே இல்லை. நா உண்மையைத்தான் பேசுவேன்கறதுக்கு எங்கள் பள்ளி தமிழாசிரியை புவனேசுவரியே சாட்சி.

நான் ஒரு மருத்துவர் மட்டுமல்ல நானும் ஒரு மருத்துவப் பேராசிரியர்னு பட்டமும் வாங்கியிருக்கிறேன். மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமுக்கும் ஆசிரியர் இருந்திருக்கிறார். சுவாமி விவேகானந்தருக்கும் ஆசிரியர் இருந்திருக்கிறார். ஆசிரியர்கள்தான் நாட்டின் முதுகெலும்பு. ஆசிரியர்கள் இல்லையென்றால் நாட்டில் கலாச்சாரமுமில்லை; பண்பாடும் இல்லை.

கல்வி என்பது ஒரு மனிதனுக்கு இரத்தம் மாதிரி. ரொம்பவும் முக்கியம். எங்கள் தந்தையார் கே. கோவிந்தசாமி நாயுடு அவர்கள். ஓம் நமசிவாய ஓம் நமசிவாய ஓம் நமசிவாய என்று ஓயாது சுமார் 3 மணி நேரமாவது என் தந்தையார் சொல்லிக்கொண்டேயிருப்பார். நாங்கள் பிறந்தது அன்னூர் என்ற சின்ன கிராமத்தில். அங்கேயிருக்கும் ஆயிரமாண்டு பழமை வாய்ந்த மன்னீசுவரர் திருக்கோயிலுக்கு 1967லிலிருந்தே திருப்பணிக்கு உதவியுள்ளார் என் தந்தையார். 'தர்மவீரா' என்று பாராட்டப்படும் என் தந்தையாருக்கு நாங்கள் 7 குழந்தைகள். அவர்களுள் நான் 2வது குழந்தை.

நான் மட்டுமே டாக்டர். மற்றவர்கள் எல்லோரும் வேறுவேறு துறையைச் சார்ந்தவர்கள்.

எனக்கு சிறுவயதில் உடல்நிலை சரியில்லாமல் போனபோது கவனிக்க மருத்துவர் இல்லை. அதனால் அவர் டேய் முருகர் சொல்லி விட்டார். நீ ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பி என்றார். அவர் எப்பொழுதுமே முருகா, முருகா, முருகா, முருகா, முருகா என 10 நிமிடத்திற்கு மேல் தொடர்ந்து கூப்பிட்டுக் கொண்டேயிருப்பார். அவர் அழைப்பதைப் பார்த்தால் அந்த முருகனே கீழே இறங்கி வந்துவிடுவார்.

ஒவ்வொரு கிருத்திகையின்பொழுதும் பழனிமலைக்குக் குடும்பத்தோடு சென்று சிறப்புப் பூசைகள் செய்து வழிபட்டுவிட்டு மகிழ்ச்சியோடு திரும்புவோம்.

தந்தையாரின் சொற்படி கே.ஜி. மருத்துவமனையை ஆரம்பித்தேன். அதில் முதலில் விநாயகரை ஸ்தாபித்தவர் யார் தெரியுமா?

நம்முடைய இராமசாமி அடிகளார்தான். சிவன் என்றால் இராமசாமி, இராமசாமி என்றால் சிவன் என்பேன் நான். காரணம் என்ன தெரியுமா? அவர் கால்பட்ட இடமெல்லாம் நன்றாகத் துலங்கும். அவர் தமிழ்ப் புலமை பற்றி நீங்கள் சொல்லுங்கள், அவர் இறைமைத்தன்மை பற்றி நான் சொல்கிறேன்.

கே.ஜி. மருத்துவமனையில் தொடக்கத்தில் அவர் வைத்த விநாயகர் இரத்தினவேல் விநாயகர். இன்றும் நீங்கள் வந்தால் இரத்தினம் போல் ஜொலித்துக் கொண்டிருக்கும் அந்த விநாயகரைக் காணலாம். அடுத்து குரும்பபாளையத் தோட்டத்தில் ஓங்கார விநாயகரை வைத்து வழிபடுகின்றோம். அங்கிருந்த ஆஞ்சநேயரைக் கொண்டுபோய் சின்னவேடம்பட்டி சுந்தரசாமியடிகளாரிடம் சேர்த்தோம்.

இராமசாமி அடிகளாரும் சுந்தரசாமி அடிகளாரும் சிவபெருமானின் குழந்தைகள் என்றுதான் சொல்லவேண்டும். சிவனின் பரிபூரண ஆசீர்வாதம் பெற்றவர்கள் அவர்கள்.

ஒருமுறை சுந்தரசாமி அடிகளாருக்கு விபத்து ஏற்பட்டு தொடை எலும்பு ஒடிந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நான் ஊசி போடும்பொழுது வலி இருக்கிறதா என்று கேட்டேன். வலியே இல்லை என்றார். இறைவனின் பரிபூரண அருள் பெற்றவரல்லவா? இங்கிலாந்திலிருந்து சிறப்பு மருத்துவரை வரவழைத்து மருத்துவம் பார்த்தேன். மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

எங்கள் குடும்பத்தின் வெற்றிக்குக் காரணம் என்ன தெரியுமா?

50% உழைப்பு; 50% தெய்வ பக்தி. அது முருகனோ, சிவனோ, விஷ்ணுவோ, விநாயகரோ யாரை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்.

கே.ஜி. என்றால் கே – குமரன் ஜி – கணபதி என்பதுதான் எங்கள் குடும்பத்தின் கொள்கை.

25 வருடங்களுக்கு முன்னர் அன்றைய முதலமைச்சராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பல்ஸ் ரொம்ப கம்மியானதாலே கே.ஜி. மருத்துவமனையிலே அட்மிட் ஆனார். 2000 தொண்டர்களுக்கு மேலே வெளியிலே காத்துக் கொண்டிருக்காங்க. நான் இறையருளை நம்பி சிகிச்சையளித்தேன். உடல்நலம் பெற்று சென்னை சென்ற அவர் கோவை சென்று வந்தேன். மருத்துவர் பக்தவத்சலம் என்னைக் காப்பாற்றினார் என்று கூறியுள்ளார்.

அடுத்து கி. வீரமணி அவர்கள். நான் மருத்துவமனைக்கு வைத்தியம் பார்க்கப் போனேன். பக்தவத்சலம் எனக்கு உயிரைக் கொடுத்தார் என்று முரசொலியில் எழுதியுள்ளார். சார் நான் கொடுக்கவில்லை, முருகப்பெருமான்தான் கொடுத்தார் என்று கூறினேன்.

இறையருள் இல்லையென்றால் நம் சாமர்த்தியமெல்லாம் 0%தான்.

எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் தெய்வ அருள்

இல்லையென்றால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. 600 வருடம் கட்ட முடியாத இராமர் கோயிலைக் கட்டிய பெருமை பிரதமர் மோடிக்கு உண்டு. அது அவரது தெய்வ நம்பிக்கை. அதேபோலத்தான் கோயமுத்தூருக்கே 2 தூண்கள், கண்கள் இராமசாமி அடிகளாரும், சுந்தரசாமி அடிகளாரும். இவர்கள் இருவரும் அற்புதமானவர்கள்.

நம் பேரூர் தமிழ்க் கல்லூரி தமிழ்ச் சமுதாயத்திற்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம். தமிழ்நாட்டின் அமைச்சர்களும், முதல் அமைச்சரும் அதற்கு ஸ்பெஷல் டேட்டாவைக் கொடுக்கணும்.

நான் எத்தனையோ விருதுகள் பெற்றிருந்தாலும், 2 வயதுக் குழந்தையாக இருந்தபொழுது உடல்நிலை சரியில்லாதபோது சரியான மருத்துவர் கிடைக்காததால் என்னை டாக்டருக்குப் படிக்க வைத்த என் தந்தையாரைத்தான் பெருமையாகக் கருதுகிறேன்.

உலகத்திலேயே முதன்மையானது உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்பது. இரண்டாவது ஆசிரியர்கள். ஆசிரியர்கள் இல்லையேல் நான் இல்லை. இராமசாமி அடிகளாரைப் போலவே மருதாசல அடிகளாரும் இருப்பது கண்டு வியப்படைகிறேன். இவர்மாதிரி இன்னொரு அடிகளார் பேரூர் மடத்திற்குக் கிடைக்கமாட்டார். அடடா! என்ன படிப்பு, என்ன பேச்சு, சுந்தரசாமி அடிகளாரைப் போலவே கணீரென்ற குரல்வளம்.

அடுத்து அவரும் ஒரு மருத்துவமனை கட்டி உயிர்களைப் பேணி வருகிறார். பல உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார். மாதா பிதா குரு டாக்டர் அப்புறம்தான் தெய்வம்.

'தமிழுக்கும் அமுதென்று பேர்"
"தமிழனென்று சொல்லடா!
தலைநிமிர்ந்து நில்லடா!"

நன்றி.
வணக்கம்.

12

திருமிகு. விஸ்வநாதன்
கோயம்புத்தூர்

அனைத்து சொந்தங்களுக்கும் எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது 24 ஆம் சன்னிதானத்தின்னுடைய நூறாவது பிறந்த நாளை ஒட்டி நமது திருமடம் மிக சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருகிறது இந்தத் தருணத்தில் இந்த திருமடத்தனுடன் என்னுடைய தொடர்புபற்றி இங்கே அனைவரிடமும் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த திருமடத்துடன் என்னுடைய தொடர்பு 30 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து இருந்து வருகிறது நான் கடந்த 1990 ஆம் ஆண்டு வணிகவியல் துறையில் பட்டம் பெறுவதற்காக திருமடத்தில் இணைந்தேன் அன்று முதல் இன்று வரை என்னுடைய தொடர்பு இந்த திருமடத்துன் சிறப்பாக இருந்து வருகிறது. இந்த காலகட்டத்தில் நமது 24 ஆம் சன்னிதானம் மற்றும் தற்போதைய அடிகளாரோடும் என்னுடைய உறவும் தொடர்பும் மிக முக்கியமானது, ஆக இரண்டு அடிகளார்களுடனும் என்னுடைய உறவும் அவர்களுடைய ஆசீர்வாதம் எனக்கு கிடைத்தது மிகப்பெரிய வரம்.

இன்று நான் கோவையில் குறிப்பிடத்தக்க வகையில் ஒரு பட்டையக் கணக்காளராக இருந்து வருகிறேன் என்றால் அதற்கு இந்த திருமடத்தின் பங்கு மிக மிக முக்கியமான ஒன்று. இந்த திருமடத்தில் நான் பெற்ற ஆன்மீக சிந்தனைகள், ஒழுக்க கட்டுப்பாடுகள் மற்றும் தலைமை பண்புகள் பற்றிய படிப்பினைகள் என்னை இந்த அளவுக்கு

உயர்த்தி உள்ளது பட்டய கணக்காளர்கள் சங்கத்தின் கோவை கிளையின் தலைவராக இருந்து சேவை செய்துள்ளேன். எனது பெரிய சாதனைக்கும் வெற்றிக்கும் மிக முக்கிய காரணம் நமது திருமடம் அளித்த ஒழுக்க கட்டுப்பாடுகள், ஆன்மீக சிந்தனைகள் மற்றும் தலைமை பண்புகளுக்கான சிறப்பான பயிற்சி ஆகியவயே மிக முக்கிய காரணம்.

இந்த திருமடத்தில் நான் சேர்ந்ததே சிவனுடைய அருளால் என்று கூற முடியும். நான் எனது பள்ளி படிப்பை முடித்த பின்பு கல்லூரி சேர்வதற்காக முயற்சிகள் செய்த பொழுது கூழரில் உள்ள யூஆறீ கலைக் கல்லூரியில் கணினி துறையில் பயில அட்மிஷன் பெறப்பட்டது எதேச்சையாக நான் எனது சகோதரர் முறையான உறவினருடன் இந்த மடத்துக்கு அவருடய வணிகவியல் துறைக்கான அப்ளிகேஷனை கொடுப்பதற்காக இங்கு வந்தேன் அதன் பின்பு எனது தந்தையிடம் இப்படி பேரூர் கல்லூரிக்கு சென்று வந்தோம் என்று கூறினேன் அதன் பின்னர் அவர் என்னையும் இந்த கல்லூரியில் சேர ஏற்பாடு செய்து கல்லூரியில் என்னை வணிகவியல் துறையில் சேர்த்து விட்டார் இந்த கல்லூரியில் சேர்க்கும் பொழுது நமது 24ஆம் சன்னிதானம் அவர்கள்,

'ஏன் இங்கு உன் மகனை சேர்க்கிறாய்' என்று கேட்ட பொழுது என் தந்தை, என் மகனுக்கு ஆன்மீகம் சம்பந்தமான ஈடுபாடு குறைவாக உள்ளது அதை அதிகரிக்கவும் ஆன்மீக சிந்தனைகளை போதிக்கவும் சேர்க்கிறேன் என்று எனது தந்தை சொன்னார் அதேபோல இந்த திருமடத்தில் சேர்ந்த பின்பு ஆன்மிகத்தின் மீதான நாட்டம் அதிகமானது மேலும் நமது மறைந்த அடிகளார் அவர்களும் தற்போதைய அடிகளார் அவர்களும் ஆன்மீக சிந்தனைகளையும் போதனைகளையும் மிகச் சிறப்பாக அனைவருக்கும் எடுத்துரைத்தனர் அந்த வகையில் அதை பின்பற்றி ஆன்மீகத்தின் மீதான ஈடுபாடும் நமது இந்து மதத்தின் மீதுதானே புரிதலும் ஈர்ப்பும் மிக அதிகமானது அங்கு பெற்ற ஆன்மீக சிந்தனைகளும் தியானம்

சம்பந்தமான நமது அடிகளாருடைய போதனைகளும் இன்று எனக்கு மிகவும் உதவியாக உள்ளது இன்றைய காலகட்டத்தில் தியானம் மற்றும் யோக பயிற்சிகள் கட்டாயமாக வேண்டியுள்ளது இதை நான் தினமும் செய்து வருகிறேன் என்றால் அதற்கு காரணம் நமது திருமடத்தில் பெற்ற வழிகாட்டுதலும் போதனைகளுமே.

இந்த சமயத்தில் நமது கல்லூரியின் பெருமையை எடுத்துக் கூறுவது மிக முக்கியமான ஒன்று எனது வெற்றிக்கு மிக முக்கியமான காரணம் இந்த கல்லூரியில் பெற்ற அடித்தளமே ஆகும்.

மேலும் நமது திருமடம் இந்த பகுதியில் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு மிகக் குறைந்த கட்டண செலவில் சிறப்பான கல்வியை கொடுத்து வருகிறது இந்த சூழ்நிலையில் முன்னாள் மாணவர்களாகிய நாம் இந்த கல்லூரிக்கு உதவுவது மிக முக்கியமான பணி நமது கல்லூரி முன்னாள் மாணவர் பேரவை ஒன்றை உருவாக்கி சிறப்பாக செயல்பட்டு வருகிறது இந்த முன்னாள் மாணவர் பேரவைச் சங்கமாக பதிவு செய்து முன்னாள் மாணவர்களிடமிருந்து உதவிகள் பெற்று இந்த கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவர்களுடைய படிப்புக்கு உதவி செய்து வருகிறது மேலும் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்றையும் உருவாக்கி அந்த சங்கத்தின் மூலம் இந்த கல்லூரிக்கு சிறப்பான வழிகாட்டுதலையும் செய்து வருகிறது கடந்த காலகட்டத்தில் நமது கல்லூரியின் உள்கட்டமைப்பு மிகச் சிறப்பாக மேம்படுத்தப்பட்டுள்ளது

மேலும் பல உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த சமயத்தில் இந்த கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர் என்ற முறையிலும் முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளர் என்ற முறையிலும் அனைத்து முன்னாள் மாணவர்களையும் இந்த மடத்தின் தொடர்பில் உள்ள அனைத்து உறவுகளையும் நான் கேட்டுக் கொள்வது என்ன என்றால் தங்களால் முடிந்த உதவிகளை இந்த கல்லூரியின் வளர்ச்சிக்கு செய்து

கல்லூரியின் மேம்பாட்டுக்கும் இந்த கல்லூரியில் பயிலும் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவர்களின் மேம்பாட்டுக்கும் உதவி செய்து சிறப்பான பணியைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பு கொடுத்த அனைவருக்கும் எனது நன்றிகள் வணக்கம்.

13

நல்லாசிரியர் இரா. நாராயணசாமி, B.Sc., M.A., B.T.,
ஆசிரியர் பணி நிறைவு
ராஜலட்சுமி மில்ஸ் பள்ளிகளின் முன்னாள் செயலாளர்
மற்றும் முன்னாள் மாணவர் சங்க செயலாளர், சிங்காநல்லூர்.

கோவை மாநகரின் தென்பகுதியில் பேரூர் சிவத்தலம் அருகில் நொய்யல் ஆற்றிற்கு பக்கத்தில் உள்ளது தான் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மடம். அங்குதான் தவத்திரு சாந்தலிங்க அடிகளாரை குருவாக ஏற்று தவத்திரு ராமசாமி அடிகளார் வாழ்ந்தார் என பெருமையாக கூறலாம்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழை மையப்படுத்திய கருத்தாக்கங்களை முன்னெடுத்துச் சென்ற மறைமலை அடிகள்,கா. அப்பாதுரை, தெ.பொ. மீனாட்சி சுந்தரம், மு.வ. போன்ற பெருமக்கள் வரிசையில் நமது தவத்திரு ராமசாமி அடிகளார் நிலைத்து நிற்பார் என்பது உறுதி. அவர் எந்தப் புகழையும் நாடாதவர் அவர் காட்டிய வழி வாழ்வை அமைத்து மகிழ்வோம்

தமிழாக வாழ்ந்து தமிழுக்குச் சிறப்பாக பணியாற்றிய பெரும் மகன் தான் தவத்திரு சா ராமசாமி அடிகளார் எனக் கூறலாம்.

தவத்திரு ராமசாமி அடிகளாருடன் எனக்குள்ள தொடர்பு எப்படி இருந்தது?

எனது அண்ணன் பேரூர் தமிழ் கல்லூரியில் படித்துவிட்டு தமிழ் ஆசிரியராக பணியாற்றி வந்தார். நான் பி.எஸ்.ஜி. கலை கல்லூரியில் படித்து கணிதத்தில் பட்டம் பெற்றேன்.

1966 இல் பயிற்சி பெறாமல் இருந்தாலும் பள்ளிகளில் கணித ஆசிரியர்களுக்கு தேவை அதிகமாக இருந்தது. அப்போது என்

அண்ணனுக்கு தவத்திரு ராமசாமி அடிகள் அவர்களிடம் நல்ல தொடர்பு இருந்தது. 1966-ல் பேரூர் சாந்தலிங்க அடிகளார் உயர்நிலைப் பள்ளியில் கணித ஆசிரியராக என்னை பணி அமர்த்தினார் அவருடைய திருவருளால் நான் சிறப்பாக பணியாற்றினேன்

தமிழ்நாட்டில் பல ஆயிரக்கணக்கான தமிழ் ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை பேரூர் தமிழ் கல்லூரிக்கும் தவத்திரு ராமசாமி அடிகளுக்கும் உண்டு.

சிங்காநல்லூர் செல்லாண்டியம்மன் கோவிலில் நடைபெற்ற ஆன்மீக நிகழ்ச்சி ஒன்றுக்கு ஒருமுறை சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வந்தபோது எங்கள் வீட்டுக்கும் வந்து கோவிலில் நிகழ்ச்சி நடைபெறும் வரை இருந்து எங்களுக்கு பெருமை சேர்த்தார்.

புத்தகங்களை வாசிப்பதும்
புனிதர்களை சந்திப்பதும்
இயற்கையை நேசித்தாலும்
இறைமையை தரிசித்தலும்
தனது கடமையாக கொண்டவர் தவத்திரு ராமசாமி அடிகளார்

சங்கம் வளர்த்த தமிழ்
தாய்க்குலம் காத்த தமிழ்
பேரூர் தமிழ் கல்லூரி காத்த தமிழ்
தவத்திரு ராமசாமி அடிகளார் அவர்கள் வளர்த்த தமிழ்
மனிதனை மனிதன் ஆக்குவது கல்வி
என்ற கொள்கையை அடிகளார் அவர்கள் வைத்திருந்தார்.

மிகவும் எளிமையானவர் சிறந்த ஆன்மீகவாதி பல ஆயிரக்கணக்கான ஆன்மீகச் சொற்பொழிவுகள் மற்றும் கோவில் சிறப்புக் குடமுழுக்கு விழாக்களை நடத்திய சிறந்த ஆன்மீகப் பெரியவர்.

அன்னார் நம் எல்லோரையும் வழிநடத்திக் கொண்டு உள்ளார்.
போற்றி ஓம் நமச்சிவாய.

14

புலவர். சு. இராமசாமி
9, தமிழ்க்குடில், பாரதிநகர், வரதராசபுரம்,
கோவை – 641 045.

1962 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பள்ளி இறுதி தேர்வில் தேர்ச்சி பெற்ற அரசினர் தொழில் கல்லூரியில் சேர்ந்து ஓராண்டு பொறியியல் கல்வி கற்றேன். முதல் ஆண்டு தேர்ச்சி பெறாததால் இடை நீக்கம் ஏற்பட்டது. பின்னர் டெக்ஸ் 2 முதலிய கம்பெனிகளில் பணியாற்றிய போது எனது நண்பர் புலவர்.க. சுரேந்திரனுடன் சேர்ந்து பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிக்கலாம் தமிழ் கல்லூரியில் சேர்ந்தேன். கல்லூரியில் 1964 முதல் 1968 வரை பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றேன்.

கல்லூரியில் சேர்ந்த நாளிலிருந்து தவத்திரு ராமசாமி அடிகளாரின் மாணவனாக உயர்நிலைக்கு வர வாய்ப்பு பெற்றவனாக என்னை அடிகளார் உயர்த்தினார் என்பது என் வாழ்வில் ஆழமான பதிவாக இருக்கிறது.

கல்லூரியில் சேர்ந்த முதலாம் ஆண்டிலேயே பேராசிரியர் வையாபுரியார் அவர்களிடம் கட்டுரை ஒன்றை எழுதி பாராட்டு பெற்றேன்.

இது என் வாழ்க்கையின் வெற்றிக்கு முதல் படியாக அமைந்தது.தவத்திரு அடிகளார் அவர்கள் கல்லூரியில் முதல்வராக இருந்தபோது எங்கள் வகுப்பில் திருவிளையாடற் புராணத்தை பாட நூலாக கற்பித்தார்.

அப்போது அவருடைய நடை உடை பாவனைகளை கண்டு ரசித்து மகிழ்ந்திருக்கிறேன்.

வகுப்பிற்கு வரும்போது நிமிர்ந்த நன்னடை ஆசிரியரின் இருக்கைக்கு வருவார் அவரது தோற்றப்பொலிவு என்னை மிகவும் கவர்ந்தது அவர்கள் உச்சரிப்பு என் உள்ளத்தை தொட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் எங்கள் ஊரில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் அவரது உரை ஆழத்தையும் கனீரெண்ற குரலையும் கேட்டேன்.

கல்லூரியில் தவத்திரு அடிகளார் சமய உறுப்பினர் மாணவர்கள் தங்கள் நெற்றியில் திருநீறு அணிந்து வர வேண்டும் என்று வற்புறுத்தினார். மந்திரமாவது நீரு என்ற திருஞானசம்பந்தரின் இரண்டாம் திருமுறை பாடலுக்கு விளக்கம் கொடுத்தார். மாணவர்களாகிய நாங்கள் அதனை அன்போடு ஏற்று நாள் தவறாமல் திருநீறு அணிந்து வந்தோம்.

திருநீறு அணிய மறந்த மாணவர்கள் அடிகளார் வகுப்பிற்கு வந்தவுடன் அருகில் உள்ள சுண்ணாம்பு சுவரில் விரலில் எடுத்து அவசர அவசரமாக அணிவதும் உண்டு.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அருளிய கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் ஆகிய நூல்களின் சாரத்தையும் கரும்பைப் பிழிந்து தருவது போல அமுதசாற்றல் பிரிந்து எடுத்து ஊட்டினார்.

நாங்கள் இன்றும் சைவ நெறியில் முனைந்து நிற்பதற்கு அடிகளாரின் வழிகாட்டுதலே காரணம்.

எங்களை ஆசானாக்கிய தவத்திரு அடிகளாரை சந்திக்கும் போதெல்லாம் அவருடைய திருவடி தொட்டு அவரது திருக்கரங்களாலே திருநீறு வாங்கி பயபக்தியோடு அணிவதை பெருமிதமாக கருதுகிறோம்.

நானும் புலவர் சுரேந்திரனும் முதலாண்டு படிக்கும்போது எங்களை பெரிய நாயக்கன் பாளையத்தில் உள்ள வித்யாலயத்தில் நடைபெற்ற சர்வோதயமும் காந்தியும் பயிலரங்கிற்கு அடிகளார்

அனுப்பி வைத்தார் 15 நாள் நடைபெற்ற முகாமில் தங்கி இருந்து அறிய பல கருத்துக்களைச் சுவைத்து மகிழ்ந்தோம் எங்களை மென்மேலும் ஆன்மீக அறிவுச் சுடர்களாக உருவாக்கிய இந்த அடிகளார் எங்கள் ஆழ்மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளார்.

இந்த முகம் ஒரு தெய்வீக அறிவிச்சுடர் முகமாக விளங்கியது அதில் டாக்டர். மு. அறம். சிலம்பு செல்வர் மாபொ.சி அவிநாசி லிங்கம் கல்லூரி நிறுவனர் ஆண்மைச்சிங்கம் குழந்தை வேலு அண்ணா பலருடன் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் சமாதி அடைந்த நட்சத்திரம் மகம். நமது மடத்தில் அவரது நினைவாக ஒவ்வொரு மாதந்தோறும் மக நட்சத்திரத்தன்று சிறப்பு வழிபாடு சிறப்பு விருந்து கிடைக்கும். நாங்கள் கல்லூரியில் படித்த காலத்தில் சிறப்பு வழிபாட்டிற்கும் சிறப்பு விருந்திற்கும் சென்று கலந்து உண்டு மகிழ்வோம். இந்த ஏற்பாட்டினை எங்கள் ஆசான் ராமசாமி அடிகளார் நடத்தினார் இன்றும் அது தொடர்கிறது.

விருந்து என்றால் அதுதான். மடத்தின் விருந்தே தனிச் சுவைதான். கல்லூரியில் படித்த காலத்தில் சுவைத்த மடத்தின் சுவை என்றும் இனித்துக் கொண்டே இருக்கிறது.

கல்லூரியில் படித்த காலத்தில் செவிக்கு இன்பம் தித்திக்கத் தித்திக்கக் கிடைத்துக் கொண்டே இருக்கும்.

தொண்டை மண்டல சுவாமிகள் ஒரு வாரம் சொற்பொழிவு நிகழ்த்தினார் அன்றைய மாணவப் பருவத்தில் அவர் கொடுத்த செவிச்சுவையை ஓரளவே உணர முடிந்தது அன்று முழுவதும் சுவைக்கும் பக்குவம் இல்லாமல் போயிற்றே என்று வருந்துகிறோம் நாங்கள் அவரை டோலக் ஸ்வாமிகள் என்று சொல்லி மகிழ் வோம்

எங்களது ஆசான் தவத்திரு ராமசாமி அடிகளை எங்களது தாயாகவும் தந்தையாகவும் எண்ணி மகிழ்கிறோம்.

அன்பு காட்டுவதில் ஒரு சிறந்த தாயாக அறம் உரைத்து வழிகாட்டுவதில் உயர்ந்த ஆசானாக எல்லாவற்றிற்கும் மேலாக எங்களை அன்புடன் கண்டிப்பதில் தந்தையாகவே எண்ணுகிறோம்.

தன்னிடத்தில் படித்த மாணவர்கள் ஒரு உன்னத நிலைக்கு வர வேண்டும் என்ற பேராசை உடையவர்.

அன்னாரின் சைவப் பணியும் தமிழ் பணியும் பட்டி தொட்டிகள் எல்லாம் பரவி அவர்களின் வாழ்வை, செம்மையோடு செய்து கொண்டிருக்கின்றன.

ஒவ்வொருவரும் அடிகளாரை தங்கள் இதய தெய்வமாக வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

முன்னாள் மாணவர்களைக் கண்டபோதெல்லாம் அவர்களை புகழ்ந்து பேசி மேலும் மேலும் உயர வேண்டும் என்று திருவருள் புரிவார்.

ஏதும் பணி செய்யாமல் இருக்கும் முன்னாள் மாணவர்களை இன்றும் கனிவுடன் கண்டிப்பார். அது அவர்கள் முன்னேற ஒரு துணையாக இருந்துள்ளது.

15

செந்தமிழ் வேள்விச் சதுரர், முதுமுனைவர்
மு.பெ. சத்தியவேல் முருகனார்
B.E., M.A., M.Phil., D.D., D.Lit., (USA)
ஆதம்பாக்கம், சென்னை

பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் நூற்றாண்டு விழா

(நெதர்லாந்து சிவனடியார்கள் ஏற்பாட்டில் 27.09.2024 அன்று அடியேன் ஆன்லைனில் நிகழ்த்திய புகமுரைச் சுருக்கம்)

மெய்யன்பர்களே!

அடிகளாரின் நூற்றாண்டு விழா நினைவுச் சொற்பொழிவு இங்கே நெதர்லாந்தில் தொடர் நிகழ்ச்சியாக ஆண்டு முழுதும் ஆன்-லைனில் நடைபெற்றுக் கொண்டிருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. வான் சித்தி பெற்ற அடிகளார்க்கு இந்நிகழ்வு வான் வழியே நடைபெறுகிறது.

அடுத்து, உலகில் எத்தனையோ நாடுகள், நகரங்கள் சிறிதும் பெரிதுமாக மூலைக்கு மூலை பரந்து சிதறிக்கிடக்கின்றன. அவை அனைத்திற்கும் கிடைக்காத இந்த அரியவாய்ப்பு நெதர்லாந்திற்கு மட்டுமே வாய்த்திருப்பது ஒரு சிறப்பு.

ஏன், எல்லாரும் ஆன்மீக அருளேற்றம் நிகழ அவ்வளவு ஆர்வமாக வர முயலுவது இல்லை. இதற்குக் காரணம் சொல்கிறார், வள்ளுவர், காரணம், தவம் தான் என்கிறார்.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

நான் நினைக்கிறேன். இது மனிதர்களுக்கு மட்டும் அல்ல, நாடுகளுக்கும் பொருந்தும்; நெதர்லாந்து இங்கே தவம்

பண்ணியிருக்கு; அதனால் அடிகளின் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெறுகிறது. இத்தனைக்கும் அடிகள் நெதர்லாந்தில் பிறந்தவர் அல்லர்; அவர் பிறந்த ஊர், நெதர்லாந்திற்கு பல்லாயிரம் கிலோமீட்டர்கள் தெற்கே பேரூர்க்கு அருகில் உள்ள முதலிபாளையம் என்ற சிற்றூர். எப்படி இந்த இரண்டு இடங்களுக்கும் இடையே ஒரு இணைப்பு? நமக்கென்ன தெரியும்?

'Mystic and complex mathematics of heaven is not only unknown to us but is unknowable too'.

என்று E.W. Hobson என்கிற விஞ்ஞானி, Science and Philosophy of Religion என்ற தனது நூலில் மிகச் சரியாகக் கூறுகிறார்.

இதைத்தான் அப்பர் தெள்ளத் தெளிவாக மிகச் சுருக்கமாக, அப்பா! ஆளைவிடு! இந்தக் கணக்கெல்லாம் நமக்கெல்லாம் தெரியுமா? எல்லாம் சிவபெருமான் எழுதுகிற கணக்கு எல்லாம் white கணக்கு! வேறு எவனையாவது விட்டால் கையுறை அணிந்து கையூட்டு வாங்கி கலர் கலரா ஒன்பது கணக்கு எழுதுவான்! அதனால், யாரையும் நம்பாமல் சிவபெருமான், தானே தம்முடைய கணக்குகளை எல்லாம் எழுதுகிறானாம்! எனவே. அப்பர். 'எழுதும் கீழ்க் கணக்கு இன்னம்பர் ஈசனே!' என்று உறுதிபடப் பாடிச் சென்றார். அதனால் தானே சொற்கு உறுதிக்கு அப்பர் எனச் சொல் என்று சொன்னாங்க!

ஆக, இன்னம்பர் ஈசனே கணக்கு எழுதுகிறான்! எனவே, இது இன்னம்பர் கணக்கு! white கணக்கு! நம்முடைய தகிடுதத்தங்களுக்கு எல்லாம் அங்கே இடமில்லை.

இப்படியொரு இன்னம்பர் கணக்கு நெதர்லாந்துக்கும் அடிகள் பிறந்த முதலிபாளைய சிற்றூர்க்கும் இருக்கும் போயிருக்கிறது!

சரி! நெதர்லாந்து என்றால் என்ன என்று ஆங்கில அகராதியைப் புரட்டினால், அங்கே அது சொல்லுவதாவது; நெதர்லாந்து என்றால், அதல பாதாளம் (under world lying beneath) என்று சொல்லப்படுகிறது.

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். கீழ், மேல்

என்பதெல்லாம் ஒன்றிற்கொன்று தொடர்பில் அமைவது. ஒன்றிற்கு மேல் என்பது இன்னொற்றிற்கு கீழாகி இருக்கும். இதைத்தான் விஞ்ஞானம் (Relativity Theory) தொடர்பு நிலை மாற்றவியல் என்று கூறி இருக்கிறது. மொத்தத்தில் திசை என்பதே பொய் என்று சைவசித்தாந்தமே விஞ்ஞானத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே கூறிச் சென்று விட்டது; ஒன்றிற்கு கிழக்கு, இன்னொன்றிற்கு மேற்கு, அவ்வளவு தானே!

எனவே, ஓரிடத்திற்கு அதல பாதாளத்தில் நெதர்லாந்து இருக்கும் என்றால் இன்னோரிடத்திற்கு அதுவே மேலுலகம்; அதாவது சொர்க்கம் ஆகிவிடும்.

நன்றாக கவனியுங்க! ஒவ்வோர் இடமும் ஓர் ஊர் என்று ஒரு காலத்தில் சொல்வோம். அங்கே அருளாளர் அவதரித்துவிட்டால், அதுவே அவரால் புண்ணியத் தலமாகி விடுகிறது! ஓர் ஊர் எப்படி ஓர் அடியாரால் புண்ணியம் புகுந்து தலமாகிறது?

சும்மா சொன்னால், யார் நம்புவான்? விஞ்ஞான விளக்கம் உண்டா? இப்படி கேள்வி எழுமல்லவா?

ஒவ்வொரு மனிதனும் ஒரு நடமாடும் காந்தம்! இந்த காந்த மனிதன் தனது அலைகளை அந்தந்த காந்தத்தின் அளவைப் பொறுத்து நடமாடிக் கொண்டே பரப்பிக் கொண்டிருப்பான். இதுவே, ஓர் அடியார் என்றால் அவரிடமிருந்து அருளலைகளாக மின்காந்த அலைகள் பரவிக் கொண்டிருக்கும். அவர் நடந்து புழங்கும் ஊரில் இப்படி அருள் மின்காந்த அலைகளைப் படரவிட்டுக் கொண்டே இருப்பார். பூமியும் ஒரு காந்தப் பொருள் ஆனதால், காந்தத்தோடு தொடர்புண்ட இரும்பும் காந்தமாக மாறிவிடுவதால், அடியார்கள் ஊரும் அருளலைகளால் மாறிஒரு புண்ணியத் தலமாகிவிடும். இப்படித் தான் ஓர் ஊர், அடியார் தொடர்பால் தலமாகி விடுகின்றது.

இந்த அருளியல் கணக்குப்படி பார்த்தால் கீழ் உலகம் என்று பொருள்படும் இந்த நெதர்லாந்தும், இனி, ஓராண்டு தொடர்ந்து பேரூர் ஆதீனம் சாந்தலிங்க இராமசாமி அடிகளின் புகழுரைகளில்

வான்வழியே தோயுமானால் Netherland என்பது மாறி etherland ஆகிவிடும். என்ன புண்ணியம் செய்தனை நெதர்லாந்தே! அடிகளின் அருள் மின்காந்த அலைகள் இந்த அதிசயத்தை நிகழ்த்த இருக்கிறது.

அகில உலகம் வியக்க இருக்கும் இந்த அருளமாற்ற நிகழ்வில் அடியேனும், பங்கு பெறக் கிடைத்த வாய்ப்பை அடிகளார் மூலம், ஆண்டவனே அடியேனுக்கு அளித்ததாக எண்ணி உளம் உருகி அடிகள் புகழுரைக் களம் இறங்குகிறேன்.

அடிகள் பிறந்த ஊர் முதலிபாளையம். அதிலேயும் ஓர் இன்னம்பர் ஈசரின் கணக்கு இருக்கிறது.

காலக் கோளாறால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அடியவர் தாக்கத்தால் தமிழினம் தன் பண்பாட்டு அடையாளங்களை இழந்து தலை தடுமாற்றம் கொண்டு திரிந்தது. இத்தமிழினத்தைத் தூக்கி நிறுத்தும் தேவை கருதிய இறைவன் உரிய காலம் இது, உரிய இடம் சீர்காழி, உரிய பெற்றோர் இவர்கள் என்று அங்கே சம்பந்தரை இறக்கி வைக்கிறான். அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல சமபந்தர் அவதரித்தார் என்று சேக்கிழார். இதைக் குறிக்கிறார். இப்படியே தான் அப்பர் அடிகளையும் இறைவன் நிலவுலகில் இறக்கி வைக்கிறார். யாரை எங்கே எப்படி வைக்கிறது என்று அவனுக்குத் தானே தெரியும்?

இப்படித் தான் இறைவன் கணக்கு போட்டு நம் அடிகளாரை 19ஆம் நூற்றாண்டில், தமிழ்நாட்டில் மீண்டும் தொய்ந்த தமிழ் நெறியைத் தூக்கி விட அப்பர்-சம்பந்தர் இரட்டையரைப் போல பேரூர் இராமசாமி அடிகள் - சிரவை சுந்தரசுவாமிகள் என்ற இரட்டையரை தமிழ்த்தேன் பொழிய தேன் என்ற பொருளுடைய கொங்கு நாட்டில் இறக்கி வைக்கிறார். அப்படி முதலிபாளையத்தில் இறைவனால் இறக்கி விடப்பட்டவர் தான் நமது பேரூர் இராமசாமி அடிகள்.

எனக்கு இந்த நேரத்தில், வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் நினைவிற்கு வருகிறார். முருகனடியாரான அவர் வெள்ளையர்கள் ஆட்சி ஒழிய வேறெதுவும் வேணடாம் என்று கையில் எடுத்தது

திருப்புகழ்க் குண்டு. இந்தப் பெயரிலேயே அக்காலத்தில் அவர் பல பெருந்திரளான கூட்டங்களை நடத்தினார்.

அதுபோல இந்த இரட்டையர்கள் ஆன பேரூர் அடிகளும் சிரவை அடிகளும் பிரச்சாரத்தில் எடுத்துக் கொண்டது. தேன் தடவிய திருமுறைக்குண்டு. இதனால் திருமுறை நாடெங்கும் பரவியது; ஏன், நெதர்லாந்து உட்பட உலக நாடெங்கும் பரவியது. இந்த இரட்டையர்கள் எடுத்துக் கொண்ட இரட்டைக் குண்டு எவை தெரியுமா? ஒன்று தமிழ்க் கல்வி, மற்றது தமிழ்ச் சமய நெறி.

இது எனது கற்பிதம் அல்ல. பேரூர் அடிகளாரே அவரது பொன்விழா மலரிலே பொறித்து வைத்தது.

'கல்வித் துறையில் உழைப்புக்கு முதலிடம் கொடுக்கும் வாய்ப்புகளும், அறநெறிப் பண்புகளை வளர்க்கும் தாய்மொழிப் பயிற்சியும் உடனடித் தேவைகள்; சமயத்துறையில் மேல், கீழ் என்ற நிலைமாறி பத்தியின் பாலராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பு நெறி வளர வேண்டும்.'

அடிகளின் கல்வி, ஆரம்பத்தில் தமிழ்வித்துவான் படிப்பில் இருந்து தொடங்குகிறது. இத்தனைக்கும் வித்துவான் படிப்பிற்கு அவர் காலத்தில் அவ்வளவு ஒன்றும் மதிப்பு இருந்ததாகத் தெரியவில்லை. ஒரு தனிப்பாடல் நினைவிற்கு வருகிறது.

வாரும்நீர் யாரென்ன வித்துவான் என்னவும்
மதிமோசம் வந்த தென்றே
வாய்குழறி மெய்யெலாம் நடுக்க முற
வந்த காரியம் ஏதென.

வித்துவான் அந்த செல்வந்தரைப் பார்த்து தான் பாடிக் கொணர்ந்த பாட்டைப் பாடினாராம். அதில் அந்த செல்வந்தரை, காமதேனுவே, கற்பகமே, சிந்தாமணியே, அரிச்சந்திரனே என்று புகழ்ச் சொற்களை அந்த மலினமான ஆளிடம் கொட்டினாராம். அந்த மனிதர், காமதேனு பசு, கற்பகம் மரம், சிந்தாமணி கல், அரிச்சந்திரன் மனைவியை விற்றவன் – நானென்ன மாடா, மரமா, கல்லா,

பொண்டாட்டியை விற்றவனான்னு புலவரை விரட்டிவிட்டானாம். பாவம், வித்துவான்! அவர் பாடிய பாட்டை விட அவர் பட்ட பாட்டைக் கேட்டால் அதிகம்!

இதை எல்லாம் யோசித்துத் தான், பின்னாளில் நமது அடிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் செனட்டராக ஆனபின் தன் செல்வாக்கினால் வித்துவான் படிப்பை புலவர் பட்டமாக்கி அதையே மேலும் மெருகு ஏற்றி B.Lit., என்ற இளங்கலைப் படிப்பாக்கி அதற்கு மரியாதையை ஏற்படுத்தினார்.

அது மட்டுமா? இன்றைக்கு தமிழ் படித்தவர்கள் பள்ளிகளில் தலைமை ஆசிரியராகவும், கல்லூரிகளில் முதல்வராகவும் கைநிறைய ஊதியத்தோடு சமூக கௌரவத்தோடு வலம் வருகிறார்கள் என்றால் அதற்கு வித்திட்ட வரும் இவரே! அவ்வளவு ஏன், இன்று கல்லூரிகளில் தமிழ் படித்த பெண்கள் கூட முதல்வர்களாகப் பணியாற்றுகிறார்கள் என்பது எவ்வளவு பெரிய சமூக மாற்றம்! இதற்காகவே ஒவ்வொரு தமிழ் படித்த ஆணும் பெண்ணும் அடிகளாருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இதனால் அடிகளாரது பொன்விழா மலரில் ஒருவர், இவர் ஒரு அமுதசுரபி ஏந்திய ஆண் மணிமேகலை என்று மிகச் சரியாகக் குறிப்பிட்டார்.

இவரை வீர சைவர் என்று எல்லோரும் அறிவர். ஆனால் சில ஆதீனங்களைப் போல துப்பாக்கியோ, கத்தியோ கையில் கிடைகாது. அவ்வளவு ஏன்? சில பீடாதிபதிகள் சோடாபாட்டில் வீரர்கள் என்று தம்மைப் பறையறைந்து கொள்வதையும் பார்க்கிறோம். ஆனால் அனைவர்க்கும் அருள்பாலிக்கும் அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தவர் இவர். அதனால் வீர சைவர் என்பதோடு இவரை ஈரசைவர் என்பதே பொருத்தம். இவருடைய வீரத்தை எங்கே காட்டுவார்? தமிழ் வழிபாடு என்ற கொள்கையில் வீரத்தைக்காட்டுவார். இவருடைய வீரம் என்னால் விளம்பும் தகையதோ என்ற சேக்கிழார் வாக்கிற்கு இவரே இலக்கணம்.

ஒருமுறை மடத்தில் ஒரு தமிழ்த் திருமணத்தை செய்து

வைத்தார். மணவீட்டார் மண விருந்திற்கு வெகுதூரத்தில் இருந்த ஒரு உணவு விடுதியில் உணவு ஏற்பாடு செய்திருந்தனர். உடனே அடிகள் அதை விலக்கி, தாமே. மணவிருந்தை சமைத்து அனைவரையும் விருந்தருத்தினாராம். அதில் அடிகளின் கருணை ததும்பிய ஈரம் தெரிந்தது.

இப்பெரியாருடன் அடியேனுக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பை இப்போது மலரும் நினைவாக நினைத்துப் பார்க்கிறேன். அந்த நாள் 26.04.1985. அந்நாளில் தான் வெள்ளியங்கிரி திருக்கோயில் குட நன்னீராட்டு நடந்தது.

அந்தக் குடநன்னீராட்டு வேள்விப் பணிக்காக அடியேன் தலைமையில் பதினோரு பேரை சென்னையில் இருந்து அடிகளும், சீரவை சுந்தர சுவாமிகளும் அழைக்க யாங்கள் பேரூர் மடத்திற்கு வந்தோம். அடிகள் அடியேங்களை எல்லாம் உபசரித்த அந்தத் தண்ணளியை எடுத்துரைக்க சொற்கள் இல்லை.

அடிகளே கம்பங் கஞ்சியைத் தயாரித்து தந்தருளியது இன்று நினைத்தாலும் உள்ளம் நெகிழ்கிறது. சுவாமி, சுவை அதிகம் என்றேன்; ஏழு சுவையும் அற்புதம் என்றேன். சுவை ஆறல்லவா என்றார். உண்மை! ஆனால் தங்களின் கருணைச் சுவையோடு சேர்ந்தால் மொத்தம் ஏழாகிறது என்றேன். அடிகள் ரசித்துச் சிரித்தார்.

பல நாட்களுக்குப் பின் தான் இந்த கம்பங்கஞ்சிக்குப் பின் ஒருவரலாறு உண்டு என்பதை அறிந்தேன். பேரூர் மடத்தின் முன் பட்டத்து இராமலிங்க சுவாமிகள் காலத்தில் அவர் இந்த கம்பங்கஞ்சியை வருபவர்க்கெல்லாம் வழங்கி வந்தார் என்று கேள்விப்பட்டேன். அப்படியானால் இந்தக் கஞ்சி மடத்தின் முத்திரைக் கஞ்சி என்று உணர்ந்தேன்.

அடிகள் அடியேன் மீது தனித்த அன்பு வைத்திருந்தது. அடியேன் வாரியார் சுவாமிகளின் நெருங்கிய உறவினர் என்பதும் அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

பேரூர் அடிகளும், சிரவை சுவாமிகளும் வெள்ளியங்கிரி

குடநன்னீராட்டிற்குப் பின் பல குட நன்னீராட்டுகளில் எங்கள் குழுவை ஆட்படுத்தி இருக்கின்றார்கள்.

பேரூர் அடிகள் மூன்று முறைக்கும் மேலே அடியேனுக்கு தமிழ் நெறிக்காவலர், செந்தமிழ் வேள்வித் திலகம், தமிழ்நெறி வேள்விச் சாதனையாளர் என்ற பட்டங்களை அளித்துச் சிறப்பித்திருக்கிறார்கள். அடியேனின் நூல்கள் பலவற்றிற்கு சாற்றுகவிகள் அளத்திருக்கிறார்கள்.

ஒரு முறை வடபழனி முருகன் கோயிலில், அடியேனுக்கும், நண்பர் சங்கர நாராயணருக்கும் தவத்திரு ஊரன் அடிகளும், நம் அடிகளாரும் இணைந்து செந்தமிழ் வேள்ளிச் சதுரர் என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்து இருக்கிறார்கள்.

எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். காலம் மற்றும் இடத்தின் அருமை கருதி. பேரூர் ஆதி குரு அருளிய அவிரோத உந்தியார் வாக்காலேயே அடிகளைத் தொழுது முடிக்கின்றேன்.

எல்லாம் உடையான் குருவாகி ஈங்கெமது
அல்லல் அறுத்தான் என்று உந்தீபற
அவன்தான் தொழுவோம் என்று உந்தீபற!

செந்தமிழ் வேள்விச் சதுரர்
முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகன்

16

முனைவர் சுந்தரமூர்த்தி
துணைவேந்தர் (ப/நி)
தஞ்சை பல்கலைக்கழகம்

தவத்திரு பேரூர் அடிகளார் சமயத்திற்கும் தமிழுக்கும் கல்விக்கும் பெருந்தொண்டாற்றிய பெருந்தகை. கொங்கு நாடு சாந்தலிங்கர் திருமடத்தால் பெரும் பயன் பெற்றது.

அடிகளார் காலத்தில் கல்விக்கு முதன்மை தந்து கொங்கு நாட்டு மக்களுக்கு நல்வழி காட்டினார். புதிய புதிய திட்டங்களுக்கு வழியமைத்து மாணவர்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டினார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராய் ப் பணியாற்றிய போது அனைத்து நிகழ்வுகளும் தமிழிலேயே நிகழ வேண்டும் என வலியுறுத்தினார். துணைவேந்தரும் ஆட்சி குழுவினரும் இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டனர். கூட்ட நிகழ்ச்சிகள் குறிப்புக்கள் தமிழ் மொழியில் எழுதி வர அடிகளாரின் வேண்டுகோளே காரணமாக அமைந்தது.

தமிழ் கல்லூரியின் தரத்தை உயர்த்த முனைப்பு காட்டினார். கலைக் கல்லூரிகளுக்கு நிகராகத் தமிழ் கல்லூரிகள் உயர்ந்தன. தமிழ் கல்லூரியில் பேராசிரியர்களுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் நிகரான பணி வாய்ப்பு கிட்டியது. பட்டய படிப்பு என்ற நிலைமை மாற்றி பட்ட படிப்பிற்கு உரிய தாக்கினார்.

பாரதியார் பல்கலைக்கழகத்திலும் சென்னை பல்கலைக் கழகத்திலும் பல புதிய மாற்றங்களையும் தமிழுக்கு முதன்மையும் தரப் போராடினார்.

இந்த ஆண்டு அடிகளாரின் நூற்றாண்டு. கோவை பெருமக்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து களிக்கும் பெரு மகிழ்ச்சி உடையது.

நூல்கள் பதிப்பித்தும் அருள்நெறி காட்டியும் குறள் நெறியில் வாழ்ந்தும் மக்களுக்கு தொண்டாற்றிய அடிகள் பெருந்தகையின் புகழ் ஓங்கட்டும். வாழ்க தமிழ் நெறி. அடிகளாரின் அருள்நெறி.

17

நடராஜன்

காமாட்சிபுரி ஆதீன ஓதுவார்

அன்புடன் வனங்கிறேன்

கயலாய முனிவர் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அருளாட்சி நூற்றாண்டு விழாவிற்கு காமாட்சிபுரி ஆதீன ஓதுவா மூர்த்தியாகிய நடராஜன் எங்களது சாமிகளுடன் சென்று பார்த்தும் தரிசித்தும், கேட்டும் பெற்ற அனுபவ நிகழ்வின் ஒரு சிலவற்றை இந்த நேரத்தில் பகிர்ந்து கொள்வதில் என்னுடைய வாழ்நாள் பாக்கியமாக கருதுகிறேன்.

ஆம், அவரது தமிழ் கல்லூரியின் கல்வி பணி அரசுடன் இணைந்து செய்து வந்தார்கள் அது போல் இவர் 1967ல் பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை தொடர்ந்து சாமிகளுடன் தொடர்பில் இருந்தார்கள். எவ்வளவு தமிழ் அறிவாளியாக இருந்தாலும் வந்து ஆசி பெற்று சென்றார்கள். அவர் சிறு வாளியில் பத்திரிக்கை வைக்க சென்ற சமயம் தாய்மை உணர் வோடு காலை உணவை அவரே அவர் கைபட பரிமாறி சாப்பிட்டது இன்றளவும் மனதில் நெகிழ்ச்சியாக இருக்கின்றது.

1975-76ல் ஆவாரம்பாளையம் சமயபுரம் மாரியம்மன் கோயில் திருக்குட நன்னீராட்டு நடந்தது கொஞ்சம் முன்னதாக வந்தார்கள் எல்லோரும் அமர்ந்து இருந்த நேரம் நான் சாமிகள் எங்களுக்கு ஏதாவது அறிவுரை சொல்ல கேட்ட போது,

அன்பு கூர்ந்து பாராட்டி அறிவுரை வழங்கிய போது இன்றளவும் நெகிழ்ச்சி அடைகிறேன். அத்தோடு எங்களது சாமிகள் அழைத்து ஆதீனத்தில் வெள்ளி விழா கண்டு ஆசி பெற்றதும். இது காணும் தமிழ் திருக்குட நன்னீராட்டு நடக்க அவரே முழு முதற் காரணமானவா என்பது கூறி அவரின் ஆசி பெற என்றும் பணிவோடு வேண்டும்.

18

இலக்கியச் செல்வர், முனைவர், புலவர்

ம. இளங்கீரன்

எம் எ., எம் எட்., எம் பீல்., பி எச் டி.,

அடிகளாரின் சிறப்புக்களை நம் ஆறு வகையில் பிரித்து பார்க்கலாம் அவை

I. தமிழ்க் கல்லூரி சிறப்பு, II. அடிகளாரின் சிறப்பு, III. அடிகளாரின் சேவை, IV.அடிகளாரின் தமிழ் பணி, V.அடிகளாரின் சமுதாய சிந்தனை, VI.அடிகளாரின் ஆன்மீகப் பணி, 1. தமிழ்க் குடமுழக்கு, 2. தமிழ் வழிபாடு, 3. தமிழ் அர்ச்சனை, 4. தமிழ் திருவிளக்கு வழிபாடு, 5. மகளிர்க்கு ஒன்பதின் நாள் விழா, 6. மகம் நட்சத்திரத்தில் சாந்தலிங்க அடிகளார்க்கு வழிபாடு என அவர்களின் பணிகளையும், சிறப்புகளையும் காணலாம்.

எனக்கு கல்லூரியில் படிப்பதற்கு வாய்ப்பை வழங்கி என்னை செம்மைப்படுத்தியவரும், இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் நான் கலந்து கொண்ட போது காவல் துறை என்னை கைது செய்ய வந்த போது கைது செய்யக் கூடாது என வாதிட்டு அடைக்கலம் தந்தவர். அதுமட்டுமின்றி மொழிப்போரில் அனைத்து கல்லூரி மாணவர்களுக்கும் தலைமை தாங்கி நடத்த உறுதுணையாக இருந்தார்.

எங்கள் இல்லத்தில் உள்ள அனைவருக்கும் தமிழ்ப் பெயர் சூட்டி தமிழ்முறைப்படி திருமணங்களை நடத்தி வைத்து திருமுறைப்படி வாழ்க்கை நடத்தவும் வழி வகுத்தார். அதுமட்டுமின்றி எங்கள் ஊரில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் தமிழ்முறைப்படி திருக் குடமுழுக்கு செய்து மக்களை திருக்குறள் நெறிப்படி வாழ்க்கை

அமைய வழிவகை செய்தார்.

அடிகளார் அவர்களுக்கு தமிழ் ஒரு கண், சைவம் ஒரு கண் என வாழ்ந்து காட்டியவர். மேலும் குன்றக்குடி அடிகளாருடன் என்னை இணைத்து திருக்குறள் பேரவையில் செயலாளர் ஆக்கியதோடு மட்டுமின்றி அதில் அவர் புரவலராக இருந்து சிறப்பித்தார். புலவர் குழுவிற்கு என்னை அனுப்பி வைத்தார்.

அடிகளார் அவர்கள் 10 ஆம் வகுப்பு சான்று வடிவமைப்பு குழுவில் என்னைப் பரிந்துரை செய்தார். மேலும் எனது சகோதரன் மயில் இளந்திரையன் மற்றும் எனது சகோதரி புலவர் இளஞ்செல்வி ஆகியோருக்கு கல்லூரியில் தமிழ் படிக்க வழி வகை செய்தார். மேலும் எனது நூலை அவரே முன் வந்து வெளியிட்டுத் தந்தார்.

செம் மொழி மாநாட்டு முதல் நிகழ்வாக கவிமணி மாலை என்ற கவிதை நூலினை வெளியிட்டார். தமிழ்க் கல்லூரியின் பொன் விழா, மணிவிழா மற்றும் பவளவிழாக்களை நடத்தி தமிழ் கல்லூரி தான் தமிழுக்கும், சைவத்திற்கும் தனியே பணி செய்ய முடியும் எனத் தரணிக்குக் காட்டியவர். மகா சன்னிதானம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்.

எளிய துறவும், இனிய குணமும் உள்ளவர். ஆதலால் அவர் அனைவரையும் அரவணைத்து செல்வதில் வல்லவர். மேலும் கொங்கு மண்டலத்தில் அனைத்து சமூகத்தின் நல்ல எண்ணத்தூதராகவும், அனைத்து மதத்தினரையும் அரவணைத்து செல்வதில் வல்லவராகவும் விளங்கினார்.

கோவையில் குண்டு வெடிப்பு நடந்து அரசு விழா எதுவும் நடக்காத சூழ்நிலையில் தமிழ்நாட்டிற்கு விளக்கு ஏந்தியது போல் அனைத்து மத சமூகக் கூட்டத்தினை நடத்தினார். மேலும் அவர் அனைவரையும் அழைத்து நல்லெண்ண அமைதிப் பேரணியை நடத்தினார். அது மட்டும் அல்ல கோவை மாவட்டத் திருக்குறள் பேரவை மாநாட்டை 3 நாட்கள் நடத்திக் காட்டியதோடு மட்டுமல்லாமல் இந்தியாவுக்கு வழிகாட்டியாக திகழச் செய்தார். மேலும் அவர்

திருக்குறள் நூல் ஆங்கிலப் படைப்பையும், திருக்குறள் பேரணியையும் திருக்குறள் பரப்பும் அனைத்து சான்றோர்களையும் அழைத்து விருது வழங்கினார். அதற்கு குன்றக்குடி சன்னிதானம் தலைமை தாங்கினார்.

இன்று நமது பேரூர் குருமகா சந்நிதானம் கயிலை குருமணி மருதாசல அடிகளார் அவரைத் தலைவராகக் கொண்டு திருக்குறள் பேரவை மாநாட்டை என்னை நடத்தச் செய்தார்.

அடிகளாரின் சிந்தனை என்பது திருக்குறள் வழி, சைவ நெறி, கடவுளைப் போற்று, மனிதனை நினை, மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கொண்டவர். அதன் வழி தமிழ் நாட்டின் சைவ மடங்களை நடக்க வைத்தார்.

பழனி சாது சாமிகள் திருமடம் நமது கௌமார மடம், காமாட்சிபுரி ஆதீனம் திருமடம், உதகை செங்காந்தல் மடம், மணிவாசகர் திருமடம், தென்சேரி மலை திருமடம் அனைத்து திருமடங்களையும் வழி நடத்தினார்.

தனி ஒரு மனிதராக நின்று தமிழ்நாட்டில் அனைத்து ஆலயங்களிலும் தமிழில் அர்ச்சனை என்ற ஒரு சிறப்பைப் பெற்றுத் தந்தார்.

அனைத்து ஆலயங்களின் குடமுழக்கு மற்றும் திருமண நிகழ்வுகளைத் தமிழிலேயே நடத்த வலியுறுத்தினார். எல்லாவற்றுக்கும் மேலாக சைவ மாநாட்டை சிதம்பரத்தில் நடத்தி சைவத்தின் பெருமையை உலகறியச் செய்தார்.

சைவசித்தாந்த வகுப்பை கோவை தமிழ் சங்கத்தில் நடத்தியது மட்டும் அல்ல அங்கு சைவசித்தாந்தம் கற்க வருபவருக்கும் உணவும் தேனீரும் வழங்க வழி செய்தார்.

தமிழ் தான் தனது முதல் கண் என்றும், சைவம் தான் எனது இரண்டாவது கண் என வாழ்ந்து காட்டிய வழிகாட்டி அவர். அவர் ஒரு சகாப்தம். அவரைப் போல் இந்த கொங்கு மண்ணுக்கு இனி யாரும் பணிபுரிய முடியாது என்னும் அளவிற்கு அவரின் தமிழ் மொழித்

தொண்டும் சைவ நெறிக் கோட்பாடுகளும் அமைந்துள்ளன.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு சைவ நெறி கூட்டங்களும், வாழ்வியல் கருத்தரங்குகளையும், பயிற்சி பட்டறைகளும் நடத்தித் தமிழ்ப் பணியும்- சைவப் பணியும் ஒருங்கே பின்பற்றச் செய்தார். அதுமட்டும் அல்ல அவர் நிஜம் என்றால் நமது குருமகா சந்நிதானம் தவத்தில் மருதாசல அடிகளார் நிழல் போல் நமக்கு வழிநடத்த அவரை நமக்கு உருவாக்கித் தந்தார். அவர் தந்த ஞானப் பொக்கிஷம் நமது தவத்திரு மருதாசல அடிகள். நமது ஞானத் தந்தை சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் புகழைப் பரப்பி நாம் சைவ உலகில் தமிழுக்கு என்றும் பணி செய்வோம்.

தமிழ் – சைவம் இரண்டையும் பிரிக்க முடியாது என்பதை நமக்கு உணர்த்திய நூற்றாண்டு நாயகருக்கு எனது மரியாதையும் பாராட்டும் உரித்தாகட்டும்.

வாழ்க தமிழ் ! வளர்க சைவ நெறி !

நன்றி

19

மருத்துவர் ரா. ருக்மணி

அரசு முதுநிலை மருத்துவர் (ப/நி)

சிங்காநல்லூர், கோவை.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

"நமச்சிவாயம் வாழ்க; நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"

இந்தக் கட்டுரையை எழுத முயற்சிக்கும்போதும், அன்னைத் தமிழைத் தெய்வமாகக் கொண்டு பணியாற்றிய, இன்று நூற்றாண்டு விழா காணும் நமது தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளாரது புனித நினைவுகளும் தெவிட்டாத தேனாக இனிக்கிறது.

ஸ்ரீ ராமபிரானுக்கு அணிலின் பங்கைப்போல அடியேனின் பங்கை செயல்படுத்த விழைகிறேன். இன்று இந்த சிறப்பான நிலையில் வாழ வழிகாட்டிய எனது தந்தையை நன்றியோடு வணங்கி,

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதனை
தொழுது படித்திடடி பாப்பா"

என்ற மகாகவி பாரதியின் கூற்றிற்கிணங்க செந்தமிழைக் கற்று, அதன் பயனாய் வாலறிவன் நற்றாள் தொழுது, இன்று இமயமாய் உயர்ந்து, கோவை, தமிழகம், பாரதநாடு மற்றும் இந்த ஞாலமே வியந்து போற்றும் அருட்தந்தையான 24வது மகா சன்னிதானம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரது புகழைப் பாட இந்தக் கட்டுரை பத்தாது.

"அன்பில்லா நெஞ்சிற்கு தமிழில் பாடி அல்லல் தீர்த்தவர் நமது

மேன்மைமிகு ஞானத்தந்தை. அத்துடன் சைவத் திருப்பணிகளையும் தமது இருகண்களாகப் பாவித்து உன்னதமாக வாழ்ந்த ஒழுக்கசீலர் நமது அடிகளார். அன்னாரது குருவருளும், திருவருளுமே நம்மை இந்த ஞாலத்தில் வழிநடத்திச் செல்வது உள்ளங்கை நெல்லிக்கனி.

பேரூர் தமிழ்க்கல்லூரியின் முன்னாள் நல்மாணாக்கர்களுள் ஒருவரான புலவர் திரு. சு. ராமசாமி ஐயா நாங்கள் வசிக்கும் இடத்திற்கு மிக அருகாமையில் வசித்து மிகமிகச் சிறந்த முறையில் தமிழ்த்தொண்டும், சமயத்தொண்டும் ஆற்றி வருவதைப் பெருமையுடன் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

"நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்றே" என்ற தமிழ் மூதாட்டியின் கூற்றுப்படி குருமகாசன்னிதானம், கயிலை மாமுனியின் தோற்றமே தெய்வீகமானது. எப்போதுமே அன்றலர்ந்த செந்தாமரையாக மலர்ந்த முகம், சுடச்சுட மிளிரும் பொன்போல ஒளிவீசும் தன்மை, எளிய அன்பர்களுடன் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதை உணர்ந்தவராக நட்புரிமையோடு பழகும் தன்மை, குறைகண்டவிடத்து எடுத்துக்கூறி அவரை நிறைகுடமாக்கும் உன்னதப் பண்புடன்,

"நகுதற் பொருட்டன்று நட்டல் – மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"

என்ற குறட்பாவிற்கு இலக்கணமாய் திகழ்ந்தவர்.

உழவாரப் பணியில் திருநாவுக்கரசரைப் போல சிறப்பாகச் செயலாற்றியதால் கோவையின் அப்பரடிகள் எனப் போற்றப்பட்டவர். இந்த மாவட்டத்தின் சிறு கிராமமான முதலிபாளையத்தில் தோன்றி, மயிலம் கல்லூரியில் பயிலும்போதே சைவத்திருப்பணியில் 1950ஆம் ஆண்டு சிரவை ஆதீனத்தின் ஆறுமுக அடிகளாருக்குத் துணையாக ஆன்மீகத் தொண்டாற்றியவர்.

பேரூர் தமிழ்க்கல்லூரியைத் தொடங்க வித்திட்டவர். 1984-ல் மயிலம் சிவஞானபாலக சுவாமிகள் தலைமையில் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் தொடங்கப்பெற்றது.

பேரூர் ஆதீனத்திற்குச் செல்லும்போதெல்லாம் எனது நட்பின் இலக்கணமான Dr.சுமதி என்பவருடன் சென்று அடிகளாரது திருப்பாதம் தொட்டு வணங்கி வருவோம். இங்கு தமிழ்க்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சாந்தலிங்க பெருமான் கோயில் புதுப்பிக்கப்பட்டு, 10.02.1980-ல் குன்றக்குடி அடிகளார் தலைமையில் திருக்குட நன்னீராட்டு விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

1967-ம் ஆண்டு தவத்திரு ஆறுமுக அடிகளாரிடம் திருமட முழுப் பொறுப்பையும் ஏற்று, தமிழ்க் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி, ஆயிரக்கணக்கான புலவர் பெருமக்களை உருவாக்கிய சீராளர் நமது

"ஞாலம் போற்றும் ஞானத்தந்தை"

பகிர்வதற்கு ஏராளமான நற்செய்திகள் உண்டு. அனைத்திற்கும் ஓர் அளவுகோல் உண்டு என்பதால் இத்துடன் நிறைவு செய்கிறேன்.

கோடானுகோடி நன்றியும், வணக்கமும்.

20

திருமதி பாக்கியலட்சுமி சுந்தரம்
ஆஸ்டிம் டெர்ஸஸ், அமெரிக்கா.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்து, நிலமிசை நீடு வாழ்ந்த" தவத்திரு பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளாரது, "தேனினும் இனிய தமிழ்த்தொண்டைப் பற்றியும், ''புழுவாய் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் நீ தரல் வேண்டும்" என்ற கூற்றிற்கிணங்க ஆன்மீகத் தொண்டைப் பற்றியும், நாம் இந்த மண்ணுலகில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டி சமூகத் தொண்டு புரிந்த உன்னதமான ஒரு மகான் பற்றிய அடியேனின் அனுபவம் பற்றி இயம்ப விரும்புகிறேன்.

அடியேன் கடந்த 50 ஆண்டுகளாக அமெரிக்க நாட்டில், எனது ஒரே மகனின் பராமரிப்பில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறேன். தாய்நாட்டிற்கு பலமுறை வந்து கோவையில் தங்கிச் செல்வேன். தமிழ் எனது மூச்சு, ஆன்மீகம் அடியேனின் நாடி, நரம்புகளில் எல்லாம் நிறைந்துள்ளது. திருவாளர், கோவையின் அப்பரடிகளார் என போற்றப்படும் 24வது மகா சன்னிதானம் சாந்தலிங்க ராமசாமி அடிகளாரை பலமுறை தரிசிக்கும் நல்வாய்ப்பு அமைந்து ஆனந்தம் அடைந்தேன்.

1980-ம் ஆண்டு டெட்ராய்டு என்னும் ஊரில் நம் தமிழ்ச் சான்றோர்கள் எல்லாம் கூடி தாய்த்தமிழை வளர்க்க முதல் தமிழ்மன்றம் ஆரம்பித்து, அதன் வளர்ச்சிக்காக நமது தமிழ்நாட்டிலிருந்து கவியரசு கண்ணதாசன், திரு. ஔவை நடராஜன், திரு. சா. கணேசன், சீர்காழி கோவிந்தராஜன், திருமதி. சௌந்திரா கைலாசம், திரைப்படக் கலைஞர் திரு. சிவகுமார் போன்ற ஏராளமான

தமிழ்ப்பற்று நிறைந்த ஆன்றோர்கள் வந்து எங்களுடன் தங்கிச் சென்றது எங்களது பாக்கியம். இத்துடன் அடியேன் பள்ளியில் சென்னையில் பயின்றபோது திருவாளர் தண்டபாணி தேசிகர் எங்களுக்குப் பாதுகாவலராக அமைந்தார் என்பதையும் பெருமையுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

"அடையா நெடுங்கதவும் அஞ்சேன்" என்ற சொல்லுக்கு இலக்கணமாய் திகழ்ந்து தான் கற்றுத் தேர்ந்த தமிழை வளர்க்க பேரூரில் தமிழ்க்கல்லூரி தொடங்கக் காரணமாக அமைந்து சிறப்பெய்தினார்.

மரிக்கொழுந்து வேரிலிருந்து நுனிவரை மாறாத மணம் வீசுவதுபோல நமது சாந்தலிங்க ராமசாமி அவர்கள் ஏழை, எளிய மக்களையும் சமமாகப் பாவித்து உயர்ந்த கல்வியை பெறச்செய்து தமிழ் மணம் பாரெல்லாம் வீச வழிவகுத்தார்.

"காட்சிக்கெளியன், கடுஞ்சொல்லன் அல்லன்" பேரன்பும், தெய்வத் திருவருளும் நிறைந்த போற்றுதலுக்குரிய அடிகளாருக்கு எனது பணிவான வணக்க மலர்களை அன்பாலும், பண்பாலும் சமர்ப்பிக்கிறேன்.

நமது அடிகளார் வாழ்ந்து சிறப்பித்த பேரூர் ஆதீனம் பல வரலாற்றுப் பெருமைகளையும், தொன்மைவாய்ந்த பல ஆண்டுகளைக் கடந்ததென்பதும் கூடுதல் சிறப்பு.

பேரூர் ஆதீனத்து சான்றோர்களையும், 25-வது குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளாரையும், மதிப்பிற்குரிய துறவி மரகதம்மாள் அவர்களையும் அமெரிக்காவிற்கு வந்து அடியேனுடன் தங்கும்படி மனமுவந்து அழைக்கிறேன்.

நன்றி, நன்றி, நன்றி பல.

21

புலவர் கா.ச. அப்பாவு
முன்னாள் மாணவர், பேரூர் தமிழ் கல்லூரி
வளர் தமிழ் இயக்கம், கோயம்புத்தூர்

இராமசாமி அடிகளெனும் இத்தெய்வம் அல்லது
பொற் புடைத் தெய்வம் யாங்கண். டிலமால்
எந்தம் அடிகள் இணையடி போற்றி
பேரூர் அடிகள் திருவடி போற்றி
நற்றமிழ் ஞானத் தந்தையே போற்றி
நற்றவம் மணக்கும் நாயகா போற்றி
திருப்பேரூர் ஆதீனத் தெய்வீகப் பேரொளியே
திருவருளும் குருவருளும் ஈந்தருளும் மாமுனியே
வளர் தமிழும் சைவமுமே வையகத்தில் ஓங்கிடவே
வாழ்நாள் முழுவதுமே வள்ளல் என நின்றவரே
போற்றிப் பணிகின்றோம் உம்பொன்மலர்த் திருவடிகள்
போற்றிப் பணிகின்றோம் உம் பொன்மலர்த் திருவடிகள்
யான் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்தவன்.

என்னிடம் கண்கண்ட ஒரு கடவுளை என் மனம் மொழி மெய்களால் இடையறாது வணங்கி வருகின்றேன். அவர்கள் தான் பேரூர் ஆதீனம் 24ஆம் குரு பட்டம் ஞானத்தந்தை தவத்திரு இராமசாமி அடிகளார் என்னும் பேரியக்கம்.

முன்னைப் பழமைக்கும் பழமையாய்
பின்னை ப் புதுமைக்கும் அப்பெற்றியதாய் '

தனக்கெனத் தனித்தடம் பதித்து வாழ்ந்து காட்டிய வரலாற்று நாயகன்.

'தமிழ் பணி ஆற்றாநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும் தன் நாளை எடுத்து'

என்று வாழ்ந்து காட்டிய தனித்தமிழ்த் துறவி. சைவத்துறவி. வீரத்துறவி.

அவர்களுடன் நெருக்கமாப் புலவர்கள் குப்புராசு 'இராசியண்ணன்.ம இளங்கீரன்.பூ அ இரவீந்திரன்.கா ச அப்பாவு ஆகிய நான் ஆகியோர் இருந்தமை வாழ்க்கையில் அமைந்த நற்பேறு.

பேரூர் புலவர் பேரவையின் செயலர் பொறுப்பை ஏற்றபிறகு ஆதினத்துடன் மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு அடிகளுடைய தமிழ்த் தொண்டனாகித் தமிழ்ப்பணி யாற்றும் நல்வாய்ப்பினை அடிகள் நல்கினார்கள்.

அடிகள் தலைமையில் வளர் தமிழ் இயக்கம் ஏற்படுத்தி அதன் பொதுச்செயலர் வாய்ப்பினை எமக்குத் தந்தார்கள்.

வளர்தமிழ் இயக்கத்தின் சார்பாக தமிழ்ப் பயிற்று மொழி வழிபாட்டு மொழி மாநாடு'நடத்தத் திட்டமிட்டோம்.

25 ஆம் பட்டம் குரு மகா சன்னிதானம் தவத்திரு மருதாசல அடிகள் பெருந்தகை முழு பொறுப்பினையும் ஏற்று ஒல்லும் வகையான் எங்களுக்கு வழி காட்டினார்கள் பல மாவட்டங்களுக்கும் பயணித்தார்கள். தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்தும் தொடர்பு கொண்டும் மிகப்பெரிய அளவில் மாநில மாநாடாக நடத்திக் காட்டினார்கள்.

ஒவ்வொரு நிகழ்விலும் அடிகளுடன் இணைந்து செயல்படும் வாய்ப்பு எமக்கு அமைந்தது.

மாநாட்டுத் தலைமை தவத்திரு இராமசாமி அடிகள். மாநாட்டுத் தொடக்க உரை மேதகு அப்துல் கலாம் அவர்கள். நான்காயிரம் பேர் அமரக்கூடிய பெரிய கொட்டகை. மிகப்பெரிய அரங்கம். கூட்டம் நிரம்பி வழிந்தது. இடமின்றிப் பலரும் நின்று கொண்டிருந்தார்கள்.

தமிழ்ப் பயிற்று மொழி வழிபாட்டு மொழி மாநாடு இது. இதை நடத்துவது அடிகளாரால் தொடங்கப்பட்ட வளர் தமிழ் இயக்கம். நான் இந்த இயக்கத்தில் சேர்ந்து பணியாற்ற விரும்புகிறேன். என்னை இந்த இயக்கத்தின் புரவலராக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று அப்துல் கலாம் அவர்கள் தொடங்கினார்கள். மகிழ்ச்சி ஆரவார ஒலியால் அரங்கமே அதிர்ந்தது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்பு உரை நிகழ்த்த நான் நன்றி உரை கூறினேன்.

நன்றி உரையில் திருவள்ளுவராக மேதகு அப்துல் கலாம் அவர்கள் தொல்காப்பியராக தவத்திரு அடிகளார் அவர்கள் அமர்ந்திருக்கும் மாநாடு இது என்று சொல்லியபோதும் மகுதியில் லிங்கமும் இணைந்து தமிழைப் பரப்புகிறார்கள் என்று சொல்லிய போதும் விண்ணைப் பிளக்கும் ஒலிகளை பார்வையாளர்கள் வெளிப்படுத்தினர். இரண்டு நாட்களும் மாநில அளவில் உள்ள பல் திறன் தமிழ் ஆளுமைகள் கலந்து கொண்ட பல்வேறு அமர்வுகளில் கருத்தரங்கம் நடந்தது. மூன்றாவது நாளில் காந்திபுரம் தொடங்கி நூறு அடி சாலை வழியாக சிவானந்தா குடியிருப்பு வரை சுமார் 10,000 பேர் கலந்து கொண்ட பேரணி. முடிவில் அடிகளார் தலைமையில் பொதுக்கூட்டம்.

அரசியல் கட்சிகளே வியப்படையும் அளவுக்கு இத்தகைய மாநாட்டை தாய் மொழிக்காக நடத்திய பெருமை தவத்திரு மருதாசல அடிகளார் அவர்களையே சார்ந்தது என்பதே மாநாட்டுச் சிறப்பு.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் என்று என்று அடிகளார் வாழ்ந்தாலும் தம் மாணவர்கள் எல்லாத் துறையிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது அடிகளுக்குப் பேராசை உண்டு.

1957ஆம் ஆண்டுகளில் சித்த வைத்தியம் என்று ஒரு பாடத்தை வாரம் ஒரு பாட வேளையில் கோ.ம. ராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் நடத்தினார்கள்.

காந்தீய மன்றம் என்ற அமைப்பைத் தொடங்கி அதில் பேரா.அ. தேவராசு சடகோபன் கந்தசாமி போன்ற பெருமக்கள் காந்தீயக் கொள்கைகளைப் பரப்பினார்கள்.

மாதத்திற்கு ஒரு முறை என்று கருதுகிறேன் கோவை மத்திய சிறைச் சாலைக்கு சன் சென்று கைதிகளை ஒரு சேர உட்கார வைத்து அவர்களுக்கு நன்னெறிக் கருத்துக்களைக் கூறக் கூட்டங்கள் நடத்தினார்கள். யானும் இரு முறை சென்று அந்தக் கூட்டங்களில் பேசி இருக்கிறேன்.

மலைவாழ் பழங்குடி மக்கள் நலனில் அக்கறை கொண்டு அதற்கெனப் பாடுபட்டார்கள்.

இத்தகைய பேருள்ளம் கொண்ட ஆதீனத் தலைவராக பேரூரதீனம் விளங்கி ஆதீனங்களுக்கு ப் பெருமை சேர்த்தார்கள்

சுமார் 3,4 மாதகாலம் மாநாட்டுப் பணிகளுக்காக முற்பகல் 10 மணிக்குள் கல்லூரிக்கு சென்று விடுவேன். ஓயாது உழைத்திடும் வாய்ப்பினைப் பெற்றேன். சாடிவயலில் இருந்தாலும் அன்றாட நிகழ்வுகளை அறிந்து வழி காட்டினார்கள் அடிகள் பெருந்தகை.

ஒரு நாள் தமிழ் துறைப் பேராசிரியர் திருநாவுக்கரசு அவர்கள் அழைக்கிறார்கள். இதோ இந்தப் பணம் ரூபாய் 20000-ஐ அப்பாவு கையில் கொடுத்து விடு. நிறையச் செலவு செய்கிறான். இது என் ஓய்வூதியப்பணம் என்று கொடுத்து அனுப்புகிறார்கள்.

வேண்டாம் என்று மறுக்க முடியுமா? முடியாது. திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று சொல்ல முடியுமா? முடியாது.

பொது வேலைகளுக்கும் கூட ப் பிறரிடத்தில் கையேந்தாத யான் கடவுள் கொடுத்த வரமாகக் கருதிப் பெற்றுக் கொண்டேன். பணத்தையும் கொடுத்தார்கள். ஒரு பெரிய விழா நடத்தி நற்றமிழ் நம்பி என்று பட்டத்தையும் எனக்கு வழங்கினார்கள். யார் பெறுவார் இந்தப் பேறு என எண்ணி எண்ணி இன்றளவும் மகிழ்கிறேன்.

ஒவ்வொரு நாளும் மதியம் உணவு உண்ணும் போது தவத்திரு

மருதாசல அடிகள் உடன் இருந்தேன். உணவு உண்பார்கள். தனியாக அமர்ந்து உண்டதை நான் பார்த்தறியேன். என்னே திருமடத்தின் விருந்தோம்பும் பண்பு.

ஒரு நாள் திருச்சியிலிருந்து முனைவர் திருமாறன் முனைவர் அரண முறுவல் இருவரும் சாடிவயல் சென்று அடிகளாரைச் சந்தித்தார்கள். தமிழறிஞர்கள் சென்றால் தமிழ் வளர்ச்சி பற்றி அதிகம் பேசுவார்கள். அப்பாவு தமிழுக்காகப் பாடுபடுவதில் துடிப்புடன் இருக்கிறான். நீங்களும் துணை நின்று வழிகாட்டியும் தமிழுக்காகப் பாடுபடுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஒரு தமிழ்த் தொண்டனாக அடிகளார் உள்ளத்தில் இடம் பிடித்தவன் என்பதை விட வாழ்க்கையில் பெற வேண்டியது எதுவும் இல்லை என்று எண்ணி மகிழ்கிறேன்.

காட்சிக்கு எளியராக இருக்கும் ஆதீனங்களைக் காண முடியாது. தனித் தமிழின் மீட்சிக்கு வழிகாட்டும் ஆதீனங்களையும் காணுதல் இயலாது. இந்த வகையில் பேரூர் ஆதீனம் சிறப்புமிக்கது.

கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர்களை க் கண்டாலே அடிகளின் கொவ்வைச் செவ்வாயில் தோன்றும் குமிண் சிரிப்புக்கு இணை ஏதும் இருக்க முடியாது

வாழ்க அடிகளார் பெரும் புகழ்

வளர்க அவர்கள் எண்ணிய தமிழ்த் திருப்பணி

22

அருள்நிதி புலவர். **வாசுதேவன்** எம்.ஏ., பி.எட்.,
முதுநிலை தமிழாசிரியர் (ப.நி)
நாமக்கல் மாவட்டம்

புலவர் தியாகராஜன் அவர்கள் வழிகாட்டுதலின்படி 1957 முதல் 1961 வரை பேரூர் தமிழ் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் நான் முதலாம் ஆண்டு படிக்கின்ற பொழுது மூன்றாம் ஆண்டு படித்தவர். அந்தக் காலத்தில் அடிகளார் உடன் அதிகமாக பழகும் வாய்ப்பு கிடைத்தது. அடிகளாரின் நேரடி பார்வையில் வளரும் வாய்ப்பு கிடைத்தது. அடிகளார் திருவருட்பணிக்குச் செல்லும் போதும் தூய்மை பணியின் போதும் உடன் பணியாற்றும் பேறு பெற்றேன். கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க அடிகளாருக்கு உதவி செய்யும் வாய்ப்பும் கிடைத்தது.

சரவணம்பட்டி கௌமார மடாலயத்தில் ஆதீனமாக கந்தசாமி சுவாமிகள் ராமானந்த சுவாமிகள் குருபூஜைக்கு எங்களை செட்டிபாளையம் வழியாக ஏரிக்கரையின் வழியாக அடிகளார் நடந்து அழைத்துச் செல்வார். கார்த்திகை திருவிழாவின் போது மருதமலைக்கும் மாணவர்களை அழைத்துச் சென்று முருகனுடைய அருட்பெறச் செய்வார். என்னை தன் தன்னுடைய சகோதரராக மகனாகவே அவர் பாவித்தார் என்று சொல்லலாம்.

மற்ற ஆதீனங்கள் போல் அன்றி மிகவும் எளிமையாக இருந்தவர் நம் அடிகளார். குன்றக்குடி அடிகளார் போன்ற பெரிய சமயத் தலைவர்கள் வருகின்ற பொழுது என்னை அழைத்து அறிமுகம் செய்கின்ற தன்மை உடையவராகத் திகழ்ந்தார். பெரிய பெரிய பாட புத்தகங்களை பார்த்து பயந்து விடுவேன் அப்போது பயப்படாதே இதில் சிறிய பகுதி தான் உனக்கு தேர்வில் வரும் பாடப் பகுதியாக இருக்கும் என்று ஆறுதல் கூறுவார். தியாகராஜன் எனக்கு உற்ற வழிகாட்டியாக இந்த காலத்தில் இருந்தார்.

அரசு கலைக் கல்லூரியில் சென்று 1961 மார்ச் மாசம் தேர்வு எழுத வேண்டும். சாந்தலிங்கர் பிள்ளை தமிழில் வரும் திருவே வருக

சாந்தலிங்கர் குரு மணியே வருகவே என்று பாடிக்கொண்டே உறங்குவேன். அன்றும் அப்படித்தான். தேர்வு எழுதும் முதல் நாளும் படித்தேன். திடீரென்று எதிர்மறை எண்ணம் மனதில் தோன்றி விட்டது.

உடல் எல்லாம் வெப்பம் ஆகிவிட்டது எனக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிந்துவிட்டது. சாமி ஏதோ நான் தெரியாத்தனமாக நினைத்து விட்டேன். என்னுடைய தவறை மன்னித்து கொள்ளுங்கள் என்று மனம் உருக சிந்தை உருக வேண்டினேன். எண்ணம் அருள் உணர்வுகள் இன்னும் இருந்து கொண்டே இருக்கிறது. உடல் பலம் பொருளாதார வளம் ஆகிய அனைத்தும் சாந்தலிங்கர் தண் அருளால் கிடைத்துள்ளது. இதற்கெல்லாம் காரணம் எனது திறமை இல்லை. அடிகளார் தான். இன்றும் என் கனவில் அடிகளார் வந்து கொண்டு தான் இருக்கிறார். அவரை மனம் மொழி மெய்களால் இடையறாது வணங்கி மகிழ்கிறேன்

அனைவரையும் வாழ்த்துகிறேன்

23

Dr. M. சுமதி, B.Sc., M.B.B.S

ஈஸ்வர் மருத்துவமனை, கோவை

நான் அப்போது ஏழாவது படிக்கும் பள்ளி மாணவி. எனது தாயார் திருமதி வள்ளியம்மாள் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணி புரிந்தார். நான்கு குழந்தைகளுக்கு தாயான பின், எனது தாயார் தமிழ் வித்துவான் படிக்க விரும்பினார். அவருக்கு வேண்டி புத்தகங்களை அடிகளார் கொண்டு வந்து தருவார் அப்போது அவரை வெள்ளை வேட்டியில் பார்த்திருக்கிறேன்.

பிறகு மருத்துவம் படித்து முடித்து திருமணம் ஆனதும் எனது தம்பியின் மாமனார் வா. சச்சிதானந்தம் பிள்ளை (HOD English department மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்) Walt whit man and Bharathi என்ற புத்தகம் எழுதினார். அதற்கு கலந்தாய்வு செய்ய சில புத்தகங்கள் தேவைப்பட்டது. அதை வாங்குவதற்கு நானும் எனது அம்மாவும் மடதிற்குச் சென்றோம். அதுதான் அடிகளார் உடன் எனது முதல் சந்திப்பு. அவரை காவியுடையில் துறவியாக பேரூர் மடத்தில் ஆதீனமாக சந்தித்தேன். அவர் தமிழ் கல்லூரியின் முதல்வர் அரசு Senet member, அறநிலை துறை அங்கத்தினர், உலக சைவ சமய தலைவர் என பன்முக நெறியாளராக விளங்கினார். எங்களுக்கு வேண்டிய புத்தகங்களை பெற்ற பின் அவரை வணங்கி விடை பெற்றேன். அப்போது அவர் மகத்திற்கு வாருங்கள் அம்மா என்றார். நானும் சரி என்று சொல்லிவிட்டேன். வெளியே வந்து அங்கு இருந்தவரிடம் மகத்தில் என்ன விசேஷம் என்று கேட்டேன். அதற்கு அவர் அம்மா ஒரு மகத்தன்று தான் அடிகள் ஜீவசமாதி அடைந்தார். ஒவ்வொரு மகத்தன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெறும்.

அடுத்த மகத்தன்று பூக்கூடையில் தேங்காய், பழம், பூ, பூஜைக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு மடத்திற்குச் சென்றேன். அன்று காலை 7.00 மணி முதல் வேள்விச் சடங்குடன் பூசை ஆரம்பித்தது. லிங்கத்திற்கு அபிடேகமும் ஆராதனைகளும் விமர்சையாக நடைபெற்றன.

அலங்காரம் நடக்கும் வேளையில் சாந்தலிங்க அடிகளார் கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வந்தியார் என நான்கு புத்தகங்களில் ஏதாவது ஒரு புத்தகத்தில் இருந்து சில பாடல்கள் படித்து விளக்கம் சொல்லுவார்.

பின்னர் நடராஜருக்கு இதேபோல் பூஜை நடக்கின்றது. பூஜை முடிந்தபின் அடிகளார் அனைவருக்கும் ஆசி வழங்கி விபூதி கொடுத்த. பிறகு அன்னம் பாலிப்பு, பூஜை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது மனநிறையுடன் வீட்டுக்குச் சென்றேன்.

மடத்தில் எனக்கு தனி அறை கொடுத்தார்கள். மாதம் ஒரு முறை சென்று அங்கு உள்ளவருக்கும் பேரூர் சுற்றியும் இருந்தவர்களுக்கும் இலவச மருத்துவ பணி செய்யும் பேறு பெற்றிருந்தேன்.

அடுத்து ஒரு மகத்திற்கு போகும்போது காசிக்கு போகலாமா என்று கேட்டார். சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன் வெளியே வந்து விசாரித்தபோது அகில இந்திய சைவ சமய மாநாடு காசியில் நடக்கிறது என்றும் தமிழ்நாட்டில் சார்பாக அடிகளார் உரையாற்றுகின்றார் என்றும் கூறினார்கள் .

இதனால் அதன் காரணமாக எல்லோரும் சேர்ந்து காசிக்கு ஒரு பயணம் போகலாம் என்று அடிகளார் விரும்புகிறார் என்று கூறினார்கள். அடுத்த மகத்திற்கு போகும்போது காசி பயணம் பற்றி விசாரித்த போது சுமார் நூறு பேர் பதிவு செய்து இருக்கிறார்கள். அதில் 80 சதவீதம் வயதானவர்கள் 20% நடுவயதினர் என்னுடன் ஒரு செவிலியையும் அழைத்துக்கொண்டேன். 17 நாட்கள் பயணம் 17 நாட்களுக்கான மாத்திரை, மருந்து, ஊசி மருந்துகள், தேவையானசரளமாகஎடுத்துக்கொண்டோம். மற்றும் என்னுடன் என்

கணவரும், சித்தி அவர்களும், மாமா அவர்களும் உடன் வந்தனர். என் கணவர் ER. முருகேசன் அவருக்கு ஹிந்தி மொழி சரளமாக பேசுவார். நம் அடிகளாருக்கு அவர்கள் மொழிபெயர்ப்பாளர்.

காசி விஸ்வநாதர் கோவில் நான்கு அடி குழிக்குள் விஸ்வநாதர் இருந்தார். ஆளுக்கு ஒரு கையில் தண்ணீரும் வில்வ இலையும் வைத்துக் கொண்டு நாமே இறைவனுக்கு நீரால் அபிஷேகம் செய்து வில்வ இலையை சாத்தி வணங்கலாம். நானும் ஒரு கையில் நீரும் வில்வமும் வைத்துக் கொண்டு ஓரமாக நின்றிருந்தேன். ஒரே கூட்டம் கோவிலுக்கு நான்கு வாசல்கள் உள்ளே செல்ல முடியவில்லை. அப்போது அடிகளார் வந்து எங்கே அம்மா உனது கணவர்? என்று கேட்டார். அவரை அழைத்து வந்ததும் அடிகளார் அவரிடம் ஏதோ சொன்னார். அவர் உள்ளே சென்று வாயில் காப்போரிடம் கூலி நான்கு வாசல்களிலும் வெளியாட்கள் வராமல் நிறுத்தி வைத்தார். உள்ளே நாங்கள் 100 பேர் மட்டும் தான் அடிகளாறுடன் சென்றதால் நான் முதல் வரிசையில் முன்னாள் நின்றிருந்தேன்

அடிகளார் காசி விஸ்வநாதர்க்கு பூஜை செய்ய ஆரம்பித்தார். 11 வகை அபிஷேகம் ராமேஸ்வரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நீராலும் அபிஷேகம் நடந்தது. திடீரென்று என் கையில் இருந்த நீரை யாரோ பிடுங்கினார்கள் பார்த்தால் அன்பர் ஒருவர் நான் கொண்டு வந்த நீரில் சந்தனத்தை கரைத்தார். அடிகளார் சந்தன அபிஷேகம் செய்தார். நானும் சிறு புண்ணியம் செய்துள்ளேன். நான் கொண்டு வந்த நேரம் அடிகளார் கையில் சந்தன அபிஷேகம் இறைவனுக்கு நடந்தது. அபிஷேகங்கள் முடிந்த பின் மலர்களால் அலங்காரம் முடித்த பின் ஓதுவார்கள் பன்னிரு திருமுறைகளை பண்ணுடன் பாடினார்கள். நானும் என் கையில் இருந்த வில்வத்தை லிங்கத்திற்கு சாத்தி விஸ்வநாதரைத் தொட்டு கும்பிட்டேன். விஸ்வநாதக்கு 17 அபிஷேகங்கள் செய்து மலர் அலங்காரத்துடன் தேவாரம் திருவாசகம் பாடி இனிய பூஜை நடந்தது இதுவே நாம் செய்த பெரும் பேறு இனி எத்தனை முறை காசிக்கு வந்தாலும் இது போன்ற பூஜையை காண முடியாது .என் வாழ்நாளில் இந்த காசி பயணம் ஒன்றே போதும்.

பிறகு மாலை சைவ சமய மாநாடு நடந்தது. மேடையில் பெரிய பெரிய ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. வெவ்வேறு மாகாணங்களில் இருந்து ஆதீனங்கள் வந்திருந்தனர். ஒவ்வொருவரும் சரிகையுடன் காவி ப்பட்டு அணிந்திருந்தனர். கழுத்திலும் கையிலும் தலையிலும் பெரிய பெரிய ருத்ராட்சங்கள் தங்கத்தின் கட்டி அணிந்திருந்தனர் .நமது அடிகளார் தான் காடாத் துணியில் காவி சாயம் ஏற்றி நான்கு முழம் வேஷ்டி துண்டு, கழுத்தில் ஆத்ம லிங்கத்துடன் ருத்ராட்சம் .ஆனால் எல்லோர் பேசியதில் இவரது உரைதான் மக்களின் மனதில் பதிவதாக அமைந்தது.

மிகவும் இனிமையாகவும் எளிதாகவும் சைவ சமயத்தின் பெருமையை விளக்கினார். கரவொலி அடங்க வெகு நேரமாயிற்று இந்தியில் மொழிபெயர்த்தது என் கணவர்.

அடிகளார் தமிழுக்கும் சைவத்திற்கும் மடத்திற்கும் நிறைய பணிகள் செய்துள்ளார் கோவையில் முதன் முதலாக தமிழ் கல்லூரி நிறுவப்பட்டது இவரால்தான் செனட் உறுப்பினராக இருந்தார் . பாடத்திட்டங்களில்மாற்றங்கள் கொண்டு வந்தார்

தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் தமிழ் அர்ச்சனை தமிழ் வழிபாடு நடத்த ஏற்பாடு செய்தார். திருமணம், காதணி விழா, நிச்சயதார்த்த விழா வேள்விகள், குடமுழுக்கு எல்லாம் தமிழில் நடக்க ஏற்பாடு செய்தார்.

இன்றும் அவை சிறப்பாக நடந்து வருகின்றன. மேலும் இதற்கான பயிற்சிகள் ஆறு மாத காலம்,1 வருடப்பயிற்சி என வகுப்புகள் நடக்கின்றன. இதற்கு லண்டன் அமெரிக்கா, மொரிசியஸ், தாய்லாந்த், மலேசியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா முதலிய இடங்களில் இருந்து இங்கு வந்து மாணவர்கள் பயிற்சி பெற்று, சான்றிதழ்கள் பெற்றுச் செல்கின்றனர்.

நிறைய பயணங்கள் செய்து அலைந்ததில் அடிகளார் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர் பலவீனம் அடைந்து சிகிச்சை பிரிவில் இருந்தால் ஒரு நள் அங்கு சென்று அவர் அருகில் சிகிச்சை பிரிவில் கூட இருந்தேன்

உடல்நிலை மோசமாக இருந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட பிறகு இரண்டு நாட்களில் மடத்திற்கு கொண்டு சென்றனர் அங்கு காலையில் இருந்து அவர் அருகிலே இருந்தோம். நேரம் செல்லச் செல்ல நாடித்துடிப்பு குறைந்து வந்தது மூச்சும் குறைந்துவிட்டது மதியம் அவரது ஆவி பிரிந்தது. என்ன முயற்சி செய்தும் பயனில்லை. அவரது ஆத்மா இங்குதான் உள்ளது அவர் பூத உடல் மறைந்தாலும் இன்னும் அவர் நம்முடன் இருந்து நம்மை ஆசீர்வதித்து நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்.

24

இர. தேன்மொழி

பெங்களூரு

அனைவருக்கும் அன்பின் வணக்கம்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களது செயற்கரிய சிறப்பான சைவநெறி பின்பற்றி அவர் ஆற்றிய தெய்வத் திருப்பணிகள் உள்ளிட்ட அனைத்துயும் நினைவுக்கூர்வதில் மகிழ்கிறேன். குறிப்பாக பராமரிக்கப்படாமல் இருந்த திருக்கோவில்களை மீண்டும் சீராக செப்பனிட்டு நன்னீராட்டு குடமுழுக்கு நடத்தி இறையருள் திருவருள் எங்கும் பரவக் காரணமாக இருந்த அடிகளார் அவர்களை சிறுவயதில் திருக்குடமுழக்கு நிகழ்வில் தொலைவில் இருந்தே காணப்பெற்ற நிமிடங்கள் ஒரு பொன்னான தருணமாக என்னுள் மிளிர்கிறது.

அடிகளார் அவர்களின் மகத்தான பணிகளில் ஒன்று.. மடமைத்தனத்தால் மதம் மாறிய மனிதர்கள் மீண்டும் தமது தாய்மதத்தை அடைவதற்கு ஆவன செய்த அருஞ்செயல்கள் அனைத்தும் ஆவணப்படுத்துதல் வேண்டும்.

பேரூரில் கிளைத்த தமிழ்ப் பள்ளியும் கல்லூரியும் வேரூன்றி விழுதோடி, நற்பலன்களை தரக்கூடிய தமிழ் அறிஞர்களாக உலகெங்கும் உலவி தமிழ் கனிகளாக பண்பட்டு பழுத்திருக்கிறார்கள் என்பது உண்மையிலும் உண்மை.

கொங்கு பகுதி வாழ் மக்களின், மகளிரின் கல்விக் கண்களை திறந்து, வாழ்க்கையில் முன்னேற வழி வகுத்துக் கொடுத்த சேவை மீமக்கள் சேவையே மகேசன் சேவைமீ என முற்றும் அறிந்த முனிவராய் அடிகளார் அவர்கள் பேரூர் மடத்தில் வீற்றிருந்தார் என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது

பற்றற்று எளிமையாக வாழ்க்கை ஒழுகிய நிலையிலும் சமூக நலனில் பற்று கொண்டவராக மருத்துவமனை கட்டி நோயுற்றோர் நலம் பெறவும் நொய்யல் ஆற்றில் கலந்த நச்சுப் பொருட்களை அகற்றி 'நீரின்றி அமையாது உலகு' என்பதை மனிதகுலம் அறிந்து நடந்திட வழிவகை செய்திருப்பதையும் எண்ணும்போது நாம் கைகூப்பி வணங்குகின்றோம்.

15 வயது முதல் தன் வாழ்நாள் முழுவதும் மொழிக்கும் சைவ நெறிக்கும் மக்கள் கல்விக்கும் மகளிர் முன்னேற்றத்திற்கும் குமுகாய வளர்ச்சிக்கும் அடிக்கோலிட்ட ஒளிவிளக்கு இன்றும் பலர் மனங்களில் ஒளிர்ந்து கொண்டிருப்பதை வெளிச்சம் போட்டு காட்டிய நிகழ்வாக இந்நிகழ்வு அமைந்தது குறித்து மகிழ்கிறேன்.

நன்றி

25

முனைவர் **ஜெ. இராமதாஸ்**
சேங்காலிபுரம் சாலை, குடவாசல் அஞ்சல்,
வட்டம், திருவாரூர் – 612 601.

தமிழ்நாட்டில் தந்தைப் பெரியார் அவர்கள் 'ஆலய நுழைவு போராட்டம் நடத்திய காலத்தில் அதே ஆலயங்களில் வழிபாட்டு மொழியாக தமிழை நுழைக்கப் போராடியவர் தவத்திரு இராமசாமி அடிகளார். அருந்தமிழில் ஆலய நன்னீராட்டு விழா, அன்னைத் தமிழில் அர்ச்சனை நடைபெற பாடுபட்டு வெற்றி பெற்றவர் தவத்திரு அடிகளார். தமிழர் இல்லங்களில் நடைபெறும் திருமண விழா, புதுமனை புகுவிழா, காதணி விழா இதுபோன்ற அனைத்து விழாக்களிலும் தேவாரமும், திருவாசகமும் பாட வழிகாட்டியவர். தேவார, திருவாசகப் பாடல்கள் மக்கள் மனங்களில் இடம் பிடிக்க வடம் பிடித்தவர் அடிகளார். இதில் இளையத் தலைமுறையினரின் பங்கு மிக மிக அதிகம். வடமொழியில் நடைபெறும் விழாக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றவர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற தமிழக அரசின் திட்டத்திற்கு பிள்ளையார் சுழி போட்டவர் அடிகளார். தமிழகத்தின் முதலமைச்சர்களாக இருந்த கர்மவீரர் காமராசர், கலைஞர் கருணாநிதி, திரு. எம்.ஜி.ஆர், செல்வி. ஜெயலலிதா எனப் பலரும் பாராட்டும்படி வாழ்ந்து காட்டியவர் அடிகளார். அதனால் அறநிலையத்துறையில் உயர்மட்டக்குழு பொறுப்பாளராக திகழ்ந்தவர் அடிகளார்.

தமிழ்நாட்டில் எத்தனையோ திருமடங்கள் உள்ளன. அத்திருமடத்தின் மடாதிபதிகள் காட்சிக் கொடுப்பவர்களாக அருளாசி வழங்குபவர்களாக மட்டுமே வாழ்ந்து வருகின்றனர். மேலும், அத்திருமடத்தின் சொத்துக்களுக்கு உரிமையாளராக, சுகபோக வாழ்க்கை வாழ்பவராக இருக்கின்றனர். அந்த மடாதிபதிகளின்

மத்தியில் தமிழை தூக்கிப் பிடித்ததோடு பொதுமக்களின் கோரிக்கைகளுக்காக வீதியில் வந்து போராடியவர் இவர். ஈழத்தமிழர் போராளி பிரபாகரனை நேரில் சந்தித்து அவருக்கு ஆதரவு அளித்தவர் அடிகளார். பேரூர் தமிழ்க் கல்லூரி மாணவர்கள் ஈழத்தமிழருக்காகப் போராடியபோது அவர்களோடு இணைந்து போராடியவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

மரபுகளை மீறித் தமிழுக்காக, தமிழ் இனத்திற்காக, தமிழ் சமயத்திற்காக போராடி அதில் வெற்றி கண்டவர் அடிகளார். தமிழில் அர்ச்சனை மந்திரங்கள் வெளியிட அறநிலையத்துறைக்கு துணை நின்றவர் அடிகளார். கலைக்கல்லூரிகளில் தமிழ் பாடத்தை நான்கு பருவங்களிலும் மாணவர்கள் கற்க வழிவகுத்துக் கொடுத்தவர். அக்கலைக் கல்லூரிகளில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் முறையான ஊதியம் பெற காரணமாகத் திகழ்ந்தவர் அடிகளார்.

கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையில் இருந்த கைதிகளுக்கு அறநெறி வகுப்புகளை ஆனந்தமாக நடத்திக் காட்டியவர். அதே சிறைச் சாலையில் கேட்பாரற்றுக் கிடந்த வ.உ.சி இழுத்த செக்கை அடிகளார் கண்டு வேதனையுற்றார். இதை திரு. மா.போ.சி அவர்களிடம் எடுத்துக் கூறினார். பிறகு அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் இச்செய்தி பகிரப்படுகிறது. உடனே அந்த செக்கினை பொதுமக்கள் பார்வையிடவும், அதற்குரிய மரியாதை செலுத்தவும் ஆணையிட்டார் கலைஞர் கருணாநிதி. இதற்கு தூண்டுகோலாக நின்றவர் அடிகளார். 1954-இல் கோயம்புத்தூர் மாவட்டம், பேரூரில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியை நிறுவியவர். இதனால் அப்பகுதியில் வாழ்ந்த ஏழை, எளிய மாணவர்கள் முறையாக தமிழ்ப்படித்து தமிழாசிரியர்களாக பணிபுரிய வழிகாட்டியவர் அடிகளார். அப்படி உருவானவர்கள் தான் கவிஞர் புவியரசும், புலவர் புதுமைபித்தனும்.

பூமிதான இயக்கத் தலைவர் திரு. வினோபாவே தமிழகம் வந்தபோது தவத்திரு இராமசாமி அடிகளார் அவருக்கு நிலம் வழங்கியதோடு உரிய மரியாதையையும் கொடுத்தார். சிறுவாணி

ஆற்றில் 'பெப்சி கம்பெனி' செயல்படத் தொடங்கியபோது ஆற்றின் வளம் குன்றியது. அதற்காக பொதுமக்கள் போராடினார்கள். அந்தப் போராட்டக்காரர்களோடு அடிகளாரும் இணைந்து போராடினார். பிறகு அக்கம்பெனி இழுத்து முடப்பட்டது.

தமிழகத்திலுள்ள ஆலயங்களில் 'ஒரு கால பூசை முறையாக நடைபெறவும், விளக்கேற்றவும் தூண்டுகோலாக இருந்தவர். குமரி மாவட்டத்தில் மதச்சண்டை நிகழ்ந்த போது தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், தவத்திரு இராமசாமி அடிகளாரும் அங்குச் சென்றனர். மண்டைக்காட்டு மக்களையெல்லாம் ஒருங்கிணைந்து பேசியதோடு அந்த மதச்சண்டையையும் நிறுத்தினார்கள். இந்தச் செய்தியை அன்றைய முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக சட்டமன்றத்தில் பதிவு செய்துள்ளார். அடிகளார் ஆற்றிய செயலை தந்தைப் பெரியாரும். திராவிட இயக்கத்தாரும் மனதார பாராட்டினார்கள். மற்ற ஆதீனத் தலைவர்கள் கொலு பொம்மைகளாக காட்சி கொடுத்தபோது தமிழ் இனத்திற்காக உறுதியோடு பாடுபட்டவர் அடிகளார்.

தமிழ்மக்கள் சஞ்சலப்படும்போது நல்ல காலம் வருவதை எடுத்துரைப்பவராக இருள் சூழுமிடத்தில் ஒளியேற்றுபவராக, மக்கள் மனங்களில் மகிழ்வின் விதைகளை விதைப்பவராக வாழ்ந்து காட்டியவர் தவத்திரு இராமசாமி அடிகளார். ஆயிரம் சொற்களை விட காயத்திற்கு மருந்து தடவுபவர் மகத்தானவர். அப்படி சொல்லாலும், செயலாலும், இதயத்தாலும் இயங்கியவர் ஞானத் தந்தை இராமசாமி அடிகளார். .

26

பிரியதர்ஷினி விமல்ராஜ்

மாநில செயலாளர், கல்வியாளர் பிரிவு
பாஜக

நூறாவது அவதார நாள் சிறப்பு நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழால் நேசம் கண்ட சான்றோர்களைக் கொண்டு இந்நிகழ்வு சிறப்பாக நடைபெறுகின்றது.

சாந்தலிங்க திருமடத்தில் முதல்வர் ஆறுமுகம் கண்டெடுத்த முத்து. மயிலம் கல்லூரியில் பயின்று சிரவை மடத்தில் தொண்டாற்றி செவ்வனே பணியாற்றியவர்.

அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க இளைய பட்டம் சூடினார். பேரூரில் ஊராரின் விருப்பத்திற்கிணங்க உயர்தொடக்கக் கல்வியை தொடங்கினார். பேரறிஞர் சண்முகம் செட்டியார், கோவை கிழார், சுப்பையா கவுண்டர், சென்னை பல்கலை, வேந்தர் லட்சுமண சாமி முதலியார் இணைந்து இன்னிசை ஒளியாய் உலகத்தில் தரணி போற்ற, தவத்திரு சாந்தலிங்க தமிழ் கல்லூரியின் நிறுவனம் 1984 திருவள்ளுவர் ஆண்டு தொடங்கப்பெற்றது. தமிழ் பணி, ஆன்மீகப் பணி, ஏழை எளியோருக்கு தமிழ் வழி, தொடக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளி நடுநிலைப்பள்ளி என அரசு உதவியுடன் பல பள்ளிகளை வளமாய் எழுப்பினார். தமிழுக்கு பாலாமாய் அமைந்து அதை விரிவுபடுத்தினார். ஆம் துவங்கியது ஞானாம்பிகை நுழைவு உரிமை பள்ளி இளம் குழந்தை வேற்று மொழியில் வேறூன்றலாமா, பண்பாட்டை மறந்து பட்டம் தான் பெறலாமா என்று ஆறுமுக அடிகளார் தாய் தமிழ் பள்ளியைத் தொடங்கினார். தான் பிறந்த ஊர் அல்லவா கிராமத்தில் முதலி பாளையத்தில் முனைவர்களை உருவாக்கிட உலகம் போற்றிட அங்கும் சாந்தலிங்கர் உயர்நிலைப்பள்ளி நிறுவினார். தமிழ் கல்லூரியில் இளம் இலக்கியவியல் இணையாக உருவாக்கினார்.

தமிழ் முதுகலை அறிவியல், உலகம் போற்றும் இன்றும் திகழ்ந்து வருகின்றது வெளிநாடுகளுக்கு அறிவித்து அனைத்து பிரிவிலும் தமிழ் வேண்டும் என்று கூறி கலாச்சாரம் சார்ந்த நூலை பாடமாக்குவதற்கு தமிழ் மொழிக்காக போராடிய மாணவர்களுக்கு உறுதுணையாய் இருந்தார். இவர் எழுதிய நூல்களோ ஏராளம். நூல்களும் பல திருக்கோவில்களில் தேரோட்டம் என்றும், குடமுழுக்கு நன்னீராட்டு பங்குக் கொண்டார்.

கட்டுரைகள், சாந்தலிங்க அடிகளார் அருள் வரலாறு, தமிழ்திரு நெறிகள், தமிழ் வழிபாடு கூட்டு வழிபாடு, வேண்டும் சைவ சமய வளர்ச்சி, சைவ சமய வளர்ச்சியும் உலகளாவிய மாநாடுகளும், கோவை சன்மார்க்க சங்கம்,ஆதி தமிழர் பேரவையும், சிவனடியார் கூட்டம் தலைமையாக ஏற்று கலந்து கொண்டு ஆக்கம் ஊக்கம் தந்தவர் நமது ஞானம் புகழும் ஞானத்தந்தை. நண்பர்கள் விடுதி மாணவர்கள் விடுதி திருமடம் திருமுறை மண்டபம், முத்தமிழ் மன்றம் ராமானந்தர் மடாலயம், ஆலமரர் செல்வம் அரங்கம் இப்படி சமயம், பண்பாடு, கலாச்சாரம்,கல்வி, மருத்துவம் என்று வளர்ச்சிப் பாதை தந்தவர் நமது ஞானத் தந்தை தவத்திருஅடிகளார்.

இவர் செய்த இந்த அனைத்து சேவைகளும் சேவைப் பணிகளும் ஏராளம். இப்படி சடங்கு பயிற்சிகள் அன்னம், அளித்தல் இலவச மருத்துவம், குருதிக்கொடை ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி உணவு உடை முதியோர்களுக்கு சேவை மையம் இப்படி பல தொண்டுகளை செவ்வனே சிறப்பாய் செய்து கொண்டு வந்துள்ளார்.

பேரூர் மடத்துடன் இணைந்து அவர்களுக்கு தேவையான பணி செய்ய வேண்டும். பணியாற்றுவேன் என்பதையும் கூறுகின்றேன். ஞாலம் புகழும் ஞான தந்தையின் செயல்பாகளை, பணிகளை, தொண்டுகளைக் கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

27

வழக்குரைஞர் R. தேன்மொழி

சேர நாட்டின் தலைசிறந்த கோவில்களில் மிகச்சிறந்தது பேரூர் பட்டீஸ்வரர் ஆலயம். சேர நாட்டின் வாழ்வியலை உணர்த்து ஒரு கோவிலாக இக்கோவில் விளங்குகின்றது. இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க கோவிலை கொண்ட பேரூரில் எழுந்தருளியுள்ளது சாந்தலிங்க அடிகளார் தமிழ் கல்லூரி. இந்தக் கல்லூரியோடு எனக்குப் பல வருடங்களாக தொடர்பு உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆயுத பூஜை காலத்தில் பெண்களை சிறப்பிக்கும் வகையில் மகளிர் விழா கல்லூரியிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மகளிரை சிறப்பிக்கும் வகையில் பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்று மகளிரை அழைத்து, அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் விழாவினை சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

விழா ஆடம்பரமாக இல்லாமல் எளிமையாக கலாச்சார அடிப்படையில் கொண்டாடப்படுகிறது.

இந்நாள் வரை கல்லூரி தொடங்குகின்ற அத்தனை பேரும் கல்லூரியில் பல துறைகளை புதியதாக புகுத்தி அதன் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டும் என்றே நினைக்கின்றனர். இன்று ஒவ்வொரு கல்லூரியிலும் தமிழ் என்பது பாடத்தில் மட்டுமே இருந்து வருகின்றது. அதுவும் தாய்மொழி ஒவ்வொரு கல்லூரியிலும் இருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் வற்புறுத்தலால் தாய்மொழி தமிழ் இருந்து வருகின்றது.

இதுவரை தமிழகத்தில் தமிழுக்கென்று தனிக் கல்லூரிக் கிடையாது 1953 ஆம் ஆண்டு தமிழகத்தின் தலைச்சிறந்த தமிழ்க் கல்லூரி தொடங்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையில் தமிழ் அர்ச்சனை முறைமையோடு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் இத்தமிழ் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழில் திருக்கோவில் திருக்குட நீராட்டு விழா, தமிழ் வேள்விகள் தமிழில் அர்ச்சனை முறைகள், புதுமனை புகுவிழா போன்ற வாழ்வியல் அருளியல் நிகழ்வுகளைத் தமிழில் பெற செய்து அதனை திறம்பட செயல்படுத்திய பெருமையாளர் திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள்.

இன்று வரை கல்லூரியில் சமய சமுதாய தமிழ் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தமிழ் படித்தால் எதிர்காலம் இல்லை என்பதை பொய்யாக்கி வருகிறது இந்தக் கல்லூரி இந்த தமிழ் கல்லூரியில் படித்த பலர் இன்று பல்வேறு துறைகளில் உலகம் முழுவதும் சிறந்து விளங்குகின்றனர்.

இந்த கல்லூரியில் ராமசாமி அடிகளார் அவர்களை தொடர்ந்து மருதாச்சல அடிகளார் அவர்கள் ஆன்மீக திருப்பணிகள் மற்றும் சமயப் பணிகளை சிறப்பாக செய்து வருகின்றார். 1954ஆம் ஆண்டு ஜாதி, இன, வயது, பேதமின்றி வாழ்வியல் அருளியல் சடங்குகளை நடத்துவதற்குரிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை 150 மகளிர் உட்பட 900 பேர் இந்த கல்லூரியில் பயிற்சி பெற்றுள்ளனர். 5000 மேற்பட்ட திருக்கோவில்களில் தமிழ் முறைப்படி திருக்குறள் நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றுள்ளது. 1500 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆறு கோவில்கள் இயற்கை சீற்றம், மற்றும் பராமரிப்பு இன்மை காரணமாக சேதமடைந்த 10 க்கு மேற்பட்ட கோவில்கள் அடிகளார் அவர்களால் சீரமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு தொடர்ந்து ஒரு நாள் மற்றும் மூன்று நாள் சமய பயிற்சி முகாம் நடத்தப்பட்டு இதுவரை 3000 நபர்கள் இதனால் பயன் பெற்றுள்ளனர்.

தமிழ்ப்பணியோடு பல சமூகப் பணிகளையும் இக்கல்லூரி செய்து வருகிறது. ஒவ்வொரு நாண் மங்கல விழாவின்போது 1000 பள்ளி குழந்தைகளுக்கு சீருடைகளும் 300 பெரியவர்களுக்கு ஆடைகளும் தானமாக வழங்கப்பட்டு வருகின்றது. 1950 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அன்பு இல்லம் மூலம் ஆதரவற்ற குழந்தைகள் 30 நபர்களுக்கு கல்வி, உணவு, உடை, இருப்பிடம், நன்னெறி வழிகாட்டுதல் போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது. உழவுத் தொழிலை போற்றுவோம் என்று பலர் குரல் கொடுத்தாலும், அந்த உழவுத் தொழிலை கண்டுகொள்ளாமல், உழவர்களை உயர்த்தாமல் தன் போக்கிலே பலர் இருந்து வருகின்றனர். ஆனால் இவர்கள் உழவுத் தொழிலை சிறப்பிப்பதோடு மட்டுமல்லாமல், 55 சிறந்த விவசாயிகளுக்குச் சிறந்த உழவர் பட்டம் வழங்கியுள்ளனர். வேளாண்மை தொழிலில் முதன்மை முன்னோடிகளாக விளங்குபவர்களை சிறப்பித்து வருகின்றனர்.

2013ம் ஆண்டு பேரூர் ஆதீனம் அவர்களால் வளர்தமிழ் இயக்கம் தொடங்க பெற்று, நம் முன்னால் குடியரசுத் தலைவர் திரு ஏ. பி .ஜே அப்துல் கலாம் ஐயா அவர்கள் தலைமையில் பயிற்று மொழி, வழிபாட்டு மொழி, மாநில மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. உலக சைவ மாநாடு, சித்தர் ஆய்வு மாநாடு, பெருங்கதை மாநாடு ஆகியவை பேரூராதீனத்தால் நடைபெற்றுள்ளது. மருதமலை,சேவூர், முட்டம், முத்தூர், மொக்கனீஸ்வரம், கால காளேஸ்வரர் கோவில் போன்ற கோவில்களில் சீரமைப்பு பணிகள் நடைபெற்றுள்ளது. மழை வேண்டி ஆதீனம் அவர்களால் கடந்த 30 ஆண்டுகளாக வேள்விகள் நடத்தப்பட்டு வருகின்றது.

ஆன்மீகத்திலே இருக்கின்ற ஒவ்வொருவரும் தங்களை உயர்த்திக் கொள்ளவே பெரும்பாடுபட்டு வருகின்றனர். ஆனால் ராமசாமி அடிகளார், மருதாசல அடிகளார் அவர்களும் ஒரு சாதாரண ஆன்மீகவாதியாக இல்லாமல், இச்சமூகத்தில் தங்களால் எந்தப் பணிகளை செய்ய இயலுமோ அந்தப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து பெண்களின் வாழ்வியலை உயர்த்தி வருகின்றனர்.

மேலும் நொய்யல் நதி, மீட்டுருவாக்கப் பணிகளில் அடிகளார் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். தமிழ் கல்லூரி மாணவர்களின் நாட்டு நல பணித்திட்டத்தின் வாயிலாக சிறப்பாக செயல்பட்டு 2016-ம் ஆண்டு கோவை ஆலாந்துரைக் கூறுதுறையில் நொய்யலை நோக்கி நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இறையருளோடும், இன் தமிழோடு பல பல அடியார்களை உருவாக்கிய சாதனையை இவ்வடிகளார் செய்துள்ளனர்.. திருமடத்தை வாழையடி வாழையாக வந்த அருள் மரபில் தமிழையும், சைவத்தையும் இரு கண்கள் எனக்கொண்டு திருமடத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார் அடிகளார் அவர்கள். இச் சிறப்புமிக்க திருமடத்தோடு இணைந்து பணியாற்றுவதில் பெருமிதம் கொள்கின்றேன். மேலும் இக்கல்லூரியில் நடைபெறும் மகளிர் விழாவிலே கலந்துகொண்டு அக்கல்லூரியுடன் சேர்ந்து பணியாற்றுவதிலும் பெருமைப்படுகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்! வாழ்க திரு. சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியின் புகழ்.

தென்னாடுடைய சிவனே போற்றி !
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி! போற்றி!

28

ஆ. இராசேசுவரி
கோவை

சிறு வயது முதல் சிலையை தான் கடவுளாகக் கண்டேன் வழிபட்டேன் ஆனால் முதன் முதலில் கடவுளாகவே என் முன் நின்றவர் நம் பேரூரின் குருமகா சன்னிதானம். நெற்றியில்நீரணிந்து மலர்ந்த முகத்துடன் என்னை வரவேற்று வழிகாட்டியவர் .

பசுமை நினைவுகள்

இன்று வரை என் மனதில் உலவிக்கொண்டிருக்கக்கூடிய நினைவுகள் என்றுமே அழியாத ஓவியப் பெட்டகமாய் பதிந்துள்ளது

ஒவ்வொரு நாளும் குருவை தரிசனம் செய்து கொண்டு நெற்றிநிறைய திருநீர் அணிந்து கொண்டுதான் நுழைவோம்.

எனக்கு ஒரு பலம் வந்ததாக இருக்கும். ஒவ்வொரு நிகழ்வுகளிலும், மேடை ஏறி பேசாதவர்கள் கூட பேசுவதற்கு ஒரு அடித்தளமாக இருந்தது எங்களுடைய தமிழ்க் கல்லூரி

ஒவ்வொரு விழா காலங்களிலும் பேரூர் கோவிலுக்கு சென்று அனைவரையும் வரிசைப்படுத்தி உள்ளே அனுப்பி வைப்போம் கருவறை வரை நாங்கள் உள்ளே சென்று இருக்கின்றோம் அந்த பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது.

கல்லூரியில் படிப்பு மட்டுமல்ல ஆன்மீகத்தோடு பண்பாடு மற்றும் கலாச்சாரமும், கற்றோம். தமிழ்க் கல்லூரியின் பெருமையை உலகம் முழுவதும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறோம் .

நம் குரு மகா சன்னிதானங்கள் பேச்சரங்கமாகட்டும், கருத்தரங்கமாகட்டும் எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும்



வாரியார் சுவாமிகளுடன் இருபெரும் சந்நிதானங்கள்



கயிலை குருமணியின் அருளாட்சி வெள்ளி விழாவில்
இருபெரும் – பேரூர், சிரவை சந்நிதானங்கள்
பின் வரிசை தற்போதைய பழனி ஆதீனம் சாது சண்முக அடிகளார்,
பேரூராதீனம் 25ஆம் குருமகா சந்நிதானங்கள்



பழனியம்பதியில் அடிகள் பெருந்தகை



ஆழியார் அறிவுத் திருக்கோயில் யோகிராஜ் வேதாத்ரி மகரிஷி அவர்களின்
பிறந்த நாள் விழாவில் அமெரிக்க சச்சிதானந்த சுவாமிகள்,
சிரவை ஆதீனம் குருமகா சந்நிதானங்கள், பேரூர் ஆதீனம் குருமகா சந்நிதானங்கள்,
அமைச்சர் கண்ணப்பன் ஆதியோர்.

பெரியபுராணம் தொடக்கப் பாடலாக 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்

நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அழகில் ஜோதியன் அம்பலத்தில் ஆடுவான்'

என்றப் பாடலை பாடும் பொழுதெல்லாம் மனதில் பகதியுணர்வு மேலோங்குவதைப் பார்க்கிறோம்.

ஒவ்வொருபேராசிரியர்களும் ஒவ்வொரு முத்துக்கள். எவருக்குமே கிடைக்காத வரங்கள். எனக்குக் கிடைத்ததில் பெருமையடைகிறேன்.

இலக்கியம், இலக்கணம் நாட்டுப்புறவியல், பயண கட்டுரை, கல்வெட்டாகட்டும் எந்த நூலாக இருந்தாலும் அப்பொழுது நாங்கள் படித்தோம் ஆனால் அதனுடைய பலனை இன்று நாங்கள் உணர்கிறோம். தமிழ்க் கல்லூரியில் படிக்கும் பொழுது நாங்கள் படித்தோம். வெளியே வந்த பின்பு பல இடங்களில் சென்று அனுபவங்களை பெறும் பொழுது எங்களுடைய கல்லூரி மற்றக் கல்லூரிகளைவிட, மிகவும் உயர்ந்ததும், தனித்துவமிக்கதாக உலகமே புகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு உயர்ந்த கல்லூரி ஆக அமைந்திருப்பதில் பெருமை கொள்கிறோம்.

எங்களை, மேன்மைப்படுத்திய ஒரு தளமாக பேரூர் தமிழ்க் கல்லூரி அமைந்திருந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஒவ்வொரு நாளும் குருவை தரிசனம் செய்வோம்.

ஆனால் நாங்கள் மூன்று ஆண்டுகள் கடவுளுடனே பழகி இருக்கிறோம், பார்த்திருக்கிறோம், பேசியிருக்கின்றோம் எவருக்குமே கிடைக்காத வரம் என்பதை நான் உணர்கிறேன்.

தற்போது இருபத்தைந்தாம் குரு மகா சந்நிதானம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் தமிழ்ப் பணியோடு சமுதாய பணி, சமயப் பணி, அறப்பணிகள் என பல சிறப்பு வாய்ந்த பணிகளை முன்னெடுத்து சீரிய முறையில் செய்து

வருவதைப் பார்க்கும் பொழுது இனியும் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கலாம் என்ற உணர்வு தான் ஏற்படுகின்றது ஒவ்வொரு முறையும் அங்கு செல்லும் பொழுதெல்லாம் பழைய நினைவுகள் என்னை வட்டமிட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஆசிரியராக, ஆசிரியர் பயிற்றுநராக இருந்து என்னுடைய அரசு பணியில் சேர்ந்து பணியாற்றுவதற்கான அடித்தளமாக அமைந்திருக்கிறது என்னுடைய தமிழ்க்கல்லூரி என்பதைக் கம்பீரத்துடன் சொல்லுவேன்.

எங்கள் தமிழ்க்கல்லூரி அளித்த அன்போடு கலந்த கண்டிப்பும், ஒழுக்கமும் தான் என் வாழ்க்கைநிலை உயர்வு அடையச் செய்துள்ளது என்பதை நான் பெருமையாக எடுத்துக் கூறுகின்றேன் .

நாட்டுநலப் பணித்திட்டமாக பேரூர் பச்சாபாளையத்தில் சென்று அங்கு பள்ளிக்கூடத்தை சுத்தம் செய்வதும், வண்ணம் தீட்டியது அப்புறம் முதியோர்களுக்கு பாடம் கற்றுக் கொடுத்தது நினைக்கும் போதெல்லாம் மறக்க முடியாத நினைவுகளாக இன்றும் என்னுடைய மனதில் பதிந்திருக்கும்.

தமிழ்ப்பணி

அனைத்துலகப் பொங்குத் தமிழ்ச் சங்கத்தில் இரண்டாவது உலகச் சாதனையாக காப்பியமாந்தர்கள் என்ற தலைப்பில் 200 ஆய்வாளர்கள் என்ற தலைப்பில் 48 மணி நேரம் நடைபெற்ற இணைய வழி உலக சாதனை நிகழ்வு வெற்றி விழா நம்முடைய பேரூர் தமிழ் கல்லூரியில் நடைபெற்றது. இந்த வெற்றிவிழாவை மிகச் சிறந்த முறையில் வழிநடத்தி வெற்றி வாகைச் சூடியவர் நம்முடைய குரு மகா சன்னிதானங்கள் அடிகளார்திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், அவருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் கௌரவத் தலைவராக இருந்து தன்னுடைய ஆசிகளை வழங்கிக் கொண்டிருக்க கூடியவர் மிகச் சிறந்த ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் வெற்றிகளை வழங்கிக் கொண்டிருக்க கூடியவராகவும் இருக்கிறார்.

குரு மகா சன்னிதானங்களில் நூறாம் ஆண்டு நாண் மங்கல விழா கவிதை தொகுப்பு நூலுக்கு மிக சிறந்த முறையில் ஆலோசனை வழங்கிய பேராசிரியர்கள் மாணவச் செல்வங்கள், முனைவர் ஆயவாளர்கள் அனைவருக்கும் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். கவிதைத் தொகுப்பிற்கு என்னுடைய பங்கும் இருக்கிறது என்று நினைக்கும் பொழுது என் உள்ளம் பேருவகைக் கொள்கின்றது. இந்த வாய்ப்பை வழங்கிய தமிழ்க் கல்லூரிக்கும், இருபத்தைந்தாம் குரு மகா சன்னிதானம் திருப்பெரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

29

திருமதி தனலட்சுமி அங்கமுத்து
காட்டம்பட்டி, அன்னூர்.

உலகெங்கும் தமிழ் மணம் பரப்பி கொண்டிருக்கும் பேரன்பும் பெருமதிப்புக்குரிய ஆன்றோர் மற்றும் சான்றோர்களும் எனது பணிவான முதல் வணக்கம்.

தவத்திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் சிறப்புகளை அவரோடு தொடர்பு கொண்டவர்களுக்கும் வாய்ப்பு அளித்து அடிகளார் அவர்களின் அருமை பெருமைகளை அடிகளார் 100 என்ற தலைப்பில் தொகுத்து வழங்கி கொண்டிருக்கும் விழா குழுவினர் அனைவரும் என் வணக்கம்.

என் பெயர் தனலட்சுமி அங்கமுத்து. நான் அன்னூர் காட்டம்பட்டி என்ற ஊரில் பழனிச்சாமி நஞ்சம்மாள் ஆகியோரின் 5 வந்து மகளாவேன். நான் சிறு வயதாக இருந்தபோது போது என் தாயார் நஞ்சம்மாள் அவர்கள் அடிகளார் அவர்களின் தயார் திருமதி கப்பிணியம்மாள் அவர்களை கவனித்து வந்தார்கள். அடிகளார் அவர்களுடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர்கள் ஒரு சகோதரி. இவர்கள் அனைத்து குடும்பத்தார்களும் அன்பானவர்கள் பண்பானவர்கள்.

ஒரு மனிதன் பிறப்பெடுத்து எத்தகைய குணநலன்களை கொண்டுள்ளான் என்பது அவர்களை சுற்றியுள்ளவர்கள் எத்தகையவர்கள் என்பதனை பொறுத்தே அமைவது. ஒரு குழந்தை தாயின் வயிற்றில் கருவாக உருவாகும் போது இரண்டு விதமான பதிவுகளுடன் உருவாக்கும். ஒன்று உயிர்ப் பதிவு மற்றொன்று உடல் பதிவு. உயிரானது பல பூர்வ ஜென்ம ஆசிர்வாதம் பாவம் சாபம்

பதிவுகளுடன் கருவிலே உருவாகும். உடல் பதிவு என்பது நம் முன்னோர்களின் மரபணுக்கள் மூலம் உருவாகும். இந்த இரண்டு விதமான பதிவுகளும் தாயின் வயிற்றில் வளரும் போது தாய் பதியவைக்கும்

பதிவுகளுடன் பிறக்கும் குழந்தை வளரும் போது சுற்றி உள்ளவர்களின் பண்புகளை பொருத்தே மனிதர்களின் குணநலன்கள் இருக்கும். நான் சிறு வயது முதல் அடிகளார் அவர்களின் குடும்பங்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததால் அவர்களின் ஆசிர்வாதம் நிறைய எனக்கு உண்டு. அடிகளார் அவர்களுக்கு தாயின் மீது அளவு கடந்த பாசம் உண்டு. அடிகளார் அவர்கள் தனது தாயாரைப் பார்க்க வரும் போது என் தாயாரிடம் அடிகளார் அவர்கள் உன் பிள்ளைகளுக்கு புண்ணியம் கிடைக்கட்டும் என்று ஆசிர்வாதம் வழங்குவார். எங்களுக்கும் ஆசி வழங்குவார். அதே போல் புரைவிபாளைம் ஜமீன் பற்றிய புத்தகம் தொல்லியல் துறை முன்னாள் இயக்குனர் புலவர் அய்யா அமரர் ராசு அவர்கள் எழுதி அதற்கு வாழ்த்துரை எழுதியும் புத்தகம் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக இளைய பட்டம் தவத்திரு. மருதாசல அடிகளார் கலந்து கொண்டு சீரும் சிறப்புமாக நடத்தி கொடுத்தார்.

அடிகளார்தம் பொற்பாதங்களை வணங்கி மகிழ்கிறேன்.

30

பாலமுருகனடிமை

அருள்மிகு பாலமுருகன் திருக்கோவில்
இரத்தினகிரி, கீழ்மின்னல், வேலூர் மாவட்டம்

ஓம் சரவணபவ

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

அன்புடையீர்
அருளாசி

கோயம்புத்தூர் அருகே உள்ள முதலியார் பாளையத்தில் பெருந்தவ சீலர் சிவ இராமசாமி அடிகளார் எனப் பிற்காலத்தில் துறவியாகிப் புகழுடன் வாழ்ந்த

திருமலைக் கவுண்டர். கற்பினி (கற்பினியள்) தம்பதியருக்கு திருமகனாக 16.5. 1926 ஆம் நாள் பிறந்தவர்தான் தவத்திரு பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார். பூர்வ ஜென்மத் தவப் பயனாகத் தனது பத்தொன்பதாவது வயதில் கோவை கௌமார மடாலயத்தின் முதல்வர் தவத்திரு இராமானந்த அடிகளாரின் ஆத்மார்த்த தொண்டராகச் சேவை செய்து உயரும் தவப் பேறு பெற்றார்.

அன்பே சிவம் எனத் தெளிந்து கருணையும் சிவமும் ஒன்றென உணர்ந்து அன்புமயமாய் தூய துறவறச் செல்வராக வாழ்ந்தவர். கி.பி பதினேழாம் நூற்றாண்டில் பற்றற்ற பரமஞானியான பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் உருவாக்கிய பேரூர் வீர சைவத் திருமடத்தின்.

முதல்வர் ஆறுமுக அடிகளாரால் 1950 ஆம் ஆண்டு இளைய பட்டமாகப் பதவி ஏற்றவர்.

பழமையான தெய்வீகமான மயிலம் சிவஞான பாலைய அடிகளார் தமிழ்க் கல்லூரியில் சைவ சமயச் செம்மல் பழுத்த தமிழ்ப் பேரறிஞர் சிவனருட் செல்வர் சு.மாணிக்க வாசக முதலியாரிடம் முறையாகத் தமிழ்ப் பாடம் பயின்று பட்டம் பெற்றவர்.

11.7.1967 ஆம் ஆண்டு பேரூர் சாந்தலிங்கத் திருமடத்தின் குருமுதல்வராகத் தலைமைப் பட்டத்திற்கு வந்து 92 வயது வரை இந்த நிலவுலகில் வாழ்ந்து பிறவியின் பெரும்பயனை அடைந்தவர். பழுத்த தமிழ்ப் புலமையும் சிவஞானமும் கைவரப் பெற்றவர்.

அறத்தின் வழியில் பயணம் செய்தவர் அறநெறியில் நிலைத்து நின்று அறச் செல்வராக வாழ்ந்த அடிகளார் சைவ சமயத்திற்கும் அழியாத இன்பத் தமிழுக்கும், ஏழை எளிய மக்கள் அறியாமை இருளை அகற்றிட உதவும், கல்விப் பணிகளுக்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் ஆற்றிய அரும் பணிகள் ஏராளம்.

உலகச் சைவப் பேரவை மூலம் பல அயல் நாடுகளுச் சென்று அங்கு நடந்த பதினோரு மகா நாடுகளில் கலந்து கொண்டு சைவ சமயத்தின் நமது முத்தமிழின் பெருமையை அயல் நாட்டவரும் அறியச் செய்தவர்.

தமிழில் அர்ச்சனை வழிபாடுகள் திருமுறை வழியில் ஆயிரக் கணக்கான திருக் கோவில் குடமுழுக்குகள் திருமறை வழியில் தமிழ்த் திருமணங்களை நடத்தி வைத்தல் எனத் தமிழ் ஞானசம்பந்தமாகவே வாழ்ந்தவர்.

பன்முகத் திறமை வாய்ந்த அடிகளார் அவர்கள் இரத்தினகிரி பாலமுருகனின் திருவருளால் கடந்த 1977 ஆம் வருடம் இரத்தினகிரிக்கு முதன் முதலில் வருகை தந்தார்.

அன்று முதல் இரத்தினகிரி முருகன் மீதும் என் மீதும் அளவில்லாத அன்புடையவராக அவரது வாழ்நாள் இறுதி வரை இருந்ததை அவருடன் பழகிய நாட்கள் அவர் மூலமாகக் கிடைத்த செய்திகள் அனுபவங்களை எல்லாம் நினைத்து நினைத்து மனம் நெகிழ்கின்றேன்

பணிவின் செல்வரான அடிகளாரின் கலகலப்பான இனிய பேச்சும் வாய்மையும் தூய்மையும் புலமையும் சீரிய சிந்தனையும் பிள்ளைக் குணமும் செயற்கரிய செயலாற்றலும் உபசரிப்பும் காண்பவர் பழகுபவர் எவரையும் நெகிழ வியப்படையச் செய்யும்.

நிறைவான பணிகள் செய்து மன நிறைவுடன் வாழ்ந்த அடிகளார் கடந்த 1.9.2018 ல் தனது 92 வது வயதில் இறைவனுடன் இரண்டறக் கலந்து அருவமாக இருந்து அருள் பாலித்து அன்பர்களை வழி நடத்தி வருகிறார்.

அவருக்குப் பிறகு அவரது அடிச்சுவடு வழுவாமல் அவர் விட்டுச் சென்ற சைவ சமயத் திருப்பணிகளை ஆதினக் குரு முதல்வர் தவத்திரு பேரூர் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் பொறுப்பேற்றுச் செம்மையாகச் செய்து வருகின்றார்.

அவரும் தவத்திரு பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் நீங்காத அன்பில் திளைத்த அன்பர்களும் மறைந்தும் மறையாத புகழ் பெற்ற அடிகளாருக்கு நூற்றாண்டு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடித் தங்களது நன்றியறிதலை அன்பு மலர்களாக்கி அவரது திருவடி மலர்களில் சமர்ப்பிக்கும் வகையில் நூற்றாண்டு விழா மலர் வெளியிடுவது போற்றிப் பாராட்டுவதற்கு உரியது.

எமது நெஞ்சில் நினைவில் நீங்காத அடிகளாரின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக நடத்தி மகிழும் அன்பர்கள் அனைவரையும் மனதார வாழ்த்தி மகிழ்கிறேன்.

எனையாளும் இரத்தினகிரி மாமலை வாசன் அன்பர்கள் நேசன் பாலமுருகன் தங்களுக்கு எல்லா நலமும் வளமும் தந்தருள்வானாக.

31

பேராசிரியர் சூர்ய காந்தன்
11/8, மாரப்பக்கவுண்டர் வீதி, ராமாசட்டிபாளையம்
சுண்டக்காமுத்தூர்(அ), கோயமுத்தூர் - 641 010.

திருக்கயிலாய மரபு மேற்கண்டார் வழி வழி பேரூரத்தின குரு மகா சன்னிதானங்கள் கையில குறுமணி முது முனைவர் சீர் வளர்ச்சி தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் திருவடிகளுக்கு வணக்கம்.

பக்தியின் அருமையினாலும் கல்வி சிறப்பினாலும் தமிழகத்திற்கு பெருமை சேர்த்து வரும் செம்மண் பூமியின் பேரூரில் அரிய தமிழ் பணியை ஆன்மீக பணியை நிறைவாக செய்து வரும் உன்னதமான இடமே சாந்தலிங்கர் திருமடம்.

தெய்வத் திருப்பணி

அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக இந்த தெய்வ திருப்பணிக்கு தன்னை முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்ட கயிலை குருமணி சாந்தலிங்க ராமசாமி அடிகளார் மூலமாகத்தான் இந்த பகுதியில் சைவ சமயம் நாளும் செழித்தோங்கியது அது இன்றைய நாளிலும் தொடர்கிறது.

திருத்தலங்களில் ஒன்றாக திகழும் இந்த பேரூரில் கிழக்கு முகப்பில் 'காஞ்சிமா நதி' என்னும் நொய்யல் ஆற்றின் கரையில் இயங்கி வரும் தமிழ் கல்லூரியும் எண்ணற்ற சான்றோர்களை உருவாக்கித் தந்து அதனை தேசத் தொண்டாகவும் தெய்வத் தொண்டாகவும் கருதப்படுகின்ற இந்த புனிதமிகு இடமும் என் நெஞ்சில் பசுஞ் சோலை போல் வீற்றிருக்கின்றன.

மூலவராக விளங்கிய அடிகளார் அவர்கள் அன்பு அழைப்பிற்கிணங்கி இங்கே உள்ள பள்ளியில் நடுநிலைப்பள்ளியில் 1965 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 1971 ஆம் ஆண்டு மே மாதம் வரை 6 ஆண்டுகள் பயின்று அறிய பாக்கியம் எஸ் எஸ் எல் சி முடித்த மாணவனான அங்கீகாரம் என எனக்கு கிடைத்தது.

பெரியபுராணக் காப்புச் செய்யுளை அடிகளாரின் தெய்வீகக் குரலாக நான் கேட்க துவங்கிய அந்த நாட்கள் இந்த பிறவியில் என்னால் மறக்க முடியாதவை நம்ப முடியாதவைகள்.

தமிழ் அமுதமும் பக்தி அமுதமும் இரண்டற கலந்து சுவையும் இழிகிற ஊட்டப்பட்ட அந்த பொழுதுகள் இன்று நினைத்தாலும் எனக்குள்ளே சிலிர்ப்பினை உண்டு பண்ணும்'

பக்தி நெறி வளர்த்த பாங்கு

'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க 'என்று சிவபுராணம் பாடல் ஆனது என் செவிகளில் நுழைந்து இதயத்தில் கலந்த தருணங்கள் ஈடு இணையற்றவைகள் ஆகும்

'பண்ணினீர் மொழியால் உமை பங்கரோ

என்னும் தேவார பாடல் மந்திரமாக என் நாடு நரம்புகளில் பாய்ந்து அந்த சக்தியை தான் அடிகளார் வழியே என்னை படைப்பாளியாக்கியதே.

எனது கவிதைகளுக்கான ஊற்றுக்கண் இப்படித்தான் பிறந்ததாக கருதுகிறேன் அப்பரடிகளை பார்க்கும் பாக்கியம் இந்த பிறவியிலேயே கிடைத்து விட்டதாக உணர்ந்தேன் எனக்கு எப்போதும் அடிகளாரை காணும் போதெல்லாம் தோன்றிய எண்ணம் இது.

படிப்பாற்றலும் படைப்பாற்றலும்

தெய்வப்பற்றும் தமிழ் பற்றும் இங்கே எனக்கு சரிவர கொடுக்கப்பட்டதால் நான் மேல் கல்விகளை எல்லாம் தொடர்ந்து

படித்து உரிய தகுதிகள் பெற்று தமிழ்ப் பேராசிரியராக கணக்கற்ற மாணவச் செல்வங்களுக்கு ஆசானாகி மதிப்புடன் செயலாற்றும் நற்பேறு கிடைத்தது.

கோவை அரசு கலைக் கல்லூரியில் புதுமுக வகுப்பில் சேர்ந்து படித்தபோது என் படைப்பாற்றல் வெளிவர தொடங்கியது கவிதைகளாக புறப்பட்டு, கவிதைகளாகவும் சிறு கதைகளாகவும் நாவல்களாகவும் திரை இசை பாடல்களாகவும் எனது எழுது கோலில் இருந்து வரும் படைப்புகள் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் அருள் கரங்கள் எனக்கு வழங்கிய ஆசிகள் வடிவங்கள் என்று கருதுகிறேன்.

பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் என் கால்கள் பாட நூல்களாகவும் ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி, கன்னடம், தெலுங்கு, மராட்டியம் என பிற மொழிகளையும் சென்றடைந்திருக்கும் பனுவல்களாகவும் விளங்குகின்றன

முனைவர் பட்டங்களுக்கான ஆராய்ச்சியின் மையப் பொருளாகவும், எனது படைப்பிலக்கியங்கள் விளங்குவதற்கு அடி உரமாக அமைந்தது அடிகளாரின் திரு பாதங்கள் பட்ட இந்த மண் தான் காரணம் என்பதாகப் பணிவுடன் எண்ணுகிறேன்.

நெறி காட்டிய நேசர்

பேராசிரியர் பணியில் நான் இருக்கும் தருணத்தில் அவ்வப்போது நேரில் சென்று அடிகளார் அவர்களைச் சந்தித்து நலம் அறியவும் உரையாடவும் செய்து வந்தேன் ஒவ்வொரு முறை நான் சந்திக்கும்போது அண்மையில் என்ன நூல் எழுதியுள்ளாய்? அது எதன் மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை எல்லாம் மிக ஆர்வத்துடன் கேட்டறிவார்.

அவரது இறுதி வருடங்களில் வெள்ளியங்கிரி மலைச்சாரலில் சாடி வயல் பகுதியில் இந்த திருமடத்துக்கு சொந்தமான நெல்லிவனம் ஒன்று இருக்கின்றது அங்கே சென்று ஓய்வு கொள்ள விரும்பியதால் தென் கயிலைத் தவநெறி சாலை அமைத்து அதில் ஒரு சிவலிங்கத்தையும் நிறுவினார்

நெல்லி வனம் தந்த குளுமை

சக முகமாக அகமுகமாக திரும்பவும் அதன் வழியே அடிகளாரின் திருவுள்ளமானது, ஆண்டின் பெரும்பகுதி, நாட்களை அங்கே கழிக்கவே விரும்பியது என்பதையும் நான் அறிந்தேன்! பரவசம் எனக்குள் மேலும் அந்த நெல்லிவனம் சென்று அடிகளாரை தரிசித்து ஆசி பெற்றேன்.

அது சமயம் கூட என் படைப்பு பணிகள் பற்றி அன்பு கூர்ந்து விசாரித்து இப்போது எழுதி முடித்துள்ள பணிகளுக்கு 'விடிவெள்ளி "என பெயர் சொல் இருப்பதையும் கேட்டு மகிழ்ந்து வாழ்த்துக்கள் தெரிவித்தார். அந்த நிகழ்வை என்னால் மறக்க இயலவில்லை மாலை வேளையில் நான் அங்கிருந்து கிளம்பத் தயாரானேன் தனது உதவியாளரை அழைத்து ஒரு பை நிறைய நெல்லிக்கனிகள் பறித்து வரச் சொல்லி எனக்கு அடிகளார் வழங்கினார் நான் நெகிழ்வுடன் அதைப்பெற்றுக்கொண்டேன்.

ஔவைக்கு அதியமான் கொடுத்த அரிய நெல்லிக்கனியாக அதை எண்ணி அவர் நெஞ்சார எனது வணக்கத்தை கூறி விடைபெற்றேன் அந்த தவநெறி சாலையின் மேல் வளாகத்தில் இன்று வடமேற்கு திசையில் பார்த்தால், வெள்ளிங்கிரியின்ஏழாவது மலை நன்கு தெரியும். காலத் தட்பவெப்ப நிலை ஏதுவாக இருக்கும் போது அங்கே குடி கொண்டிருக்கும், சிவபெருமானின் தரிசனத்திற்கு பக்தர்கள் நடந்து செல்வதையும் காண முடியும் என கேள்விப்பட்டிருக்கிறேன்

இதனால் அவர்களிடமிருந்து இனியா விடைபெற்ற நான் நெல்லிவனம் பகுதியை விட்டு நடந்து வரும்போது கூட இந்த மகானை விரைவில் வந்து மீண்டும் சந்திப்போம் என்று நினைத்தவாறு வந்தேன் ஆனால் அதுதான் அவரை இறுதியாக பார்க்கும் தருனம் எனக்கு என்பது அப்போது தெரியவில்லை

பேரூர் ஆதினத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் நீலகிரி மாவட்டம் காந்த வயல் பகுதியின் முன் வாசலில் கோயில் முன்பாக

திலிருந்து தென்கிழக்கு திசை உற்று கவனித்தால் காரமடை அரங்கநாதர் கோபுரம் விளக்குவழி தெரியும் எனவும் கூற கேட்டிருக்கிறேன்.

அறப்பணிகள் ஆயிரமாயிரம்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோவில்களுக்கு திருப்புட நன்னீரை விழாவை அடிகளாரின் கரங்களில் நிகழ்த்தியுள்ளன நிறைய கோவில்களில் அவற்றின் சீரமை பணிகளுக்கும் புணருத்தாரணத்துக்கும் தாரணத்துக்கும் வழிகோலியுள்ளன. மனித குலத்துக் நல்வழி காட்டும் மகானாக இவர் செய்துள்ள அறப்பணிகள் ஏராளம்

நெல் என்றும், எள்ளென்றும், தினை என்றும், பச்சைப்பயிர் என்றும், தட்டைப் பயிர் என்றும் நவதானிய மணிகளை கை நிறைய அள்ளி நிலத்தில் விதைக்கும் வேளாண் பாரம்பரியத்தில் தோன்றிய அடிகளார் அவர்கள் கோயில்களில் இறைத்திருமேனியை கருவறை நிலை பெறச் செய்கையில் நவரத்தினங்களை தம் கைநிறைய அள்ளிப் பரப்பி அற்புத நிகழ்வு என்றென்றும் நினைவுகளில் சுடர் விடுபவை ஆகும்.

இத்தகைய எத்தனையோ நினைவுகள் அந்த தமிழ் கல்லூரி வளாகத்தில் நிகழ்ந்த போது, அபூர்வமான நிகழ்வுகளை அறிய அறிஞர் பெருமக்களை எல்லாம் நேரில் காண்கிற வாய்ப்புகளாக என் பள்ளி பருவ காலங்கள் படலம் படலமாக ஓடுகின்றன

பாசறைப் பயிற்சிகள்

அடிகளார் அவர்கள் வெள்ளாடை துறந்து செவ்வாடை அணிந்த அந்த முழுத் துறவு மேற்கொண்ட நிகழ்ச்சி நாளில் அந்த மாலை சூரியனின் செங்கதிர்கள் இவரை வாழ்த்து மலர்களாய் அகம் மகிழ்ந்து அந்த பொழுதை 1967 ஆம் ஆண்டு ஏழாம் வகுப்பு மாணவனாக நான் தரிசித்த நிகழ்ச்சி அதனை தொடர்ந்து நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை முத்தமிழ் காவலர் விஸ்வநாதன் கலாநிதி, ஜகநாதன் கோவை கிழார் ஆகிய பெருந்தகையால் அருளோடு கலந்த

ஆன்மீக விழாக்களும்,அறிவு கருத்தரங்களும், எனக்கு போதித்தவே மறக்க இயலாத ஆசிரிய பெருமக்களுக்கும் எனக்கு பாசறை பயிற்சி அளித்த வகுப்பறைகளும் என்றென்றும் என் வாழ்க்கையின் நிலையான பக்கங்களாக அரவணைத்துக் கொண்டு விட்டன.

சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் கல்விச்சாலையானது என்னோடு இரண்டறக் கலந்து நலமாக இப்படி வளர்த்து வந்துள்ளது இதைப் போன்றே தான் பலருக்கும் நிச்சயம் இருக்கும்

அற்புதப் பிறவி

பல நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை மிக அபூர்வமாக தோன்றும் அற்புத பிறவி நம் அடிகளார் அவர்களுடையது என்றால் அது மெய்மை.

இந்த கொங்கு மண்டலம் பக்திக்கும் தமிழுக்கும் செய்த தவப்பயன் இரண்டும் ஒன்றாகி பேரூரில் இவரது உருவில் நமக்கு கிடைத்தது என்றாள் அதை இறையின் இறையினிமை.

இவரின் திருவடி நிழல் நாம் அனைவரும் பிரிகின்ற வரமாகவே வாழ்ந்தது ஞானமும் அருளும் அன்பும் பாசமும் ஒரு சேர ததும்பும் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களை அப்பன் நீ! அம்மை நீ! ஐயனும் நீ! என்று என் மனம் உருக வணங்கி கொண்டிருப்பது பேரின்பமாக எனக்கு தோன்றுகிறது.

32

பொ. கௌசல்யாதேவி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

திருச்சிற்றம்பலம்
அண்ணாமலை எம் அண்ணா போற்றி
கண்ணாரமுத கடலே போற்றி.

கொங்கு வள நாடு, கொங்கு வள நாட்டிலே பேரூராதீனம் 16 –ம் நூற்றாண்டில் நிறுவப்பட்டு தமிழப் பணியும். சைவப் பணியும் மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றது. அந்த வகையிலே 24-ம் பட்டத்தை அழகு செய்தவர் நம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார். அன்னாரின் தமிழ்ப் பணியும் சைவப் பணியும் என்றென்றும் போற்றுதலுக்குரியது. இடையறாது தொண்டாற்றிய பெருமையினால் கொங்கு நாட்டின் அப்பரடிகள் என்று கொண்டாடப்படுகின்றார். அடிகளாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நிகழ்ந்து வரும் இவ்வேளையில்,அடியேன் கண்ட அடிகளார் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

அருளால் எமை ஆண்ட அடிகளார்

அருளால் நம்மை ஆட்சி செய்தவர் அடிகளார் அவர்கள். அடிகளார் அவர்களின் தோற்றப் பொலிவு, திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் காட்டும் துறவியர் கோலத்தை கண் முன் நிறுத்துவது போன்றது. ஓர் உண்மைத் துறவியை கண்ணால் காண்பதற்கு பலகோடி தவங்கள் செய்திருக்க வேண்டும். அடிகளார் உடைய எழிலார்ந்த திருக்கோலமும்,மென்மையான தோற்றமும்.அன்பான மொழிகளும், அருளார்ந்த விழிகளும் எம் நெஞ்சை விட்டு என்றென்றும் நீங்காதவை. அவர்தம் பொன்னார் திருவடித் தாமரைகளை நீள நினைந்து போற்றுகிறேன்.

ஈர்த்தென்னை ஆட்கொண்ட சைவம்

1999-2000ங்களில் திருவாளர் கணேசனார் தமது இல்லத்திலேயே சைவ சித்தாந்த வகுப்பு நடத்தினார். அவரிடம் ஞானபாடம் கேட்கும் வாய்ப்புப் பெற்றேன். அப்பொழுது எங்கள் குலதெய்வத்திற்கு 108 போற்றிகள் மற்றும் சில பாடல்களை எழுதி திருத்தம் செய்ய ஐயாவிடம் நோக்க காண்பித்தேன். அவர் அதனை ஏறெடுத்தும் நோக்கவில்லை. அருளாளர்களின் வாக்குகள்தான் இறைவழிபாட்டிற்கு அங்கீகாரம் உடையன, நீ என்ன அருளாளரா? என்று வினவிய ஐயாவின் அந்தச் சீரிய சொற்கள்தான் அடியேனின் ஆணவ மலத்தைச் சுட்டெரித்தன. 'சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்' என்று ஐயா அடிக்கடி கூறுவார். 'நான் உனக்கு தொல்காப்பியம் பாடம் கற்பிக்கிறேன் நீ மேற்கல்வி பயின்றுகொள்' என்று கூறினார். அடியேன் அதன்பின்னர் பி.லிட். 3 ஆண்டுகள், எம்.ஏ தமிழ் 2 ஆண்டுகள் நிறைவு செய்தேன். ஆயினும் மனம் நிறைவடையவில்லை.

'கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.'

கல்லாமை 404.

என்ற தெய்வப் புலவரின் திருவாய்மொழி மேலும் மேலும் என்னைக்கல்வி கற்கத் தூண்டியது. துறைமங்கலம் நால்வர் நான்மணி மாலை அருளிச் செய்த சிவப்பிரகாச சுவாமிகளின் அருள் வரலாற்றினை அறிந்தபொழுது, சாந்தலிங்க சுவாமிகள் அவருடைய மைத்துனர் என்பதையெல்லாம் அறிந்து மகிழ்ந்து அவர் அருளிச்செய்த சதகம், வைராக்கிய சதகம், கொலை மறுத்தல், வைராக்கிய தீபம். அவிரோத உந்தியார் முதலிய நூல்களை கற்று பேரூர் மடத்தின் பால் அடியேனுக்குப்பற்று மிகுதியானது.

'ஞானத் தபோதனரை வா' என்று அழைக்கும் அண்ணாமலை அண்ணல் திருக்கோயில் இன்றைக்கு சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்பு மாதேசுவரன் கோயில் என்ற பெயரில் திருவாளர் கருப்பண்ண

முதலியார் குடும்பத்தாரால் வழிபடப் பெற்று வந்தது. அதன் பின்னர் மறைமலையடிகள் மன்றத் தலைவர் சிவத்திரு. இரா. ஆறுமுகனார் அவர்களுடைய சீரிய முயற்சியால் இப்போதுள்ள அண்ணாமலையார் திருக்கோயில் சிறப்புடன் அமைக்கப்பெற்று திருக்கோயிலின் வழிபாட்டு முறை சிறப்பாக நடைபெறுகின்றது. 1977 ஆம் ஆண்டு திருமுறைத் தீந்தமிழ் முறைப்படி பேரூர் ஆதினம். சிவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார், சிரவை ஆதினம் சீலத்திரு சுந்தரசாமி அடிகளார் ஆகியோரால் மிகச் சிறப்பாகத் தெய்வத் திருமுறை நெறியில் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது. அந்த வகையிலே ஐந்தாவது திருநெறிய திருக்குட நன்னீராட்டு பெருவிழா 19-12-2021 மார்கழித் திங்கள் 4-ஆம் நாள் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. உலகத்திலேயே ஐந்துமுறை திருநெறிய தெய்வத் தமிழ் நன்னீராட்டுப் பெருவிழா கண்ட கோயில் நமது அண்ணாமலையார் திருக்கோயில்தான் என்பது வரலாற்றுப் பதிவாகும்.

பாலியும், பிராகிருதமும் தமிழகத்தை ஆட்கொண்டிருந்த காலகட்டத்தில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி நாயனார் அவர்களும் சைவத்தின் மூலமாக தமிழை மீட்டெடுத்தார்கள். அந்த வழியிலே தமிழ் வழிபாட்டு நெறிமுறையை தோற்றுவித்து தெய்வத் தமிழை வளர்த்தெடுக்க வித்திட்ட நம் 'கொங்குநாட்டு அப்பரடிகள்'ஞாலம் போற்றும் ஞானத்தந்தை மெய்கீர்த்தி நிலைபெற்று வாழ்க. வளர்க.

இன்றைய காலகட்டத்திலும் எங்கள் அண்ணாமலையார் திருக்கோயில் வழிபாட்டு நெறிமுறைகளுக்கு 'வழிகாட்டும் ஒளிவிளக்காத்' திகழ்ந்துவரும் பேரூராதீனம் 25-ம் பட்டம் தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் பொன்னார் திருவடிகளை போற்றி வணங்கி நன்றி மலர்களை காணிக்கையாக்கி அமைகிறேன்.

நன்றி. வணக்கம்.

33

திரு. பொ. செளந்தரராஜன்
முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் தமிழையும் சமயத்தையும் வளர்த்த பெருமைக்கு உரியவர். உ.வே.சா அவர்கள் திருமங்கள் தோறும் சென்று சுவடிகளை எல்லாம் சேகரித்து பதிப்பித்த தன்மை உடையவர். அதைப் போன்று நம்முடைய தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ் கல்லூரியில் அரிதில் கிடைக்கும் ஓலைச்சுவடிகளைச் சேகரித்து தமிழ் வளர்த்த தன்மையாளர்.

தமது திருமடத்தின் வழியாக தமிழ் முறைப்படி அர்ச்சனை வழிபாடு குடமுழுக்கு ஆகிய அனைத்தையும் செய்த பெருந்தகையாளர் அடிகளார் அவர்கள். திருமுறைகள் பாடிய சிவாலயங்களையும் பழைய திருக்கோயில்களையும் பேணிப் பாதுகாத்து புதுப்பித்தவர் அவர்கள். அதன் காரணமாக பல கோயில்கள் வழிபாட்டு நிலையில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டது.

நம்முடைய பேரூர் அடிகளார் அவர்களும் கஜ பூஜை சுந்தர சாமிகள் அவர்களும் கொங்கு நாட்டு இரட்டையர்களாக இருந்து பல கோயில்களுக்கும் செய்த தொண்டு அளப்பரியது ஆகும்.

சிவாலயங்கள் மட்டுமின்றி திருமால் உடைய வழிபாட்டுத் தலங்கள் கிராமப்புற தேவதைகளின் தலங்கள் குடும்ப தெய்வங்களின் தலங்கள் என பலவற்றையும் குடமுழுக்கு செய்து கொங்கு நாட்டில் சைவமும் தமிழும். வளர்க்கப் பாடுபட்டவர்கள்.

சைவ மாநாடு, தமிழ் மாநாடுகள் நடத்திச் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்தார்கள்.

கோவைக்கிழார் ராமச்சந்திரன் செட்டியார்.சி ந.கருப்பக் கவுண்டர் ஆகியோரைக் கொண்டு அன்னூர் கோவிலுக்கு பல பணிகள் செய்தார். 1937ஆம் ஆண்டில் பேரூர் தமிழ்க் கல்லூரியின் முன்னாள் முதல்வர் துணை கொண்டு அன்னூர் கோவில் கல்வெட்டுகளை கண்டறிந்து வெளியிட்ட பெருமை பேரூர் மடத்தையே சாரும். 1987 ஆம் ஆண்டு அன்னூர் வரலாற்றை முனைவர் புவனா ஜீவானந்தம் பதிப்பித்தார். ஆம் அந்நூல் மூன்று பதிப்புகள் வந்துள்ளது பாராட்டுக்குரியது.

தமிழக அரசின் அறங்காவலர் குழுத் தலைவராக இருந்து சைவத்தையும் தமிழையும் பெரிதும் வளர்த்து வருபவர் நம்முடைய இன்றைய குரு மகா சன்னிதானங்கள்.

சன்னிதானங்களது திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன்.

34

பெரும்புலவர்

அழ. முத்துப்பழனியப்பன், எம்.ஏ., பி.எல்.,

மேனாள் உதவி ஆணையர்,

இந்து சமய அறநிலையத்துறை வழக்கறிஞர், கோயம்புத்தூர்.

1980ஆம் ஆண்டில், உடுமலைப்பேட்டைக்கு அருகில் உள்ள கொழுமம் அருள்மிகு தாண்டவேஸ்வரசுவாமி திருக்கோயிலில் செயல் அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

அப்போது, சித்திரை மாதம் அப்பர் சுவாமிகள் ஜென்ம நட்சத்திரத்திற்காகப் பேரூர் ஆதீனத்திடமிருந்து, திருமடத்தின் மகாசந்நிதானம் எழுந்தருள்வார் என்று சைவ அன்பர்களால் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் கிழக்கில் உள்ள மடங்களின் அதிபர்களோடு பழகியவன் என்பதால், வரக்கூடிய திருமடத்தின் அதிபரும், அவர்களைப் போலவே இருப்பார் என்று கருதி வரவேற்புக்கு ஏற்பாடு செய்தேன். ஆனால், அன்பர்கள் அதெல்லாம் சுவாமிக்கு வேண்டியதில்லை என்று கூறினார்கள். அதுபோலவே, சுவாமிகளும் மிக எளிமையாக வந்தார். அவர்களுடைய தோற்றப்பொலிவும், அவருடைய பேச்சும் மிக அற்புதமாக இருந்தன. மிக எளிமையாக எல்லோரிடமும் பழகினார். இதெல்லாம் பார்த்த எனக்கு வியப்பாக இருந்தது. என்னிடம் அவர், 'ஓர் அதிகாரியாக நடந்துகொள்ளாமல், ஓர் ஆன்மீகவாதியாக திருக்கோயிலை நிர்வாகம் செய்யுங்கள்' என்று அறிவுரை கூறினார். 'நான் அப்படித்தான் இருக்கிறேன், சுவாமி' என்று பதில் கூறினேன். இதுதான் பேரூர் அடிகளுக்கும், எனக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு. அன்றுமுதல் அவர்கள் சித்தியாகின்றவரையில், அவர்களின் அன்புத்தொடர்பில் இருந்துவந்தேன்.

சிலருடைய பிறவியால் ஒரு சமுதாயம் சிறக்கிறது. சிலர் பிறப்பதனால், அவருடைய தொண்டால் சமுதாயமும், அந்த

சமுதாயம் சார்ந்த மக்களின் பண்பாடும், மொழியும் சிறக்கின்றன. அப்படிப் பார்க்கின்ற பொழுது, நமது பேரூர் அடிகளுடைய பிறப்பை அவதாரம் என்றே கூறலாம். அப்படிப்பட்ட ஓர் உயர்ந்த மனிதர். தொண்டு நெறிக்காகத் தம்மை முழுக்க முழுக்க ஈடுபடுத்திக் கொண்டவர். நான் அடிக்கடி அவரிடம் சொல்வதுண்டு. அந்தக் காலத்தில் நாங்கள் அப்பர் அடிகளைப் பார்த்ததில்லை. அதுபோல, நீங்கள் இருக்கிறீர்கள் என்பேன். அவர் சிரித்துக்கொள்வார். உண்மையில், நடமாடும் அப்பர் அடிகளாகவே அவர் திகழ்ந்தார்.

கௌமார மடத்தின் முதலாவது மகாசந்நிதானம் தவத்திரு இராமானந்த அடிகள் அறிவுரையின்படி அவர் பேரூர் திருமடதின் அதிகாரரான பின்னர், தமிழ் படிக்கவேண்டும் என்ற தீராத வெறியோடு அவர் மயிலத்திற்கு சென்றார். மயிலத்தில் தான் அப்பொழுது திருமடத்தின் சார்பில் தனித்தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருந்தது. அங்கே சென்று தமிழ் கற்றார். மயிலம் செல்வதற்கு எவ்வளவு சிரமப்பட்டார் என்று பிற்காலத்தில் அவர் கூறியதுண்டு. கோயம்புத்தூரில் இருந்து திருச்சி வரையில் இரயில் பிரயாணம், திருச்சியில் இருந்து மற்றொரு இரயில் மூலம் விழுப்புரம், விழுப்புரத்தில் இருந்து பேருந்து மூலம் திண்டிவனம், திண்டிவனத்தில் இருந்து பேருந்து மூலம் மயிலம். சிலசமயங்களில் திண்டிவனத்தில் இருந்து மயிலம் செல்வதற்குப் பேருந்து கிடைக்காவிட்டால், திண்டிவனத்தில் இருந்து மயிலம் வரை நடந்தே செல்வாராம்.

இவருடைய உணவு மிளகாயும் புளியும் இல்லாத உணவாக இருக்க வேண்டும். ஆகவே, இவர் மட்டும் அங்கே தனியாக சமைத்து உண்டார். அதே சமயம் மயிலம் மடத்தின் அப்போதைய அதிபரின் அன்பில் அவர் நிறைந்திருந்தார். ஆகவே, மயிலத்தில தான் அடிகளார் வீரசைவ தீட்சையை பெற்றுக்கொண்டார்.

மயிலத்தில் இருந்து அவர் பேரூர் திரும்பியதும், அவருடைய தீராத வேட்கை கொங்கு நாட்டில் ஒரு தனித்தமிழ்க் கல்லூரியை தொடங்க வேண்டும் என்பதுதான். அதில் அவர் வெற்றியையும் கண்டார். வெற்றி என்றால் சாதாரண வெற்றி அல்ல. அந்த வெற்றியும் ஒரே நாளில் அவர் அடைந்துவிடவில்லை. பல்வேறு

இன்னல்களுக்கிடையில் அக்கல்லூரியை அவர் வளர்த்தார். அதேசமயம் தமிழால் முடியும். தமிழ், சமயத்திற்கு வேறானது அல்ல. தமிழால் வழிபாடு செய்யமுடிவும், தமிழால் அர்ச்சனை செய்யமுடியும், தமிழால் அனைத்துச் சமய நெறிகளையும் செய்யமுடியும் என்று அவர் தொடங்கினார். தொடங்கியதிலிருந்து வெற்றியும் கண்டார். இன்றைக்குத் தமிழ் வழிபாட்டு முறை என்றால் தமிழ்நாடு முழுவதும் பேரூரை திரும்பிப்பார்க்கின்றது என்றால் அது அந்தத் தனிமனிதனின் சாதனை என்பதில் ஐயம் இல்லை. அவர் கொள்கையில் உறுதியானவர் என்பதில் மட்டும் இல்லை, அக்கொள்கைக்கு யாரேனும் எதிர்ப்புத் தெரிவிப்பராய் இருந்தால், அவரோடு காந்திய முறையில் போராடவும் அவர் தயங்கியதுமில்லை.

தமிழாசிரியர்களுக்காகவும், தமிழுக்காகவும் அவர் செய்த தொண்டுகள் மிக அதிகம். தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியராக வரலாம் என்ற விதி அவர் ஏற்படுத்தியது. வித்துவான் என்ற பட்டயப் படிப்பை பி.லிட் என்ற பட்டப்படிப்பாக மாற்றியதும் அவர்தான். கோவை, பாரதியார் பல்கலைகழகத்தில் கூட்டநடவடிக்கைகளை தமிழில் மாற்றியதும் அவர்தான். அப்பொழுது செனட் நடவடிக்கைகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்குமாம். நம்முடைய அடிகளார் அதை எதிர்த்து அந்த கூட்டத்திலேயே, பாரதியார் பெயரில் உள்ள பல்கலைகழகத்தில் கூட்ட நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது, அவை தமிழில்தான் இருக்க வேண்டும் என்று கூறி அதை மாற்றவும் செய்தார். இவ்வாறு ஒரு சிறிய நிகழ்வில் கூட அவருடைய தனித்தமிழ்ப் பற்று மிக அற்புதமானது. சமய நெறிகளில் தமிழுக்கு தனிநிலையை ஏற்படுத்தியவர் அவர்தான் என்றால் அதில் வியப்பில்லை.

அருள்மிகு வெள்ளிங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் இப்பொழுதும் தனித்தமிழில் தான் வழிபாடுகள் நடைபெறுகின்றன. அங்கே ஆகமரீதியான வடமொழி வழிபாடுகள் இல்லை.

நான் அந்தக் கோயிலின் செயல்அலுவலராக பணியாற்றியபொழுது, அறநிலையத்துறையிலிருந்து ஒரு

சுற்றறிக்கை அப்போது வந்தது. அப்போது தமிழகத்தில் மழை பொய்த்து வறண்டிருந்தது. ஆகவே, அறநிலையத்துறையிலிருந்து ஒவ்வொரு திருக்கோயிலும் வருணஜெபம் என்ற நிகழ்வை வடமொழியில் நிகழ்த்தவேண்டும் என்று சுற்றறிக்கை வந்தது. ஆனால், வெள்ளிங்கிரியில் அதை நடைமுறைப்படுத்த இயலவில்லை, ஏனெனில், அடிகளார் அவருடைய கண்காணிப்பில் அந்தத்திருக்கோயிலின் வழிபாடுகள், நெறிகள் இருந்தன. ஆகவே, அப்போது இருந்த இணை ஆணையர் என்னை அழைத்து, நீங்கள் பேரூர் அடிகளிடம் பேசி, அனுமதி பெறுங்கள் என்று என்னை அனுப்பினார். நானும், அடிகளிடம் சென்று அவரிடம், வெள்ளிங்கிரியில் வருணஜெபம் செய்ய வேண்டும் என்று அறநிலையத் துறை விரும்புகின்றது, உங்களுடைய ஒப்புதலும் வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்' என்றேன். அதற்கு அவர் சற்றும் தயக்கம் இல்லாமல், 'ஓ, தாராளமாகச் செய்யுங்கள்' என்று கூறிவிட்டு, அடுத்துக் கூறினார். அதேசமயம், 'நான் பேரூர்க்கோயில் கருவறையில், தமிழில் மழை வேண்டல் தொடர்பான தேவார பதிகங்களை பாடவேண்டும், அதற்கும் அனுமதி பெற்றுத் தாருங்கள்' என்றார். அவருடைய உறுதிப்பாட்டை கண்டு அப்போது நான் வியந்தேன். பின்னர், கோவை இணை ஆணையரிடம் வெள்ளிங்கிரியில் வடமொழியில் செய்ய இயலாது என்று தெரிவித்துவிட்டேன்.

அதுபோன்று, திருக்கோயில் திருப்பணியை, குறிப்பாக நலிந்த கோயில்களின் திருப்பணியை அவர் மிகுந்த ஆர்வமாக செய்வார்.இன்றைக்கு வெள்ளிங்கிரிக்கு அருகாமையில் இருந்த பாழடைந்த நிலையில் இருந்த முட்டம் திருக்கோயிலை, அவர்கள் தானும் ஒரு அன்பராக விளங்கி, மிகுந்த இன்னல்களுக்கிடையில் மீட்டுருவாக்கம் செய்தார். அவினாசிக்கு அருகில் உள்ள சேவூர் சிவாலயம் மிகவும் பாழடைந்திருந்தது. அதையும் அவர்தான் திருப்பணி செய்தார். அது மட்டுமல்லாமல் அத்திருக்கோயிலில் தமிழ் வழிப்பாட்டுகளும் நடைபெற ஏற்பாடு செய்தார்.

இதுபோல அவருடைய தொண்டு என்பது சாதாரணமானது அன்று. மிக உயர்ந்த துறவி அவர். மிக எளிமையான துறவி. அவர் உணவு மிக எளிமையாக இருக்கும். எந்த நாட்டிற்குச் சென்றாலும் அதே உணவுதான். புளியும் மிளகாயும் சேர்க்காத உணவு. வெளிநாட்டிற்கு செல்லும் போதெல்லாம் ரசப்பொடியை கையில் வைத்திருப்பார். வெந்நீரில் அந்த ரசப்பொடியை கலந்து உண்பார். நாம் சாப்பிட்டால் அதில் ருசியே இருக்காது. ஆனால் அந்த உணவுதான் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. சமுதாயத்தின் உயர்மட்டத்தில் இருப்பவர் ஆனாலும் சரி, உயர்ந்த அரசியல்வாதி ஆனாலும் சரி, சாதாரண எளியவர் ஆனாலும் சரி, எல்லோரிடமும் ஒரே மாதிரி பழகுவார். ஒரே மாதிரி அன்பு செலுத்துவார். அவர் போன்ற ஒருவரைக் காண்பது அரிது. மனிதர் இப்படித்தான் வாழவேண்டும் என்பதில் சில உறுதிகளுடன் அவர் வாழ்ந்தார். அவ்வாறே வாழவேண்டும் என்றும் அவர் கற்பித்தார். ஆடம்பரங்களை எப்போதுமே அவர் விரும்ப மாட்டார். என்னிடம் மிகுந்த அன்புடையவர்.

அவருடன் எனக்கு ஏற்பட்ட தமிழ்த்தொடர்பும் அத்தகையதுதான். நான் கருவலூர் அருள்மிகு மாரியம்மன் கோயிலில் பணியாற்றியபோது, எனது குருநாதரான பழனி, சித்திரக்கவி புலவர் இல.பழனிச்சாமி அவர்களைக் கொண்டு ஒரு தலபுராணம் பாடச்செய்து, அதை திருக்கோயில் சார்பில் அச்சிட ஏற்பாடு செய்தேன். அந்த தலபுராணத்தைப் படித்து பார்த்துவிட்டு, புலவரால் பாடப்பெற்ற இந்தத் தலபுராணம் மிக அருமையாக உள்ளது. இந்தக் காலத்திலும் இவ்வாறு பாடல்களில் தலபுராணம் பாடச்செய்திருக்கிறீர்களே, நீங்கள் பாராட்டுக்குரியவர் என்று கூறிவிட்டு, இதற்கு வாழ்த்துரையை நானும் பாடல்களாகத் தரவேண்டும், ஆனால் அதனை எழுதுவதற்கு ஆளில்லையே என்றார் சுவாமி. நான் 'சுவாமி, நீங்கள் கூறுங்கள், நான் எழுதிக்கொள்கிறேன் என்று கூறினேன். அதற்கு அவர், 'இல்லை, அதனை சந்தி பிரித்து எழுதவேண்டும், எழுதத் தெரியுமா?' என்று வினவினார். நானும், 'சுவாமி சொல்லுங்கள் எழுதுகிறேன்' என்று கூறினேன். அவர்கள்

விருத்தப்பாவில், அந்த வாழ்த்தைச் கூறினார், நானும் அதனை எழுதினேன். எழுதிய பின்னர் அதனைப் பார்த்துவிட்டு, 'உங்களுக்குத் தமிழ் இந்தளவுக்குத் தெரியுமா?' என்று கேட்டார். நானும், என்னுடைய கதையைக் கூறவேண்டியதாயிற்று. அதுமுதற்கொண்டு அவர் என்னை புலவர் குழுவில் சேர்த்துக் கொண்டார். செயல் அலுவலர்களில் அவர் புலவர் என்று என்னைப் பாராட்டுவார்.

அதுபோன்று, எனக்கு உதவி ஆணையராக பணிஉயர்வு கிடைத்தபோது, அவருக்கே கிடைத்ததுபோல் மிகவும் மகிழ்ந்தார். என்னைத் திருமடத்திற்கு வரவழைத்து, பொன்னாடை போற்றி, பழனியப்பனுக்கு பதவி உயர்வு வந்திருக்கிறது என்று வாழ்த்தினார். என்னுடைய பதவி ஓய்வின் போது, பாடல்களில் என்னை வாழ்த்திப்பாடி அனுப்பியிருந்தார். ஒரு பாடலின் இறுதியில், 'ஏன்தான் ஓய்வு வந்ததோ எங்கள் பழனியப்பனுக்கு...' என்று எழுதியிருந்தார். அவரை நினைக்கின்ற பொழுதெல்லாம் என் நெஞ்சம் நெகிழ்கின்றது. இவரைப்போன்ற சான்றோர்கள் வாழ்ந்த இந்தகாலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்கிற நிறைவும், அவரைப் போன்ற சான்றோர்கள் தோன்றமாட்டார்களா என்ற ஏக்கமும் ஒருங்கே தோன்றுகிறது.

'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன் என்ற சிலப்பதிகாரத் தொடரைப் போல நான் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து கிடந்தேன் என்றால் ஐயமில்லை. அவருடையப் புகழை, அவருடைய பெருமையை, அவருடைய தொண்டை, அவருடைய தொண்டின் சிறப்பைப் பற்றி எல்லாம் இன்னும் எழுதிக்கொண்டே செல்லலாம். ஆனால், பக்கங்கள் நீண்டுவிடும். ஆகவே, அவருடைய தொண்டின் சிறப்பை இந்த அளவோடு நிறைவு செய்கின்றேன்.

35

ப. பா. ரமணி

மாநிலப் பொருளாளர்,
தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்.

கொங்கு மண்டலத்திற்குப் புகழ்சேர்க்கும் ஒரு சைவ மடமாகத் திகழ்வது கோவை நகருக்கு அருகிலமைந்துள்ள பேரூர் மடமாகும். அந்த மடத்தின் ஆதீனத் தலைவராக அறுபதாண்டுகளுக்கு மேல் சைவம், தமிழ் இரண்டையும் இரு கண்களாகப் பாவித்து

போற்றற்கரிய தொண்டாற்றியவர், பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார்.

சைவ நெறியைப் பரப்பும் ஆன்மீகப் பணியுடன் தமிழ் வளர்க்கும் அரும்பணியிலும் தனது இறுதிக் காலம் வரை தொடர்ந்து ஈடுபட்டார, அடிகளார்.

பேருர் ஆதினத்தின் இளைய பட்டமாக அவர் இருந்தபோதே மடத்தின் சார்பாக உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி ஏழை எளிய மாணவர்களின் கல்விக்கு அடித்தளமிட்டார்.

அடுத்து உயர்கல்வியில் தமிழ்க் கல்வி செழிக்க, 1953 இல் பேரூர் தமிழ்க் கல்லூரியைத் துவக்கினார். இதனைச் சாத்தியமாக்குவதில், திரு.வெள்ளகிணர் சுப்பைய கவுண்டர், மேனாள் ஒன்றிய நிதியமைச்சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், மற்றும் கோவை கிழார் என்றழைக்கப்பட்ட கோ.ம.ராமச்சந்திரன் செட்டியார் ஆகியோரும் அடிகளாருக்குத் துணை நின்றனர்.

இந்தக் கல்லூரியில் படித்துப் புலவர் பட்டம் பெற்ற நூற்றுக்கணக்கானோர் பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும்

பணியாற்றி தமிழ் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்துள்ளதை மறக்க முடியாது. இவர்களில் புலவர் ஆதி என்றழைக்கப்பட்ட புலவர் இராசியண்ணன், கவிஞர் புவியரசு, புலவர் கி.ரா.குப்புராசு, புலவர் அப்பாவு, புலவர் பூ.அ.இரவீந்திரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டம் பெற்று, வானம்பாடி இயக்கத்தில் இணைந்து, இன்று கொங்கு மண்ணின் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளராக அறியப்பட்டுள்ள சி.ஆர்.ரவீந்திரன், பேரூர் உயர்நிலைப்பள்ளியில் படித்தவர். அவர் எமக்களித்த பேட்டியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

அடிகளார் எளிமையும் அன்பும் மிக்கவர். உடல் உழைப்பை மதித்தவர். தூய்மை பேணியவர். வழியில் மாட்டுச் சாணம் தென்பட்டால், தானே அதை எடுத்து சுத்தம் செய்வார். கல்வியுடன் தொழில்நுட்பத்திறனை வளர்த்துக் கொள்ள எங்களுக்கு அறிவுறுத்தினார். பெரிய புராணம், திருக்குறள் போன்ற இலக்கியங்களை மிக எளிமையாகக் கற்பிப்பார். கோவையைச் சுற்றியுள்ள கோவில்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று அதன் வரலாறுகளை எடுத்துரைப்பார்.

பொதுவுடைமைத் தலைவர் ஜீவாவுடன் மனமொத்து பழகியவர், கயிலை மாமுனிவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார். ஜீவா, கோவைநகருக்கு வரும்போதெல்லாம் பேரூர் சென்று அடிகளாருடன் உரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அடிகளார் அவருக்கு உணவளித்து உபசரிக்கத் தவற மாட்டார். பேரூர் மடத்தின் கூட்ட அரங்கில் ஜீவா பலமுறை சொற்பொழிவாற்றியுள்ளார். ஒருமுறை கம்ப ராமாயணம் பற்றி உரையாற்றினார். அதில், ராமன், சீதையைத் தேட அனுமனை அனுப்பும் போது பொதிகை மலையைத் தவிர்க்க வேண்டினார். அங்கே, 'தமிழ் முனிவன் அகத்தியனின் தமிழில் மயங்கி தனது கடமையை மறந்து விடுவாய்' என எச்சரித்த பகுதியை விளக்கினார் ஜீவா.

இவ்வாறு பேரூர் அடிகளாரையும் ஜீவாவையும் தமிழ் இணைத்தது, என்றார் எழுத்தாளர் சி.ஆர்.ரவீந்திரன்.

1961 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் முதல் மாநாடு அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு அவர்களின் பிரசிடென்ட் ஹாலில் நடைபெற்றபோது அதற்கு அடிகளார் பேருதவி புரிந்துள்ளார் என்பதை நன்றியுடன் பதிவு செய்தாக வேண்டும்.

பொதுவுடைமை இயக்கத்தின் தியாகத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த கே.பாலதண்டாயுதம் கோவை சிறையில் ஆயுள் தண்டனைக் கைதியாக இருந்த போது (1961-62) தமிழ் வித்வான் படிப்பில் சேர்ந்தார். தனது படிப்பிற்கு அடிகளாரின் உதவியை நாடினார். அதற்கு இசைந்து, பேரூர் மடத்தின் ஆசிரியர்களை பாலதண்டாயுதத்திற்குக் கல்வியளிக்க சிறைக்கு அனுப்பியும், நூல்களைள் தந்தும் உதவினார், அடிகளார். அடிகளாருக்கு நன்றி தெரிவித்து தோழர் பாலதண்டாயுதம் எழுதிய கடிதம் 'சிறையில் துளிர்த்த சிந்தனை அரும்புகள்' என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1991 இல் த.நா.கலை இலக்கிப் பெருமன்றத்தின் ஆறாவது மாநாடு பெர்க்ஸ் பள்ளியில் நடைபெற்ற போது சாந்தலிங்க அடிகளார் அதில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. மற்றும் இன்று ஓரளவிற்கு நிறைவேறி வரும் ஆலயங்களில் தமிழில் வழிபாடு என்ற கோரிக்கையை, குன்றக்குக்குடி அடிகளாருடன் இணைந்து முன்னெடுத்த முன்னோடி என்ற சிறப்பும் அடிகளாருக்கு உண்டு.

அடிகளார் உருவாக்கிய தமிழ்க் கல்லூரி இன்று பலதுறைப் பட்ட வகுப்புகளைக் கொண்ட அரசு உதவி பெறும் கல்லூரியாக விரிவடைந்துள்ளது.

அடிகளார் துவக்கி வைத்த பேரூர்ப் புலவர் பேரவை பல அரிய தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் நற்பணியைச் செய்து வருகிறது.

இத்தகைய பெருமைகளுக்கு உரியவரான பெருந்தகை பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் தருணத்தில், அவரது அடியொற்றி தமிழ் மற்றும் தமிழர் மேம்பாட்டிற்குப் பாடுபட நாம் உறுதி கொள்வதே அவருக்குச் சிறந்த புகழஞ்சலியாக இருக்கும். ஓங்குக, பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் புகழ்!

36

திருமுருகன் பூண்டி
திருமுருகநாதர் திருமடம்
திருப்பூர்

சுந்தர ராசனாக சாதாரண ஆளாக இருந்த நான் அடிகளார் உடைய கண் பார்வையில் சுந்தரராச அடிகளாராக மாற்றப்பட்டேன்.

உலகில் பல மடங்கள் காணப்படுகின்றன. மடத்தின் அதிபர் அருகில் சாமானியர்கள் செல்ல முடியாது. ஆனால் நாம் போற்றி வணங்கும் பேரூர் அடிகளார் சாமானியராக இருந்தாலும் அவரை அருகில் அழைத்து அவரைப் பற்றி அன்பு கொண்டு விசாரிக்கும் நேசம் எங்கும் காண க் கிடைக்காதது.

சுக்கு நீர் சாப்பிடுகிறீர்களா உணவு உணர்கிறீர்களா என்று கேட்டு உபசரிக்கும் பாங்கு நெஞ்சில் நிலைத்து நிற்பது.

மொரிசியசு மலேசியா முதலான இடங்களுக்கெல்லாம் அடிகளாரின் வழிகாட்டுதலின்படி சென்று குடமுழுக்கு நடத்தும் பேறு பெற்றேன்.

ஐரோப்பிய நாடுகளில் செல்லும்போது இன்றைய குரு மகா சன்னிதானங்களிடம் கொடுத்து அங்கு உள்ளவர்களிடம் தகவல் கூறி கவனிக்க வைத்த பங்கு வியத்திற்கு உரியது. பல நாடுகளிலும் ஒரு மில் தொழிலாளியாக இருந்த நான் சொற்பொழிவு ஆற்ற குடமுழுக்கு செய்ய முடிகிறது என்றால் அது பேரூர் 24 ஆம் பட்டம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அருள் ஆசியாலேயே ஆகும்

சிவா பிள்ளை ஐயா தம்பு ஐயா எனப் பலரும் அடிகளார் வாயிலாக அறிந்து அன்பின் வழியில் பழகுபவர்கள்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குரு உரு சிந்தித்தல் என்பதன் படி என்னை மனிதனாக மாற்றிய அடிகளாரை அவருடைய திருமேனியை இறைவனுடைய திருமேனியாகவே என்றும் பார்த்து வணங்கி வருகிறேன். அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிகிலார்

அன்பே சிவமாவது அறிய வைத்தவர் அவர். எங்கள் இல்லத்திற்கு வந்து பேர்க் குழந்தைகளுக்கும் சிவத்தை ஊட்டியவர் அவர். நாத்திகம் பேசி நாத் தழும்பு ஏறி நின்ற என்னை பக்தி அறியாமல் தவித்த எனக்கு முத்தி நெறி அறிவித்து சிவாய நம திருச்சிற்றம்பலம் என்னும் மந்திரத்தை எந்நாளும் ஓதச் செய்தவர் நமது குரு மகா சன்னிதானங்கள். அவருடைய அருட்பார்வையால் இன்று நான் மனிதனாக இருக்கிறேன்.

37

திருமதி ராஜாமணி நடராஜ்
மத்தீபாளையம்.

நம் பேரூர் அடிகளாரைப் பெரியசாமி என்று எல்லோரும் வணங்கக்கூடிய தன்மை உடையவர். அவருக்கு நூறாவது ஆண்டு விழா கொண்டாடுவது கேட்டு ரொம்ப ரொம்ப சந்தோஷம் அடைகிறேன்.

ஏன்னா அவரை நினைக்கும் போது அவருடைய சிரித்த முகமும் வாங்கம்மா என்று வாய் நிறைய அன்போடு கூப்பிட ற சொல்லும் தான் கண் முன்னாடி தெரிகிறது.

அவரோட இரக்க குணமும் படிப்புக்காக ஏழை மாணவர்களுக்கு உதவுகிற தன்மையும் வேற யாருக்கும் வராது.

பேரூர் மடத்துக்கு வர்ற ஒவ்வொருத்தரையும் வயறு நிறைய சாப்பிட வச்சு அனுப்புற நல்ல குணம் எப்பவும் அவரை நினைக்க வைக்கிறது.

ஏழை பணக்காரன் என்ற எண்ணம் இல்லாமல் அனைவரிடமும் வேறுபாடு காட்டாது அன்பு புரிகின்ற உள்ளம் அவரிடம் உண்டு. மேற்குப் பகுதியில் இருக்கிற மலைவாழ் மக்களுக்கு எப்போதும் நிறைய துணிகள் மற்றும் பல உதவிகள் செய்யும் தன்மை உடையவர்.

எங்க போனாலும் விளக்கு வழிபாடு நடத்த வேண்டும் அப்படின்னு சொல்லுவாரு. ரொம்ப ரொம்ப எளிமையானவர். தனக்குத் தேவையான உணவைத் தானே சமைத்து உண்ணும் தன்மை உடையவர். பிற மடங்களுக்கு போனால் மடாதிபதியை எளிதில்

பார்க்க முடியாது. ஆனால் இங்கு பேரூரடிகளாரை யார் போனாலும் ஜாதி மத வேறுபாடு இல்லாமல் ஏழை பணக்காரன் வேறுபாடு இல்லாமல் அனைவரும் எளிதில் அணுக முடியும்.

பேரூர் அடிகளார் வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று தமிழையும் பக்தியையும் வளர்த்தவர். அவரை வணங்குகிறேன்.

38

திருமதி அற்புததேவி

கணபதி

1946-1947-யில் சிரவை கௌமாரமடாலயம் 2 -ஆம் குருமகா சன்னிதானங்கள் இயற்கை சூழல் காரணமாக நம் சன்னிதானங்களின் சொந்த ஊரான முதலிபாளையம் சிரை தோட்டத்தில் வந்து தங்கி பூஜை வழிபாடுகள் செய்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு தேவையான உதவிகளை செய்தும் வழிபாட்டுகரிய பூக்களை நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோட்டைபாளையம் என்ற ஊரிலிருந்து எடுத்து வந்து வழிபாட்டிற்கு உதவியாராகவும் இருந்தவர் நம் அடிகள் முதலிபாளையத்தில் திண்ணை பள்ளிக்கூடத்தில் முத்துசாமி என்ற குருவிடம் கல்வி கற்றார்.

தனது வயது ஒத்த மற்ற உறவினர்களையும் உடன் அழைத்து சென்று கல்வி கற்று வருவார். 1947-லில் இராமனந்த அடிகளார் சிலகாலம் தங்கி இருந்த சிரை தோட்டத்தில் விநாயகர் கோவில் அழைத்து சுற்று வட்டார மக்களை சைவ சமய நெறியில் ஈடுபடுத்தினார். இராமானந்த சுவாமிகள் சின்னவேடம்பட்டிக்கு திரும்பும் போது அவர் தம்சீடராக பெற்றோர். அனுமதியுடன் அழைத்து செல்லபட்டார். இராமனந்த மடாலயம் 3-ம் குருமகா சன்னிதானங்கள் கந்தசாமி சுவாமிகளிடம் சமய போதனை மற்றும் கல்வியையும் கற்றார்.

விழப்புரம் மாவட்டம் மயிலம் தமிழ் கல்லுரியில் தமிழ் பயின்று வித்துவான் பட்டம் பெற்றார். மீண்டும் கௌமார மடாலயம் வந்து தங்கி இராமனந்த சுவாமிகளுக்கு வேண்டிய பணிகளை செய்தார். அப்போது பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் விளாங்குறிச்சியை சேர்ந்த தவத்திரு. ஆறுமுகசுவாமிகள் 3-வது மடாதிபதியாக இருந்தவர்.

அவருக்கு இளைய பட்டமாக இருந்து பணி செய்தார். கல்வி பணியில் ஈடுபாடு கொண்டு முதன்முதலில் சாந்தலிங்க அடிகளார் அருள் நெறி தொடக்கப்பள்ளியை தொடங்கி நடத்தி பேரூர் சுற்றுபுற மக்களுடன் இணக்கமாக இருந்து திருமடத்தை சிறப்பாக நடத்தி வந்தார். 2-வது மடாதிபதி மாணிக்க சுவாமிகள் தொடங்கிய நுற்பாலை, அரிசி ஆலை சிறப்புற நடத்தினார்.

திருவண்ணாமலை ஆதினம் குன்றகுடி அடிகளார் உடன் நட்பு கொண்டு 1953 ஆம் ஆண்டு அவரை அழைத்து வந்து தமிழ்க் கல்லூரியைத் தொடங்கினார். 1953-ஆண்டில் பேரூர் பட்டி பெருமான்திருகோயில் தமிழ் முறையை தொடங்கினார். குன்றகுடி தமிழ்க்கல்லூரி வளர்ச்சிக்காக வெள்ளகிணறு வெள்ளிங்கிரி கவுண்டர் அவர்களை நாடி கல்லூரி வளர்ச்சிக்காக நில உதவி, பண உதவி பெற்று கல்லூரியை சிறப்பாக நடத்தினார். கோவை கிழார் இராமசந்திர செட்டியார். அவர்கள் கல்லூரி முதல்வராக அமைத்து நடத்தினார்.

சாந்தலிங்க அடிகளார் உயர்நிலை பள்ளியை தொடங்கினார். சுற்று வட்டார மாணவர்களுக்கு உயர் கல்வி அளித்தார். தொடர்ந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் செனட், அகடாமி கவின்சில் போன்ற பொறுப்புகளில் சுமார் 20 ஆண்டுகள் இருந்து தமிழ் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டார். அப்போது சென்னைப் பல்கலை கழகத்தில் வேந்தர்களாக இருந்த மால்கம் ஆதிசேசையா அவர்களை பேரூர் தமிழ் கல்லூரிக்கு அழைத்து வந்து தமிழ் வளர்ச்சி மாநாட்டை நடத்தினார்.

சென்னைப் பல்கலைகழக வேந்தர் கோவையைச் சேர்ந்த G.R. தாமோதரன் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவர் காலத்தில் தமிழ் ஆசிரியர்கள் தலைமையாசிரியராக ஆகலாம் என்ற சேர்ந்த சட்டத்தைக் கொண்டு வந்தார். இந்த சட்டம் தமிழ் ஆசிரியர் வாழ்வில் நினைத்து போற்ற வேண்டிய ஒன்றானது. அந்த காலத்தில் நடை பெற்ற தமிழ் வளர்ச்சி மாநாட்டில் சிறுதாணியங்களாகிய கம்பு,வரகு ராகி, திணை, சாமை, பணங்கருப்பட்டி, முதலியவற்றை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகளை பரிமாறி பாராட்டு பெற்றவர்.

திருமடத்து அன்பர்களுக்கு சுக்கினால் தயாரிக்கப்பட்ட பானத்தை அளித்தும் மற்றும் உணவு அளிப்பதில் பெரும் மகிழ்ச்சி கொள்பவர். எதையும் மிக எளிமையாகவும் தனி சிறப்புடனும் செய்பவர். தமிழ் கல்லூரியின் முன்னாள் மாணவர் கௌமார மடாலயம் 3–ஆம் குருமகா சன்னிதானங்கள் ஆகிய தவத்திரு.சுந்தரம் அடிகளார் உடன் இணைந்து தமிழகம் முழுவதும் உள்ள கோயில்களில் தங்கியிருந்து தமிழ் முறையில் குறைந்த செலவில் திருகுடநன்நீராட்டு விழாக்களை ஆயிரக்கணக்கில் நடத்தியவர். வாழ்வியல் சடங்குமுறை பயிற்சிகளை நூற்றுக்கு மேற்பட்டோருக்கு கற்று கொடுத்தார். அதன் பயனாக இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் இன்று சிறப்பாகத் திருகுடநன்நீராட்டு விழாக்கள் நடைபெற்று வருகிறது.

உள்ள போத்தனூர் செட்டிபாளையம் சச்சிதானந்த சுவாமிகள் பேரூர் பட்டி பெருமாள் திருகோயில் நிர்வாகியாக இருந்த காலம் தொட்டு நெருங்கிய நண்பர்களாக இவர் அமெரிக்காவில் இருந்தார். வெர்ஜினியாவில் தாமரை கோயில் திருக்குடநன்நீராட்டு விழாவினை நடத்தி வைத்தார். அந்த காலத்திலே மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நடை பெற்ற உலக தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு தன் சீரிய கருத்துக்களை கூறினார்.கோவை மத்திய சிறை சாலை கைதிகளுக்கு வாரம் தோறும் சென்று ஒழக்கம்,பண்பாடுகளை கற்று தந்தார்.

பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களுடன் தொடர்பு கொண்டு கல்லூரி கழக தலைவராகி கல்லூரி வளர்ச்சியை சிறப்பாக செயல்பட வைத்தார். குன்றகுடி அடிகளார் உடன் இருந்து சென்னை தெய்வீக பேரவை என்ற அமைப்பை தொடங்கி தமிழக அரசுடன் இணைந்து திருகோயில் வழிபாட்டு முறைகளை மேன்படுத்தினார். டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழ் வளர்ச்சி பற்றிய ஆலோசனைணை இவருடன் இணைந்து செயல்படுவார் .

திருகைலாயம் செல்லுதற்கு கடினமான பயணம் மேற்கொள்ள வேண்டிய கால கட்டத்தில் மூன்று முறை சென்று வந்தார். அங்கு கல்வி

வசதி பெற முடியாத நிலையில் உள்ள மக்களை அழைத்து வந்து திருமடத்தில் தங்க வைத்து கல்வி பயில வழி வகை செய்தார். தமிழக மடாதிபதியாக அனைவரையும் ஒருகிணைத்து செயல்பட முயற்சித்தார். நமது சொந்த ஊரில் தன்னுடைய நிலத்தில் சாந்தலிங்க அடிகளார் உயர்நிலைப் பள்ளியைக் கட்டி சுற்று வட்டார மாணவர்களுக்கு இலவசமாக கல்வி அளித்தார். அப்போதைய முதல்வர் காமராஜ் அவர்களை அழைத்து அப்பள்ளிக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.பேரூரில் ஞானாம்பிகை மெட்ரிக் பள்ளி, ஆறுமுக அடிகளார் தாய்தமிழ் பள்ளி இவர்காலத்தில் தொடங்கப்பட்டது. தற்போதைய 25-ஆம் பட்டம் மருதாசல அடிகளாரை இளைய பட்டமாக அமர்த்தி அன்புடன் தான் இட்ட பணிகளை செம்மையாக நடக்க வழி நடத்தினார்.

எளிமையாக இருக்க வேண்டும் என்பதை விரும்பினார். கண்டிப்பாகவும் இருந்து அருள் நெறியை அனைவர் மனதிலும் விதைத்தவர். பல ஆண்டுகளுக்கு முன்பு படித்த மாணவர்களையும் நினைவில் வைத்து ஆயுட் காலம் முழுமையும் எப்போது திருமடத்திற்கு வந்தாலும் பெயர் சொல்லி அழைத்து வாழ்த்தியவர் இது அவரின் தலையாய பண்பு.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்ற திருக்குறளுக்குச் சான்றாக தனது மனம் மெய் மொழிகளை சமயப் பணிக்கும், தமிழ்ப் பணிக்கும், சமுதாயப் பணிக்கும் அர்ப்பணித்த மகான்.

போற்றி ஓம் நமச்சிவாய.

39

திரு. வெ. அனந்த கிருஷ்ணன்
பல்லடம், திருப்பூர்

திருச்சிற்றம்பலம்

ஒரு ஊரக உழவர் குடும்பத்தில் பிறந்தவன் நான், தமிழ் மீது கொண்ட பற்றால் உலகியலில் அதிகம் நாட்டம் ஏற்படவில்லை. சுற்றத்தவர் கருத்தால் தமிழ் படிக்க இயலாத சூழல். ஏக்கம் என்னுள் மேலிட எப்படியும் தமிழ்ச் சுவை அறிய ஆவல். தேடல் பல சான்றோர்களது பேச்சின் மீது திரும்பியது. வாரியார் சாமிகள், புலவர் கீரன் போன்றோர் உரை கேட்ட போது சைவம் பற்றிய புரிதல் தொடங்கியது.

அக்காலத்தில் கொங்கு நாட்டு ஆதீன சந்நிதானங்கள் பற்றி ஊடகங்களிலும். திருக்கோவில் விழாக்களிலும் அறியும் போது என்னுள் ஏற்பட்ட ஆவல் தணியாத தாகமாக மாறியது. பலமுறை பேரூருக்கு சென்று வருவதும், அப்பொழுதெல்லாம் நான் சந்தித்த அந்த சமய பெரியோர்கள் ஆதினங்கள் பற்றி கேட்டால் உரிய விளக்கம் தரவில்லை. பின்னர் நான் தெரிந்து கொண்டது அது அவர்களது அறியாமை என்று.

ஒரு நன்னாளில் பேரூர் சென்று திருக்கோவில் வழிபாடு செய்து பின்னர் கிழக்கு நோக்கி அனிச்சையாக நடக்கத் தொடங்கினேன். எப்படியும் பேரூர் திருப்பெருந்திரு. சாந்தலிங்க சாமிகள் திருமடம் சென்று மகாசந்நிதானங்களை வணங்கலாம் என்று முடிவு செய்து திருமட வாயில் அடைந்தேன். பின்னர் நான் புரிந்து கொண்டேன் அதுவே என் வாழ்வின் 'பெரு வழி' என்று.

திருமடத்தில் நுழைந்தவுடன் முன் அறையின் முகப்பில் சாய்ந்த நாற்காலியில் அடிகள் பெருமான் (திருப்பெருந்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்) அமர்ந்திருந்தார். திருமேனி கண்ட போது கற்றாவின் மனம் போல கசிந்துருகி நின்றேன். தழலது கண்ட மெழுகது போல தேசிகன் திருவடி பணிந்து தொழுது நின்றேன். இங்கும் முன்னர் நான் கண்ட இடைவெளி இருக்கும் என்ற எண்ணத்தில் விலகி நின்று பேசினேன். அமரச் சொன்னார்கள் அடிகள் பெருமான். கீழே அமர்ந்தேன். அதட்டிய அடிகள் பெருமான் ஆசனம் காட்டி (நாற்காலி) மேலே அமரச் சொன்னார்கள். தயங்கிய போது தடுத்து தட்டி கொடுத்து அருகே அழைத்து அறிவுக் கண் திறந்து இங்கு வேறுபாடு எதுவும் இல்லை, என்று அன்பொழுக விளக்கினார்கள்.

தவத்திரு. மகாசந்நிதானங்களுடனான முதல் சந்திப்பை இங்கு விரிவாக விளக்க ஓர் காரணம் உண்டு. சமயச் சிந்தனையும் தமிழ் உணர்வும் பெற துடித்த இளைஞனாக அப்போது நான் உலாவிய காலம். பல தொடர்புகள் ஏற்பட்டும் அதில் முழு மனநிறைவு இல்லை. ஆனால் இறையருள் காட்டுவிக்க பேரூர் மகா சந்நிதானங்களின் அருட்காட்சி என்னுள் புதிய சமயப் பார்வையை உருவாக்கியது. சடங்குகளும், நம்பிக்கைகளுமே சமயத்தின் அடையாளம் என எண்ணிய எம்முள் உணர்வு மேலிட சிந்தித்து இறைவனை உணர்வதே உண்மை சமய நெறி என அந்த முதல் சந்திப்புத் தான் காட்டியது.

தவத்திரு. பேரூரடிகளர் வழியில் தென்சேரி திருமடத்தின் தொடர்பும், சீரவை ஆதீனம். பழனி ஆதீனம், வரன்பாளையம் ஆதீனம் ஆகிய அருள் நிலையங்களின் மகா சந்நிதானங்களை அணுகும் வாய்ப்பும் எனக்குள் புதிய பாதையைக் காட்டி திருநெறிய தமிழ் திருமுறைகளை பாடவும், பயிலவும், வழிபடவும், வாழ்வியலில் இணைத்துக் கொள்ளவும் ஆக்கம் தந்தது. அது மேலும் மணிவாசகர் அருட்பணி மன்றம் போன்ற சான்றோர் திருக்கூட்டத்துடன் இணையவும் வழி செய்தது.

வழிபாடுகள் திருமுறை நெறியில் நடத்த தவத்திரு அடிகள் பெருந்தகையின் வழிகாட்டுதலும் சான்றோர்களது துணையும்

கிடைக்க எம்பகுதியில் தொண்டர் திருக்கூட்டம் உருவாக்கி திருமுறை திருப்பணி மேற்கொள்ள வாய்த்தது. எண்ணற்ற அரங்குகளின் அடியேன் நிற்க, பேச, சிறப்புகள் பெற நம்மகா சந்நிதானங்களின் அருளாசியே அடிப்படை. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக கருத்தரங்கில் பேசும் பேறும் தவத்திரு அடிகள் பெருந்தகையின் ஆசியாலும் தவத்திரு. இளைய சந்நிதானங்கள் வாயிலாகவும் கிடைக்க, தகுதி உயர்ந்து என்னை நானே வியக்க கண்ணீர் வழிய மகிழ்ந்து நிற்கிறேன்.

மக்களுடன் மகாசந்நிதானங்கள் என்ற நிலையை நான் முதன் முதலில் இங்கு கண்டேன். பல்வேறு விடையங்களை வெளிப்படையாக கேட்டுத் தெரிந்து கொண்டேன். இளைய அடிகள் (தற்போதைய 25ம் குருமகா சந்நிதானங்கள்) பற்றி அறிமுகம் கூறி சந்திக்குமாறு ஆற்றுப்படுத்தினார்கள். தவத்திரு இளைய சந்நிதானம் அவர்களுடன் மேலும் பல செய்திகளை அறிந்து கொண்டேன். அப்போது கொங்கு நாட்டில் உள்ள ஆதீனங்களின் சிறப்பையும் விளக்க கூறினார்கள். எமது ஊருக்கு மிக அருகில் தென்சேரிமலை உள்ளது. எனினும் தென்சேரி ஆதீனம் குறித்த அறிமுகம் பேரூரில் தான் கிடைத்தது. சிரவை ஆதீனம், பழனி ஆதீனம், வரன்பாளையம் ஆதீனம் ஆகிய அருள் நிலையங்களை அன்றே பேரூரில் இருந்து வணங்கினேன். விடைபெற விளைந்த போது தவத்திரு பேரூரடிகளார் உணவு உட்கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள், உணவில் அன்பும் அருளும் கலந்து தவத்திரு இளைய சந்நிதானம் அவர்களின் அனுகிரகமும் கிடைத்தது.

அன்று தொடங்கி ஆயுள் காலம் வரை பேரூர் ஆதீன அருளாலயத்தின் அடித்தொண்டன் என்பதே எமக்கு பெரும் தகுதி. உலகில் உள்ள ஏனைய அடையாளங்களைக் காட்டிலும் கொங்கு நாட்டுத் திருமடங்களின் ஆசியும், அதன் வாயிலாக தமிழகத்தின் பல திருமடங்களின் அருட்பார்வையுமே நான் பெற்ற பேறு என்பேன்.

இன்று அடிகள் பெருந்தகை நம்முடன் நடமாடவில்லை. இருப்பினும் அவர்தம் அருட்திறம் தற்போதைய 25 ஆம் குருமகா

சந்நிதானங்களின் வழியில் வெளிப்பட வாழ்வில் கவசம் கொண்ட மனநிறைவில் மகிழ்கிறேன். இன்று கொங்கு நாட்டு திருமடங்களின் தொண்டன் என்பதும் தமிழகத்தின் பல திருமடங்களின் அருளைப் பெற்றவன் என்பதிலும் என் வழிவழியே மலைத்து மகிழ்கிறது.

திருப்பெருந்திரு மகா சந்நிதானங்கள் காட்டிய சமய நெறி, தமிழ்நெறி, சமூகநெறி ஆகியன விரியவும். விளையவும் திருவடி பற்றும் தொண்டனாக விளங்க திருவருளையும் குருவருளையும் சிந்தித்து மகிழ்கிறேன்.

40

திரு. சிதம்பரநாதன்

ஸ்ரீ வத்ஸா குளோபல் வில்லேஜ்
சரவணம்பட்டி, கோவை

பேரூர் அடிகளாருக்கும் எனக்கும் உள்ள தொடர்பை மலரும் நினைவுகளாக சிந்தையில் பூத்த எண்ண மலர்களாக நினைவு மலரில் உள்ளவற்றை அனைவரோடும் பகிர்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நல்லதொரு வாய்ப்பை தந்த அடிகளாருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

24 ஆம் குரு மகா சன்னிதானங்கள் அவர்களை நான் அருகில் இருந்து தரிசித்தவன். தூரத்தில் இருந்து தொழுது மகிழ்ந்தவன். அடிகளார் என்றதும் நம் நினைவில் வருவது இரு பெரும் நதிகள். ஆம் அடிகளார் உடைய எண்ணம் முழுவதும் தவத்திலும் தமிழிலும் இருந்தது. தவம் தமிழ் என்று சொல்லப்படுகின்ற இரண்டு பெரு நதிகளிலும் மூழ்கி கிடைத்த தன்மை உடையவராக அடிகளார் திகழ்வதை நான் எப்போதும் கண்டு கண்டு பேருவகை கொண்டு கொண்டு மகிழ்ந்த தன்மையுடையவனாகத் திகழ்ந்தவன்.

அடிகளாரை நினைக்கின்ற பொழுது எப்போதும் தமிழ் உணர்வும் தவ உணர்வும் மேம்பட்டு இருப்பதைப் பார்க்க முடிகின்றது. அவருடைய நினைவு வருகின்ற பொழுது தவமும் தமிழும் தானே இணைந்து வருகின்றது. அவருடைய நினைவில் முதல் முதலில் ஒன்றின் மீது ஒளியை குவித்துக் காட்ட விரும்புகின்றேன். 1983 இல் இலங்கைப் பகுதியில் தமிழ் இனம் ஆனது சித்திரவதைக்கு உள்ளானது குன்றிமணி தங்கதுரை ஜெகன் என்கின்ற மூவர் தன் இனப் பெண்களுடைய மானத்தை காப்பதற்காகப் போராடி சிங்கள ராணுவத்தினரால் சின்னா பின்னம் ஆக்கப்பட்டார்கள். தமிழ் மக்கள் இந்திய மக்கள் அவர்களுக்காக எழுச்சிமிக்க உணர்வுடன் இருந்த

நேரம் அது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முன்னாள் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த கண்ணப்பன் அவர்களிடம் அடிகளார் தமிழ் மக்களுக்காக ஓர் அறிக்கை செய்ய வேண்டும் என்று விரும்பினார்.

அதனை வாங்குவதற்காக நான் சென்றேன். தமிழர்களுடைய நிலையைக் கண்டு வருத்தப்பட்டு வேதனைப்பட்டு கவலைப்பட்டு இருந்த அடிகளார் மிகப்பெரிய சமூக நலனின் அக்கறை கொண்டவராக அறிக்கை தந்தார். அதனை அனைத்து செய்தித்தாள்களிலும் கொடுத்து வெளியிடச் செய்தேன். தவத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறேனோ அதே அளவுக்கு தமிழுக்கும் முக்கியத்துவம் தருவேன் என்று சொன்னார். இது அவர் தமிழ் மீது கொண்ட பெரும் காதலை குறிப்பதாக அமைகின்றது. கோவை ஒப்பணக்கார வீதியில் சோபாக்கார்னரில் நடந்த மனித சங்கிலி போராட்டத்திலும் அடிகளாரின் எழுச்சிமிக்க உரையை நேரடியாக கண்டு மகிழ்ந்தவன் நான்.

தமிழ் இனத்திற்காக தன்னை ஒப்படைத்த மாபெரும் தமிழ் இனப் போராளியை சமூக நலனின் மீது அக்கறை கொண்ட எழுச்சிமிக்க வீரரை காணும் பேறு பெற்றேன் அந்த நேரத்தில். கோயில்களில் தமிழ் வழி அர்ச்சனை வேண்டும் என்ற நிலைப்பாட்டை குன்றக்குடி அடிகளார் உடன் இணைந்து மிகப்பெரிய அளவில் கொண்டு சென்றவர் நம்முடைய பேரூர் அடிகள் ஆவார். அருட்செல்வர் அவர்கள் 1993இல் தமிழ்க் கல்லூரியின் நிர்வாக அதிகாரியாக செயல்பட்டார். அப்போது அவர் தமிழ் மொழியைக் கற்பது போல் தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம், ஹிந்தி முதலான மொழிகளையும் கற்றுத் தந்தால் நலம் என்று கூறியபோது அடிகளார் அவர்கள் இது தமிழை மட்டுமே வளர்க்கின்ற கல்லூரியாக இருக்கட்டும் நீங்கள் உங்கள் கல்லூரியில் அவற்றை செயல்படுத்துங்கள் என்று கூறியது என்னை வியப்பில் ஆழ்த்தியது.

தமிழ் மீது அவர் கொண்ட பெரும் பற்றை அது உணர்த்தியது. பேலூர் ராமகிருஷ்ணா மடத்தில் துறவிகளை உருவாக்குவதற்காக

மாபெரும் செயல்பாடு நடந்து வருகிறது. ஏழு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பிரம்மச்சாரிகள் அங்கு துறவிகளாக பல மடங்களிலும் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் வங்காளம் ஆங்கிலம் சமஸ்கிருதம் முதலாம் மொழிகளில் மிகப்பெரிய தேர்ச்சி பெற்று இந்து சமய பண்பாட்டுக் கூறுகளிலும் ஆழ்ந்த புலமையிலும் அவர்களை பயிற்றுவித்து துறவியாக அனுப்புகின்ற தன்மையை ராமகிருஷ்ண மடம் செய்து வருகிறது. அதைப்போன்று துறவியை உருவாக்கும் மாபெரும் நோக்கத்தை உடையவராக அடிகளார் அவர்கள் சைவ மடத்திற்கு என்று துறவியர் பயிற்சிக் கூடத்தை உருவாக்கும் பேரவா கொண்டிருந்தார். அதனை இனிவரும் காலத்தில் செயலாக்குவார்கள் என்று நம்புகின்றேன்..

பொன்னீலன் அவர்கள் கல்விக் கூடங்களை பார்வையிட வந்த போது நான் உடன் இருந்தேன் அவர் அடிகளாரிடம் கல்வி சாலைகளின் கட்டிடங்கள் உயரிய நிலையில் அமைந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கூறினார். இன்று பேரூர் தமிழ் கல்லூரி மற்றும் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மிகச்சிறந்த சர்வ கலாசாலையின் தோற்றத்துடன் காணப்படுகிறது. அதற்கு இன்றைய குரு மகா சன்னிதானங்கள் பெரிய அளவில் காரணமாக அமைவது போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் வணக்கத்திற்கும் உரியது.

கல்விச்சாலையில் ஆலயத்தில் நீதிமன்றத்தில் தமிழ் வேண்டும் என்று அடிகளார் விரும்பினார். அர்ப்பணிப்பு உணர்வுள்ள இளைஞர்கள் பேரூர் அடிகளாரை போன்று 20 பேர் இருந்தால் போதும். இந்து சமயம் சைவ சமயம் என்னாளும் எழுச்சி பெற்ற சமயமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை

விவேகானந்தர் கூறியபடி கல்வியை மருத்துவத்தை மக்களுக்கு கொண்டு செல்லும் சமயம் மட்டுமே மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கும். அதனை செய்யும் நிலையமாக இன்றைய நிலையில் பேரூர் சாந்தலிங்கர் திருமடம் அமைந்துள்ளது போற்றுதற்குரியது வணக்கத்திற்கு உரியது.

41

திருமதி சிவசங்கரி ரமேஷ்
முதுகலை தமிழசிரியை அ.மே.நி.ப,
பேரங்கியூர், விழுப்புரம்.

நான் பேரூர் தமிழ் கல்லூரியின் முன்னாள் மாணவி

அடிகளார் எப்போதும் வேப்ப மரத்தடியில் சாய்வு இருக்கையில் இருந்து அமர்ந்து எங்களுக்கெல்லாம் ஆசி உரை வழங்கும் தன்மை உடையவர். அவரை நினைக்கின்ற பொழுதே புன்னகை தவழும் சிரித்த முகம் நினைவில் வருகிறது. பேரூர் தமிழ் கல்லூரியை நிறுவிய பெருந்தகையாளர். மாணவர்களுக்கு ஒழுக்கத்தை போதித்த உத்தமர். பேரூர் தமிழ் கல்லூரியில் படித்த காரணத்தால் சைவத்தின் மீதும் தமிழின் மீதும் ஆர்வம் வந்தது தமிழ் முறை குடமுழுக்கு சைவ சித்தாந்த நெறி ஆகிய அனைத்தும் கல்லூரி எனக்கு தந்த சொத்துக்கள்.

அன்பின் வழியில் அகிலத்தை ஆள அடிகளார் எனக்கு வழிகாட்டியவர். நாங்கள் படிக்கின்ற பொழுது எங்களுக்கு நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபாட்டை உருவாக்கியவர். திருவாசகத்தின் மீதும் திருமுறைகளின் மீதும் சித்தாந்த நூல்களின் மீதும் தீவிரமான பற்று எங்களுக்கு இருக்கிறது என்று சொன்னால் அதற்கு காரணம் அடிகள் பெருந்தகைகளே ஆவார். அடிகளார் என்று சொல்லுகின்ற பொழுது திருநீற்றின் ஒளி நமக்கு நினைவில் வருகிறது.

திருநீறு காக்கும் தன்மையில் இருப்பதை உணர்ந்தது கல்லூரி நாட்களில் மட்டுமே. அது இன்றும் எங்களைப் போன்றவர்களுக்கு குடும்பத்திற்கும் பாதுகாவலாக இருந்து அரண் செய்கின்றது

அடிகளாரை நினைக்கின்ற பொழுதெல்லாம் அந்த சிவன் நம் நினைவில் வருகிறார். மேலாம் பரம்பொருள் நம்மை காக்கின்றது. தூய்மை பெருகுகின்றது. உள்ளம் குளிருகின்றது.

கல்லூரியில் உள்ள தொடர்பு குடும்ப தொடர்பாக இன்றும் இருப்பது இறைவன் எனக்கு தந்த வரம்.

42

வ. அழகிரிசாமி

1/78, மாரியம்மன்கோவில் வீதி,
பேரூர் (அஞ்சல்) பேரூர் செட்டிபாளையம், கோவை. 641010

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் தமிழுக்கும் சமயத்தின் வளர்ச்சிக்கும் அரும்பெரும் பணிகளை செய்தவர்.இந்து சமய அறநிலையத்துறைக்கும் கௌரவ தலைமை பொறுப்பேற்று, தமிழ்நாட்டிலும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் மற்றும் மலேசிய, சிங்கப்பூர், நியூசிலாந்து சுவிட்சர்லாந்து, பல வெளிநாட்டிலும் பல ஆயிரம் திருக்கோயில்கள் திருக்கோயில்களுக்கு திருக்குட நன்னீராட்டு விழா எனச் சிறப்பாக செய்திருக்கிறார். தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் குருபூஜை பல சான்றோர்களை அழைத்து சிறப்பாக நடத்தியவர் அவருடன் இணைந்து எங்கள் குடும்பமே செயல்பட்டு இருக்கிறோம்.


பேரூர் மேலை சிதம்பரம் பட்டீஸ்வரர் திருக்கோவிலுக்கு சில ஆண்டுகளுக்கு முன் பங்குனி உத்திரதேர் தேர் திருவிழா அன்று இவர் தலைமையில் அடிகளாரின் பங்களிப்புடன் பல லட்ச ரூபாய் மதிப்புடன் கலைநயத்துடன், தெய்வாம்சம் பொருந்திய திருத்தேர் ஒன்றையும் உருவாக்கி அன்பளிப்பாக பல சான்றோர்களின் முன்னிலையிலும் பல்வேறு திருமடத்தின் சிவனடியார்கள் முன்னிலையிலும் வழங்கினார்.

மேலும் அனைத்து மத சமயநல்லிணக்க வழிகாட்டியாகவும், செயல்பட்டிருக்கிறார். தமிழ் வளர்ச்சிக்காக தவத்திரு சாந்தலிங்க தமிழ் கல்லூரி கல்வி நிறுவனத்தை பல கல்வியாளர்கள் சான்றோர்களின், உதவியோடு இவர் தலைமையில் உருவானது மிக மிக பெருமைக்குரிய செயலாகும்.

திருமடத்தின் சார்பாக தினமும் நூற்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு அன்னதானமாக உணவு வழங்கியவர்.தற்போதும் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி உணவு வழங்குகிறார்கள். தவத்திரு சாந்தலிங்க அடிகளார் உயர்நிலைப்பள்ளியில் படித்த காலங்களில் இருந்து தற்போது வரை ஆன்மீக மகா குருவாகவும் வணங்கி,அவர் வழிகாட்டிய யோகம் தியானம்,தவம்,ஞானம் என்பன கடவுள் அறியும் நெறிகள் ஆகும்.

நமக்கு தவத்தை கூட்டி இறை அனுபூதியை பெறுவதற்கு அஸ்திவாரமாக இருப்பது சரணாகதியுடன் கூடிய தெய்வ பக்தியே என்பதை நன்கு உணர்த்தியவராவார். அவரின் அருளால் சிறந்த முறையில் யோகம்,தியானம் கற்று கடந்த 30 ஆண்டுக்கு மேலாக ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதை பெருமகிழ்வுடன் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளாரின் ஆசீர்வாதத்தோடு மகிழ்கிறேன்

நன்றி.
வணக்கம்.



சிவனிரவுப் பெருவிழாவில் பேரூராதீனம் 24 ஆம், 25 ஆம்
குருமகா சந்நிதானங்கள் வழிபாடு



தைத்திருநாள் மாட்டு பொங்கலில் மாடுகளுக்கு கனியமுது ஊட்டுதல்



ஆர்சிய வித்யா பீடம் தயானந்த சரசுவதி சுவாமிகளுடன் பேரூரடிகளார் அவர்களும், சிரவை ஆதீனம் 4 ஆம் குருமகா சந்நிதானங்கள், கரூர் ஆத்மானந்த சுவாமிகள், ஊரண் அடிகள் ஆதியோர்



சிரவை ஆதீனம் விழாவில், பேரூரடிகளார், சிரவை ஆதீனம் 4 ஆம் குருமகா சந்நிதானங்கள், பா.வெ. நாகராஜன் ஆதியோர்

43

ஞானகுரு சாக்த
ஸ்ரீ பஞ்சலிங்கேஸ்வர சாமிகள்

முருகன் துணை
தவத்திரு சாந்தலிங்க சாமிகள் போற்றி
தவத்திரு ஞான குரு சாக்த ஸ்ரீசிவலிங்கேஸ்வர சாமிகள் போற்றி

அன்புடையீர்,

திருப் பேரூர் ஆதின தலைவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் சமயத் தலைமை பூண்டு தமிழுலகை நெறிப்படுத்தும் அருளாட்சி செய்துள்ளார்கள். துறவுக்கு ஓர் உருவமாகவும் கொள்கைச் சான்றோராகவும் அடிகளின் எழிலையும், இனிமையான சிரிப்பும், உருவமும் உள்ளத்தன் தின்மையும் தமிழ் நெஞ்சங்களில் என்றும் நிலைத்து நிற்கும்.

தமிழறிவும், சைவ நெறியும் உலகியல் அறிவும் ஒருங்கே பொருந்தக் கொண்டிருந்தார். தமிழக அரசும் கல்விதுறையும் இவரின் திறமையைப் பயன்படுத்தி வந்தது. கொங்குநாட்டின் இரு கண்களாக அமைந்த செந்தமிழும் சிவநெறியும் தழைக்க தொண்டாற்றிய திருமடங்கள் பேரூர் ஆதீனமும் சிரவை ஆதீனமும் ஆகும்.

சிரவை ஆதீனகுரு முதல்வனாகிய தவத்திரு இராமானந்த சுவாமிக்கு சிறுவயதில் கூட இருந்து தொண்டாற்றிய பெருமைக்கு உரியவர். அத்தோடு சிராவையாதீன இரண்டாம் குருமூர்த்தியாகிய தவத்திரு கந்தசாமி சுவாமிகளிடம் கல்வி பயின்றவர். அவர் ஆசிபடி தமிழில் கிராமம் கிராமமாக சென்று திருக்குட நன்னீராட்டு செய்து வந்தார்கள். நானும் அவ்வண்ணமே அவர் ஆசியோடு குரு

முதல்வரின் துணையோடும் அவருக்கு அடுத்து வந்த மருதாசல அடிகள் ஆசியோட நானும் சைவப் பணியும், சாக்தபணியும் ஆற்று வருவதிற்கு தங்களின் ஆசியும் நூற்றாண்டு கண்டு வரும் ஆதீன ஆசீயும் கிடைக்க அன்போடு பாராட்டி மகிழ்கிறேன்.

எல்லாம் நிறைவாகட்டும்

44

புலவர் **வீ. சொக்கலிங்கம்**
அப்பரழகன் திருக்கூட்டம்
விசயமங்கலம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருகுரு சிந்தித்தல் தானே

திருமூலர்

நம் பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தின் அருட்குருநாதர், கயிலை புனிதர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் பெருந்தகையின் அழகிய திரு உருவம், யாருடைய சந்ததியில் நம்முடைய மனம் அமைதி பெறுகிறதோ, யாருடைய மொழியில் நம்முடைய மனம் தெளிவு பெறுகிறதோ, அவர்களே அருட்குருநாதர் ஆவார், என்பதை அவருடைய திரு வோலக்கம் கண்டு, சுவாமிகளை முதன் முதலில் தவத்திரு சுந்தர சுவாமிகள் உடன் தரிசிக்கும் வாய்ப்பு 1970 இல் ஈரோடு மகிமாலீஸ்வரர் எனது அருட்குருநாதர் தவத்திரு தொண்டர் சீர் பரவுவார் ரா. ப தங்கவேலனார் அவர்கள் முன்னிலையில் கிடைத்தது. பேறு பெற்றவன் ஆனேன்.

கௌமார மடாலயம் குரு முதல்வர் தவத்திரு ராமானந்த அடிகளுக்கு பணிவிடை புரிய தனது 15 வது வயதில் முதலி பாளையத்திலிருந்து சரவணம்பட்டிக்கு கால்நடையாகவே நடந்தே செல்வார் இதனை நம் சுவாமிகள் எளியனிடம் சொல்லியுள்ளார். அங்கு சுவாமிகள் செய்த தோட்டப்பணிகள், பேரூர் திருமடம் வரை தொடர்ந்தது. என் கடன் பணி செய்து கிடப்பதே' என வாழ்ந்த பேராளர் ஆவார்.

நம் அடிகள் கௌமார மடாலயம் தவத்திரு கந்தசாமி சுவாமிகளிடம திருமுறை பாடம் கேட்டார் அருள் அனுபவம் பெற்றார். தம்மை தவக்கோல வாழ்வுக்கு வித்திட்ட பெருமை நமது தந்தை யாருக்கும் கௌமார மடாலயத்தில் ராமானந்த சுவாமிகளுக்கும் உண்டு என்று பெருமையுடன் கூறிக் கொள்வேன்.

தவத்திரு சுந்தர சுவாமிகளும், நம் அடிகள் பெருந்தகையும், பூரண சூரிய சந்திரர் போன்ற இரட்டைக் குருமணிகளாக நாடெங்கும் வலம் வந்தார்கள். இவர்கள் இருவரும் நம் கருமேனியை கழிக்க வந்த திருமேனியையை கொண்டவர்கள் ஆவார்கள்

தமிழ் கல்லூரியின் வளாகத்தில் தன் இருப்பிடத்தின் முன்புறம் சாய்வு நாட்காலியில் புத்தகமும் கையும் ஆக வாசிப்பை நேசிக்கும் நிலையில் நம் அடிகள் பெருமான் கொலுவிருப்பார்.

அவரது எளிமையை என்னவென்பது. நந்தையும் மிகையாம் கருத்து என்ற அப்பர் பெருமானை பற்றி சேக்கிழார்வரைந்த சித்திரம் தான் நினைவுக்கு வரும்.

தன்னை காண அன்பர்கள் வந்தால் தனது அறைக்குள் பிரவேசிப்பார். சூடான சுக்குநீர் அல்லது குளிர்ந்த நீர்மோர் அன்பர்களின் தொண்டையை இனிமைப்படுத்தும். உண்ணது ஒருவரும் மடத்தை விட்டு திரும்ப இயலாது. சாப்பிட்டு விட்டு போகலாமே என்று கூறும் தாயுள்ளம் அவருக்கு சொந்தமானது.

பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்தில் உழவாரப்பணி நடந்தபோது திருமடத்தில் தான் அன்னம்பாலிப்பு அடிகள் தலைமையில் ஞானவேள்வி,தலைவாழை இலைகளில் தான் அடியார்களுக்கு அன்னம் பாலிப்பு அன்றைய இளையடிகள் இடத்தும் கௌமாரம் செல்வி மரகதம் அம்மை யாரிடமும் அன்னம் பாவிப்பு எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று ஒரு வர்ணனையே சொல்லி விடுத்தார் தலைவாழை இலையில் தான் மதிய உணவு அதுவும் அறுசுவையுடன்.

கோவை சிறை கூடத்தில் வாரந்தோறும் ஆயுட் கைதிகள் மத்தியில் சிறைச்சாலையை அறசாலையாக மாற்றிது அன்று ஒரு

மணிமேகலை. இன்று நம் அடிகள் பெருந்தகை என்று மனம் அசை போட்டது சுவாமிகளிடம் வகுப்பு கேட்டதில் செஞ்சட்டை தீரர் பாலதண்டாயுதம் அவர்களும் ஒருவராவார். மாஸ்கோவில் நடைபெற்ற தொழிலாளர் அணிவகுப்பில் அவர் ஆற்றிய உரையில் அடிகளிடம் பாடம் கேட்ட துணிவு வெளிப்பட்டது இறைவனின் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்த தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறேன் என்று அவர் பேசத் தொடங்கியதும் நீண்ட நேரம் கரவொலி, அடங்கி ஒடுங்க கொஞ்ச நேரம் தேவைப்பட்டது.

குறள்நெறி காவலர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் உடன் நெருங்கிய நட்பு அடிகளுக்கு உண்டு. உடலும் உயிருமாக இருந்தனர் தமிழர்களின் வாழ்வியல் நெறிகளும் வழிபாட்டுச் சடங்குகளும் திருநெறிய தமிழில்தான் நடந்தாக வேண்டும் என்ற உழைப்பு அவர்கள் உடன் பாடமாக இருந்தது. தமிழ் போராளிகள் மூளை முடுக்குகளில் சந்தித்த எதிர்ப்புகள் கொஞ்ச நஞ்சமல்ல .

இறைவனை அவர் அவர்கள் தாய் மொழியில் வழிபாடு செய்வது தான் சிறப்பு என்றார் நம் அடிகள் காட்டும் நெறியும் அதுவே. காஞ்சிபுரத்தில் சங்கரர் மடத்தில் நடந்த ஒரு நூறு ஓதுவார்களின் திருமுறை பாடல்களின் இசை நலம் கேட்டு சீர் வளச்சீர் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் இத்தீந்தமிழில் வழிபாட்டு முறைகளை எழுதிக் கொண்டு வந்தால் அதை சங்கர மடம் நூலாக வெளியிடும் என்று உரை செய்தார்.

வடமொழி வேள்விகளுக்கும் முன்பே தமிழ் மொழி வேள்விகள் பலியாகசாலை, முதுகுடுமி பெருவள்ளி பாண்டியன் காலத்தில் இருந்த தாக தமிழ் வேள்வி சதுரர் திருவாளர் மு. பெ. சத்தியவேல் முருகனார் 'பேரூர் நெறி 'என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

உம்பரும் பரவும் ஒரு தமிழ் வேதம் என்ற வைராக்கிய தீப வரிகளை சுட்டிக்காட்டி பேரூர் நெறி என்பது திருநெறிய வழிகாட்டும் தமிழ் நெறி என்றும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் ஆலயத்தில் முதல் தமிழ் அர்ச்சனை கோவை

கணபதியில் முதல் தமிழ் வழி திருக்குறள் நன்னீராட்டு விழாவையும் நடத்திய பெருமை அடிகள் பெருந்தகைக்கும் சிரவை ஆதினம் குரு மகா சன்னிதானம் தவத்திரு சுந்தரசுவாமிகளுக்கும் உண்டு.

திருநெறிய தமிழ் வழி சடங்கு வாழ்வியல் சடங்குகளில் பெருக வேண்டும் என்பதற்காக ஸ்ரீ லங்கா, மலேசியா,மொரீசியஸ் ஆஸ்திரேலியா, ஸ்விட்சர்லாந்து, டென்மார்க், பிரான்ஸ், கனடா,அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா அவர் பயணித்த நாடுகளாகும்.

தமிழ் வழி வழிபாட்டிற்காக கடல் கடந்து உலகம் முழுமையும் தள்ளாத முதுமை பருவத்திலும் அழியாது பயணித்தவர் என் பேரூர் அடிகள் தமிழுக்காக தமிழாக வாழ்ந்த பெருமாள் பேரூர் அடிகள் அவரது சங்கனாத முரசு ஒலிக்காத இடமே இல்லை.

விஜயமங்கலத்தில் பெருங்கதை விழாவினை பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தினார் கல்லூரி பேராசிரியர்களும் மாணவ மாணவியர்களும் பெரும் அளவில் பங்கேற்றார்கள் எளியேன் எனது இல்லத்தில் தான் சுவாமிகள் ஓய்வு கொள்வார்கள். தக்காளி சூப்பு கேட்டு அருந்துவார் இட்லியும் தேங்காய் சட்னியும் அவருக்கு பிடித்த உணவு.

சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும் மக்கள் மத்தியில் பரவலானது போல் பெருந்தகை மக்கள் மத்தியில் பரவலாக்கப்படவில்லை. என்ற கவலை அடிகளுக்கு உண்டு. பெருங்கதை கொங்கு நாட்டில் வரையப்பட்ட காவியம் மக்களுக்கு புரியவில்லையே என்பது அவரது ஆதங்கமாக இருந்தது.

திறமைகளை கண்டறிந்து பாராட்டுவதும் வழி நடத்துவதும் அவரது சிறப்புகள். அவரிடம் தவம், ஒழுக்கம், ஈஸ்வர பக்தியும் சிவஞானமும் இறை அனுபூதியும் பொங்கி பொங்கி ததும்பின வாக்காலும் வாழ்வாலும் அன்பர்களை வழி நடத்துவார்.

எல்லா மதத்தவர்களும் எல்லா இனத்தவர்களும் அடிகள் பெருமானிடம் பாசமும் நேசமும் கொண்டவர்களாக இருந்தார்கள் திருமணத்திற்கு வராத தலைவர்களை இல்லை என்று கூறலாம்.

மயிலம் தமிழ் கல்லூரியில் தான் பயின்ற காலத்தில் மேல் சட்டை அணியாமல் கல்லூரிக்கு சென்று வந்து கொண்டிருந்தார். இதனை கண்ட கல்லூரி நிர்வாகம் மேல் சட்டையின் தேவையை உணர்த்தியபோது சுவாமிகள் சிறிதும் சங்கடம் இல்லாமல், மேல் அங்கி ஒன்றை தயாரித்துக் கொண்டு, மறுநாள் கல்லூரிக்குச் சென்ற வரலாற்றை பேராசிரியரும் சுவாமிகள் உடன் பயின்றவர் ஆன வணக்கத்திற்குரிய வையாபுரி ஐயா அவர்கள் எளியேனிடம் சொல்லி உள்ளார்கள். தாம் மயிலம் தமிழ் கல்லூரியில் புலவர் பட்டம் பெற காத்திருந்த காலத்தில் தமக்கு ஆசிரியராக இருந்தவர். ஒருமுறை திருமடத்திற்கு வந்தபோது தாமே முன் நின்று அவரை உபசரித்து மகிழ்ந்தார். உணவு பரிமாறினார் ஓய்வு கொள்ள படுக்கையை விரித்துக் கொடுத்தார். யாரையும் உதவிக்கு அழைக்கவில்லை அத்தனை பக்தி, வகுப்பு ஆசிரியரிடம். இன்றைய தலைமுறை கற்றுக் கொள்ள வேண்டிய வகுப்பு பாடம் இல்லை இது வாழ்க்கை பாடம்.

தமது 96 ஒன்றாம் அகவை நாண் மங்கல விழாவில் பாரத நாட்டு குடியரசுத் தலைவர் மேதகு அப்துல் கலாம் அவர்கள் வருகை தந்து அடிகளை வணங்கி பாராட்டி மகிழ்ந்தார் கூட்ட நெரிசலில் கல்லூரி வளாகமும் திக்குமிக்கு ஆடியது மிகப்பெரிய சாதனை.

திருவாவடுதுறை ஆதீனம் குரு மகா சன்னிதானம் சீர் வளச்சீர் சிவப்பிரகாச சுவாமிகள் மூலமாக நம் கொங்கு மண்டலம் அப்பரடிகள் சிவனேரி வழிபாட்டு திருக்கூட்டத்தில் உழவாரப் பணிகளில் சிறப்புகளை கேட்டு மகிழ்ந்து தாமும் சிவ கூட்டத்தில் கலந்து உழவாரப் பணிகள் செய்து அடியார்களோடு இருக்க விரும்பினார் அது நடைபெறாமல் போனது திருவருள் எங்களுக்கு கூட்டு விக்கவில்லை.

உன் மனக் கவலையை ஒழி பெருமானே நேரில் கூறுவது போன்று நம் ஊத்துக்குளி அருள்மிகு கைலாசநாதர் ஆலயத்தில் திருக்கூட்டத்தில் உழவாரப் பணியில் நம் பேரூர் அடிகள் கலந்து கொண்டு உள்ளவாறு பணிகள் செய்து கூடையில் மண் சுமந்தும் பணி செய்த பெருமையை அவரது எளிமையை என்னவென்று உரைப்பது.

தமிழைத் துறக்காத தனிப்பெரும் துறவி என்று பலராலும் பாராட்டப்பட்ட பெருமைக்கு உரியவர் நம் அடிகள் பெருந்தகை. அவரைப் பற்றி வெளிவந்த நூல்கள் ஒன்றா இரண்டா பல பல! எனது 'தவம் செய்த தவம் என்ற நூலும் இதில் அடங்கும்.

கொரோனா காலத்தில் தவத்திரு குன்றக்குடிகளோடு சேர்ந்திருந்து நம் அடிகள் நாகப்பட்டினத்தில் களப்பணிகள் புரிந்தார் அழுகையின் ஓசைகள் கண்ணீர் பெருக்குதல் காணும்இடமிருந்து அவலக் காட்சிகள். இவற்றின் மத்தியில் நம் அடிகள் நேரிய முறையில் தமது உதவிக் கரங்களை நீட்டிக் கொண்டு செய்தார்.

எளிமைக்கு இலக்கணம், கருணைக்குப் பிறப்பிடம் கல்விக்கு கல்வி களஞ்சியம், இன்சொலின் விளை நிலம். சத்திய வார்த்தைகள் என்றால் அது உண்மை. வெறுப்புகள் இல்லை கால்கள் தடுமாறினாலும் வார்த்தைகள் தடுமாறக்கூடாது என்று சொல்லுவார்கள் அது போன்று நம் அடிகளின் திருமேனி தடுமாறி நின்ற காலத்தும் அவரது அன்பு நெஞ்சம் தடுமாறியது இல்லை உறுதிப் படைத்த நெஞ்சில் தான் உறுதியான வார்த்தைகள் தோன்றும் என்பார்கள் வாழ்நாள் முழுவதும் உறுதி படைத்த நெஞ்சுறமாய் திகழ்ந்தார் நம் அடிகள்

ஞாலம் அளந்த ஞானத்தமிழ் கண்டெடுத்த மாபெரும் தமிழ் மாமனிதர் நம் அடிகள் பெருமான். திருநெறிய தமிழுக்கு தனிப்பெரும் காவலர் தவப்புதல்வர்.

அன்பு கருணை அருள் ஞானம் இவைகளில் கூட்டு கலவையில் அமைந்த திருவுருவம் தான் நம் அடிகள் பெருமான்.

அவரது திருவுருவை எழுத்து உருவாக்கிய போது சிவந்த வண்ணம் மெலிந்த உடல், மலர்ந்த முகம், ஒளிரும் கண்கள், பூப்போன்று மெல்ல உதிரும் சொற்கள், குடும்பம் எல்லாம் விசாரிக்கும் பங்கு, திருநீற்றுப் பையில் தோய்ந்து கிடக்கும் விரல்கள் தொட்டு வணங்க நீக்கிய திருவடிகள் பழுதுபட்டு உடைந்த ஒரு பழம் நாற்காலி அதன் மீது பொருத்தப்பட்ட ஒரு கவிதை பாடல் அவரைப் போன்று

காலப் பழமை கண்ட ஒரு பெரும் துறவி ஆடை எளிமையிலும் எளிமை அது அல்லவா ஒரு தவசிக்கு தனிப்பெரும் அடையாளங்கள் எங்கே காண முடியும் வேறு எவரிடம் பார்க்க முடிகிறது.

குளிர் தூங்கும் உதகை காந்தல் மலையில் தங்கி இருந்த போது தாமே சமையல் செய்து அனைவருக்கும் தாமே உணவு பரிமாறி மகிழ்ந்தார் எலுமிச்சை ஊறுகாய் அவருக்கு எப்போதும் பிடிக்கும். புளியும் மிளகாயும் ஜென்மவிரோதிகள். அவர் கைப்பட சமைத்த இன்னமுது எனக்கும் அங்கு கிடைத்தது.

முடிவாக தமிழுக்காக உழைத்து தமிழாக நின்ற நம் தவத்திரு அடிகள் திருமடத்தில் அம்பலவாணப் பெருமாளின் சந்நிதியின் வாசலில், பெருமானின் தூக்கிய திருவடிகள் நிழலில் பரமூத்தி பெற்று ஒடுக்கப்பெற்றார். பூத உடல் புகழ்உடலானது.

அவரது பொன்னார் திருவடிகளை அவரது நூற்றாண்டு விழாவின்போது வணங்கும் இடைவேளையில் அவரது வழி நின்று முழுகி வரும் திருமடத்தின் 25ஆவது குரு மகா சன்னிதானம் கல்விப் பெருங்கடல் தவத்திரு சாந்தலிங்க மருதாசலம் அடிகள் பெருந்தகையில் பொன்னார் திருவடிகளைப் போற்றியும் வணங்கியும் அடிகளைப் பற்றிய எளியனது. நினைவுகளில் நின்ற நிகழ்வுகளை இங்கு தங்களோடு பகிர்ந்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி! போற்றி ஓம் நமச்சிவாய!

45

மருத்துவர் M. பரமசிவம் M.D.,

பொது நல மருத்துவர், திருச்சி

அடிகளாரின் உரையை பல இடங்களில் நான் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன் அதில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் புதுக்கோட்டையிலும் மயிலாடுதுறையிலும் அவர் சொற்பொழிவுகளை கேட்டு நான் மயங்கி இருக்கிறேன். ஒரு சமயம் மயிலாடுதுறையில் உப்பைபற்றி பேசினார். உப்பு உணவில் மட்டுமல்ல நமது உப்பு சத்தியாகிரகத்தில் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துரைத்த போது நாங்கள் அசந்து போனோம். காந்தியடிகள் தலைமையில் உப்பு சத்தியாகிரகம் ஆரம்பித்தபோது இங்கு நமது கடற்கரைக்கச் சென்று சுதந்திரத்திற்காக தம் உயிர்களை நீர்த்த உத்தமகனை நினைத்து நெகிழ்ந்து போனார். அப்பொழுது உப்பை பற்றி சில வார்த்தைகளை கூறியதை கேட்டு நாங்கள் மகிழ்ந்தோம். உப்பு உணவுக்கு மட்டுமல்ல நமது ஆன்மீக வாழ்வியிலும் முக்கியமானது என்றார்.

விதை இல்லாமல், மண்ணும் இல்லாமல் கடலில் தோன்றும் இந்த அதிசய விளைச்சலை திங்கா அடிகளே இல்லை. அதைவிட நீரில் தோன்றி நீரிலையே கரைந்து போகும் உப்பை ஜீவாத்மா போன்றது என்றும், கடலை பரமாத்மா என்றும் சொல்வதைக் கேட்டு மகிழ்ந்து போனோம். உடலில் சேரும் உப்பே நமது அனைத்து குடல் நிலைகளிலும் நீர் பாலிக்கிறது. கடலில் நீராடுவது நல்ல தோஷங்களை நீக்கும் என்ற நம்பிக்கையும் பலருக்கு உண்டு. உப்புக்கு இந்துக்களில் முக்கியமான பங்கு ஆகும். சங்கும் முத்தும் பிறப்பது பாற் கடலிலே கடல்களுக்கே அதிகம் படைக்கப்படுவதும் உப்பு தான். உப்பை வீணாக்கக்கூடாது சிதறக் கூடாது என்று முன்னோர்கள் சொல்லி வைத்தார்கள்.

பிறந்ததிலிருந்து இறப்பது வரைக்கும் உப்பு நம்மை ஆட்டி படைத்து கொண்டிருக்கிறது. உப்பு அதிகமானாலும் உடம்புக்கு கெடுதல் உப்பு குறைந்தாலும் உடலுக்கு கெடுதல் அளவோடு இருக்க வேண்டும் என்ற செய்தியை அது கொடுக்கிறது. உப்பில்லாத பண்டம் குப்பையிலே என்பார்கள். உப்பை தின்றவன் தீங்கு செய்ய மாட்டான் என்றும் மகாபாரதம் கூறுகிறது என்பார். கிராமங்களில் உப்பு மந்திரம் என்று வேடிக்கையாக ஒன்று சொல்வதாக உண்டு. உப்பை கையில் வைத்துக்கொண்டு நாம் யாரைப் பார்க்க நினைக்கிறோமோ அவர்களை எண்ணி தியானித்து வீசி வேண்டினால் அவர்கள் ஏழு நாட்களில் வந்து பார்ப்பார்களாம். இது போன்ற உப்பு பற்றி இன்னும் பல நிகழ்ச்சிகளை கூறியது நினைவில் இருக்கிறது. தமிழுக்காக தனித்தமிழ் விளங்க வேண்டும் என்பதற்காக மறைமலை அடிகள் போன்றும் அவரது மகள் போன்றும் தனித்தமிழ் எழுத வேண்டும் என்றும் மறவாத பற்றுள்ளவர். தமிழ் ஆசிரியர்களுக்கு ஒரு மிகுந்த மதிப்பையும் சம்பளத்தையும் பள்ளிகளையும் கல்லூரிகளையும் வழங்க வேண்டும் என்று போராடி பெற்று தந்தவர்.

அன்றைய காமராஜருக்கும் இவருக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. நான் வீதி தோறும் ஊர் தோறும் பள்ளிகள் நிறுவ வேண்டும் என்பதிலும் பள்ளிகளில் மாணவர்களை படிக்க வைக்க வேண்டும் என்பதிலும் பள்ளிக்கு நண்பர்களை எப்படி அழைக்க வேண்டும் என்பதற்காக மதிய உணவையும் ஏற்படுத்தியதும் 39000 பள்ளிக்கூடங்கள் காமராஜர் காலத்தில் இவர் முயற்சியால் பல கிராமங்களில் பள்ளி அறிவு வளர்ந்தது மட்டுமல்ல பேரூரில் தனிதமிழ் பல்கலைக்கழகம் அமைத்து பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கிய பெரும் பெருமை இவருக்கு உண்டு பெரும்பங்கு இவருக்கு உண்டு. இன்றும் அவரது பெருமை மிகப் பேசப்படுகிறது. இரண்டாவது தகவல் என்பது அவரது யுத்தத்தாள் காணப்படும் 'தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலர் தோன்றலின் தோன்றாமை நன்று' இந்த குரலுக்கு ஏற்ப தான் பிறந்து தன்னால் தமிழ்நாட்டில் தனி தேவையை நிறைவேற்றி செல்ல வேண்டும் என்பதற்காக உலகில் எவ்வளவோ மனிதர்கள் பிறக்கிறோம் அவர்கள் எல்லாம் அவர்

காலத்துக்குப் பிறகு மறைந்து விடுகிறது அதைத்தான் திருவள்ளுவர் தக்கார் தகவல் என்பது அவர் யுத்தத்தாள் காணப்படும் அவரது புகழ் எப்படி இருக்கும் 2000 ஆண்டுகளுக்கும் முன் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் எப்படி இருக்கிறது? சங்ககாலத்தில் தமிழில் எழுதிய ஐம்பெரும் காப்பியங்கள் எப்படி உள்ளன ராமாயணத்தை இயற்றிய கம்பரின் புகழும் அதற்குப் பிறகு தோன்றிய புராணர்கள் ஆற்றிய பெரும் பங்கும் பாரதியார் சொல்லுவது போல கம்பரை போல் வள்ளுவரைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாவரும் பிறந்ததே இல்லை உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்பதைப் பற்றி எல்லாம் அடிக்கடி மக்களுக்கு எடுத்துரைத்து தமிழ் புகழை வளர்த்தார்.

பெண் கல்வி வேண்டும் என்பதில் மிகுந்த பற்றுள்ளவர் பெண்களையும் கல்லூரியில் சேர்த்து அரும்பெரும் செல்வங்கள் வீட்டில் பெண் பிறந்தால்தான் ஒரு நன்செய் நிலத்திற்கு சமம் என்று வாணிதாசன் கூறுவதே இவர் எடுத்துக்காட்டாக விளக்கினார். தன் மூச்சு உள்ளவரை தமிழ் இருக்க வேண்டும் தமிழ் மக்கள் வாழ வேண்டும் பழம் பெறும் கதைகளைக் கூற வேண்டும் என்பதைப் பற்றிக் கூறிய நிகழ்ச்சிகள் என் நெஞ்சில் இருக்கிறது. அடிகளார் புதுக்கோட்டை வந்திருந்த போது ஒரு உரையினை நான் கேட்கப் பெற்றேன் அன்று மகாபாரதத்தை பற்றி மிகுந்த அழகாக மகாபாரதம் கம்பராமாயணமும் இரண்டு காவியங்களும் நம் தமிழகத்திற்கு கிடைத்த மிகப் பெரும் சொத்து என்பார் மகாபாரதத்தை கேட்டது இன்னும்என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது அதைப்பற்றி நான் கூற ஆசைப்படுகிறேன்.

இரண்டாவது பகுதியாக நான் உங்களிடம் பேச ஆசைப்படுவது திலகவதியார் ஆதீனத்தில் புதுக்கோட்டையில் ஒரு முறை மகாபாரதத்தைப் பற்றி பேசினார். கர்ணனுக்கும் கிருஷ்ணருக்கும் ஒரு விவாதம் கடைசியில்நடந்த போது கர்ணன் கிருஷ்ணரை கேட்கிறார் மகாபாரதத்தில் கர்ணன் கிருஷ்ணரை கேட்ட பகுதி அவருக்கு மிகப் பிடித்த பகுதி என்றார். அதைப் பற்றி பேசியது எங்களுக்கெல்லாம் ஒரு அறிவுரையை வழங்கியது. உலகிற்கு கீழே வாழ்பவர் ஆயிரம் கோடி

அதற்காக நீ உன் வாழ்க்கையை நினைத்து களங்கப்படுத்தக்கூடாது என்ற கருத்துக்காக இந்த கதையை சொன்னார்.

கர்ணன் கேட்கிறான் என் தாயார் நான் பிறந்த நேரத்தில் என்னை ஆற்றில் விட்டு விட்டாரே. முறை தவறி பிறந்த குழந்தை என்றார்கள். இது என்னுடைய தவறா. துர்வாசர் கொடுத்த வரம். இது போன்ற ஒரு வரத்தை கொடுத்து விட்டு தவறாக பயன்படுத்தியது அவர்கள் செய்த குற்றம். அதை விட்டு அந்தப் பழியை என் மேல் போட்டுவிட்டார்கள். இரண்டாவதாக ஆசிரியர் என்பவர் எல்லோருக்கும் கல்வி கற்றுத் தர வேண்டும் ஆனால் துரோணர் என்ன செய்தார். எனக்கு கல்வியை கற்றுத்தர மாட்டேன் என்று விட்டார். அது என்னுடைய தவறா. கல்வி எல்லோருக்கும் போய் சேர வேண்டும் என்பது உலக நீதி இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டுவதாக கூறினார். அதேபோல் தான் பரசுராமரும் எல்லா கல்வியும் கற்றுக் கொடுத்து விட்டுபிறகு எல்லாவற்றையும் தெரிந்தவர் அவருக்கு சாபம் கொடுத்தாரே இது கர்ணனுடைய தவறா. ஒரு ஆசிரியர் இவ்வாறு செய்திருக்கலாமா அடுத்த நிகழ்ச்சியாக ஒரு பசு தற்செயலாக என் அம்பு மூலம் பட்டு இறந்தது. அதற்கு அந்த உரிமையாளர் தவறாக என்னை சபித்தாரே அது எனக்கு தேவைதானா.

திரௌபதியின் சுயம்வரத்திலேயே நான் தேரோட்டியின் மகன் என்பதற்காக எவ்வளவு அவமானப்படுத்தப்பட்டேன் அதை நினைத்துப் பாருங்கள் குந்தி கூட இறுதியாக மற்ற மகன்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தானே என்னை தேடி வந்தார். இப்படி சுற்றி இருப்பவர்கள் அனைவரும் வஞ்சிக்கப்பட்டபோது துரியோதனின் அன்பு மூலமாக எனக்கு எல்லாம் கிடைத்தது. ஆகையால் அவர் பக்கம் நான்நிற்பது எப்படி தவறாகும் எனக் கேட்டார். கிருஷ்ணர் திகைத்துப் போனார். அப்பொழுதும் அவன் பதில் சொல்கிறான் கர்ணா நீயாவது பரவாயில்லை ஆனால் நான் ஒரு சிறையில் பிறந்தேன் என் பிறப்புக்கு முன்பே மரணம் காத்திருந்தது. அதை எண்ணிப்பார் நான் பிறந்தஇரவு அன்று பெற்றோர்களிடமிருந்து நானும் பிரிக்கப்பட்டேன். சிறு வயதில் இருந்து வாள் ரதங்கள் குதிரைகள் இரைச்சல்களை கேட்டிருப்பாய் நானோ மாட்டு கொட்டாயில் வைக்கோல் இடையே வளர்ந்தேன். நடக்க

ஆரம்பிக்கும் முன்னே என்னை கொல்ல பல சதிகள் நடந்தது. நல்ல கல்வி இல்லை, ராணுவ பயிற்சி இல்லை. ஆனால் எல்லா பிரச்சனைகளுக்கும் நான் தான் காரணம் என்றார்கள்.

நீங்கள் எல்லாம் ஆசிரியர்கள் மதிக்கப்படுகிற பொழுது நான் எந்த கல்வியும் பெறவில்லை. நீங்கள் விரும்பிய பெண்ணை திருமணம் செய்து கொண்டீர்கள். ஆனால் நான் விரும்பிய பெண்ணே திருமணம் செய்யாமல் என்னை நேசித்த பெண்களை கொடியவர்களிடமிருந்து காப்பாற்றிய பெண்களை தானே திருமணம் செய்து கொண்டேன். துரியோதனன் போரில் வெற்றி பெற்றால் உனக்கு நிறைய பொருள் கிடைக்கும். சேனை கௌரவங்கள் கிடைக்கும். ஆனால் பஞ்சபாண்டவர்களுடன் சேர்ந்து யுத்தம் செய்தால் எனக்கு என்ன கிடைக்கும். கர்ணன் தான் இந்த போருக்கு காரணம் என்ற ஒரே குற்றச்சாட்டு தானே கிடைக்கும்.

ஒவ்வொரு வாழ்க்கையிலும் இது போன்ற சவால்கள் உள்ளன என்று அவர் எடுத்துக்காட்டிய போது நாங்கள் மகிழ்ந்து போனோம். வாழ்க்கை எப்போதுமே இலகுவாகவும் எளிதாகவும் ஒருவருக்கு இருப்பதில்லை ஆனால் மனசாட்சி படி தர்மத்தின் வழி இருப்பதே சரியாகும். எத்தனை முறை நாம் ஏமாற்றப்பட்டாலும் எத்தனை முறை நாம் அவமானப்படுத்தப்பட்டாலும் எத்தனை முறை வீழ்ச்சி அடைந்தாலும் அந்த நேரத்தில் நாம் எப்படி மீண்டு வர வேண்டும் என்பதை வாழ்க்கையின் குறிக்கோள் ஆக வேண்டும். அதற்கு தான் கல்வி உதவுகிறது நம் வாழ்க்கையில் நடக்கும் தவறுகள் நம்மை தவறான பாதையில் போவதற்காக உரிமை கொடுக்கவில்லை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் வாழ்க்கை என்பது ஒரு பாதை சில நேரங்களில் காடு முரண்பாடு இருக்கலாம் அதை கடப்பது நம் காலணிகளால் அல்ல நாம் எடுத்து வைக்க வழிகளே என்ற அந்த வார்த்தைகள் இன்றும்

ஒளித்துக்கொண்டிருக்கிறது அனைத்தையும் கலந்தது தான் வாழ்க்கை. எல்லோரும் படியுங்கள் அன்போடு வீற்றிருக்க வேண்டும் எல்லோரும் இன்புற்று இருப்பது அடியார்கள் வேறு ஒன்றும் அறியாது

என்ற வார்த்தைகளை கூறி அந்த நிகழ்வை நிறைவு செய்தார் அதை நான் கேட்டுக் கொள்கின்ற போது நடந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை இது போன்ற பல நிகழ்ச்சிகள் அவரது வாழ்க்கையில் நடந்திருக்கின்றன பல எண்ணங்களில் நான் அவர்கள் கலந்து கொண்டிருந்தபோது மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இதைப் போன்ற ஒரு பெரியவர் காலத்தில் நாமெல்லாம் வாழ்ந்தோம் என்று பெருமை கொள்ளலாம்.

46

முனைவர் த. கலைவாணி
இணை பேராசிரியர் மற்றும் துணைத் தலைவர்
கணினி பொறியியல் துறை
டாக்டர் எஸ்.என்.எஸ் ராஜலக்ஷ்மி கலை அறிவியல் கல்லூரி,
சின்னவேடம்பட்டி, கோயம்புத்தூர் 641049

பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய கயிலை குருமணி மெய் கண்ட சந்தானம் பேராதீனம் 24ஆம் குரு மகா சந்நிதானங்கள் அனைவரிடம் மிகுந்த அன்பும் கருணையும் கொண்டவர் அத்தகைய சான்றோர் இடமும் நமது பேரூர் திருமடத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் அன்றாடம் பங்கு பெறுகின்ற ஒரு அரிய வாய்ப்பினை அடியேனுக்கு அந்த ஆடல் வல்லான் அம்பலவாணன் பெருமான் அருள் நல்கினார் என்பதை எண்ணும்போது நெஞ்சம் சிலிர்க்கின்றது.

அடியேன் முதன் முதலில் கல்வி கற்க துவங்கியது, நமது சாந்தலிங்கர் கல்வி நிறுவனத்தில் தான் என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நமது திருமடத்தின் ஞானாம்பிகை மெட்ரிகுலேஷன் பள்ளியில் துவக்கப்பள்ளி முதல் பயின்றேன். அதன் பின்பு கல்லூரி கல்வி, இளங்கலை கணினியியல்,மூன்றாண்டு காலம் பயின்றேன். அது சமயம், நமது திருமடத்தின் அன்றாட வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டு தேவாரம் திருவாசகம் மற்றும் பன்னிரு திருமுறைகளை பாடி எம்பெருமானை துதிக்கின்ற பேறு பெற்றேன். அப்போது அடிகள் பெருந்தகை எங்களுக்கெல்லாம் ஒரு ஆன்மீக வழிகாட்டியாக திகழ்ந்து எங்களை எப்போதும் நன்னெறி படுத்தினார்கள்.

எனது தந்தையார் திரு.த.தர்மராஜன்,தாயார் திருமதி.கமலம் தர்மராசன் அவர்களும் திருமடத்தின் பால் ஆழ்ந்த அன்பும் பற்றும் கொண்டவர்கள். எனது தந்தையார் நமது திருமடத்தின்

தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் உயர்நிலைப் பள்ளியில் 1967 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து 33 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி பணி நிறைவுக்கு பின்பும் நமது பேராதீனத்தின் அணுக்கத் தொடராக தொடர்கிறார்.

எனது திருமணத்துக்கு பின்பும் எனது கணவர் திரு.நா. திருநாவுக்கரசு பிரைட் பர்னிச்சர் துடியலூர் அவர்களும் எனது இரு மகன்களும் திரு.தி.கீர்த்திவாசன்,திரு.தி.விஜயராகவன் எப்போதும் நமது திருமடத்தின் பால் பற்று கொண்டு தவத்திரு.சாந்தலிங்க ராமசாமி அடிகளார் மீதும் தற்போதைய பேராதீனம் 25 ஆம் குரு மகா சந்நிதானங்கள் தவத்திரு.சாந்தலிங்க மருதாசல அடிகளார் மீதும் மிகுந்த மரியாதை அன்பும் கொண்டவர்கள் நாங்கள் வாய்ப்பு கிடைக்கும் போது எல்லாம் குடும்பத்தோடு நமது திருமடத்தின் வந்து சாந்தலிங்கனார் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றோம்.

எனவே பேரூர் தவத்திரு.சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் நெதர்லாந்து சூரிய தமிழ் தொலைக்காட்சியில் சொற்பொழிவாற்ற வாய்ப்பளித்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

47

மகாலட்சுமி கதிர்வேல் எம்சிஏ
563, பண்ணை தோட்டம், எல்லப்பாளையம்
பொகலூர்(வழி), அன்னூர்.

'தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் ஆன்மீகத்திற்கும் நாட்டிற்கும் செலுத்தும் மரியாதையை பறைசாற்று வண்ணமாக ஒவ்வொரு ஒவ்வொரு நிகழ்வுகளும் அமைந்து உள்ளதைப் பார்க்கலாம்.

இளம் கலை கணினி அறிவியல் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அடிகளாரை தினமும் காணும் பாக்கியம் எனக்கு கிடைத்தது.

'நகை தவழ் முகம் நலன் பல தரும்'என்பதற்கேற்ப எப்பொழுதும் புன்சிரிப்புடன் இருப்பார். நம்மைப் பார்த்ததும் அவர் முகத்தில் ஏற்படும் மலர்ச்சி நமக்கு உற்சாகத்தையும் மனமகிழ்ச்சியையும் அளிப்பதாக இருக்கும்.

தமிழுக்கும் ஆன்மீகத்திற்கும் வாழ்நாள் முழுவதும் அரும்பணி ஆற்றிய பெருமை நமது அடிகளார் அவர்களை சாரும். தமிழில் வழிபாடும் தமிழ் மொழி வாயிலாக குடமுழுக்கு நிகழ்ச்சிக்கும் அர்ச்சனைகளையும் வழிபாடுகளும் தொடங்கி இன்று உலகளாவிய நிலையில் தமிழ் மொழியை உயிரூட்டும் கொள்ளச் செய்திருக்கிறது இதனால் அனைத்து சாமானிய மக்களும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட வழி வகை செய்கிறது.

இப்பணி தொடர உரிய தகுதி மற்றும் விருப்பம் உள்ளவர்களை நன்கு பயிற்சி அளித்தே மணிவாசகர் பணி மன்றம் மூலம் தமது சேவையை தொடரச் செய்தது அடிகளாரின் மாபெரும் வெற்றிப் பயணம் ஆகும். வெளிநாடுகளில் வசிக்கும் நமது திருமடத்துடன்

தொடர்புடைய ஏராளமான அன்பர்கள் நன்கு தமிழையும் ஆன்மீகத்தையும் வெளிநாடுகளில் பராமரித்து வருவது அடிகளார் அவர்களின் வழி நடத்தவே ஆகும்.

தமிழ் ஆன்மீக பணிகளோடு உடல் உழைப்பும் தேவை என்பதற்கு இணங்க நமது திருமடத்தில் உள்ள தோப்பில் எளிய சிறு சிறு விவசாய வேலைகள் செய்வார். அனைத்து நாட்டு நடப்புகள் பற்றிய விபரங்களை தெளிவாக துல்லியமாக தெரிந்து வைத்திருப்பார்.

உடலுக்குத் தொல்லை தராத எளிய உணவு வகைகளை உட்கொள்வதை பின்பற்றியதோடு உணவு வேளையின் போது தம்மை காண வரும் அடியார்களை தம்மோடு உணவு அருந்த செய்து தமிழ் பண்பாடாம் விருந்தோம்பலை பின்பற்றி வந்தார். நண்பர்கள் எந்த நேரம் வந்தாலும் சுக்குநீர் கொடுத்து உபசரிப்பார். வீடு சென்று சேர்ந்ததும் சுக்குநீரின் சுவை நாவில் இருக்கும்.

நான் முதுகலை தேர்வுகள் எழுதி முடித்தவுடன் அடுத்த நாள் அப்பாவிற்கு தொலைபேசியில் கல்லூரியில் நாளை மகாலட்சுமியை வந்து என்னை சந்திக்க வரச்சொல் என்று அழைப்பு வந்ததாக கூறினார். நேரில் சென்றேன் நாளையிலிருந்து கணிப்பொறி துறையில் விரிவுரையாளராகப் பணியாற்று என்றார். நான் சாமி நீங்கள் கூறி எப்படி மறுப்பது எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை வருகிறேன் என்றேன்.

எனக்கே தெரியாத எனது திறமைகளை வெளிக்கொணர்ந்தார். ஆம் இரண்டரை வருடங்கள் விரிவுரையாளர் பணியில் பெருமையாக பணியாற்றினேன் எமது பாடங்களில் மாணவர்கள் 100% தேர்ச்சி பெற்றனர்.

சுயநிதி பிரிவில் கணிப்பொறித் துறை இயங்கி வந்தது. துறையின் முன்னேற்றங்களுக்குத் தேவையான துறையைச் சார்ந்த அனைவரின் எண்ணங்களையும் நன்கு செவிமடுப்பார். தேவையானதை பரிசீலிக்க உதவுவார். அனாவசிய ஆடம்பரங்களை தவிர்க்க உரைப்பார். மாணவர்களின் ஒழுக்கம் கட்டுப்பாடு ஆன்மீகத்திற்கும் முக்கியத்துவம் அளிக்குமாறு கூறுவார்.

நிறைய அனுபவங்கள், நிறைய பேசலாம் நிமிடங்கள் நாட்கள் போதாது... ஆம்.

அடிகளார் அவர்கள் கோவை மருத்துவமனையில் தங்கி சிகிச்சையில் இருந்தார் என்று கேள்விப்பட்டேன். சாமியை பார்க்க வேண்டும் என்னும் பேராவலுடன் அவருக்கு நம்மை அடையாளம் தெரிகிறதோ இல்லையோ என்று ஐயத்துடன் அவரின் அறைக்குள் நானும் எனது கணவரும் சென்றோம்.

அதே அழகிய புன்னகை தவழும். முகத்துடன் எனது கணவரின் தொழிலை நினைவில் வைத்து எத்தனை கதிர்கள் வைத்து நூற்பாலையை இயக்கிக் கொண்டு இருக்கிறீர்கள் என்றார். ஆச்சரியம் அடைந்தோம்.

பின் என்னிடம் நாளை மறுநாள் முதலி பாளையத்தில் மருத்துவமனை பூமி பூஜை செய்யப்பட உள்ளது. நீங்கள் பக்கத்தில் இருப்போர் மற்றும் தொழிலாளிகளக்கு விரைவில் 'சாமி மருத்துவமனை அமைத்து எளிய முறையில் மருத்துவ சேவையை மலிவாக அனைவருக்கும் வந்து சேர வைப்பார் என்று சொல் என்றார்"

உடல்நலம் முடியாத பொழுதிலும் ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்வதையே சிந்தித்து கண்டு இருப்பதை உணர்ந்து கண்கள் கலங்கி உள்ளம் தழுதழுத்தது

அடிகளாரின் கனவு மெய்ப்பட்டு இன்று அவரை பூர்வீக கிராமமான முதலிபாளையத்தில் 'பேரூர் அடிகளார் மருத்துவமனை இன்று கம்பீரமாக சேவை மனப்பான்மையாக நன்கு இயங்கிக் கொண்டிருக்கிறது'

மருத்துவமனை திறப்பு விழாவிற்கு சென்றிருந்த பொழுது அடிகளாரின் பல நாள்கள் நினைவுகளை ஒவ்வொரு இடத்திலும் உணர முடிந்தது.

இவை அனைத்தையும் மெய்ப்பட தனது பூர்வீக நிலத்தை மருத்துவமனைக்கு வழங்கி அடிகளாரின் எண்ணங்களுக்கு

உயிரரோட்டம்வழங்கிக் கொண்டிருக்கும், 'கயிலை குருமணி சீர் வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார்' அவர்களின் சேவையும் நாம் இவ்விடத்தில் பாராட்டி வணங்காமல் இருக்க முடியாது

அடிகளார் அவர்கள் தம் வாழ்வின் கடைசி நாட்களில் அவருடைய பொறுப்புகளை அப்போதைய இளைய பட்டம் தவத்திரு வருதாசல அடிகளார் அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டு, இயற்கையோடு ஒன்றிய சூழ்நிலையில் சாடி வயல் பகுதியில் 'திரு நெல்லிக்கா' எனும் ஆசிரமம் எளிமையாக அமைத்து தங்கி சிவ பூஜைகள் செய்து அப்பகுதி மக்களையும் பக்தி மார்க்கத்தில் ஈடுபட செய்தார்.

தமிழையும் ஆன்மீகத்தையும் இரு கண்களாக பாவித்து வளர்ச்சி அடைய செய்த அடிகளார் அவர்களின் வழியை பின்பற்றி தமிழையும் ஆன்மிகத்தையும் வளர்ச்சி அடையச் செய்வது நமது தலையாய கடமையாகும்.

48

முனைவர் க. தங்கவேல்,

தலைவர் தமிழ்நாடு தமிழ்ச் சங்கம் திருப்பூர்

திருப்பூர் மாவட்டம்

பேரூர் ஆதீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் நூற்றாண்டு விழா கட்டுரை தலைப்பு ஞான தந்தை சாந்தலிங்க ராமசாமி அடிகள் என்பவர் கோயம்புத்தூர் மாநகரில் ஆற்றின் கரையில் கீழை சிதம்பரம் என்று அழைக்கப்படும் நான் நூறு ஆண்டு பழமையான திருக்கைலாய மரபு மெய் வந்தார் வழிப்படி பேரூர் ஆதீனத்தில் குரு முதல்வராக இருந்த உதகை ஆலமரச் செல்வத் திருமடத்தில் ஆறாவது குரு மகா சன்னிதானமாகத் திகழ்ந்தார். கொங்கு நாட்டின் சமய மரபுக்காக, சமுதாய வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் இவர் பெரும் தொண்டாட்டினார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் ஆட்சி குழு உறுப்பினராக 1972 ஆண்டு முதல் 1978 வரை இவர் பணியாற்றினார். அப்பொழுது தமிழ் மொழி வாயிலாக அனைத்து அலுவல்களும் நடைபெற வேண்டும் என்று பேர் ஆர்வம் கொண்டார். எனவே கல்லூரி படிப்புகள் முழுவதும் தமிழ் வழியில் இருந்தால் தமிழ் மொழி வாயிலாக படிக்கும் மாணவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். என்று நினைத்த இவர் தமிழ் கல்லூரியில் இளங்கலை பாடத்திட்டத்தை கொண்டு வந்து, தமிழ் கல்லூரிகளை, கலைக் கல்லூரிக்கு இணையாக உயர்த்தினார். 1953 ஆம் ஆண்டு பல்வேறு தடைகளுக்கு இடையில் வெள்ளக்கிணறு வெ.சி. சுப்பையா கவுண்டர், கோவைக்கிழார், ஆகிய சான்றோர்களின் ஒத்துழைப்போடு பேரூர் பட்டி பெருமான் திருக்கோயிலில் தமிழ் மலர் அர்ச்சனை வழிபாட்டை தொடங்கினார். அதேசமயம் ஆதீன தமிழ் கல்லூரியியை தோற்றுவித்தார்.

இன்று இக்கல்லூரி மூலம் படித்த ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் அரசு வேலைகளிலும், தனியார் துணையிலும், சீரும் சிறப்புமாக பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இதுவே ஞான தந்தை செய்த மிகப்பெரும் சாதனையாகும். அடுத்தாண்டாகிய 1954 ஆம் ஆண்டில், ஏன் கோவில்களில் தமிழ் வழிபாடுகளை, என்று கேள்வியுடன் குரு மகா சன்னிதானங்களை இணைத்துக் கொண்டு திருநெறிய ஒன்தீந்தமிழ் நெறி வழிபாட்டை மறுமலர்ச்சி அடையச் செய்த பெருந்தகையாளர். தமிழ் நெறி, வழிபாடுகள் அரசு அலுவலகங்களில் மட்டும் இருந்தால் தமிழ் வளராது எனவே எல்லா அலுவலகங்களிலும் இந்த தமிழ் நெறி வழிபாடு சென்று சேர வேண்டும் என்பதற்காக, தமது அலுவலக அடியார்களை அழைத்து வந்து அவர்களுக்கும் பயிற்சி வழங்கினார். அடிகள் பெருந்தகை மீட்டு எடுத்த தமிழ் வழிபாட்டு முறைகள் இன்று தமிழகம் மட்டுமல்லாது உலகம் முழுவதும் நடைபெற்று வருகின்றன. என்பதை நினைக்கும் போது இவர் ஒரு ஞானத் தந்தை என்று நமக்கு நினைக்கத் தோன்றுகிறது.

அதுபோல அனைவரும் அர்ச்சகர் ஆகலாம், என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியவுடன். அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சென்று அனைவரும் அர்ச்சகர் என்ற திட்டத்திற்கு ஒரு குழு அமைத்து இன்று ஆறு இடங்களில் அரசு அர்ச்சகர் பயிற்சி பள்ளி நடக்க பெரிதும் காரணமாக இருந்தவர் நமது ஞானத் தந்தை அவர்கள். மேலும் எப்போதெல்லாம் தமிழ் வழி கல்விக் கும், தமிழ் வழிபாட்டு உரிமைகளுக்கும், தடை வருகிறதோ அப்பொழுது எல்லாம் முன்னின்று அவற்றை தகர்த்த பெருமையாளர் நமது ஞானத் தந்தை சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள். ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் கருவறை புகுந்து வழிபாடுகள் செய்ய வேண்டும், என்ற நோக்கில் 30 ஆண்டுகளாக பெண்களைக் கொண்டு வேள்வி வழிபாடுகளைச் செய்வதோடு, பெண்களுக்கு பயிற்சிகளை வழங்கினார். இவருடைய வழிகாட்டலின் படி தான் ஓம் சக்தி கோவிலில் பெண்களுக்கு வழி படும் உரிமையை பங்காரு அடிகளார் அவர்கள் வழங்கி உள்ளார். என்பதை நாம் நேரில் கண்டு கொண்டிருக்கிறோம்.

இது இவருக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மேலும் அடிகளார் அவர்கள் தீண்டாமை ஒழிப்பை தலையாய கடமையாகக் கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்கள் என்று கூறப்படுகின்ற மக்கள் வாழும் நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களுக்குச் சென்று அவர்களின் இல்லங்கள் தோறும் திருவிளக்கு ஏற்றி வழிபாடு செய்து அனைவரிடத்தும் சமத்துவம் மேலோங்க வழி வகைகளை செய்தார். சாதி மத வேறுபாடு இன்றி அனைவரும் சகோதரத்துடன் வாழ வேண்டும் என்ற நல்ல சமுதாய நோக்கும் அவரிடம் இருந்தது. இங்கு விவேகானந்தர் அமெரிக்க சிகாகோ நகரில் கூறிய சகோதர சகோதரிகளே என்ற வாக்கு மெய்ப்பிக்கப்படுகிறது. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சொல்லுக்கு பொருள் தந்துள்ளார். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கவிஞர் பூங்குன்றனார் கூறியதும் ஒப்பு நோக்கத்தக்கது.

தென் ஆப்பிரிக்கா யூனியன், சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, ஆகிய அயல் நாடுகளில் இருந்து 300-க்கும் மேற்பட்ட அன்பர்களை அழைத்து வந்து வாழ்வியல் அருளியல் பயிற்சிகளை வழங்கியவர் நமது ஞானத் தந்தை குருமகா சன்னிதான சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள். பேராசிரியராக பணியாற்றிய போது சென்னை பல்கலைக்கழக ஆட்சி குழு உறுப்பினராக பொறுப்பேற்றதும் முதல் வேலையாக நூற்றாண்டு காலமாக ஆங்கிலத்தில் அனுப்ப பெற்று வந்த ஆட்சி குழு கூட்ட அறிக்கை பலத்த எதிர்ப்புகளுக்கு இடையே தமிழிலும் அனுப்பி வைத்தார். பட்டைய படிப்புக்கு ஈடாக கருதப் பெற்ற தமிழ் வித்துவான் படிப்பை பி.லிட், என்று பட்டப்படிப்பாக முயற்சி எடுத்துக் கொண்டார் அதில் வெற்றியும் பெற்றார்.

அனுபவிக்க தமிழ் ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்கள் ஆகலாம் என்ற நிலையை உருவாக்க, பெரும் முயற்சி மேற்கொண்டார். அவர் செய்த முயற்சி இன்று தமிழகம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக பொறுப்பேற்றுக்கொண்டு சிறப்பாக பணியை செய்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் ஆசிரியர்களுக்கு பெருமையை சேர்த்த ஞானத்தந்தை என்றென்றும் தமிழ் ஆசிரியர்கள் மறக்க மாட்டோம். குரு மகா சன்னிதானம் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் மனித நேயம் மிக்கவர் மக்களிடத்திலே அன்பும் பண்பும் கொண்டவர். இவரை நாடி வந்தவர்களை உணவு உண்ண வைத்து அனுப்புவது தான் இவரது முதல் கடமை. வடலூர் ராமலிங்க அடிகளார் சொல்வார் வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்ற வாக்கியத்திற்கு இணங்க நமது ஞானத்தந்தை அவர்கள் இருந்து வந்தார். மற்றும் இவர் வளர்ச்சிக்கும், மத நல்லிணக்கத்திற்கும், மொழி வளர்ச்சிக்கும், மனித ஒழுக்கத்திற்கும், ஆன்மீக வழிபாட்டிற்கும், பகுத்தறிவு சிந்தனைக்கும், வழிகாட்டியாக இருந்து மக்களை இந்த பூமியில் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று மக்களுக்காக உழைத்த மகான்; பொது நலமாக வாழ்ந்த மகான்; கருணை உள்ளம் கொண்ட மகான்; தன்னலம் கருதாத மகான்; ஏழை எளிய மக்களுக்கு ஓய்வின்றி உழைத்த மகான், எல்லோரும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் வாழவைத்த மகான். இவர் தான் நமது ஞானத்தந்தை என்று போற்றப்படும் பேரூர் ஆதீன குரு மகா சன்னிதான சாந்தலிங்க இராமசாமி அடிகளார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும், தெய்வத்துள் வைக்கப்படும் என்று திருவள்ளுவரின் வாக்குக்கு இணங்க வாழ்ந்த மகான். இவர் வழி நின்று நாமும் வாழ்வோமாக. வாழ்க இவர் தமிழ் தொண்டு. வளர்க இவர் புகழ். என்றென்றும் இவர் வழியில்,

49

திரு. வீ. ஞான சௌந்தரம்

சின்ன தம்பி கவுண்டர் விதி
கள்ளிப்பாளையம் ஆலந்துறை அஞ்சல்
கோவை – 641 101

மாதா பிதா குரு தெய்வம் என்று பெரியவர்கள் காட்டிக் கொடுத்த வழிகள் செல்வதென்றால் தெய்வத்தொண்டு பெரிதென வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டிய அடிகளார். அவர்களைப் பெற்றெடுத்து இந்த பூமிக்கு கொடுத்த அந்தப் புண்ணியவத்தியான தாய் திருமதி கப்பினை அம்மாள் அவர்களை வணங்குகிறேன்.

பெரியசாமி அவர்களால் எத்தனை ஆலயங்கள் எத்தனை கல்விச்சாலைகள். தான் பிறந்து வாழ்ந்த ஊரில் ஏழை எளியோர் பிணி தீர்க்க வேண்டி அடிகளார் மருத்துவமனை ஒன்றை உருவாக்கி அதை மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டுள்ளது பெயர் சொல்லும் பிள்ளையை பெற்றெடுத்த அந்த தர்மாவான் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்.

வணக்கத்திற்குரிய பெரியசாமி அவர்கள் தான் குருவா ஏற்றுக்கொண்ட குருமார்கள் இறைவன் திருவடி அடைந்த பின்– அவர்களுக்கு வரக்கூடிய திதி நட்சத்திரங்கள் வரும்போது அவர்களுக்கு செய்ய வேண்டிய பூஜைகள் அன்னதானம் இது எல்லாம் தவறாமல் செய்து வருபவர்களுக்கு ராஜ உபச்சார உணவுகளோடு குறைவில்லாமல் சாப்பிட வைப்பார். அது அவருக்கு மன நிறைவான மகிழ்ச்சி. அந்த செயல்பாடு மேலும் மேலும் வளர வேண்டுகிறேன்.

இந்த அற்புதமான நிகழ்வில் பெரியசாமிகள் அவருக்கு துணை நின்று அருளாளர்கள் எல்லாம் நமக்குத் தேவையான நித்திய

தர்மங்கள் ஒழுக்கம் இறைவழிபாடு போன்ற நல்ல செயல்களை வழிகாட்டவில்லை என்றால் மனித சமுதாயம் வழி தெரியாமல் வேறு பாதையில் போயிருக்கும் அதிலிருந்து நம்மையெல்லாம் நல்வழியில் வாழ வைத்த புண்ணியம் பெரியசாமியைச் சாரும்.

கிராமங்களில் நகரங்களில் மற்றும் வெளிநாடுகளில் புதிய கோயில்கள் உருவாகி, வழிபாடுகள் நடக்கின்றன. எத்தனை கோவில்களில், வீடுகளில் விளக்கு பூஜைகள், திருத்தேர்கள் பராமரிப்பு, எத்தனை சிதிலமான கோயில்கள் இன்று பராமரித்து வர்ணங்கள் பூசி அழகுற நிற்கின்றது. இன்னும் இதுபோல பல தெய்வ காரியங்கள் செய்ததினால் தமிழ்நாடு அரசு சாமி அவர்களுக்கு இந்து அறநிலை துறை உயர்மட்ட குழு ஆலோசனை உறுப்பினராக பொறுப்பு கொடுத்து செய்து பெரும் பணிகளை கண்டு அழகு பார்க்கிறது.

சென்ற நூற்றாண்டு 1972 ஆம் வருட காலகட்டத்தில் வணக்கத்திற்கு உரிய கௌமார மடம் தவத்திரு சுந்தர சுவாமிகள் மற்றும் பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் காரமடை திரு அரங்கநாதன் அவர்கள் எல்லோரும் இணைந்து தெய்வீக பேரவையை உருவாக்கி அதன் மூலமாக தெய்வீக பணிகள் நல்ல காரியங்களுக்கு உதவுதல் குறிப்பாக சோமனூர் வாழை தோட்டத்து அய்யன் கோயில் 12 நாள் என எண்ணுகின்றேன் நாங்கள் 100 பேருக்கு மேல் கோயில் பூசாரிகளுக்கு அபிஷேக பூஜை அலங்காரம், செய்வது,வீடு புண்ணிய அர்ச்சனை, கோயில் கும்பாபிஷேகம், ஓதுவார்களுக்கு பாடல்கள் பாடும் முறை என நிறைய முறைப்படுத்தி பயிற்சி கொடுத்தார்கள் மூன்று வேளையும் உணவு, டீ, காப்பி, தங்குமிடம், தேவையான அளவு தண்ணீர் வசதி, இப்படி குறை என்பதே இல்லாத அளவுக்கு சாமிகள் வேண்டுகோளுக்கிணங்க அந்த காலகட்டத்தில் வாழை தோட்டத்து அய்யன் கோயில் அறங்காவலர் வணக்கத்திற்குரிய திரு சொ கு பழனிச்சாமி அவர்கள் என எண்ணுகின்றேன் அவர் ஓய்வின்றி எங்களை கவனித்துக் கொண்டார். அந்தப் 12 நாள் நிகழ்ச்சியில் முறைப்படி கற்று தேர்ந்து பிற்காலத்தில் கோயில்கள் வீடுகளில் வாய்ப்பு கொடுத்தோருக்கு செந்தமிழ்

நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்த பாயுது காதினிலே என்று பாடி8. இனிமையான தமிழில் தேவாரம் திருவாசகம் திருப்புகழ் திருஅருட்பா அபிராமி அந்தாதி மீனாட்சி அம்மன் கலிவெண்பா கந்தர் அலங்காரம் கந்தர் அனுபூதி விநாயகர் அகவை விநாயகர் கவசம் கந்த சஷ்டி கவசம் 4 திவ்ய பிரபந்தம் இன்னும் பல பாடல்கள் பாடி பூஜை செய்து அந்த இடம் தேவர்கள் குடிக்கொண்டு அருளும்படி பூஜை செய்தவர்களும் பேரும் புகழும் பெருவாழ்வு கொண்டு பயனடைந்தவர்கள் அடைந்தார்கள் இதுபோல் சுவாமிகள் உருவாக்கியது இறவாமல் பிறவாமல் எளி ஏனையால் சத்குருவாகி பிறவாகி திறமான போற்றுதலுக்கரியது.

வணக்கத்துக்கு உரிய சின்னச்சாமி அவர்களுக்கு பணிவான வேண்டுகோள் மீண்டும் தெய்வீக பேரவை செயல்பட வேண்டும் நொய்யலாறு புனிதம் பெற வேண்டும் பிளாஸ்டிக் களிலிருந்து மண்ணைக் காப்பாற்ற வேண்டும் மதுவிலிருந்து மக்களை காப்பாற்ற வேண்டும் பேரூர் பிரசசவாபுளிய மரத்தை பாதுகாத்து அந்த பிறவா புளியை உலகறிய செய்ய வேண்டும் எதையெல்லாம் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என் கருத்து பிழை இருப்பின் பொறுக்க வேண்டும்.

சுமார் நூற்று 15 வருடங்களுக்கு மேல் இருக்கும். கொடுமுடி மகுடேஸ்வரர் வீரநாராயண பெருமாள் கோயிலில் தெய்வீக பேரவை மூலமாக ஒரு வாரம் என எண்ணுகின்றேன். பூசாரிகள் பயிற்சி முகாம் நடைபெற்றது பலர் கலந்து கொண்டனர் அங்கும் அத்தியாவசிய தேவைகள் ஏதும் குறையவில்லாமல் கவனித்தார்கள். அங்கு தினமும் முக்கிய மாணவர்கள் கலந்து கொண்டனர். வணக்கத்திற்குரிய தவத்திரு குன்றக்குடி அடிகளார், வணக்கத்திற்குரிய தவத்திரு சுந்தர சாமிகள், வணக்கத்திற்குரிய தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் இன்று பலர் கலந்து கொண்டு வழங்கிய அறிவுரைகளும் அருள் உறைகளும் என்றுமே கண் முன்னே நீங்காத நினைவுகள் காதில் ரீங்காரமிடும் வார்த்தைகள் மனதை விட்டு அகலாத எண்ணங்கள்.

ஆலந்துறை கள்ளிபாளையத்தில் நாங்கள் பூஜை செய்யும் ஸ்ரீ விநாயகா சிறு பழனி ஆண்டவர் சினிமா மாரியம்மன் ஆகிய கோவில்கள் வணக்கத்துக்குரிய பெரியசாமி அவர்கள் தலைமையில் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு பராமரித்து பணிகள் நடந்தது. பழனி ஆண்டவர் மேடை கட்டி மேடைமேல் இருந்தது சாமிகள் என்னை பார்த்து ஞானசௌந்தரம் முருகனை இப்படியே விடவா என்றார் நான் சாமி இந்த மேடையை வேண்டாங்க கருங்கல் இன்னும் பல பீடம் செஞ்சுக்கலாம் என்று அரை அடி உயரம் இடம் போதுமா என்றார. இல்லைங்க சாமி ஒரு அடி பீடம் வேணும் என்றேன் அதை ஊர் பெரியவர்கள் உங்களுக்கும் ஏத்திட்டாங்க சரி ரெண்டு நாள்ல மடத்துக்கு வாங்க என்றால் மறுநாள் நாங்கள் சென்றோம் என்ன சொல்வாரோ என பயத்தோடு போனோம் சாமி சந்தித்து விபூதி வாங்கிட்டு சிறிது நேரத்தில் ஒருவர் வந்தார்.இவரை நம்ம மடத்தில் இருந்து சிலைகள் செய்கிறவரை எங்களிடம் அறிமுகம் செய்தார். அவர் பெயர்வித்தியாசமான பெயர் அவரை பெயரை சொல்லி கூப்பிட்டு இவர் கள்ளிப்பாளையம் கோயில் பூசாரி அவன் எப்படி சொல்றாரோ அதே மாதிரி உங்களுக்கு ஆதார இடம் போட்டு கொடுக்கிறேன். பணம் எல்லாம் அளவா வாங்கு என்று சொன்னார். இரண்டு நாளில் அவர் வந்து பழனி ஆண்டவர் திருமேனி அளவில் எடுத்து நான் சொன்னபடியே செய்து கொடுத்ததால் திருப்பணிகள் முடிந்தது.

கும்பாபிஷேகம் நடைபெற்றது தீர்த்தம் அபிஷேகம் முடிந்து என்னை கூப்பிட்டு நீங்க சொன்னபடி பீடம் கல் உயரமாக உயரமாக இருந்ததால் முருகன் அழகா தெரியுது, பீடம் உயரம் கம்மி பண்ணி இருந்தா முருகன் அழகு பட்டிருக்காது என்று ஊர் பெரியவர்களும் என்னை பாராட்டினார். சிறியவனாகிய என்னை ஊர் பெரியவர்கள் முன்பு உயர்வாக பேசினார் பிறர் கருத்துக்கும் செவி சாய்க்கும் பண்பு அவருள் இருக்கும் மிகப்பெரிய பண்பாகும்.

நாங்கள் பதினெண் சித்தர்கள் முறையில், எல்லா சுபகாரியங்களும் செய்து கொடுப்போம் வேண்டிய ஒருவர் பெருமாள் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து கொடுங்கள் என்றார், நான்

இதுவரை பெருமாள் கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்ததில்லை, வேறு யாரையாவது வைத்து பண்ணுங்கள் என்றேன், அவர் உங்களுக்கு என்ன தெரியுமோ அதை செய்து கொடுங்கள் என்றார், பார்க்கலாம்,என்று சொல்லிவிட்டு மறுநாள் பேரூர் மடத்தில் பெரிய சாமியை சந்தித்து விஷயத்தை சொன்னேன்.

சாமி அவர்கள் ஏன் பயப்படுறீங்க நாலாயிர திவ்ய பிரபந்தம் படிச்சிருக்கீங்க இல்ல என்றால் படிச்சிருக்கேன் என்றேன் கூட திருப்பாவை கருட புராணம் எல்லாம் பாடலாம் என்றார் அவர் அறிவுரையை ஏற்று நண்பர்கள் உருமாண்டம் பாளையம் சேகர், செந்தில், சுந்தராபுரம், நந்தகுமார், கோவை புதூர் பாலு, ஒண்டிப்புத நாராயணசாமி, எங்கள் குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து மிகச் சிறப்பாக கும்பாபிஷேகத்தை முடித்துக் கொடுத்து எல்லோரிடமும் நல்ல பெயரும் வாங்கினோம்.

பெரியசாமி அவர்களை கடைசியாக சந்தித்தது

15 வருடங்களுக்கு முன் கல்லூரியில் இருக்கும் சுவடிகளை மாணவ மாணவிகளுக்கு படிப்பதற்கும் எழுதுவதற்கும் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தேன் அதில் ஒரு நாள் மாலை நான் வீட்டுக்கு புறப்பட்டேன். பெரியசாமி சாடி வயல் செல்ல அம்பாசிடர் கார் அமர சென்றார் என்னை பார்த்து விட்டு கூப்பிட்டு மாணவர்கள் பயிற்சி எடுப்பது பரவாயில்லையா என்று கேட்டார். நான், காலம் போதாது எங்க சாமி வருஷ கணக்கில் படிக்கோணும் என்றேன். எப்படியோ முடிந்தவரை சொல்லிக் கொடுங்க எல்லோரும் நல்லா பயிற்சி எடுத்து சுவடிகளைப் படிக்கட்டும் என்று கூறினார்.

வணக்கத்துக்கு உரிய தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள் சமாதி லிங்க பிரதிஷ்டை

ஸ்ரீ விளம்பி வருஷம் ஆவணி -15 -31. 8 2018 பஞ்சமி திதியும் அசுபதி நட்சத்திரமும் கூடிய வெள்ளிக்கிழமை ஸ்ரீ வைகுண்டம் -ஸ்ரீ வைகுண்டபதி புறப்பாடு- பெருவயல் ஸ்ரீ முருகப் பெருமான் புறப்பாடு ஆகியன ஒன்று சேர்ந்த நாளில் நண்பகல் 12 -15 மணிக்கு இறைவன் திருவடி அடைந்தார்கள்.

இந்த பஞ்ச பூத தலங்களில் உள்ள சிவசக்திகள் எல்லாம் ஒன்றாய் கூடி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி எங்கள் உள்ளத்தில் குடி புகுந்து ஒன்றாய் பலவாய் மீண்டும் ஒன்றாய் அமர்ந்து தான் வாழ்ந்த பேரூர் தவத்திரு சாந்தலிங்கர் மடத்திலேயே சமாதி நிலை கொண்டு வணங்குவோருக்கு அருள் புரிகின்றார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

இப்படிப்பட்ட மகான்கள் வாழ்ந்த காலங்களில் நாமும் வாழ்ந்து கொண்டிருந்தோம் அவர்களோடு பழகினோம் அவர்களோடு நாமும் அமர்ந்து உணவு சாப்பிட்டோம் அவர் சொல்லிய அறிவுரைகளும் பாடிய பாடல்களும் நாமும் கேட்டு மகிழ்ந்தோம் என்றெல்லாம் எண்ணும் பொழுது பெருமையாக உள்ளது.

சரணம் சரணம் சரணம் இந்நிகழ்ச்சியை கேட்ட பலர் பார்த்த பலர் அனைவரும் பெரியசாமிகள் அருள்பெற்று எல்லா நலன்களோடு வாழ்வாங்கு வாழ்க வாழ்க பல்லாண்டு.

50

உதயதாரா ரவிச்சந்திரன்

64, டெக்ஸ் பார்க், நேரு நகர் மேற்கு
கோயம்புத்தூர் - 641 014

பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் நூறாவது ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக அடிகளார் குறித்து, பேச விரும்புகிறேன்

கோவை மாவட்டம் அன்னூர் அருகே உள்ள முதலிபாளையம் பகுதியில் சிவ.- ராமசாமி அடிகளார்-கற்பிணி அம்மையார் தம்பதிக்கு மகனாக கடந்த 1925 ஆம் ஆண்டு பிறந்தவர் பேரூர் ஆதினமளாதிபதி தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார். தன்னுடைய 15 வது வயதில் திருமடப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். அவர் திருப்பணிகளோடு நின்று விடவில்லை இளைய பட்டம் ஆக இருந்தபோது பேரூர் மக்களின் முன்னேற்றத்திற்காகத் தமிழ்ப் பள்ளியை தொடங்கினார்.

அதை 1953இல் நடுநிலைப் பள்ளியாகவும், பின்பு மேல்நிலைப் பள்ளியாககவும் தரம் உயர்த்தப்பட்டது.

ஆறுமுக அடிகளார் தமிழ் பள்ளி, ஞானாம்பிகை பள்ளி ஆகியவற்றையும் தொடங்கினார்.

கொங்கு நாட்டிற்கு தமிழ் கல்லூரி வேண்டும் என்பதற்காக தமிழ் கல்லூரியையும் பேரூருக்கு கொண்டு வந்தார். கொங்கு நாட்டின் சமய சமுதாய வளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் இவர் பெரும் தொண்டாற்றினார். அப்பொழுதே சென்னை பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இவர் பணியாற்றினார். அப்பொழுதே தமிழ் மொழி வாயிலாகவே அனைத்து அலுவல்களும் நிகழ வேண்டும்

என்பதில் பேர் ஆர்வம் கொண்டு தமிழ் கல்லூரிகளில் இளங்கலை இலக்கியம் பாடத்தை கொண்டு வந்து தமிழ் கல்லூரிகளில் கலைக்கல்லூரிகளின் இணையான நிலைக்கு உயர்த்தினார்.

தமிழக கோவில்களில் தமிழில் திருக்குட நன்னீராட்டு விழா நடத்த பாடுபட்டவர் தமிழக அரசின்

'அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்'என்ற சட்டத்திற்கு ஆரம்பம் முதலே ஆதரவு அளித்து வந்தவர்.

சாந்தலிங்கர் மக்கள் உயரும் பொருட்டு கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அஅவிரோத உந்தியார், என்ற நூல்களை எழுதியுள்ளார். இவைமுறையே உயிர் கருணையையும், பக்தியையும், வைராக்கியத்தையும் சிவஞானத்தையும் உணர்த்துவன. பல மாநாடுகளில் பங்கேற்றுள்ள இவருக்கு சென்னை பல்கலைக்கழகம், முது முனைவர் பட்டம் வழங்கியுள்ளது,

கொங்குநாடு முழுவதும் சமய சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர், அருளாளர் பெருந்தகை அடிகளார் அவர்கள் அவர்களின் திருவடி படாத ஊர்களே கொங்கு நாட்டில் இல்லை எனலாம். சமயத்தையும் சமுதாயத்தையும் இரு கண்களாகக் கொண்டு அவர் ஆற்றிய பணிகள் பல பற்பல.

அவர் தம் அருட்பார்வையால் நலம் பெற்றோர் பலராவர். ஊர் என்னுடைய அன்னூர் அருகில் உள்ள செம்பநாயக்கன்பாளையம். நான் சிறுவயதில் இருக்கும் போது எங்கள் குலதெய்வமான பிள்ளை அப்பன் பாளையம் அருள்மிகு செல்வநாயகி அம்மன் கோவிலுக்கு அடிக்கடி ஆர்வத்துடன் வருவார் அப்பொழுது அவரை சந்திக்கும் வாய்ப்பும், அவரது அழகான அருளுரையை கேட்கும் வாய்ப்பும் எனக்கு கிடைத்துள்ளது.

அவரும் கௌமார மடாலயத்தை சேர்ந்த அருள்மிகு சுந்தர சாமி அடிகளார் சேர்ந்து பலமுறை அந்த கோவிலுக்கு வந்துள்ளனர். அந்தப் பகுதியில் இருக்கும் பல கோவில்களுக்கு தமிழில் குடமுழுக்கு விழாவினை

சிறப்புடன் நடத்திக் கொடுத்துள்ளனர். அந்த நினைவுகள் இன்றளவும் என் மனதில் பசுமையாக பதிந்துள்ளன. அவர் பிறந்த ஊரான முதலிப் பாளையத்தில் இப்பொழுது ஒரு மருத்துவமனை திறக்கப்பட்டு இலவசமாக மருத்துவம் பார்க்கின்றனர். அதனால் இன்றும் அப்பகுதி மக்கள் அவரை ஒரு தெய்வமாக நினைக்கின்றனர்.

தென் திருக்கடையூர் என்று அழைக்கப்படும் கோவில் பாளையத்தில் உள்ள கால காலேஸ்வரர் கோவிலில் பல ஆண்டுகளாக நின்று போயிருந்த திருக்குட நன்னீராட்டு விழா, அடிகளார் அவர்களின் கடும் முயற்சியால் மீண்டும் நடந்தது. அதுவும் தமிழ் மொழியில் நடத்திய பெருமை அடிகளாரையே சேரும்.

மேலும் தீண்டாமை ஒழிப்பில் மிகவும் பாடுபட்டவர். நூறு ஊர்களுக்கு மேல் நேரில் சென்று சமத்துவத்தை அறிமுகப்படுத்தினார் அடிகளார்.

பல வெளிநாட்டு மக்களுக்கு, பேரூர் தமிழ் கல்லூரியில் தமிழ் முறை வாழ்வியல் பயிற்சிகளான, தமிழ் முறைப்படி திருமணம் மற்றும் புதுமனை புகுவிழா போன்றவற்றை நடத்துவது பற்றி பயிற்சிகள் கொடுத்துள்ளார்.

மூதாதையர்களின் பழைய கொள்கைகள் மற்றும் நவீன காலத்தில் புதிய கொள்கைகளையும் இணைத்து சமத்துவத்தை நிலை நாட்டினார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மற்றும் தியாகி ஜீவானந்தம் போன்ற பலரின் கொள்கைகளையும் ஏற்று அவர்களுடன் இணக்கமாக இருந்தார்.

அடிகளார் மிகவும் எளிமையானவர் காவி, கதர் உடைகளையே உடுத்துவார்.

இறையருளோடு குருவருளும் பெற்று பல அடியார்களை உருவாக்கி வீரசைவ மரபை போற்றி வளர்த்த சாந்தலிங்கப் பெருமான் மாசி திங்கள் மகம் விண்மீன் கூடிய நிறைமதி நாளில் ஞான நிலை அடைந்து தம் வழிபடும் கூத்தப் பெருமாள் திருவடியில் கலந்தார்.

51

மா. நடராசன்
மேனாள் த.ஆ., தீத்திபாளையம் அ.நி.
4/110B, அன்பு நகர், பேரூர் வழி,
கோவை - 641 010

அன்புப் பெருந்தகையீர் வணக்கம்.

சாந்தலிங்கர் தாள்மலர் வாழ்க!

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூர் ஆதீனம் 24-ஆம் பட்டம் கயிலைக்குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை! சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவின் நாயகரை வணங்குகிறேன்.

தமிழையும், சைவத்தையும் இரு கண்களாகப் போற்றி வளர்ப்பதில் முனைந்து நின்றவர் நம் கயிலைப் புனிதர் சீர்வளர்சீர் இராமசாமி அடிகள். பருத்தியைப் பஞ்சாக்கி, பஞ்சை நூலாக்கி, நூலை ஆவி அம்துகிலாக்கும் ஊர் கோயம்புத்தூர். தென்னிந்தியாவின் மான்செஸ்டர் எனப் புகழ்பெற்ற ஊர். மேற்கு மலைச்சாரலில், நொய்யல் நதிக்கரையில் மேலைச்சிதம்பரம் எனப் போற்றப்படும் ஊர் பேரூர்.

"ஆரூர் அத்தா ஐயாற்றமுதே
பேரூர் இறைவா பட்டிப்பெருமான் பிறவா
நெறியானே
எனப் பாடல்பெற்ற ஊர்.

நம்அடிகள் மயிலம் கல்லூரியில் பயிலும்போதே நம் ஊரிலும்

தமிழ்க்கல்லூரி அமைத்திட வேண்டும் என்பதை மனதில் விதைத்திருந்தார் கோவைகிழார்.

திரு. R.K. சண்முகம் செட்டியார் போன்றவர்களை அணைத்து பேரூரில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி அமைத்தவர் ஆவார்.

தமிழ்க்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்று பட்டியப்பனார், வையாபுரி ஐயா, சென்னியப்பனார் ஐயா அவர்களை பேராசிரியர்களாகக் கொண்டு கல்லூரிகளை செயல்படுத்தினார் என்பதை நினைவுகூறுகிறேன்.

அடிகள் அவர்கள் பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழுவில் இடம்பெற்றிருந்தார். அச்சமயம் ஆங்கில மொழியில் நிகழ்வுகளை அச்சிட்டு வழங்கி வந்தனர். இதனை இனி தமிழிலும் நிகழ்வு முறைகளைத் தரவேண்டும் என்று வலியுறுத்தி "தமிழ்" மொழியில் வழங்கச் செய்தவர் நம் அடிகள் ஆவார்.

அன்றிருந்த வித்வான் பட்டயக் கல்வியை B.Lit., பட்டப் படிப்புக்குச் சமம் எனக் கூறி சாதித்து ஆணை வெளியிடச் செய்தவர் நம் அடிகள் ஆவார்.

அரசிடம், அடிகள் எந்தக் காலத்திலும் சோர்வு அடையாமல் போராட்ட குணம் கொண்ட தமிழ்ப் போராளியாய், சாதிப்பதில் வல்லவராய் விளங்கியவர் என்பதில் ஐயமில்லை.

அடிகள் பேச்சிலும், சிந்தனையிலும், செயலிலும் சத்தியம் இருக்கும். உண்மை வாய்மை உடையவராகத் திகழ்ந்தார். எந்த நிலையிலும் சமரசம் செய்து கொள்ளாமல் தன் செயலில் ஈடுபாடு கொண்டு வெற்றி பெற்றவர் ஆவார்.

கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது அறநிலையத்துறை சார்ந்த செயல்களில் பேரூர் ஆதீனத்தைக் கலந்து செயல்படுத்துங்கள் என்று கூறியுள்ளார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர் நம் அடிகளாவார்.

இன்றும் நம் பேரூர் ஆதீனத்தில், ஒன்பான் விழாக்களில் பெண்களே முன்னின்று வேள்வி வழிபாடுகளை நிகழ்த்துகின்றார்கள். இதற்கான அர்ச்சகர் பயிற்சிகளை ஆதீனத்திலே தங்கிப் பயின்று சான்றுகள் பெற்றுள்ளார்கள்.

எல்லாத் திருக்கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை வழிபாடு நடத்தவேண்டும் என்பதை முன்னெடுத்துச் சென்று செயல்படுத்தி தமிழுக்குப் பெருமை சேர்த்தவர் அடிகள் பெருந்தகையாவார்.

கோயில்களில் திருக்குட நன்னீராட்டு நிகழ்வுகளை தமிழ் முறைப்படி நடத்திட வித்திட்டவர் ஆவார்.

எங்கள் தீத்திபாளையம் கிராமத்தில் அருள்மிகு வேட்டைக்காரசாமி குலதெய்வக் கோயில் கட்டிட அடிக்கல் நாட்டி ஆலோசனை வழங்கி தமிழ்முறைப்படி திருக்குட நன்னீராட்டு விழா சிறப்புடன் நடத்தி சிறப்புச் செய்தார்.

கோவையைச் சார்ந்த அனைத்து கோயில் கல்வெட்டுகளில் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் திருப்பெயர் இருக்கும்.

வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயில், முத்துவாளியம்மன் கோயில், அன்னூர் மன்னீஸ்வரர் கோயில், அவினாசியப்பர் கோயில் தேரோட்டங்களை முன்னின்று செய்தவர் 24-ஆம் பட்டம் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார்.

தீத்திபாளையம் கிராமத்தின் மீது என்றும் நேசமும் பாசமுமுடையவர். த.சா.அ.உயர்நிலைப் பள்ளிக்கு நடந்து சென்று படிப்பார்கள். அவர்களுக்கு பூசை செய்த பொங்கல் பிரசாதம் வழங்கி பசியாறச் செய்து களைப்பைப் போக்கி, கல்வி அறிவு பெறச் செய்தவர் நம் அடிகள் என்பதைப் பதிவு செய்கிறேன். மருத்துவர்களை அழைத்து வந்து மருத்துவ சிகிச்சையும் வழங்கினார், திருவிளக்கு வழிபாடு நடத்த

கௌமாரச் செல்வி மரகதம் மற்றும் செயப்பிரகாசுவை அனுப்பி அருளாசி வழங்கினார்.

தொல்காப்பியர் சங்கமம்

5.9.1917ஆம் நாள் ஆசிரியர் தினம், வ.உ.சி. பிறந்த தினம், மகம் நாளன்று "தொல்காப்பியர் தமிழ்ச் சங்கத்தை" அமைத்து தொடங்கிவைத்து அருளாசி வழங்கினார். அதை மாதந்தோறும் முதல் ஞாயிறன்று கூடச் செய்து, பேராசிரியர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் உரையாற்றச் செய்து, தொல்காப்பியத்தை பாமரரும் அறிந்திடச் செய்தவர் அடிகளாவார்.

தொல்காப்பியர் சங்கம நிகழ்வுகளை அமெரிக்கா நியூ ஜெர்சி மலேசியா ஆகிய நாடுகளில் திரு.ந.சி.க.நீதி அவர்கள் ஒளி ஒலி வாயிலாகப் பரப்பி பெருமை சேர்க்கிறார் என்பதை இங்கு பதிவு செய்கிறேன்.

அடிகள் சமுதாயப் பணி

அடிகள் அடித்தட்டு மக்களிடமும், மலைவாழ் மக்களிடமும் பரிவும் பாசமும் கொண்டவர். அனைவரும் மருத்துவ வசதி பெற்றிட வேண்டும் எனும் பேரவா உடையவர்.

இவரது விருப்பத்தினை நிறைவேற்றிட மருத்துவமனையை முதலிபாளையத்தில் பேரூர் ஆதீனம் 25-ஆம் பட்டம் தவத்திரு முனைவர் மருதாசல அடிகளார் அவர்களின் செயல்பாட்டால் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது என்பதை நினைவுகூறுகிறேன்.

பல இடங்களில் அமைதி சீர்குலைந்து மக்கள் அச்சத்துடன் இறுக்கமாக இருந்த நேரத்தில் பல்சமய உறவுகளைக் கலந்து அமைதி ஏற்படவும், அச்சத்தைப் போக்குவதிலும் முனைப்புடன் செயல்பட்டார்.

தமிழையும், சைவத்தையும் பாரெங்கும் பரப்பிட சிரவை ஆதீனம் சுந்தர சாமிகள், திருவாவடுதுறை ஆதீனம், பழனி சாது சண்முக அடிகள், தென்சேரி மடம் சிவராமசாமி அடிகள் ஆகியோருடன்

இணக்கமாகக் கரம்கோர்த்து முன்னின்று செயல்பட்டவர் 24-ஆம் பட்டம் சீர்வளர் சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார்.

ஞானியும் விஞ்ஞானியும்

தமிழ்க் கல்லூரியில் மிகப் பிரமாண்டமான தமிழ் மாநாடு நடைபெற்றது.

(த.தி.சா.அ. தமிழ்க் கல்லூரியும் வளர்தமிழ் இயக்கம்) – த.தி.சா. இராமசாமி அடிகள்

இம்மாநாட்டில் ஞானியும் Dr.A.P.J. கலாம் விஞ்ஞானியும் ஒருசேர மேடையில் வீற்றிருந்து உரையாற்றிய காட்சி இன்றும் நெஞ்சில் நிழலாடுகிறது.

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் பேரூர் ஆதீனம் 24-ஆம் பட்டம் கயிலைக் குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் துவக்கிய தமிழ்க் கல்லூரியில் இன்றும் சீரிய சிறப்புப் பெற்றவர் பலர். அடிகளுக்கு அணுக்கமாக இருந்தவர்களில் க.ச. அப்பாவு, தமிழ்தூதன் ம. இளங்கீரன், பூ.அ. இரவீந்திரன், ராசியண்ணன், குப்புராசு, புவனா ஜீவானந்தம், சந்திரா கிருட்டிணன், புலவர் ஆ. காளியப்பன், புலவர் புலமைப்பித்தன் (அரசவைக் கவிஞர், மேலவை துணைத்தலைவர்) போன்ற எண்ணற்ற தமிழ் ஆளுமைகளை உருவாக்கிய பெருமை தவத்திரு சா. இராமசாமி அடிகளார் அவர்களைச் சாரும். உருவாக்கித் தந்த கல்லூரி ஆல விருட்சமாக விளங்குகிறது என்றால் மிகையாகாது.

அன்று கல்லூரி செயலராக ஐயா பழ. தரும ஆறுமுகம் அவர்களும், மேனாள் முதல்வர் முனைவர் சென்னியப்பனார் மற்றும் முனைவர் ம. மனோன்மணியும் பணியாற்றியுள்ளார்கள். இன்று செயலராக தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் சுப்பிரமணியம் அவர்களும், முதல்வராக முனைவர் சேதுராமன் அவர்களும் பணியாற்றி பெருமை சேர்த்து வருகின்றனர்.

வழிநடத்தும் முதன்மையாளராக 25-ஆம் பட்டம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் என்று வணக்கம் கூறி ஞாலம் புகழும் ஞானத்தந்தை 24-ஆம் பட்ட குருமகா சன்னிதானம் தவத்திரு இராமசாமி அடிகளை நினைவுகூர்ந்து அவரது பாதங்களில் நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூவோடு எம் நெஞ்சில் பூத்த பூ 'அன்பு' ஆகிய ஐவகைப் பூக்களையும் அவர்தம் பாதங்களில் சமர்ப்பித்து எமது "நினைவுகளை" நிறைவு செய்கிறேன்.

நன்றி. வணக்கம்.

"துறவி இவர் தமிழை நம் சைவம் தன்னைத்
துறவா அடிகள் துணை"

52

கலைமாமணி தமிழ்ச் செம்மல்,
திருக்குறள் **மு.பெ. இராமலிங்கம்**, எம்.ஏ.டி.சி.சி.இ.,
நிறுவனர் – தலைவர்,
உலகக் கலைத் தமிழ் மன்றம்.

'ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி !
நேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி !
நேயத்தை நின்ற நிமலன் அடி போற்றி !
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி'!

நூற்றாண்டு விழா கொண்டாடும் பெருமையில் உள்ள தவத்தில் சாந்தலிங்க அடிகளாரின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

1999–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் ஒரு நாள் கோவை ஆர் எஸ் புரத்தில் உள்ள புரந்தர தாச திருமண மண்டபத்தில் தான் அடிகளாரின் எனது முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

அன்று எங்களது திருக்குறள் ஆய்வுக் கழகத்தின் சார்பில் இரண்டு நாள் திருக்குறள் மாநாடு நடைபெற்றது அந்த நிகழ்வுக்கு அடிகளாரையும் சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தோம்.. அடிகளார் இசைவு தந்து அன்று நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டார்

அன்று மேடையில் சொற்பொழிவாற்றிய அனைவரும் திருக்குறளின் அதிகார தலைப்புகளில் பேசினர். அனைவரும் அவ்வாறு பேசி கொண்டிருக்க எனக்கு ஒரு மாறுபட்ட யோசனை தோன்றியது. தவத்திரு சாந்தலிங்க அடிகளாரை முதன் முதலில் பார்த்த நான் அவரது அன்பே வடிவான ஆன்மீகத் தோற்றத்தை

கண்டு, ஆன்மீகம் பற்றி பேச வேண்டும் என முடிவெடுத்தேன் அந்த எனது பேச்சும் அதற்கு அடிகளார் என்னை பாராட்டியதும் என்னால் இன்று வரை மறக்க முடியவில்லை அன்று நடந்தவை... அன்று.. எனது உரை... இப்படி தொடங்கி பேசினேன்.

'ஒரு கோவில்! அதனுள் ஒரு வயதான மூதாட்டி தனது கால்கள் இரண்டையும், மூலவிக்ரகம் அதாவது சாமியின் கருவறையின் பக்கமாக நீட்டி அமர்ந்து கொண்டு சாமி சிலையை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது சைவ பழுத்த பழமாக திருநீர் அணிந்து ஒரு துறவி அங்கு வந்து, அந்த வயதான மூதாட்டி அமர்ந்து அமர்ந்திருந்ததை பார்த்து' தாயே! உங்களை பார்த்தால் அறிவு மிகுந்த அனுபவ சாலியாக தெரிகிறதே அப்படி இருக்க சாமி இருக்கிற பக்கம் தங்களது கால்களை நீட்டிக்கொண்டு அமர்ந்திருக்கலாமா? என கேட்டார்.

இதை. கேட்ட அந்த மூதாட்டி 'அப்படியா ஐயா!. மிக்க மகிழ்ச்சி .நான் தெரியாமல் இப்படி அமர்ந்து விட்டேன். இப்பொழுது நீங்கள் சொல்லுங்கள்... சாமி இல்லாத பக்கம் எது? சொன்னால் அந்தப் பக்கத்தில் எனது கால்களை நீட்டிக் கொள்கிறேன் என்றாள்.

இதை கேட்ட அந்த துறவி, சிறிது நேரம் மெய் மறந்து நின்று விட்டார். எவ்வளவு பெரிய உண்மையை இந்த மூதாட்டி இப்படி எளிதாக சொல்லி நம்மை தடுமாற செய்து விட்டாளே என தனக்குள் சொல்லிக் கொண்டு சற்று சமாளித்து, அம்மூதாட்டியை வேறு ஒரு கேள்வி கேட்டு மடக்கினார்.

'ஓ....! அப்படியா?! சாமி எல்லா பக்கத்திலும் எல்லா இடத்திலும் இருக்கிறார் தானே அப்படி என்றால் நீங்கள் உங்கள் வீட்டிலேயே இருந்து வணங்கலாமே இங்கு ஏன் வந்தீர்?'.

துறவி இவ்வாறு கேட்டதும் ஐயா! பசுமாட்டில் கிடைக்கும் பால், அதன் உடலில் உள்ள எல்லா குருதியின் வழியாகவே தான் கிடைக்கிறது என்பதற்காக அதன் வாலைக் கறந்தால் பால் வருமா? அதன்மடியில் கலந்தால்தான் பால் வரும். அதுபோலத்தான் உலகில்

எல்லா இடத்திலும் சாமி இருந்தாலும் கோவிலில் வந்து வணங்கினால் தான் அருள் கிடைக்கும்! என்று சொன்னதும் அந்த துறவி தனதுஅறியாமையை உணர்ந்து ,அம்மூதாட்டியை. வணங்கினார்

அதுபோல இங்கு பேசிய அனைவரும் திருக்குறளைப் பற்றி பேச நான் மட்டும் ஆன்மீகம் பேசியதற்கு காரணம் சைவத் திருமேனியாய் வீற்றிருக்கும் நமது சாந்தலிங்க அடிகளாரை பார்த்ததும் ஆன்மீகம் பேசத் தோன்றியது.' என்று நான் பேசும்போது அடிகளாரின் முகம் மிகவும் ஒளிர்ந்தது. அது மட்டும் அல்ல. அடுத்து நான் இன்னொரு நிகழ்வாக கதையையும் சொன்னேன். அதைக் கேட்டு அடிகளார் என்னை மனதார பாராட்டினார். அந்த நிகழ்வு கதை என்னவென்றால்.

ஒரு காட்டில் ஒரு துறவி நீண்ட ஆண்டுகளாக தவம் செய்து கொண்டிருந்தார் இந்தக் கதையை நான் ஏன் சொல்கிறேன் என்றால் இறைவனை எவ்வாறு வணங்க வேண்டும் என்று அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அந்தக் காட்டில் பக்கத்தில் ஒரு ஊர் இடையில் ஒரு ஆறு ஓடுகிறது. அதில் மழைக்காலத்தில் மட்டும் தண்ணீர் ஓடும்.

அவ்வூரில் இருந்து ஒரு மூதாட்டி அந்தத் துறவிக்குத் தினமும் பால் கொண்டு வந்து தருவது வழக்கம். அன்று மிக கனத்த மழை பெய்தது. ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. அதன் காரணமாக அம்மூதாட்டி பால் கொண்டு வர முடியாமல் போயிற்று.

அடுத்த நாள் நீர் சற்று வடிந்த பிறகு அந்த பால்கார மூதாட்டி பால் குடத்தை தலையில் சுமந்தபடி வந்தாள். அவளைப்பார்த்த துறவி, 'அம்மையே! நேற்று நீங்கள் வராததால் நான் இங்கு கிடைத்த பழங்களை மட்டும் தின்ன வேண்டியது ஆகிவிட்டது ஏன் நீங்கள் நேற்று வரவில்லை என்று கேட்டார் அதற்கு அந்த மூதாட்டி சாமி என்னை மன்னித்து விடுங்கள் ஆத்துல தண்ணி நிறைய வந்துருச்சு அதனால் என்னால் வர முடியாமல் போச்சு என்று பணிவாகச் சொன்னார் இதற்காகவா நீங்கள் வரவில்லை குடத்தை தலை மேல் வைத்துக் கொண்டு 'ராமா ராமா ராமா என்றால் நதி வழி விட்டு இருக்குமே என்றார்'

அப்படியா ஐயா எனக்கு இது தெரியாமல் போய்விட்டது இனிமேல் அப்படியே செய்கிறேன் என்று சொல்லிவிட்டு பாலை கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்

அடுத்த நாளும் சரியான கனமழை இதை கண்ட துறவி இன்றும் நமக்கு பால் கிடைக்காது என்று எண்ணி அமர்ந்திருக்க அம்மூதாட்டி தனது சேலை சிறிது கூட நனையாமல் பால்குடத்தை தன் தலைமையில் வைத்துக் கொண்டு அங்கு வந்தார்.

இது கண்டு வியந்த துறவி, 'அம்மையே! நதியில் தண்ணீர் நிறையவே ஓடுகிறதே! எப்படி வந்தீர்?? என்று கேட்க, அதற்கு அவர் 'நேற்று நீங்கள் சொன்னபடி செய்தேன் 'அதாவது பால் குடத்தை என் தலை மேல் வைத்துக்கொண்டு 'ராமா ராமா !என்று சொன்னேன்! நதி வழி விட்டது ...வந்து விட்டேன் என்றாள்.

இதைக் கேட்டு துறவிக்கு கோபம் கொப்பளித்தது. உடனே அவ்விடத்தை விட்டு, நதிக்கரைக்கு ஓடி தனது வேட்டியின் இரு முனைகளையும் பற்றி, மேலே தூக்கிக் கொண்டு, 'ராமா ராமா 'என்று கத்திக்கொண்டு நதியில் இறங்கினார். நதி வழி விடவில்லை. பொத்தென நீரில் விழுந்துவிட்டார். அந்தக் கோபத்தில் தலையை மேலே உயர்த்தி தன் வாய்க்கு வந்தபடி திட்டினார்.

உடனே அங்கு ராமர் தோன்றி, துறவியே! என்ன ஆயிற்று !ஏன் இப்படி கத்துகிறீர் என்று கேட்டார்.

அந்த துறவி, 'ராமா! என்ன நியாயம் இது? நான் பல வருடங்களாக உன்னை எண்ணி தவம் இருக்கிறேன். எனக்கு நீ வரம் தராமல் அந்தக் கிழவி, ஒருநாள் உனது பெயரை உச்சரித்ததற்கு அவளுக்கு வரம் தந்திருக்கிறாயே! ஏன்? என்று கோபமாக கத்தினார் .

அதற்கு ராமன் 'அந்த மூதாட்டி, என் மீது முழு நம்பிக்கை வைத்து, தலையில் இருந்த பால் குடத்தில் இருந்து கைகளை எடுக்காது என்னை உச்சரித்தாள். ஆனால் நீ என்ன செய்தாய்? என் மீது நம்பிக்கை இல்லாது, வேட்டி நனைந்து விடும் என்பதற்காக வேட்டியை

தூக்கிப் பிடித்துக் கொண்டு அல்லவா நீரில் இறங்கினாய்! நான் எப்படி உனக்கு உதவ முடியும்? என்றார் அன்பாக.

இதைக் கேட்ட துறவிக்கு அப்போதுதான் தான் இத்தனை நாட்களும் செய்து வந்த தவறு புரிந்தது. எனவே இறைவனை வணங்கும் போது இன்னும் முழுமனதுடன் வணங்கினால் தான் அருள் உண்டு! இறைவனை இவ்வாறு வணங்கி, அருள் பெறுவோம் என்று கூறி எனது உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன்.

53

திருமதி சுப்புலட்சுமி சதாசிவன்
குன்னத்தூர், திருப்பூர்

தமிழகத்தில் உள்ள ஆதினத் தலைவர்கள் தங்களின் திருமடத்தின் நிலங்களை மீட்க அரியணையில் இருந்து போராடிக்கொண்டிருக்கும் போது, இவர் அரியணையில் இருந்து இறங்கி தமிழை அரியணை ஏற்று போராடி அதில் வெற்றியும் பெற்றார். தேவாரமும், திருவாசகமும் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பாடப் படவேண்டும் என்பதிலும் உறுதியாய் நின்று ஊக்கமாக செயல்படுத்தியவர். தமிழுக்காக சுற்று சூழலுக்காக, ஈழத்தமிழர் நலனுக்காக மக்கள் பிரச்சனைகளுக்காக வீதியில் இறங்கி போராடிய ஒரே ஆதினத் தலைவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

ஆதினங்கள் எல்லாம் நிலவுடைமை சமூகத்தின் பிரதிநிதிகளாகவும், நிலச்சுவான்தாரர்களாகவும் திகழ இவரோ ஆதீனத் தலைவராக இருந்து தமிழ்மொழியை வழிபாட்டு மொழியாக்க போராடி அதனை செயல்படுத்தி தமிழ் மொழி வழிபாட்டை இயக்கமாக மாற்றிய ஆதீனத் தலைவராகத் திகழ்ந்தார். சங்க இலக்கியங்களையும், தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் குறைவின்றி கற்றவர்.

1948 ஆம் ஆண்டு பேரூராதினத்தின் இளைய ஆதீனமாகப் பதவி ஏற்றார். பதவி ஏற்றபின் பல்வேறு செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். அதில் முக்கியமானது தமிழ் மொழியில் வழிபாடு அன்றைய காலத்தில் தந்தை பெரியார் போன்ற தலைவர்கள் ஆலய நுழைவு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தவத்திரு சாந்தலிங்க அடிகளார் ஆலயத்தில் தமிழ் மொழியில் தேவாரம், திருவாசகம் பாடி வழிபாடுகள் நடத்திட வேண்டும் என்பதில்

உறுதியாக இருந்தார். அதற்கான போராட்டங்களையும் முன்னெடுத்தார். ஆலய நுழைவு உரிமைக்கு எவ்வாறு எதிர்ப்புகள் இருந்தனவோ அதே அளவு ஆலயங்களில் தமிழ் நுழைவுக்கும் கடுமையான எதிர்ப்புக்ள சமய உலகிலேயே இருந்தன. தமிழகத்தின் எந்த ஆதினமும் முன்னெடுக்காத தமிழ்வழி பாட்டு முறையை பேரூராதினம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் முன்னெடுத்தார்.

1953 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் பட்டீசுவரர் கோயிலில் பலரின் எதிர்ப்புகளையும் மீறி தமிழகத்தில் முதன்முறையாக ஆலய வழிபாட்டில் தமிழ் என்பதை செயல்படுத்திக் காட்டினார். தந்தை பெரியார் அவர்கள் மாற்று கொள்கை உடையோராக இருப்பினும் நம் அடிகளார் அவரது போராட்டத்திற்கு முழு ஆதரவு அளித்தார்.

மாமன்னர் இராஜராஜ சோழன் காலத்தில் மீட்கப்பட்ட திருமுறைகள் பின்னர் வந்த நிலையற்ற அரசுகளால் மீண்டும் புறக்கணிக்கப்பட்டது. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பல நூறு ஆண்டுகளுக்கு பின்னர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர். மாணிக்கவாசகர் பிற அருளாளர்கள் பாடிய தமிழ் மந்திரங்களைத் தொகுத்து ஆலய வழிபாடுகளில் எந்தெந்த பாடல்கள் இசைத்தல் வேண்டும், இல்ல நிகழ்வுகள், திருமணம் போன்ற அனைத்து நிகழ்வுகளிலும் தமிழ் மொழியிலேயே வழிபாடாற்றுதல் வேண்டும் என்பதற்காகப் பல்வேறு செயல்திட்டங்களை வகுத்தார்.

1954 ஆம் ஆண்டு கோயமுத்தூர் கணபதி கிராமத்தில் அருள்மிகு விநாயகப் பெருமான் திருக்கோயிலில் தமிழ் மந்திரங்கள் ஒலிக்க முறையான ஆகம முறையில் தமிழ் முறையில் திருக்குட நன்னீராட்டு நிகழ்வை நடத்திக் காட்டினார். கும்பாபிஷேகம் என்னும் வடமொழி சொல்லுக்கு நிகராக இன்று தமிழகத்தில் நன்னீராட்டு விழா என்னும் சொல்லாட்சியை நடைமுறைக்கு கொண்டு வந்து செயல்படுத்திக் காட்டினார்.1967 ஆம் ஆண்டு பேரூராதினத்தின் ஆதீனத் தலைவராக முறைப்படி பதவியேற்று சமயப்பணியிலும், தமிழ்ப்பணியிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

அன்றைய காலத்தில் ஆதின தலைவர்கள் திருமடத்தில் கொலுமண்டபத்தில் காட்சி அளிப்பவர்களாகவே இருந்தனர். அந்த நடைமுறையை மாற்றி வீதிகளில் வலம் வந்து மொழிக்காகவும் போராடியவர்கள் நம் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், சுந்தர அடிகளாரும் ஆவார்கள்.

நம் அடிகளார் சிறைச்சாலைகளுக்கு சென்று அறநெறி வகுப்புகள் எடுத்து வந்தார். அப்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்த தீவிர இடதுசாரி இயக்கத் தலைவர் தோழர் வி.பி.பாலதண்டாயுதம் அவர்கள் சிறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று நம் அடிகளாரிடம் தமிழ் கற்றார். சிறைச் சாலையில் வகுப்பு எடுக்க சென்ற காலத்தில் அங்குள்ள முட்புதரில் விடுதலை போராட்ட வீரர் வ.உ.சி அவர்கள் இழுத்த செக்கு இருப்பதை அறிந்தார். இச்செய்தியை ம.பொ.சி அவர்களிடம் கூறினார். பின் இருவரும் பெரிதும் முயன்று அந்த செக்கினை எல்லோரும் அறியும் பொருட்டு சிறையில் வைத்து முறையான மரியாதை செலுத்துவதை நடைமுறைப்படுத்தினார். இச்செய்தியை 1972-ஆம் ஆண்டு தமிழரசு கழக ஆண்டு விழாவில் கலைஞர் கருணாநிதி முன்னிலையில் கூறினார். அந்த மேடையிலேயே கலைஞர் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரையும் திரு.ம.பொ.சி அவர்களையும் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கோயமுத்தூரில் வசிக்கும் மாணவர்கள் தமிழ் கல்வியை கற்க சென்னை, சிதம்பரம், மதுரை போன்ற நகரங்களுக்கு செல்ல வேண்டி இருந்தது. இதனைப் போக்கும் வகையில் சென்னை பல்கலைக் கழகத்தில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி என்னும் பெயரில் பதிவு செய்து 1954 ஆண்டு முதல் செயல்பட செயலாற்றினார். புலவர் புலமைப்பித்தன் புவியரசு போன்றோர் இக்கல்லூரியின் மாணவர்களே. 1954 ஆம் ஆண்டு வரதராசனார் இக்கல்லூரியின் செயல்பாட்டை அங்கீகரித்தார்.

தமிழகத்தில் மொழிவாரி போராட்டங்கள், ஈழத்தமிழர் போராட்டங்களில் கலந்து கொண்டு வீதியில் அமர்ந்து போராடினார் அடிகளார். ஈழத்தலைவர் பிரபாகரன் நேரில் சந்தித்து தமிழர் நலனுக்குப் போராடியவர்களில் வெளிப்படையான ஆதரவுடன்

போராடிய ஆதினத் தலைவர் இவர் மட்டுமே. மற்ற பாடங்களுக்கு நிகராக தமிழாசிரியர்கள் ஊதியம் பெறுவதற்கு காரணமானவர் அடிகளே. இவரின் சிறப்பை போற்றும் வண்ணம் சென்னை பல்கலைக் கழகம் 2007 ஆம் ஆண்டு இவருக்கு முதுமுனைவர் பட்டம் வழங்கி சிறப்பித்தது.

பூமிதான இயக்கத் தலைவர் வினோபாவே, நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்குங்கள் எனக் கேட்ட நிலையில் நிலம் வழங்கிய ஒரே ஆதினத் தலைவர் அடிகளாரே. தமிழகத்தின் முதலமைச்சர்களாகத் திகழ்ந்த பக்தவச்சலம், காமராசர், கருணாநிதி, எம்.ஜி.ஆர், செல்வி ஜெயலலிதா என பலரும் மதிக்கும் ஆதினத் தலைவராக இவர் திகழ்ந்தார். எம்.ஜி.ஆர் ஆட்சி காலத்தில் குமரி மாவட்டத்தில் மண்டைக்காடு என்னும் ஊரில் மதச் சண்டை நிகழ்ந்த போது தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரும், தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் அந்த ஊருக்கே சென்று எல்லோரையும் ஒருங்கிணைத்து மதச் சண்டையை நிறுத்தினர். இதனை M.G.R. சட்டமன்றத்திலேயே பதிவு செய்தார்.

தந்தை பெரியார் உடல்நிலை சரியில்லாத போது அவர் இல்லத்துக்கு சென்று நலம் விசாரித்தார். ஆன்மிக அமைப்பினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த போது கொள்கை வேறு,

'நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்புள்ளி
ஒல்லும் வாய் ஊன்றும் நிலை.'

(வள்ளுவரின் வாக்கிற்கு உதாரணம்) நட்பு வேறு என்று கூறினார். தமிழக அமைச்சராக இருந்த தமிழ்குடிமகள் அடிகளாரை சந்திக்க சென்றபோது அவர் தோட்டத்தில் ஏர் பூட்டி மாடுகளின் உதவியுடன்

'கழன்றும் ஏர் பின்னது உலகம் அதனால்
உழுந்தும் உழவே தலை.'

என்பதை உணர்ந்திருந்தார். வேளாண் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு வியந்தார்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் அரசு சட்ட மேலவை உறுப்பினர் பதவி தர முன்வந்த போது எம்மை விட மக்கள் பணிகளில் சிறந்து விளங்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு வழங்குவதே சிறப்பு என்று அந்த பதவியை குன்றக்குடி அடிகளாருக்கு வழங்கிட வைத்தார். தமிழகத்தில் எந்த ஆட்சி அமைந்தாலும் அறநிலையத்துறையின் உயர்மட்ட குழு பொறுப்பாளராக அடிகளார் திகழ்ந்தார். விளக்கேற்றுவதற்கு கூட ஆள் இன்றி இருக்கும் கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் செயல்படவும் பல கோயில்களில் திருத்தேர் பணி நடைபெறவும் முதன்மை காரணமாக திகழ்ந்தவர். எந்தவித சமரசமும் இன்றி பல நேரங்களில் அரசையே எதிர்த்த ஆதீனத் தலைவர் இவர்.

சாதிகள் இல்லையடி பாப்பா (பாரதியார்)

தமிழகத்தில் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்னும் அரசின் திட்டத்தை நடைமுறைப்படுத்த பல போராட்டங்களை நடத்தியவர். விடுதலை புலிகளுக்கு ஆதரவாக, ஈழமக்களுக்கு ஆதரவாக போராட்டம் நடந்த போது அடிகளார் கோயமுத்தூரில் தலைமையேற்று நடத்தினார். ஆதீனத் தலைவர்கள் தங்களின் திருமடத்தின் பிரச்சனைகளுக்கு மட்டுமே போராடுவார்கள் என்னும் சொல்லுக்கு மத்தியில் இவர் மட்டும் இனத்தின், சமயத்தின், மொழியின் முக்கியத்துவத்திற்காக போராடினார்.

2010 ஆம் ஆண்டு கோயமுத்தூரில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசு உலக தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தியது. அதில் சமயத்தமிழ் புறக்கணிக்கப்பட்டது. அப்போது அடிகளார் கலைஞரை சந்தித்து அனைத்து சமயங்களின் தமிழ் வளர்ச்சி குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கரூர் திருக்கோயிலில் தமிழ் முறையில் குடமுழுக்கு நடத்தியே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து செயல்படுத்தியும் காட்டினார். தமிழகம் முழுவதும் 25000 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் தமிழ்முறையில் ஆலய வழிபாட்டை நடைமுறையாக்கினார். தமிழகத்தின் இல்ல விழாக்கள் அனைத்தும்

தமிழ் முறையில் செயல்படுத்தினார். தமிழகம் மட்டுமின்றி வெளிநாடு வாழ் தமிழர்கள் பலரும் பேரூராதினத்தை தொடர்பு கொண்டு தங்கள் இல்லத்து நிகழ்வுகளை தமிழ் மொழியில் நிகழ்த்துவதை பெருமையாக கருதுகின்றனர். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ் போன்ற நாடுகளில் தமிழ் மொழி வழிபாட்டு இயக்கம் இன்று சிறப்புடன் திகழ தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் விதையாகத் திகழ்ந்தார்.

கோயமுத்தூர் சிறுவாணி ஆற்றின் கரையில் 20 வருடங்களுக்கு முன்னர் பெப்சி கம்பெனி செயல்படத் தொடங்கிய போது அந்த ஆற்றின் வளம் குறையத் தொடங்கியது. அடிகளார் தலைமையில் மக்கள் போராட்டம் தொடங்கியது.

'உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர் களன் அஞ்சி
கற்ற செலச் சொல்லாதார் துணிவு.'

(குறள் நினைவு வர போராட்டம்) அரசு பேச்சு நடத்தியது. பன்னாட்டு நிறுவனம் இழுத்து மூடப்பட்டது. இவ்வாறு சமயப்பணியில் தமிழை வழிபாட்டு மொழியாகவும் சமுதாய பணியில் தம்மை ஒரு கருவியாகவும் இணைத்துக் கொண்டவர். சமஸ்கிருத எதிர்ப்பு என்று இல்லாமல் தமிழ் வழிபாடு என்பதைத் தம் கொள்கையாகக் கொண்டவர்.

தமிழகத்தின் வயது முதிர்ந்த மடாதிபதி அடிகளார். பேரூரில் தமிழ் கல்லூரி உள்ளது. காட்டம் பட்டியில் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. அப்போதைய தமிழக முதலமைச்சர் திரு.காமராசர் அடிக்கல் நாட்டினார்.இங்கு படித்தவர்கள் ஏராளம்.பெரிய வேலைகளில் தொழிலதிபர்களாகவும் அரசு தனியார் நிறுவன உயர் அதிகாரிகளாகவும் பணியாற்றுகின்றனர். பேரூரில் அறக்கட்டளையின் மருத்துவமனை இயங்கி வருகிறது.

பேரூர் சாந்தலிங்க இராமசாமி சுவாமிகள் தமிழ்ப்புவர்கள், மொழிபெயர்ப்பாளர், வீர சைவ மரபைச் சேர்ந்த ஆசிரியர். 28 ஆகமங்களுள் ஒன்றான விராகமத்தை சமஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்த்தார். இத்தனை அரிய பண்புகளையும் பணிகளையும் உடைய

நம் அடியாரை ஞாலம் புகழும் ஞானத் தந்தை என்று சொல்வதில் வியப்பொன்றுமில்லை.

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும்.'

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க அடிகளார் எளிமையும் உடையவராகத் திகழ்ந்தார்.

'கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடு அல்ல மற்றையவை.'

என்ற தெய்வல் புலவரின் கூற்றை உணர்ந்து யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வை யகம் என்பதை மனதில் கொண்டு கல்வியை அனைவருக்கும் போதித்தார்.'தொல்லுக மக்கள் எல்லாம் ஒன்றே, என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்' என்ற பாரதிதாசன் வரிகளுக்கு உயிர் ஊட்டியவர்.

சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் எண்ணம், மனம், எண்ண ஓட்டம், சிந்தனை யாவும் வானம் போல விரிந்து பரந்து இருந்தன.

'யாதும் ஊரே யாவரும் கேளீர்
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.'

ஒன்றே குலம் ஒருவனே தேவன் இந்த உயிர் வரிகளே அகச் சான்றுகள் ஆகும்.

'இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம். தொண்டர் தம் பெருமையை சொல்லவும் பெரிதே' என்றார் ஔவையார். வாராருங் கடல் சூழ் வையகத்தில் உள்ள யாவும் சிவ பரம் பொருளின் படைப்பே ஒரு காலத்தில் படைத்தவனே யாவற்றையும் ஒடுக்கி கொள்வான்.

இறையருளோடு குருவருளும் பெற்று பல அடியார்களை உருவாக்கி வீர சைவ மரபை போற்றி வளர்த்த நம் ஞானத் தந்தை சாந்தலிங்க இராமசாமி பெருமான் மாசித் திங்கள் 2018ம் மகம் ஆண்டு விண்மீன் கூடிய நிறைமதி நாளில் ஞான நிலை அடைந்து தாம் வழிபடும் கூத்தப் பெருமான் திருவடியில் கலந்தார்.

அன்னாருடைய சமாதி திருக்கோயிலும், திருமடமும் பேரூரில் பட்டி பெருமான் திருக்கோயிலுக்கு கிழக்கே நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

தேவாரமும், திருவாசகமும் அனைத்து மக்களின் வழிபாட்டு மொழியாகத் திகழ விதையாகத் திகழ்ந்த இவரின் செயல் விருட்சமாக வளர வேண்டும். தமிழக மக்கள் நமது தாய்மொழியில் இல்ல நிகழ்வுகளை நடத்திட வேண்டும். இளைய தலைமுறைக்கு தமிழ் மந்திரங்களை அறிமுகப்படுத்திட வேண்டும். தமிழ் மந்திரங்கள் தமிழர்களின் இல்லங்களில் இசைத்திட வேண்டும்.ஞாலம் புகழும் ஞானத் தந்தை தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் கனவை நிறைவேற்றுவோம்.

நன்றி வணக்கம்.

ஓம் நமசிவாய, திருச்சிற்றம்பலம்.

54

தொல்காப்பியச் செம்மல்
புலவர் **ஆ. காளியப்பன்**
தலைவர், தொல்காப்பியர் தமிழ்ச்சங்கம்,
பேரூராதீனம், கோவை.

அண்டர் பிரானது ஐந்தே எழுத்தது மந்திரத்தை
தொண்டர் குழாத்தில் ஒலித்திடும் தூயனே உன்றனது
வண்டார் மலரடி போற்றி வணங்கிடும் என்றனுக்குக்
கண்ணால் கருணை பொழிந்து குருமணி காத்தருளே.

(தொகாப்பியர்பிள்ளைத்தமிழ்)

உலகம் உய்ய உதித்தோர் பலர். அவர்களுள் பாலகனாய்த் திரிந்த என்னைப் பக்குவப் படுத்தி புலவர் ஆக்கியவர் தாண்டவம் புரியவல்ல தம்பிரானுக்கு அன்பர், ஈண்டிய தவத்தின் மிக்க சாந்தலிங்கப்பெருமான் தொண்டர் சிவத்தொடு கலந்த சிவமே ஆன கயிலைக் குருமணி சாந்தலிங்க ராமசாமி அடிகளார்

காட்டு வேலைக்குச் சென்ற என்னைக் காட்டுகிறேன் நல்வழி என்று கைபிடித்துக் கொண்டு வந்து கல்லூரியில் சேர்த்தவர் புலவர் ந.இரா. இராமசாமி ஐயா அவர்கள். நேர் முகத்தேர்வில் ஏழையாக இருந்த போதும் எனது அறிவை மெச்சி இடம் தந்து படிக்க வைத்தவர். கயிலைக்குருமணி சாந்தலிங்க ராமசாமி அடிகளார். அரைக்கால் சட்டை அணிந்து வந்த என்னை வேட்டி கட்டி வரவேண்டும் வெள்ளைச் சட்டை போட்டு வர வேண்டும் என்ற அறிவுறுத்தினார்.அதை நான் அன்றுமுதல் இன்று வரை கடைப்பிடித்து வருகிறேன்.

ஆசிரியர் ஐயா நன்னூல் நடத்த. பட்டியப்பனார் காரிகை கற்பிப்பார். குனிந்த தலை நிமிராது மனனமாய்ப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுவார் இலக்கணக் கடல் சென்னியப்பனார்.

முத்தண்ணன் இலக்கிய வரலாற்றைக் இயம்புவார். இவர்கள் எல்லாரும் அறிவுப் பசிக்கு உணவிட்டவர்கள், இருப்பினும் எனது ஆன்மப் பசியைத் தூண்டி ஆடவல்லான் மீது நாட்டம் கொள்ளச் செய்தவர் துவராடைத் தூயவராம் வெண்தாடி வேந்தராம் கயிலைக்குருமணி அடிகள் பெருமான். கொலைமறுத்தல் நூலதை நுவலும் போதும், திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழைக் கற்பிக்கும் போதும் ஆன்மப் பசி அடங்கியது.

நம் அடிகள் சட்டுவம் கொண்டு வந்து கொத்தனார்கள் சிந்திய கலவையைச் சுரண்டி எடுத்த போது அப்பர் செய்த உழவாரப் பணி தான் எனக்கு நிழலாடியது.

கட்டுத்தரையில் உள்ள சாணத்தைத் தயக்கம் இன்றி மண்வெட்டியால் எடுத்துச் சென்று எருக்குழியில் போடுவதைப் பார்த்த என்னை மும்பையில் கழிவறைச் சுத்தப்பணிக்கு விண்ணப்பம் செய்ய வைத்தது.

தன்னைக்காண வரும் அடியவர்களுடன் பேசிக்கொண்டே பூக்கட்டுவார், அப்படியெல்லாம் நேரத்தின் அருமையை உணர்த்தியவர். சமயத்தில் மட்டுமல்ல. சமைப்பதிலும் வல்லவர்

நான் இரண்டாம் ஆண்டு படிக்கும் போது 10 நாட்கள் புனிதப்பயணமாகத் தமிழ்நாட்டுக் கோயில்களுக்கு அழைத்து சென்றார். அப்போது கட்டப்பணம் இல்லா என்னைக் கட்டணம் இன்றி அழைத்துச் சென்றார்.

நானாகவே நினைத்து நூலகத்தில் சிதறிக் கிடந்த நூலைகளைத் தூசி தட்டி, தூய்மை, துறைவாரியாக அடுக்கி வைத்தேன். காளியப்பனின் இப்பணியைக் கண்ணுற்ற அடிகள் பாராட்டியதோடு நில்லாது நண்பகல் உணவைத் திருமடத்தில் உண்டு கொள்க என்றார்.

அரசு வழங்கும் ஓசிப்பணம் வாங்கமுடியாத O.C பட்டியலைச் சார்ந்தவன். இந்நிலை உணர்ந்த எம்மடிகள் ஒரு பொறியாளர் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ100 பெற்றுத் தந்தார். நெற்றி நிறைய நீறு

அணியாது அவரை நான் ஒருபோதும் சந்தித்ததில்லை.

ஒருநாள் அழைத்துக் கோவைக்கிழார் சமாதிப் பகுதியைச் சுத்தம்செய் என்றார். நானும் சுத்தம் செய்து வந்தேன். சூடான சுக்கு நீரும் சுவையான வறுத்த பொரியும் கொடுத்து மகிழ வைத்தார். ஒரு மகம் நன்நாளில் மணியை என் கையில் கொடுத்து அடி என்றார். அதை மறவாமல் இன்றும் மக நன்நாளில் நீராட்டின் போது மணியை அடித்துக் கொண்டுள்ளேன். நான் சிறுவனாக இருந்த போது எங்கள் ஊர் கருப்பராயன் கோயிலிலும் அந்தப்பணி என்னுடையதே.

சுவையான சமையல் செய்து சூடாகப் பரிமாறுவதில் தனக்குவமை இல்லாதவர். உணவு உண்ணும் போது மாணாக்கர் யாராவது இல்லை என்றால் ஏன் வரவில்லை என்று விசாரித்து அறிந்து கொள்ளுவார். எனது நண்பன் அருச்சுனுக்குக் காய்ச்சல் அடிகள் பெருமானே வெந்நீர் வைத்துக்கொடுத்து மறக்க முடியுமா?.

நூலகர் இல்லாத காரணத்தால் என்னையே அப்பணியைச் செய்யப் பணித்தார். பழம் நழுவிப் பாலில் விழுந்தாக எண்ணினேன். கரும்பு தின்னக் கூலியா?

படிக்கும் காலத்தில் பாடநூல்களை ஒரு போதும் விலைகொடுத்து வாங்கியதில்லை. நூலகப் புத்தகத்தைப் பயன்படுத்தியே படித்தேன். இப்படி இருந்த நான் அவரது கால்தொழுது சான்றிதழ் பெற்றுச் சென்றவன். 35 ஆண்டுகளாகயி திருமடத்துப் பக்கம் இல்லை.காரணம் வெளியூரில் இருப்பு அதை நான் என் வாழ்க்கையின் களப்பிரர் காலமாகிய. இருண்ட காலமே

உள்ளூருக்கு வந்தேன். வீடி கட்டினேன் அரசுப்பணி கையில் என்ற அமைப்பின் மூலம் அரசுப்பணித் தேர்வர்களுக்கு இலவயப்பயிற்சி அளித்தேன்.

அதைக் கேள்வியுற்ற 25 ஆம் பட்டம் பேரூராதீனம் நம் அடிகள் பெருமான் ஒரு மேடையில் பேசும்போது என்னை எங்கள் திருமடத்தில் வந்து நடத்தலாமே என்றார்.

வந்து பார்த்த போது அவரது அருட் பார்வையும் வாய்நிறைந்த சிரிப்பும் என்னை ஈர்த்தது. அன்று முதல் ஞான குருவாக இருந்த தமிழர் வழிபாட்டுத் தந்தை கயிலைக் குருமணி என்குலதெய்வம் ஆனார். கயிலைப்புனிதர் 25 பட்டம் பேரூராதீனம் எனக்கு ஞான குருவானார். அவரது வாக்கே திருவாக்காவும் அவரது உருவே திருமேனியாகவும் வழிபட்டு வருகிறேன்.

குருகாட்டிய பாதை: அப்போது இளைய பட்டமாக விளங்கிய தவத்திரு மருதாசல அடிகள் என்னைச் சாடிவயல் நெல்லிக்காவில் இருக்கும் பெரிய அடிகளைச் சந்தித்து வருக என்றார். நானும் புலவர் வேலவனும் அங்குச் சென்று பெரிய அடிகளைச் சந்தித்தோம்.. படுத்த நிலையில் இருந்து கொண்டே நீ பொறியாளர் உதவியால் படித்தவன் தானே? நீ தமிழுக்கு என்ன செய்கிறாய்? என்றார். எல்லாரும் காய், கனி, இலை, தழைகளைப் பற்றியே பேசுகிறார்கள். வேரை யார் பேசுவது என்றார். நானும் சாமி குளத்துப்பாளையத்தில் ஒரு தோட்டத்தில் தொல்காப்பியர் பயிலரங்கம் நடத்தி வருகிறேன் அதன்மூலம் 10 பேருக்குத் தொல்காப்பியத்தைப் பற்றிக் கற்பித்து வருகிறேன் என்றேன். படுத்திருந்தவர் படக்கென எழுந்தார். அனைவரும் வியந்தனர். அன்று பழ.தரும. ஆறுமுகம் ஐயாவும் இருந்தார். அடிகள் பெருமான் திருவடிகள் தரையைத் தொட்டது. கைத்தடியை ஊன்றித் தானே நடந்து வந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். தொல்காப்பியம் என்ற சொல்லைக் கேட்டதும் அவரது முகம் ஆதவனைக் கண்ட அழகுத் தாமரையாய் விரிந்தது. தொல்காப்பியம் என்ற சொல்லுக்கு அவ்வளவு சக்தியா?

இனிமேல் திருமடத்தில்தான் தொல்காப்பியப் பயிலரங்கை நடத்தவேண்டும். ஆகவே தொல்காப்பியரைப் பெருமைப்படுத்தும் விதமாக இன்று முதல் தொல்காப்பியர் பேரவை என்று வழங்க வேண்டும் என்றார். தானே வந்து தொல்காப்பியர் பேரவையைத் தொடங்கி வைப்பதாக கூறியதோடு நாளும் குறித்துக் கொடுத்தார்.

5-09-2017 அன்று சாந்தலிங்கப் பெருமான் மாத குருபூசை, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி பிறந்தநாள், ஆசிரியர் தினம்,

அன்னை தெரசா நினைவு நாள் இவ்வளவு சிறப்புக் குரிய நன்நாளைக் குறித்துக் கொடுத்தார். திருமடத்தின் சார்பாக அழைப்பிதழும் அடிக்கப்பட்டது. பெரிய அடிகள் சிறப்புப் பேச்சாளராக புலவர் முருகன் அவர்களை அழைக்கச் சொன்னார். அப்படியே செய்தோம்.

விழாவிற்கு வந்தோர் அனைவருக்கும் பல் வகையான உணவும் பரிமாறப்பட்டது.

அன்று பகல் 2-31 க்கு சரியாக என் குலதெய்வம் மேடையில் தண்டு கைக்கொண்டு தளர்நடை இட்டு வந்து அமர்ந்தது. காலடியில் கிடந்து உழல வேண்டிய நாயிற்கடையேன் என்னை அருகில் அமர்த்தியது. இதற்கு நான் முற்பிறவியில் ஏதோ நற்காரியம் செய்திருக்க வேண்டும் என்றே எண்ணுகிறேன்.

தொல்காப்பியர் எழுத்தையும் சொல்லையும் பொருளுக்காவே கூறியுள்ளார், மனிதவாழ்வுக்கு இலக்கணம் சொன்ன ஒரே நூல் தொல்காப்பியம். என்று எடுத்துரைத்தார். இந்தச் செய்தியும் தொல்காப்பியர் பேரவை தொடக்க விழாவும் அடுத்தநாள் அனைத்து நாளிதழ்களிலும் வெளி வந்தன. அன்றுதான் எனது பெயர் முதன்முதலாக நாளேட்டில் வந்தது

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

என்ற தொல்காப்பியம் பொருளதிகார முதல் நூற்பாவைக் கூறிப் பேரவையைத் தொடங்கி வைத்தார். தொல்காப்பியர் பேரவைத் தலைவராக என்னை அறிமுகம் செய்து வைத்தது ஏழேழ் பிறவிக்கும் எற்றைக்கும் நன்றிக் கடன்பட்டவன் ஆவேன்.

அத்தோடு நில்லாமல் தொல்காப்பிய அமர்வுக்கு வருவோருக்கு உணவும், வெளியூராகில் உறையுளும் பேரூர்த் திருமடம் நல்கும் என்ற வாக்கையும் தந்தார்.

தொல்காப்பியர் பேரவை தொடங்கி ஓராண்டு நிறைவுறும் முன்னரே சிவத்தொடு கலந்தார். முதலாண்டு ஆண்டு விழாவே அவரது பத்தாம் நாளாயிற்று.

அவர் சிந்தையுள் நாற்பது ஆண்டுகளாக ஒருகேள்வி அது யாதெனில் சிறந்தது பயிற்றல் இறந்தன் பயனே. என்ற தொல்காப்பிய இல்லறவியலின் நூற்பாவிற்கும் திருக்குறளுக்கும் ஏதோ தொடர்பு உள்ளது அதை விளக்கம் யார் உரைப்பர் என்று ஏங்கியது. அதற்காக நான் புதுச்சேரிப் பேராசிரியர் முனைவர் பத்மநாபன் அவர்களை வரவழைத்து சிறந்தது பயிற்றல் இறந்தன் பயனே என்ற தலைப்பில் பேச வைத்தேன். அடிகளாரின் படுக்கை வரை ஒலிபெருக்கியைக் கொண்டு சென்று கேட்க வைத்தோம்

அவரும் கேள்விக்கு ஓரளவு விடை கிடைத்ததாய் நிறைவடைந்தார். எனவே முனைவர் பத்மநாபன் துணைவியார் பேரன் ஆகியோரை வாழ்த்தி திருநூற்றுக் காப்புடன் பொன்னாடையும் போர்த்தினார்.

அவரது எண்ணத்தை விட பன்மடங்கு இப்போது என்குரு கயிலைப்புனிதர் தொல்காப்பிருக்கு ஐம்பொன்சிலை அமைத்து, அதன்கீழ் என்பெயர் பொறித்து காலா காலத்திற்கும் என் பெயரை நிலைபெறச் செய்து விட்டார். தொல்காப்பியர் படிமம் நிறுவியதை ஒரு கோயில் குடமுழுக்காகவே நிகழ்த்தினார். தமிழ்நாட்டு நல்லறிஞர் பலரையும் வரவழைத்து சிலையைத் திறந்து வைத்தார். தொல்காப்பியரையும் திருவள்ளுவரையும் அறவோராகக் கருதி வழிபடுவதோடு தொல்காப்பியர் ஆண்டையும் திருவள்ளுவர் ஆண்டையும் நாளும் தவறாது கூறி வருகிறார். ஒவ்வொரு முதல் ஞாயிறும் தொல்காப்பியர் அமர்வினை நிகழ்த்துவதோடு வந்தோருக்கு சுக்கு நீரும் உணவும் வழங்கி தொல்காப்பியர் அமர்வினைத் தொய்வின்றி நடத்தி வருகிறார்.

அவரது தொண்டனாகத் தொல்காப்பியத்தைப் பாமரரும் அறிந்து பயன்பெறக் கயிலைக் குருமணி திருவருளுடனும் கயிலைப்புனிதர் குருவருளுடனும் பாடுபடுவேன்.

மதிசேர் முடியனை நெஞ்சத்தால் எண்ணும்
பதியாம் மருதா சலக்கோ – விதியெனச்
சொன்னதை ஏற்பேன் சிரமேல்தான் என்றுமே
உன்னுவேன் உன்னடி நான்.

55

முனைவர் அ. கோவிந்தராசு
கரூர்

பெயர்

செவியில் இசைத்திடும் செவ்வண்டே சீரார்
தவஞானி பேரென்ன சொல்க – அவியாப்
புவியிற் சிறந்தார் புகழுடையார் மேலோர்
கவின்ராம சாமியடி கள்.

நாடு

சிந்தனை செய்து செயல்களைச் செய்பவர்
கந்தனை எண்ணிக் களிப்பவர் – செந்தும்பி!
எந்ததிரு நாட்டில் எழுந்தார் புகழோடு
செந்தமிழ் நாடென்று செப்பு.

ஊர்

பாரென்று சொல்லிப் பலவழி காட்டுவார்
சேரென்று சொல்வார் சிவநெறி – பேரெழிலார்
ஆரென்று அறிவாய்நீ அம்கிளியே பேரூரே
ஊரென்று உரக்க உரை.

ஆறு

பிறவிகளின் வேரறுக்கும் பெம்மானைப் போற்றிச்
சிறந்தபணி செய்தநற் செம்மல் –புறாவே
பிறமடங்கள் போற்றும் பெருந்தகை; நொய்யல்
அறமுனியின் ஆறென்று அறை.

மலை

வெள்ளை மனத்தர் விளங்கு திருநீறு
தெள்ளு தமிழிலே தேர்ந்தவர் – கிள்ளையே
கொள்ளும் மலைஎது கொட்டும் அருவிசேர்
வெள்ளிமலை என்றே விளம்பு.

ஊர்தி

புத்தனின் அன்பையோர் புன்னகை காட்டிடும்
எத்துணை இன்பம் எமக்கெலாம் – தத்தையே!
இத்தரை போற்றும் இனியர் அவருக்குச்
சத்தியமே ஊர்தியெனச் சாற்று

படை

கல்லூரி ஒன்றினைக் காலத்தே கண்டனர்
பல்வித பாடம் படித்திட – நல்மானே
நல்வித மாயுள நல்லிள மாணாக்கர்
வெல்படை என்பார் வியந்து.

முரசு

வித்தெனக் கொண்டு வியன்தமிழ் நூலினை
நித்தமும் கற்றிடும் நீர்மையர்– தத்தையே!
முத்தெனப் பாக்கள் முழுதாய் நிறைந்துள்ள
முத்தமிழே கொட்டும் முரசு

மாலை

பார்நலம் பேணும் பணிகளைச் செய்பவர்
ஊர்நடு வேயுள்ள ஊருணி– கார்முகிலே!
தேர்ந்து மனங்கொண்ட தேவாரப் பாமாலை
மார்பில் அணிவார் மகிழ்ந்து

கொடி

தின்னக் குறையாது தீராத பேரடிசில்
என்னே விருந்தோம்பல் எந்நாளும் – தென்றலே
இன்னமு தூட்டி இனிதே உரைத்தவர்க்(கு)
அன்னக் கொடியே அழகு.

56

கயிலைமணி, சித்தாந்த இரத்தினம்
பேரூர் ஆதீனத் தொண்டன்
புலவர் **அ. பெரியசாமி** எம்.ஏ., எம்.இ.டி.
வெள்ளகோவில்

அது 1964ஆம்ஆண்டு ஏப்ரல் மாதம் கடைசி வாரம். என் தந்தையார் மின்வாரியத்தில் பணிபுரிந்த காரணத்தால் பதவி உயர்வு காரணமாகப் பேரூர் அலுவலகத்திற்குப் பணி ஏற்கச் சென்றார். நானும் 9ஆம் வகுப்பு முடித்திருந்ததால் 10ஆம் வகுப்பில் சேர்த்துவதற்கு என்னையும் அழைத்துச் சென்றார்.

1964 சனவரி மாதம் தொடங்கி என் தாயாருக்கு ஒரு கனவு அடிக்கடி வந்ததாகக் கூறுவார். என் தந்தையாரும் அந்தக் கனவைக் கேட்டு ஏதோ சிவன் கோவிலுக்குப் போகச் சொல்லி உத்தரவு உள்ளது எனக் கூறுவார்.

கனவு இதுதான். "போக்குவரத்து இருந்த சாலை. பேருந்தை விட்டு இறங்கிய உடன் ஒரு சிவன் கோவில்".

பணி ஏற்கப் பேரூர் சென்று பேருந்தை விட்டு இணங்கியபின் சிவன் கோவிலைப் பார்த்துக் கும்பிட்டு விட்டு என் தந்தையார் அலுவலகத்திற்குச் சென்று பணி ஏற்றுக் கொண்டபின் மாலை 3 மணிக்கு மேல் அனுமதி பெற்றுக்கொண்டு பள்ளி இருக்கின்ற இடம் விசாரித்துச் சென்றோம்.

நெடுஞ்சாலையிலிருந்து திருமடத்திற்கு உள்ளே நுழைகின்றோம். மிகப்பெரிய வேப்பமரம். அதன்கீழ் சாந்து அரைக்கின்ற பகுதி. அதன் அருகில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து வெள்ளாடையுடன் ஒருவர் செய்தித்தாள் வாசித்துக் கொண்டு இருந்தார்.

அவர்தான் அடிகள் என்பது தெரியாது. வணக்கம் வைத்தபின் என் தந்தையார் வந்த விபரம் கூறினார். அவர்களும் பள்ளி அலுவலகம் இருக்கின்ற இடத்தைக் காட்டி, சென்று சேர்த்துவிட்டு வாருங்கள் என்று அனுப்பினார். வந்த வேலை முடிந்தது. அவர்களிடம் செய்திகளைச் சொன்னபின் ஜூன் மாதம் முதல் நாள் பள்ளிக்கு அனுப்புங்கள் என்று விடைகொடுத்து அனுப்பினார்.

இதுதான் அடிகள் பெருந்தகைக்கும் அடியேனுக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு. இன்னார் என்று அறியாமலேயே நிகழ்ந்த சந்திப்பு. பிறகு ஜூன் மாதம் பள்ளி தொடங்கியது. பள்ளிக்கு வருகை. வணக்கத்திற்குரிய எங்கள் தமிழாசிரியர் வித்துவான் மு. செகந்நாதன் அவர்கள் என்னை அழைத்து தகவல்கள் கேட்டபின் வகுப்பிற்குள் சென்று அமரச் சொன்னார்கள்.

அதற்குப் பிறகுதான். பள்ளிப்படிப்பு முடிவதற்குள், எங்களை முதன்முதல் அழைத்து வழிகாட்டியவர் திருமடத்தின் அடிகளார் என்றும், அவர்தான் எங்கள் நிறுவனத்திற்கும் பொறுப்பாளர் என அறியவந்தேன். இரண்டு ஆண்டுகள் குறிப்பிடத்தக்க செய்திகள் இல்லாமல் கழிந்தது. இரண்டு ஆண்டுகளும் எங்கள் தமிழாசிரியரோடு அவர் சொல்லிய திருமடத்தின் எழுத்துப் பணிகளை விரும்பிச் செய்து வந்தேன்.

கல்லூரியில் பயின்ற காலத்தில் அடிகள் பெருந்தகை முதல்வராகவும் பேராசிரியராகவும் இருந்து எங்களை வழிநடத்தினார். அவ்வாறு பயிற்றுவித்த காலத்தில் பாடத்தோடு பாடமாக சில அறிவுரைகளைக் கூறுவார்கள். ஏனைய மாணவர்கள் அதனைக் கடைப்பிடித்தனரோ இல்லையோ அடியேன் மனத்தில் அது ஆழமாகப் பதிந்தது. இன்றளவும் என்னை வழிநடத்தி வருகிறது.

கற்ற கல்வியை எந்தக் காலத்திலும் விற்காதே, மற்றவர்களுக்குச் செய்யும் பணிகளுக்கு எந்தக் காலத்தும் பொருளை முன்னிறுத்தாதே. ஏனெனில் பொருளை முன்னிறுத்திப் பணிகளைச் செய்தால் வித்தை பலிக்காமல் போய்விடும்.

எத்தனை நண்பர்கள் இதனை ஏற்றுக் கொண்டார்களோ தெரியாது. ஆனால் என் மனதில் அது ஆழமாகப் பதிந்தது. இக்கல்லூரிக்காலம் 4 ஆண்டுகளும் என் தமிழாசிரியர் அவர்களின் ஆதரவோடு திருமடத்துடன் நெருக்கமாக ஆவதற்கும், மகா சன்னிதானங்களின் கடைக்கண் பார்வை பதிந்து என்னைத் தொண்டனாகத் தெளிவதற்கும் உறுதியாக அமைந்தது.

பணிக்காலமும் சமயப் பணிக்காலமும்

1970ஆம் ஆண்டு பணிக்காலம் தொடங்கி 2007 மே மாதம் வரை பணிக்காலத்தில் மாதந்தோறும் மகம் நாள் வழிபாடு, மாசி மக வழிபாடு, மற்ற சிறப்பு வழிபாடுகள் ஆகியவற்றில் கலந்து கொள்வது மட்டும் இயன்றதாயிருந்தது. மகா சன்னிதானங்களைச் சந்திக்கும்பொழுதெல்லாம் ஒரு கருத்தை வலியுறுத்துவார்.

''ஆதிதிராவிடர், தாழ்த்தப்பட்ட இனத்தவர்களை நாம் அரவணைக்காமல் விட்டுவிடக் கூடாது. அவர்களுக்கு வழிபாடுகளில் முன்னுரிமை கொடுக்க வேண்டும்" என்பதனைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துவார். "அவர்களை நாம் நெருங்கவில்லை என்பதால்தான் மத மாற்றங்களும் மற்ற விரும்பத்தகாத செயல்களும் நடைபெறுகின்றன" என்பார்.

மகா சன்னிதானங்களை மக நாளில் சந்திக்கும்பொழுது அவர்கள் நம்மை அழைக்கின்ற முறையை வைத்துக்கொண்டே அவர்களின் மனப்பாங்கை அறியலாம். "வாடா. இப்பொழுதுதான் வந்தாயா?" என்று நம்மை அழைத்தால் மிகுந்த மகிழ்வோடும், அன்போடும் இருக்கின்றார். நம்முடைய செயல்பாடுகள் அவர்களுக்கு மனநிறைவைத் தந்துள்ளன எனப் புரிந்து கொள்ளலாம்.

'வாம்யா. இப்பத்தான் வருகிறீரா?" என அழைத்தால் ஏதோ மனதில் ஒன்று இருக்கிறது என்பதனைப் புரிந்து கொள்ளலாம். "வாங்க. இப்பத்தான் வருகிறீர்களா?" என அழைத்தால் நம்முடைய சமயப்பணிகள் இம்மாதம் மனநிறைவுடையதாக இல்லை என்பது பொருள். சன்னிதானங்களுடைய அறிவுரைகளை வாழ்க்கையில் இயன்ற அளவு கடைப்பிடித்து வருகின்றேன்.

பள்ளிப் பணிக்காலத்தில் பள்ளி இறுதித்தேர்வு எழுதும் குழந்தைகளில் மிகவும் கற்றலில் பின்தங்கியவர்களை - ஐவரைத் - தேர்ந்தெடுப்பேன். சனவரி மாதம் தொடங்கி ஏப்ரல் தேர்வுவரை அவர்களுடைய பெற்றோர் அனுமதியுடன் மாலை என் இல்லத்திற்கு அழைத்து, இரவு உணவு, காலை காபி, என இயன்ற எளிய தேவைகளை அவர்களுக்குக் கொடுத்து, தூங்கவைத்து, படிக்க வைத்து, பாடம் சொல்லிக் கொடுத்து வருவேன். ஆண்டு இறுதித்தேர்வில் அவர்களை வெற்றிபெற வைத்தேன்.

பொதுப்பணித்துறைத் தேர்வு எழுதும் இளைஞர்கள் யாரேனும் உதவி கேட்டால் அவர்களுக்கும் இலக்கணம், இலக்கியம் வினா விடை சொல்லித் தருகிறேன். வாரம் இருமுறை அறங்கள், திருமுறை, சித்தாந்த வகுப்புகள் தேடிவரும் மாணவர்களுக்குச் சொல்லித் தருகிறேன். வாழ்வியல், அருளியல் நிகழ்வுகளை நடத்தும்பொழுது தொகையை முன்வைத்துச் செய்வதில்லை. அவர்கள் வழிபாட்டின் நினைவில் மனமுவந்து கொடுக்கின்ற தொகையை இறைவன் கொடுத்ததாக எண்ணி ஏற்றுக்கொண்டு வருகிறோம்.

சன்னிதானங்களின் உள்ளக் கிடக்கையின்படி மகளிருக்குப் பயிற்சி கொடுத்து அவர்களையும் வழிபாட்டுப் பணியில் ஈடுபடுத்தி வருகின்றோம். இயன்றவரை தாழ்த்தப்பட்டவர்களின் இல்ல நிகழ்வுகள், கோயில் நிகழ்வுகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களையும் தமிழ்நெறியில் ஈடுபடுத்தி வருகின்றோம்.

என் பெற்றோர் படிக்காதவர்கள். ஆனாலும் இளமையில் நல்ல வழிபாட்டு நெறியை ஊட்டி வளர்த்தனர். அதனை மெருகேற்றி, முறைப்படுத்தி, வழிப்படுத்தி என்னை மனிதனாக்கியவர்கள் என் தமிழாசிரியர் அவர்களும், பேரூர் திருமடமும், எங்கள் மகா சந்நிதானமும் ஆவார்கள். அவர்களை இன்றும், என்றும் மறவாமல் நீள நினைந்து வாழ்த்துகின்றேன்.

"நம்மையுமோர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

திருச்சிற்றம்பலம்

57

முனைவர். **பா. சம்பத்குமார்**
மேனாள் பேராசிரியர் முதல்வர் & செயலர்.
பி. எஸ். ஜி.கலை அறிவியல் கல்லூரி.
கோயம்புத்தூர்

ஆன்மிகம் பாரதத்தின் பழமை உரிமைச் செல்வம். உலகியல் என்ற ஒன்றும் உண்டு. உலகியலை அவமதிக்காத ஆன்மிகம் ஆன்மிகத்தை மறவாத உலகியல் என்ற நிலைதான் பாரத நாட்டின் புத்தெழுச்சிக்கு பயன்படக்கூடிய ஆளுமையாக இருக்க முடியும். இதனை நன்கு உணர்ந்தவராக திகழும் பேரூச் அடிகளார் புகழ் சரித்திரமாகியுள்ளது.

மேலோர் புகழை விரிக்குஞ்சரிதையெல்லாம்
ஏனோர்க்கோ ருண்மை யுணர்த்தும தென்னையேல்
(ஊக்கத்தால்) யாமுமெம் வாழ்க்கை யுயர்வுடைய
தாக்கிட வல்லே மெனல்

என்று பாரதி கூறுவது பற்றி என் மனம் சிந்தித்தது. அவர் தம் தொடர்பு கிடைத்த வரலாற்றை எண்ணிப் பார்த்த போது. ஏற்பட்ட எண்ணத்தின் பிரதிபலிப்பே இந்த உரையாகும். அடிகளார் அறிமுகம் இறையருளின் கொடையாகும். நினைவலைகள் நெஞ்சில் பட்டதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பள்ளியில் படிப்பினை முடித்து உயர்கல்வியில் படிப்பினை தொடர கோவைக்கு 1964-ஆம் ஆண்டில் வந்தேன் பூ சா கோ கலைக்கல்லூரியில் புகுமுக வகுப்பில் சேர்ந்த போது எம் சிற்றப்பாவின் மகள் பேரூர் தமிழ் கல்லூரியில் பி. லிட் படித்துக் கொண்டிருந்தார். அவருடன் சென்று பேரூர் ஆலய தரிசனம் முடித்து வரும் வழியில் பேரூர் ஆதீனம் என்ற அறிவிப்பு பலகை கண்டேன்.

கல்லூரிக்குள் செல்ல விழைந்து சென்றேன். உள்ளே சென்றபோது எங்களுடன் வந்திருந்த புலவர் மருதவாணன் ஐயா அவர்கள், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் இடம் ஆசி பெற்றிட அழைத்துச் சென்றார். சாந்தம் தவழ்ந்த புன்னகை பூத்த அருளாசியுடன் அவரது தோற்றம் கண்டு மெய் மறந்தேன். ஆசி பெற்ற பின்பு அவரிடம், 'ஐயா, நான் ஈரோடு தமிழன்பன் ஐயா அவர்தம் மாணவன்' என்று கூறினேன். மகிழ்ந்தார். இதுதான் எனது முதல் சந்திப்பு

பி.எஸ்.ஜி கல்லூரியில் படித்தபோது தமிழ்த்துறை பேராசிரியர்கள் ம.ரா.போ. குருசாமி. வெள்ளிமலை எனப் பலரும் பேரூர் தமிழ்க் கல்லூரி பற்றியும், அடிகளார் குறித்தும் பேசுவர் அவர்கள் பேச்சில் 'தமிழ் என்பதே மூச்சு, என்பதற்கு அடிகளார் சான்றாவார் என்று கூறுவர் பேச்சுப்போட்டி கட்டுரை போட்டி என்பனவற்றிற்கு தமிழ்க் கல்லூரிக்கு செல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் அடிகளார் கண்ணில் படுவார் என் நெஞ்சில் நிலைக்கத் தொடங்கினார்.

அடிகளாரின் வரலாறு அறிந்தேன் தனி மதிப்பு என் உள்ளத்தில் பதியத் தொடங்கியது.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே

படித்து, பட்டம் பெற்று பணியில் சேர்ந்து பணியாற்றி வந்த காலத்தில் அடிக்கடி அடிகளார் குறித்த செய்திகளை- அவர் ஆற்றும் பணிகளை தமிழ் தமிழுக்கென தன்னை அர்ப்பணித்தவரை அறிய முடிந்தது. என் நெஞ்சில் அவர் நிலைத்து இருக்கத்தொடங்கிய காலகட்டம்.

1983 ஆம் ஆண்டில் பேரூர் தமிழ் கல்லூரியில் பணியாற்றும் சூழல் ஏற்பட்டது. அரசு உதவி பெறும் கல்லூரியின் சட்ட விதிகளுக்கு

உட்பட்டு, நானும், நண்பர் சத்தியமூர்த்தி அவர்களும், தமிழ்க் கல்லூரியில் பணியாற்றிட ஆணை வந்தது. இந்தச் சூழல் தான் எனது வாழ்க்கையின் ஒரு திருப்புமுனை ஆனது. நெஞ்சில் நின்ற அடிகளாரை நேரில் சந்தித்து அவர்தான் தலைமையில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. முதுமுனைவர் பட்டம் பெற்ற அடிகளாரிடம் முதல் சந்திப்பு ஏற்பட்ட நாளை மறக்க முடியாது. 'பூ சா. கோ. கலை அறிவியலில் நிர்வாகத்திலும், ஆசிரியர் பணியிலும், சிறப்பாக பணிபுரிந்த உங்களுக்கு என் கல்லூரியில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த கல்லூரியில் எம். ஏ முதுகலை பட்டப்படிப்பு இருக்கிறது. ஆய்வுப் பகுதிக்கு- அதன் வளர்ச்சிக்கு உங்களின் வருகையும், முனைவர் பூவண்ணன் வருகையும் உதவும் என்று உறுதியாக நம்புகிறேன். பணியாற்றுங்கள்' என்று கூறி வாழ்த்துடன் அனுப்பினார். சிறிது நேரத்தில் மீண்டும் என்னை அழைத்தார். 'நிர்வாகத் திறமையுடன் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் உங்களை வரவேற்கிறேன். தயங்காமல் கருத்துக்களைக் கூறலாம். இந்தக் கல்லூரி ஆதினத்துக்கு உட்பட்டது. எனவே, இங்கு நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்கவும்' என்று கூறி அனுப்பி விட்டார். நான் வியந்தேன். நடைமுறை வேறுபாடுகளை எவ்வளவு நாகரிகமாக எடுத்துரைத்தார் என்பதை அறிந்தேன். இவர்தம் ஆளுமையை புரிந்து கொண்டேன்.

அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர்

என்ற குறள் நினைவுக்கு வந்தது.

இவர் துறவி மட்டுமல்ல. 1967 முதல் பேரூர் ஆதின மடாதிபதியாக இருந்து வருபவர் கல்லூரித் தலைவர் அதற்கு ஏற்ப தம் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டவர். தமிழைத் துறக்காத துறவி இவர் என்று முடிவு கொண்டேன்.

பேராசிரியர்கள் திருவாளர்கள். வையாபுரி, முத்துக்குமாரசாமி. சென்னியப்பனார் போன்றவர்கள் புலமையாளர்கள், சைவ சமயத்தில் முழு ஞானம் கொண்டவர்கள். இவர்களிடையே நான் அங்கு

பணியாற்றிய போது, பலவற்றையும் அறிந்தேன். பக்தி இலக்கியங்கள், சைவ சமயத் தொண்டு. ஆதீனங்கள்- வரலாறு பலவற்றையும் கற்றறிந்தேன். அடிகளார் அவ்வப்பொழுது ஆற்றும் உரையில் -ஆன்மிக சொற்பொழிவில் கற்றது ஏராளம். சொல்லப்போனால் நான் தமிழ் படித்ததில் முழுமை பெற்றது இங்கிருந்த ஒன்றரை ஆண்டு காலம் தான். ஆய்வுப் பகுதியில் [MPhil. Ph.D] வகுப்புகள் தொடங்க அடிகளார் காட்டிய ஆர்வம் வியப்படையைச் செய்தது.

'பள்ளித்தலமனைத்துங் கோயில் செய்குவோம் என்று கூறிய பாரதியின் வாக்கு இங்கு நிறைவேறி உள்ளதைக் கண்டேன். வகுப்பு எடுக்கப் போகும்போது கோயிலினுள் செல்லும் உணர்வை இந்தக்கல்லூரியில்தான் உணர்ந்தேன்

7- ஆம் நூற்றாண்டில் அப்பரும். சம்பந்தரும் தலயாத்திரை சென்று, தேவாரங்கள் மூலம் சைவத்தை பரப்பினர் என்பது வரலாறு நமது சாந்தலிங்க ராமசாமி அடிகளார் கொங்கு நாட்டில் சர் ஆர் கே. சண்முகம் செட்டியார், கோவை கிழார் சி.எம். ராமச்சந்திரன் செட்டியார், வெள்ளக்கிணறு வே. சி. சுப்பையா கவுண்டர். திவான் பகதூர் இரத்தின சபாபதி முதலியார்,அருட்செல்வர் திரு.என்.மகாலிங்கம் போன்ற பெருமக்கள் துணையுடன் மனிதனுக்கு குறிக்கோளும் அதை அடையும் வழியையும் காட்டுவது சமயம் என்பதால், அதை செயல்படுத்திய போதே கல்வியையும், அறிவுத்திறனையும் வளர்க்கக் கல்வி நிறுவனங்களை நிறுவி செயல்பட்டதை ஒரு நாள் அவரிடம் கல்வி வளர்ச்சி குறித்து பேசும் நிலையில் அறிந்தேன். அடிகளார் கல்லூரியில் ஆய்வுப்பணியை மேற்கொள்ள பூசாகோ அனுபவத்தை கேட்டறிந்ததை பெரும் பேறாகக் கருதுகிறேன்.

பி எஸ் ஜி குடும்பத்தார் பேரூர் ஆதீனத்துடன் தொடர்பு கொண்டு, வணிக வழியில் ஈட்டிய செல்வத்தை கல்வி வளர உதவி செய்ததையும், முனைவர்.ஜி.ஆர். தாமோதரன் அவர்கள் ஆற்றிய உதவியும், என்னிடம் அவர் கூறிய போது நான் இங்கு வந்ததும் அதன் தொடர்ச்சியே என்பதை உணர்ந்தேன்.

குருபூஜை மற்றும் சைவத் தொடர்பாக நடைபெறும் நிகழ்வுகளில் தவறாமல் கலந்து கொண்டு அவர்தம் ஆளுமை திறனை புரிந்து கொண்டேன். அகக் கண்களாகிய கல்வியை திறந்தால் அன்றி சமயப் பணியை செவ்வனே செய்ய இயலாது என்று கருதியவர் அடிகளார். மக்களிடம் நேரில் சென்று சமுதாய உயர்மட்ட கீழ்த்தட்டு மக்களை அணுகி செயல்பட்ட விதம் குறித்து ஒரு நாள் கேட்டேன். புன்னகையுடன், 'தெளிவும், துணிவும் இருந்தால் செய்ய இயலும்' என்றார். தமிழுக்குத் தன்னை ஒப்படைத்த குரு மகா சன்னிதானம், தமிழுக்குத் தன்னை ஒப்படைத்து. தமிழன் பிறரை தாழ்த்தான், பிறருக்கு என்றும் தலை தாழான் என்ற சொல்லுக்கு இலக்கணமாக வாழ்ந்ததை உணர்ந்தேன். அவர் பண்போடு கூடிய பரிவு மிகுந்தவர் தமிழ்– கல்வி– சமூகம் சமயம் என்ற பகுதிகளை இணைத்து. எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை நிறுவியவர்

எம். பில் வழி காட்டும் முறையில் 5 மாணாக்கரை என் வழிகாட்டுதலுக்கு ஒப்படைத்தார் களந்தை ஆதித்தேச்சுவரம் கோயில் திரு.வி.க. நோக்கில் பெண்மை, குறுந்தொகையில் பாலைத்திணை, சிவன்மலை குறவஞ்சி, ஐங்குறு நூறில் தோழி என்றும் தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அது குறித்து அவரிடம் விளக்கம் கூறினேன். பழமையும் புதுமையும் இணைந்து உள்ளது என்று வாழ்த்தினார். 'நீங்கள் உள்ள கல்லூரியின் அமைப்பு வேறு. இங்குள்ள அமைப்பு வேறு, தமிழ் வழியே வீர சைவத்தின் சிறப்புக் கூறி இறைவனை அணுக மனப்பக்குவம் தந்து சமூக மக்களை மேம்படுத்துவதே இங்கு உள்ள பொது முறையாகும்.' என்றார். அப்போது கல்லூரி நூலகத்தை அரும் ஓலைச்சுவடிகளை மென்பொருள் துணையுடன் சேமிக்கும் முறையை கையாள வேண்டினேன். புன்னகை மட்டுமே பதிலாக வந்தது. இன்று அச்செயல் முழுமை பெற்றதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக உள்ளது. முன்னாளில் 'அறிவர்' என்ற சொல்லால் மகான்களும் துறவிகளும் அழைக்கப்பட்டனர். இன்று அதனை அடிகளாரிடமும், அடுத்து வந்துள்ள 25 ஆவது பட்டம் குரு மகா சந்நிதானம் மருதாசல அடிகளாரிடமும் காணுகிறோம்.

மீண்டும் பூசா கோ கலை அறிவியல் கல்லூரிக்கும் திரும்பச் செல்ல வேண்டிய நிலை வந்தது. 1 ஆண்டுகளில் தமிழ், ஆன்மிகம், இறைபணி, ஆதீனம், சைவ சமயத்தின் சிறப்பு என்பதை முழுக்க கற்ற நிறைவுடன் சென்றேன். ஒரு செய்தி என்னுள்ளத்தில் இருந்தது. பி லிட் பட்டப்படிப்பில் ஆங்கிலமே இல்லா நிலை சரிதானா? என்ற கேள்வி இருந்தது. பின்னாளில் நான் பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ் பாடக் குழுவிற்கு தலைவராக வந்த போது, பலரிடம் பேசி, துணைவேந்தரின் கருத்துக்குச் சென்றபோது, 'எல்லாம் சரிதான், பேரூர் அடிகளார் ஒத்துக்கொள்ளும்படி செய்யுங்கள்' என்றார்.

தவத்திரு அடிகளார் ஏற்க மாட்டார் என்பதை அறிவேன். இருப்பினும் தீர்மானம் இயற்ற முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த நாள் அடிகளார் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். 'நேரில் சந்திக்க வருக' என்றார். சென்றேன். எதற்கு இந்த மாற்றம்? என்றார். தமிழ்க் கல்லூரி வளர்ந்த விபரத்தைக் கூறினார். வித்துவான். புலவர், பிறகு பி லிட் பிலிட் பி.ஏ. வுக்கு சமமாக்கிய நிகழ்வுகளையும், அதற்காக போராடிய விபரங்களையும், பக்குவமாக எடுத்துரைத்தார். ஆனால் உறுதியாக இருந்தார். அவர் தம் அணுகுமுறை. கூறிய காரணம், ஆங்கிலம் இல்லை என்றாலும், விருப்பமுள்ளவர்கள் படித்துக் கொள்வர். தமிழால் முடியும் என்பதை நிலை நிறுத்தவே தொடங்கியது என்றெல்லாம் கூறிவிட்டு, 'உங்களிடம் பேச வேண்டுமென என் உள்ளம் விரும்பியது. அதனால் அழைத்தேன்'என்றார்.

எல்லாவற்றையும் கேட்டு, மீண்டும் வருவேன் என்று கூறி நான் சென்றேன். யோசித்தேன். பலரிடம். குழுவுடன் கலந்து பேசினேன். எல்லாவற்றையும் துறந்தவர் அடிகளார் தமிழைத் துறக்காமல் பல சாதனைகளை நிகழ்த்தி வெற்றி நிலையில் உள்ளார். துறந்தும், தமிழைத் துறவாத மாபெரும் துறவிக்கு ஏன் எதிர்மறை மனநிலையை தர வேண்டும்? என்ற முடிவில் அத்திட்டத்தை கைவிட்டேன். தொலைபேசியில் பேசினேன். 'தமிழ் உம்மை இயக்கி உள்ளது என்றார். மறக்க முடியாத அனுபவம்.

ஆண்டுகள் சென்றன. நான் முதல்வராக, செயலராக எம்

கல்லூரியில் பணியாற்றிய நிலையில் இருந்தேன். தர நிர்ணயக் குழு உறுப்பினராக இருந்தேன். (NAAC COMMITTEE) பேரூர் கல்லூரி அப்போது 'பேரூர் தமிழ் கலை அறிவியல் கல்லூரி' ஆக மாறிய நிலை. NAAC தொடர்பாக அறிய அழைத்தார். சென்றேன். அப்போது முதல்வராக மருதாசல அடிகளார் இருந்தார். அவரிடம் பேசிய பின்பு, அடிகளாரிடம் பேசினேன். இன்றைய நிலையில் தேவை என்பதை வலியுறுத்தினேன் இணைந்து செயல்பட 'முதல்வரை பாருங்கள் என்றார். இணைந்தோம். செயல்பட்டோம். முனைவர் குமாரசுவாமி அவர்களுடனும், பிறருடனும் இணைந்து செயல்பட்டோம். அதன் பிறகு நான் என் மகனின் அழைப்புக்கு அமெரிக்கா செல்ல வேண்டிய சூழல் நீண்ட இடைவெளி ஏற்பட்டு விட்டது.

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே
நன்னூலின் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்த
நல்லாசான் நமது அடிகளார்!

அவர் தமிழ் மொழிக் காவலர் தமிழ்ச் சிறப்பிற்கு அவர் போராடியவர். நல்ல ஆளுமைப் பண்புடையவர். சமயத் தொண்டில் வீர சைவர் ஆனால் ஓர் ஈர சைவராகவே ன்டெண்டர் ஹார்ட்டட்தி செயல்பட்டவர். கனடா. மலேசியா, அமெரிக்கா என உலக அளவில் தமிழ்ப் பணியும் சைவப் பணியும் ஆற்றியவர் அப்பர் பெருமான் எப்படி இருந்திருப்பார் என்பதை நினைவு படுத்தியவர். நமது பேரூர் ஆதீன அடிகளார், கலைஞர் நடத்திய தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் தமிழை வளர்ப்பதில் சமயங்களுக்கும் பெரும் பங்கு உள்ளது என்று எடுத்துரைத்து. 'சமயம் வளர்த்த தமிழ்' எனும் பொது அரங்கத்தின் தலைமை பொறுப்பேற்று நடத்தியவர்.

கொங்கு மக்களால் 'பெரியசாமி என்று அன்புடன் அழைக்கப்பட்ட அடிகளார். திருமடங்களின் மரபுகளை விட்டு

விலகாமல், பொதுமக்களின் விருப்பங்களையும் புறக்கணிக்காமல் காலத்தின் தேவைக்கேற்ப தம்மை புதுப்பித்துக் கொண்ட திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் ஆதீனம் 24 ஆம் பட்டம் குரு மகா சன்னிதானம் கயிலைக் குருமணி முது முனைவர். திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரிடம் எனக்கு ஏற்பட்ட தொடர்பு இறையருளன்றி வேறில்லை.

பள்ளித்தலமனைத்துங் கோயில் செய்குவோம்' என்று கூறிய பாரதியின் வாக்கு இங்கு நிறைவேறி உள்ளதைக் கண்டேன். வகுப்பு எடுக்கப் போகும்போது கோயிலினுள் செல்லும் உணர்வை இந்தக்கல்லூரியில்தான் உணர்ந்தேன்.

58

முனைவர் இரா. கோகுல்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி (துன்னாட்சி),
கோயம்புத்தூர் - 641020.

பள்ளியிறுதிக் காலத்தில் அரனார் திருக்கோயில்கள் மீது ஏனோ ஈர்ப்பு ஏற்பட்டு வளரத் தொடங்கியிருந்தது. பள்ளிக் கல்வியை நிறைவு செய்தவுடன் பேரூர்ப் பட்டிப்பெருமான் திருக்கோவிலுக்கு அடிக்கடி செல்லலாமே என்பதற்காக பேரூராதீனத் தமிழ்க் கல்லூரியில் 2003இல் பி.லிட். சேர்ந்தேன். ஆனால் சைவத்தை எதிர்நோக்கி பேரூர் சென்ற எனக்கு சைவத்தையும் தமிழையும் இணைத்து வழங்கியது தமிழ்க் கல்லூரி. கல்லூரியில் இளங்கலை சேரும்வரை தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களை அறிந்திலேன். ஆனால் காலம் செல்லச் செல்ல அவரது தமிழ்ப் பணிகளையும் சைவப் பணிகளையும் அறிந்து கொண்டேன்.

அடிகளாரின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுவதற்காக முன்னர் வெளிவந்த ஆதீன விழா மலர்களை சேகரித்து வாசித்தேன். அதில் ஆளுமைகள் சிலர் அடிகளாருடன் ஏற்பட்ட சில அனுபவங்களைப் பகிர்ந்திருந்தனர். அவற்றுள் சில குறிப்பிடத்தக்கவை. தமிழ்ப்பற்றையும் அடிகளின் எளிமையையும் நெஞ்சுறுதியையும் எடுத்துக்காட்டுவன. அவற்றை இவண் சுருங்கக் கூற விழைகிறேன்.

நுகர்வனவற்றை நெறிப்படுத்துக

மூலிகைமணி க.வெங்கடேசன் சென்னையில் ஆய்வுச் சொற்பொழிவு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தார். அதில் அடிகளாரை 'சித்தர்நெறி' என்ற பொருண்மையில் உரையாற்ற விண்ணப்பதித்தார்.

அடிகளாரும் ஏற்றுக் கொண்டார். ஒருமணி நேரம் உரையாற்றிய அடிகளார் அருவியெனச் சித்தர் குறிப்பிட்டு மணிமுடியென வாழ்வியலைக் 'நுகர்வனவற்றை நெறிப்படுத்தியவர்கள் சித்தர்கள் ஆகலாம்' என்று குறிப்பிட்டார் என்பது க. வெங்கடேசன் அவர்கள் தரும் குறிப்பு.

குளித்தலை தமிழ்க் கா.சு. நினைவு இலக்கியக்குழு நிறுவனர், மீ.சு. இளமுருகு பொற்செல்வி அவர்களின் அனுபவப் பகிர்வு சுவையானது. 'கா.சு. நினைவு இலக்கிய விழா நிகழ்ச்சிகள் நிறைவுற்று பேரூருக்கு மரியாதைக்குரிய அடிகளார் அவர்கள் பயணப்பட ஆயத்தமானார்கள். ஒருங்கிணைப்பாளர்கள் அடிகளார் ஊர் திரும்பும் பயணச் செலவுக்கு தொகை கொடுக்கமுயன்ற போது, 'நான் கல்லூரி மாணாக்கர்கள் சுற்றுலாச்செலவு மேற்கொண்ட பேருந்தில்தான் வந்தேன். முதலில் வழிச் செலவுக்கு அனுப்பிய தொகை இருக்கிறது. இப்போது வேறு வேண்டாம்' என்று மறுத்துவிட்டார்கள்.

இதைக் கண்ட நான் மயக்கமுற்று விழாதது அடிகளாரின் அருள்பார்வையால்தான் என்று குறிப்பிட்டால் மிகையாகாது. வழிச்செலவுத் தொகை எவ்வளவு கொடுத்தாலும் மனநிறைவு பெறாத பலரைச் சந்தித்து இருக்கிறேன். 'போதும்; வேண்டாம்' என்று கண்டது அடிகளார் அவர்களிடத்துத்தான்!' அடிகளாரின் வாழ்க்கை எளிமையால் நிறைந்தது.

லால்குடி அறநெறிக் கழகத்தின் தலைவர், ஜி. கனகசபை எம்.ஏ. அவர்கள் 24-01-1986 அன்று 'தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஒரு கண்ணோட்டம்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் அடிகளாரின் எளிமைக்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியைப் பதிவு செய்துள்ளார். அது வருமாறு.

'ஒரு முறை அடியார் திருக்கூட்டத்துடன் அடிகளார் தவத்துறைக்கு (லால்குடி) எழுந்தருளினார்கள். அடியார் குழாத்துடன் மடத்தின் பேருந்தில் ஓர் இரவு யாதொரு அறிவிப்புமின்றி திருத்தவத்துறை வந்து எங்களைத் திளைக்கச் செய்தார்கள். 'என்ன சுவாமி! முன் கூட்டியே தெரிவித்திருந்தால் ஊர் எல்லையிலேயே

பூரண கும்ப மரியாதையுடன் ஊர்வலமாக அழைத்து வரும் பேறுபெற்றிருப்போமே' என்று யான் கூறிய போது,

'அது முறையாகாது. நேரமும் விரயமாகும் என்பதற்காகத்தான் இங்ஙனம் அறிவிப்பின்றி வந்தோம். எங்கள் திருக்கூட்டத்தின் நோக்கமும் ஆடம்பரமின்றி எளிய முறையில் ஆண்டவனை வழிபடுதல்தான்; அதுவும் குறைந்த பொழுதில் அதிகமான திருக்கோயில்களைத் தரிசிப்பதுதான்' எனக் கூறியபோது நாங்கள் சுவாமிகளின் எளிமையைப் பற்றிப் பேசி மகிழ்ந்தோம்.

அது மட்டுமா, இரவுப் பொழுதினைப் போக்குவதற்குத் தனியாக ஓர் இடம் ஒதுக்கப் பெற்றிருக்கிறது என்பதனையும் தவிர்த்து எங்களுடைய எளிய இல்லத்திலேயே குடும்பத்தில் ஒருவராக உணவு கொண்டு இரவுப் பொழுதையும் கழித்தார். மறுநாள் நீராடிவிட்டு அடியார் திருக்கூட்டத்தில் ஒருவராக இருந்த பூசனைகள் முடித்து தவத்துறை அருளாளர்களுக்குத் திருநீறு அளித்து விடை பெற்றுச் சென்றார்.'

நுகர்வுக் கலாச்சாரம் பெருகிநிற்கும் இக்காலத்தில் அடிகளின் வாழ்வு நமக்கான படிப்பினை.

எதிலும் தமிழ் என்ற முழக்கம்

டாக்டர் சு. சிவகாமசுந்தரி அவர்கள் அடிகளாரைக் குறித்து எழுதியுள்ள குறிப்பு மிக முக்கியமானது. அடிகளாரின் எங்கும், எதிலும் தமிழ் என்ற கொள்கைக்கு சான்றாக அது அமைந்துள்ளது. டாக்டர் சு. சிவகாமசுந்தரி அவர்கள், திரு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவர் பணியாற்றியவர், பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்தவர். அவரது பதிவு பின்வருமாறு.

கூட்ட 'பாரதியார் பல்கலைக்கழகத்தின் முதல் அளவை மன்றக் கூட்டம். மன்றத்திலே அளவை மன்ற உறுப்பினர்கள் ஆவல் நிறைந்த விழிகளோடு அமர்த்திருக்கின்றனர். மன்றக் நடவடிக்கைகள் ஆங்கிலத்திலே துவங்குகிறது. தவத்திரு அடிகளார் அவர்களை

வாழ்த்திப் பேசுமாறு துணைவேந்தர் கேட்டுக் கொள்கின்றார். ஒலிவாங்கியின் முன்நின்ற அடிகளார் 'தமிழ்க் கவிஞன் பாரதியின் பெயரால் நடைபெறுகின்ற பல்கலைக்கழகத்திலுமா கூட்ட நடவடிக்கை பிறமொழியில் நடக்கிறது? எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்று கூறுகின்ற ஆட்சியிலும் தமிழுக்குப் பாரதியார் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது இடமா?' என முப்பது மணித்துளிகளுக்கு மேல் நயமாக, மென்மையாக இடித்துரைக்கும் பாங்கில் சொற்களை அருவி போல் கொட்டிப் பேசினார்.'

எழுத்தாளர் சங்கத் தொடக்கம்

குன்றக்குடி பெரியபெருமாள் அவர்களின் கட்டுரை அனைத்து இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கோவை மாவட்டக் கிளையின் தொடக்க வரலாற்றை எடுத்துக்காட்டுகிறது. அதில் அடிகளாரின் பங்கு எத்தகையது என்பதை அறிவிக்கிறது. 'அனைத்து இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் கோவை மாவட்டக்கிளை தொடக்க விழாவைப் பேரூர்த் தமிழ்க் கல்லூரியில் நடத்திக் கொள்ளத் தவத்திரு அடிகளாரிடம் இசைவு பெறவந்துள்ள என் உள்ளத்துள் 'ஒப்புதல் அளிப்பார்களோ? என்னவோ?' என ஓர் எண்ணம் அலைபாய்ந்து கொண்டிருக்கிறது!

பூசனை முடித்த புனிதத் திருக்கோலத்தோடு வந்த தவத்திரு அடிகளார் ஓர் ஆசனத்தில் அமர்ந்ததும், வணங்கி எழுந்து வந்திருக்கும் காரணத்தை மென்று விழுங்கி மெல்லக் கூறுகிறேன்! உன் தவத்திரு அடிகளார் மிகுந்த மகிழ்வோடு, 'அப்படியா மகிழ்ச்சி! தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழ்க் கல்லூரியில் தொடங்குவது சாலப் பொருந்தும். விழாவை முற்பகலில் வைத்துக் கொள்ளுங்கள்; மதிய உணவைத் தமிழ்ப் படைப்பாளிகளுக்கு நமது திருமடம் படைத்து மகிழும்!' எனக் கூறுகின்றார்கள்.

'இடம் கிடைக்குமா?' என ஏக்கத்தோடு சென்ற நான், இனிய விருந்தும் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் ஊக்கத்தோடு சொல்லப் போனால் உற்சாகத்தோடு திருமடத்திலிருந்து திரும்புகிறேன்.'

தமிழ்ப் பணிகள் நடப்பதற்குத் தன்னால் என்னவெல்லாம் செய்ய இயலுமோ அவற்றை அப்பொழுதே செய்யும் அவரது இயல்பு வணங்கத்தக்கது.

சிறையிலும் சிவமணம்

கல்லூரிப் பொன்விழாச் சிறப்புமலரில் திருநெல்வேலி சிவகளை மு. சுப்பையா அவர்கள் எழுதிய 'நினைவில் நின்றவை' கட்டுரை முக்கியமானது.

நற்கல்வி, நற்குடும்பம், நற்செல்வம் எல்லாம் நன்மையாகவே அமைந்தவர்களுக்கு மட்டுமல்ல சைவம். வாழ்வில் நெறிதவறியவர்களுக்கும் அவை சென்று சேரவேண்டும். அவர்கள் உய்வதற்குரிய வழியைக் காட்டுவது தமது கடன் என்று பணியாற்றியவர் அடிகளார் என்பதை அக்கட்டுரை. எடுத்துக்காட்டுகிறது.

'கோவை மத்திய சிறைச்சாலைகட்கு மாதமொருமுறை சென்று கைதிகட்கு அருள் உரையாற்றி நன்னெறிக்கு மாற்றி வருவது அடிகளின் வழக்கம்.

சிறைவாசிக் கைதியாக இருந்த பாலதண்டாயுதம் அடிகளிடம் அளவற்ற பக்தி கொண்டவர்.

சிவப்பு நிறத்திலான பூக்களை அளிக்கும் செடிகளை அறைக்கு முன் வளர்த்து வந்தார். அந்நிறம் கம்யூனிச தத்துவத்தை நினைவுபடுத்தும் என்பார் அவர். 'சிவப்புநிறம் என்பது சிவனுக்குரியது. அதைப் பார்த்தபொழுதெல்லாம் ஏன் நீங்கள் செம்மேனியம்மானை நினைவு கூரக்கூடாது' என்பார்.' சிவபக்தரானார் பாலதண்டாயுதம்.

திருமுறையும் அடிகளாரும்

திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டார்வழி பேரூராதீனம் சத்வித்யா சன்மார்க்க சங்கம், கயிலைக்குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத் தந்தை சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மெய்ப்பொருளியல் உயராய்வு நடுவம் 'நல்லார் இணக்கம்' என்னும்

இணையவழி உரைத்தொடரை நடத்தி வருகிறது. இன்று (03.07.2020) மணியளவில் மரபின் மைந்தன் மாலை 6.15 முத்தையா அவர்கள் 'திருமுறைத் தமிழ்நெறியில் பேரூரடிகளார்' என்னும் பொருண்மையில் ஒரு மணிநேரம் உரையாற்றினார். தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் சைவப்பணி குறித்தும் தமிழ்ப்பணி குறித்தும் அவ்வுரை அமைந்து இன்பம் பயத்தது.

மரபின் மைந்தன் முத்ததையா அவர்கள் அடிகளார் குறித்துப் பகிர்ந்துகொண்ட நிகழ்ச்சிகளுள் மூன்று என்னை மிகவும் கவர்ந்தன. அவை அடிகளாரின் திருமுறை ஊற்றத்தை வெளிப்படுத்துவன.

முதல் நிகழ்ச்சி

முதலிபாளையத்தில் அடிகளாரின் தந்தையின் குருபூசையில் நடந்த நிகழ்வு. அடிகளார் இலிங்கத் திருமேனிக்கு தீப தூபங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார். வெளியில் இசைக்கருவிகள் முழங்கிக் கொண்டிருக்கின்றன. ஒருவர் திருமுறை விண்ணப்பம் செய்கிறார். அப்பொழுது 'தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை' என்ற திருவாசகப் பாடலைப் பாடுகிறார். ஆனால் 'தந்தது உன்தன்னை' என்பதற்குப் என்தன்னை' என்று மாற்றிப் பாடிவிடுகிறார். பதிலாகத் 'தந்தது

அடிகளார் இதைக் கேட்டுவிட்டு உடனே 'தவறாக உள்ளது திருத்திப் பாடுங்கள்' என்று அறிவுறுத்தினாராம். அத்தனை இசைக்கருவிகள் முழங்கிக் கொண்டிருந்த பொழுதும் அடிகளாரின் உள்ளம் திருமுறையில் ஒன்றியிருந்தது என்பதற்குச் சான்று இந்நிகழ்வு.

இரண்டாவது நிகழ்ச்சி


பெரியபுராணத்திற்கு இன்றுவரை எழுதப்பட்டுள்ள உரைகளுள் சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உரை மிகச் சிறந்தது என்பது அறிந்தோர் கூற்று. சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் மகனார் கண்ணாயிர முதலியார் அவர்கள் சேக்கிழாரின் பெரியபுராணச்




தமிழ்க் கல்லூரி 60ஆம் ஆண்டு பயிற்சி மொழி, வழிபாட்டு மொழி மாநாட்டில் மேனாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களுடன் பேரூரடிகளார் அவர்களும், தற்போதைய 25 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் அவர்களும்



வளர்தமிழ் இயக்க பயிற்சி மொழி வழிபாட்டு மொழி நிகழ்வில் கயிலை குருமணி அவர்களுடன் மேனாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்கள், தற்போதைய 25 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் அவர்கள், சிரவை ஆதீனம் 4 ஆம் குருமகா சந்நிதானங்கள் அவர்களும், சமத்தூர் மன்னர் கிருஷ்ணராஜ் வாணவராயர், பண்ணாரி அம்மன் குழுமங்களுடைய தலைவர் எஸ். வி. பாலசுப்ரமணியம், கோவை மருத்துவமனை தலைவர் மருத்துவர் நல்ல. பழனிச்சாமி ஆதியோர்



கொங்கு நாட்டிலே பிறந்து அமெரிக்காவில் யோகவில் (yogaville) ஆசிரமத்தை அமைத்து தாமரைக் கோவிலை எழுப்பிய சச்சிதானந்த சுவாமிகள் அமெரிக்கா அடியார்களுடன் நமது பேரூர் ஆதீனத்திற்கு வருகை புரிந்த போது.



போந்து என் உயிர்க்கு உயிராம் சாந்தயர்
தன் பதம் ஏந்து கருத்தே என்று வழிபாடு

சிறப்புகளைத் தெருவெலாம் முழங்கச் செய்ய எண்ணம் கொண்டு கோயம்புத்தூரில் ஓர் இயக்கத்தை உருவாக்கி, அதற்கு அடிகளாரைத் தலைவராக இருக்க விண்ணப்பித்துக் கொள்ள அவரும் இசைவுதந்து தலைமை ஏற்றுள்ளார். மரபின் மைந்தன் முத்தையா செயலாளராக இருந்து சிறப்பித்துள்ளார். அவ்வியக்கத்திற்குப் பெயரிடுவதில் விவாதம் வந்தபொழுது அடிகளார் 'ஏன் புதிய பெயர்களைக் தேடவேண்டும். சேக்கிழார் வைத்த பெயரினையே வைப்பதுதான் சிறந்தது. எனவே இவ்வியக்கத்திற்குப் புனிதர் பேரவை' என்று பெயரிடுக' என்று ஆற்றுப்படுத்தியுள்ளார்.

சைவ அடியார் குழுக்களைச் சேக்கிழார் 'புனிதர் பேரவை' என்று பெரியபுராணத்தில் குறிப்பிடுகிறார். எவ்விடத்திற்கு எது பொருத்தமாக இருக்கும் என்பதை அறிந்தாற்றும் இயல்பினர் அடிகளார்.

மூன்றாவது நிகழ்ச்சி

வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலில் இருபதாண்டுகளுக்கு முன்பு யோகம் குறித்து நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் அடிகளார் பங்கெடுத்துள்ளார்.

ஈஷா யோக மையத்தின் நிறுவனர் சற்குரு ஜகிவாசுதேவ் போன்றோர் கலந்துகொண்ட நிகழ்ச்சி அது. அந்நிகழ்ச்சியில் அடிகள் தியானம் குறித்து உரையாற்றியுள்ளார். அவ்வுரை முழுவதும் கமழ்ந்துள்ளது. 'ஒன்றியிருந்து திருமுறைத் தமிழ்மணம் நினைமின்கள்' என்ற திருநாவுக்கரசரின் தொடரையே தியானம் என்பதற்கான விளக்கமாகக் கொண்டு அடிகள் திருமுறைநெறியில் உரையாற்றியுள்ளார்.

அடிகளாரின் எளிமையும் தமிழ்ப்பற்றும் திருமுறைப் பற்றும் எளிய மக்கள் மீது கொண்ட கருணையும், அதிகாரத்திற்கு அஞ்சாத குணமும் உளங்கொள்ளத்தக்கவை. இளந்தலைமுறையினரிடம் அஞ்சாத குணமும் அவற்றை மீண்டும் மீண்டும் பேசி நிலைபெறச் செய்ய வேண்டியது நம் கடன். எதிர்வரும் சமூகத்தை அவை நன்னெறிக்கு ஆற்றுப்படுத்தும்.

'புகழ்சாந்த லிங்க அடிகளார் பொற்றாள்
அகமகிழ்ந்து போற்றிசெயும் அண்ணல் – தகவு
திகழ்ராம சாமித் திருமுனியைச் சார்ந்தோர்
மகபதிபோல் வாழ்வார் மகிழ்ந்து'

– தவத்திரு வாரியார் சுவாமிகள்

59

சிவா பிள்ளை

லண்டன்

என்னுடைய ஆன்மீக குருவாக யோக குருவாகத் திகழ்ந்தவர் சச்சிதானந்த சுவாமிகள் ஆவார். அவர்கள் வாயிலாக சீர் வளர்சீர் கையிலைக் குருமணி சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் தொடர்பு எனக்குக் கிடைத்தது.1952ஆம் ஆண்டு முதல் இன்று வரை சாந்தலிங்கர் திருமடத்துடனும் சாமிகளுடனும் நீண்ட நெடிய அன்புத் தொடர்பால் பல நன்மைகளை மன நிம்மதியை நிறைவைப் பெற்று வருகிறேன் என்பதைக் கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அடிகளாரும் கௌமார மடாலயம் சுந்தர சாமிகளும் எங்கள் இல்லத்திற்கு வந்து தங்கியது என்பது மறக்க முடியாத மிகப்பேருவகையைத் தருகின்ற உணர்வின் வெளிப்பாடாக என் உள்ளத்தில் என்றென்றும் நீங்கா இடம் பெற்றதாகத் திகழ்கின்றது.

மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்று கூறுவார்கள். தமிழ் மொழி என்பது நம் உணர்வில் உயிரில் கலந்தது. இந்த மொழியைப் பாதுகாக்க வேண்டிய கடனை தமிழர்களாகிய நம் ஒவ்வொருவருடைய உணர்வில் இருந்து உதிரத்தில் இருந்து வெளிப்பட வேண்டும். இது எனது நீண்ட கால கனவாகவும் ஆசையாகவும் என்றென்றும் திகழ்வது.

லண்டன் மாநகரத்தில் 35க்கும் மேற்பட்ட கோயில்கள் காணப்படுகின்றன. இந்த கோயில்களில் ஓதுவார்கள் கட்டாயம் நியமிக்க வேண்டும் என்று அடிகள் பெருந்தகைகள் ஆசைப்பட்டார்கள். ஆனால் அந்த ஆசை இன்னும் ஒரே ஒரு கோயிலைத்தவிர பிற எங்கும் செயல்படவில்லை என்பது மனதளவில்

வேதனை அளிப்பதாக உள்ளது. அடிகளார் உடைய கனவு மெய்ப்பட அனைத்து சான்றோர் பெருமக்களும் தேவார திருவாசகத்தை கற்பித்தல் கற்றல் அதை அடுத்த தலைமுறைக்கு கடத்தல் என்ற நிலையில் செயல்பட வேண்டும் என்று அடிகளாரை வணங்கி அனைவரையும் வேண்டுகிறேன்.

நம்முடைய தமிழ்க் கலாச்சாரத்தின் பண்பாட்டின் சொத்தாகத் திகழ்வது தேவார திருவாசகங்கள் ஆகும். அவற்றை இளம் குழந்தைகளுக்குக் கற்றுத் தருவது என்பது அடிகளார் விரும்பிய மாபெரும் அறம் ஆகும். இந்த அறச்செயல் காலம் கடந்து தொடர்ச்சியாக செய்ய வேண்டிய ஒன்றாகத் திகழ்கின்றது. அனைத்து கோயில்களிலும் தேவார திருவாசகங்கள் கற்றுத் தரப்பட வேண்டும். அடுத்த தலைமுறைக்கு இவற்றை கொண்டு செல்ல வேண்டும் என்பதை அடிகளார் விரும்பினார். அதனை செயல்படுத்த இங்கு இருக்கின்ற சான்றோர்கள் ஒவ்வொருவரையும் வேண்டி மகிழ்கின்றேன்.

சுவாமிகள் மாநாடுகளுக்கு லண்டன் வரும்போது நமது இல்லத்திலேயே தங்குவார்கள். தமிழ் மொழி நிலைத்திருக்க வேண்டுமானால் வீடுகளில் நால்வர் தேவாரம் ஒலிக்க வேண்டும். ஆதீனங்கள் ஓதுவார்களை உருவாக்கி உலகெலாம் உள்ள கோயில்களுக்கு அனுப்பி அங்குள்ள சிறார்களுக்கு தேவாரம் திருவாசகம் பண்ணோடு கற்றுக்கொடுக்க வேண்டும்.

இன்று 124 நாடுகளில் தமிழர்கள் நிரந்தரமாக்க் குடியேறி பல காலமாக வாழ்கிறார்கள் என்ற தகவல் உண்டு. லண்டனில் மாத்திரம் 35 கோயில்களுக்கு மேல் உண்டு ஓரே ஒரு ஓதுவார் மூர்த்தியே உண்டு. இதை மேம்படுத்த வேண்டும். பண்ணிசை வகுப்புகளை இணையமூலம் நடத்த ஆதீனங்கள் ஆவன செய்ய வேண்டும் இது பற்றி அடிகளாருடன் பேசியும் இருக்கிறேன்.

அவர் பெயரில் மருத்துமனை கட்டப்பட்டுச் சிறப்பாக வறுமைக்கோட்டிற்குள் மக்களுக்கு உதவுவது பாராட்டுற்கு உரியது.

60

விஜய சன்முகம்
கணபதி

ஞானம் பகரும் ஞானத்தந்தை கயிலை குருமணி சீர் வளர்சீர் – பேரூர் ஆதினம் – முது முனைவர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழாவின் நூறு தொடர் நிகழ்வுகளாக தொகுத்து வழங்கிய நிகழ்வு சிறப்பானதாகும்.

’எப்படி பாடினாரோ அடியார்.
எப்படி வாழ்ந்தனரோ–அடியேன்
அப்படி வாழ நான் ஆசை கொண்டேன்’

தவத்திரு ராமசாமி அடிகளார் அவர்களை நான் மூன்று முறையில் நேரிலும் நெருக்கமாகவும் சந்தித்து பேசி இருக்கிறேன்.

சுமார் 25 வருடங்களாக முன்பு கணபதியில் அமைந்துள்ள அருள்மிகு காமாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழாவுக்கு அடிகளார் வந்திருந்தார் வரவேற்பு குழுவிலே இருந்தமையால் நேருக்கு நேர் அவர் முகம் பார்த்து கும்பிட்டு வணங்கி வரவேற்றேன்.

ஐந்து வருடங்களுக்குப் பின்னர் இரண்டாம் முறையாக அடிகளாரை சந்திக்க பேரூர் மடத்திற்குச் சென்றிருந்தேன். இரண்டாவது சந்திப்பு காமாட்சி அம்மன் கோவில் பற்றியது. இந்த காமாட்சி அம்மன் கோவில் சூலூர் பக்கம் உள்ள கண்ணம்பாளையம் கிராமத்தில் உள்ளது. பழமையான காமாட்சி அம்மன் கோவில் தான்.

அந்தக் காலகட்டத்திலே திரு ராமசாமி அடிகளார் அவர்கள் தமிழக அறநிலையத்துறை உறுப்பினராக இருந்தார்.

கண்ணம்பாளையம் காமாட்சி அம்மன் கோவில் ஒரு குலத்திற்கு சொந்தமானது. கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் காலப்போக்கில் கைத்தறி தொழில் நலிவடைந்த நிலையில் அக்குடும்பங்கள் யாவும் புலம்பெயர்ந்து விட்டன. ஓரிரு குடும்பங்களே அந்த ஊரிலே வாழ்கிறார்கள் அவர்களால் அக்கோவிலை பராமரித்து பாதுகாக்க இயலவில்லை ஒரு கால பூஜையும் நடத்த இயலாத நிலை.

அந்த காமாட்சி அம்மன் கோவிலை நிர்மாணித்தவரும், நிர்வாகித்தவர்களில் ஒருவர் எனது தாய் வழி பாட்டனார் பெரிய தனக்காரர். எனவே எனது பாட்டனார் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற எண்ணமும், பொறுப்பும் என்னுடையதாக ஆகிவிட்டது.

ஆனால், எனது குடும்பம், தொழில் அனைத்தும் கோவை கணபதியில் உள்ளது. இப்பொழுது உள்ளது போன்று 20 வருடங்களுக்கு முன்பு போக்குவரத்து வசதியும் தொடர்பும் மிக மிகக் குறைவு. கடினமும் கூட. கணபதியில் இருந்து என்னால் சிறு உதவிகள் மட்டுமே செய்ய முடியும். இந்த சூழ்நிலைகளை நான் திரு.ராமசாமி அடிகளாரிடம் விளக்கிச் சொன்னேன்.

அடிகளார் அவர்கள் காமாட்சி அம்மன் கோவில் சார்பாக ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடுக்குமாறு கூறினார். அவர் சொன்னபடி விண்ணப்பித்தேன். அடுத்த மாதமே அர்ச்சகர் பெயரை ஒரு தொகை பூஜைக்காகவும் அர்ச்சகத்திற்காகவும் மாதா மாதம் வருவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். அந்த ஏற்பாடு இன்று வரை கண்ணம்பாளையம் காமாட்சி அம்மன் அர்ச்சகருக்கு அறநிலையத்துறை வழங்கும் உதவி தொகையில் தினசரி பூஜை நடந்து வருகிறது.

எனது இரண்டாவது சந்திப்பின் மூலம் அடிகளார் செய்த புண்ணிய காரியத்திற்கே எங்கள் குல குடும்பம் சார்பாக புண்ணியவான் ராமசாமி அடிகளார் அவர்களுக்கும் பேரூர் ஆதீனத்திற்கும் நன்றி புரிதலை இந்த இணையத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

61

சுகந்தி ராஜு
திருப்பூர்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி,

அருள் தரும் பச்சை நாயகி உடனமர் பேரூர் பட்டீஸ்வரர் பெருமான் திருவடிகள் போற்றி போற்றி! திருவருளையும் என்னை இந்த சைவ நெறியில் ஆற்றுப்படுத்திய குருவருளையும் வணங்கி என் உரையை ஆரம்பிக்கிறேன்.

அன்பின் மலர்ந்த ஆதீனம் ஞானத்தந்தை சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் தோன்றா துணையோடும் நமக்கெல்லாம் தோன்றும் துணையாக நின்று அருள் வழிகாட்டி ஞான தந்தையின் திருப்பணிகளையும் சைவத்தையும் தமிழையும் தன் இரண்டு கண்களாகக் கொண்டு அயராமல் அறம் வளர்த்துக் கொண்டுள்ள நமது 25 ஆவது குரு மகா சன்னிதானம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளாரின் திருவடிகளை மனம் மொழி மெய் ஆகிய முக்கரணங்களால் மலர் தூவி வணங்குகிறேன்.

அடிகளார் அவர்கள் அவருடைய வாழ்க்கை முறை, பாடசாலைகள் அமைத்தல் மற்றும் முக்கிய ஆசிரியர் பணி நியமனம் ஆகிய அனைத்தையும் தெளிவாக தேர்ந்தெடுத்து அதில் பிசகாமல் பயணித்தார்கள்.

ஆன்மீகத்தின் வரலாறு மற்றும் தத்துவங்கள், ஆன்மீக சிந்தனையின் நடைமுறைகளான தியானம், யோகம், மன அமைதி மற்றும் ஆன்மீக வளர்ச்சி பற்றி நன்கு கற்றுத் தேர்ந்தெடுத்திருந்தார்கள்.

கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் என்று பார்க்கும்போது தமிழ் கலாச்சாரத்தின் அழகுகள், பாரம்பரியத்திற்கான மரியாதை, இலக்கியம் கலை மற்றும் இசையின் தாக்கம் மக்களிடம் எவ்வாறு உள்ளது என்று நன்கு அலசி ஆராய்ந்து செயல் வடிவம் கொடுத்தார்கள்.

தமிழில் குடமுழுக்கு, திருமணம், மணிவிழா, புதுமனை புகுவிழா என்று எண்ணற்ற விழாக்களும் நடைபெற வேண்டும் என அயராது பாடுபட்டார்கள். இதற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் 1953 ஆம் ஆண்டு பேரூரில் முதன்முறையாக பட்டீஸ்வரர் கோயிலில் தமிழில் அர்ச்சனை முறையை தொடக்கி வைத்து தமிழ் வழிபாட்டிற்கு அடித்தளம் இட்டவர்கள் நம் அடிகளார் அவர்கள் ஆவார்கள். ஞானத்தந்தை அவர்கள் குன்றக்குடி அடிகளார் மறைமலை அடிகளார் ஆகியோருடன் மிகுந்த நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார்கள். இந்நிலையில் தமிழில் குடமுழுக்கு என்பதை வலியுறுத்திக் கொண்டிருந்தபோது குன்றக்குடி அடிகளார் இதற்கு செயல் வடிவம் கொடுத்து 1954-ல் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் கௌமாரமடம் சுந்தர சுவாமிகளுடன் சேர்ந்து முதன்முறையாக கணபதியில் உள்ள ஆதி விநாயகர்கோயிலில் தமிழில் திருக்குட நன்னீராட்டு திருவிழா நடத்தி சிறப்பித்தார்கள். நாம் சொல்லும் மந்திரங்கள் மக்களுக்கு புரிய வேண்டும் என்பதும், எளிமையாகவும், சிக்கனமாகவும் குடமுழுக்கு நடைபெற வேண்டும் என்பதும், மக்களை வேள்விச் சாலையில் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும் என்று ஞானத்தந்தை அவர்கள் கூறுவார்கள்.

சமூகத்திற்கான பொறுப்புகள் என்ன, சமூக ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு பற்றி சிந்தனை என்ன, விவசாய மற்றும் தொழில் துறை வளர்ச்சி பற்றிய தொலைநோக்கு பார்வையும் மக்களிடம் விழிப்புணர்வுக்கு கொண்டுவரபல கருத்தரங்குகள் நடத்திக் காட்டினார்கள்,

வனம் அமைப்பு சார்பில் நிறைய கிராமப்புறங்களில் ஆயிரம் ஆயிரம் மரக்கன்றுகளை நட்டு பராமரித்து வருகிறார்கள், பல

இடங்களில் மூலிகைக் கண்காட்சிகளையும் நடத்துகிறார்கள்.

நவீன தொழில்நுட்பத்திற்கும் ஆன்மீகத்துக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்பதையும், சமூக மேம்பாட்டில் தொழில்நுட்பத்தின் பங்கு என்ன என்பதையும் தெளிவாக கையாண்டு நமது தேவைக்கேற்ப செய்து கொடுத்தவர் நம் அடிகளார் அவர்கள்.

மக்கள் நலனுக்கான முயற்சிகள் குறிப்பாக மலைவாழ் மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் அவர்களுக்கு பண்டிகை தோறும் ஆடை கொடுப்பது அன்னம் பாலிப்பது, பொங்கல் பொருட்கள் கொடுப்பது போன்றவற்றை தவறாமல் செய்து வந்தார்கள், இன்றைய அளவிலும் நமது 25 ஆவது குருமஹா சன்னிதானத்தின் தலைமையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஞானாம்பிகை வழிபாட்டுக் குழுவினரால் திருவிளக்கு வழிபாடுகள் மலைவாழ் பழங்குடியினர் பகுதிகளில் தொடங்கப் பெற்று எல்லா கிராமங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள் நம் ஞானத் தந்தை அவர்கள். திருவிளக்கு வழிபாடு என்றதும் நான் மீண்டும் குழந்தை பருவத்திற்கு சென்று விட்டேன் 1980 களில் எங்கள் ஊர் கிராமத்தில் உள்ள கோயிலில் மரகதம் அக்கா அவர்களின் தலைமையில் குழுவாக வந்து திருவிளக்கு வழிபாடு நடத்திக் கொடுப்பார்கள். அதில் அடியேனும் கலந்து கொண்டு வழிபாடு செய்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித்துறையில் கேட்கவே வேண்டியதில்லை பள்ளி, கல்லூரி என்று சாந்தலிங்க ராமசாமி அடிகளார் பெயரில் சிறப்பாக பல இடங்களில் கல்வி கூடங்கள் இயங்கி வருகிறது.

’என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறு’

என்ற திருமந்திரத்தின் வாக்குக்கு எடுத்துக்காட்டாய் முதன் முதலில் தமிழ் அர்ச்சனை முறைமையோடு 1953-ல் பேருரில் தமிழ் கல்லூரியைத் தொடங்கி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இயற்கைச் சீற்றத்தாலும் பராமரிப்பின்றி பழுது அடைந்துள்ள நிறைய ஆலயங்கள் திருமடத்தாரால் திருப்பணிகள் நடத்தப் பெற்று தீநெறிய தீந்தமிழ் முறைப்படி குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு நிறைய மருத்துவ உதவிகள் செய்ய வேண்டும் என்று 24 மணி நேரமும் சிந்தித்துக் கொண்டே இருந்ததன் பயனாக ஞானத் தந்தை பிறந்த மண்ணில் முதலிபாளையம் கிராமத்தில் 25-வது குரு மகா சன்னிதானத்தின் முயற்சியாலும் உழைப்பாலும் மிகச்சிறந்ததோர் மருத்துவமனை நிறுவப்பட்டு சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

சாமி மிகவும் எளிமையாக இருக்கவே விரும்புவார்கள் ஆடம்பரம் என்ற சொல் அவர் அகராதியிலேயே கிடையாது என்றும், அடிகளார் தங்கி இருந்த இடத்திற்கு ஒரு முறை சென்ற பொழுது சாமி இந்த அறை கொஞ்சம் சூடாக இருக்கிறது ஒரு ஏசி பொருத்தி கொள்ளலாம் என்று அனபர் கேட்க அதற்கு இந்த சூடு ஒன்றும் அடியேனை பாதிக்காது வேண்டாம் என்று மறுத்து விட்டார்களாம்.

தாம் நிறுவிய பேரூர் கல்லூரியில் முதல்வராக இருந்தபோது 'வைராக்கிய சதகம்' என்ற நூலை வகுப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடிச் சிந்திக்க வைத்தார். தம் கல்லூரியில் பயின்று புலவர் பட்டம் பெற்றவர்களை பெயர் சொல்லி அழைக்காமல் புலவரே என்று அழைத்து மகிழ்வாராம்... சாமி என்னை போய்' புலவரே என்று அழைக்கிறீர்களே என்று கேட்டால் நீ பட்டம் வாங்கியதற்கு எதற்கு அதைச் சொல்லி அழைக்கத் தானே என்று கூறி மகிழ்வார்களாம். இவ்வாறெல்லாம் பல சிறப்பு பொருந்திய பேரூர் ராமசாமி அடிகளார் 'நடமாடும் அருட்குருநாதர் என்று அனைவராலும் போற்றப் பெற்றவர்கள்.

'அன்பும் சிவமும் ஒன்றே' என்ற வாக்குக்கு மிகவும் பொருத்தமானவர் நம் அடிகளார்தான்.

அடிகளாரின் தோற்றத்தை கூறும் போது முகத்தில் புன்முறுவல், திருநுதலில் திருநீற்றின் அழகு, கனிவான பார்வை அன்பான இனிய

சொற்களுடன் கூடிய உரையாடல் இவையெல்லாம் 'அப்பரே' என்று திருஞானசம்பந்த பெருமானால் அன்போடு அழைக்கப்பட்ட திருநாவுக்கரசு பெருமானையே நினைவுபடுத்துவதாக உள்ளது என்றால் மிகையாகாது.

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று திருவள்ளுவர் வாக்கிற்கேட்ப செயற்கரிய செயல்களை செய்த அடிகளார் அவர்கள் தன்னுடைய 94-வது அகவையில் மாசித் திங்கள் மகம் விண்மீன் கூடிய நிறைமதி நாளில் தாம் வழிபடும் கூத்தப் பெருமான் திருவடியில் நித்திய ஆனந்தமாய் சிவபதம் அடைந்தார்கள்..

சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் வழி அவருடைய திருப்பணிகளை நமது 25 ஆவது குரு மகா சன்னிதானம் சீர் வளர்சீர் மருதாசல அடிகளார் அவர்கள் நன்கு பாதுகாத்தும் மேலை நாடுகளில் வளர்த்தும் வருகிறார்கள். அவர்களுடன் சேர்ந்து ஐயாவின் கொள்கைகளை சிரமேட் கொண்டு நாமும் தமிழும், சைவமும் வளர பாடுபடுவோமாக.

போற்றி ஓம் நமசிவாய!

62

அகவை முதிர்ந்த தமிழறிஞர், கோவை கூலவாணிகர்

இரா.சொ. இராமசாமி

தலைவர், முத்தமிழ் அரங்கம்

31, தமிழ்க்குடில், பூங்கா நகர், திருச்சி சாலை,

இராமநாதபுரம், கோவை – 641045

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

குறள் வழி இந்த பூவுலகத்தில் பிறந்தால் பிறர் புகழ்ந்து பேசுதற்குரிய சிறப்போடு பிறத்தல் வேண்டும், அவ்விதமாக கூறிய வள்ளுவர் பெருந்தகைக்கு ஒப்பாக விளங்கியவர், நமது தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

ஈச்சனாரி அருள்மிகு விநாயகர் கோயிலின் அறங்காவலராக ஐந்தாண்டுகளாக பணியாற்றினேன், அப்பொழுது இருந்தே நல்ல பழக்கம் ஏற்பட்டது, அது மேலும் நான் கோவை முத்தமிழ் அரங்கத்தைத் தொடங்கிய போதும் தவத்திரு இராமசாமி அடிகளார் அவர்களிடம் தொடர்புகள் இருந்து கொண்டேயிருந்தது.

பேரூராதினம் எத்தனையோ தலைமுறைகளைக் கடந்து எடுத்துக் கோவை மாவட்டத்தில் தொய்வின்றி செயல்பட்டு வருகின்றது. அதில் நானும் ஒரு அங்கமாக இணைந்து தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறேன், அந்த வகையில் பெரியவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளின் சீரிய பணிகளை கூறுவதற்கு வாய்ப்பு நல்கிய தவத்திரு மருதாசல அடிகளார் அவர்களுக்கும், பெரியவர் நூற்றாண்டு விழா குழுவினர்க்கும், கோவை முத்தமிழ் அரங்கம் சார்பாக நன்றி கலந்த வாழ்த்ததையும் வணக்கத்தையும் தமிழன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரூர் தமிழ்க்கல்லூரி என்றாலே கொங்கு மண்டலம் கோவையைத் தான் குறிக்கும். கோவை மாவட்டத்தில் ஆன்மீகப் பணியிலும், தெய்வத்தமிழ்ப் பணியிலும் சிறந்து விளங்க காரணமாக இருந்தவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள்தான். அவரால்தான் தமிழ் உலகம் போற்றுகின்ற வகையில் கோயில்களில் குடமுழுக்குத் திருப்பணிகள் சைவத்தமிழ் திருமுறையில் இன்றும் நடைபெற்று வருகிறது.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் எதிலும் நேர்மையும், ஒழுக்கமும் இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பானவர். அதனைத் தானும் கடைப்பிடித்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்.

ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ்ச் சான்றோர்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் இருந்து வந்தாலும் சரி, உலக நாடுகளில் குடிபெயர்ந்த தமிழ்ச் சான்றோர்களாய் இருந்தாலும் சரி, தவத்திரு சாத்தலிங்க திருமடத்தில் தங்கியிருந்து. தெய்வத் தமிழையும், சைவத்தையும் கற்றுணர்ந்து சென்றவர்கள். தெய்வத்தமிழையும், சைவத்தையும் வளர்த்து வந்தவர்கள், மிகுந்து இருந்தார்கள். இன்றளவும் அயல் நாட்டினர்கள் வந்து தவத்திரு அடிகளார் அவர்களிடம் உரையாடிச் செல்கிறார்கள். அதற்கு மூலகாரணமாக இருந்து வரும் பேரூர் தமிழ்க்கல்லூரியில் இருந்து வரும் தனித்தமிழும் தொல்காப்பிய இலக்கணமும்தான் காரணம். அதில் தமிழர்கள் சிறப்பாக மேன்மையடைந்தவர்களாக உருவாவதை நாம் காண்கிறோம்.

பேரூர் தமிழ்க் கல்லூரியில் கற்று பயிற்சி எடுத்து பட்டம் பெற்றவர்கள் எண்ணில் அடங்கா ஆன்மிகத் துறையிலும், அரசியல் துறையிலும், திரைப்படத் துறையிலும், சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறார்கள், அந்த அளவுக்கு கண்டிப்பும் எளிமையும் அரவணைப்பும், கல்லூரியில் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

எனும் திருக்குறளுக்கு ஒப்ப நடைபெற்று வருகிறது பேரூர் தமிழ்க் கல்லூரி என்பதில் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் வாழ்ந்த நூற்றாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த முதல்வர்களும் சரி, ஆளுனர்களும் சரி, பேரூர் தமிழ்க் கல்லூரியில் நடக்கும் சைவத்திருமறையாக இருந்தாலும் சரி, முத்தமிழ் விழாவாக இருந்தாலும் கோவை பேரூர் தமிழ்க் கல்லூரி விழாவில் கலந்து கொண்டு பெரியவர் தவத்திரு இராமசாமி அடிகளார் கூறும் கருத்துக்களைக் கேட்டு அறிந்து சென்றார்கள். மக்களுக்கு நன்மை கோவை பயக்கும் செயல்பாடுகள் தான் அதற்கு காரணம் எந்த தமிழக அரசு அமைந்தாலும், பெரியவரை ஆலோசனைகளை கேட்பதில் முதலிடமாக கோவை பேரூராதினம் பேரூராதினம் செயல்பாடுகள் நன்கு அமைந்திருந்தது.

தமிழ்நாட்டில் பல மாவட்டங்கள் இருந்த போதிலும், கோவை மாவட்டத்தில் உள்ள பேரூராதினம் தான் தெய்வத்தமிழையும், சைவத்தையும் வளர்ப்பதில் முதல் இடமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நாட்டில் அனைவரும் அறிவர். அதனை மறுப்பார் எவருமில்லை.

கோவை முத்தமிழ் அரங்கம் தொடங்கியதில் இருந்தே பேரூர் தமிழ்க் கல்லூரிக்கும் எனக்கும் தவத்திரு பெரியசாமிகள் மற்றும் இன்றைய தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் வரையும் தமிழ்ப் பணியிலும், ஆன்மீகப் பணியிலும் தொடர்புகள் இருந்து கொண்டிருக்கிறது.

கோவை முத்தமிழ் அரங்கம் 11.02.2001 இல் தொடங்கிய ஆண்டு முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 6 மணி முதல் 9 மணிவரை நடைப்பெற்று வருவது பற்றி தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் பல தமிழ்ச் சான்றோர்களிடத்து கூறியதாக எனக்குச் செய்திகள் வந்தன. ஒரு கூலவாணிகர், கோவை பந்தயச் சாலையில் வாரம் ஞாயிற்றுக் கிழமையில் தமிழ்ப்பணியைச் செய்து வருகிறார். போய்ப்பாருங்கள் என்பராம். இதனைப் பல தமிழ் அன்பர்கள் என்னிடம் கூறியுள்ளார்கள்.

தெய்வத்தமிழ் மொழியில் பற்றுள்ளவர்க்கு சாதி, மதம் மத பாராமல் தமிழ்வழிப் பாடத்தை கற்றுத் தந்தும் புலவர் பட்டம் முனைவர் பட்டம் பெற்றுச் சென்ற சான்றோர்கள் அவரவர் துறைகளில் சிறந்து விளங்கியவர்கள் இன்றளவும் கற்ற பேரூர் கல்லூரியை மறக்காமல் வந்து செல்பவர்களை நாம் பார்க்கின்றோம்.

பேரூராதீனம், பெரியவர் இராமசாமி அடிகளார் ஆனாலும் சரி, இன்று இருக்கும் தவத்திரு மருதாசல அடிகளார் ஆனாலும் சரி, ஏழை எளியவர் செல்வந்தவர்கள் ஆனாலும் சரி எந்த நேரத்திலும் வேறுபாடுயின்றி சந்திக்கலாம், சமயசார்பற்ற முறையில் எல்லாரையும் அரவணைக்கும் தன்மைப்பெற்றவர் பேரூராதினம்தான் என்பதில் யாருக்கும் ஐயமில்லை.

நம் தாய்மொழி தமிழுக்கு இடையூறுகள் நேரும் பொழுதெல்லாம் கோவை மாவட்டத்தில் உள்ள தமிழ் அமைப்புகளை அழைத்து அவர்கள் கருத்துக்களை கேட்டு அறிந்து அதன்படி தமிழக அரசுக்கு தெரிவித்து, தமிழ்மொழியை காப்பதிலும் கோவை பேரூர் தமிழ்க் கல்லூரி தான் என்பது நாட்டுமக்களுக்குத் நன்றாகத் தெரியும்.

சில நேரங்களில் நடுவன் அரசு தமிழ் நாட்டுக்கும், நம் மொழிக்கும் தீங்கிழைக்கும் போதெல்லாம் கோவை பேரூர் தமிழ்க்கல்லூரி மூலமாக, தமிழ் அமைப்புகளையெல்லாம் ஒன்று திரட்டி தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும், அமைதியான அறநிலைப் போராட்டங்கள் தவத்திரு ஆதினம் அடிகளார் முன்னிலையில் உண்ணாநிலைப் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைப்பெற்று வருகிறது, தெய்வத்தமிழை எந்த நிலையிலும் இழக்காமல் நிமிர்ந்து நிற்பதற்கு பேரூராதினம் தான் காரணம். நான் அறிய பேரூராதினத்தில் தெய்வத்தமிழும் சைவமும் தான் முக்கியமே தவிர, மற்றபடி யாரிடமும் பொருளை எதிர்பார்ப்பதில்லை, பேரூர் தமிழ்க் கல்லூரி அன்றிருந்த நிலையில்தான் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

தவத்திரு பெரியவர் இராமசாமி அடிகளார் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்து அவருடன் உரையாடி மகிழ்ந்த

நினைவலைகள் நம் மனதில் நிழலாடிக் கொண்டேயிருக்கின்றன, மறக்க முடியாத நினைவுகள்.

அவருடைய டய நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடி மகிழ்ந்தாலும், பெரியவர் அடிகளார் இன்னும் நூற்றாண்டு காலம் நம் தெய்வத் தமிழுக்கும், சைவநெறி தழைக்கவும் வாழ்ந்திருக்கலாம் என்று தமிழர்கள் உள்ளங்களில் தோன்றுகிறது.

அந்தளவுக்கு தமிழும், சைவநெறி ஒழுக்கமும் பேரூராதினத்தில் வளர்ந்து ஓங்கி ஒலிக்கும் பண்டைய கால ஆதினமாகும். இதைத் தவிர வேறொன்றை அங்கு காணமுடியாது. இந்த இரண்டும் இரு கண்களாகவே தமிழ்நாட்டுக்கு போதிக்கப்படுகிறது. இதுவே தமிழர் கலாச்சாரமாகும்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் நிறைவாக வாழ்ந்து இறைநிலை அடையும் வரையும் பேரூராதினம் சார்பாக இறைப்பணி விழாவாக இருந்தாலும் சரி, தமிழ்ப்பணி விழாவாக இருந்தாலும் சரி விழாக்களில் கலந்து கொள்ளும் அன்பர்களுக்கு திருமடத்தின் விருந்தோம்பல்கள் தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது.

அன்று திருமடத்தின் உணவுகள் பத்திய உணவாகவே வழங்கப்படும். திருமடத்திற்கு வந்து போகும் அன்பர்களுக்கு இந்த பத்திய உணவு உண்டு பழக்கமாகி விட்டது. புதிய அன்பர்களுக்கு இந்த பத்திய உணவை உண்டவர்கள், மறுமுறை வருகையில் ஏதோ காரணங்களைக் கூறிச் சென்று விடுவார்கள்.

இன்றைய தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் பழைய பத்திய உணவு முறையை மாற்றி அமைத்தார். பேரூராதின விழாக்களுக்குச் சென்று வருபவர்கள் பேரூராதின விருந்தோம்பல்களில் ஆர்வமாக கலந்து கொள்கிறார்கள் என்றால் கால மாற்றம், சுவை மாற்றம், நேரம், காலம் அறிந்து மக்கள் பசியாறி மகிழ்வுடன் செல்கிறார்கள் என்பதை எத்தனையோ நண்பர்கள் மூலம் நான் தெரிந்து கொண்டதால் இது குறித்து மகிழ்வுடன் கூறுகிறேன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

குறள்

இந்த நிலவுலகத்தில் இருந்து வாழவேண்டிய முறைப்படி ஒருவன் வாழ்பவன் மனிதனேயானாலும், வானுலகத்தில் வாழ்கின்ற தேவருள் ஒருவனாக மதிக்கப்படுவான். இந்த குறள் வழி நடப்பதுதான் சைவத்தின் வழியும், தமிழர்களின் வழியுமாகும். இதுதான் தமிழர்களின் பண்டைய நாகரிகமும், கலாச்சாரமும், தமிழர் சமயமும் ஆகும். தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் விட்டுச்சென்ற நற்பணிகளை தொடர்ந்து எடுத்துச் செல்வோம். அவர் வழி நடந்து தமிழுக்குப் பெருமை சேர்ப்போம்.

63

முனைவர். **கோவை கிருஷ்ணா.**
பொதுச் செயலாளர்,
கோவைத் தமிழ் இலக்கியப்பாசறை, கோவை-2.

மாணவப் பருவம் தொட்டே பேரூர் திருமடத்திற்கு செல்ல பிள்ளையாக, என் தந்தை காலம் சென்ற வட்டாட்சியர் புலவர் வே.பா. கோவிந்தராஜன் அவர்களின் கரம் பிடித்து வந்தவன் நான். ஐயா தவத்திரு இராமசாமி அடிகளாரின் உற்ற தோழனாக விளங்கிய என் தந்தை புலவர் வே.பா. கோவிந்தராஜன் அவர்கள் அடிகளாரிடம் ஆசீர்வாதம் பெற்று என்னையும் ஆசீர்வாதம் பெறச் செய்து திருநீறு வாங்கி நெற்றியில் இட்டுக் கொள்வார்.

எனக்கும் நெற்றியில் திருநீறு பூசி விடுவார். சாமி அவர்கள் எனக்கு ஆசி கூறி பழங்கள் கொடுப்பார். சாமி அவர்கள்,என் தந்தையின் அரசு வேலை, அவர் பங்கு கொள்ளும் ஆன்மீகப் பணிகள், பட்டிமன்றங்கள் அனைத்தும் அறிந்தவர். எங்கள் குடும்பத்தைப் பற்றியும் நன்கு அறிந்தவர். அப்போது நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம்,

என் தந்தை சாமி அவர்களிடம் பேசி முடிக்கும் வரை சாமி அவர்கள்முன் நின்று கொண்டுதான் இருப்பார். அதை கடைசி காலம் வரை கடைப்பிடித்தார்.

அது எனக்கு வியப்பாகவே இருந்தது. இது பற்றி ஒருநாள் சமயம் வரும்போது கேட்டு விடவேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஒரு சமயம் கேட்டேவிட்டேன்.அதற்கு என் தந்தை என்னிடம் பதில்கூறும்போது, அவர் ஒரு மகான்! அவரிடம் அவ்வாறு மரியாதை செய்வது என் கடமை! என்று கூறினார். மேலும் அடிகளாரின் அருமை

பெருமைகளை எனக்குத் தெளிவாக கூறினார். அன்றிலிருந்து எனக்கு ஏற்ப்பட்ட பேரூர் திருமடத் தொடர்பு ஏறத்தாழ இன்று வரை 45 வருட காலமாக தொடர்ந்து வருகிறது. இளைய பட்டம் குருமகா சன்னிதானம் சீர் வளர்சீர் கயிலை மாமுனி தவத்திரு முனைவர் மருதாசல அடிகளார் வரை தொடர்கிறது.

சமயப்பணியும், தமிழ்ப்பணியும் ஒரு பார்வை:

தவத்திரு. இராமசாமி அடிகளார் அவர்கள் சமயப்பணிகளையும், தமிழ்ப்பணிகளையும் இருக்கண்களாக பாவித்துவந்தார். சமயப்பணிகளைப்பொறுத்தமட்டில் பல கோவில்களுக்கு சென்று சமயசொற்பொழிவாற்றுவதுடன்,தமிழகம் முழுவதும் பல குடமுழுக்கு விழாக்கள் ஆற்றிவந்தது குறிப்பிடத்தக்கது. லட்சக்கணக்கான மக்களுக்கு அருளாசியும் வழங்கியுள்ளார்.

தமிழ்ப்பணியை பொறுத்தமட்டில் பல இலக்கிய பொழிவுகள், பட்டிமன்றங்கள், அரங்கக்கூட்டங்கள் என்று சொல்லில் அடங்காத அளவிற்கு தமிழ்பணி ஆற்றியுள்ளார். பலநூல்களை பதிப்பித்துள்ளார். தமிழின் மீது கொண்ட உணர்வால்தான் புலவர் குழுமத்தை உருவாக்கும் முன்னோடியாக திகழ்ந்தார்.

தெய்வப் பணியையும் தமிழையும் வளர்த்த சான்றோர் திரு. இராமசாமி அடிகளார் அவர்கள் ஆவார். தமிழையும் சமயத்தையும் உள்ளடக்கிய தெய்வத் தமிழை வளர்த்தவர் என்றே கூறலாம். தமிழ்ப் பணியை வளர்க்கும் பொருட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலவர்களை உருவாக்கிய திருமடம் இப்பேரூர் திருமடம் ஆகும்.

சமயப்பணியாற்றுதற்காக உருவாக்கப்பட்டமூ பேரூர் திருமடம். பேரூர் தமிழ்க்கல்லூரியையும் உருவாக்கி பேரும் புகழும்பெற்று திகழ்கிறது! என்றால், தவத்திரு இராமசாமி அடிகளாரே காரணம் எனக்கூறலாம்.

கல்லூரி மட்டுமன்றி பேரூர் தாய்த்தமிழ்ப்பள்ளி, ஞானாம்பிகை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி என ஆரம்பக்கல்வி முதல் மேல்நிலைக்கல்வி வரை உருவாகக் காரணமாக இருந்தது தவத்திரு.

இராமசாமி அடிகளாரின் சீரிய முயற்சி ஆகும். கல்லூரிப் பாடப்பிரிவு அனைத்தும் தமிழ்வழியில் அமைவதற்கு காரணமே தவத்திரு அடிகளாரின் தமிழ்த்தொண்டிற்கு சான்றாகக்கூறலாம்.

பேரூராதீனம் தவத்திரு இராமசாமி அடிகளாரை காணச் செல்லும் போதெல்லாம் உடன் இரண்டு புலவர்கள் ஆவது இருப்பார்கள். எங்களது மேற்கு வட்டாரத்திலே சுமார் 100 புலவர்களை வளர்த்தது இப்பேரூர் திருமடமாகும்.

ஒன்றுபட்ட கோவை, திருப்பூர்,ஈரோடு மாவட்டங்களில் வசிக்கும் அல்லது வாழ்ந்து மறைந்த புலவர்கள் ஏராளம்! என்னை நெறிப்படுத்தியதே பேரூர் திருமடத்தின் இப் புலவர்கள் கூட்டம் தான்.

தமிழக முதல்வர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், மக்கள்திலகம் எம்.ஜி.ஆர்.அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், என மூன்று முதல்வர்களின் காலத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடுகளில் பங்குகொண்டு தமிழ் சொற்பொழிவாற்றியவர் என்ற பெருமைக்குரியவர் தவத்திரு இராமசாமி அடிகளார் ஆவர்.

முத்தமிழறிஞர். கலைஞர் ஆட்சிக் காலத்தில், அவரிடம் எடுத்துரைத்து மூத்த தமிழாசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் அந்தஸ்து பெற்றுக்கொடுத்தவர் ஆவர்!

ஐயா இராமசாமி அடிகளார் அவர்களை பார்த்து ஆசி பெற செல்லும் போதெல்லாம் என்னுடைய படிப்பு, நான் மேற்கொள்ளும் தொழில் பற்றி கேட்டு அன்பாக நலம் விசாரிப்பார். நானும் அவர் அடிகளார் என்பதையே மறந்து அவரின் உபசரிப்பால் திளைத்து நிற்பேன்.

என் கல்லூரிப்பருவ காலம் தொட்டே, திமுகவில் அங்கம் வகித்து பணியாற்றி வந்தேன்.

1990- ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு வங்கி தேர்வில் வெற்றி பெற்றவுடன் சாமி அவர்களிடம் ஆசி பெற சென்றிருந்தேன்.

அப்போது அவர் பொது வாழ்க்கைக்கு வந்து விட்டீர்கள் உங்கள் தந்தை திரு கோவிந்தராஜ் அவர்களைப் போல நீங்களும் சேவை மனப்பான்மையுடன் நேர்மையாக செயல்பட வேண்டும் என வாழ்த்தி ஆசி கூறினார். அவர் கூறியவற்றை மனதில் கொண்டு எனக்கு தலைவர் துணைத் தலைவர் என எந்த பொறுப்பும் வேண்டாம் என்று வங்கி வளர்ச்சி பணிக்கு மட்டும் பாடுபட்டு உன்னதமான வங்கியாக கொண்டு வந்தேன் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறேன்.வேடபட்டி கிராமத்தில் 1994-ஆம்ஆண்டு என்னுடைய தொடக்கப் பள்ளிக் கட்டிடத்தை திறந்து வைத்து அருளாசி கூறியது சிறப்புக்குரியதாகும்.

மனிதநேய மாண்பாளர் அடிகளார்:

பேரூர் திருமடத்தை பொறுத்தமட்டில் சமரச சன்மார்க்கத்தை போதிக்கும் திருமடமாகும். சாதிச்சழக்குகளுக்கு சிறிதும் இடம்கொடாமல் அனைவரையும் அரவணைத்துச்செல்லும் திருமடமாகும். இதற்கு மூலகாரணமாய் அமைந்தவர் நம் தவத்திரு. இராமசாமி அடிகளார் ஆகும்.

பல்சமய உறவைப் பேணிக்காத்தவர் நம் அடிகளார் ஆவர். கோவை, பல்வேறு சமயத்தவர்கள் வாழ்ந்துவரும் அமைதியான பூமியாகும்.ஒரு சிலநேரங்களில் மதமோதல்கள் ஏற்படும்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வேண்டுகோள்படி நகரில் பல்சமய உறவுகளும் தவத்திரு.

இராமசாமி அடிகளார் தலைமையில் அமைதிக்கமிட்டியை ஏற்படுத்தி மாநகரம் அமைதி பூங்காவாகத்திகழச்செய்தனர். கோவையில் சர்வசமய பிரார்த்தனை கூட்டம் அடிகளார் தலைமையில், பல்சமய உறவு மய்யம் கூட்டத்தை ஏற்பாடு செய்யும்.

முஸ்லீம் சமுதாயத்தை சேர்ந்த கோட்டை அமீர் அவர்கள் தன் வாழ்நாள் முழுவதுமாக அமைதிக்குழுவில் அங்கம் வகித்த மாமனிதர் ஆவர். ஆம்!அடிகளாரின் மாற்று மதத்தவரையும் சரிசமமாக பாவித்துவந்த பண்பு, எல்லா மதத்தவர்களை ஒரு குடையின் கீழ் அமைதிக் குழுவில் கொண்டுவந்தது அவரின் மனிதநேயத்திற்கு

எடுத்துக்காட்டாகும்! அவரின் அருள்பார்வைப்பட்டாலே அனைவரும் அமைதியாக காட்சியளிப்பார்கள்.

அடிகளாரின் கண்களில் ஏற்படும் தீட்சண்ய ஒளி அனைவரையும் பரவசப்படுத்தும் என்பதில் ஐயமில்லை என்பதை கடைசிவரை அவரோடு பயணித்தவர்களும், அவரின் அருள்பெற்ற பொதுமக்களும் அறிவார்கள்.

திருப்பேரூர் திருமடத்தின் 24-ஆவது பட்டமாக விளங்கிய தவத்திரு. இராமசாமி அடிகளாரின் கீர்த்தியையும், அவரின் திருப்பணிகள், தமிழ்ப்பணிகள் என கட்டுரை வரைய முற்பட்டபோது, செய்திகள் அனுமான் வால்போல் நீண்டுகொண்டே சென்றது. கட்டுரையின் செய்தி நீள்வதுகுறித்து அறிந்தவுடன் செய்தியைச் சுருக்கிக் கொண்டேன். இன்னும் கூறவேண்டிய செய்திகள் நிறைய இருந்தபோதிலும்,

அந்த மாமுனி தமிழக திருமட வரலாற்றிலும், தமிழ்ப் பணியாற்றியதிலும் ஒரு சகாப்தமாக திகழ்ந்தார் எனக்கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்.

64

திருக்குறள் பெரும் தொண்டர்
முனைவர் ந. நித்தியானந்தபாரதி

நிறுவனத் தலைவர் – கணபதி தமிழ்ச் சங்கம்
பசுமை காப்பகம்

நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த மகிழ்ச்சியான நேரத்தில் அவருடன் உரையாடியப் பசுமையான நினைவுகளை நினைத்து பார்க்கிறேன் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களிடம் என்னை முதல் முதலாக அறிமுகப்படுத்தி வைத்தவர் 25 ஆம் பட்டம் தவத்திரு சாந்தலிங்க மருதாச அடிகளார் அவர்கள் தான் இவர் நித்தியானந்தபாரதி தமிழ், தமிழர்கள், தமிழ் நாடு நலம் பெற, வளம் பெறப் பல்வேறு பணிகள் செய்து கொண்டு இருக்கிறார் பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்று இருக்கிறார் என்று சொன்ன உடன் மீண்டும் வாழ்த்தினார் (ஆம் தமிழக நலனுக்காக போராட்டத்தில் பல முறை சிறை சென்ற போது அன்று இளைய பட்டம் அவர்கள் மூட்டை மூட்டையாக பழங்கள் உடன் நேரில் வருவார் அங்கு அற்புதமான உரை நிகழ்த்துவார் அனைவருக்கும் பழங்கள் கொடுப்பார் அவர் ஒவ்வொரு முறையும் வந்து செல்லும் வரை அவர் உடன் இருப்பேன்)

அதற்கு பின் 24 ஆம் பட்டம் குருமாக சன்னிதானங்கள் நான் சந்திக்கும் போது எல்லாம் என் தமிழ்ப் பணிகள் பற்றிக் கேட்பார் மனதுக்குள் மகிழ்ச்சியாக இருக்கும்.

தொல்காப்பிய வகுப்புத் தொடக்க விழாவுக்கு வருகையை தந்த போது காளியப்பன் அண்ணன் அவர்கள் நான் தொல்காப்பிய வகுப்பு தொடங்க நித்தியானந்தபாரதி தான் காரணம் என்று சொன்னார் அதற்கு குருமகா சன்னிதானங்கள் அவர்கள் புன்னகை உடன்

கணபதியில் திருக்குறள் வகுப்பு இங்கு தொல்காப்பிய வகுப்பு வேறு என்ன வகுப்பு நடத்துகிறாய் என்றார் சிலப்பதிகாரம் தொடர் வகுப்பு 30 மாதங்கள் முனைவர் ராமதாஸ் அவர்களை வைத்து தொடர்ந்து நடத்தினேன் என்றேன் அதற்கு பாராட்டு தெரிவித்தார் தொடர்ந்து நடந்தது என்று ஆசி வழங்கினார்.

இது கடைசி சந்திப்பு என்று எனக்கு அன்று தெரியாது நான் அவரை சந்தித்து ஆசி பெற சென்றேன் அப்போது இந்த ஆண்டு கௌமார மடாலயத்தில் 100 பள்ளியை சேர்ந்த 10000 பேர் பங்கேற்ற திருக்குறள் போட்டியை நடத்தினார் என்று 25 ஆம் குருமகா சன்னிதானங்கள் சொன்ன போது இரு கைகளையும் உயர்த்தி வாழ்த்து தெரிவித்தார் அது அவரை நான் கடைசியாகச் சந்தித்தது.

ஓதுவார் பயிற்சி வகுப்பின பேரூர் ஆதீனதுடன் இணைந்து, கணபதி தமிழ்ச் சங்கம் நித்தியானந்தபாரதி வீரத்தமிழர் முன்னணி ராமச்சந்திரனுடன் சேர்ந்து நடத்தினோம் 80 க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள் 10 நாள் பயிற்சி கொடுத்து சான்றிதழ் வழங்கியது மட்டும் அல்ல பல பேருக்கு வேலை வாங்கி கொடுத்தோம்.

அமெரிக்க வாழ் தமிழர்களுக்கு சமய பயிற்சி வகுப்பை நேரலை பேரூர் ஆதீன ஓதுவார்களை வைத்து நடத்தினோம் இப்படி பேரூர் ஆதீனம் அவர்களுடன் இணைந்து நிகழ்ச்சிகள் நடத்துவது பெரும் மகிழ்ச்சியாக இருந்தது.

என் மகள் மேகாசக்திபாரதி பேரூர் தமிழ் கல்லூரியில் தான் படிக்கிறார் கல்வெட்டு பயிற்சி வகுப்பு, தொல்லியல் பயிற்சி வகுப்பு மடத்துடன் இணைந்து நடத்துகிறார் 23 ஆம் குருமகா சன்னிதானம் ஆறுமுக அடிகளார் அவர்களின் குருபூஜை விழாவை சிறப்பாக நடத்த முன் எடுத்து அவர்களின் உறவினர்களை அழைத்து வருவது மட்டும் அல்ல மாதம் தோறும் அவரின் சதய பூசையை நடத்துகிறார். நான் மட்டுமல்ல என் அடுத்த தலைமுறையும் பேரூர் மடத்துடன் தொடர்பில் இருக்கிறோம்.

இப்படி பல பசுமையான நிகழ்வுகளைச் சொல்லி கொண்டே போகலாம். இதுபோல் நாங்களும் இந்நூற்றாண்டு விழாவை முன்னிட்டு (பேராசிரியர் மனோன்மணி அக்கா முனைவர் சண்முகப்பிரியாபாரதி நித்தியனந்தபாரதி தமிழ் தமிழர்கள் தமிழ் நாடு என்ற பொருண்மையில் இணைந்து 100 கல்லூரி 100 கருத்தரங்கம் நடத்துவது என்று முடிவு செய்து நடத்தி கொண்டு இருக்கிறோம்.

65

பெருங்கவிக்கோ கலைமாமணி

வா.மு. சேதுராமன்

அடிகளாரருக்கும் எனக்கும் உரிய தொடர்பு நீண்ட நெடிய மரபின் தொடர்ச்சியாக காணப்படுவது. இப்பயணத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேற்பட்டு நான் பேரூர் தவத்திரு சாந்தலிங்க திருமடத்தின் 24 ஆம் பட்டமாக எழுந்தருளிய சாந்தலிங்க ராமசாமி அடிகளார் உடன் தொடர்பு உடையவன். இந்தத் தொடர்பை நினைவு கூர்ந்து என்னை இந்த நிகழ்வில் பேச அழைத்தமைக்கு நன்றி.

அடிகளார் என்றவுடன் எனது நினைவில் வருவது எளிமை. அன்பு உபசரிக்கும் பங்கு தமிழ் மீது கொண்ட தணியாக் காதல் . சைவ நெறி மீது கொண்ட மேம்பட்ட பக்தி. அத்தனையும் நான் கடைபிடிக்க காரணமாக அமைந்தது அடிகளாருடன் எனக்கு கிடைத்த நீண்ட நெடிய பயணம். இந்தப் பயணத்தில் பல்வேறு அனுபவங்களை நான் கண்டு மகிழ்ந்தேன் கேட்டு மகிழ்ந்தேன் அனுபவித்து மகிழ்ந்தேன்.

என்னுடைய வாழ்வில் நான் அன்பை பக்தியை சைவத்தை எளிமையை நேசிக்க காரணமாக அமைந்தது அடிகளார் உடைய தொடர்பு என்று ஆணித்தரமாக கூறுவேன். அடிகளார் உடைய நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் நீண்ட நெடிய பயணம் மேற்கொண்ட என்னையும் அழைத்து பேச வாய்ப்பு அளித்தமைக்கு இன்றைய குருமகா சரிதானங்கள் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றேன்.

66

மு. வேலாயுதம்

விஜயா பதிப்பகம், கோவை.

பேரூர் ஆதீனம் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் தனித்தமிழ்க் கல்வி பயின்றவர்கள். அமைதியின் திருவுருவமாகவும் ஆற்றலின் பெருவடிவமாகவும் திகழ்ந்து சிறந்தவர்கள்.

பேரூர் ஆதினத் தமிழ்க் கல்லூரியில் பயின்றவர்கள் எங்கு சென்றாலும் சிறப்புற்று விளங்கியதற்கு நம் ராமசாமி அடிகளார் அவர்களின் பெருந்தமிழ் ஞானமும் காரணமாக இருந்தது என்று நாம் உறுதிபடச் சொல்லலாம். மொழிப்பயிற்சியிலும் இலக்கிய அறிவிலும் தேர்ந்த நல்லறிவு கொண்ட பெருஞ் சான்றோராக அவர்கள் விளங்கினார்கள் என்பது நம் கொங்குப் பகுதிக்கே பெருமை சேர்ப்பதாகும்.

நம் ராமசாமி அடிகளார் அவர்கள் மாணவர்களிடம் காட்டிய அன்பும் அக்கறையும் என்றும் என்றும் நினைந்து போற்றுதற்குரியது. மாணவர்கள் பாடத்திட்டத்தையும் தாண்டி செவ்விலக்கியங்களைப் படிப்பவர்களாகத் திகழ வேண்டும் என்பதிலே அவர்கள் பெரு விருப்பம் கொண்டிருந்தார்கள். அவர்களை நான் சந்திக்கச் செல்லும் போதெல்லாம் அவர்கள் காட்டிய பேரன்பை எண்ணி நெகிழ்ந்து போகிறேன். கைகளைப் பிடித்துக் கொண்டு புத்தகங்களைப் பற்றி, விற்பனை பற்றிக் கேட்பார்கள்.மக்கள் வருகிறார்களா? குறிப்பாக மாணவர்கள் வருகிறார்களா?. நல்ல புத்தகங்களைத் தேர்வு செய்கிறார்களா? என்று அக்கறையும் ஆர்வமும் பொங்கிடக் கேட்பார்கள். அவருடைய செழுந்தமிழ் ஆர்வத்தைப் பார்த்து நான் வியந்து போவேன்.

ஆற்றொழுக்காகப் பேசும் அற்புதத் தமிழ் நடைக்குச் சொந்தக் காரராக கயிலை மாமுனிவர், முதுமுனைவர் அடிகளார் அவர்கள் விளங்கினார்கள். எந்த ஒரு கருத்தையும் தெளிவாக கேட்பவர்களுக்குப் புரியும் வண்ணம் சொல்லக் கூடிய

திறனாளராக விளங்கியது அவரது நுண்ணிய படிப்பாற்றலுக்குச் சான்றாக அமைந்தது என்றுதான் எண்ணவேண்டும்.

பேரூர் என்றாலே தமிழ்தான் நினைவுக்கு வரும்.பின்னர் தமிழ்க்கல்லூரி நினைவுக்கு வரும். அப்படி பேரூர் தமிழ்க்கல்லூரி பெருமை பெற்று விளங்கியதற்கு ராமசாமி அடிகளாரின் முழுமையான தமிழ்ஈடுபாடும் தமிழ் மொழியின் நீண்ட மரபின் தொடர்ச்சியாக அவர் விளங்கியதுமே முதன்மைக் காரணமாகும்.

அறிவு ஆழம் பெற வேண்மானால் மனம் தெளிவாக இயங்க வேண்டும் என்றும், தமிழ் மொழி தமிழர்களின் ஆற்றல் மையம் என்றும் சொல்லி தமிழின் பெருமையை உலகுக்கு உணர்த்திய ராமசாமி அடிகளாரின் புகழ் வாழ்க வாழ்க என்று அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றி மகிழ்கிறேன்.

திருக்கைலாய மரபு மெய்கண்டார்வழி சீர்வளர் சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் அடியொற்றி அவரின் சீர்மிகு திருத்தமிழ்ப் பணியை முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் உலகம் போற்றிடச் செய்துவருவது உண்மையிலேயே மகிழ்ச்சி தருகிறது.

67

சுகன்யா ராஜரத்தினம்

முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்
வெள்ளி மலைப் பட்டினம்

பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய நூற்றாண்டு விழா நாயகர் நம்முடைய குருமகா சன்னிதானங்கன் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றேன். இன்றைய குரு மகா சன்னிதானங்கள் தவத்திரு மருதாசல அடிகளார் அவர்களின் பாதங்களை வணங்கி மகிழ்கின்றேன். இந்த நூற்றாண்டு விழாவில் சாமிகளுடைய பெருமைகளைக் கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நமது சாமிகள் எனது தந்தையை மிகவும் நன்றாக அறிந்தவர். எனது தந்தையைக் கோதண்ட ராமர் கவுண்டர் கம்பர், செஞ்சொல் கொண்டல் என்று எனது தந்தையை அழைப்பார்கள். காரைக்குடி கணேசர் அவர்களுடன் இணைந்து எனது தந்தையார் பல கம்பன் நிகழ்ச்சிகளை கோவையிலும் காரைக்குடி முதலான பல ஊர்களிலும் நடத்தியவர்.

அதன் காரணமாக எனது தந்தையாருக்கு பேரூர் மடத்துடனும் கௌமார மடாலயத்துடனும் நெருங்கிய தொடர்பு உண்டு. அடிகளார் அவர்கள் எங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம்

'எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்.
ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமை உணர்வாகி உலகியல் நடத்தல் வேண்டும்'

என்று குறிப்பிடுவர். ஏழைகள் பணக்காரர்கள் என்று வேறுபாடு இன்றி உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று வேறுபாடு இன்றி ஜாதி சமய

வேறுபாடு இன்றி அனைத்து இல்லங்களிலும் சென்று நீங்கள் விளக்கேற்றி வழிபடச் செய்ய வேண்டும் என்று அருளாசி வழங்குவார்.

நமது குரு மகராஜ் அடிகளார் அவர்களின் ஆசியின்படி இன்றைய குரு முதல்வர் மருதாசல அடிகளார் கௌமாரச் செல்வி மரகதம் அக்கா ஆகியோர்கள் இணைந்து இந்திரா காலணி இடங்களுக்குச் சென்று விளக்கேற்றி சைவத் திருமுறைகள் திருப்புகழ் முதலானவற்றையெல்லாம் பாடி மிக நல்ல அதிர்வலைகளை அந்த இடத்திலே செய்து வந்தோம். இதைப்போல பல இடங்களிலே நாங்கள் சென்று இந்த சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் சேவையை செய்து வந்தோம். தமிழ்ப் பண்பாடு தமிழர்களுடைய சமயம் 63 நாயன்மார்கள் பற்றிய செய்திகள் என பலவற்றையும் இல்லந்தோறும் கொண்டு செல்ல வேண்டும் என்று அடிகளார் ஆணையிட்டபடி விரும்பியபடி நாங்கள் செய்து அவரிடம் சொல்லுகின்ற பொழுது மிகவும் மகிழ்வார்கள்.

நான் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்தவள். எனது தந்தையார் விராலியூர் கிராமத்தைச் சார்ந்த ராஜரத்தினம் என்பவர்க்கு 45 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து வைத்திருந்தார். நான் என்று விராலியூரை விட்டு வெள்ளிமலை பட்டினம் வந்தேனோ அன்று முதல் இன்று வரை எனக்கு அடிகளார் உடன் எங்கள் குடும்பம் மூலமாக தொடர்பு ஏற்பட்டது. விழாவிற்கும் நவராத்திரி போன்ற பல விழாக்களுக்கு எனது குருமஹா சன்னிதானம் இப்போது இருக்கக்கூடிய குரு மகா சன்னிதானம் அழைப்பார்கள்.

ஒவ்வொரு முறையும் நான் பேரூர் சென்று உரையாற்றும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றேன். சிறந்த பேச்சாளி என்று சொல்ல முடியாவிட்டாலும் அடிகள் தந்த வாய்ப்பின் காரணமாக நான் பேரூர் தமிழ் கல்லூரி மாணவர்களிடம் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்கு அடிகளார் அவர்கள் மூலமாகக் கிடைத்தது. நான் மருதமலை கோவில் அறங்காவலராக இரண்டு முறை பணியாற்றி இருக்கிறேன். இவ்வாறு நான் தொடர்ச்சியாக அறப்பணிகள் செய்வதற்கு சமயப் நிகழ்ச்சி செய்வதற்கு சமுதாயப் பணிகள் செய்வதற்கு நம்முடைய குரு மகா

சன்னிதானங்கள் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் மற்றும் தவத்திரு மருதாசல அடிகளார் காரணமாக அமைகின்றார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலின்படி ஆசியின் படி சமூகப் பணிகள் சமயப் பணிகள் அறப்பணிகள் செய்து வருவது எனக்கு இறைவன் தந்த பெரும் பேறாகக் கருதுகிறேன். அவர்களுடைய பொன்னார் திருவடிகளை மனநலம் உடல்நலம் தருகின்ற திருவடிகளை எப்போதும் வணங்கி மகிழ்கின்றேன்.

68

முனைவர் கி. சுப்பிரமணியன் (ஐ.கே.எஸ்)

ஆதிரை பதிப்பகம்
இராமநாதபுரம், கோவை.

சின்ன வயதிலிருந்தே பெரியசாமி என்றாலே சாந்தலிங்க ராமசாமி ஐயாவின் திருமுகம் தான் உலகத்தில் உள்ள தமிழர்கள் அனைவருக்கும் ஆன்மீகத்திலும், பக்தியிலும் எல்லாவற்றுக்கும் உதாரணமாக இருந்தவர். மயிலம் கல்லூரி ஐந்தாண்டுகள், சென்னை தமிழ் கல்லூரியில் தமிழ் புலவர் பட்டம் பெற்றவர். தனித்தமிழ் அறிஞர்களுடன் சீரிய நட்பு. சுந்தர சுவாமிகளின் அன்புக்குப் பாத்திரமானவர். அவருடைய ஆசிகள் நிரம்பப் பெற்றவர்.

தமிழ் மொழி நம் உயிரில் கலந்த மொழி. அதனைப் பாதுகாத்து வளர்க்கச் செய்வது நம் கடன் என தனது வாழ்வினில் வாழ்ந்து காட்டியவர். அனைவரிடத்திலும் அன்பாக நலம் விசாரித்து, தேவைப்படும் பொழுது ஆறுதல் கூறும் மகனாகத் திகழ்ந்தவர். விருந்தோம்பல் எனும் தமிழர் பண்புக்கு தலையாய சான்றாக விளங்கியவர் பெரியசாமி.

தமிழர் தம் வாழ்வியல் நிகழ்வுகளில், தமிழ் முறைப்படி அனைத்து சடங்குகளும், வழிபாடுகளும் செய்ய வேண்டும் என உறுதியாக இருந்தவர், கடைப்பிடித்தவர், மற்றவர்களை அதில் நெறிப்படுத்தியவர்.

கோவில்களில் திருநெறிய வழிபாட்டையும், குடமுழுக்கையும் தமிழ்முறைப்படி செய்வதற்குத் தீவிரமாக செயலாற்றியவர். அவர்தம் வழி இன்றும் பெரும்பாலான கோயில்களில் தமிழ் முறைப்படி நடந்து கொண்டிருப்பது கண்கூடு.

இருப்தைந்தாம் குருமகா சந்நிதானங்களின் பணி அளப்பரியது. தமிழுக்கும், சைவத்திற்கும் ஆற்றிய பணி அளப்பரியது. அவரின் பொற்பாதங்களை யும் வணங்குகிறேன்.

69

முனைவர் மா. சிதம்பரம்
இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
தமிழ் உயராய்வு மையம் அழகப்பா அரசு கலைக் கல்லூரி
காரைக்குடி – 3

மெய்கண்டார் வழியில் வந்துகிக்க ஆதி சிவப்பிரகாசரை ஆன்மிகக் குருவாகக் கொண்டு பேரூர் வீரசைவ மடத்தினைத் தோற்றுவித்தவர் சாந்தலிங்க அடிகளார் ஆவார். சாந்தலிங்கரால் தோற்றுவிக்கப்பெற்ற இவ்வீரசைவ மடத்தின் குருமுதல்வராய் இருந்து ஆன்மிகத்திற்கும் சமூகத்திற்கும் அரும்பெரும் பணிகளைச் செய்தவர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அடிகளாரின் சிறப்பியல்புகளையும் நிகழ்த்திய அரும்பெரும் பணிகளையும் அனைவரும் அறியும் வண்ணம் ஆவணப்படுத்தும் முயற்சியாய் இக்கட்டுரை விரிகின்றது.

சிவனை மட்டுமே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் வீரசைவர்கள், மட்டுமன்றி தனிமனித சமூக வாழ்வியலிலும் பல்வேறு புரட்சிகளை வழிபாட்டு முறையில் ஏற்படுத்திச் சமுதாய மேன்மைக்கு வழிகாட்டியவர்கள் ஆவர். அருமறை முடிபையும் ஆகம முடிபையும் ஒன்றாக்கி இறைப் பரம்பொருளைப் பூரணமாக வெளிக்காட்டுவது வீரசைவத்திற்குரிய சிறப்பாகும். இத்தகைய வீரசைவ மரபினைப் பின்பற்றும் ஆதினங்களுள் ஒன்றாய்ச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது பேரூர் வீரசைவ ஆதினம் ஆகும்.

பேரூர் வீரசைவ மடம். மயிலம் வீரசைவ மடத்தினைக் தனது கலைமையிடமாகக் கொண்டகாகும்.பேரூர் வீரசைவ மடத்தினைக் கோற்றுவிக்க அருளாளர் சாந்தலிங்க தேசிகர் ஆவார். இவர் தொண்டை நாட்டில் திருத்துறை என்ற ஊரில் 17–ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர். சாந்தலிங்க தேசிகர் திருவாவடுதுறை ஆதீன நிறுவனர் பஞ்சாக்கர தேசிகரின் மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர். திருக்கயிலாய பரம்பரை,

திருவாவடுதுறை ஆதீன வழித்தோன்றல், துறையூர் திருவண்ணாமலை ஆதீன ஆதிகுருமுதல்வர் சிவப்பிரகாச தேசிகரிடம் உபதேசம் பெற்றவர். சாந்தலிங்க சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவஞான பாலய சுவாமிகளின் அருளாசியின்படி துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் கங்கை ஞானாம்பிகையை என்பாரை மணம் முடித்தார். பின்னர் துறவறம் பூண்டார். ஞானாம்பிகையார் திருவண்ணாமலை சென்று பெரியமடத்தில் தங்கிச் சமயப்பணி ஆற்றி இறையருள் பெற்றார். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட சாந்தலிங்க தேசிகர் கோயம்புத்தூர் மாநகரின் அருகில், நொய்யல் ஆற்றங்கரையில் கீழை சிதம்பரம் என்று அழைக்கப்படும் பேரூரில் வீரசைவ மடத்தினைத் தோற்றுவித்தார். 400 வருடப் பழமையான திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழிப் பேரூராதீனத்தின் குருமுதல்வராக விளங்கியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார். இவர் உதகை அருள்மிகு ஆலமர்செல்வர் திருமடத்தின் ஆறாவது குருமகா சந்நிதானமாகவும் அருள்பாலித்து வந்த சிறப்பினை உடையவர் ஆவார்.

இராமசாமி அடிகளார் மயிலம் கல்லூரியில் தமிழ் பயின்ற காலத்தே, பேரூர் திருமடத்தின் தலைவராக விளங்கிய தவத்திரு ஆறுமுக சுவாமிகள், அடிகளாரைப் பேரூர் மடத்தில் தமக்கு அடுத்த பட்டத்துக்குரியவராகத் தருமாறு தவத்திரு இராமானந்த சுவாமிகளிடம் கேட்டுக் கொண்டார் தவத்திரு இராமானந்த சுவாமிகளின் அருளாசியின்படி, இராமசாமி அடிகளார் பேரூர் மடத்தின் இளவரசுப் பட்டத்தினை 1950ஆம் ஆண்டு (விரோதி - மாசி 20) ஏற்றுக் கொண்டார். மேலும் மயிலம் பொம்மபுரம் ஆதீனம் பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளிடம் வீரசைவ தீட்சை பெற்று இலிங்க தாரணம் செய்துகொண்டார். 1967 ஆம் ஆண்டு முதல் தவத்திரு ஆறுமுக சுவாமிகளிடமிருந்து மடாதிபதி பொறுப்பினை ஏற்று அருளாட்சி செலுத்தினார்.

ஆதினத்தின் நிதிநிலையை மேம்படுத்தல்

சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூர் திருமடத்தின்

இளவரசுப் பட்டம் ஏற்றபொழுது திருமடம் நிதி வருவாயில் குறைந்தே காணப்பட்டது. எனினும் சாந்தலிங்கப்பெருமானுக்கு நாள் வழிபாடு செய்தல், சத்வித்யா சன்மார்க்க சங்கத்தில் வாரக் கூட்டம் நடத்துதல், துறவியர்களுக்கு உணவு, உறையுள் வசதி வழங்கல், குரு பூசை கொண்டாடுதல் என்பன இத்திருமடத்தின் செயல்முறைகளாக இருந்து வந்தன. அடிகளார் தனது அயராக முயற்சியின் மூலமாகவும் அன்பர்களின் ஆதரவின் வழியும் மடத்திற்குப் பொருள் வரும் வழிகளைப் பெருக்கினார்.

தமிழ்மொழியைக் காத்த செயல்

சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தமிழின்பால் பெரும்பற்றுக் கொண்டவர். எனவே எங்கெல்லாம் வாய்ப்பு அமைந்ததோ அங்கெல்லாம் தமிழின் பெருமையை நிலைநிறுத்தப் போராடி வென்றும் காட்டினார் மேலும் 1953ஆம் ஆண்டு தமிழ் அருச்சனை முறைமையோடு குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்கப் பேரூரில் தமிழ்க் கல்லூரியைக் கொடங்கினார் பேரூர்க் தமிழ்க் கல்லூரியின் மூலம் எண்ணற்ற தமிழ்ப் பட்டதாரிகளும் முதுகலைப் பட்டதாரிகளும் முனைவர்களும் உருவாக வித்திட்டவர் அடிகளாரே ஆவர்.

அக்காலத்து, சென்னைப் பல்கலைக்கழகம் தமிழகத்தின் ஒரே பல்கலைக்கழகமாக ஆட்சி செய்து வந்தது. அப்பல்கலைக்கழகம் இளங்கலைப் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு இரண்டு ஆண்டுகட்கு வாரத்திற்கு ஆறு மணிநேரம் தமிழ்ப் பாடவேளை என்றிருந்தகை நீக்கி, ஓர் ஆண்டிற்கு மட்டும் எனக் குறைத்தது. மேலும் ஓராண்டிலும் வாரத்திற்கு இரண்டு மணியே தமிழ்ப்பாடவேளை என்பதனைக் தீர்மானமாகக் கொண்டு வந்த காலத்தில் கல்விக் குழுவிலும் ஆட்சிக் குழுவிலும் அதனை எதிர்த்துப் போராடி வென்று காட்டினார் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

பாரதியார் பல்கலையில் தமிழுக்கான போராட்டம்

பாரதியார் பல்கலைக்கழகத்தின் முதல் ஆளவை மன்றக் கூட்ட நிகழ்வுகள் ஆங்கிலத்திலேயே துவங்கின. பல்கலைக்கழகத்

துணைவேந்தர் தவத்திரு அடிகளாரை வாழ்த்துரை வழங்க அழைப்பு விடுத்தார். அடிகளார் அதனை ஏற்று வாழ்த்துரை வழங்கிய பொழுது, 'தமிழ்க் கவிஞன் பாரதியின் பெயரால் நடைபெறுகின்ற பல்கலைக்கழகத்திலுமா கூட்ட நடவடிக்கை பிற மொழியில் நடக்கிறது?' எங்கும் தமிழ்: எதிலும் தமிழ்' என்று கூறுகின்ற ஆட்சியிலும் தமிழுக்குப் பாரதியார் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது இடமா? என முழங்கினார். மேலும் பாரதியார் பல்கலைக்கழகக் கூட்ட நடவடிக்கைகள் தமிழில் நடத்தப்படுகின்ற பொழுதுதான் இனிவரும் கூட்டங்களில் பங்குபெறுவேன் எனச் குளுரைத்து அதில் வென்றும் காட்டியவர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார். பைந்தமிழைப் பல்கலைக்கழத்தின் அரியணையில் ஏற்றிய அருஞ்செயலிற்குத் தமிழ் உலகம் என்றென்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது எனில் அகது மிகையன்று.

பல்கலைக்கழகப் பணிச்செம்மை

(Senate) தமிழகத்தில் உயர் கல்வி வழங்குவதில் முதலிடம் பெற்று விளங்கிய சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழுவிலும் (Academic Council) பணியாற்றியதுடன் 1972-ஆம் ஆண்டு முதல் 1978-ஆம் வரை ஆட்சிக்குழு உறுப்பினராகவும் (Member of the Syndicate) அரும்பணி ஆற்றியவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார். ஆட்சிக்குழுவின் பல்வேறு குழுக்களில் (committee) இடம் பெற்றுத் தனது பணிகளை மிகவும் சிறப்புடன் ஆற்றினார். மேலும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பாடநூல் குழுவில் உறுப் பினராய் மூன்றாண்டுகள் இருந்து புதிய பாடத் திட்டங்கள் வகுப்பதற்கு முதற் காரணியாய் அமைந்தார். வித்துவான் சான்றிதழ் (Diploma Certificate) புலவர் சான்றிதழ் (Pulavar Certificate) என மாறுவதற்கு வித்திட்ட முதல்வரும் அடிகளாரே ஆவார்

தமிழ்க் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த புலவர் பட்டங்களைப் பி லிட் பட்டப்படிப்பாக மாற்றிய பெருமை அடிகளாரையே சாரும்.

சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கொண்டு பணி செய்தவர். நாள்தோறும் காலையும் மாலையும் அங்கைத் தலத்தில் இலிங்கத்தை வைத்துக் கயிலை மலையானைப் போற்றி வாழ்ந்தவர் இராமசாமி அடிகளார். தமிழ் வழிபாடு, தமிழ் குடமுழுக்கு, தமிழருச்சனை, தமிழ்க் திருமணம் போன்ற பலவற்றைக் கொங்கு நாட்டில் பழக்கத்திற்குக் கொண்டு வந்தார். மேலும் தமிழ்நாட்டு இளைய சமுதாயத்தினர் சமய உணர்வு மிக்கவர்களாக, சமய இலக்கியப் புலமை பெற்றவர்களாக விளங்க வேண்டுமென்று கருகியதுடன் அதற்கான பணிகளையும் முன்நின்று நடத்தியவர் அடிகளார்.

திருக்கோயில்களில் ஆட்சி செய்த தமிழ்மொழி, பிற்காலத்து சில ஆட்சியாளர்கள் காரணமாகத் தன் அரியணையை இழந்தது. இதனை மீட்டெடுத்தல் வேண்டும் என அரும்பணி ஆற்றியவர் சாந்தலிங்க 'இராமசாமி அடிகளார். திருக்கோயில்களில் தமிழிலேயே அருச்சனை செய்ய வேண்டும் என்ற ரல் தமிழகத்தில் எழுவதற்கு முன்பே, பேரூர் நடராஜப் பெருமான் திருக்கோயிலில் தமிழிலேயே அருச்சனை செய்யப்பட்டு வந்தது. அத்தகைய நல்ல முயற்சியை முதன்முதலாக முன்நின்று செயல்படுத்தியவர் இராமசாமி அடிகளார் ஆவார். அருச்சனை மட்டுமன்று, திருக்கோயில் திருக் டநீராட்டு, தமிழ் வேள்விகள் போன்ற நிகழ்வுகளும் தமிழில் நிகழ்வதற்கான அரும்பணிகளை ஆக்கிக் தந்தவர் அடிகளார். இப்பணிகளில் அடிகளாருக்கு மிகப் பெரும் துணையாக விளங்கியவர் சிரவையாதீனம் சுந்தர சுவாமிகள் ஆவார். இவர்கள் இருவரும் கொங்கு நாட்டின் 'இரட்டை மடாதிபதிகள்' எனச் சான்றோர்களால் போற்றப்பட்டனர் என்பது ஈண்டு றிக்கற் ரியதாகும்.

இராமர் கோயில் மீட்டெடுப்பு முயற்சி

சாந்தலிங்க 'இராமசாமி அடிகளார், வீரசைவ மரபினைச் சார்ந்தவர் எனினும் இந்து சமயத்தின் பிற சமய மரபுகளின்பாலும் மதிப்புக் கொண்டிருந்தார், அதனைச் செயல் வடிவிலும் வெளிப்படுத்தினார். தவத்திரு அடிகளார் தில்லி மாநகர் சென்று பாராளுமன்ற உறுப்பினர்களையும் அதிகாரிகளையும் கண்டு, திரு

மூப்பனார் அவர்களின் மூலம், அயோத்தியில் அடைக்கப்பெற்று பூஜை செய்யப்படாமல் இருந்த ராமர் கோயிலைத் திறந்து வழிபாடு நடப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார் என்பது இவர்தம் சமயப்பொறைக்குச் சிறந்த சான்று ஆகும்.

சாந்தலிங்க இராமசாமி அடிகளார் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆளுமை பெற்றவர். இதற் ச் சான்றாக நிகழ்வு ஒன்றினைச் சுட்டலாம். தமிழில் மூலிகைமணி என்றொரு இதழ் வெளிவருகின்றது. இதன் வாசகர்கள் சார்பில் ஆய்வுச் சொற்பொழிவு ஒன்றினைச் சென்னையில் ஏற்பாடு செய்திருந்தனர். அதில் 'சித்தர் நெறி' எனும் தலைப்பில் அடிகளார் உரையாற்றினார். ஒரு மணி நேரம் சித்தர் நெறி பற்றி அருமையான உரையினை வழங்கியதற்ப் பின், உரையின் முடிவாக சித்தர்களுக்கான வரையறையைத் தரும் வகையில்,

'நுகர்வனவற்றை நெறிப்படுத்தியவர்கள் சித்தர்கள் ஆகலாம்'

என்று வரையறுத்து உரைத்தார். சித்தர்களின் வாழ்வியலும் அவர்கள் நிகழ்த்திய பல்வேறு அற்புதங்களும் அளக்கலாக அளவும் பெருமையும் கொண்டமைந்தவை ஆகும். அதனை அனைவருக்கும் எளிதில் புரியும் வகையில் சுருங்க உரைத்த அடிகளின் நுண்மாண் நுழைபுலம் பெரிதும் போற்றுதற்கு உரியதாகும்.

அடிகள் எதனையும் செயல் வடிவம் கொடுத்துப் பார்க்கும் ஆர்வமும் ஆற்றலும் மிக்கவர். சமுதாயத்தில் பிறர்க் வழிகாட்டும் முன்முயற்சியாய்த் தானே ஒன்றினை முன்நின்று செயல்படுத்திக் காட்டும் திறம் அவர்க் இயல்பாக வந்தமைந்து இருந்தது. மேனாள் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் ஆட்சிக் காலத்தில் இந்தியக் திருநாடு உணவுப் பற்றாக் றையினால் அல்லலுற்றது. எனவே அதனை ஈடுசெய்யும் வகையில் ஒருவேளை உணவைக் கட்டுப்படுத்திக் கொளல் நல்லது என்ற கருத்தினை ஏற்றுக் கொண்ட அடிகளார், இரவு உணவை நீக்கி, இறைவனுக்குப் படைக்கப்படும் பாலினை மட்டும் பல ஆண்டுகள் அருந்தி வந்தனர் இத்தகைய செயல் அடிகளுக் நாட்டின் நலனில் இருந்த அக்கறையினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அணி செய்த அமைப்புகள்

சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தனது வாழ்நாளில் தமிழ், சமயம், சமூகம் சார்ந்த பல்வேறு அமைப்புகளில் பங்கேற்று அவ்வமைப்புகளின் நோக்கமும் செயலும் சிறக்க அரும்பணி ஆற்றியுள்ளார். அவற்றுள்,

1.அருள் நெறித் திருக்கூட்டம், 2. தமிழகப் புலவர் குழு, 3. திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் (சிவகங்கை மாவட்டம்), 4. திருக்குறள் பேரவை, 5. பழனி தண்டாயுகபாணி கோவில், 6. தமிழ்ப் பல்கலைக் கழகம்.

என்பன அடிகளார் இடம்பெற்று அணிசெய்து அமைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். மேலும் டில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை மொழிகளின் மாநாட்டில் கோவைகிழாருடன் சென்று பங்கு பெற்றார். சைவசித்தாந்தப் பெருமன்ற மாநாட்டை இரண்டு முறை தனது பேரூர்த் திருமடத்தில் சிறப்புற நடத்தினார். உலக இந்து மகளிர் மாநாட்டை 1983 ஆம் ஆண்டு கோவையில் நடத்தினார். 1985 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற உலக இந்து மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டார். இவ்வாறு அடிகளார் பங்குபெற்ற நிகழ்வுகளும் அவருக்கு அளிக்கப் பெற்ற விருதுகளும் பாராட்டுரைகளும் எண்ணற்றவை ஆகும்.

முடிவுரை

வீரசைவம் போற்றும் சமய மரபும். சான்றோர் போற்றும் சமூக உணர்வும். என்முள தென்தமிழின் சிறப்பினை எடுத்துச் சென்று திசையெங்கும் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்த திறமும், காற்றும் விரிவானும் கடலும் மலைநிலமும் நிலைத்திருக்கும் வரை நிமிர்ந்து நிற்கும் செயற்செம்மைகள் ஆகும். இவ்வரிய செயல்களைச் செய்தளித்த அடிகளார், சிவபெருமானின் திருவருளில் கலந்து நின்ற காலத்து, வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபின் தொடர்ச்சியாக ஆதீனத்தின் அடுத்த குரு முதல்வராகத் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அருளாளுமை ஏற்றார். அடிகள்தம் அருளாட்சியில் பேரூர் திருமடத்தின் சமய, சமுதாய தமிழ்ப்பணிகள் சிகரம் தொட நடந்து வருகின்றன. சிவனருள் மேலும் திருக்கூட்டும்.

70

மரபின் மைந்தன் முத்தையா
கோவை

பண்புடையார் பற்றுண்டு உலகம் என்று கூறுவார் வள்ளுவப் பெருந்தகை. பண்பு உடையவர்கள் இருக்கின்ற காரணத்தினால் தான் இந்த உலகம் நின்று நிலைத்து காணப்படுகிறது. அத்தகைய சான்றோர் கூட்டத்தில் ஒருவர் அடிகள் பெருந்தகை ஆவார். சேக்கிழார் மன்றத்தின் கிளை கோவையில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு என்ன பெயர் வைப்பது என்ற ஆலோசனைக் கூட்டம் நடந்தபோது தெய்வச் சேக்கிழார் வாக்காகிய புனிசர் பேரவை என்பதை வைக்கக் கூறினார் அடிகளார். அணையாத அடுப்பு மூடாத கதவுமாக திருமடத்தின் கதவு இன்னார் இனியவர் என்று இல்லாமல் அனைவருக்கும் அன்பை தருவதாக அமைந்தது. வந்தவர்கள் அனைவரும் உணவு உண்ண வேண்டும் என்பதில் இரு பெரும் அடிகளார்களும் எப்போதும் சிந்தையில் எண்ணியவர்களாக திகழ்ந்தார்கள். எங்களுடைய பாட்டனார் அடிகளாருக்கு மிகவும் நெருங்கிய தொடர்புடையவர். சென்னியப்பனார் அவர்கள் ஒரு முறை எனது குடும்பம் பற்றி விசாரித்த சென்னியப்பனார் அடிகளாரிடம் திருக்கடவூர் பிச்சையப்பச் செட்டியார் பேரன் என்பதை அறிந்து முன்பே சொல்லாததற்கு கடிந்து கொண்டார்.

பள்ளி மாணவனாக இருக்கும்போதே பழ. மணிவண்ணன் ராஜகோபால் முதலானவர்களை சந்திக்க கல்லூரிக்குச் செல்வேன். அப்போதிருந்து எனக்கு மடத்துடன் நெருங்கிய தொடர்பு கிடைத்தது.

கொங்கு வேளிர் விழா விஜயமங்கத்திலும் கோவையிலும்

நடக்கும். நானும் மாணவர்களுடன் கல்லூரி பேருந்தில் சென்று கலந்து கொண்ட அனுபவம் மகிழ்ச்சிக்கு உரியது.

கண்ணகியைப் பற்றி ஒரு கவியரங்கம் வைக்க நான் விரும்பி பழ. மணிவண்ணனிடம் கூறினேன். நான் கூறிய ஆலோசனையை ஏற்று கவியரங்கத்தை நடத்திய சால்பு வியத்திற்கு உரியது. இந்த கவியரங்கத்தில் நானும் கவிதை பாடினேன் அந்த நினைவு என்னால் என்றும் மறக்க இயலாதது. அடிகளார் கருணையால் விளைந்த அதிசயம் தான் பள்ளி மாணவனாகிய நான் கல்லூரி கவியரங்கத்தில் கவிதை பாடியது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் திருக்குறள் மாநாடு கோவையில் நடைபெற இருந்தது. சில சூழ்நிலைகளால் நடக்க இயலாமல் போனது. அதற்கான ஆலோசனை கூட்டம் நடந்த பொழுது பொறுப்பு வகித்தவர் நடத்த முடியவில்லை என்று கண்ணீர் விட்ட போது அடிகள் பெருந்தகைகள் இறங்கி வந்து தோளில் தட்டி கொடுத்து இன்னும் சிறப்பாக நடப்பதற்காக இது நடந்திருக்கிறது என்று சொல்லியது அவருடைய அமைதிப்படுத்தும் ஆளுமையை என்னிடத்திலே காட்டியது

புவியரசு அவர்கள் பேசுகின்ற பொழுது அடிகளார் வகுப்பறையில் வருகின்ற பொழுதுநெற்றியில் விபூதி இல்லை என்றால் சுவற்றில் உள்ள சுண்ணாம்பை எடுத்து நெற்றியில் பூசி அமர்வோம் என்று கூறியது முன்னாள் மாணவர்கள் அடிகளாரிடத்தில் கொண்ட மரியாதையை காட்டுவதாக அமைந்தது

சிவராத்திரி அன்று பேரூர் பட்டீஸ்வரர் கோயில் மிகப்பெரிய அளவிலே பல நிகழ்ச்சிகள் நடக்கும். பட்டிமன்றம் உண்டு பட்டிமன்றம் நடக்கும்போது அடிகளார் வந்தால் எவ்வளவு பெரிய தமிழர் என்கிறவர்களாக இருந்தாலும் சரி அடிகளுக்கு வழி விட்டு அமைதியாகி விடுவார்கள் அடிகளாரின் ஆசியை கேட்க ஆவலுடன் நிற்பார்கள் தமிழ் அறிஞர் கூட்டம் அடிகளார் மீது வைத்திருந்த மதிப்பை உணரும் வாய்ப்பாக இது அமைந்தது.

திருமணத்தில் நாள் வார மாத சிறப்பு வழிபாடுகள் நடந்த வண்ணம் காணப்படுகின்றது அதற்கெல்லாம் கட்டளைதாரர்களாக்

காணப்படுபவர்கள் பல தலைமுறைகளாக மடத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பதை பார்த்து அனைவரும் மகிழ்வோம். அடியாருடைய நூற்றாண்டு விழாவை மிகச் சிறந்த முறையில் கொண்டாட இன்றைய குரு மகா சன்னிதானங்கள் அருள் ஆசியுடன் வேண்டும் என்று விரும்புகிறேன்

71

நவக்கரை நவீன் பிரபஞ்சன்

M.Tech., M.A., M.Sc.,

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்கிண்றோம்.

உலகத்தில் தமிழையும் சைவத்தையும் தன் இரு கண்களாக கொண்டிருக்கும் ஒரு மாபெரும் ஆதீனம் தான் நமது பேரூர்ஆதீனம் மேலைச் சிதம்பரம் என்று சொல்லப்படக் கூடிய அந்த பேரூர் திருத்தலத்திலே தன்னுடைய சைவ தொண்டை, வழிவழியாக செய்துகொண்டு இருக்கக்கூடிய ஒருஅற்புதமான காஞ்சிமா நதிக்கரையில் இருக்கும் ஆதீனமே நமது பேரூர் ஆதீனமாம் நம் பேரூர் ஆதீனத்தின் பல தொன்மையான நிகழ்வுகள் இருந்தாலும் இன்று நடக்கக் கூடிய இந்த நிகழ்வானது ஒரு உச்சம் தொட்ட நிகழ்வாகவே நாம் கருத வேண்டும்.

ஏனெனில் நமது ராமசாமி அடிகள் ஸ்வாமிகளினுடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி நூற்றுக் கணக்கான செயல்கள் 100×100 என்று சொல்லும் அளவிற்க்கு பல நிகழ்வுகள் கோலாகலமாய் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அந்த காஞ்சிமாநதியினுடைய வற்றாத ஜீவனும் அந்த காஞ்சி மாநதியினுடைய செல்வமும் ஒருங்கினைந்த இந்தமண்ணில் நம் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் காக்கும் ஒரு அற்புத திருமடம்தான் நமது பேரூர் திருமடம்.

கூத்தனுடைய பொற்ப்பாதத்தை நாம் சென்றடைவதற்கு நமக்கு

சில வழிகள் தேவை, அந்த சில வழிகளை மக்களுக்கு உணர்த்தும் அரும் தொண்டில் தான் இருந்து கொண்டிருக்கிறது நமது பேரூர் திருமடம். அந்த திருமடத்தை மிக சிறப்போடும் மிக சென்மையோடும் நடத்திய பெருமைக்கு உரியவர்கள். இப்போது இருக்கக்கூடிய நமது மருதாசல பெருமான் அடிகளார் ஆவார்.

அந்த காலகட்டங்களிலே சமஸ்கரதமொழிதான் உயர்ந்ததாக கருதி இறைவனுடைய அருகாமையில் இருந்து கொண்டிருந்த காலம் அக்காலத்தில் எல்லாம் தமிழ் என்பது பேச்சுமொழியாகவும் பயிற்றுவிக்கும் மொழியாகவும் இருந்தாலும் இறைவனுடைய பொற்பாதத்திலே விளங்கும் ஒருமொழியாக இல்லாத காலமாகவே இருந்தது. அந்த காலகட்டத்திலே தமிழை, தெய்வீக ஒரு தொண்மையான அந்த தமிழை, தெய்வத்திற்கு சமர்ப்பணம் செய்யக் கூடியகாரியங்களுக்கு தமிழை பயன்படுத்த வேண்டும். தமிழ்மரபுகளிலே அனைத்து சீர்களை அமைத்து ஆகமவிதிகளையும் செய்ய வேண்டும் என்று மிகப் பெரியஅளவிலே கொடுத்தவர் நமது ராமசாமி அடிக்களார்சுவாமிகள். அவரோடு இணைந்து பல்வேறு ஆதினங்களும்பல்வேறு குருமார்களும் தன்னுடைய கரங்களை உயர்த்தினாலும் நமக்கெல்லாம் ஆதியாக இருந்து அவர்களுக் கெல்லாம் ஆதியாக இருந்து வழி நடத்திய குருமகா சன்னிதானம் தான் நமது பேரூர் ஆதீனம் அடிகளார்அவர்கள் புகழைப் பாட புகழை சொல்ல என் வயதுஎக்காரணம் கொண்டு பத்தாது.

நானோ எளியன் நானோ சிறியன் தமிழில் நான் அறிந்ததுசில என்று தான் சொல்ல 'வேண்டும் அப்படி பல ஆராய்ச்சி கட்டுரைகளையும் பல ஆராச்சி மாணவர்களையும் ஆராய்ச்சி வல்லுனர்களையும் உருவாக்கிய ஒரு அற்புதமான திருமடம்தான் நமது பேரூர் திருமடம் என்று நாம் சொல்ல வேண்டும். அதற்கு ராமசாமி அடிகளார் சுவாமிகள் அவர்களுடைய தொண்டு மிகப்பெரிய அளவிலே நின்றது அதுபோல இதை எப்படி மக்களுடன் இந்த சைவத்தை நாம் கொண்டு செல்வது மக்களுடைய வாழ்விற்கு உயிர்ருப்பதற்கு தேவை என்ன என்று அறிந்த சுவாமிகள் அன்று பேரூர் கல்லூரி தமிழ்கல்லூரியே தமிழ் நாட்டிலே சில கல்லூரிகளே

தமிழுக்கானகல்லூரி என்று சொல்லப்படும் அதில் முதன்மையானதும் மேன்மையானதும் ஆக விளங்கக்கூடிய பேரூர் தமிழ்கல்லூரியே அப்பொழுது கல்வியிலே தன்னுடைய ஆதிக்கத்தை செல்லுத்த வேண்டும் அதன் மூலமாகத்தான் இந்த மாணவர்கள் அதன் மூலமாக சைவத்தை உணரவேண்டும் என்கின்ற பாதையில் உணர்ந்த நமது சுவாமிகள் தமிழின் மூலமாக இந்த கல்வியை கொண்டு வந்தார்அதோடு சேர்ந்து வழிபடும் கோயில்களை அச்சகராகவும் ஓதுவா மூர்த்திகளாகவும் பலரை உருவாக்கினார் நமது மதிப்புமிக்க ராமசுவாமி சுவாமிகள் கள்ளுக்குள் ஈரம் உண்டு அதுபோல எந்த ஒரு மனிதனுக்குள்ளும் கடுமையான மனிதனுக்குள்ளும் சைவம் என்பது சிவம் என்பது அமர்ந்தேஇருக்கும் அதுதான் ஆதினிலை என்ற நமக்கெல்லாம் தத்துவத்தை உணர்த்துவது தான் சைவம் அந்த தத்துவத்தை சாதாரண மக்களுக்கு கொண்டு செல்வதற்காக கல்வியைதன் கரங்களிலே எடுத்து நேர்மை தவறாமல் அந்த கல்வியைபோதிக்கும் பல ஆசிரியர்களை உருவாக்கி அந்த இடத்திலேமிகப் பெரிய திருமடத்தை உருவாக்கினார்கள்.

அறம் செய்ய விரும்பும்

நமது குருமகா சன்னிதானங்கள் எப்படி கல்வி என்று அறத்தை மற்றவர்களுக்கு வாரி வழங்கிய ஒரு பெருமானார்தான் நமது குருமகா சன்னிதானங்கள், ராமசாமி பெருமான், இன்றைய மருதாசலப் பெருமான். அதுபோல, பல அரங்க, அறம் செய்ய விரும்பும் மக்களை ஒன்றிணைத்து பல் வேறுஇடங்களை, பல்வேறு செயல்களைச் செய்ய ஊக்குமாய் இருந்தவர்கள் நமது குருமுகா சன்னிதானங்கள் என்பது எந்தவித ஐயமும் கிடையாது.

ஆறுவது சினம் ஆம் மனித வாழ்வில் சினம் என ஒருசிலந்தை வலை போலது ஒரு மனிதனை தனக்குதேவைப்படக் கூடிய அனைவர் இடத்திலும் பிரித்து தனியாக அமரவைத்துவிடும் அப்பேறபட்ட ஒரு சிலந்தை வலை தான்சினம் என்று சொல்லப்படக் கூடியது. தேவைப்படக் கூடிய இடத்திலே கடுமையான கட்டுப்பாடு என்பது இருந்தது. சைவத்தில் அந்த சிவபருமானை வணங்கக் கூடிய பூஜி

புனஸ்காரங்களிலே ஆகம விதிகளிலே இவர்கள் மேற்படுத்திய அற்புதங்கள் ஏராளம்.

சிவ வழிபாட்டையும் இந்த சைவ நெறிமுறைகளையும் ஒவ்வொரு இல்லங்களிலும் கொண்டு செல்ல வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஒழுங்கு முறை தேவைப்பட்டது. அந்த ஒழுங்குமுறையைக் கடைப்படிப்பதற்காக அவர்கள் சினத்தை தேவைப்படும் இடத்தில் காட்டி, மாற்றி கடைப்படித்தார்கள். இந்த சினமான ஆறுவது சினம், சினத்தை எப்படி ஆளுமை செய்ய வேண்டும் என்ற கருத்தை உணர்ந்து நாம் நடந்து கொள்வோம் அதைக் குருமகா சன்னிதானங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்வோம் என்று சொல்லி இந்த முடிவு செய்கின்றேன்.

உனக்கு தேவைக்கு அதிகமாக பொருள் இருந்தால் மற்றவர்களுக்குக் கொடு. ஒரு இடத்தில் பொருள் கொட்டிக் கிடக்குமானால் மற்றவர்களுக்கு முடிந்ததைக் கொடு. அதேபோல் நம் குருமகா சண்ணிதானங்களிடத்திலே கொட்டிக்கிடந்தது என்ன தெரியுமா ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும் தான் அப்படி நமது குருமகா சண்ணிதானங்கள் அவர்களிடத்திலே இருக்குக் கூடியின்ன ஞானத்தைஎத்தனையோ குருக்களப் பார்த்திருக்கிறோம் தன் சீடனுக்குச் சொல்லிக் கொடுக்காத பல விஷயங்களை மறைத்து வைத்திருப்பார்கள் அப்படி இல்ல நமது குருமகா சண்ணிதானங்கள் உலகல் இல்ல உள்ள அனைத்து மக்களும் இந்த தமிழ் ஞானத்தைப் பெற வேண்டும். இந்த தமிழின் மூலமாக கல்வியைப் பெறவேண்டும் என்று தன்னடத்தில் ஈகைப் பன்பா ள் அள்ளி அந்த கல்வியை இறைத்தவர்கள் தான்.

அடுத்ததாக ஈவது விளக்கு. நீ கொடுக்கின்றாயோ கொடுக்கவில்லையோ ஆனால் மற்றவர் கொடுப்பதை தடுத்து விடாது. தடுத்து கொடுப்பதை நிறுத்துவதற்கு நீ ஒரு காரணமாக மாறிவிடாது என்பதுதான் அந்த வாக்கியத்தின் அர்த்தம் என்று நான் நினைக்கின்றேன். அப்படியானால்

இன்று கோவை மாவட்டம் இந்த கொங்குநாடு இந்ததமிழகம் எங்கும் எத்தனையோ கல்லூரிகள் இருந்துகொண்டு இருக்கின்றது. இங்க இருக்குக்கூடிய பலகல்லூரிகளும் பள்ளிகளும் இருக்கும் மாணவர்களுக்குஅறியுவார்களா அறிய மாட்டார்களா என்று தெரியவில்லைஅந்த காலகட்டங்களிலே எத்தனையோ கல்லூரிகளும் ஏன் பாரதியார் பல்கலைக்கழகம் கூட இந்த கோவைமாவட்டத்திலே உதிப்பதற்கு நமது குரு மகாசன்னிதானங்கள் மிக மிகப் பெரிய பணியை ஆற்றி இருக்கின்றார். இந்த உலகத்திலே இருக்குக்கூடிய பல மக்களும்கல்வியின் மூழமாக உந்து வர வேண்டும் தன்னுடைய கல்லூரியிலே தன் திருமணத்தைச் சார்ந்த கல்லூரி மட்டும் உருவாக்காமல் இங்க இருக்குக் கூடிய எத்தனையோ பெண்களுக்கான கல்லூரிகளை உருவாக்கி அதை நிர்வாகம் செய்யக் கூடிய திறன் கொண்டவர்களுக்கு அறிவு குருவாகவும் ஞான குருவாக்கவும் விளங்கியிருக்கின்றார்.

நமது குருமகா சண்ணிதானம் பற்றி தலை சிறந்த பல கல்லூரிகளுக்கு ஆளோசகராகவிளங்கியிருவர்கள் தான் நமது ராமசாமி பெருமானும் இன்று இருக்குக்கூடிய நமது மருதாசல பெருமான் என்று கூட நாமசொல்லலாம்.

அப்படி இந்தக் கல்லூரியில் மட்டும் தான் சேர வேண்டும்என்ற எண்ணத்தில் இல்லாமல் பல கல்லூரிகளையும் பலபள்ளிகளையும் ஆங்காங்கே தோற்று விற்க மிகப் பெரியஉருதுணையாக இருந்தவர்கள். அகையனால் இந்தஆத்திச்சூடிக்கு இவது விளக்கேல் என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர்கள் விளங்கி இருக்கின்றார்கள் என்பதில் எந்த வித ஐயப்பாடும் கிடையாது என்று அறிவோம்.

அடுத்தது உடையது விழும்பேன் இந்த நாட்டினுடைய பல்வேறு சைவம் நெறிகளிலும் இந்து மதத்தினுடைய நெறிமுறை பிரகாரமும் அரசியல் அமைப்பு சார்ந்த அரசியல் ஆலோசகர்களோடு அறிவுரை கொடுக்கக் கூடிய இடத்தில் நமது குருமுக சன்னிதானங்கள் இருந்திருக்கின்றார் அப்படித்தான் அந்த தை தமிழிலே ஊதுவ மூர்த்திகள் தமிழிலே இருக்கக்கூடிய அர்ச்சகர்களையும்

இந்தநாட்டிற்கு அர்ப்பணித்த மாபெரும் பணிகளை செய்து வந்தவர்கள் நமது குரு முக சன்னிதானங்கள் எப்படி தேவைப்படக்கூடிய ரகசியங்களை எங்கும் கூறாமல் அதைகாத்து நமது குரு மகா சன்னிதானங்கள் என்ற சைவத்திரு நெறியை உலகிற்கு அரிய வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் மிகை ஆகாது.

ஊக்கமது கைவிடேல் ஆம் என்ன ஒரு ஊக்கம் ஆழமான அந்த தமிழ் அறிவை இந்த உலகுக்கு கொண்டு செல்ல வேண்டும். இந்த சைவத்தின் மூலமாக மக்கள் ஞானத்தை அடைய வேண்டும் என்ற பேர் அவாவிலே நமது குரு மகா சன்னிதானர்கள் தமிழ் அழிந்த ஒரு நிலையில் அழியும் ஒரு நிலையில் இருந்து கொண்டிருந்த காலம். ஆங்கிலம் படித்தால் தான் வேலை இல்லாவிட்டால் ஒன்றுமே இல்லை என்றெல்லாம் பலரும் சொல்லிக் கொடுத்த காலம். அந்த காலகட்டத்திலே தன்னுடைய ஊக்கத்தை அந்த நம்பிக்கையை தமிழ் கொண்ட தமிழ் மீது வைத்து அந்ததவளை வளர்க்கும் ஒரு ஆர்வத்திலேயே மிகச் சிறப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். நமது குரு மகாசன்னிதானர்கள் அனைத்து குழந்தைகளும் தமிழ் வேண்டாம் ஆங்கிலம் வேண்டும். மற்ற மொழிகள் வேண்டும் என்றுசொல்லக்கூடிய அந்த காலகட்டத்தில் கூட இல்லை தமிழில் இருக்கக்கூடிய சிறப்பு உலகத்தில் வேறு எங்கும் இல்லைஞானம் பெறுவதற்கு ஒரு மொழி இருக்கின்றது என்று அந்தமொழி தான் தமிழ் மொழி என்று சொல்லி நம்மையெல்லாம் ஞான பாதையிலே வழி நடத்தும்.

என் எழுத்து இகழேல். எப்பொழுதுமே ஞானத்தையும்கல்வியும் என்றென்று சொல்லக்கூடிய கணிதத்தையும் இகழ்ந்து விடாதே. அந்த காலகட்டத்திலே கல்வியைஞானத்தையும் இந்த சைவத்தையும் நிலை நிறுத்துவதற்கு பற்பல தொண்டுகளை செய்தது நமது குரு மகாசன்னிதானங்கள் என்று இந்த இடத்திலே குறிப்பிட வேண்டும். ஆம் அப்படித்தான் இன்றைய மருதாசலபெருமானாக இருக்கக்கூடிய நமது குரு மகா சன்னிதானம் தன்னுடைய முனைவர் பட்டத்தை பெற்று இந்த உலகிற்கு அவர் எடுத்துக்காட்டாக விளங்கினார். இந்த

கல்வியிலே இந்த கல்வி என்னும் அறத்திலே சிறந்து விளங்க வேண்டும் என்றால் நானும் ஒரு முனைவராக வேண்டும் என்று முனைவர் என்ற தன்மையில் இருந்து ஞானத்தையும் கல்வியையும் இந்த உலகிற்கு அறிய வைக்க வேண்டும் என்று சொல்லி தன்னுடைய பிஹெச்டி என்ற சொல்லக்கூடிய முனைவர் பட்டத்தை முடித்த ஒரே ஒரு ஆதினன் நமது குரு மகான் சன்னிதானம் என்று நான் எனது சிற்றறிக்கையில் தெரிவிக்கின்றேன்.

அடுத்தது நான் ஒப்புரவு ஒழுகு என்கின்ற அந்த அற்புதமான வார்த்தைக்கு நான் சொல்லுகின்றேன். ஏனென்றால் உலகத்தில் உடைய நடை எப்படி அரசியலுடைய நடை. எப்படி இந்த மண்ணின் மக்களுடைய நடை எப்படி என்று பார்த்து அதற்கேற்ற நிலையில் திராவிட கொள்கைகளிலே பெரியார்கள் தலை தூங்கிக் கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் தன்னுடைய சைவத்தையும் தன்னுடைய தமிழையும் இணையாக வளர்த்து இன்று நிலைநாட்டி இருக்கின்றார் என்று சொன்னால் அதனுடைய என்ன ஒரு சூச்சுமுகமாக நடந்து கொள்ள முடியும். அப்படி அந்த காலகட்டத்திலே திராவிட கொள்கை எல்லாம் கடந்து இறை இல்லை என்று சான்ன அந்த மக்களிடத்தில் கூட பல அனுமதிகளை பெற்று பல்வேறு வாழ்க்கை முறைகளை மக்கள் சிறப்பு அடைய வாழவைத்தவர் தான் நமது குருமகா சன்னிதானம் அவர்கள் என்று நாம் சொல்ல வேண்டும். அப்படி இந்த காலகட்டத்திலே அரசியல் மக்கள் அதோடுசேர்ந்து பல குரு மகா சன்னிதானர்கள் அதோடு கல்வி நிறுவனங்கள் என்று அனைத்தையும் எப்படி சரி செய்ய முடியும். வளைந்து நெளிந்து அதில் எப்படி தன்னுடைய ஆளுமையை காட்ட வேண்டும் என்பது நமது குரு மகாசன்னிதானங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய மிகப்பெரிய ஒரு மேனேஜ்மென்ட் பாடம் என்று சொல்லுவேன்.

ஓதுவது ஒளியே ஆம் என்றும் தலைசிறந்த என்றும் நல்ல நூல்களை கற்றுக் கொள்ளக்கூடிய தன்மைகளிலிருந்து நீ விலகிக் கொள்ளாதே. விலகிக் கொண்டால் வாழ்க்கை என்பது வெறுமையாகிவிடும் என்று நமக்கெல்லாம் கற்றுக் கொடுத்தவர்கள் நமது குருமகா சன்னிதானங்கள். ஆம். அதிலும் ராமசாமி

பெருமாளும் நமது மருதாசல பெரும்பாலும் எப்போதுமே அவர்கள் சிறந்த நூல்களை தனது கரங்களிலேயே வைத்துக் கொண்டிருப்பது அவர்கள் பழக்கம். எப்பொழுதும் புதிய புதிய நூல்களையும் புதிய புதிய தொழில் நுட்பங்களையும் கற்றுக் கொண்டு அதை தன் கல்விக்காகவும் மக்களுடைய எழுச்சிக்காகவும் பயன்படத்தும் அற்புதங்கள் என்று குருமகா சன்னிதானங்கள் என்று நான் சொல்ல வேண்டும். இப்படி இந்த ஆத்திச்சூடியில் இருக்கக் கூடிய அத்தனை அறன்களுக்குமே நாம் நமது குரு மகா சன்னிதானங்களை வைத்து ஒப்பிட முடியும். ஆனாலும் என்னுடைய சிற்றறிவிற்கு அறிந்ததை இந்த கட்டுரையில் வெளிப்படுத்தி இருக்கின்றேன். அன்பு பெரியோர்களே இந்த ஒரு பொன்னான வாய்ப்பை எனக்கு அளித்ததற்கு நான் எத்தனை கரம் கூப்பி நன்றிகளை தெரிவிப்பேன் என்று நான் அறியேன். இந்த அடியேனுக்கும் இப்பேற்பட்ட ஒரு பொன்னான வாய்ப்பை நல்ல அருளியதற்கு நன்றிகள் என்று நான் சொல்லி விட முடியாது ஆயினும் நன்றி.

நன்றி.

72

புலவர் அரங்கநாதன்

இந்து அறநிலையத் துறை
இராமநாதபுரம், கோவை.

என்னை செம்மைப்படுத்தி வாழ வைத்த பேரூராதினம் :

நான் சாதாரண ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவன். எனது அப்பா கட்டிடத் தொழிலாளி .

நன்றாகப் படித்தேன் .பத்தாம் வகுப்பு தேர்ச்சி அடைந்தேன். 12-ம் வகுப்பு தேர்ச்சி அடைந்தேன். மீண்டும் வறுமை வட்டியது.

என்னோடு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பையில விண்ணப்பித்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் எனது அப்பா என்னை அழைத்து பேரூரில் ஆதீனத்தில் கல்லூரி இருக்கிறதாமா அங்கு கட்டணம் குறைவு.

பேரூர் ஆதீனத்தில் தமிழ் கல்லூரிக்கு சென்று ஒரு விண்ணபத்தை வாங்கி வந்தேன். வீக்கம் பயில விண்ணப்பித்தேன் நேர்காணல் சந்திப்பு அழைப்பு கடிதம் வந்தது.

அழைப்பு கடிதமே எனக்கு கல்லூயில் படிக்கும் வாய்ப்பு வந்துவிட்டதாகவே எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது. எனது அப்பா பல இடங்களில் ரூ.10,000/- கடன் கேட்டு கேட்டு அலைந்திருந்தார். எவருமே உதவவில்லை. எனது அப்பா, கட்டிடத் தொழிலாளி என்பதால் வாரக் கூலி கொடுப்பார்கள். சனிக்கிழமை வாரக் கூலி ரூ.2,500/- மட்டுமே இருந்தது. அதனை எடுத்துக்கொண்டு கல்லூரிக்கு சென்றோம். நேர்கானல் நிகழ்ந்து கொண்டிருந்தது. நேர்காணலின் போது பெரியசுவாமி தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகள்

கொடுத்தார்கள், தமிழ்க்கடல் சென்னியப்பனார், கவிஞர், முத்து குமாரசாமி மற்றும் இன்றும் இரண்டு பேர் இருந்தனர்.

அப்போது பெரிய சுவாமிகளை வணங்கி விபூதி இட்டுக் கொண்டோம். அப்போது கவிஞர் முத்துக் குமாரசாமி அய்யா அவர்கள் என்னை பார்த்து என்னப்பா படிக்க விரும்புகிறாய் என்றார். நான் B.Com படிக்க விரும்புகின்றேன் என்றேன். அப்போது பெரிய சுவாமிகள், கருணை ததும்பும் அருள்பார்வை என் மீது இருந்தது. சுவாமிகள். இவரை தமிழ் பிலிட் வகுப்பில் சேர்த்துக்கொள்ளுங்கள். நன்றாக படிப்பார் என்றார். சென்னியப்பனார். அவர்கள் சிரித்த முகத்தோடு பாடத் தெரியுமா? என்றார். பாடத் தெரியும் என்றேன். ஒரு பாடலை பாடச் சொன்னார். எனக்கு சினிமா பாட்டு பாடுவதா?

சுவாமி பாட்டு பாடுவதா என புரியவில்லை, இருப்பினும், வள்ளல் பெருமானை பற்றிய 'அப்பா நான் கேட்டருள் புரிதல் வேண்டும் என்ற பாடலை பாடினேன். மிகவும் நன்றாக உள்ளது குரல் நன்றாக உள்ளது என' சுவாமிகள் பாராட்டினார்கள். தயக்கத்தோடு எவ்வளவு பணம் கட்ட வேண்டுமே என தயங்கி படி நின்றோம். சுவாமிகள் சிரித்துக் கொண்டே பணமில்லையா? என்ன முடியுமோ அதை அலுவலகத்தில் கட்டிவிட்டு போங்கள் என்றார். இருந்த ரூ.2,500/- ரூபாயை அலுவலகத்தில் கட்டிவிட்டு வந்தோம். வேறு எந்த பணமும் கேட்கவில்லை.

பெரிய சுவாமிகள் கல்லூரியில் பயின்றவர்கள் எத்தனையோ பேர், நல்ல நிலைமையில் உயர் பதவிகளை அடைந்துள்ளார்கள் என்று புலவர் பேரவையின் மூலம் அறிந்தேன். தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையின், High Level Committee-ன் தலைவராக சுவாமிகளை தேர்வு செய்துள்ளதும், தமிழக முதல்வரால் பெரிதும் மதிக்கப்படுபவராக இன்று தவத்திரு சாந்தலிங்க இராமசாமி மருதாச்சல அடிகளார் விளங்குவது எனக்கு மிக்க பெருமிதமாகும். எத்தனையோ ஆயிரமாயிரம் மாணவர்கள் கல்லூரியில் பயின்று சென்றாலும், என்னை பெயர் சொல்லி அழைக்கும் அளவிற்கு சுவாமிகள் மனதில் இடம்பிடித்திருப்பது எனது பாக்கியம்.

அன்று சுவாமிகள் எனக்கு அளித்த வாய்ப்பிற்கும உயிர் உள்ளவரைக்கும் நன்றி மறவேன் சுவாமிகளுக்கு நன்றி கடன் பட்டவனாவேன் இந்த தமிழ்க்கல்லூரி தான் அறிவு புகட்டியது. நல்லோர் குழும்மத்தில் சேர்த்துக் கொண்டது, கவிகளை புனையும் அறிவை தந்தது. இன்று இந்து சமய அறநிலையத்துறையில் Noodle Office தமிழ்ப்புலவர் பணியில் இருக்கின்றேன். தமிழ்க் கல்லூரியில் பயின்ற போது ஒவ்வொரு விழாவிலும் கவிதையில் முதல் பரிசு பெறுவேன். நாட்டு நல பணி திட்டம். சமூக விழிப்புணர்வு பாடல்கள் இயற்றி பாடுவதை எல்லோரும் ஊக்கப்படுத்தி, பல கல்லூரிகளில் சென்று பாடினேன். பல வாய்ப்புகள் தேடி வந்தன. பல பரிசுகளை வென்றேன் எத்ததையோ சிறப்புகளை எனக்கு அளித்த அவர் தம் திருவருள் போற்றி வழிபட கடமைப்பட்டவனாவேன்.

முடிவுரை

பேரூராதினம் தமிழகத்தில் சிறந்த ஆதினமாக திகழ்கிறது என்றால், அதற்கு காரணம். சாந்தலிங்க பெருமாள் அருளிய கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார். ஆகிய நூல்கள் வழி நின்று, தமிழ்க்கல்லூரியில் திறம்பட நடத்தி இன்று புகழ்பெற்று இருப்பது எனக்கு மிக்க மகிழ்வாகியுள்ளது. கயிலை மாமுனி தவத்திரு.சாந்தலிங்க ராமசுவாமிகள் திருவருள் என்றும் எனக்கு வாய்க்க வேண்டும். எனது ஆசிரியரும் குருவுமான தவத்திரு. மருதாசல அடிகளாரின் அன்பும் ஆசியும், அரவணைப்பும் என்றும் நிலைக்க வேண்டும் என எல்லாவல்ல பட்டி பெருமானை பச்சைநாயகியை வேண்டுகின்றேன்.

73

பேராசிரியர். ச. **இரவி,** தமிழ்த்துறை,
புல முதன்மையர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் புலம், பொறுப்பாசிரியர்,
கல்வெட்டியல் மற்றும் மரபு மேலாண்மை பட்டயப் படிப்பு,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர், தமிழ்நாடு, இந்தியா

கொங்கு நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் மனிதச் சமூகம் எப்படி வாழ வேண்டும் எனக் கொங்கு நாட்டில் செந்தமிழும் சிவநெறியும் வளர வாழ்ந்து வழிகாட்டி வரும் மடம் தான் பேரூர் மடம்.

பேரூர் மடம் குருமகாசன்னிதானம் இராமசாமி அடிகளார்

அண்மைக்காலமாகத் தவத்திரு மருதாச்சல அடிகளாரின் பணி அளப்பரியதாக இருப்பதைப் பார்த்து வருகிறோம். கொங்குநாடு, தமிழ்நாடு, உலக நாடுகளுக்கெல்லாம் சென்று தமிழின் அடையாளமாய் தமிழர்களை வழிநடத்திச்செல்லும் போர்த்தளபதியாய் வீறுகொண்டு எழுந்து வரும் பின்னணியை உருவாக்கியக் கயிலை ஒளிரும் நிலவாக ஞானமொழியின் கதிராக வந்தவர்தான் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார். இவர் தமிழ்ப் புலமையும் சமய ஒழுக்கமும் நிரம்பப் பெற்றவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் பணி அளப்பரியதாக இருப்பதை இந்த விழா எடுத்துக்காட்டி வருகிறது.

உலகம் முழுவதும் இருந்து இந்த விழாவைத் தமிழர்கள் பார்த்துக் கொண்டாடி வருவதை நினைத்துப் பெருமைப்படுகிறோம்.

தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஒரு சாதனை மனிதர், சாதாரண மனிதர் அல்லர், அசாதாரண மனிதர்.சமூகம் செழிக்கத் தமிழ்ப் பண்பாடு சிறக்க இன அடையாளத் தமிழை மீட்டெடுத்த பெருமை பேரூர் மடத்துக்கு உண்டு என்றால் அதன் ஜீவநாடியாய் உயிரோட்டம் பெற்று உழைத்தவர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் ஆவார்.

இல்லறத்தைத் துறந்து துறவறத்தைக் கொண்டு வாழ்வது சாதாரண வாழ்க்கை அல்ல. அது சாதனை வாழ்க்கை. தமிழ்க் குடும்பங்களைச் செழிக்கச் செய்தார். தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக் காத்தார். தமிழ்க் கலாச்சாரத்தை அடையாளப்படுத்தினார். தமிழ் மார்க்கத்தின் அடையாளமாகத் திகழ்ந்தவர்தான் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

ஆன்மீகப் பணியும் தமிழ்ப் பணியும்

1956இலேயே தமிழ்க்கல்வியின் தேவையை உணர்த்தியவர் இவர். தவத்திரு சாந்தலிங்க அடிகளார் எனத் தமது குருவின் பெயரில் தமிழ்க்கல்லூரியைத் தமிழ் அர்ச்சனை முறைமைகளோடு குன்றக்குடி அடிகளார் தலைமை தாங்கத் தமிழ்க் கல்லூரியை ஏற்படுத்திச் சாதனை படைத்தார்.

மயிலைத் தமிழ்க் கல்லூரியில் வித்வான் பட்டம் பெற்று இவரது பணிகளைப் பாராட்டி இரண்டு முதுமுனைவர் பட்டங்களைச் சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக் கழகம் கொடுத்து கௌரவித்தது அவருக்கான அங்கீகாரம் ஆகும். மழலையர் பள்ளி முதல் முதுமுனைவர் பட்டம் வரை தமது மடாலய வளாகத்தில் கல்விப் பணியாற்றிக் கல்வித் தந்தையாக விளங்கி இருக்கிறார். நிறுவனத் தொழிலாண்மைப் பேராளராகவும் கல்லூரி முதல்வராகவும் சிறந்து விளங்கிப் பணியாற்றினார்.

இராமானந்த சுவாமிகளிடம் பக்தி கொண்ட இவர் மயிலம் பொம்மபுர ஆதீனம் 18 ஆம் பட்டம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகளிடம் வீரசைவ முறையில் தீக்கையும் இவ்வகைத் திருமடங்களுக்கு உரிய பயிற்சியும் பெற்றவர். திருக்கயிலாய மரபில்

வந்து சைவ சித்தாந்தத்தைத் தோற்றுவித்த மெய்கண்டார் வழியில் வந்தவர். ஆதிசிவப்பிரகாசரைக் குருவாக ஏற்று வழி காட்டிய சிந்தனையாளர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார். தமிழ், சைவம் இரு கண்களாகக் கொண்டு திருமடத்தை வளர்த்தவர் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்.

சமய வழிபாடுகள், விழாக்கள் தமிழ்மொழி மூலம் நடைபெறப் போராடியவர். தமிழில் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா, தமிழ் வேள்விகள், தமிழ் அர்ச்சனை முறைமைகள், புதுமனைப் புகுவிழா எனப் பல புதுமைகளைத் தமிழில் ஆக்கித் தந்த பெருமைக்குரியவர். கல்வி, அறிவு,செயல் திறமை, பொது நோக்கு, நிர்வாகச் சிறப்பு பெற்றவர் இவர்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

இந்நிலையில் நின்று வாழ வழி காட்டியவர் இவர். பழகுதற்கு இனிய அன்பினர். தண்ணளி மிகுதி உடையவர். நம்பால் உழுவளன்பு கொண்டு ஒழுகும் தோழமையர் என்ற சிறப்பிற்கு உரியவராகத் திகழ்ந்து வந்தார்.

நூற்றுக்கணக்கான கோயில்களில் திருநெறிகளைத் தமிழ்ப் பாமாலை மூலம் சிறப்புச் செய்தவர் ஆவார்.

5000 திருக்கோயில்களில் தமிழ் முறைப்படி திருக்குட நன்னீராட்டு விழா நடத்தி உலகச் சாதனை நிகழ்த்தியவர். 1500 ஆண்டு காலப் பழமை பெற்ற மருதமலை, சேவூர்,முட்டம்,முத்தூர், மொக்கனீசுவரம், காலாகலேசுவரர் கோயில் உள்ளிட்ட ஆறு கோயில்களைச் சீரமைத்த பெருமைக்கு உரியவர். இயற்கைச் சீற்றம், பராமரிப்பு இன்றி இருந்த பத்துக்கும் மேற்பட்ட கோயில்களைச் சீரமைத்துப் பணியாற்றியவர்.

ஆயிரக்கணக்கான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஒருநாள் மற்றும் மூன்று நாள் சமயப் பயிற்சி முகாம் நடத்திச் சாதனை படைத்திருக்கின்றார்.

சமூகப்பணி

அடிகளார் நாண்மங்கல விழாவில் ஆயிரக்கணக்கான பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடைகளும் பொதுமக்களுக்கு ஆடைகளும் தானம் வழங்கி இருக்கின்றார். மலை வாழ் மக்களுக்கு ஆடைகொடை, அன்னம் பாலிப்பு மற்றும் தைப்பொங்கல் அன்று பொங்கல் பொருட்கள் கொடுத்து வந்த செம்மலாகத் திகழ்கிறார். 1950களில் அன்பு இல்லம் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்குக் கல்வி, உணவு, உடை கொடுத்து நன்னெறி காட்டி இருக்கின்றார்.

இவர் தமிழக முதல்வருக்குக் கொங்கு மாவேள் என்ற விருது கொடுத்த பெருமைக்கு உரியவர்.வேளாண்மைத் தொழில் செய்யும் உழவர்களுக்குச் சிறப்பு விருதுகள் கொடுத்துக் கௌரவப்படுத்தி இருக்கின்றார்.

வளர்தமிழ் இயக்கத்தின் மூலம் பயிற்றுமொழி, வழிபாட்டு மொழி, மாநில மாநாடு கண்டு சிறப்புச் செய்திருக்கின்றார். உலகச் சைவ மாநாடு, சித்த ஆய்வு மாநாடு, பெருங்கதை மாநாடு போன்றவைகளை ஆதீனத்தில் நடத்தி அழியாப் புகழ் பெற்றிருக்கின்றார். உலகத் தாய்மொழி நாளைச் சிறப்பாக நடத்திடத் தொடங்கி வைத்த பெருமை இவருக்கு உடையது.

சமூகத்திற்குப் பல நற்பணிகளை ஆற்றியவர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார். குறிப்பாகத் தமிழ் நிலத்தின் அடையாளமாகிய தமிழை, தமிழ்ப் பண்பாட்டை, தமிழ்ச் சமூகத்தைக் கட்டிக் காத்துத் தமிழ் நன்மார்க்கத்தை ஆன்மீக வழியில் உலகிற்கு நல்வழி காட்டி வந்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளாரது சமூக, ஆன்மீக, கல்விப் பணிகளைப் பாராட்டி அவரது பொற்பாதங்களை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறேன்.

74

சசிகலா

தொல்பொருள் ஆய்வுத் துறை

பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றேன். இன்றைய குருமகா சரிதானங்கள் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றேன்.

தமிழ் கல்லூரியில் உள்ள ஓலைச்சுவடிகளை பார்ப்பதற்காகவும் படிப்பதற்காகவும் நான் பலமுறை பேரூர் தமிழ் கல்லூரிக்குச் சென்று வந்தேன். அப்போதெல்லாம் நமது குரு மகா சன்னிதானங்கள் நூற்றாண்டு விழா நாயகர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அருளாசி வழங்குவார். தமிழையும் சைவத்தையும் ஆழ்ந்து நேசிக்கும் தகமை சான்றவர். வருபவர்கள் அனைவரையும் உணவு உண்டு விட்டு செல்லக் கூறுபவர். அவர் அன்னம் அளிப்பதில் அருள் நிறைந்த தன்மை உடையவர்.

தமிழை தமிழ்க் கல்லூரியை நிர்வகிக்கின்ற செயலாளராக முதல்வராக பேராசிரியராக இருந்து உலகம் எங்கும் தமிழைப்.பரப்பியவர். அவர் மாணவரிடம் காட்டும் அன்பு மாணவர்களிடம் காட்டும் பிரியம் வியக்க வைக்கின்ற ஒன்று. பழைய ஓலைச்சுவடிகளை பாதுகாத்த பெரியவர் அவர். மிகப்பெரிய நூலகம் தமிழ் கல்லூரி நூலகம். பழைய நூல்கள் பல அங்கே உண்டு. அவற்றையெல்லாம் படிப்பதற்கும் ஓலைச்சுவடிகளை படி எடுப்பதற்கும் அனுமதி அளித்த அடிகளார் திருவடிகளை மனமெய் மொழிகளால் வணங்கி மகிழ்கின்றேன்.

75

திரு. சி.ஆர். பழனிசாமி

சக்தி கரீன்வேலி அபார்ட்மென்ட், திருப்பூர்.

போற்றுதலுக்கும் வணங்குதலுக்கும் உரிய, திருக்கைலாய மரபு மேகண்டார் வழி பேரூராதீனம் 25ஆவது குரு மகா சன்னிதானம் சீர் வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்

பேரூர் ஆதீனம் நமது 24 ஆவது குருமகா சன்னிதானம், போற்றுதலுக்குரிய ராமசாமி அடிகளார் அவர்களை அருகில் இருந்து பார்க்கக்கூடிய, பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு மிக மிகக் குறைவு என்றாலும், என்னை பதின் பருவ வயதிலிருந்து, 50 வயதைக் கடந்த இன்று வரை வழிநடத்துவது அடிகளார் அவர்களுடைய அருளுரைகளும் அவர் வாழ்ந்து காட்டிய அற வாழ்வும் தான்.

1980 களின் இறுதியில் என்னுடைய பதின் பருவ வயதில், அரைக்கால் சட்டையோடு எங்கள் ஊரில் அமைந்துள்ள ஆலயத்திற்குள் நுழைகிறேன். அங்கே நம்முடைய 24 ஆவது குருமஹா சன்னிதானம் ராமசாமி அடிகளார் அவர்கள் ஒரு அற்புதமான ஆன்மீக உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். என்னுடைய வாழ்வில் நான் கேட்ட முதல் ஆன்மீக உரையும் அதுதான்.

பகுத்தறிவு என்ற போர்வையில் என்னுடைய எண்ணத்தின் ஒவ்வொரு அணுக்களிலும் இருந்த அழுக்கை அகற்றியதும் அடிகளார் அவர்களுடைய அந்த உரைதான்.

வகுப்பறையைத் தாண்டி, வெளி உலகில் வாழ்க்கைப் பாடம் படிக்கும் அந்த முதல் வகுப்பில், அடிகளார் வாயிலாக நான் கற்றுக் கொண்டது ஆன்மீகமும்.. அறவாழ்வும் சுவாமிகள் அவர்கள், தன்னுடைய 15-ஆவது வயதில் சிரவை ஆதீனம் ராமானந்த அடிகளிடம் ஆன்மீகம் கற்றுக் கொண்டதையும், தனித் தமிழில் பட்டம் பெற்றதையும், அந்தத் தமிழ் வளர்த்த சான்றோர்களின் சிறப்புகள் பற்றியும், தமிழ் மொழியில் பொதிந்திருக்கும் வாழ்வியல் நெறிகள் பற்றியும் தனக்கே உரிய அந்த சாந்தமான.. அன்பு கலந்த.. பேச்சால் அருவி போல அருளிக் கொண்டிருந்தார்...

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றிய அவருடைய கண்களில் இருந்து வந்த, அந்த அற்புதமான அருட்பேராற்றல்.

என்னுடைய எண்ணத்தின் அனைத்து அணுக்களிலும் ஊடுருவி அதன் ஆழ் மனதில் மூன்று விஷயங்களை பதிய வைத்துச் சென்றது...

1.மனித வாழ்வின் மகத்துவம்

2.தனிமனித வாழ்வில் கல்வியின் முக்கியத்துவம்

3.ஆன்மீகம் என்னும் அற்புதமான வாழ்வியல் நெறி

மனித வாழ்வின் மகத்துவம்

வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்... என்று திருமுறை ஆசிரியர்கள் இந்தப் பிறவியை எப்படி மதித்து போற்ற வேண்டும் என்று சொல்லியதையும்...

பெரிய புராணம் தந்த சேக்கிழார் பெருமான் இந்த பிறவி எனக்கு கிடைத்தது இதில் ஒரு நற்செயல் செய்ய ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.. அதற்காக இந்த பிறவிக்கு நான் ஒரு வாழ்த்து சொல்கிறேன் என்றதையும் நயமாக விளக்கிச் சொன்னார்...

இப்படிப்பட்ட சிறப்பான பிறவியைப் பெற்றிருக்கின்ற நாம்.. நம்முடைய மரபு, நம்முடைய பண்பாடு.. நம்முடைய அறநெறி

இவற்றைப் பற்றி சிந்திக்கின்ற சிந்தனையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்

என்று அவர் சொன்ன விதம் இந்த பிறப்பின் உடைய மகத்துவத்தை அந்த இளம் வயதில் எனக்கு ஆழமாக பதிய வைத்து மனித வாழ்வின் மகத்துவத்தை தமிழ் மூலம் அறியச் செய்தவர்.

தனிமனித வாழ்வில் கல்வியின் முக்கியத்துவம்

எண் எழுத்து எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே இந்த உலகத்தில் உயிர் வாழ்பவர்கள்.. என்பதை விளக்கமாக, ஒரு குழந்தைக்கும் புரியும் வகையில் சொல்லிய விதம் கல்வியின் அவசியத்தை எனக்கு உணர்த்தியது...

பள்ளிக் கல்வியில் ஆன்மீகத்தையும், ஒழுக்கத்தையும் போதிக்க வேண்டும் என்றும் அதன் மூலம் இளைய தலைமுறையை சமுதாய மற்றும் தேச நலன் சார்ந்து சிந்திக்கச் செய்ய முடியும் என்று, அதற்காக அரும்பாடுபட்டவர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள்...

தமிழுக்காக கல்லூரி தொடங்கி இதுவரை 6000-க்கு மேற்பட்ட தமிழ் ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை... நம்முடைய சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களையே சேரும்.. ஒரு அரசாங்கம் கூட தமிழை வளர்க்கச் செய்ய முடியாத காரியத்தை ஆன்மீகவாதியாக சாதித்துக் காட்டியவர் நமது அடிகளார் அவர்கள்...

அந்த மாணிக்கவாசகப் பெருமானால் அருளப்பட்ட திருவாசகம் எப்படியெல்லாம் மனிதனை உருகச் செய்யும், உணரச் செய்யும் என்று... ராமலிங்க அடிகளார் வழியில், ராமசாமி அடிகளார் அவர்கள், தன்னுடைய அந்தத் தேனினும் இனிய குரலில் சொல்லக் கேட்டபோது ஆன்மீகம் கற்றுக் கொள்ளும் ஆர்வம் ஆரம்பித்தது...

மனதை மென்மைப் படுத்திக் கொள்ளவும், வாழ்வைப் புனிதப்படுத்திக் கொள்ளவும், திருவாசகம் எப்பொழுதும் துணை புரியும் என்று அடிக்கடி கூறுவார்...

அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்ற பல விஷயங்களை நமது தமிழிலிருந்து அழகாக எடுத்துச் சொன்னார்.

கொங்கு நாடு தமிழகத்தில் பல துறைகளில் முன்னேறுவதற்கு பேரூராதீனம் 24 வது குருமகா சன்னிதானம் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் முக்கிய காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

கொங்கு நாட்டு மக்களைப் பற்றி அடிகளார் அவர்கள் சொல்லும் பொழுது அருமையாக சொல்லுவார். தொழில் வளத்தாலும், உழைப்பாலும், தங்களுடைய உறுதியாலும் நிலையான வாழ்வு பெற வேண்டுமென்று கருதுகின்றவர்கள் என்று சொல்லுவார்... அதற்குக் காரணம் இந்தக் கொங்கு நாட்டு மக்களை,

சிறந்த கலையாலும், பண்பாலும், இலக்கியத்தாலும் வளம் பெருகச் செய்தவர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் நான் சென்னையில் பணியில் இருந்த போது... சாமிகள் இசைத் தமிழ் மாநாட்டுக்காக அங்கு வந்திருக்கிறார்.. வயது மூப்பின் காரணமாக உடல் தளர்வுற்ற போதும், மனம் தளராமல் அதில் கலந்து கொண்டு நமது பண்டைய கலைகளின் சிறப்பை போற்றிப் பேசினார்...

அந்த உரைதான் என்னை நம்முடைய பண்பாட்டுக் கலையான வள்ளிக்கும்மியின் மேல் நாட்டம் கொண்டு அதை பலருக்கும் பரப்பச் செய்தது...

சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவதரித்த, அந்த முதலி பாளையத்தில் நாங்கள் அரங்கேற்றம் செய்து கொண்டிருந்தோம்.. அப்பொழுது அங்கே வந்திருந்து அருளாசி வழங்கிய 25 ஆவது குருமா சன்னிதானம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள்..

இந்த பண்பாட்டுக்கலை தனிமனித வாழ்க்கையில் எப்படிப்பட்ட மாற்றங்களை கொடுக்கிறது என்பதை மிகத் தெளிவாக விளக்கிச் சொன்னார்... அப்படிப்பட்ட அந்த பாரம்பரிய கலையில் ஒருங்கிணைப்பாளராக இருந்து ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு மன ரீதியாக உடல் ரீதியாக வளத்தையும் தன்னம்பிக்கையும்

ஏற்படுத்திக் கொண்டிருப்பதற்கு நம்முடைய 24 ஆவது குரு மகா சன்னிதானம் ராமசாமி அடிகளார் அவருடைய வாழ்வு எனக்கு ஒரு உதாரணமாக அமைந்தது...

இது எல்லாம் தாண்டி தமிழ் மீது அவருக்கு இருந்த பற்று.. நிறைய பேர் அதைப் பற்றி பேசி விட்டார்கள். இருந்தாலும் ஒரு சாமானியனின் பார்வையில் அது எவ்வாறு இருக்கிறது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்

உலக சமயங்கள் எல்லாம் தொல்வினையை நீக்கிக் கொள்ள பெரும் முயற்சி எடுத்த வேளையில், நமது ஞான சம்பந்தப் பெருமான் மிக எளிமையான ஒரு வழியைச் சொன்னதாக நமது அடிகளார் அவர்கள் சொல்வார்...

திருநெறிய தமிழ் வல்லவர், தொல்வினை தீர்த்தல் எளிதாமே... என்று ஞான சம்பந்தப் பெருமான் அருளியதை அடிகளார் அவர்கள் சொல்லக் கேட்கும் பொழுது தமிழ் மொழியின் சிறப்பை சிந்திக்காமல் இருக்க முடியாது...

நமது சங்க இலக்கியங்கள் மனித வாழ்க்கையைப் புனிதமாக்குவதற்கானவை.. அந்த இலக்கியங்கள் மூலமாகத்தான் தமிழர்கள் உலகம் போற்றுகின்ற உயர்வை பெற்றிருக்கிறார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொன்னவர் நம்முடைய சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள்...

தமிழ் மொழி கற்றுக் கொடுக்கக்கூடிய வாழ்வியல் நெறிகளின் படி வாழக்கூடிய ஒரு மனிதன், எண்ணம், சொல், செயல் ஆகியவற்றால் ஒருங்கிணைந்து பல சாதனைகளைப் புரிய முடியும்... அப்படித்தான் கொங்கு நாட்டில் பலரும் அடிகளாரின் அருள் அமுதத்தைப் பருகி, பல உயர்நிலைகளை அடைந்தார்கள், என்றால் அது மிகையாகாது

பகுத்தறிவு என்ற பெயரில் ஆன்மீகத்தை இழிவுபடுத்தி அரசியல் செய்யும், அவர்களின் மேடையிலேயே சென்று ஆன்மீகத்தின் அருமைகளை எடுத்துரைத்த பெருமான் ராமசாமி அடிகள்...

மூடநம்பிக்கைகளை ஆன்மீகத்திடமிருந்து விலக்கி வைத்தவர் அடிகளார் அவர்கள்

ஆன்மீகத்திற்கு முன்னால் அறிவியலை மண்டியிடச் செய்து கொங்கு நாட்டு மக்களை மட்டுமல்ல, உலகத் தமிழர்களை நல்வழிப்படுத்தியவர் ராமசாமி அடிகளார் அவர்கள்.

அடிகளார் சொன்ன இந்த கருத்தைத்தான்.. உலகப் புகழ்பெற்ற டெஸ்லா நிறுவனர் தன்னுடைய நிறுவனத்தின் வாயிலில் வைத்துள்ள வாசகம் வெளிப்படுத்துகிறது...

இந்தியாவின் புராண இதிகாசங்களே காந்தம் பற்றிய எனது ஆராய்ச்சியை ஊக்குவித்தது... அந்த அந்த நாட்டு இதிகாசங்களில் இலக்கியங்களில் இல்லாத தொழில்நுட்பமே இல்லை. இன்னொரு ஜென்மம் இருந்து நான் பிறந்தால் இந்தியாவில் பிறக்க விரும்புகிறேன்... என்று நிகோலஸ் டெஸ்லா தனது நிறுவனத்தின் வாயிலில் எழுதி வைத்திருந்தார்...

இதைத்தான் ராமசாமி அடிகளார் அவர்கள் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தவமாக ஏற்று வாழ்ந்தார்... நம்முடைய வாழ்வில் நம்மை சிறப்படையச் செய்த ராமசாமி அடிகளார் அவர்கள். அவருடைய பொன்னார் திருவடிகளை இந்த நேரத்தில் வணங்கி மகிழ்வோம்...

அவருக்குப் பின்னால், அவருடைய வழிவந்த 25 வது குரு மகா சன்னிதானம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள், 24 ஆவது குரு மகா சன்னிதானம் திரு ராமசாமி அடிகள் அவர்களுடைய பெரும் பணியை சற்றும் தொய்வில்லாமல் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறார்.....

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றதோடு... 27 நூல்களைப் பதிப்பித்திருக்கிறார்...

24 ஆவது குரு மகா சன்னிதானம் ராமசாமி அடிகளார் அவர்கள் போற்றிய, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக நமது 25 ஆவது

குரு மகா சன்னிதானம் அவர்கள் ஓலைச்சுவடிகள் மற்றும் அரிய நூல்களை பாதுகாத்து அவற்றை மின்னுல்களாக மாற்றும் அரும் பணியை செய்து கொண்டிருக்கிறார்...

தமிழில் குடமுழுக்கு நடத்துவது மட்டுமல்ல அதை நடத்தும் முறை குறித்த பயிற்சிகளை தமது கல்லூரியில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்...

ஆண் பெண் பேதமின்றி பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் இன்றி மூவாயிரத்திற்கும் மேற்பட்ட விருப்பமுள்ளவர்களுக்கு இந்த பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது... என்பதை உலகில் வாழும் அனைத்து தமிழ் மக்களும் மதித்துப் போற்ற வேண்டும்.

76

செந்தில்நாதன்
சுவிட்சர்லாந்து

'சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை...
அவனோடு ஒப்பாரிங்கு யாவரும் இல்லை... '

அழுந்தொறும் அணைக்கும் அன்னை
அறிவிலாது ஓடி விழுந்தொறும் எடுக்கும் அப்பன்
விளையாடும் போது தோழன் தொழுந்தொறும்
காக்கும் தெய்வம்
சொந்தமாய் எடுப்போர்க்கு எல்லாம் குழந்தை
இப்படி உலாவும் என் குருநாதன் வாழி

என்று தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன். சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அடியேனது உள்ளன்பிற்கு மிகவும் பாத்திரமானவர். 18 ஆண்டுகளுக்கு முன்பு அவர் சுவிட்சர்லாந்தில் உலக சைவ பேரவையின் மாநாட்டிற்கு வருகை புரிந்தவர். அப்போது உலக சைவ பேரவையின் செயல்பாடுகளுக்கும் மாநாட்டு மலர் வெளியீட்டுக்கும் நானும் எனது மனைவி கீதா செந்தில் அவர்களும் சீரிய பணியாற்றினோம். அப்போது குருவருளாலும் திருவருளாலும் ஏற்பட்ட தொடர்பு இன்று வரை பேரூர் ஆதீனத்துடன் நீடித்து வருகிறது. சுவாமிகள் மிகச் சிறந்த ஆன்ம நேய வாதியாக திகழ்ந்தார்

தமிழ் மொழி மீது தீராத பற்று உடையவர். சைவத்தின் மீது தீராத காதல் உடையவர். மறை நான்கும் ஆனவர் காண். ஆன் ஐந்தும் ஆனவன் காண் என்பதற்கு ஏற்ப திருமுறைகள் மீது பேரன்பு

கொண்டவர். ஆன் ஐந்தின் பெருமையை அனைவரும் உணரும்படியாக செய்த தகைமையாளர்.

'எழுதறு மறைகள் தேறா இறைவனை யெல்லிற் கங்குல்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீ தேறத் துளும்பு கண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க்கு அடிமை செய்வாம் '

– காஞ்சி புராணம்.

அடிகளார் உலகளாவிய நிலையிலே பக்தர்களை மதிக்கும் தொண்டராக சைவ சமயத்தை போற்றும் சான்றோராக சைவ சமய நெறிப்படி வாழும் வித்தகராக காணப்பட்டவர். இதனை அவருடன் இருந்த காலத்திலே பழகிய காலத்திலே நாங்கள் அனைவரும் உணர்ந்து கொண்டோம். எனவேதான் தொண்டரைப் போற்றும் அவரை நூற்றாண்டு விழா நாயகரை இந்த நாளிலே போற்றி வணங்கி மகிழ்கின்றோம்.

குரு லிங்க சங்கமம் என்ற முறையிலே அடியார்களுக்கு தொண்டர்களுக்கு மாகேஸ்வர பூசை செய்து வழிபட்டதை 2010 தை மாதம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அரங்கிலே கண்டேன். அடிகளாருடன் அந்த அன்பர்கள் சைவ சமய அன்பர்கள் ஒவ்வொருவருக்கும் அன்னம் பாலிப்பதற்கு முன்னர் மாகேஸ்வரபூசை அதாவது சிவன் அடியார்களுக்கு உரிய பூசை செய்தது மிக மிக காண கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. அடிகளார் காலையில் பூஜை செய்து அதன் பின்னரே நீராகாரம் எடுக்கின்ற வழக்கத்தை வைத்திருந்தார். சொல் ஒன்று செயல் ஒன்று இல்லாமல் எண்ணம் செயல் சொல் ஆகிய மூன்றும் ஒன்றாக இருந்தது அடிகளார் இடத்தில் நான் கண்ட அற்புதக் காட்சியாகும். பத்தி மையால் பணிந்தேத்தும் அடியேன் தன்னை ப் பண்ணால் பாமாலை பாட பயிவ்வித்தானை 'என்பது திருநாவுக்கரசர் அருளியது. அடிகளாரவர்கள் சைவத்திற்கும் தமிழுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக நம்முடைய வாழ்க்கையிலே நாம் காண வாழ்ந்தவர். இன்றைய குருமகா சரிதானங்கள் தவத்திரு சாந்தலிங்க மருதாசல

அடிகளார் அவர்களும் சைவமும் தமிழும் தழைக்க பக்தி நெறி போன்று உலகளாவிய நிலையில் சைவத்தை வளர்க்க போற்ற பாடுபட்டு வருபவர்.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடந்த சைவ சமய மாநாட்டின் போது பன்னிரு திருமுறைகளும் யானை மீது வந்தது ஒப்பற்ற காட்சி. அப்போது நம் அடிகள் பெருமகனாரும் வந்ததை நினைவு கூர்கிறேன். அதனுடைய நிழற்படம் அடியேன் இடத்தில் உள்ளது என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சைவமும் தமிழும் தழைப்பதற்காக உலகளாவிய நிலையிலே பாடுபட்ட மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று சேவை செய்த சாந்தலிங்க ராமசாமி அடிகளார் உடைய திருவடிகளை மனமெய் மொழிகளால் வணங்கி மகிழ்கிறேன். இந்த நல்லதொரு வாய்ப்பை தந்த மலர் குழுவினருக்கு நன்றி மலர்களை காணிக்கை யாக்குகிறேன். எல்லோரும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ எம்பெருமான் சிவபெருமான் திருவடிகளை வணங்கி மகிழ்கின்றேன்.

போற்றி ஓம் நமச்சிவாய

77

டாக்டர். ந. மார்கண்டன்

முன்னாள் துணை வேந்தர்
காந்திகிராம கிராமீய நிகர் நிலைப் பல்கலைக்கழகம்.

காந்தீய சர்வோதய பணிகளுக்கு ஆதரவாக அடியேன் சர்வோதய தொண்டனாகப் பணிபுரிந்த போது. கோவை மாவட்டத்தில் நடைபெற்ற சர்வோதய காந்தியப் பணிகளுக்குப் பேரூர் சாந்தலிங்க அடிகளின் ஆதீனத்தின் தலைவராக இருந்த, தவத்திரு. இராமசாமி அடிகளார் அவர்கள் பெரிதும் ஆதரவாக இருந்து செயல்பட்டது இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றது.

திருமடத்திலும், கோவை மாநகரிலும், பிற கிராமப் பகுதிகளிலும் நடைபெற்ற சமய ஆன்மீகக் கூட்டங்களிலும், காந்தீயக் கருத்துக்களைப் பரப்ப. நானும் காலஞ்சென்ற சகோதரர். தமிழ்புலவர்.ர.ஸ்ரீனிவாசன் அவர்களும். அழைத்தபோதெல்லாம், அடிகளார் அவர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் தொடர்பு கொண்டு, தலைமை தாங்கி, ஆசியுரை வழங்கினார்

கோவையில் பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தின் கிராமீய உயர்கல்வி நிலையத்தின். முதல்வராக இருந்து செயல்பட்ட டாக்டர்.மு.அறம் அண்ணா அவர்களின் தலைமையில், கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்சி மொழியாக ஆக வேண்டும் என்று. கோவை மாநகரிலும், பேரூர் ஆதீனத்திலும், நடந்த கூட்டங்களுக்கெல்லாம் தலைமை தாங்கி நடத்தினார் அடிகளார் அவர்கள். காலஞ்சென்ற திரு.சி.சுப்ரமணியம் ஐயா அவர்கள், கல்வி அமைச்சராக இருந்த போது, கோவை அரசு கலைக்கல்லூரியில்,

தமிழ்பயிற்சி மொழியாக ஆக்கப்பட்டு சோதனை முயற்சி நடத்தப்படுவதற்கு அடிகளார் அவர்கள் பெரிதும் உதவியாக இருந்தார்கள். பேரூரைச் சுற்றியுள்ள தீத்திபாளையம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த குழந்தைகளும். இளம் பதின் பருவத்தினறும் பயன் பெறுவதற்கு, அடிகளார் அவர்கள். கல்வி நிலையத்தை நிறுவினார். மேலும். குன்றக்குடி அடிகளாரையும், தவயோகி சுத்தானந்த பாரதியார் அவர்களையும். அழைத்து, கௌரவித்து, ஆன்மீகப் பேருரை நிகழ்த்தி, திரளாகக் கூடியிருந்த கோவை மாநகரின் மக்கள் அனைவரும் பயன்படும்படியாகச் செய்தார். இன்றும் என் காதில், நமது தவயோகியின் அமரத்துவம் பெற்ற பாடல் என் காதில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது.

தூய்மையுறுக, தூய்மையுறுக, வாய் மன யாக்கை
தூய்மையுறுக.
மனத்தை அடக்குக, மாறனை வெல்க.
சினவெளி ஒழிக, சீலம் போற்றுக.
எல்லா உயிர்க்கும் இனியன செய்க.
நல்லன நாடுக, நல்லினம் சேர்க.
அன்பே செய்மின், அறவழி நடமின்.
இன்பமாகும் எல்லா உயிர்க்குமே

நான் இருமுறை. அழைத்த போதும். எங்களது கிராமமான தீத்திபாளையத்திற்கு வருகை புரிந்து. சைவ சமயத்தின் கருத்துக்கள் பற்றி விரிவான உரை நிகழ்த்தினார்கள். எங்களின் இல்லத்தில் கூடியிருந்த பெரியவர்களின் வினாக்களுக்கு விரிவான பதில்களையும் அளித்து அவர்கள் அனைவரின் ஐயப்பாடுகளையும் நீக்கினார்கள். இந்நிகழ்வுகள். இன்றும் கூட என் நினைவில் நிலைத்து நீடித்து நிற்கின்றன.

மேலும், வினோபாஜி அடிகள் அவர்கள் கோவை மாவட்டத்தின் பகுதிகளில் பூமிதான யாத்திரை மேற்கொண்டிருந்த தருணத்தின் போது. கோவைப் பேரூர் தமிழ்க் கல்லூரியில், அடிகளர்ர் அவர்கள் வினோபாஜி அவர்களுக்கு சிறப்பான முறையில், அவரையும்,

அவருடன் வருகை புரிந்திருந்த அவரின் குழுவினர்களையும் வரவேற்றுத் தங்க வைத்து, தமிழ்க் கல்லூரியின் இருபால் மாணாக்கர்களுக்கும். திரளாகக் குழுமியிருந்த மக்களிடையேயும் சிறப்பானதொரு உரையொன்றை நிகழ்த்த வைத்தார்கள். தமிழ்க் கல்லூரியில் மாணாக்களுடன் உரையாடும் பொழுது. தன் மனதில் நீங்காது நிற்கும். திருவாசகப் பாடல்களை வினோபாஜி அடிகள் ஒப்புவித்தது. எனது நெஞ்சத்தில் நீங்காது நினைவிருக்கின்றது. வினோபாஜி அடிகள் தமிழில், கூறிய சொற்களைக் கண்டு அனைவரும் வியந்தார்கள்.

தமிழகத்தில் அடிகளார் காலத்தில் பேரூரில் துவங்கிய தமிழ்க் கல்லூரி மிகுந்த பாராட்டைப் பெற்றது. அதில் பயின்ற ஆண். பெண்கள், அனைவரும் தனிச்சிறப்பு வாய்ந்த தமிழாசிரியர்களாகவும். அடிகளாருக்கு மிகுந்த நன்றியுணர்வு உடையவர்களாகவும் சேவை செய்தார்கள் இன்றும். செய்து கொண்டும் இருக்கின்றார்கள்.

இவ்வாறாக, அடிகளார் அவர்கள் எனது நினைவில் நின்று, ஆன்மீக வாழ்வில் நான் மேல் நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்கான நல்வழியை, காட்டிக்கொண்டு இருக்கின்றார்கள் இன்றளவும்.

78

கணேஷ் குமார்
லண்டன்

எல்லாம் வல்ல இறைவனுடைய பாத கமலங்களை பணிகின்றேன்.

அடிகளாரை நான் தெய்வமாக பார்க்கிறேன். தெளிவு குருவின் திருமேனி காண்டல் என்று சொல்லுகின்ற வாக்கின்படி அடிகளாரின் திருவடியை அடிகளாரின் திருமேனியை தெய்வத்தன்மை உடையதாக தெய்வமாகக் கண்டு மகிழ்கிறேன்.

2017 ஆம் ஆண்டு லண்டனில் இருந்து நான் பேரூர் வந்திருக்கிறேன். வெள்ளை ஆடையுடன் சென்றிருந்தேன். அடிகளாரை சந்திக்க மருதாசல அடிகள் ஏற்பாடு செய்திருந்தார். முதல் நாள் வெளிநாட்டு உடுப்புடன் அடிகளாரை அடுத்த நாள் என்னை அறிமுகப்படுத்தும்போது லண்டனில் இருந்து வந்தவர் தானே என்று கேட்டார். அவருடைய நினைவு சக்தியை எண்ணி வியந்தேன். அடிகளாரிடம் விபூதி வாங்கினேன். மறுநாள் யாக பூஜை நடந்தது. அதிகமான புகை அங்கு இருந்தது. புகையில் இருக்க முடியாமல் பலர் வெளியே சென்றனர். ஆனால் அடிகளார் அவ்வளவு புகையிலும் நகரக்கூட இல்லை. இந்த வயதிலும் இப்படி இருந்தது இறைவனுடைய மிகப்பெரிய பாக்கியம். லண்டனில் இருந்து வந்திருக்கிறார் என்று சொல்லி இந்து இளம்பருதி என்ற விருது கொடுத்தார். அந்த விருந்தானது இறைவனுடைய திருக்கரங்களால் பெற்ற தன்மையை எனக்கு அளித்தது.

மூன்று நாள் பூஜை. பேரூர் ஆற்றில் நடந்து நடந்து வேகமாகச்.

செல்கிறார். காலில் செருப்பின்றி நடப்பதை பார்த்து வியந்து போனேன். 2018 ஆம் ஆண்டு சமாதி அடைந்தார். அவர் எனக்காகவே காத்திருந்தாரோ என்று தோன்றியது.

தொண்டர் நெறி போற்றும் திருநாவுக்கரசர் 81 ஆண்டுகள் வாழ்ந்தார். கொங்கு அப்பர் என்று போற்றப்படுகின்ற நம்முடைய அடிகளார் 90 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து நமக்கு இறை நெறியை ஊட்டினார்.

சைவத்தையும் தமிழையும் ஒருங்கே ஊட்டிய அடிகளார் வாயிலாக கௌமார மடாலயம் தொடர்பு கிடைத்தது பெரும் பேறு. அவருடைய நூற்றாண்டு விழா நடக்கின்ற பொழுது எங்கிருந்தாலும் நான் வர இறைவன் அருளை வேண்டுகிறேன்.

போற்றி ஓம் நமச்சிவாய

79

விசுவலிங்கம் கணேசமூர்த்தி

லண்டன்

1998 இல் லண்டனில் சைவ சமய மாநாடு நடைபெற்றது. அப்போதுதான் முதன் முதலில் அடிகள் பெருந்தகைகளக் காணும் பேறு பெற்றேன். அவரது எளிமை, உணவு பழக்கங்கள் சைவத்தின் மீதும் தமிழின் மீதும் கொண்ட தனித்துவமான பற்று இவை அனைத்தும் என் உள்ளத்தப் பெரிதும் கவர்ந்தவை.

வெங்காயம் முதலான பொருட்கள் இல்லாமல் தனக்கு என்று பொடியை செய்து கொண்டு வந்திருந்தார். சீரகம் குறுமிளகு போட்டு செய்யப்பட்ட பொடி அது. உணவில் எந்த சூழ்நிலையிலும் மிகவும் எளிமையை கடைப்பிடித்த பாங்கு என்னை வியக்க வைத்தது.

தன்னுடைய உடல் நலிவுற்ற போதும் அதனைப் பொருட்படுத்தாமல் எங்களை எல்லாம் உபசரித்தது என்பது எனது வாழ்வில் மறக்க முடியாத ஒன்று ஆகும்.

சைவ சமயப் போட்டிகள் நடத்தி குழந்தைகளுக்குப் பரிசு கொடுப்பதை ஆண்டாண்டு தோறும் செய்து வருகிறோம். அப்போது அடிகளார் கையால் பரிசு வாங்க வரும் குழந்தைகள் எவ்விதமான பயிற்சியும் இன்றி அடிகளாரை வணங்கி உரிய மரியாதை கொடுத்துப் பரிசை வாங்குவதைக் கண்டு வியந்து போனேன். இது அடிகளாரின் மீது பார்ப்பவர்களுக்கு ஏற்படும் இயல்பான உள்ளத்தில் இருந்து வரும் மரியாதையை க் காட்டுவதாக என்னுள் தோன்றியது.

நாயன்மார்களை ஆழ்வார்களை நாம் பார்த்ததில்லை. கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். ராமசாமி அடிகளார் அவர்களின் திருவுருவத்தில் நாயன்மார்களைக் காணும் பேறு பெற்றேன் இந்த நாட்டில், என்று மகிழ்கிறேன்.

80

கவிஞர் பூவாசி மறைமலை

கவுண்டம்பாளையம், கோவை.

பேரூர் ஆதீனம் கயிலை குருமணி
சாந்தலிங்க ராமசாமி அடிகளார் சமய
வயல் பாய்ந்து வளம் செய்த வெல்லம்
சாந்தலிங்க ராமசாமி அடிகளார் எம்மான்!

அருள்மிகு சாந்தலிங்க பெருமாள் தோன்றி அருள் பாலித்த, புகழ் ஓங்கிய புனித மண் இந்தக் கொங்கு மண்டலம். கொலை மறுத்தல், அவிரோத உத்தியார், வைராக்கிய தீபம் வைராக்கிய சதகம் என்ற மனித நேயம் மலரச் செய்யும் நான்கு நூல்களை நான் மறைக் குரவர்கள் குரல்களே போல் வழங்கி மானுடம் வாழ வகை செய்த ஆதினம் இந்தப் பேரூராதீனம்.

இந்த பேரூர் ஆதீனம் உருவாக்கிய, பழம் பெருமை வாய்ந்த சத்வித்யா சன்மார்க்க சங்கம், மறைமலை அடிகள், ஞானியார் அடிகள், கோவைக்கிழார் அவர்கள் முதலான அருட்ச் சான்றோர்களை இணைத்து ஓங்கி உயர்ந்து நின்றது.

அத்தகைய சிறப்புமிக்க ஆதினத்தின் குரு முதல்வராக எழுந்தருளி சைவமும் தமிழும் கல்வியும் சிறக்க திருத்தகு பிறப்பாய் தோன்றிய பெருமைக்குரியவர் சீர் வளர்சீர் கயிலை குருமணி பேரூர் அடிகளார் என்றால் அது மிகையாகாது.

அடிகளைக் குறிப்பிடும்போது,'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் அப்பரின் அருள் வாசகத்தை தம் வாழ்க்கையின் பெரும் பேராக கைக் கொண்டு மெய் வருத்தம் பாராமல், கண் துஞ்சாமல், பசி நோக்காமல் உழைத்த, கொங்குமணி திருநாட்டிற்கு வாராது போல் வந்த கொங்கு மாமணி என்றும், காலத்தின் அருட்கொடை என்றும், ஏற்றிப் போற்றுகிறார், மேனாள் கல்லூரி கல்வி இயக்குனர் முனைவர் கி குமாரசாமி அவர்கள்.

பேரூர் ஆதீனத்தின் இளைய பட்டமாக 1950 ஆம் ஆண்டில் பொறுப்பேற்று, பலரும் பாராட்டு வண்ணம் அருட்தொண்டுகள் பல ஆற்றி 1967 ஆண்டு ஆதீனம் தலைமை பீடத்தை அலங்கரித்து, வெள்ளுடையிலிருந்து காவி உடையில் ஒரு கற்பூர தீபமாக அருள் ஒளி வழங்கினார் என்றும் குறிப்பிடுவார் கல்லூரி கல்வி இயக்குனர் முனைவர் குமாரசாமி அவர்கள்.

சீர் வளர்சீர் குரு மகா சந்நிதானங்களில் அயராத உழைப்பாலும், முயற்சியாலும், தற்போது இப்பள்ளி மேல்நிலைப்பள்ளி தவத்திருசாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ் கல்லூரி என உயர்ந்துள்ளது. அவை அடிகள் அவர்களின் தொடக்கப்பணி மட்டுமே. தொடர்ந்து தமிழ் ச்சமய திருப்பணிகள் பலப்பல.

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம், உலக சைவப் பேரவை, சத்வித்யா சன்மார்க்க சங்கம் தவத்திரு சாந்தலிங்கர் நினைவு அறக்கட்டளை, தவத்திரு சாந்தலிங்கர் கல்விக்கழகம் ஞானாம்பிகை நுழைவு உரிமைப் பள்ளி, கோவை, நீலகிரி, ஈரோடு ,மாவட்ட திருக்கோயில் வாரியக் குழு ஆகியவற்றின் தலைவராகவும், மற்றும் லண்டன் திருக்கோயில் திருப்பணிக்குழு, குறள் நெறி பரப்பும் குழு, சேக்கிழார் ஆய்வு மையம், மலேரியா அருள் நெறி திருக்கூட்டம், மொரீசியசு சாந்தலிங்க திருத்தொண்டர் கூட்டம், தென்னாப்பிரிக்கா சிவமன்றம் ஆகியவற்றின் புரவலராகவும் இருந்துள்ளார். கடல் கடந்தும் அடிகள் அவர்களின் சமய நற்பணி இவர் திருப்பெயரை பறைசாற்றிக் கொண்டுதான் உள்ளது.

இவ்வாறாக கவிஞர் புவியரசு அவர்கள் உள்ளிட்ட ஒன்பது மாணாக்கர்களோடு திருக்குறள் வகுப்பாக தொடங்கப்பட்ட இந்த கல்வி நிறுவனம் 'ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி'. பல தலைசிறந்த மாணாக்கர்களை இந்தத் தரணிக்கு தந்து நிற்கிறது என்றால் சற்றும் மிகையாகாது

1960 ஆம் ஆண்டு நான் ஆறாம் வகுப்பில் இந்த பள்ளியில் சேர்ந்த கால முதல் அடிகளார் அவர்களை வெள்ளுடையிலேயே கண்டிருக்கின்றேன். 1967ஆம் ஆண்டு பள்ளி இறுதியாண்டிலும் 1968-69 ஆம் ஆண்டு கல்லூரி ஓராண்டு மாணவனாய் இருந்த போதும் காவி உடையிலும் நான் கண்டிருக்கிறேன் அதோடு கூட 1967ஆம் ஆண்டு ஆதீன தலைமை ஏற்று வெள்ளாடையிலிருந்து கல்லாடைக்கு மாறிய பெருவிழாவிலும் கலந்து கொண்டு அந்த மகிழ்ச்சி தருணங்களை முன்னே பார்த்திருக்கின்றேன் .உவகை கொண்டிருக்கின்றேன்.

1974ஆம்ஆண்டு, சென்னையில் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் மாணாக்கர் பாவலர் ஏறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தனித்தமிழ் இயக்கம் நடத்திக் கொண்டிருந்தார் அந்த இயக்கத்தோடு அதன் சார்பாய் வெளிவந்து கொண்டிருந்த தென்மொழித் தமிழச்சி தமிழ்ச்சிட்டு இதழ்களோடும் தொடர்பு கொண்டிருந்த நாங்கள் அவியக்கத்தின் கோவை அமைப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தோம்.

மண்ணகம் பாவலர் குழு என்ற அமைப்பாக நான்ஃ கவிஞர் எழில் அண்ணன், மா நா மணி, பூளை மேடு துறை மடங்கன், வேலிறையன், தமிழ் மாணிக்கம் ஆகிய நாங்கள் கோவை நகர மண்டபத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த இறந்த மாதமாகிய ஏப்ரல் மாத இறுதியில் பாவேந்தர் விழா நடத்தினோம். அந்த விழாவின் கவியரங்க தலைமைக்காக பேரூர் தமிழ் கல்லூரியில் பயின்று, புலவராய்வு பட்டம் பெற்று கோவை சிட்டி முனிசிபல் பள்ளியில் தமிழ் ஆசிரியராய் பணிபுரிந்து திரைப்பட பாடல் ஆசிரியராகி, சென்னை

சென்றிருந்த ப.க.இராமசாமி என்கிற புலமைப்பித்தனை அழைத்திருந்தோம். அவர் தலைமையில் கவியரங்கம் நடந்தேறியது. அதன் மறுநாள் பேரூர் தமிழ் கல்லூரியும், சந்நிதானமும் அவரை அழைத்து அவருக்கு வரவேற்பு தந்து பேரூராதீனம் அடிகளார் அவர்களின் தலைமையில் பாராட்டு விழாவும், புலமைப்பித்தன் அவர்கள் தலைமையில் கவியரங்கமும் நடைபெற்றது

தமிழ் கல்லூரி பழைய மாணவர்கள் இராசப்பன், புலவர் மலர்வண்ணன், புலவர் கந்தசாமி, புலவர் கோசலாதேவி ஆகியோர் கவியரங்கில் பங்கேற்றார்கள்.

மண்ணகம் பாவலர் குழு சார்பில் நாங்கள் அனைவரும் பார்வையாளர்களாக பங்கேற்றோம்.

புலவர் புலமைப்பித்தன் அவர்கள் கல்லூரியில் பயின்று போது இரவில் பஞ்சாலைத் தொழிலாளியாகப் பணி புரிந்து கொண்டே பகலில் கல்லூரி மாணக்கராகவும் இருந்து கல்வி பயின்றவர் கவியரங்கத்தின் முடிவில் தலைமை கவியை அவர் முடிக்கும் போது அதை பற்றி குறிப்பிட்டார்

பஞ்சாலை தொழிலாளியாள் அல்லல் பட்டு துன்பப்பட்டு துயரப்பட்டு இன்று சென்னை பட்டினத்தான் ஆனவன் நான் என்று கண் கலங்கியவரே சொன்னவர்

அடிகளைப் பற்றி அவர் குறிப்பிடும்போது சிலேடையாக நகைச்சுவை தோன்ற ஒரு கருத்தினை சொன்னார் அவர் இல்லற வாழ்வில் இருந்து கொண்டே தமிழ் பயின்றவர் ஒரு கவிதை வரியை நயம் பட உரைத்தார்

'மா துறவு கொண்டவர் ஐயா தாங்கள். நானும் மா துறவு கொண்டவன் தான்'என்று கூறி அடிகளை திரும்பிப் பார்த்து நானும் மாது உறவு கொண்டவன் தான் என்று பிரித்து பொருள் படுத்தி சொன்னபோது அரங்கமே சிரிப்பால் அதிர்ந்தது.

அதிலும் அடிகளார் அவர்கள் தாடி மீசை இடையே வெண்


முத்துப் பற்கள் தெரிய கலகலவென சிரித்த அந்த முறுவல் மத்தாப்பு இன்னும் என் நெஞ்சில் நிழலாடுகிறது இன்னும் அடிகள் பற்றிய இரண்டு நினைவுகளோடு என் உரையை நிறைவு செய்கிறேன்

நான் ஏழாம் வகுப்பு படிக்கும் போது அந்த நிகழ்வு, என் சிறு வயதில் என் வாழ்க்கையின் முத்திரையாகவே இன்றும் எண்ணுகிறேன். ஏழாம் வகுப்பு முழு ஆண்டு தேர்வு சமயம் படிப்பதற்கு என்று விடுமுறை விடுவார்கள் நானும் என் இரண்டு நண்பர்களும் மறுநாள் தேர்வுக்கான புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து எங்கள் வகுப்பறையிலேயே அமர்ந்து படித்துக் கொண்டு இருந்தோம். சில மணி நேரத்திற்கு பின்பு வீடு திரும்புவதற்காக கிளம்பினோம். பள்ளியின் பின்புற வழியாக கிணற்றளி நீர் தொட்டி இருக்கும். மோட்டார் ஓடிக்கொண்டிருக்கும். அதன் வழியாக செல்லலாம் என்று வருவோம் வரும் வழியில் ஒரு பப்பாளி மரம்.

எனக்கு மரம் எல்லாம் ஏறத் தெரியாது பாவனா காட்டுவது போல மரத்தில் ஏறத் தொடங்கி ஓர் இரண்டு அடிகள் தொற்றி இருப்பேன் என் நண்பர்கள் நிற்காமல் என்னை விட்டு சென்று கொண்டிருந்தார்கள் சருக்கென்று நான் இறங்கி அவர்களை பிடிப்பதற்காக ஓடத் தொடங்கினேன்.

'ஏய்...நில்லு' என்று ஒரு குரல் பின்புறம் இருந்து வந்தது திரும்பி நின்று பார்த்த போது அடிகளார் அவர்கள் என்னை நெருங்கி வந்து விட்டார்கள். 'என்ன செய்திட்டிருக்கே?', அருகில் வந்து விட்டார்.' தேர்வுக்கு படிப்பதற்காக வந்தங்க ஐயா...' என்று தயங்கிய வாரே சொன்னேன். 'இதுதான் படிக்கிற லட்சணமா?' என்று என் கன்னத்தில் ஓங்கி அரை விட்டார் பாருங்கள். நான் அறையை வாங்கிக் கொண்டு எடுத்தேன் ஓட்டம்.


அன்று அவர் கரம் பட்ட என் கன்னம் இன்றும் வரம் பெற்ற வண்ணமாக எனக்குள் சிலிர்த்துக்கொண்டே இருக்கிறது.




மகம் நாள் மாத வழிபாட்டில்
பேரூராதீனம் 24 ஆம், 25 ஆம்
குருமகா சந்நிதானங்கள்



உதகை ஆதீனம் தட்சிணாமூர்த்தி
திருமடத்தில் அதனுடைய
பேரூரடிகளாரும் அவருடைய
ஆணையின் வண்ணம் குரு
முதல்வராகப் பொறுப்பேற்ற அடிகள்
பெருந்தகை அவர்களும்
அடியார் பெருமக்களும்



அருளியல் பயணம்



அருள் நிலையில் அடிகளார்



81

கலாநிதி அப்பையா தேவசகாயம்

இணை ஸ்தாபகர், அறங்காவலர்
லண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலயம்

உ
சிவமயம்
அன்பே சிவம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்.
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

(திருமந்திரம்)

சீர்வளர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் அவர்களை முதன்முறையாக இலண்டனில் நடந்த சைவ திருக்கோவில் ஒன்றியத்தின் மகாநாட்டில் 25 ஆண்டுகளுக்கு முன் தரிசிக்கும் பாக்கியம், இலண்டன் உலக சைவ பேரவையின் மெய் கண்டார் ஆதீனக் குரு சிவனந்தி அடிகளார் அவர்களையும், ஒரே மேடையில் கண்ணாரக் கண்டு மகிழக்கிடைத்தது.

அன்று முதல் இன்று வரை அடியேன் பாரத பூமிக்கு வரும்பொழுதும், இலண்டனில் நடந்த சைவ திருக்கோவில்கள் ஒன்றிய மகாநாடுகளிலும் கலந்து நெருங்கி அன்போடு பழகி மகிழ்ச்சியடைந்தேன்.

இலண்டனில் அடிகளார் எங்கள் இல்லத்தில் தங்கி இருந்த பொழுது அதிகாலையில் தினமும் எமது தோட்டத்தில் மலர்களை தானே பறித்து தினசரி சிவ பூசை செய்வது வழக்கம். ஒரு நாள் அதிகாலை

நான்கு மணிக்கு எழுந்து தோட்டத்தில் மலர்களை பறித்துத்து வந்த பொழுது வீட்டின் கதவு தற்செயலாக மூடப்பட்டு விட்டது. அதிகாலை என்ற படியால் குருநாதர் அதிகாலை நான்கு மணி முதல் ஏழு மணி வரை எங்கள் கதவு மணிகளை அழுத்தி தொந்தரவு செய்யக்கூடாது என்ற எண்ணத்தோடு துயில் எழுப்பாமல் தோட்டத்தில் காத்திருந்து நாங்கள் காலை எழுந்த பின் தனது தினசரி வழிபாட்டை செய்தார் என்பது எங்கள் வாழ்வில் என்றும் மறக்க முடியாத சம்பவம் என்பதை மன வேதனை உடன் இக் கட்டுரையில் குறிப்பிட விரும்புகின்றேன். இவ் விடயத்தை நினைக்கும் பொழுது அடிகளாரின் பொறுமை, அன்பு, பக்தி பண்பு, பணிவு பெருந்தன்மை, போன்ற இனிய குணங்களை என்றும் சிந்திப்பேன்.

பாரத பூமிக்கு வரும்பொழுது குரு மகா சன்னிதானத்தை தரிசிப்பது வழக்கம். குருநாதரின் மடத்திலேயே குடும்பசகிதம் தங்கி சுவாமிகளின் சிவ பூசைகளிலும் கலந்துகொண்டு பேருரைகளை உளமாரக் கேட்டு மேலும் நற்சிந்தனை நற்பணிகள் செய்ய ஆன்மீக ஈடேற்றத்தை கற்றுத் தந்த குருநாதர் மகா சன்னிதானம். அரும்பெரும்அறப் பணிகளாக முதியோர் முதல் மாணவச் செல்வங்கள் வரை, பரம்பொருளை வணங்குவதற்கு தெய்வத்தமிழின் பன்னிரு திருமறைகள் மூலம் சடங்குகளையும் பூசைகளையும் அர்ச்சனைகளையும், தமிழ் குருகுலத்தையும் உருவாக்கிய திருவருட் செல்வர். ஆலயங்களில் தமிழில் தினசரி பூசைகள் நடைபெறவேண்டுமென முத்திரை பதித்த மகான். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்னும் வாக்கியத்திற்கு இணங்க ஏழைகளின் கல்வியின் தோழனாய் இளம் சிறார்கள் முதல் பட்டதாரிகள் வரை பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகம் வரை பல சிறப்பு கல்வி அளித்து தமிழுக்கும் சைவத்திற்கும் தம் வாழ்வை அர்ப்பணித்தவர். சுவாமிகளின் நற்பணிகளை கூற பல மணித்தியாலங்கள் தேவை. அவர் செய்த எல்லா பணிகளையும் சுவாமிகளின் திருவருளும் குருவருளும் பெற்ற இளைய மகா சன்னிதானம் சீர்வளர் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் தொடர்ந்து குருநாதரின் பணிகளை வெளிநாடுகளில் வாழும் சைவ

அன்பர்களின் அழைப்பை ஏற்று குருநாதர் வழியில் சிறப்புடன் நடாத்தி வருவது போற்றுதற்க்குரியது. இந்த நேரத்தில் அடிகளாரின்

அரும்பணிகளை நெதர்லாந்து புலம்பெயர் தமிழ் மக்கள் சூரியத் தமிழ் இணைய வழித் தொலைக்காட்சி குடும்பத்தினர், உலக வாழ் சைவத் தமிழ் மக்களுக்கு அறியச் செய்வதும் பெருமைக்குரியது .

மகா சன்னிதானங்களின் பாத கமலங்களையும் இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனையும் வணங்கி விடைபெறுகின்றேன்.

'மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்'

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
போற்றிஓம் நமசிவாய.

82

அருள்பாரதி என்ற எஸ். ஜோதி பி.ஏ
மேனாள் உதவி ஆணையர் அறநிலையத்துறை
எண் 1/1 முதல் தளம் செட்டித்தெரு சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

அன்பிற்கினிய பெரியோர்களே!

அடியேன் அடிகளாரின் தரிசனைத்தை பெற்ற நிகழ்வுகள் இரண்டு.

(1) ஒன்று தானாக விளைந்த தவத்திரு அடிகளாரின் தரிசனம்.

(2) அடுத்து நானாக விழைந்து பெற்ற தரிசனம் இரண்டு

முதலில் தானக விளைந்த தரிசனைத்தை விளக்கிவிட்டு அடுத்தது பற்றி அடுத்துக் கூறுகிறேன்.

அந்த ஆண்டு 1986 மாதம் நினைவு இல்லை மதியம் 2.45 இருக்கும், எளியேன் நாகப்பட்டினம் வட்டம் கீழ்வேளூர் அருள்மிகு அட்சயலிங்க சுவாமி திருக்கோயில் செயல் அலுவலராக பணியாற்றும் அலுவலக வாயிலில் தவப்பெருந் திரு அடிகளார் திடீரென தமது அன்பர்கள் இருவருடன் எழுந்தருளினார்கள். தவப்பெரு சன்னிதானம் அவர்கள் எவ்வளவு எளிமையாக உள்ளே வந்து கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணி ஒடோடி அவர்களின் திருவடியை வணங்கி அழைத்தேன். என் இருக்கையில் அமர வேண்டினேன் அல்ல அல்ல என்று கூறி வேறு ஒரு ஆசனமாக நாற்காலியை போட செய்து அமர்ந்தார்கள்.

சன்னிதானம் தரிசனம் தந்தது அடியேன் பெற்ற பேறு. ஆனால் திடீர் வருகையை புரிந்துகொள்ள இயலவில்லை. என பணிவாக தெரிவித்தேன்.

நாம் அன்பர்கள் 42 பேர் உடன் தலயாத்திரை மேற்கொண்டு வருகிறோம், இன்று மதியம் 1.30 மணிக்கு தங்கள் திருக்கோயில் வளாகத்தில் உணவு அருந்த நினைக்கிறோம், ஆகவே அனைவருக்கும் ஆகாரம் ஏற்பாடு செய்து வையுங்கள் என்ற அன்பான வேண்டுகோள் விடுத்தார். அதனை அந்த செயல் அலுவலருக்கு அனுப்பினேன், அந்த செயல் அலுவலரும் ஒப்புதல் தெரிவித்து கடிதம் எழதினார், நாங்களும் ஆகாரத்திற்கு உரிய கட்டணத்தை செலுத்திவிடுகிறோம் என்றோம் அவர்களும் சம்மதம் தெரிவித்து இருந்தார்கள், ஆனால் நாங்கள் அத்திருக்கோயிலை அடைய அரை மணி நேரம் தாமதாகிவிட்டது. நாங்கள் அங்கு விசாரிக்கும் போது கோயிலையும் பூட்டி விட்டார்கள், அலுவலகத்ததையும் சாத்தி விட்டார்கள், வேறு என்ன செய்வது உடன் நாங்கள் புறப்பட்டு வரும் வழியில் உள்ள திருக்கோயிலை நாடினோம் அங்கும் அதே நிலைதான் இங்கு வந்தோம் திருக்கோயிலும் திறந்துள்ளது அலுவலகமும் இயங்குகிறது மிக்க மகிழ்ச்சி.

அடியேன் செய்ய வேண்டியதை கூறினால் இயன்றால் செய்கிறேன் என்றேன். எங்கள் 43 பேருக்கும் இப்போது மதிய உணவு வேண்டும் பிரசாதமாக இருந்தாலும் போதும் உடன் கட்டணத்தை செலுத்திவிடுகிறோம் என்றார்கள்.

உடன் என் அலுவலக உதவியாளரை அழைத்து திருக்கோயில் பரிசாரகர் இருவரையும் அழைத்து வர கூறினேன் அப்டியே ஒரு துண்டு சீட்டில் என் மனைவிக்கு ஒரு சிறு குறிப்பு வரைந்தேன் பேரூர் சன்னிதானம் இப்போது சாப்பிட வருகிறார்கள் உடன் ஏற்பாடு செய்யவும் என்று குறித்திருந்தேன். ஆலய பணியாளர்களான இரு மகளிர் உதவ செய்தேன். வீட்டில் சுவாமிகளுக்கு உணவு தயாராகி வருகிறது. திருக்கோயில் சன்னதி பரிசாரகர் ஒருவர் மற்றொருவர் மடப்பள்ளி பரிசாரகர் ஆகிய இருவரும் மதிய உணவை ஏற்பாடு

செய்தனர். பிரசாதமாக போட நேரம் ஆகும் உடன் பொங்கலும் அதற்கு துணையாக ஏதேனும் செய்கிறோம் என்று சொல்லி மடப்பள்ளி பக்கம் சென்றனர். சுவாமிகளும் ஒப்புக்கொண்டார்கள். அடிகளார் உடன் வந்தவர்கள் மண்டபத்தில் ஓய்வு எடுத்து கொண்டிருந்தார்கள். அடியேன் அடிகளாரை அவர்களை அழைத்துக்கொண்டு குடியுருப்புக்குச் சென்றேன் வாசலில் ஒரு நாற்காலி வைத்து சுவாமி அவர்களை அமரச்செய்து அவர்கள் திருவடிகளை நீராட்டி மலரிட்டு வணங்கினோம். உள்ளே அழைத்தோம். அடிகளார் அவர்கள் ஹாலில் அமர்ந்தார்கள், ஒரு சிறிய நாற்காலி எதிரே ஒரு டீப்பாய், எங்களை பார்த்து என்ன செய்து உள்ளீர்கள் என வினவினார்கள். எனது மனைவி சாதம் சாப்பார், ரசம் . உருளை கிழங்கு கார கறி, முட்டைகோஸ் பொரியல் அப்பளம் மற்றும் பாயசம் நேரம் போதவில்லை அதனால் வடை செய்ய இயலவில்லை என்று சொன்னார்கள்.

உடன் சுவாமிகள் நான் என்ன இல்லரவாசியா நான் என்ன விருந்துக்காகவா வந்துள்ளே துறவிக்கு எதுக்கு இத்தனை ஏற்பாடுகள் எனக் கேட்டுவிட்டு, இதோ என் உதவியாளர் இருக்கிறார் அவர் கேட்பதை கொடுங்கள் எனக்கான ஆகாரத்தை அவர் சீக்கிரமாக செய்வார் என்று அன்பு மழையாக அறிவுரை கூறினார்கள் அவரும் அடுக்களை சென்று சாம்பாரோ ரசமோ ஒன்று செய்தார், ஒரு துவையல் செய்தார் அடிகளார் அவர்கள் உண்டு அகமகிழ்து புறப்பட்டார்கள் அவர்களின் திருவடிகளை வணங்கி ஆசிகளை பெற்றோம்.

அடிகளார் வீட்டிற்குள் எழுந்தருளும் போது,

அடிகள் முன்னர் யான் அடிவீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்’

என்ற சிலப்பதிகார செந்தமிழ் சொற்றொடரும், குருவே சிவம் எனக் கூறினன் நந்தி. என்ற திருமூலர் திருமந்திர சொற்றொடரும் என் சிந்தையில் வந்து சென்றன. அடிகளாரும் எளியேனும் திருக்கோயில் அடைந்தோம்.

திருக்கோயிலில் அன்பர்கள் யாவரும் உண்டு பயணத்திற்க தயாராக இருந்தார்கள். தவத்திரு அடிகளார் அவர்கள் எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்று வினவினார்கள். நான் இந்தத் திருக்கோயிலில் சமய பிரச்சாரம் மற்றம் விருந்தினர் உபசரிப்பு என்ற தலைப்பில் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டள்ளது ஆகவே தாங்கள் தொகை வெலுத்த வேண்டாம் என்று பதில் உரைத்தேன். சரி என்று ஒப்புக் கொண்ட சுவாமிகள் தங்களுடன் வந்த அன்பர்களை நோக்கி நீங்கள் எல்லோரும் தங்களால் இயன்றதை காணிக்கை செலுத்தி விட்டு வாருங்கள் என்று அன்பு கட்டளை இட்டார்கள். உடன் அன்பர்கள் யாவரும் உண்டியலில் காணிக்கை செலுத்தி விட்டு திரும்பினர், அடுத்த தல யாத்திரைக்கு தவத்திரு அடிகளார் அவர்களும் அன்பர்களும் புறப்பட்டார்கள். வணங்கி அவர்களை அனுப்பி வைத்தோம். இந்நிகழ்சி தவத்திரு அடிகளார் அவர்களின் வாழ்கையில் ஒரு சிறு பதிவாகும் அல்லது ஒரு குறுஞ்செய்தியாகும். ஆனால் என் வாழ்க்கையில் கிடைத்த அருட்பெரு பேறாகும். என்றோ நிகழ்ந்த நிகழ்வு என் இதயத்தில் இன்றும் இனிப்பாகவே தித்திக்கின்றது.

அடுத்து நானாக விழைந்த தரிசன அழைப்பு

1991 ஆண்டு ஜனவரி மாதம் செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுகுன்றம் அருள்மிகு வேதகிரிஸ்வரர் திருக்கோயில் திருக்குடமுழுக்குத் திருவிழா அவ்விழாவிற்கு தவப்பெருந் திரு அடிகளார் அவர்களை அழைத்திருந்தேன், மேலும் சில ஆதின கர்தர்களுக்கும் வேண்டுகோள் சமர்பித்து இருந்தோம் அதில் தவத்திரு அடிகளார் அவர்கள் அன்று தான் வேறு ஒரு திருக்கோயில் நிகழ்சியில் கலந்து கொள்ள இருப்பதால் அதனால் மண்டலாபிஷேக பூர்த்திகுள் வருவேன் என்றும் மண்டாபிஷேகத்தில் கலந்து கொள்வேன் என்று பதில் மடல் அனுப்பி இருந்தார்கள். ஏற்கனவே தெரிவித்த வண்ணம் மண்டலாபிஷேகத்தில் பங்கேற்றார்கள். அருள்மிகு வேதகிரி பெருமானுக்கு வெள்ளாடை பரிவட்டம் சமர்பித்தும் காணிக்கை செலுத்தியும் வணங்கி மகிழ்ந்தார்கள். மண்டலாபிஷேகத்தில் வெளியிடப்பட்ட குடமுழுக்கு பெருவிழா மலரில் வாழ்த்து கவிதைகள் வழங்கி சிறப்பித்தார்கள். பிறகு சிற்றுந்தில் ஏறி புறப்பட்டு சென்றார்கள்

நாங்கள் வணங்கி வழியனுப்பினோம் எந்தவித எதிர்பார்பும் இன்றி வருகை புரிந்ததும் அடியேனையும் மற்றவர்களையும் ஆசி கூறி சென்ற தவப்பெரும் திரு அடிகளார் அவர்களை மறக்கவும் முடியுமா?

தானக வந்தபோது துறவிகளை எப்படி உபசரிக்க வேண்டும் என்ற அறிவுரையை செயலில் காட்டினார்கள், திருக்கோயிலுக்கு பொருளாதார நட்டம் வரக் கூடாது என்ற உயர்ந்த சிந்தனையையும் மேலும் வளர்த்துவிட்டடார்கள். நானாக விழைந்த போது குறிப்பிட்ட நேரத்தில் குறிபிபட்டபடி வந்து விழாவில் பங்கேற்ற பண்பினை அவரிடம் இருந்து கற்ற கொண்ட பாடம் போல் ஆயின. இந்த நிகழ்வுகளை நினைவூட்ட செய்த வாய்ப்பு அளித்த அனைவருக்கும் கேட்டு மகிழ்ந்த அனைவருக்கும் நன்றி ஒன்றிய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன், வாழ்க தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் புகழ். தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் திருவடிகள் போற்றி போற்றி.

83

சைவச்சுடரொளி திரு. **அ. சுப்பிரமணியன்**
பி.ஏ. (இந்திய பண்பாடு, எம்.ஏ, (சமூகப் பணி)
எம்.ஏ. (தமிழ் இலக்கியம்) பி.எல். வழக்கறிஞர்
மேனாள் உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
தமிழ்நாடு அரசு

பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

கோவை மாவட்டத்தை பொருத்த வகையில் ஆன்மீகத்தின் இரு கண்களாக திகழ்வன பேரூர் சாந்தலிங்க மடாலயம் என அழைக்கப்படும் பேரூர் ஆதீனமும், சரவணம்பட்டி கௌமார மடாலயம் என அழைக்கப்படும் சிரவை ஆதீனமும் ஆகும். இவ்விரு ஆதீனங்களும் செய்து வரும் ஆன்மீகப் பணி, கல்விப் பணி மற்றும் சமுதாயப்பணி ஆகியவை குறித்து அனைவரும் நன்கு அறிவோம்.

முதல் சந்திப்பு

தற்போது ஆர் எஸ் புரம் என வழங்கும் ரத்தின சபாபதிபுரத்தில் திவான் பகதூர் ரத்தின சபாபதி முதலியார் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு ரத்தின விநாயகர் திருக்கோவில் கட்டி முடிக்கப்பட்டு 1948 ஆம் ஆண்டு திருக்குட நீராட்டு விழா நடைபெற்றது. பின்னர் 1950இல் திருக்கோவிலில் கந்த சஷ்டி திருவிழா கொண்டாட துவங்கப்பட்டது.

அந்த விழாவில் கந்தபுராண சொற்பொழிவு 6நாட்கள் நடைபெறும். இரு நாட்கள் என் தந்தையார் வித்வான். எஸ். அருணாச்சலம் பிள்ளையவர்களும், இரு நாட்கள் பேரூர் தவத்திரு ராமசாமி அடிகளும், இரு நாட்கள் கௌமார மடம் தவத்திரு சுந்தரம் அடிகளார் சொற்பொழிவு ஆற்றுவர்.

அப்போதுதான் முதன் முதலாக நமது தவத்திரு ராமசாமி அடிகளார் அவர்களைச் சந்தித்தேன். இது நடந்து 75 ஆண்டுகள் ஆயிற்று. அப்போது இரு அடிகளாரும் காவியுடை தரிக்கவில்லை.

திருக்கோவில் விழாக்கள்

1974 முதல் 3 ஆண்டுகள் கோவை அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோவிலில் நான் பணியாற்றிய போது மூன்று ஆண்டுகளும் சித்திரை திருவிழாவில் துவக்க விழாவில், பேரூர் ஆதீனம் தவத்திரு ராமசாமி அடிகளார் அவர்களை அழைத்து துவக்க விழாவில் துவக்க உரை ஆற்றுவதற்கு அழைத்தேன்.

1978-1980 ஆண்டுகளில் நான் திண்டுக்கல் அருள்மிகு கால கந்தீஸ்வரர் திருக்கோயில் சித்திரை திருவிழாவில் அருளுரை ஆற்றுவதற்கு பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளாரை அழைத்திருந்தேன்.

1983 ஆண்டு முதல் 1989 ஆண்டு வரை ஏழு ஆண்டுகள் கோவை அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் செயல் அலுவலராக பணியாற்றிய போது ஏழு ஆண்டுகள் மாசி திருவிழாக்களில் முதல் நாள் துவக்க விழாவிலும் திருத்தேர் அன்றும் பேரூர் ஆதீனம் கலந்து கொண்டு அருள் உரை ஆற்றுவதோடு திருத்தேர் வடம் பிடித்தும் துவங்கி வைப்பார்

ஒவ்வொரு சொற்பொழிவிலும் துவக்கத்தில் எனது தந்தையார் குறித்து ஐந்து மணி துளிகள் பேசிவிட்டு அவரது மகன் தான் இத்துயிருக்கு கோவிலில் செயல் அலுவலர் என்று கூறுவார். நான் கூட அடிகளாரிடம் இது குறித்து ஒவ்வொரு முறையும் என் தந்தையார் பற்றி குறிப்பிடாவிட்டால் என்ன' என்று கேட்டதற்கு'உங்கள் தந்தையார் குறித்து இப்போது பேசாமல் வேறு எப்போது பேசுவது'என்பார்

தமிழ் அர்ச்சனை மற்றும் தமிழில் திருக்குட நீராட்டு:

பேரூர் ஆதீனம் தவத்திரு ராமசாமி அடிகளார் பேரூர் பட்டி பெருமாள் திருக்கோயிலில் 60 ஆண்டுகள் முன்னரே தமிழ் அர்ச்சனை செய்ததற்கு தூண்டுகோலும் இருந்தது தமிழ் அர்ச்சனை

செய்வித்தார். திருக்கோயிலில் அக்காலத்தில் 'தமிழ் அர்ச்சனை செய்யப்படும்' என்ற ஆங்காங்கே பலகைகள் வைக்கப்பட்டிருந்தது.

திருக்கோவிலில் அர்ச்சகர்களும் தமிழில் அர்ச்சனை செய்து வந்தனர் குறிப்பாக பிற்காலத்தில் உள்ள அருள்மிகு த்ண்டபாணி சுவாமிகள் சந்நிதியில் உள்ள சிவாச்சாரியார் மிகவும் நன்றாக ராகத்துடனும் தெளிவாகவும் அர்ச்சனையினை தமிழில் செய்வார்.

நான் மாணவனாக இருந்தபோது எனது பிறந்தநாளில் பேரூர் ஆலயம் சென்று தமிழ் அர்ச்சனை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

ஏழு நிலை இராஜகோபுரங்கள்;

கோவை அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் மற்றும் மருதமலை திருக்கோவில் ஆகிய திருக்கோவில்களில் ஏழு நிலை ராஜகோபுரம் தான் கட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்து அதன்படியே இரு கோவில்களிலும் கட்டுவித்தார்கள் தற்போது அந்த இரு திருக்கோயில்களிலும் ஏழு நிலை ராஜகோபுரம் இருக்கிறது.

கடைசியாக சந்தித்தது

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நான் பேரூர் ஆதீனம் தவத்தில் சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் திரு நான் மங்கல விழாவிற்கு அறநிலையத்துறை நண்பர்கள் முத்து பழனியப்பன், திரு.கே.எஸ்.கே. சுடலைமுத்து மற்றும் திரு. ராஜாமணி ஆகியோருடன் சென்றிருந்தேன். அப்போது நான் அடிகளாரிடம்'என் தந்தையார் நூறாண்டுகளுக்கு மேல் வாழ்ந்தார்கள். உங்கள் நண்பர் திரு.எஸ்.அருணாச்சலம் பிள்ளை போலவே நூறாண்டுகளுக்கு மேலாக வாழ்வது என் விருப்பம் ஒன்றே. அதற்கு அடிகளார் உங்கள் விருப்பம் எது எது வென்ற போதிலும் சாந்தலிங்கர் விருப்பம் என்னவோ தெரியவில்லையே 'என்றார் இதுதான் அடிகளார் உடன் எனது கடைசி சந்திப்பு

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் மறைந்தாலும் அவரது திருவுருவமும் வெண்தாடியின் இடையே தோன்றும் தெய்வீக சிரிப்பும் என்றும் நமது உள்ளத்தில் இருந்து மறையாது நிற்கும்.

தவத்திரு சமந்தலிங்க மருதாசல அடிகளார்:

தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் மறைந்தாலும் அவரது அடியொற்றி தற்போதைய ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் மிகவும் திறமையாக, திருமடர்த்தையும் கல்வி நிறுவனங்களையும் நடத்தி வருவது பாராட்டுதலுக்குரியதாகும்.

84

புலவர். மூ. நடராசன்
தமிழாசிரியர் (ப/நி)
காரிகை சிவகிரி, ஈரோடு மாவட்டம்

எல்லாம் வல்ல அம்மையப்பன் திருவருளால் 19 64 முதல் 1968 ஆம் ஆண்டு கால அடைவுக்குள் தமிழ்க் கல்லூரியில் பயிலக்கூடிய வாய்ப்பு கிடைக்கப்பெற்றேன்

ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தின் கிழக்கு மூலை பகுதியில் இருந்து கல்லூரிக்கு வந்ததால் வயல் வரப்பு கால்நடைகள் விளைச்சல் இவற்றோடு தொடர்பு இடை யீடு படாமல் திருமடத்திலும் கிடைத்தது

திருமடத்திற்கு உரிமையான வயல் தோட்டங்களுக்கு இரட்டை மாட்டு வண்டியில் மகா சன்னிதானங்களை அழைத்துச் சென்று வந்த வாய்ப்பை நினைவுப் படுத்திக்கொள்கிறேன்.

கல்லூரியில் முதல்வராக பேராசிரியராக திருமடத்தின் தலைவராக இருந்து கல்வியுடன் ஒழுக்கத்தையும் கற்றுக் கொண்டதை நினைத்து ப் பெருமிதம் கொள்வதா!

கல்லூரி க் காலத்திற்குப் பிறகு தமிழ் வழிபாட்டைத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வெள்ளக்கோயில் புலவர் பெரிய சாமியுடன் சேர்ந்து செய்ய எங்கள் திருமடம் வழிகாட்டியதை நினைவு கூர்வதா!

மகா சன்னிதானங்களுடன் மலேசியா முதலான அயல் நாடுகளுக்குச் சென்று வந்த அனுபவத்தை எண்ணுவதா ?

நாங்கள் தகவல் தெரிவிக்கா விட்டாலும் வழிபாட்டின் தொடக்கத்தில் குரு வணக்கம் செய்கின்ற போது மடத்திலிருந்து தொலைபேசி அழைப்பு எங்களுக்கு வந்ததை நினைவு கூர்வதா. !

மிகப்பெரிய புண்ணியம் செய்தவன் அடியேன் என்பது தெளிவு.

திருச்சிற்றம்பலம்

85

முனைவர். சரவணச்செல்வன்
மூத்த பேராசிரியர் மற்றும் தலைவர், (ஓய்வு)
ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் துறை
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

பேரூர் அடிகளாரின நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அவரை பல்கலைக்கழக ஆட்சி குழு உறுப்பினராக சந்தித்திருக்கிறேன். அப்போது தமிழ் மொழி மீது அவர் காட்டும் பாசம் நேசம் அன்பு வியக்க வைத்தது. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்தைக் கொண்ட தமிழன், தமிழை மறந்து வருவது வேதனைக்கு உரியது. எனது தந்தையார் தமிழாசிரியர். எனவே தமிழ் மீது இயல்பாக பற்று கொண்டவன் நான், பேரூர் அடிகளார் பல்கலைக்கழக ஆட்சி குழு உறுப்பினராக இருந்து தமிழை வளர்க்க தமிழை பாதுகாக்க பல முயற்சிகள் செய்தவர். தமிழ்க் கல்லூரி வாயிலாக பல தமிழ் பேராசிரியர்களை, தமிழ் ஆசிரியர்களை, அறிஞர்களை உருவாக்கி உலகிற்கு தந்தவர். மேலும் சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் கருதி போற்றி வளர்த்தவர்.

தவத்திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளார் சென்னைப் பல்கலைக்கழகம் பாரதியார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து தமிழ் மொழியை பாதுகாக்க செய்த அரும்பணிகள் உலகம் போற்றுதற்குரியது. கூடுதலாக, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளிக்க சுவாமிஜி ஆற்றிய சேவைகளை, மத, ஆன்மீக மற்றும் பொதுவான செயல்பாடுகளில் அதிக முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் காணலாம்.

அவரது அடியொற்றி இன்றைய மகா சன்னிதானங்கள் அவர்களும் சமயப் பணி சமுதாயப் பணி ஆகியவற்றை தொடர்ச்சியாக செய்து வருகிறார்கள். சமுதாய மருத்துவராகத் திகழுகிறார்கள்.

பேரூர்க் கல்லூரி தமிழை, மருத்துவமனையை, சமயத்தை, சமுதாயத்தை சீர்திருத்துவதற்காக அமைந்த கல்லூரி. அதனை தொடங்கி தன்னலம் காணா தகைச்சால் தமிழ்த் தொண்டாற்றி வரும் சைவத் திருமடத்தை வணங்குகிறேன். அடிகளாரின் பொன்னார் திருவடிகளை மன மெய் மொழிகளால் வணங்கி மகிழ்கிறேன்.

சாந்தலிங்கர் திருமடம் வந்தவர்களுக்கெல்லாம் உணவுப் பசியை நீக்கும் திருமடம். அறிவுப் பசியை ஊட்டும் திருமடம். இத்திருமடத்தின் செயற்கரும் செயல்களை வணங்கி மகிழ்கின்றேன்.

86

திருமதி. சித்ரா சுப்பிரமணியன்
பொருளாளர், அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில்
புன்செய்ப் புளியம்பட்டி.

சிவாய நம...

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூர் ஆதீனம் முது முனைவர் கயிலைக் குருமணி

சீர் வளர் சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் தி ரு வ டி க ள் போற்றி போற்றி.. நெடிதுயர்ந்த திருமேனி... அகன்ற அறிவான நெற்றி.. அதில் அழகிய திருநீற்றுப் பூச்சு.. தீட்சண்யமான... அருள் நிறைந்த கண்கள்.. வெண்தாடிக்குள் மெல்லிய புன்சிரிப்பு.. கழுத்தில் கௌரி சங்கம்.. தூக்கிக் கட்டிய காவி வேட்டி.. யாமார்க்கும் குடியல்லோம் எனும் படியான நிமிர்ந்த நன்நடை.. அப்படி ஒரு தோற்ற பொலிவு கொண்டவர் நமது தெய்வத்திரு திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி வழி பேரூர் ஆதீனம் முதுமுனைவர் கயிலைக் குருமணி சீர் வளர் சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார்..

முதன் முதலில் சுவாமி அவர்களை எங்கள் ஊரின் அருகில் உள்ள ஒரு திருக்கோயிலில்... குடமுழுக்கு விழா.. தமிழ் முறைப்படி நடக்கிறது.. வேள்விச்சாலையின் வெளியே.. நாங்கள் கூட்டமாக அமர்ந்திருக்கின்றோம் ..

அடிகளார் அவர்கள் அங்கே வரவும்.. மக்களிடையே ஒரே பரபரப்பு.. அனைவரும் எழுந்து சென்று அவரின் திருவடிகளில் விழுந்து வணங்கி திருநீறு பெற்றுக் கொண்டார்கள்.. அடியேனும் அந்த வரிசையில் நின்றிருந்தேன்.. திடீரென சாமி அவர்கள் கோபமாக

பேசுவதை கண்டேன்.. என் மனதுக்குள் ஒரு நெருடல்.. அவரின் பெயரோ சாந்தலிங்கம் சுவாமிகள். ஆனால் அவருக்கு இவ்வளவு கோபம் எப்படி வருகிறது என்று எனக்கு வியப்பாகவும் அச்சமாகவும் இருந்தது.. அதன் பின்பு சற்று நேரம் கழித்து... தீர விசாரித்ததில் தெரிந்தது..

செய்வன திருந்தச் செய்.. என்பதற்கு ஏற்ப.. இறைவனுக்குச் செய்வதை.. சரியாகச் செய்யாமல்.. அதனால்.. விளைந்த விளைவால்.. சாமி அவர்களுக்கு அத்தனை கோபம் விளைந்தது.. என்று அறிந்து கொண்டேன்.. அதன் பின்.. என் மனமும் சாந்தமுற்றது..

எங்கள் ஊரைச் சார்ந்த திரு இளமுருகன் ஐயா அவர்கள் அடிகளாரை பற்றி ஒரு செய்தி குறிப்பிட்டார்கள் அது என்னை மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. திருப்பழனம் பாடல் பெற்ற தலம்.. அங்கே.. குன்றக்குடி அடிகளார் அவர்களுடன் சேர்ந்து... சாதி வேறுபாடற்ற.. 100 சிவனடியார்களோடு காவிரியில்.. இருந்து நீர் சுமந்து சென்று.. அங்கிருக்கும் இறைவனை திருமுழுக்கு செய்து வழிபட்டதை மறக்க முடியாது..

தமிழ் சமய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைத்துள்ளார் அடிகளார் என இதை முனைவர்.. பா. சுந்தர் அவர்கள் குன்றக்குடி அடிகளார் பணிகள் என்னும் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.. அத்தகைய புரட்சியாளர் நம் அடிகள் என்று ஐயா இளமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்..

அடிகளார் அவர்கள் எண்சாண் திருவுடலில்.. எண்ணற்ற திருவருள் பெற்றவர்.. எப்பொழுதும் நமது வழிபாட்டில்.. திருமுறைகள் இடம்பெற வேண்டும்.. என்பதில் அழுத்தமான ஈடுபாடு உடையவர் அடிகளார்.. அதனால் தான்.. எங்கள் ஊர் திரு அண்ணாமலையார் திருக்கோயிலில் திருமுறைகள் ஓதி ஆகம வழிபாடு தான் இன்றும் நடக்கிறது அடிகளார் அவர்களின் வழிகாட்டுதலின்படி.. அது குறித்து என்றும் எங்களுக்கு பெருமை தான்.

திருமுறை ஓதாத திருக்கோயில்களில் இறைவன் குடியிருக்க

மாட்டார் என்பது அடிகள் அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.. அடிகளாரின் சொல் வேறு செயல் வேறு அல்ல.. அதனால் தான் ஒருமுறை... கரூரில்.. திருக்கோயிலில் இறைவனை வழிபட தனது நண்பருடன் சென்றபோது.. அங்கே வடமொழியில் அர்ச்சனை நடைபெற்று கொண்டு இருந்திருக்கின்றது.. திருக்கோயிலில் வழிபாடு செய்ய வந்த அடிகளார் அதனைக் கேட்டு திருமுறையைச் சொல்லி வழிபாடு செய்யுங்கள் என்று கூற.. அங்கிருந்த திருமேனி தீண்டும் அர்ச்சகரோ.. தெரியாது எனக்கு திருமுறை என்றாராம் ...

உடனே எவ்வித தயக்கமும் இன்றி வழிபாடு செய்யாமலே திரும்பிவிட்டாராம் அடிகளார்.. இந்தச் செய்தியை நான் மற்றவர் சொல்ல கேட்ட பொழுது.. அவரின் உள்ளத்தின் உறுதி.. என்னை அசத்தியது.. அதுமட்டுமா.. பின்னாளில் அதே கரூரில் தமிழ் வழிபாட்டை ஆதரித்து மிகப்பெரிய பேரணி ஒன்றையும் அடிகளார் நடத்தினார் அதில் அடியேனும் கலந்து கொள்ளும் பேறு பெற்றேன்...

திருமுறையே சைவ நெறி கருவூலம்.. திருமுறையே தேன் தமிழ் பாகாகும். எனும் வண்ணம்.. அடிகளார்.. தினமும் அதிகாலையில் 4 மணிக்கு எழுந்து (பொதுவாக நாமெல்லாம் பலர் கூடி இருக்கும் வேளையில்.. திருக்கோயில்களில் எல்லோர் முன்பும் பாடுவது இயல்பு..) ஆனால் யாரும் இல்லாத விடியற்காலையில் நெஞ்சு நெக்குருகி.. அடியார் அவர்கள்.. திருமுறைகளை உணர்ந்து .. பாடி வழிபாடு செய்வது அடிகளாரின் பண்பட்ட உள்ளத்தை நமக்கு படம் பிடித்து காட்டுகிறது என்று திரு. தங்க. விசுவநாதன் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டு இருந்தார்.

அதை படித்த பொழுது எனக்குள் நெகிழ்ச்சி ஏற்பட்டது. அடிகளார் அவர்கள். குணம் என்னும் குன்றில் நின்றவர். தனது கொள்கைகளுக்கு மாறான எதையும் எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டார். அவர் பொறுப்பேற்ற போது.. இருந்த பேரூர் ஆதீனத்தை பின்னாளில்.. நல்லதொரு திருமடமாக மட்டுமல்லாமல், பெரியதொரு சமய மறுமலர்ச்சி நிலையமாக மாற்றி பலரை தமிழ் சான்றோர்களாக மாற்றிய பெருமைக்குரிய தமிழ்ச் செம்மல் நமது அடிகளார் என்றால் அது மிகை இல்லை முற்றிலும் உண்மை.

பிரிட்டன்.. மொரிசியஸ்.. போன்ற அயல்நாடுகளில் இருந்து.. நல்ல அன்பர் பெருமக்களை வரவழைத்து தமிழ் வழிபாட்டு நெறிகளை பயிற்றுவித்தார்.. தொடர்ந்து அருகில் உள்ள அனைத்து திருக்கோயில்களிலும் தெய்வஒண்தீந் தமிழில் வழிபாடு நடக்க பல்வகையான முயற்சி செய்து அதில் வெற்றியும் கண்டார். இவையெல்லாம் அவருக்குள்ள தமிழ் பற்றையும் சைவத்தை வளர்க்கும் அவரது திறனை பற்றியும் நாம் அறிவதற்கு மட்டுமின்றி, அவர் வழியில் நாமும் நடக்க ஒரு ஏதுவாக இருந்தது.

மற்றொரு நிகழ்வும் அடியேனால் மறக்க இயலாது.. பெண்களை மனையறத்தின் வேர் என்றார் தெய்வ சேக்கிழார் மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமென்றான் அமரகவி.. ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை காண் என்றான்.. அந்தப் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி. அவர்கள் வழியில் பெண்ணுக்குச் சம உரிமை அளித்த சமயவாதி நமது அடிகளார்.

ஒருமுறை திருமொக்கணீசு வரர் திருக்கோயிலில்.. எங்களை எல்லாம் அழைத்து (51 அட்சரம் போல்) தமிழ் வழிபாட்டு நெறியில் 51 மகளிரை ஈடுபடுத்தி அன்றைய தினம் அத்திருக் கோயிலில் வேள்விகளை செய்ய வைத்த பெருமைக்குரியவர் பெரு மதிப்பிற்குரியவர் நமது அடிகளார் அவர்கள்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல் ஒரு நிகழ்வு. திருவாசகம் மற்றும் திருமுறைகளைப் பாடி அதைக் கொண்டு பெண்களை கும்மி அடிக்க வைத்ததாலும் திருமுறைகளை அவ்வப்போது மாற்றி மாற்றி ஒரு பாடலின் முடிவில் வரும் எழுத்துக்கேற்ப அடுத்த திருமுறையைப் பாடி விளையாட்டிலும் திருமுறையை புகுத்தியதாலும், அடியேனுக்கு அடிகளார் அவர்களின் 90 ஆவது அகவையில் அவரது பொற்கரங்களால் தெய்வத்திருமுறை நங்கை என்னும் பட்டத்தை அளிக்க விரும்பினார்கள்.

அவர்கள் விழா குறித்த நாளில் அடியேனுக்கு வேறொரு முக்கிய நிகழ்வுக்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது அதை எப்படிச்

சொல்வது என்று கலங்கிய போது மற்றவர் வாயிலாக அதனை அறிந்த நமது தற்போதைய 25 ஆவது பட்டம் திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் முதலில் அடியேனை அழைத்து அந்தப் பட்டத்தை அடிகளாரின் திருக்கரங்களால் வழங்க வைத்து யாதொரு இடையூறும் இன்றி என்னை மற்றொரு நிகழ்வுக்கு உடனடியாக அனுப்பி வைத்தார்கள் நாயேனையும் ஒரு பொருளாக மதித்து.

எனது இன்னலைக் களைந்த அடிகளார் அவர்களின் பெருந்தன்மையை என்னவென்று சொல்வது. என் வாழ்நாளில் என்னால் மறக்க இயலாது.

அதை நினைக்கின்ற பொழுதும் அந்த படத்தை பார்க்கும் பொழுதும் நான் பிறந்த பிறவிப் பயனையே அடைந்ததாக கருதுகின்றேன். எங்கள் திருக்கோயிலில் நாங்கள் எப்பொழுது விழா என்று அழைத்தாலும் மறுக்காது வந்து நல்லதொரு ஆசி உரையை எங்களுக்கெல்லாம் வழங்கி எங்கள் திருக்கோவில் வழிபாடுகள் குறைவின்றி நடக்க நல்ல பல ஆலோசனைகளை அவ்வப்பொழுது வழங்கி, நாங்கள் புதிதாக வைத்த பிள்ளையாருக்கு முத்தமிழ் பிள்ளையார் என்றும் மற்றும் மக்கள் அனைவரும் தங்களது கரங்களாலேயே திருமுருக்காற்று திருமுழுக்காட்டு செய்து வழி படுவதற்காக வைத்த அழகிய சிவலிங்கத்திற்கு ஓம்கார நாதர் என்ற திருநாமத்தையும் சூட்டி எங்களை எப்பொழுதும் தமிழும் சைவமும் இரு கண்களாக எண்ணி போற்றி வழிபடும்படி வழி நடத்தி வருகின்ற 25ஆவது பட்டம் தற்போதைய சீர் வளர் சீர் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களின் திருவடிகளில் நீளநினைந்து நன்றி பெருக்கோடு வணங்கி மகிழ்கின்றோம்..

எல்லா நன்மைக்கும் அண்ணாமலையாரின் திருவருளும் அடிகளார் அவர்களின் குருவருளுமே காரணம்..

நன்றிகள் பல...
என்றும் சிவப்பணியில்.. அடியேன்..
திருச்சிற்றம்பலம்.

87

திரு. பூங்குன்றன்
தொல்பொருள் ஆய்வுத்துறை

நான் வேலூர் பகுதியில் தொல்லியல் துறையில் பணி புரிந்தவன். 1976களில் பேரூர் தமிழ்க் கல்லூரியில் பி.லிட். படிப்பு நான்கு ஆண்டுகள் இருந்தது. அப்போது இளங்கலை மாணவர்களுக்கு விருப்ப பாடமாக கல்வெட்டு கோயில் கலையும் இருந்தது. அதற்கு செய்முறைத் தேர்வு உண்டு. அந்த செய்முறை தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு மதிப்பெண் போடுவதற்கு தேர்வாளராக நான் கல்லூரிக்குப் பல ஆண்டுகள் வந்துள்ளேன். அப்போது எல்லாம் முதல்வராக பணிபுரிந்த அடிகளாரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. 1982ல் பேரூர் தமிழ்க் கல்லூரியில் ஓலைச் சுவடி பயிற்சிப் பட்டறை நடத்தினார்கள். அப்போதும் பலமுறை பேரூர் தமிழ் கல்லூரிக்கு வந்துள்ளேன். இந்த தொடர்பு இன்று வரை தொடர்ச்சியாக நீடிக்கின்றது. ஒவ்வொரு முறை வரும்போதும் அடிகளார் கல்வெட்டைக் குறித்தும் ஒலைச்சுவடி குறித்தும் கேட்டு அறிந்து கொள்ளுவார்கள்.

நான் வரும்போது எல்லாம் சுக்கு நீர் தருவார்கள். மதியம் உணவு உண்டு செல்லும்படி பணிப்பார்கள். கோயில் வரலாற்றை கல்வெட்டுகள் குறித்து அறிந்து கொள்வதிலும் அதனை ஆவணப்படுத்தி வெளியிட வேண்டும் என்பதிலும் மிக ஆர்வம் உடையவர். எப்போதும் சிரித்த முகத்துடன் புன்னகைத்து ஆசி வழங்கும் தன்மை உடையவர். அடிகளாரை நினைக்கும் போதெல்லாம் அவருடைய சிரித்த முகம் நினைவில் வருகின்றது. பல செய்திகள் அவருக்கு தெரிந்தாலும் நாம் கூறுவதை கேட்டுக் கொள்ளும் பொறுமை வியக்க வைக்கிறது. ஒரு நடமாடும்

பல்கலைக்கழகமாக இருந்தவர் அடிகளார். தவத்திரு, சாந்தலிங்க ராமசாமி அடிகளார் திருவடிகளை போற்றி வணங்கி மகிழ்கிறேன்.

சோறு மணக்கும் மடங்கள் எல்லாம் என்று கூறும் கூற்றிற்கு ஏற்ப சாந்தலிங்கர் திருமடம் வருபவர்கள் ஒவ்வொருவரையும் இன்முகத்துடன் உணவருந்தச் செய்யும் பண்பாட்டை உடையது. சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்ப்பது. தமிழ்க் கல்லூரியில் இளம் முனைவர் முனைவர் பட்டம் எடுக்கும் மாணவர்களை கல்வெட்டு குறித்தும் சிற்பக்கலை குறித்தும் கோயில் வரலாறு குறித்தும் ஆய்வு செய்ய பணித்தவர் நம்முடைய அடிகள் பெருமகனார். அதனால் அது குறித்த தகவல்களை என்னுடன் கலந்துரையாட பலரும் வருவார்கள். தமிழ்க் கல்லூரி மாணவர்கள் மட்டும் இன்றி வெளிநாட்டு மாணவர்களையும் வெளிநாட்டு ஆய்வாளர்களையும் என்னிடத்தில் அடிகளார் அனுப்பி வைத்தார்.

தமிழக வரலாற்றை தமிழக நாகரீகத்தை தமிழக கோயில் கலையை தமிழகக் கல்வெட்டுக்களைப் பலரையும் ஆய்வு செய்ய வைத்தவர். கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாது ஆய்வறிஞர்கள் பலரையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் என்னுடன் பழகும் வாய்ப்பைத் தந்தவர். அதன் காரணமாக கல்வெட்டும் கோயிற் கலையும் தமிழக பண்பாடும் நாகரீகமும் என்ற புத்தகங்கள் வாயிலாக அனைவருக்கும் இதனை அறியச் செய்தார். ஆய்வை செய்து முடித்தவர்கள் அதனை நூலாக வெளியிட்டு அவர்களையும் உலக அரங்கில் அறிமுகப்படுத்திய பெருந்தகை. இந்த நூல்கள் அனைத்து நூலகங்களிலும் இடம் பெற்றது. தமிழ்க் வரலாறு கல்வெட்டு கோயில் அமைப்பு கோயில் கலை சாமானியனும் அறிந்து கொள்ளும் வகையில் பல மாணவர்களை நூல்கள் வெளியிடச் செய்தார். அதன் காரணமாக தமிழர்களுடைய புகழ் தமிழர் உடைய கல்வெட்டு உலகளாவிய நிலையில் சென்றது என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழையும் கலையையும் கல்வெட்டுக்களையும் போற்றி பாதுகாத்த அடிகளார் திருவடிகளை வணங்கி மகிழ்கிறேன்.

88

சிவத்திரு. ப. குமரலிங்கம்

செயலாளர் மணிவாசகர்
அருட்பணி மன்ற அறக்கட்டளை,பேரூர்

எங்கள் ஊர் போடிப்பாளையத்தில் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது வடக்குத் தோட்டம். அங்கு பாலதண்டாயுதபாணி சுவாமி பழனி ஆண்டவர் என்னும் பெயரில் எங்களது முன்னோர்கள் வழிபட்டனர். அத்திருக்கோயில் திருநெறிய தீந் தமிழ் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா செய்வதற்கு திரு.மெய்ஞானம் அவர்களுடன் சிரவை ஆதினம் தவத்திரு சுந்தர சுவாமிகள் அவர்களை சந்திக்கச் சென்றோம். அவர்குடமுழுக்குச் செய்வதற்கு நாள் குறித்து, பேரூர் ஆதினம் 24வது பட்டம் மெய்கண்டார் வழி வழி தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்களுடன் வந்து குடநீராட்டு செய்து தருவதாக உறுதி கூறினார். குறித்த நாளில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ் வழிபாட்டில் பேரூர் அடிகளாரை முதன் முதலில் சந்தித்தேன்.

1980ஆம ஆண்டு நடைபெற்ற அவ்விழாவில் இக்காலத்து கொங்கு மண்டல புண்ணியக் கண்கள் இரண்டு என்று போற்றபெறும் இரு பெரும் ஆதீனங்களும் அவர்களே திருக்குடங்களுக்கு நூல் சுற்றி குண்டம் அமைத்து, ஓலை கீற்றுகள் பின்னி வேள்விச்சாலை அமைத்து மக்களை அவர்களுடன் இணைத்துப் பணி செய்தனர். அன்று முதல் பேரூர் ஆதீனத்தில் இணைந்து பணி செய்யவும், பேரூர் ஆதீனத்தின் திருவடிகளை வணங்கும் பேறும் பெற்றேன். வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் திருவடிகளை வணங்கும் பேறு பெற்றேன்.

திருமடத்திற்குச் சென்று ஆதிகுரு முதல்வர் சாந்தலிங்கர்

குருமூர்த்தியை வணங்கி மகிழ்கிவேன். அவரால் நல்வழி படுத்தப்பட்ட பல்லாயிரம் தொண்டர்களின் அடியேனும் ஒருவன் வெள்ளிங்கிரி மலை அடிவாரத்தில் அருள்தரும் மனோன்மணி தாயார் உடனமர் அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு இரண்டாவது முறை நடைபெற்றபொழுது, சுவாமிகள் தமிழகத்தில் இருந்த தமிழ் வழிபாட்டு அன்பர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் ஓதுவார் மூர்த்திகளையும் அழைத்து குடமுழுக்கு செய்தார்.

அவ்விழாவிற்கு மணிவாசகர் அருட்பணி மன்ற அறக்கட்டளையின் தலைவர், முதுபெரும் புலவர் முனைவர் நா. இரா சென்னியப்பனார் ஐயா அவர்களோடு அடியேனும் சென்று கலந்து கொள்ளும் பேறுப் பெற்றேன். 'அரசியல் ஆயத்தாருக்கும் ,அழிவுறும் காதலற்கும் விரவிய செய்கை தன்னை விளம்புவார் 'பரவிய திருநீற்று அன்பு பாதுகாத்து உயிர்ப்பீர் என்று மெய்ப்பொருள் நாயனார் கூறியதை சேக்கிழார் காட்டியதை போல தமிழர்கள் தம் வழிபாட்டில் தமிழ் மந்திரங்கள் ஓதி வழிபாடுகள் செய்ய வேண்டும் என்பதை எடுத்துக் கூறினார். மணிவாசகர் அருட்பணி மன்ற அறக்கட்டளை சார்பில் கோவை -பாலக்காடு நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தர்மலிங்க மலை திருப்பணிகள் செய்யப்பட்டு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா திருமிகு அருணாச்சலம் ஓதுவார் பொறுப்பில் நடைபெற்றது. அன்று நல்ல மழைப்பொழிந்தது. நனைந்தவாரே மலையின் மீது ஏறி பேரூர் அடிகளார் அவர்கள் குடமுழுக்கு செய்த காட்சி என் நெஞ்சை விட்டு நீங்காத நினைவுகள் ஆகும்.

2000 ஆண்டு கரூர் அமராவதி ஆற்றங்கரையில் அமையப்பெற்ற திருமுக்கூடல் கூடலூர் என்னும் இடத்தில் அருள்மிகு அகந்தீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. அத்திருக்கோவிலில் திருச்சுற்றில் அமையப்பெற்ற அருள்மிகு மணிமுத்தீஸ்வரர் திருக்கோவில் வெள்ளப்பெருக்கால் திருமதில் முதலியன சிதலமடைந்தது. திருக்கோயிலை கரூரில் பகுதியில் இருந்த தொண்டர்களோடு மன்ற அன்பர்களும் இணைந்து திருப்பணிகள் செய்தோம். திருக்குட நன்னீராட்டு பெருவிழா செய்ய திருவருள்

கொட்டியது அப்பொழுது திருமுறைகளில் உயர்வு தெரியாத சிலர் தமிழ் மந்திரங்கள் ஓதி செய்தால் அரசுக்கும் நாட்டுக்கும் தீங்கு வரும் என்று கூறினர். அதற்கு அரசும் துணை நின்றது. சிவனடியார்கள் சிவத்திரு ராஜேஷ், சிவத்திரு முத்து ஆகிய இருவரும் கரூர் பிஎஸ்என்எல் டெலிட் டெலிபோன் டவர் மேல் ஏறி தமிழில் நடக்க அனுமதி கிடைக்க வேண்டும். இல்லையேல் உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்தனர்

ஊர்மக்கள் அனைவரும் அழுத கண்ணீரும், தொழுத கையினராய் இறைவனை வேண்டினர் .தமிழகத்தில் இருந்த தமிழ்ச் சான்றோர்கள் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் ஒன்று கூடி தமிழில் குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று மக்களின் ஆர்வத்தை வலியுறுத்தினர், மாவட்ட ஆட்சியர் உண்மை அறிந்து குடமுழுக்கு செய்ய அனுமதித்தார், தமிழ் மந்திரங்கள் ஓதி மன்றத்தால் குடமுழுக்கு செய்யப்பட்டது.

தமிழ் வழிபாட்டை மக்களுக்கு விழிப்புணர்ச்சியாக கொண்டு செல்ல தெய்வத்தமிழ் வழிபாட்டு மாநாட்டுக்குழு அமைக்கப்பட்டது. குழுவின் சிறப்புமத் தலைவர்களாக இருந்த குன்றக்குடி ஆதீனம் மற்றும் பேரூர் அடிகளார்அவர்கள் அந்தக் குழுவில் வெள்ளக்கோவில் பெரிய புராண செல்வர் பி.கே. குமாரசாமி கவுண்டர், மன்றத் தலைவர் மற்றும் அறிஞர்கள் மாநாட்டை சிறப்பாக அதில் பேரூர்ஆதினத்தின் தலைமையுரை' நாமார்க்கும் குடியல்லோம் என்றும் அப்பர்களைப் போல சிங்கமாய்ச் சீறினார். அதனை தொடர்ந்து ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பெருநகர் தெய்வத்தமிழ் மாநாடு நடைபெற்றது. அதிலேயம் நிறைவரைக்கொடுத்தார்கள்..

33 குண்டங்கள் அமைத்து ஆற்காடு பகுதியில் அமைந்த கங்கை அம்மனுக்கு திருக்குட நன்னீருட்டுப்பெருவிழா மன்றத்தால் நடைபெற்றது.

அதில் அடிக்களார் அவர்கள் தமிழ் மந்திரங்கள் ஓதி குடமுழுக்கு செய்வதால் கிடைக்கக்கூடிய நன்மைகளை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறினார்.

தமிழ் வழிபாடுகள் செய்து வந்த திருமிகு.சக்திவேல் முருகனார் ஐயாவிற்கு, அரசு தமிழ் வழிபாடு செய்ய இடைக்காலத்தடை விதித்தைதக் கண்டு மன்ற தலைவர் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினார். நிறைவாக கோவை மாவட்டத்தில் மாபெரும் உண்ணாவிரதம் நடத்தினார் அவர்கள் சாலையில் அமர்ந்து தமிழில் வழிபாடுகள் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றனர். தருமை திருமடத்தில் ஆதீனம் கருத்துக்கள் ஒன்று கூடி வழிபாடுகள் தமிழில் செய்ய கலந்தாய்வு நடத்தினர்.

அதில் தமிழ் மந்திரங்கள் ஓதி வழிபாடு செய்யலாம் என்னும் கருத்தை குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூராதீனம் 24 வது பட்டம் சாந்தலிங்க இராமசாமி அடிகளாரின் கருத்தை இளவரசாக இருந்து இன்று 25வது பட்டம் குருமா சந்நிதானமாக பொறுப்பேற்று இருக்கும், தவத்திரு சீர் வளர்சீர் மருதாசல அடிகளார் அவர்கள் தீர்மானம் நிறைவேற்றி வழி மொழிந்தார்கள்.

நூற்றாண்டு விழா நாயகர் அவர்கள் வயது முதிர்ச்சியின் காரணத்தால் மருத்துவமனையில் ஓய்விலிருந்தார் அவரை பார்க்க யாருக்கும் அனுமதி இல்லை. அடியேனும் மன்றத் திருத்தொண்டர் திருஜெயகணேஷ் அவர்களும், அடிகளாரைப் பார்க்கச் சென்றோம். இரண்டு நாட்களாக யாரிடமும் பேசவில்லை என்று அடிகளாரின் உதவியாளர் கூறினார். திருமுறைகளில் அடிகளாருக்கு பிடித்தமான பதிகம் திருவையாறு பதிகம் அதில் ஒரு பாடலை நாங்கள் பாடினோம் .அடிகளார் அவர்கள் எழுந்து அமர்ந்த நிலையில் 20 பாடல்கள் கொண்ட அப்பதிகம் முழுமையாக பாடினார்கள். அந்நிலையிலும் அடிகளாரின் நா திருமுறைகளை பாடியது என் நெஞ்சை உருக்கியது.

அடிகளார் அவர்கள் தமிழ் வழிபாடு மட்டுமல்லாமல் சமயப்பணி இலக்கியப் பணி சமுதாய பணி என்று அனைத்துத் துறைகளிலும் திருத் தொண்டுகள் புரிந்த பேரறிஞர் .

தமிழ் வழிபாட்டில் ஞானத்தந்தை என்றும் போற்றப்படுபவர். அடிகளார் நூற்றாண்டு விழா சீரிய முறையில் நடைபெறுகிறது அதில் அவரை பற்றி இணைய வழியில் நெதர்லாந்து தொலைக்காட்சி

நிறுவனமும், பேரூர் தமிழ் கல்லூரியில் முன்னாள் மாணவர்களான மதிப்புமிக்க முனைவர் திருமதி சந்திரா கிருஷ்ணன், முனைவர் திருமதி புவனேஸ்வரி ஆகியோர் இணைய வழியில் நூறு அன்பர்களை கொண்டு பேச வைத்தனர் அதில் அடியேனும் ஒருவன் அவர்களின் செயல் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியது. அதற்கு பேரருள்அருள் செய்த 25 ஆவது குரு மகா சந்நிதானம், அவர்களின் திருவடிகளை வணங்கி போற்றுவோம் நூற்றாண்டு விழா நாயகரின் வழிகாட்டுதல்களை கடைபிடிப்போம் இறை அருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

89

திரு. அரங்க கோபால்
சி.பி.ஐ.ஏ.எஸ். அகாடமி, கோவை.

தனி மனிதன் என்பவன் மரபாலும் சூழலாலும் உருவாக்கப்படுகிறான். An Individual is a combination of Tradition and Environment என்பது சிக்மணட் ஃபராய்டு Sigmund Freud காலத்துக்கு முன்பிருந்தே சொல்லப்படுகின்ற உளவியல் உண்மை. இந்தத் தன்மைகளை உணர்ந்து மனிதனை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மனித வரலாற்றில் ஆன்மீகமும் கல்வியும் பெரும் பங்காற்றி வருகின்றன.

ஆன்மீகப் பணியிலும், அரும் கல்விப்பணியிலும் தமிழ்நாட்டில் குறிப்பாக கோவை மண்ணில் பேரூர் மடமும் கௌமார மடாலயம் ஆற்றுகின்ற பணிகள் மகத்தானவை. மனிதர்களை அவர்கள் போக்கிலே விட்டு விடாமல் மேன்மையான சூழலை உருவாக்கி அவர்களை பக்குவப்படுத்த வேண்டிய பொறுப்பு அறிஞர்களின் கடமை. அந்த வகையில் அறிவியல், ஆன்மீகம், சமூகவியல், அரசியல் போன்ற துறைகளின் பங்களிப்பு மானுட வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன. குறிப்பாக தன் பிறப்பின் நோக்கத்தை அறிந்து மனிதர்கள் தங்கள் பிறப்பிற்கும் நாட்டிற்கும் பயனுள்ள வகையிலே வாழ்வது பெரும் பொறுப்புணர்வு ஆகும்.

மன்னிப்பு விடை Many people die when their music isstill in their heads என்பது பெரிய வரலாற்று உண்மை. அதாவது பல மனிதர்கள் குறிப்பாக இளைஞர்கள் தங்கள் அறிவை , திறமையை தனக்கும் சமூகத்திற்கும் பயன்படுத்தாமலேயே பூமியை விட்டுப் பிரிந்து விடுகிறார்கள்

நீதி உயர்ந்த மதி கல்வி அன்பு நிறைய உடையவர்கள் மேலோர் என்று பாப்பா பாட்டிலே குழந்தைகள் மனதிலே பதிய வைக்கின்றான் மகாகவி. இந்த மா பணியை நம்முடைய திருமடங்கள் என்பது நமக்குப் பெருமை. பெரும் மகிழ்வு. அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி அகத்திலே அன்பினோர் வெள்ளம் பொறிகளின் மீது தனி அரசாணை கொண்டு இளைஞர்கள் இயங்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அடிகள் பெருமக்களில் பேரவா.

குறிப்பாக நம் தாய் மொழியின் ஒவ்வொரு தலைமுறையும் முறையாக அறிந்து கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஒப்பற்ற பணியை பேரூர் தமிழ் கல்லூரி ஒரு தவ நோன்பாகவே தொடர்ந்து செய்து வருகிறது. கல்விதான் பெரிய தீர்வு, உயர்வின் வெளிச்சம் என்பதை உணர்ந்த நம் மடத்தின் பணிகள் மிகவும் போற்றத்தக்கவை ஏழை எளிய மக்களும் கல்விகற்க வேண்டும் என்பதற்காக வசதி படைத்து அறச்சிந்தனை கொண்டசெல்வந்தர்களை அணுகி மலைவாழ் மக்களில் சில குடும்பங்களை தத்தெடுக்கச் செய்து வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்ற. மேன்மையான பணிகளை நம்முடைய தமிழ் கல்லூரி செய்து வருவது மிக மிக அரிதான செயல்.

என்னரும் தமிழ்நாட்டின் கண். எல்லோரும் கல்வி கற்று பன்னரும் கலை ஞானத்தால் அன்பால் உயர்ந்து விளங்க வேண்டும் என்பது அடிகள் பெருமக்களின் அரும்பெரும் திட்டம். சுருக்கமாகச் சொன்னால்.... மானுட சமூகம் நாகரீகமான, அன்பான, ஆரோக்கியமான, அமைதியான வாழ்க்கை வாழ்ந்திட நம்முடைய திருமடங்கள் செய்யும் பணியை மனதாரப் போற்றுவோம். மகிழ்வோம்.

தமிழ் ஆசிரியர்கள் மற்ற சக ஆசிரியர்களைப் போல பணி அங்கீகாரமும் பதவி உயர்வும் பெற்று பள்ளிகளிலே தலைமை ஆசிரியர்களாக கல்லூரிகளிலே முதல்வர்களாக பொறுப்பேற்பதற்கு ஆற்றிய பணி மகத்தானது.

90

முனைவர் அ. ரேணுகா தேவி
புதுப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

பேரூர் சாந்தலிங்கத் திருமடம் கொங்கு நாட்டில் தனிப் பெருமை வாய்ந்த மடம். இதன் 24 ஆம் குரு மகா சன்னிதானங்கள் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள். அவர்களை சூலூரில் திருப்பொன்னீலன் ஐயா அவர்கள் நடத்திய கருத்தரங்கில் சந்திக்கும் பேறு பெற்றேன். அன்று முதல் இன்று வரை திருமடத்திற்கும் எனக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும் சேய்க்கும் உள்ள தொடர்பை போன்றது. அடிகளார் அவர்கள் கருணை பொழியும் முகம் நினைவில் நின்று அருளைத் தருவது. அடிகளாரைப் பார்க்கும் பொழுதே அன்பு கருணை நம் நினைவில் வருகின்றது.

தமிழ்க் கல்லூரியின் வாயிலாக தமிழை வளர்த்த வளர்த்து வருகின்ற தன்மையாக திருமடம் திகழ்கின்றது. இங்கு படித்தவர்கள் உலகளாவிய நிலையில் தமிழை வளர்த்து வருவது பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்த்து வரும் அடிகளாரை அவர்தம் நூற்றாண்டு விழாவில் சிந்திப்பதில் வணங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அடிகளார் இன்னார் இனியர் என்று இல்லாமல் அங்கு வருகின்ற ஒவ்வொருவரையும் உணவு உண்டு செல்லும்படி பணிப்பது நேரடியாக கண்டு மகிழ்ந்த காட்சி ஆகும்.

இன்றைய குரு மகா சன்னிதானங்கள் கல்விப் பணி மட்டுமன்றி மருத்துவப் பணியையும் ஆற்றி வருவது மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று வாழும் தன்மையை காட்டுகிறது.

கொங்கு நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி உலகளாவிய நிலையில் சைவத்தை தமிழை அன்பை ஆன்மீகத்தை வளர்க்கும் தன்மையில் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அடிகளாரை நினைக்கின்ற பொழுது அவரது கருணை பொழியும் முகம் நினைவில் வருகின்றது.

எனக்கு சைவத்தின் மீது தமிழின் மீது அன்பு காதல் பக்தி வர அடிகளார் ஒரு காரணமாக அமைந்தார் என்பதை இந்த இடத்தில் பெரும் மகிழ்ச்சி உடன் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரி முதல்வராக தலைவராக இருந்து தமிழை வளர்த்தவர். தமிழை வளர்க்க அரும்பாடு பட்டவர். ஆட்சி குழு உறுப்பினராக இருந்து பல சீரிய பணியாற்றியவர். நூற்றாண்டு விழா காணும் நாயகரை மனமெய் மொழிகளால் வணங்கி மகிழ்கிறேன்.

91

மயிலம் முனைவர் **வேல். கார்த்திகேயன்**
இணைப்பேராசிரியர் – தமிழ்த்துறை
காஞ்சி மாமுனிவர் அரசினர் பட்ட மேற்படிப்பு
மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி – 605 008.

இறைவனின் திருப்புகழை, உலக மக்களுக்கு எடுத்துச்செல்லும் பணியில் தத்தம் சமய வழியில் நின்று ஆதினங்கள் பெரும்பங்கினை ஆற்றியுள்ளது. தமிழகத்தில் சமய ஆதினங்கள் பல உண்டு. அவற்றுள் வீர சைவ ஆதினமும் ஒன்றாகும். மயிலம் பொம்மபுர ஆதின மடம். கும்பகோண வீர சைவ மடம். துறைசை ஆதினம் என்னும் வரிசையில் பேரூர் ஆதின மடமும் ஒரு மிகப்பெரிய இடத்தைப் பெற்றுள்ளது. முற்காலத்தில் பேரூர் பெரிய ஊராகவும் கோயம்புத்தூர் சிறிய ஊராகவும் இருந்தது. 'பேரூர் நாட்டுக் கோவன்புதூர்' என்ற கல்வெட்டுத் தொடரால் பேரூரின் பழமையும் பெருமையும் அறியமுடிகிறது.

பேரூரின் சிறப்பு

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரத்திலும் பேரூர் குறிப்பிட்டுள்ளது. சுந்தரர் தமது தேவாரத்தில் தில்லைச் சிதம்பரத்தைக் குறித்துப் பாடும்போது, 'பேரூர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே' என்று பாடுகின்றார். பேரூரில் எழுந்தருளும் பெருமானை, சிதம்பரத்திலே கண்டு அருளப்பெற்றோம் என்கிறார். திருவாவடுதுறை ஆதினத்தைச் சார்ந்த கச்சியப்ப முனிவர். பேரூரைப் போற்றிப் பேரூர்ப்புராணம் பாடியுள்ளார் அப்பேரூர்ப்புராணத்தில் பேரூரில் ஓடும் நொய்யலாறு, பழங்காலத்தில்

காஞ்சிமாநதி, காஞ்சியாறு என்றும் பழங்கால வரலாற்றை எடுத்துரைக்கும் சங்கஇலக்கியங்களிலும் இடம்பெறு வதனைக் கண்டு உணரலாம். இவ்வாற்றில் இட்ட எலும்புகள், நாளடைவில் கல்லாகிவிடும் என்பதும் புராண செய்தியாம்.

துறையூர் ஆதினத்தின் நிறுவனர் ஆதிசிவப்பிரகாச சுவாமிகளின் சிறந்த மாணவராகச் சாந்தலிங்கர் திகழ்ந்தார். இவரின் நற்குண, நற்செயல் மற்றும் ஆன்ம பக்குவ நிலையை அறிந்து ஞானோபதேசமும் வழங்கினார். பின் உபதேசம் பெற்றபின் சாந்தலிங்க அடிகள் பேரூரில் ஒரு மடம் அமைத்துக்கொண்டு தவமியற்றி புரந்தருளி வந்தார்.

என, வீரசைவ சந்தான குருபரம்பரைத் துதியாரல் நன்கறியப்பெறும்.

சாந்தலிங்க அடிகளார், சிவப்பிரகாச சுவாமிகளின் நட்பு:

சாந்தலிங்க அடிகளார், நாடெங்கும் புகழொடு விளங்கிய மயிலம் பொம்மபுர ஆதினம் சிவஞானபாலய சுவாமிகளை நேரில் சென்று கண்டுவர மயிலம் புறப்பட்ட போது வழியில் துறைமங்கலம் சிவப்பிரகாசரைக் கண்டார். இருவருக்கும் நட்பு உண்டாயிற்று. அப்பொழுது தாம் மயிலம் பொம்மபுர ஆதின சிவஞான பாலய சுவாமிகளைச் சந்திக்க இருப்பதால் தாங்கள் அவர்மீது ஒரு பாடல் ஸிஹூவீஸி வேண்டினார். அதற்குச் சிவப்பிரகாசர் நாம் இறைவனைத்தவிர மானிடர்களைப் (நரர்களைப்) பாடும் வழக்கம் இல்லை என்றார். நடந்துவந்த களைப்பாலும், இரவுப் பொழுது ஆனதாலும், புத்துப்பட்டு என்னும் ஊரில் தூங்கினார்கள். அன்றிரவு சிவப்பிரகாசர் கனவில் சில விடுபூக்களைக்கொடுத்து மாலையாகத் தொடுத்துத்தருக என்னும் நிலையில் கனவுகண்டார். காலையில் தாம்கண்ட கனவினைச் சாந்தலிங்கரிடம் கூற, முருகப்பெருமானே மயில்வாகனத்தில் எழுந்தருளி நேரில் வந்து சிவஞானி வேறல்லர் என்பதை அறிவுறுத்துவதுதான் இந்த வெளிப்பாடு. உடனே சிவப்பிரகாசர் சிவஞான பாலய தேசிகர்மீது தம் நெஞ்சைத் தூதாக விடுத்து. நெஞ்சுவிடுதூது என்னும் நூலைச் செய்தருளினார்.

பொம்மபுர சுவாமிகளின் அருளாசியோடு சாந்தலிங்க அடிகளார், சிவப்பிரகாசரின் தங்கை ஞானாம்பிகையை மணம் முடித்தார். இல்லற ஞானியாகச் சாந்தலிங்கர் சிறந்து விளங்கினார். இல்லற வாழ்க்கையை மேற்கொண்ட போதிலும், தாமரை இலை மருவுநீர்போல ஒழுகினார். இல்லற ஞானியாக சிறந்து விளங்கி னாலும், துறவை வற்புறுத்தி நூல்செய்த நாமே துறவறம் பூணாமல் இருப்பது சரியன்று என்று எண்ணினார். எனவே, தனது துணைவியாரை அவரது தமையனார் வேலையரின் ஆதரவில் தங்கியிருக்குமாறு புறத்துறவும் பூண்டார். (அகத்துறவு-புறத்துறவு)

அடிகளார் படைத்த நூல்கள்

அடிகளார் புறத்துறவு பூண்டு சமயநெறி குறித்தும் ஆன்ம போதனைகளையும் மக்களுக்கு எடுத்துரைத்தார். அவ்வகையில் ஞான நெறிநின்ற நிலையில் நான்கு நூல்களைப் படைத்துள்ளார். இந்த நான்கு என்ற எண்ணைப் பற்றிச் சிந்திக்கும்போது அறம் பொருள் இன்பம் வீடு போல சாந்தலிங்கர் நான்கு நூல்களை வழங்கியிருக்கிறார் போலும். குறிப்பாக, அவை சரியை,கிரியை, யோகம், ஞானம் போல் சிறந்து விளங்குகின்றன.

1. கொலைமறுத்தல், 2. வைராக்கிய சதகம், 3. வைராக்கிய தீபம், 4. அவிரோத உந்தியார். இந்த நான்கு நூல்கள் கூறக்கூடிய செய்திகள் முறையே சீவகாருண்யம், ஈசுவர பக்தி, பாச வைராக்கியம், பிரம்மஞானம் என்பனவாம்.

இந்நான்கு நூல்களுக்குமே உரையியற்றியுள்ளார். இவர் திருப்போரூர் அடிகளாரிடமே சிதம்பர சுவாமிகள் மாணவர்கள் இடையே பாடங்கேட்டவர். இந்நூல்கள் அவர்காலத்திலேயே சிறந்த புகழினைப் பெற்றது எனலாம்.

அடிகளாரின் சிவப்பேறு

சிறந்த ஞானப்பரம்பரைகள் உருவாகக் காரணமாகத் திகழ்ந்த விளங்கிய சாந்தலிங்க அடிகளார் அவர்கள். பேரூர் மடாலயத்திலேயே ஒரு மாசி நன்னாளில் சிவப்பேறு அடைந்தார்.

அடிகளாரின் காலத்திற்குப் பின் திருமட நிலை

சாந்தலிங்க அடிகளாரின் காலத்திற்குப்பின், மடத்தை சரிவர பராமரிக்காத காரணத்தினால், புதர்களால் மடம் மறைந்து காடாக காட்சியளித்தது. ஒருமுறை இவரது சமாதியைக் கண்ட நாச்சிமுத்து சுவாமிகள், இங்கு செல்ல ஒற்றையடி பாதை ஒன்றை அமைத்து நாள்தோறும் பூசை செய்துவந்தார்.

அப்போது ஒருநாள், சாந்தலிங்க அடிகளார் கோயம்புத்தூர் காவல் ஆய்வாளர் பொன்னுரங்க முதலியாரின் கனவில் தோன்றி, மடத்தையும் சமாதியையும் பாதுகாக்கும்படி கூறினார். அதன்படி தம்முடைய பொருள்உதவியால், அவ்விடத்தைச் சுத்தம்செய்து கிணற்றையும் வெட்டிக் கொடுத்தார். அதனை நாச்சிமுத்து சுவாமிகள் பேணி வந்தார்.

இவர் பின்வந்த இராமலிங்க சுவாமிகள். அன்பர்களின் உதவியால் முன்மண்டபத்தையும் திருமடத்தையும் கட்டினார். தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள், மூன்றாவது மண்டபத்தைக் கட்டினார். தவத்திரு மௌன சுவாமிகள், நாள்தோறும் குறிப்பிட்ட தொகை நன்கொடை கிடைத்தாலன்றி, உணவு உட்கொள்வதில்லை என்ற வைராக்கியத்துடன் இருந்து, பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவில் அருட் பணிகளைச் செய்தார். தவத்திரு மாணிக்கசுவாமிகள் இவர் அருகில் உள்ள ஊர்களுக்குச் சென்று நன்கொடை பெற்று, மடத்திருப்பணிகளைச் செய்தார். இவர் காலத்தில் மாசிமகந்தோறும் குருபூசை மூன்றுநாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

1916 ஆம் ஆண்டு சத் விதயா சன்மார்க்க சங்கத்தை நிறுவினார். தவத்திரு ஆறுமுக சுவாமிகள் இராமசாமி அடிகள், மயிலம் 1947ல் தமிழ்க்கல்லூரி மாணவரானார். அப்பொழுதே அவர் இளைய பட்டத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தமிழின் மேல் கொண்ட ஈர்ப்பாலும், ஈடுபாட்டாலும், தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவ எண்ணி, 24-6-1953 இல் தமிழ்க்கல்லூரியைத் தொடங்கினார். இக்கல்லூரியில் பல பழமையான நூல்களையும், பனை ஓலைச் சுவடிகளையும் கொண்ட நூலகம் இன்றும் உள்ளது.

தவத்திரு மருதாசல அடிகளார்

இற்றைநாளில் பேரூர் ஆதீனத்தின் மடாதிபதியாக விளங்கும் 1961 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் நாள் கார்த்திகை நாளில் முதலி பாளையம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர்தம் பெற்றோர். சிவ.வேலுசாமி கவுண்டர். சுப்பாத்தாள். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய இவர் சாந்தலிங்கரின் மெய்யியல் கோட்பாடுகள் என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்தினைக் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின்வாயிலாகப் பெற்றவர். உலகளாவிய நிலையில் தமிழ்ப்பணிகள். சமயப்பணிகள், சமுதாயப்பணிகள் எனப் பலநிலைகளில் நற்பெயரோடும், புகழோடும் விளங்கும் நிலையில் இன்றைய பேரூர் ஆதீனம் சிறந்து விளங்குகிறது.

92

திரு. **ஜெ. கமலநாதன்** இ.ஒ.ப.
முன்னாள் இயக்குநர் சென்னை வானொலி,
கோவை.

நமது மேலை சிதம்பரம் என்று அழைக்கப்படும் பேரூர் திருமடத்தின் செயல்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையவன் நான். போற்றுதலுக்கும் வணங்குதலுக்கும் உரிய பேரூர் திருமண ஆதீனமாக விளங்கிய தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் 1000க்கும் மேற்பட்ட நாட்கள் கோவை வானொலி நிலையத்திற்கு வருகை தந்து, ஆன்மீக பேருரைகள், சான்றோர் சிந்தனை, விழா நாட்களில் ஆசியுரை ஆகியன வழங்கி உள்ளார்கள். நானும் என் மனைவி திரிபுரசுந்தரியும் கிட்டத்தட்ட 28 ஆண்டுகள் கோவை வானொலி தமிழ் இலக்கியப் பிரிவு நிகழ்ச்சிகளை இணைந்து தயாரித்து வழங்கி வந்தோம்.. நாங்கள் இருவரும் சுவாமிகள் நிலையத்துக்கு வரும்போது உடனிருந்து பணிந்து பாதார விந்தங்களை தொட்டு வணங்கி அவரது உரைகளை பதிவு செய்து அனுப்பி வைப்போம்.

கயிலை குருமணி, குரு மகா சந்நிதானம், அருளாளர், திருக்கயிலாய பரம்பரை 24 ஆவது பட்டம் சுவாமிகளின் நூற்றாண்டு சிறப்பு மலரில் எனது மனதில் நீங்கா இடம் பெற்ற சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் பெருமைகளை எடுத்துச் சொல்ல கிடைத்த இவ்வாய்ப்புக்காக பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அவரது எளிமை நமக்கு வியப்பை ஏற்படுத்தக் கூடியது. ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒருசேர நன்மதிப்புடன் நடத்துவார்கள். கற்றவர்களையும், கல்லாதவரையும்,

கிராமத்தவரையும், நகரத்தவரையும், ஏழைகளையும், செல்வந்தர்களையும் ஒன்று போல கருதி பழகுவார்கள் ஆசி வழங்குவார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அவர் போதித்த ஒரே அறிவுரை 'தமிழும் பக்தியும் என்றும் நம்முடன் இருக்க வேண்டும்' என்பதுதான்.

'கும்பாபிஷேகம்' என்ற பெயரில் நடைபெற்று வந்த ஆலய நிகழ்வை 'திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா'என்று அழைக்க பணிந்து அது இன்று தமிழ்நாட்டின் பரவி கிடக்கிறது. கொங்கு மண்டலத்தில் இருக்கும் எல்லா கோயில்களில் 'திருக்குட நன்னீராட்டு பெருவிழாக்களும்' பேரூர் சுவாமிகள் தலைமையில் தான் நடத்தப்படுவது வழக்கம். அவர் ஒரு தமிழ் தொண்டர்.

தமிழை எங்கும் எதிலும் முதன்மைப்படுத்தியவர் அவரிடம் பேசும் போது நான் கவனமாக ஆங்கில சொற்களையும் வடமொழிச் சொற்களையும் தவிர்த்து உரையாடுவேன் இதுவே பின்னாளில் எனது சொற்பொழிவில் பாணியும் ஆனது. எழுதும் போது முடிந்த வரை இந்த முறையில் எழுதும் நடைமுறையை கையாளத் தொடங்கினேன்.

நமது போற்றுதலுக்குரிய சாந்தலிங்க ராமசாமி அடிகளார் சாதி, இன வேறுபாடுகளை நீக்க பாடுபட்டவர். ஏழை எளிய மாணவர்கலை மடத்தில் தங்க வைத்து கல்வியும் ஆன்மீக பயிற்சிகளும் சமய நல்லுணர்வு கல்வியும் தந்து ஒழுங்குப்படுத்தி உயரச் செய்தார்கள். ஆயிரக்கணக்கான ஏழை மாணவர்களை மடத்திலேயே தங்க வைத்து கட்டணம் இன்றி மூன்று வேளை உணவும் கல்வியும் தந்து மேன்மைப்படுத்தினார்கள் என்றால் அப்பெருமையை எங்ஙனம் விவரிப்பது? இதனை எல்லாம் அவர் விளம்பரப்படுத்திக் கொண்டதில்லை என்பது அவரது எளிமையின் சிறப்பாகும். அந்த மாணவர்கள் எல்லாம் நல்ல வேலை வாய்ப்பு பெற்று உலகெங்கும் பல்வேறு நாடுகளில் உயர்ந்த பதவியில் இருந்த வண்ணம் அவரது புகழை பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்பது நிறைய பேருக்கு தெரியாது.

பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தே கிராமப்புற மகளிர் கல்லூரி படிப்பு வரை எளிய கட்டணங்களுடன் பயில வழி வகுத்தவர் நமது பேரூர் சுவாமிகளே. அவர்கள் மனங்களில் தன்னம்பிக்கை விதைகளைத் தூவி வாழ்வில் உயர பேரூர்த் தமிழ் மற்றும் அறிவியல் கல்லூரி துணை நின்றது. இப்போதும் துணை நிற்கிறது.

'தமிழ்த்துறவி என்று கொங்கு மண்டலத்து மக்களால் போற்றப்படும் பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகள் தமிழுக்கும் துறவுக்கும் பெருமை சேர்த்தவர் ஆவார். 25 ஆம் பட்டம் பேரூர் ஆதினம் மருதாசல அடிகள் அவர்கள் இன்று சிறப்பாக ஆன்மீகப் பணிகளையும் தமிழ் பணிகளையும் செய்து வருகிறார்கள். பேரூர் ஆதீனம் என்றாலே' கொங்கு மண்டலத்தின் பக்தித் தலைமையகம்' என்று புகழப்படும் அளவுக்கு மருதாசல அடிகளாரின் ஆன்மீகப் பணிகள் தொடர்வது சிறப்புக்கும் பாராட்டுதலுக்கும் உரியது.

இறைபணி, தமிழ் பணி, சமுதாயப்பணி, கல்விப் பணி, ஆகிய நான்கு தளங்களிலும் சொல்லரிய செயல்பாடுகளை நிகழ்த்தியவர் நமது பேரூர் சாந்தலிங்க ராமசாமி அடிகள் என்று சொன்னால் அதில் மிகையேதுமில்லை.

அவர் சைவமும் தமிழும் ஒன்று என்ற கருத்தை முன்வைத்து அதனை செயல்படுத்தி காட்டியவர். என்பதை தமிழ் உலகம் மறுக்க இயலாது. சைவ சமய நெறிகளில் செந்தமிழ் வளர்த்த வீரத் துறவி அவர். நானும் என் மனைவி திரிபுரசுந்தரியும் பேரூர் ஆதீன குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் பெருமை கொள்கிறோம். சுவாமிகளின் சிந்தனையை எந்நாளும் நிலை நிறுத்துவோம்.

93

பத்மா ஆறுமுகம்

7, இராமானந்த நகர்
சரவணம்பட்டி, கோவை - 641035

பேரூர் தவத்திரு குரு மகா சன்னிதான கயிலை குருமணி சீர் முதுமுனைவர் சாந்தலிங்க ராமசாமி அடிகள் அவர்கள் கருவிலே திருவுடையவர் என்ற வாக்கின் வண்ணம் அவதாரமாக இப்புவியில் உதித்தவர். கொங்கு மண்டலத்தில் தனித்த அடையாளமாக சைவத்தையும் தமிழையும் ஓங்கச் செய்து வருகின்ற அருள் மட த்திருமடமாக திகழ்ந்து வருவது நம் பேரூர் ஆதின மடமாகும். நம் அடிகள் பெருமான் எளிமையும், உயர் பண்பு நலமும், பக்திநலமும், இன்சொல் திறனும் மிக்கவர். மனிதநேயம் உடைய கல்விப் பணியையும் சைவத்தையும் சமய நல்லிணக்கத்தையும் பேணியவர்.

சமயநெறிக்கும் தமிழ் பணிக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர், திருமுறை பாடல்களை தம் உயிர் மூச்சாகக் கொண்டு விளங்கியவர், சிதிலமடைந்து இருந்த கோவில்களுக்கு அடியார்களுடன் சென்று அவற்றை திருப்பணி செய்து தமிழில் திருக்குட நீராட்டும் செய்து நாள்தோறும், வழிபாடு முறையாக நிகழ ஆவண செய்தார். கல்வி மட்டும் மாணாக்கரின் அறிவு நிலைக்கு போதாது என்று உணர்ந்து, பல நிகழ்வுகளுக்கு தாம் செல்லும்போது மாணாக்கர்களையும் உடன் அழைத்துச் சென்று, அங்குள்ள பழமையான ஆலயங்கள், நூலகங்கள், ஆவண காப்பகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றின் சிறப்புகளை அவர்கள் உணரும்படி கூறுவார்கள். அவ்வாறு அவரிடம் பாடம் கேட்டு அனுபவம் பெற்ற மாணவர்கள் தற்போது உலகில் புகழ்பெற்று தமிழ் அறிஞர்கள்

ஆகவும், கவிஞர்களாகவும் ,தமிழ் சங்கங்களின் தலைவர்களாகவும் ,கல்லூரி பேராசிரியர்கள் ஆகவும், முதல்வர்கள் ஆகவும் என பல பணிகளில் பணியாற்றி உயர் நிலையில் இருக்கிறார்கள். தமிழில் பயின்ற மாணவர்களின் நலன் கருதி அரசு சார்பு உரிமைகளை குன்றக்குடி ஆதீனத்துடன் இணைந்து போராடி வெற்றி பெற்று தந்தவர். பேரூர் ஆதீனத்தின் தமிழ் முனைவரான நம் அடிகள்.

தமிழில் வாழ்வியல் அறிவியல் நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சிறந்த நூல்களை படைத்ததுடன் பலருக்கும் அதில் பயிற்சியையும் அளித்து ,தமிழ் நெறி சிறக்க வழி செய்தவர்கள் பேரூர் ஆதீனம் .பேரூர் ஆதீனத்தின் வழியாக நிறைய நூல்கள் வெளி வரக் காரணமாக இருந்தவர்கள் .'சிவ சாந்தலிங்கர்மீ என்னும் திங்கள் இதழ் இன்றும் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது. மலைவாழ் மக்களுக்கும், ஏழை எளியோருக்கும் உணவு ,உடை ,கல்வி என உதவிகள் செய்த அருள் உள்ளம் கொண்டவர் .சாதி, சமய, பால் இன வேறுபாடு இன்றி அனைவரும் கருவறை முதல் மடப்பள்ளி வரை செல்ல வாய்ப்பு அளித்த சமத்துவ கொள்கையாளர் .எளிய உணவு முறைகளை கடைப்பிடிப்பதில் வைராக்கியமாக இருந்தார். பெண்கள் முன்னேற்றத்திற்கும் பெரிதும் பாடுபட்டவர். அவர் விரும்பியபடி தற்போது நம்மை வழிகாட்டிக் கொண்டிருக்கும் சீர் வளர் சீர் மருதாசல அடிகளார் அவர்கள் சென்ற ஆண்டு திருக்குட நன்னீராட்டு விழாவில் சாலையில் பெண்களைக் கொண்டு வேள்வி செய்தார்கள். மருத்துவமனை ஒன்றை சாமிகளின் பெயரில் நிறுவி பலரும் பயனடையும்படி பணி செய்து வருகிறார்கள்.

அடிகளாருடன் எங்கள் தொடர்பு

என் தாத்தா அவர்கள் செந்தாம் பாளையம் செங்கோட்டை என்ற இடத்தில் ஒரு மாரியம்மன் கோவிலை கட்டி இருந்தார்கள். அந்த கோவிலுக்கு திருக்குட நன்னீராட்டு விழா செய்ய பேரூரடிகள் பெருமானையும், கௌமார மடம் தவத்திரு சுந்தரசாமி அடிகளார் அவர்களையும் அழைத்தார்கள். அவர்களும் ஒப்புக்கொண்டு வழுக்குப் பாறை சுவாமி என்று அழைக்கும் முத்துசாமி அடிகளாரை

கொண்டு, திருநெறிய தமிழ் முறையில் திருக்குட நன்னீராட்டை சிறப்பாக செய்து கொடுத்தார்கள் .அந்த கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை திங்கள் முதல் நாள் அன்று அருகிலுள்ள, விவசாயச் சான்றோர்களும், பொதுமக்களும் ஒன்று கூடி பொங்கல் வைத்து அக்னி கரகம் எடுத்து மிகச் சிறப்பாக கொண்டாடி வருகிறார்கள். இந்தகோவிலில் பலியிடுவதில்லை.

மார்கழி மாதத்தில் காலை நான்கு மணிக்கு எழுந்து, குளிர்ந்த நீரில் நீராடி விட்டு, சாந்தலிங்கர் சன்னதியில் வழிபாடு செய்துவிட்டு, சுக்குநீர் அருந்திவிட்டு, மரகதம் அக்காவுடன் வீதி உலாவாகப் பெரிய கோவில் என்று அழைக்கப்படும் பச்சைநாயகி உடனமர் பட்டீஸ்வரர் கோவில் சென்று, வழிபட்டு, முருகன் சன்னதி செல்வோம். அங்கு சண்முகசுந்தரம் ஐயா அவர்கள் முருகன் பாடல்களை தமிழில் பாடுவார்கள். ஒரு பாடலில் இறுதி இரண்டு வரிகள் கல்வியும் செல்வமும் கனிந்த அருள் போற்றி! எங்கள் பால் அருள் புரி என்றும் போற்றி! போற்றி! என்று பாடும் பொழுது முருகன் நேரில் வந்து தோன்றி அருள் புரியும்படி இனிமையாக இருக்கும்.

கல்லூரியில் படித்து முடித்து 1976 இல் எங்கள் திருமண கௌமார மடாலயம் மடத்தில் நடைபெற்றது. பேரூர் அடிகளார், கௌமார அடிகள் மகிலம் அடிகளார், குன்றக்குடி அடிகளார், தொழிலதிபர் மகாலிங்கம் ஐயா, ரூட்ஸ் நிறுவன கிருஷ்ணசாமி ஐயா, கே. ஜி கோவிந்தசாமி ஐயா என பல சான்றோர்கள் முன்னிலையில் திரு சுகிசிவம் ஐயா அவர்கள் சொற்பொழிவுடன் நடைபெற்றது.

நாங்கள் சென்னையில் வசித்த பொழுது என் கணவர் தெய்வீகப் பேரவையில் அர்ச்சக மேலாளராகவும், நான் பி. டி. சி மாரா மழலையர் பள்ளியில் ஆசிரியர்களுக்கு பொறுப்பாளராகவும் இருந்தேன். சாமிகள் தெய்வீக பேரவைக்கு வரும்பொழுது எங்கள் வீட்டில் இருந்து பகல் உணவை தயாரித்துக் கொடுத்து அனுப்புவோம். சாமிகளும் எங்களை பாராட்டுவார்கள். எங்கள் மகளின் திருமணம் நடைபெற்ற பொழுது சாமியின் முன்னிலையில் அனைத்து மட ஆதீனங்களும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். ஒரு துறவியர் மாநாடு போல

இருந்தது. அது வந்திருந்த உறவினர் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

என் கணவர் பழ.தரும. ஆறுமுகம் பெரியசாமிகளிடம் வைத்திருந்த அன்பும் மரியாதையும் சொல்ல வார்த்தை இல்லை. குன்றக்குடி ஆதீனமும், நமது அடிகளும் பரிந்துரை செய்து பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவிலில் அறங்காவலர் குழுத் தலைவராகப் பணி செய்தார். தமிழ் க்கல்லூரியில் செயலாளராகவும், பணியாற்றினார். கல்லூரியில் எந்த விழாவானாலும் உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் கலந்து கொள்வார்.

என்னைக் கல்லூரிக்கு அனுப்பும்போது, எனது பெற்றோர்கள் பதவிக்காக படிக்க வைக்கவில்லை. பாதுகாப்பான இடத்தில் நல்ல பண்புடன் வளர வேண்டும் என்பதற்காகவே இக்கல்லூரியை தேர்வு செய்தனர் போலும். சாமிகள் சாடி வயலில் இருக்கும் பொழுது நாங்கள் சென்று பார்த்து வருவோம். நாங்கள் சாமிகளிடம் விடைபெறும் பொழுது சாமிகள் எங்களுக்கு நெல்லிக்கனியையும் காலிப்பூ (காலிபிளவர்) கொடுத்து அனுப்புவார்கள். ஒரு தாய் வீட்டில் இருந்து சீதனம் பெறுவது போல் மகிழ்ச்சி அடைவோம். எனவே நமது சாமிகள் ஞானம் போற்று ஞானத்தந்தை மட்டும் அல்ல. அவர் நம் அனைவருக்கும் 'தாயுமானவர் 'என்று கூறி இப்பொழுது உள்ள 25 ஆம் பட்டம் சீர் வளர்சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், சீர் வளர்சீர் தவத்திருகுன்றக்குடி அடிகளார், சீர்வளர்சீர் குமரகுருபர அடிகளார், தென்சேரி மடம் சீர் வளர்சீர் முத்துசிவராமசாமி அடிகளார், பழனி ஆதீனம், சீர் வளர்சீர் சண்முகம் அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம், சீர் வளர்சீர் சிவஞானபாலய சுவாமிகள் இவர்களின் வழிகாட்டுதலின்படி நல்வழியில், இருப்பதைக் கொண்டு மற்றவர்களுக்கு உதவியும், அன்பு செலுத்தியும், நலமுடன் வாழ்வோமாக அடிகள் திருவடிகள் போற்றி! போற்றி!

94

இரா. நாகராாசன் M.Sc., M.A., B.ED.,
முதல்வர், ஸ்ரீ பாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,
கணேசபுரம், கோவை - 641 107

வாழ்ந்திருப்போம் அடிகள் வழியில் நின்று!

தோன்றின் புகழோடு தோன்றுக என்பது வான்மறை வள்ளுவம் "SOME ARE BORN GREAT, SOME ACHIEVE GREATNESS AND GREATNESS IS. THRUST UPON SOME PEOPLE" என்பதை ஷேக்ஸ்பியர் வாக்கு, கொங்கு நாட்டில் முதலிபாளையம் என்ற சிற்றூரில் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்தேன் சைவத்தையும் தமிழையும் வளர்த்து உலகளாவிய புகழடைந்தவர். பேரூர் ஆதீனம் 24ம் பட்டம் குரு மகா சன்னிதானம் கயிலை மாமணி தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் ஆவார். இவர் பெருமையும் புகழையும் பேசுவதற்கு ஒரு நாள் போதாது. என்னைப் போன்ற எளியோருக்கும் அணுகும் வகையில் எளிமையான தன்மையுடன் இருந்தவர் நம் பேரூர் அடிகள்.

தென் கைலாயம் எனும் வெள்ளிங்கிரியில் பல தலைமுறைகளாக எங்கள் முன்னோர்கள் பூஜை செய்து வந்துள்ளனர் அவ்வகையில் அங்கு பூஜை செய்யும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது அதன்மூலம் பேரூர் அடிகளாரை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பை பெற்றேன். வெள்ளிங்கிரியில் 1985, 2002, 2016 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று திருக்குட முழுக்குகளையும் முன்நின்று தலைமை தாங்கி திருநெறிய தமிழ் முறையில் நடத்திக் கொடுத்தவர்கள் நம் குரு மகா சன்னிதானம் ஆவார். தம்முடைய அணுகத் தொண்டராகிய சரவணம்பட்டி பழ. தரும. ஆறுமுகம் அவர்களை அருள்மிகு வெள்ளிங்கிரி ஆண்டவர் திருக்கோவில்

அறங்காவலர் குழு தலைவராக நியமித்து, அவர் மூலம் 63 நாயன்மார் சிலைகளை அமைத்ததோடு மிகுந்த பொருட்செலவில் நடராசர் சிவகாமி மற்றும் மணிவாசகர் சிலைகளை ஐம்பொன்னால் அமைக்க செய்தார்.

ஒருமுறை என்னிடம் அவர்கள் அவதரித்த ஊரில் மற்ற மதத்தைச் சார்ந்த பள்ளிகளே அதிகமாக உள்ளன என்று தெரிவித்ததோடு என்னை அங்கு ஒரு பள்ளியை தொடங்குமாறு அறிவுறுத்தினார். அவ்வகையிலேயே பள்ளி தொடங்கப்பட்டு அவர்கள் திருகரங்களில் 2002இல் எங்கள் பள்ளி திறக்கப்பட்டது. 11 குழந்தைகளுடன் தொடங்கிய பள்ளி என்று 850 குழந்தைகளோடு ஆல் போல் வளர்ந்துள்ளது. இதற்கு நாங்கள் என்றும் பேரூர் அடிகளுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்போம்.

இவ்வுலகில் பிறப்பவர்கள் பல கோடி இறப்பவர்கள் பல கோடி ஆனால் இவ்வுலகில் சாதனை புரிந்து முத்திரை பதித்து செல்பவர்கள் வெகு சிலரே அவ்வகையில் நம் குரு மகா சன்னிதானம் அவர்கள் ஒரு வாழ்நாள் சாதனையாளர் என்றால் அது மிக ஆகாது. வித்துவான் என்றிருந்த தமிழ் புலவர் பட்டய படிப்பை B.LIT என்னும் பட்டப் படிப்பாக மாற்றிய பெருமை பேரூர் அடிகளையே சாரும்.

கடந்த 1950 ஆம் ஆண்டு பேரூர் ஆதீனத்தின் இளைய பட்டமாக குரு மகா சன்னிதானம் சீர் வளர்சீர் முது முனைவர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு சீரும் சிறப்புமாக மக்கள் பயனரும் வண்ணம் அருளாட்சி செய்து வந்தார்கள், இவர்கள் காலத்தில் ஆதீனம் பெரும் வளர்ச்சியை கண்டது. குறிப்பாக அறியாமையைப் போக்க வல்ல கல்விப் பணிகள் மிகுதியாக நடைபெற்றன. தொடக்க கல்வி முதல் உயர்நிலைப்பள்ளி, தமிழ்க் கல்லூரி, கலைக்கல்லூரி என வளர்ந்து வந்தன. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன் பெற்று உலகெங்கும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர் என்பதை பெருமைமிக்க செய்தியாகும்.

நூல்கள் வெளியீடு, மாநாடுகள் ,கருத்தரங்கங்கள், சிவசந்தலிங்கர் இதழ், திருக்கோயில் புனரமைப்புகள், திருக்கோவில்களை எழுப்புதல், சிறப்பம்சமாக அன்னை தமிழ் மொழியால் தமிழ் வழிபாடு மூலம், திருக்குடமுழுக்கு மற்றும் இல்லத்தில் நடைபெறும் நற்காரியங்கள் அனைத்திற்கும் தமிழ் வழிபாடு மூலம் நடத்தி புதிய புரட்சி செய்து வந்தமை என பட்டியல் நீளும்...

பொன்விழாவும் பவள விழாவும் முத்து விழாவும் கண்ட பெரும் சிறப்பினையும் பெற்று சமய உலகில் தனித்துவமாக விளங்கியவர்கள் சன்னிதானங்கள் ஆவார்கள். எளிமை, உயர் பண்பு நலம், பக்திநலம், இன் சொல் திறன், மனிதநேயம், மனிதனை மேம்படுத்தும் கல்விப்பணி, இத்தனைக்கும் மேலாக அருள் உள்ளம் கொண்ட பார்வை, என சமய நெறிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பாங்கும், பக்குவமும் சமயநெறி பின்பற்றுவோர்க்கு வழி காட்டுவதாக அமைந்திருக்கின்றன.

தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப்பேணுமின்! என்ற இளங்கோவடிகள் வாக்கிற்கு இலக்கியமாய் விளங்கிய பெருமைக்குரியவர்கள் பேரூர் ஆதீனம். பெரியவர்கள், அருளும் அறிவும், இருள்தீர் பொறுமையும், வாய்மையும் தவமும் தானமாட்சியும் ஒருங்கே அமைந்த தவச்சீலர் சாந்தலிங்க ராமசாமி அடிகள் .மன்னுயிர் கட்கு இன்பம் தரும் அரிய செயலை செய்தவர்கள். கொங்கு நாட்டில் சைவமும் தமிழும் வளர்த்த பெருந்தகை 'தவம் செய்தவர் தங்கருமம் செய்வார்' என்றார் தெய்வப்புலவர். தமிழே தவமாக வாழ்ந்தவர்கள் .இன்பத்தமிழ் மொழிக்கு தம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள்.

தமிழ் முழுவதும் அறிந்த தவமுனிவர் அடிகள் தமிழ் பண்பாடு போற்றியவர், சங்க இலக்கியங்களையும் திருமுறைகளையும் இரண்டு கண்களாகப் போற்றியவர்கள். தான் பெற்ற இன்பம் உலகம் பெற வேண்டும் என்று தமிழால் தமிழருக்கு மெய்நெறி புகட்டிய மெய்ஞானி. அடிகளார் அவர்களை அவதாரப் புருடர் எனவே அறிய வேண்டும்.

நம் அடிகளார் அவர்கள் சிவத்தையும் செந்தமிழையும் தம் இரு கண்களாக கொண்டு ஒழுகிய சிறப்புடையவர்கள். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போல அவர்கள் சிவத்தையும் தமிழையும் வேறுபாடு இன்றி ஒன்றாகவே கண்டார்கள். சைவ சமயம் சிவத்தை முழு முதலாக கொண்ட பெருமைக்குரியவர். அச்சிவனை நெறி வழுவாது அயராது நினைந்து போற்றும் செய்கையில் மேம்பட்டு விளங்கிய தகைமையார். தீந்தமிழ் பனுவளல்களான சாத்திர, தோத்திர நூல்களைக்கற்றுத் துறை போகி அதனை தம் வாழ்வில் செயல்படுத்தி செம்மை கண்டவர்கள் திருமுறை பாடல்களை தம் உயிர்மூச்சாகக் கொண்டு அதன் திறத்தை அகம்கொண்டு மகிழ்ந்தவர்கள்.' யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் 'எனத் தாம் நின்று விளங்கிய திருமுறை நெறியில் தமது மெய் அன்பர்களையும் தோயச் செய்து திருமுறை பனுவல்களுக்கு அணி சேர்த்தவர்கள். இத் திருமுறை பனுவல்களுக்கு பாடி தளர்ச்சியுற்ற சைவ சமயத்தை மேம்படச் செய்த திருமுறை ஆசிரியர்கள் போல் இக்கால கட்டத்தில் பிற மொழி ஆதிக்கத்தில் தோய்ந்திருந்த ஆலயங்களின் வழிபாட்டுச் சூழலை மாற்றி மேன்மைக்குள் சைவத் திருமுறைகளை குன்றா புகழுடன் மீண்டும் ஆலயங்களில் வழங்கச் செய்தவர்கள் நம் அடிகள் பெருமான்.

திருமுறைகளில் பாடல் பெற்ற தலங்கள், வைப்புத்தலங்கள் முதலியன கால சூழலுக்கு ஆட்பட்டு ஒளி மங்கி இருந்தபோதே அதனை கண்ணுற்று தமது மெய்யன்பர் கூட்டத்தோடு சென்று அவ்வாலயங்களை புதுப்பித்தும், உழவாரப்பணி செய்தும், தமிழ் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழாவை நிகழ்த்தி, நாள் வழிபாடுகளுக்கும், சிறப்பு வழிபாடுகளும் முறையாக நிகழ ஆவண செய்தவர்கள், அவரும் அப்பணியில் இடம் பெற்ற திருக்கோயில்களின் பட்டியல் எண்ணில் அடங்கா, 'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டீர் 'என்று சொல்லும் அன்பர் திரு கூட்டத்தை நாடெங்கும் உருவாக்கிய செயல் வீரர் .அத்தகு அன்பர் திரு க்கூட்டத்திற்கு அரணாக நின்ற வலிமை மிக்கவர்கள்.

தமிழ் முனைவரான நம் அடிகள் பெருமான் தமிழில் வாழ்வில், அருளிய நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சிறந்த நூல்களையும், படைத்து தந்ததோடு பலருக்கும் திருமடத்தில் பயிற்சியும் ,அளித்து தமிழ் நெறி தழைக்க, வகை செய்தவர்கள் .பல்வேறு திருமடங்களில் தளர்வுகள் ஏற்பட்ட காலத்தில் நம்மிடம் பயின்ற தக்க அடியவர்களை அங்கெல்லாம் தலைமை பொறுப்பில் அமர்த்தி அழகு பார்த்தார்கள். ஓயாது நல்ல நூல்களை படித்து மகிழும் இயல்புடைய நம் அடிகள் பெருமானார் பேரூராதீனத்தின் வழியாக நூற்றிற்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவருவதற்கு காரணமாக இருந்தார்கள். சிவசாந்தலிங்கர்' என்னும் திங்கள் இதழைத் தொடங்கி இன்று வரை அது செம்மையான முறையில் சமயப் பணியையும் தமிழ் பணியையும் ஆற்றி வர காரணமாக நம் அடிகள் பெருந்தகையார் திகழ்ந்தார்கள். ஏழை, எளிய மக்களுக்கும் மலைவாழ் பழங்குடியினருக்கும் உணவு உடை, கல்வி என எண்ணற்ற உதவிகளை செய்த அருள் உள்ளம் கொண்டவராக அடிகள் விளங்கினார்கள்.

பேரூர் திரு மடத்தில் சாதி, பால் வேறுபாடு இன்றி அனைவரும் கருவறை தொடங்கி மடைப்பள்ளி வரை பணி செய்து மகிழ அனுமதித்த சமத்துவக் கொள்கையராக இப்பெருமகனார் திகழ்ந்ததை உலகம் அறியும். அடிகள் பெருந்தகையினுடைய அருட்பணிகள் தாய் தேசம் மட்டுமின்றி அயல் நாட்டு மக்களுக்கும் அகமகிழ்ந்து ஏற்கும் முகமாக அமைந்தது. அடிகளின் அருள் மொழிகளையும் சீரியச் செயல்பாடுகளையும் உணர்ந்த மக்கள் மீண்டும் அவரை காணவும் அவர் தம் உரையை கேட்கவும் பேரவா கொண்டிருந்தார்கள். அயல் நாட்டு மக்களின் உணர்வினைப் போற்று முகமாக அடிகள் பலமுறை அதத்தேசங்களுக்கு, சென்று பல தமிழ் அமைப்புகளைத் தோற்றுவித்தும், அவ்மைப்புகளுக்கு தலைமை வகித்தும் அணி சேர்த்தார்கள் தேசத்து மக்களையும் திருமடத்திற்கு வரவழைத்து பல நிகழ்வுகளில் பங்குபெறச் செய்தும் அவர்களுக்கு திருமுறை பயிற்சிகளையும், வாழ்வியல் சடங்குகள் குறித்து நெறிபாடுகளையும் எடுத்துரைக்கும் உயர்வு தந்தார்கள்.

'மக்கள் சேவையே! மகேசன் சேவை 'என்பார் சான்றோர். தமிழ்மொழி மீது ஆழ்ந்த பற்றும் ,அளப்பரிய புலமையும் கொண்டிருந்த அடிகளாரிடம் பழகும் அரிய வாய்ப்பையும் அவருடைய பேரன்பையும் பெற்றது நான் பெற்ற பெயர்களுள் ஒன்றென கருதுகிறேன். அவருடைய எளிமை, அயரா உழைப்பு ,அதீத ஆற்றல், திறமை, இன்சொல், விருந்தோம்பல், தமிழ் தொண்டு முதலியன அருட்பண்புகள் அனைவரையும் வியக்க வைக்கும். ஆன்மிக நெறியில் நின்று சமுதாய சேவையாற்றிய ஒரு மாமனிதராய் விளங்கியவர். இவர் பழமை வாய்ந்த திருக்கோவில்களை புணரமைத்துத் திருக்குட நீராட்டுச் செய்யும் தெய்வீக தொண்டை ஒரு வேள்வியாகவே செய்து வந்தார்.

எளிய உணவு முறையைக் கடைப்பிடிப்பதில் எப்பொழுதும் வைராக்கியமாகவே இருப்பார். எவ்வளவு சுவையான விருந்து என்றாலும் அதைத் தவிர்த்து பத்திய உணவையே உண்பார். வெங்காயம் தவிர்த்து மிகுந்த காரம் தவிர்த்து, சீரகம், மிளகு கலந்த எளிய உணவை உண்பதையே வழக்கமாகக் கொண்டு தெய்வீக பேரொளியாய் திகழ்ந்தார்.

பழந்தமிழர் மரபுகளையும் சைவ சமயத்தின் பெருமைகளையும் மறந்த அல்லது மறுத்த தமிழர்களுக்கு, உங்கள் மூதாதையார் உங்கள் பொருட்டு விட்டுச் சென்ற விலை மதிக்க இயலாத பெரும் சொத்து அவை என்று வெளிச்சமிட்டு காட்டிய விடிவெள்ளி அடிகளார் அவர்கள்.

எல்லா பாதைகளும் ரோமாபுரி நோக்கி செல்கின்றன என்ற பழமொழி மேனாட்டில் அதுபோலவே கடந்த அரை நூற்றாண்டாக தமிழ் நலன், தமிழ் நெறி அவாவிய அன்பர்கள் நடந்த பாதை பேரூரை நோக்கியே இருந்தன, என்பதை நாடு நன்கு அறியும், இரும்பு மனம் கொண்டோரை ஈர்க்கும் காந்த சக்தியாகவே அடிகளார் விளங்கினார்கள்

தமிழக உயர்கல்வியும், ஆலய வழிபாட்டு முறைகளும், தமிழர் வாழ்வியலின் அனைத்து சடங்குகளும் தாய் மொழியாம் தமிழிலேயே

தமிழால் மட்டுமே அமைய வேண்டுவது அவசியம் என ஓங்கி உரக்கப் பேசியது மட்டுமல்ல தாமே செயல்படுத்திக் காட்டியதோடு இல்லாமல் பலருக்கும் அந்நெறியில் பயிற்சி அளித்து தமிழ் கூறும் நல்லுலகு எங்கும் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய புரட்சியாளர் நம் அடிகளார் அவர்கள்.

திருமடதில் அவர் ஊன்றிய கல்வி விதை இன்று ஆல் போல் தழைத்து பல கிளைகளை பரப்பி மாணாக்க மாணாக்கியவர்களுக்கு நல்வழி காட்டி அவர்களை நல்ல பண்புடைய குடிமக்களாக ஆக்கி வருவதை நாடே நன்கு அறியும் .அவர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அருள் ஒளியை பாய்ச்சியவர் நம் அடிகளார் அவர்கள்.

தமது இனிய பார்வையாலும் ,அமுத உரையாலும், அன்பையும் கருணையும், கனிவையும், பண்பையும், பாசத்தையும் அடியார் உள்ளங்களில் விதைத்த பேராசான் நம் அடிகளார் அவர்கள்.

இளைஞர்களை இனம் கண்டு ஊக்குவித்து, அவரவர்கள் பாதையில் சிறந்து விளங்க நல்வழி காட்டிய தாய் உள்ளம் கொண்ட மிக உயரிய பண்பாளர் நம் அடிகளார். அவர்கள் காட்டிய அன்பால் ஈர்க்கப்பட்ட பலர் இன்று உயர்ந்த நிலையில் உள்ளனர்.

அடிகளார் திருவடி போற்றி!
அம்மையப்பன் அருள் அடி போற்றி! போற்றி !
ஓம் நமச்சிவாயா!

95

புரட்சித்தம்பி

கோவை

தமிழ் அன்னைக்கு சிலம்பு உண்டு மேகலை உண்டு குண்டலகேசி உண்டு வளையாபதி உண்டு சீவக சிந்தாமணி உண்டு குறள் என்னும் மகுடம் உண்டு. பாரதி பாரதிதாசன் என்னும் திலகமும் உண்டு. தமிழ் அன்னைக்கு காப்பு! கொங்கு நாட்டில் பேரூர் தமிழ் கல்லூரி கண்ட சாந்தலிங்க ராமசாமி அடிகளே காப்பு. முத்தமிழின் சங்கமம். முப்பாலை முழுதுணர்ந்த முத்துச்சிப்பி. என் கடன் பணி செய்து கிடப்பதே என்று பணி செய்து இருந்த பேரூர் அப்பர் அடிகளே பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் ஆவார். தமிழையும் சைவத்தையும் சுவாசித்து நேசித்து வாழ்ந்த தமிழ்க்கடல் பேரூர் அடிகளார் ஆவார். இவர் நடந்தால் புனித நீரோட்டம். நின்றால் புண்ணிய கேந்திரம். பேசினால் சைவ சித்தாந்தம். சிரித்தால் வசந்தம். பூந்தாது வாரி வரும் பொதிகை தென்றல் காற்று. பொன் அள்ளி கோலமிட்டு புன்சிரிப்பு சிந்துகின்ற புலர் வானம்.

பூ பூத்த விழி எல்லாம் புதுக்கவிதை பூத்து வரும் வானம்பாடி. புவனத்தில் சைவத்திற்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்த பொன் எழில் பூத்த பூ. வானமும் மண் எழில் பூத்த பூபாளமும் கார்மேகமும் உள்ளவரை கடல் உள்ள வரை பேரூர் சாந்தலிங்க அடிகளார் புகழ் நிலைக்கும்.

கோவை கச்சியப்பர் என்று அழைக்கப்படும் கோவை கவுமார மடாலயம் கந்தசாமி சுவாமிகள் தவத்திரு ராமானந்த சுவாமிகள் அருளாசியுடன் தனது 15 வது வயது முதல் தமிழனை தாலாட்டிய தங்க

மகன். 24 ஆம் பட்டம் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளார் புகழ் வாழ்க. அன்பின் இலக்கணமாய் ஆற்றலில் இலக்கியமாய் பண்பில் ஓவியமாய் பகட்டில்லா காவியமாய் நேர்மையின் சின்னமாய் எளிமையில் தமிழ்த் துறவியாய்

வலிமையில் வீர துறவியாய் கருணையில் வள்ளலாராக வாழ்ந்து வரலாறாய்த் திகழ்ந்து வாழ்ந்த சாந்தலிங்க இராமசாமி அடிகளார் சைவத்துக்கும் தமிழுக்கும் அறப்பணிகளுக்கும் ஆற்றியது ஒரு சகாப்தம். வீர வரலாறு.

நன்றி

96

முனைவர் கே. சுந்தரராமன்
விஸ்வாபுரம், ரங்கராஜபுரம்,
சென்னை.

அறம் வளர்ப்பையும், சமூக மேம்பாட்டுப் பணிகளையும் இரு கண்களாக திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழி பேரூர் ஆதீனம் போற்றுகிறது. கல்வி, சமயம், சமுதாய வளர்ச்சியுடன், தமிழ் வளர்ச்சிக்கும் அயராது உழைத்த குருநாதர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார், இளைய தலைமுறையை சமுதாய, தேச நலன் சார்ந்த பாதைக்கு திருப்ப பெரு முயற்சி மேற்கொண்டார்.

கொங்கு மண்டலத்தில் சைவ நெறியை தழைத்தோங்கச் செய்யும் பொறுப்பை பேரூர் ஆதினம் ஏற்றுக் கொண்டது. சமயம், மொழி, சமுதாயப் பணி என்று அனைத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, உலக அமைதி என்ற இலக்கை நோக்கி பயணித்து வருகிறது.

சிவபெருமானால் நந்தியெம்பெருமானுக்கு உரைக்கப்பட்ட நெறிமுறைகள், சனற்குமாரர், சத்தியஞான தர்சினிக்கு அருளப்பட்டன. மேலும் பரஞ்ஜோதி முனிவருக்கும் எடுத்துரைக்கப் பட்டது. இவர்கள் நால்வரும் அகச்சந்தான குரவர்கள் என்று போற்றப்படுகின்றனர். இவர்களுக்கு பின்னர் திருக்கயிலாய மரபுகளை முன்னிறுத்தி மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகியோர் சமயப் பணி ஆற்றினர். இவர்கள் புறச்சந்தான குரவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அருளிய நெறியே சித்தாந்த சைவநெறியாகும்.

சித்தாந்த சைவநெறியானது நமச்சிவாய சித்தர், சிவப்பிரகாச சித்தர், நமச்சிவாய மூர்த்திகள் என வழிவழியாகப் பரவியுள்ளது. பட்டீஸ்வரத்தில் தோன்றிய சிவப்பிரகாசர், திருவாடுதுறை நமச்சிவாய மூர்த்திகளை தேடி வந்துள்ளார். அவரும் பல்வேறு நெறிகளை சிவப்பிரகாசருக்கு அருளி, தனது சீடராக ஏற்றுக் கொண்டார். சிதம்பரத்தில் சைவ வைணவ மோதல் ஏற்பட்டுள்ளது குறித்து சிவப்பிரகாசர் கவலை கொண்டார். இதுகுறித்து தமது குருநாதரான நமச்சிவாய மூர்த்திகளிடம் முறையிட்டார். குருநாதரின் ஆணைப்படி சிவப்பிரகாசர் தில்லை சென்று பலவிதங்களில் முயற்சித்தும், அந்த மோதல் தீரவில்லை. இதையடுத்து வேலூர், திருவண்ணாமலை சென்று சைவப் பணிகளை மேற்கொண்டார். அப்போது சாந்தலிங்கர் அவருடன் இணைந்து பல்வேறு சமயப் பணிகளில் ஈடுபட்டார்.

பின்னர் சிவப்பிரகாசரிடம் உத்தரவு பெற்று, சாந்தலிங்கர் பேரூரை வந்தடைந்தார். மேலைச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் பேரூரில் 17-ம் நூற்றாண்டில் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழியில் பேரூர் ஆதினத்தை சாந்தலிங்கர் நிறுவினார். பல அருட்செயல்களைப் புரிந்த சாந்தலிங்கர், பல நூல்களை எழுதியுள்ளார். தொடர்ந்து, மாணிக்க சுவாமிகள், மௌன சுவாமிகள், சச்சிதானந்த சுவாமிகள், ராமலிங்க சுவாமிகள், நாச்சிமுத்து சுவாமிகள் ஆகியோர் ஆதீன குருமுதல்வர்களாக அருளாட்சி புரிந்துள்ளனர்.

பழமையான மடம், கொஞ்சம் கொஞ்சமாக விரிவடையத் தொடங்கியது. 1900-ம் ஆண்டுக்குப் பிறகு பொருளாதார ரீதியிலும் மடம் வலுவடையத் தொடங்கியது. இந்த நிலையில், சத்வித்ய சன்மார்க்க சங்கம் தொடங்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள அனைத்து சான்றோரையும் அழைத்துவந்து, மிகப் பெரிய அளவில் சமய நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் பேரூர் மடத்தின் பெயர் பிரபலமடையத் தொடங்கியது. பல்வேறு நூல்களிலும் பேரூர் ஆதீனம் குறித்த தகவல்கள் இடம்பெற்றன.

அதன் மரபுவழியில் ஆறுமுக சுவாமிகள், குருமகா சந்நிதானமாக இருந்தபோது இளைய பட்டமாக சாந்தலிங்க ராமசாமி அடிகளார் பொறுப்பேற்றார்.. அன்னூர் அருகேயுள்ள முதலிபாளையம் பகுதியைச் சேர்ந்த இவர், இளம் வயதிலேயே ஆன்மிகத்தில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார்.. 1950-ல் இளையபட்டமாகப் பொறுப்பேற்ற இவர், திருமட வளர்ச்சிக்கு மட்டுமின்றி, கல்வி, சமயம், சமுதாய வளர்ச்சியுடன், தமிழ் வளர்ச்சிக்கும் அயராது உழைத்தார். 1967-ல் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் குருமுதல்வரானார்.

அந்த சமயத்தில், கல்விப் பணியைத் தொடங்க, அடிகளார் பெருந்தகை திருவுள்ளம் கொண்டார். அரசின் உதவியுடன் 6-ம் வகுப்பு வரையுள்ள பள்ளியைத் தொடங்கினார். படிப்படியாக இது மேல்நிலைப் பள்ளியாக உருவெடுத்தது. 1977-ல் மெட்ரிக். பள்ளியும், 1999-ல் தமிழ்ப் பள்ளியும் தொடங்கப்பட்டன.

தமிழில் குடமுழுக்கு

கோயில்களில் தமிழில் வழிபாடு என்பது அடிகளாரின் நோக்கமாக இருந்தது. மேலும், தமிழ்க் கல்லூரி தொடங்க வேண்டும் என்பதிலும் அதிக ஆர்வம் காட்டினார். 1953-ல் பேரூர் பட்டீஸ்வரர் கோயிலில் தமிழில் வழிபாடு செய்யப்பட்டு, திருமடம் சார்பில் தமிழ்க் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழில் அர்ச்சனை முறை தொடங்கியதற்கான விதை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

குன்றக்குடி அடிகளார், மறைமலை அடிகளார் ஆகியோருடன் நட்பு கொண்டிருந்தார் சாந்தலிங்க ராமசாமி அடிகளார். இந்த நிலையில், தமிழில் திருமணம், தமிழில் குடமுழுக்கு என்பதை வலியுறுத்திக் கொண்டிருந்தார் குன்றக்குடி அடிகளார். இதற்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில், 1954-ல் சாந்தலிங்க ராமசாமி அடிகளார், கௌமார மடம் சுந்தர சுவாமிகள் ஆகியோர் சேர்ந்து தமிழில் குடமுழுக்கு நடத்துவதற்கு வித்திட்டனர். நாம் சொல்லும் மந்திரம் மக்களுக்கு புரிய வேண்டும் என்பதற்காகவும், மக்களை வேள்விச் சாலையில் பங்கேற்க வைக்க வேண்டும் என்பதற்காகவும்

இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தமிழில் குடமுழுக்கு நடத்துவது பல கோயில்களிலும் தொடர்ந்தது. குடமுழுக்கை மிகவும் சிக்கனமாக நடத்துவதற்கும் அடிகளார் பெருமுயற்சி செய்தார். இதுவரை 5,000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோயில்களில் தமிழ்வழியில் குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

ஜாதி பேதமின்றி, அனைவரும் குடமுழுக்கை நடத்திவைக்க வேண்டும் என்று அடிகளார் விரும்பினார். அதற்கான பயிற்சியை அனைவருக்கும் அடிகளார். அளிக்கத் தொடங்கினார். குலம், பாலினம், பொருளாதாரம் என எவ்வித பேதமும் இல்லாமல், குடமுழுக்கை நடத்திவைப்பதற்கான பயிற்சி அனைவருக்கும் தரப்பட்டது. இதுவரை 3 ஆயிரம் பேருக்கு மேல் இந்த பயிற்சியைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பலர் பல்வேறு கோயில்களில் குடமுழுக்கை நடத்திவைத்தல், புதுமனைப் புகுவிழா, திருமணம், நன்னீராட்டு விழா, மணி விழா உள்ளிட்டவற்றை நடத்தி வருகின்றனர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிமன்றக் குழுவில் இருந்த சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் முயற்சியால், புலவர் பட்டம் படித்தவர்களின் தரம் உயர்த்தப்பட்டு, அவர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களுக்கான இணையான ஊதியம், பதவி உயர்வு ஆகியவை கிடைத்தன. தமிழகப் புலவர் குழு என்ற அமைப்பின் மூலம், அடிகளார், தமிழ் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டார். ஆட்சி மொழியாக, அலுவலக மொழியாக தமிழ் இருக்க வேண்டும், தமிழ்ப் பெயர்கள் வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

பேரூர் தமிழ்க் கல்லூரியில் 1974-75-ம் ஆண்டு வரை புலவர் வகுப்பு நடைபெற்றது. 1975-76-ல் நான்காண்டு பட்டப் படிப்பு தொடங்கப்பட்டது. 1980-81-ல் பி.எல். மூன்றாண்டு படிப்பாக மாறியது. தொடர்ந்து, தமிழ் எம்.ஏ., தமிழ் எம்.ஃபில், பி.ஹெச்டி, பி.காம், பி.எஸ்சி. கணினி அறிவியல், பி.ஏ. கணக்குப்பதிவியல் (நிறுமச் செயலாண்மை), எம்.காம்., பி.எஸ்சி. கணிதம், பி.காம். (சி.ஏ), எம்.எஸ்சி. கணிப்பொறி அறிவியல் என எண்ணற்ற படிப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பலர்

இங்கு பயின்று, பட்டம் பெற்றுள்ளனர். தமிழாசிரியர்களாக மட்டுமே 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உருவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது 800-க்கும் மேற்பட்டோர் இக்கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றனர்.

கல்லூரியின் 60-வது ஆண்டு விழா டாக்டர். அப்துல்கலாம் தலைமையில் நடைபெற்றது. அனைத்து இடங்களிலும் தமிழை முன்னிலைப்படுத்த வேண்டுமென்றும், கல்வி, அலுவலகம், ஆன்மிக மையங்கள் என அனைத்து இடங்களிலும் தமிழ் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவும், அப்போது வளர் தமிழ் இயக்கம் உருவாக்கப்பட்டது. தமிழுக்கு எதிரான நடவடிக்கைகள் நடைபெறும் சமயத்தில், வளர் தமிழ் இயக்கம் களத்தில் இறங்கிப் போராடி வருகிறது.

அனைவரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்காக அரசால் நியமிக்கப்பட்ட குழுவில், அடியார் பெருந்தகை உறுப்பினராக இருந்தார். இதில் 200-க்கும் மேற்பட்டோருக்கு அர்ச்சகர் பயிற்சி வழங்கப்பட்டது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி உள்ளிட்ட மலைப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்காக பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை ஆதீனம் மேற்கொண்டு வருகிறது. நிறைய நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

இயற்கைச் சீற்றத்தாலும், பராமரிப்பின்மையாலும் பழுதடைந்த 10-க்கும் மேற்பட்ட கோயில்கள் திருமடத்தால் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பல கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடத்தி வைக்கப்பட்டுள்ளது. சிறைவாசிகள் பயனடையும் வகையில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

இறைவனை வழிபட எவ்வித பேதமும் தேவையில்லை, அன்பு மட்டுமே போதும் என்பதை வலியுறுத்தும் நோக்கில் திருவிளக்கு வழிபாடு தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. மலைவாழ் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளில், திருமடம் சார்பில் விளக்குகள் கொண்டு செல்லப்பட்டு, ஞானாம்பிகை வழிபாட்டு குழுவினரால் திருவிளக்கு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

குடும்ப உறுப்பினர்களிடையே இணைப்பை ஏற்படுத்த திருவிளக்கு வழிபாடுகள் துணை நிற்கும் என்று கூறப்படுகிறது. இதுதவிர, தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, அருள்நெறி திருக்கூட்டம், சாந்தலிங்கர் அருள்நெறி மன்றங்கள் மூலம் கூட்டு வழிபாடு, உழவாரப் பணி, நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை, மலைவாழ் மக்களுக்கு புத்தாடைகள் வழங்கப்படுகின்றன. மேலும் பொங்கல் திருவிழா சமயத்தில் பொங்கல் வைப்பதற்கான பொருட்களும் வழங்கப்படும். சாந்தலிங்கர் கோசாலை அறக்கட்டளை மூலம் 40 பசுக்கள் பராமரிக்கப்படுகின்றன. 20 ஆண்டுகளுக்கும் மேலாக மழை வேண்டி பூண்டி, வெள்ளியங்கிரி மலை உச்சியில், உழவர்களுடன் இணைந்து வேள்விகள் நடத்தப்படுகின்றன. 1960-ல் தொடங்கிய அன்பு இல்லம் மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு கல்வி, உணவு, இருப்பிட வசதி அளிக்கப்பட்டு, அவர்களுக்கு நன்னெறிகள், ஒழுக்கப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. . மகளிருக்கு கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, தையல் பயிற்சிகளும், ஆண்களுக்கு மின்சாதனப் பொருட்கள் பழுதுபார்ப்பு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

அடிகளார் வனம் அமைப்பு சார்பில் 5 கிராமங்களில் 50 ஆயிரம் மரங்களும், பள்ளி மாணவர்கள் மூலம் 2.50 லட்சம் மரக்கன்றுகளும் நட்டு பராமரிக்கப்படுகின்றன. பல்வேறு இடங்களில் சித்த, அலோபதி மருத்துவ முகாம்கள், மூலிகைக் கண்காட்சி, கண், பல் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதுடன், இதய அறுவை சிகிச்சை உள்ளிட்டவற்றுக்கும் உதவப்படுகிறது.

முனைவர் மருதாசல அடிகளார்

தற்போது பேரூர் ஆதீனத்தின் குருமகா சந்நிதானமாக சாந்தலிங்க மருதாசல அடிகளார் பொறுப்பு வகிக்கிறார். பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள இவர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். 27 நூல்களைப் பதிப்பித்து, மொழி வளர்ச்சிக்கு துணை நிற்கும் இவர், ஓலைச் சுவடிகள், அரிய நூல்களைப் பாதுகாத்து, மின்னூலாக்கும் பணிகளிலும்

ஈடுபட்டுள்ளார். உலக தாய்மொழி தினத்தையொட்டி கருத்தரங்கம், பயிலரங்கம், பேரணிகளை நடத்தி வருகிறார். மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா, மலேசியா உள்ளிட்ட நாடுகளில், பேரூர் ஆதீனக் கிளைகளை நிறுவி, தமிழ் மொழி, சமயம், சமுதாயப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். பல நாடுகளுக்குச் சென்று உறையாற்றியுள்ளார்.

அகில பாரதிய துறவியர் சங்கத்தின் தலைவராக இருந்து, கும்பமேளா, மயிலாடுதுறை காவிரி புஷ்கரம், தாமிரபரணி புஷ்கர நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். மாநில மரமான பனை மரத்தின் முக்கியத்துவத்தை இளைய தலைமுறை அறிந்து கொள்வதற்காக இருமுறை உலகப் பனைப் பொருளாதார மாநாட்டை நடத்தியுள்ளார்.

குழந்தைகளுக்கும் பெற்றோருக்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்கும் நோக்கில், பள்ளி மாணவர்களுக்கான பெற்றோர் வழிபாடு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். குழந்தைகளுக்கு இலவச கல்வியும் அளித்து வருகிறார்.

பல்நோக்கு மருத்துவமனை

சித்த மருத்துவம், இயற்கை மருத்துவம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் அதே நேரத்தில் மகப்பேறு மருத்துவ மையம் அமைக்க வேண்டும் என்று அடியார் பெருந்தகை விரும்பினார். தற்போது, அவர் பெயரால் அறக்கட்டளை நிறுவி, அவர் பிறந்த ஊரான முதலிபாளையத்தில் பல்நோக்கு வசதிகளுடன் கூடிய சாந்தலிங்கர் மருத்துவமனை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உலகம் முழுவதும் சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிகளை பேரூர் ஆதீனம் மேற்கொண்டு வருகிறது. அன்போடு வழிபட்டால் இறைவனை அடையலாம், அன்பின் மூலம் உலக சமாதானத்தை எட்டலாம் என்பதை இலக்காகக் கொண்டு பேரூர் ஆதீனம் செயல்பட்டு வருகிறது.

சமயம், கல்வி, மொழி, சமூக நலன் என வாழையடி வாழையாக தொடரும் குருமரபை போற்றிப் பாதுகாக்கும் பேரூர் ஆதீனம், மகேசன் சேவையுடன், மக்கள் சேவையையும் மேற்கொள்வதுடன், அடுத்த தலைமுறையை நன்னெறி சார்ந்த சமூகமாக மாற்றுவதற்கும் முயற்சித்து வருவது, மதம், சமயம், ஜாதி பேதமின்றி அனைவராலும் போற்றப்படுகிறது.

கல்லாதது உலகளவு

அடியார் பெருந்தகையின் நூற்றாண்டை முன்னிட்டு, அவரைப் பற்றி பேசுவதற்கும், எழுதுவதற்கும் எனக்கு ஏதேனும் ஒரு தகுதி இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தபோது, என் தமிழ் வளர்ச்சிக்கு அவரே வித்திட்டுள்ளார் என்பது புரிகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னர், உறவினர் ஒருவரின் இல்லத் திருமணத்துக்கு எனது தாய்வழி தாத்தாவுடன் கோவை சென்றிருந்தேன். திருமண நிகழ்ச்சி முடிந்து, மருதமலை உள்ளிட்ட தலங்களுக்குச் சென்றுவிட்டு வரும்போது, ஓரிடத்தில் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நானும் தாத்தாவும் உள்ளே சென்றோம். நான் கண்காட்சி அரங்கில் இருந்த சமயத்தில் தாத்தா ஒரு பெரியவருடன் பேசிக் கொண்டிருந்தார். பரஸ்பர விசாரிப்புகளுக்குப் பின்னர், தாத்தா என்னை அழைத்து, அவரிடம் அறிமுகம் செய்து வைத்தார். அவரும் எனக்கு ஆசி வழங்கினார். பின்னர் நானும் தாத்தாவும் வெளியே வந்தபோது, தாத்தா அவரைப் பற்றி என்னிடம் கூறினார்.

அவர் வேறு யாரும் இல்லை.. அவர்.. நம் அடியார் பெருந்தகைதான். அவரைப் பற்றி தெரிந்து கொண்டதும், நான் அவரைத் தேடினேன். சற்று தள்ளி, அடியார் பெருந்தகை மற்றொருவருடன் பேசிக் கொண்டிருந்தார். உடனே நான் அவரிடம் சென்று என் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினேன். உங்களைப் பற்றி தெரிந்து கொண்டேன் என்றேன். உடனே அவர், என்னைப் பற்றி மட்டுமல்ல.. நீ தெரிந்து கொள்ள வேண்டியது இன்னும் நிறைய உள்ளது என்றார்.

கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பதை எவ்வளவு எளிமையாகச் சொல்லிவிட்டார். இப்போதும் அவரது வாக்கை நான் நினைத்துக் கொள்வேன். அவரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டியது இன்னும் நிறைய உள்ளது. கல்லாதது உலகளவாகவே கருதுகிறேன்.

ஞாலம் போற்றும் ஞானத் தந்தையாக விளங்கும் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் அவர் குறித்து பேசுவதற்கும், எழுதுவதற்கும் வாய்ப்பளித்த நல் உள்ளங்களுக்கு என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

97

முனைவர். கி. குமாரசாமி
மேனாள் கல்லூரிக் கல்வி இயக்குனர்,
சென்னை மேனாள் உறுப்பினர்,
தேசிய ஆசிரியர் கல்விக் கழகம், பெங்களூரு.

திருக்கயிலாய மரபு
மெய்கண்டார் வழி வழி
பேரூர் ஆதீன குருமகா சந்நிதானங்கள்
கயிலைக் குருமணி முதுமுனைவர்
சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு' (திருவள்ளுவர்-தவம்-குறள்-261)

தமக்கு வரும் துன்பத்தைப் பொறுத்தலும், பிற உயிர்கட்குத் துன்பம் விளைவிக்காப் பண்புகளே தவம் தாங்கி இருக்கும் வடிவம். இத்தவ திருமேனி தாங்கிக் காவியுடை தரித்த உவமை இல்லாக் கலை ஞானம், உணர்வு அறிய மெய்ஞ்ஞானம் அணிசேர்த்த பேரூர் அடிகள் 'பெரியசாமி' எனத் தொண்டர்கள் பலராலும் போற்றிப் பரவும் பேரூர் ஆதினத்தில் இருபத்தி நான்காம் பட்டம் ஏற்ற தவசீலர் ஆவார். அருட்பொலிவாய், கருணை பொழியும் கண்களால், நறுத்தேனை ஒத்த திருவாய்மொழியால், உயர் சிந்தனையால் சற்றொப்ப அரை நூற்றாண்டு காலமாக திருஅருளாட்சி செய்து தவநெறியாற்றிய ஒல்காப் புகழ்பெற்ற ஒண்டமிழ் அறிஞர்.

வானோர் போற்றும் நீரணிந்த நெற்றி அருள் ஒளி வீசும் மறைக் கண்கள், அடியவர் பால் அன்பு சுரக்கும் ஈர நெஞ்சம் பணிவும், துணிவும் மிக்க வீரத்துறவி, கயிலை மலையானைக் கண்டு வணங்கிய

புனிதத் திருவடியினர். எளிமையே வலிமை, சலியாத உழைப்பு, சிந்தனைத் தெளிவு, நன்னெறிப்படுத்தும் அறவழி ஆசான். ஆதிசிவன் திருவருள் பெற்றவர்.

விருந்தோம்பிப் பசிப்பிணி போக்கும் தாயுள்ளம். சமயக் காழ்ப்பு உணர்வின்றி மத நல்லிணக்கப் பொது உணர்வு ஆகியன இவர்தம் பண்புநலன்கள். ஒட்டு மொத்தமாக எடுத்துரைக்கின் இந்நூற்றாண்டில் அவதரித்த சமூகச் சிற்பி. சமத்துவமும், சகோதரத்துவமும் மக்களிடையே நிலவிடச் சமுதாய நல்லுணர்வு செழிக்கச் சிந்தித்த சிந்தனையாளர்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே என்னும் வாகீசரின் அருள் வாசகத்தைத் தம் வாழ்நாளின் விரதம் என ஏற்று மெய்வருத்தம் பாராமல் கண்துஞ்சாமல் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என முழங்கித் தமிழ்மொழிக்கும். சைவ நெறிக்கும் உழைத்த கொங்கு மணித் திருநாட்டிற்குக் கிடைத்த அருட்கொடை எனில் மாற்றுக் கருத்து யாதொன்றுமில்லை.

பள்ளிப்பருவத்தில் அடிகளாரின் திருமேனி கண்டு, கல்லூரிப் பருவத்தில் திருநாமம் செப்பி, என் பணிக்காலத்தில் திருவார்த்தை கேட்டு, பணிநிறைவு பெற்ற பின் அவர்தம் திருமேனி சிந்தித்து நான் தெளிவு பெற்றவன். அவர் திருவாய் மொழிந்த ஆணைப்படி கண்டும், கேட்டும், உண்டும் அவர் திருவடியின் கீழ் அமர்ந்து உரையாடிய நாட்கள் எண்ணிலடங்கா. அந்நாட்கள் யாவும் என் முற்பிறவிப் பயன்களின் விளைவே எனக் கருதி அவர்தம் திருவடியின் கீழ் இருந்ததும் ஒரு தவப்பயனே என உணர்கின்றேன்.

தென்னாற்காடு மாவட்டம் மயிலம் சிவஞான பாலய அடிகளார் தமிழ்க்கல்லூரியில் சிறப்பாகத் தமிழ் பயின்று புலவர் பட்டம் பெற்று பேரூர் ஆதினத்தின் இளைய பட்டமாக 1950 ஆம் ஆண்டில் பொறுப்பு ஏற்றுப் பலரும் பாராட்டும் வண்ணம் அருட்தொண்டுகள் பலவாற்றியவர். பேரூர் ஆதீனத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரித்துக் 1967 ஆம் ஆண்டு தன் காவியுடையில் ஒரு கற்பூர

தீபமாக அருள் ஒளி வழங்கி ஆய புலமையுடன் இருபத்தி நான்காம் பட்டமாக ஆதீனப் பணிகளில் தொய்வின்றி பயணித்தவர்.

மனிதனை மாமனிதனாக உயர்த்துவது பண்புடைய கல்வி 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' என்பது வள்ளுவரின் வாக்கு. பண்பை வளர்க்கத்தக்க வகையில் நம் கல்வி நூலறிடனும் வாலறிவுடனும் அமைய வேண்டும் என அவாவுற்றவர். மனிதனின் ஒழுகலாறுகளைச் செம்மைப்படுத்தி மனிதநேயம் மலர விழுமியக் கல்வி துணை நிற்க வேண்டும் என்ற ஆழ்ந்த சிந்தனையைத் தன் ஆழ்மனத்தே பதித்து இளந் தலை முறையினர்கட்கு அருள் ஒளியூட்டிக் கற்றவர் பேரின்பம் உற்று நிற்க வழிகாட்டியவர்.

அந்நோக்கம் நிறைவுறத் தமிழக அரசின் நிதி நல்கையுடன் 1951 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தொடக்கப் பள்ளி ஆல்போல் வளர்ந்து, 1990 ஆம் ஆண்டு மேல்நிலைப்பள்ளியாக மலர்ந்து 1977 ஆம் ஆண்டில் ஞானாம்பிகை நுழைவுரிமைப் பள்ளி, 1999 ஆம் ஆண்டில் ஆறுமுக அடிகளார் தாய்த் தமிழ்ப் பள்ளி ஆகிய இரண்டும் தொடங்கப்பட்டு ஏழை மாணாக்கர்களின் கல்வி மேம்பாட்டை செழுமைப்படுத்த பல்லாற்றானும் உதவியது. 1953 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, கலை அறிவியல் தமிழ் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1989 ஆம் ஆண்டில் விரிவாக்கம் பெற்றது. இக்கல்விக் கூடங்களின் வளர்ச்சியில் அடிகளார் தலைவராக, பேராசானாக, அறிவுசார் அறநெறி வழிகாட்டியாக, முதல்வராகச் செயலராக ஆற்றிய பணிகள் அளப்பரியன.

தமிழைத் துறக்காத தனிப்பெரும் தமிழ்ஞானி தவம் செய்த தவமாய் பூவுலகில் வந்துதித்த நம் அடிகள் பெருந்தகை 1972 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பணியாற்றினார்.

அக்காலகட்டத்தில் மாண்பமை முனைவர். மால்கம் ஆதிசேசையா சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றித் தம் பதவிக்குப் பெருமை சேர்த்தவர். அக்காலத்தில்

தமிழ்ப்புலவர் படிப்பை அடிகள் பெருந்தகை பி.லிட் பட்டம் என மாற்றவும், தமிழ் மொழி ஆசிரியர்களில் தகுதிநிலை உயர்த்தவும், ஒப்பற்ற முறையில் அரும்பாடுபட்ட தவசீலர். இன்றும் என்றும் தமிழ் ஆசிரியர்கள் நெஞ்சங்கள் நன்றியுடன் நினைந்து போற்றும் வரலாற்று நிகழ்வாகவே கருதுகின்றனர்.

கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயில்களும் என்பதை உணர்ந்த வீரசைவ நெறியாளரான அடிகள் பெருமகனார் வாழ்வியல் முறைகளில் விளக்கமுற நிற்பது மனித நேயமே எனப் போற்றி ஒழுகினார். சமய வகுப்புகள், உழவாரப் பணிகள் தமிழ்முறைப்படி திருக்குட நன்னீராட்டு விழாக்கள் (10000 மேற்பட்ட கோயில்களில் நிகழ்த்தியுள்ளார்) முற்றோதல் செய்வித்தல், சமுதாயத்தில் நலிந்தோர்பால் பேரன்புகாட்டிப் பொருளதவி, மருத்துவ உதவி நல்குதல், சமய நெறி பரவச் செய்தல், வாழ்வியல் அருளியல் சடங்குகளில் தமிழ்வழி நடத்தப்பயிற்றுதல் ஆகிய பணிகள் நாளும் பொழுதும் தமிழ்நாட்டில் வளரத் தன்னை அர்ப்பணித்துச் செயற்கரிய செய்த மெய்ஞான தேசிகன்.

தமிழால் தமிழாகவே வாழ்ந்த அடிகள் பெருந்தகை, தமிழ்மொழி போல் இனிதாவது வேறெங்கும் காணோம்' எனத் தலைநின்ற தமிழைத் துறக்காத தனித் துறவி நம் அடிகள் பெருந்தகை எனில் இயல்பு கடந்த கூற்றன்று.

உலக சைவப் பேரவை, தமிழகத் துறவியர் பேரவை, சத்வித்ய சன்மார்க்கம், தவத்திரு சாந்தலிங்கர் நினைவு அறக்கட்டளை, தவத்திரு சாந்தலிங்கர் கல்லூரிக் கழகம், அருள்மிகு அம்பலவாணர் வழிபாட்டுக்குழு, கோவை, நீலகிரி, ஈரோடு மாவட்டத் திருக்கோவில் வாரியக்குழு ஆகியவற்றில் தலைவராகவும், குறள்நெறி பரப்பும் குழு. இலண்டன் திருக்கோயில் திருப்பணிக் குழு, மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம் ஆகியவற்றில் புரவலாரகவும் பொறுப்பேற்று பணியாற்றிய கைமாறு கருதாத தியாகத்தின் திருவுரு. மேலை நாடுகள் பலவற்றிக்குப் புனிதப் பயணம் புரிந்து மேன்மைகொள் சைவநெறி செழிக்கத் தம்மை முற்றிலும் இணைத்து அருஞ்செயலாற்றிய சிவஞானயோகியாவார்.

உலகத்தமிழ் மாநாடுகள் (சென்னை, மதுரை, தஞ்சை, கோவை) ஆகியவற்றிலும் பங்கேற்ற அடிகளார் நறைபழுத்த, துறைத் தீந்தமிழின் சுவையை உலகறியச் செய்ய உவப்புடன் உதவிய செந்தமிழ் உணர்வினர். சற்றொப்ப 400 ஓலைச் சுவடிகள் 1500க்கும் மேற்பட்ட அரிய நூல்கள், செப்பேடுகள், பழங்கால நாணயங்கள், அடிகளார் அமைத்த கல்லூரியின் தொல்பொருள் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நெறிக் கட்டுரைகள், சிவசாந்தலிங்கர் திங்கள் இதழில் ஆய்வுக் கட்டுரைகள், ஆன்மீக நூல்கள், அடிகளின் அமுதம், பல்லாயிரக்கணக்கான வாழ்த்துப்பாக்கள் என எண்ணற்றவற்றைப் படைத்திட்ட தமிழ்ப் படைப்பாளி.

2013 ஆம் ஆண்டு செம்டம்பர் திங்களில் தமிழ்ப் பயிற்று மொழி மாநாட்டை மேனாள் (பதினொன்றாவது) மக்கள் குடியரசுத் தலைவர் மேதகு ஆ.பா.ஜெ. அபதுல்கலாம் தலைமையில் ஐந்து நாள் சிறப்புமிகு நிகழ்வுகளாகச் செம்மையாக நடத்திய தமிழ் மூதறிஞர். மகளிர் வாழ்வு மேம்பட மகளிர்கட்கென மாநாடுகள் நடத்தி மனித சமுதாயத்தை வேர் எனத் தாங்கிப் பிடிக்கும் மகளிரின் சிறப்புக்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே மலரச் செய்த மனித நேயப் பண்பாளர்.

இவர்தம் சமயப் பணிகள், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஆற்றிய பணிகள் முதலியவற்றைப் பாராட்டி கோவை அவனாசிலிங்கம் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களும் மதிப்புறு முதுமுனைவர் எனும் பட்டத்தை வழங்கித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டன.

2004 ஆம் ஆண்டில் அடியேன் (கல்லூரிக் கல்வி இணை இயக்குனர். கோவை மண்டலம்) பணி வழியே அவனாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில் அடிகளார் அவர்கட்கு முதுமுனைவர் பட்டம் வழங்க என்னால் முன்னொழியப்பட்ட தீர்மானத்தை அனைத்து ஆட்சிக்குழு உறுப்பினர்களும் ஒரு சேர வழிமொழிந்தனர். அக்காலகட்டத்தில்

அவனாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் காந்தியத்தின் மறுபதிப்பு எனப் போற்றி வணங்கப்படும் பேரறிஞர். க. குழந்தைவேல் அண்ணா அவர்கள் வேந்தராகவும், முனைவர். சரோஜா பிரபாகரன் அவர்கள் துணைவேந்தராகவும் பணியாற்றிய சிறப்புமிக்க கல்வியாளர்களாவர். நாடறிந்த நற்சிந்தனைக் கல்வியாளர் இ. பாலகுருசாமி, துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம் (2004) பட்டமேற்பு விழாவில் உரையாற்றினார். அப்பட்டமளிப்பு விழாவில் அடிகள் பெருந்தகை முதுமுனைவர் பட்டமேற்றார். அத்தகு சிறப்பு விழாவில் சிவஞான மாமுனிவர் சமுதாயத்திற்கு ஆற்றிய அளப்பரிய பணிகளை மேற்கோளிட்டு (ஏீஷ்மிழிமிஷ்லிஜ) சிற்றுரை ஆற்றும் வாய்ப்பை யான் பெற்றமை என வாழ்நாட் பேராக இன்றும் என்றும் நான் கருதுகிறேன்.

கயிலைப் புனிதர் 31.08.2018 ஆம் நாள் நண்பகல் 12.25 மணியளவில் புகழுடம்மை நீக்கி திருக்கயிலாயப் புனிதப்பயணம் புரிந்து அம்பலவாணன் திருவடியில் கலந்தருளினார். இக்காலகட்டம் வரை இளைய பட்டம் என வணங்கி மகிழப்பட்ட முனைவர். சீர்வளர்சீர் சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் தன் குருநாதர் அருள்நோக்குடன் அருளிய வழிகாட்டுதலை முற்றிலும் முற்றாகவும், திருவடி பிறழாமலும் திருமடத்தின் இருபத்தைந்தாம் குரு பீடமாக அருட்பணி பலவற்றை ஆற்றி வருவது சிறப்புடையதாகும்.

தாழ்சடை பொலிந்த அடிகளின் திருநாமம் தாங்கிய பேரூர் அடிகள் மருத்துவமனை' அடிகள் பெருந்தகையின் மூளைக் குழந்தை (Brain Child) எனில் வியப்பில்லை. அம்மருத்துவமனை முதலிபாளையத்தில் (அடிகள் பெருந்தகையின் அவதார பூமி) நூறு படுக்கைகளுடன் 2017 ஆம் ஆண்டு முதல் இலவச மற்றும் குறைந்த கட்டணச் செலவில் ஊரகம் வாழ் மக்களுக்கு மருத்துவச் சேவையைத் தொய்வின்றித் தொடர்ந்து அளித்திட பேரூர் ஆதீனம், சீர்வளர் சீர் முனைவர். மருதாச்சல அடிகள் (இருபத்தைந்தாம் பட்டம்) தலைமையில் இயக்கி வருகிறது. அம்மருத்துமனையைத் தஞ்சைப் பல்கலைக்கழகம் மேனாள் துணைவேந்தர் மாண்பமை முனைவர்.சி.சுப்ரமணியம் அவர்கள் நெறிப்படுத்திப் பயனெண்ணாமல் அரும்பணியாற்றி வருகிறார்.

அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் உலகம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருவது நமக்கெல்லாம் பெருமிதம் அளிக்கும் புனித நிகழ்வு மனம், மெய், மொழி ஆகியவற்றால் அடிகளை நினைந்து வணங்கி அவர்தம் அருள் வேண்டி அவர்தம் திருவடிகளைப் போற்றுகிறோம். கயிலை மலையானே போற்றி போற்றி.

சிற்றம்பலம்.

98

சிவஞான சுந்தரம் தம்பு
இலண்டன்

கொங்கு நாட்டு பேரூர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளாரை நினைக்கும் பொழுது எல்லாம் தெய்வத்தை நினைக்கும் தன்மையில் உணர்கிறேன்.1998ஆம் ஆண்டு முதன் முறையாக அடிகள் திருவடிகளை ஒன்றிய மாநாட்டில் சந்திக்கும் பேறு பெற்றேன். சந்தித்தபோது மாவிட்டபுரத்திற்கும் பேரூர் திருமடத்திற்கும் உள்ள தொடர்புகளை அடியேன் மனம் கொள்ளும்படி விளக்கிக் கூறினார். அப்போதே அவருடைய கருணைப் பொழியும் முகம் என்னுள் ஆழமாகப் பதிந்தது. மாவிட்டபுரத்திற்கும் எங்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை சுவாமிகளின்சமூகத்திற்கு விளக்கிக் கூறினேன்.

ஒவ்வொரு முறை இந்தியா வரும் போதும் பேரூர் வந்து அடிகள் திருவடிகளில் ஆசி பெற்று மகிழ்ந்தேன்.. சாமி அவர்களை சரணியிலும் பலமுறை சந்தித்திருக்கிறோம். என்னுடைய மகளின் அரங்கேற்றத்தின் போது இன்றைய பட்டமாக எழுந்தருளி இருக்கும் மருதாசல அடிகளாரை அடிகள் பெருந்தகை அனுப்பி வைத்திருந்தார்கள். என் மகள் தர்சனா தம்பு அவர்களுக்கு நாட்டியச் சுடர் என்று பட்டமளித்து கௌரவப்படுத்தி உள்ளார்கள். எனக்கும் நற்றமிழ் நம்பி என்ற பட்டமளித்து பெருமைப்படுத்தி உள்ளார்கள். அடிகள் திருக்கரங்களால் இவற்றை பெற்றது யான் பெற்ற பெரும் பேறு ஆகும். இந்தப் பேறுகள்2013ஆம் ஆண்டு கிடைத்தவை என்பதை பெரும் மகிழ்ச்சி உடன் தெரிவித்துக் கொள்கிறேன்.2015 ஆண்டு

எனக்கு கண் சிகிச்சை தேவைப்பட்டது. அப்போது மருத்துவர் சுந்தரமூர்த்தியை வைத்து எனக்கு சிறந்த முறையில் கவனித்து கண் மருத்துவம் செய்ய ஆவன செய்தமை இறை அருளால் கிடைத்த பெரும் பேறு ஆகும்.

அடிகளார் சித்தியடைந்த போது 11 ஆம் நாள் நிகழ்விற்கு கலந்து கொள்ளும் பேறும் அடியேனுக்கு கிடைத்தது.

இன்று வரை மடத்துடன் எங்களுடைய தொடர்பு என்பது ஒரு கோயிலுக்குச் செல்வதைப் போன்று உள்ளத்தில் நெகிழ்ச்சியைத் தருவது. குடும்பத்துடன் இந்தத் தொடர்பு இருப்பது இந்த ஜென்மத்தில் இறைவன் எங்களுக்கு அளித்த பேறு ஆகும். பேரூர் திருமடத்துடன் எங்களுக்குக் கிடைத்த தொடர்பை இறைவன் தந்த வரமாகவே காண்கிறோம்.

99

முனைவர். சேதுராஜன்
முதல்வர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கலை அறிவியல் மற்றும் தமிழ்க்கல்லூரி,
பேரூர், கோவை.

பெரியசாமி என்று அழைக்கப்படுகின்ற நம் இதயத்தை கவர்ந்த தாயாய் தந்தையாய் இருந்த இருக்கும் அடிகளார் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் அவர்நினைவை போற்றி வணங்குகின்றேன். பெரியசாமி அவர்களை நான் சந்தித்தது எனது வேலையின் நேர்முகத் தேர்வின்போது 1991இல் நான் முதன் முதலில் அடிகள் பெருந்தகைகளை சந்திக்கும் பேறு பெற்றேன். நேர்முகத் தேர்வை நடத்திய பின்னர் என்னைப் பற்றிய விவரங்களை நான் படித்த பள்ளி கல்லூரிகளில் விசாரித்து வைத்த நிலையில் எனக்கு பணி நியமனம் தந்தார்கள். நிர்வாக செயல்பாடுகளால் எனது ஊதியம் சில மாதங்கள் கழித்து வந்தது. அதுவரை எனக்கு உணவு என் செலவுக்கு ஊதியம் ஆகிய இரண்டும் என்னுடைய சூழல் அறிந்து அடிகள் திருவடிகள் தந்தார்கள். எனது ஊதியம் கிடைத்தவுடன் நான் பணத்தை திருப்பித் தருவதற்காக சென்றபோது என்னை கடிந்து கொண்டார்கள். தன்னுடைய ஊதியத்தில் இருந்து தான் தருவதால் இதனை திருப்பித் தர வேண்டாம் என்று பேரன்புடன் கூறிவிட்டார்கள். இந்த இடத்தில் பெரியசாமி அவர்களுடைய தாயினும் சால பரிந்து செயல்படும் அன்பின் உள்ளமானது எனக்கு தொடக்க நிலையிலேயே புரிய வந்தது.

சாமிகள் பல கோயில்களுக்கும் செல்லுகின்ற பொழுது கல்லூரி பேருந்தில் எங்களுடன் இணைந்து வருவார்கள். அவ்வாறு வருகின்ற பொழுது கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களாகிய நாங்கள்

உடன் இருப்போம். அவர் பணிகளின் நிமித்தம் அங்கங்கே இறங்கிவிட்டு எங்களை சுற்றுலா பார்ப்பதற்காக பேருந்தில் அனுப்பிவிடுவார்கள். இலவசமாக பல்வேறு விதமான திருத்தலங்கள் பல்வேறு விதமான நிகழ்வுகள் அருமையான உணவு சிறப்பான தங்குமிடம் ஆகிய அனைத்தையும் அடிகள் பெருந்தகைகள் மாணவக் கண்மணிகள் மற்றும் எங்களுக்கும் அளித்ததனா பல கோயில்களுக்குச் செல்லும் பேறு பெற்றவனாகத் திகழ்ந்தேன். மிகப்பெரிய முதல்வராக மிகப்பெரிய கல்லூரிச் செயலாளராக மிகப்பெரிய ஆதீனத்தின் தலைவராக இருந்தாலும் மாணவர்களிடத்திலும் எங்களிடத்திலும் அவர் காட்டிய பேரன்பும் எங்களுடன் இணைந்து கல்லூரி பேருந்தில் வந்த செயலும் அவரது எளிமைக்கு மிகப்பெரிய சான்றாக அமைகின்றது.

நான் நாட்டு நலப்பணித்திட்ட செயல் அலுவலராக கல்லூரியில் பணியாற்றி வந்தேன். பல கிராமப்புறங்களில் 10 நாட்கள் மாணவர்களுடன் தங்கி செயல்படுத்துதல் வேண்டும். எந்த கிராமத்திற்கு நாங்கள் சென்றாலும் முகாமிற்கு அடிகளார் வந்துவிடுவார். வந்து செயல் வீரராக களத்தில் இறங்கி செயல்படுவார். கல் தூக்குவது பிற பணிகள் செய்வது என்று சாமிகள் செய்த பணிகள் அளப்பரியவை ஆகும். இவ்வாறு அவர் செய்வதன் காரணமாக மாணவர்கள் இன்னும் இன்னும் ஊக்கமாக செயல்பட்டார்கள். கொங்கு நாட்டு அப்பரடிகள் என்று அடிகளை அழைத்ததன் முழுப் பொருளையும் நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் நாங்கள் நேரடியாக கண்டு மகிழும் பேறு பெற்றோம்

பெரிய பதவியில் இருப்பவர்கள் தனக்குக் கீழ் இருப்பவர்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கு பெரியசாமி அவர்கள் மிகப்பெரிய முன் உதாரணமாகத் திகழ்ந்தவர். நான் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருக்கின்ற பொழுது என்னை தாயினும் மேலாகப் பார்க்க வந்து, திருநீற்றுக் காப்பு அணிவித்து, உடல்நலம் தேற வழிபாடு செய்த பெருந்தகை அவர். எனக்கு மட்டுமல்ல எங்கள் கல்லூரியில் பணிபுரியும் எந்த ஆசிரியராக இருந்தாலும் மருத்துவமனைக்குச் சென்று உடல் நலம் விசாரித்து

திருநீற்று காப்பு அணிவித்து வருவதை தனது வழக்கமாகக் கொண்டிருந்தவர். அனைவரிடத்திலும் தேவைப்படுகின்ற பொழுது ஆறுதல் கூறும் ஒரு மகானாக திகழ்ந்தார் நம் பெரியசாமி அவர்கள்.

மடத்திற்கு யார் வந்தாலும் விருந்தோம்பும் தன்மையில் தன்னிகரற்ற தலைமை சான்றவராகத் திகழ்ந்தவர் பெரியசாமி அவர்கள். மடத்திற்கு வருகின்ற யாரும் உணவு உண்ணாமல் செல்ல முடியாது. தமிழர் பண்பாட்டுத் தலைவராக திகழ்ந்ததனை நாள்தோறும் நேரடியாகக் காணும் பேறு பெற்றேன்.

சாமிகளைப் பார்க்க வருகின்ற ஒவ்வொருவரையும் அவர் எளிமையாக அணுகும் தன்மை, இனிமையாக பேசும் தன்மை, அடியார்களுடன் இணைந்து தானும் ஒரு எளியவனாக உணவு உண்ணும் தன்மை எல்லாம் தனித்துவம் வாய்ந்த சிறந்த பண்பாட்டுக் கூறுகளாக அவரிடத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஆகும். பெருக்கத்து வேண்டும் பணிதல் என்ற வள்ளுவர் கூற்று அடிகளார் உடைய பண்பு நிலைகளை பார்க்கும் போது என் நினைவில் வந்தது.

பல வேலைகள் செய்கின்ற பொழுது சில செயல்களில் சில குறைபாடுகள் நேரும். சில செயல்கள் செய்ய முடியாமல் போகும். அந்த நேரத்தில் எல்லாம் கடிந்து செயல் செய்யக் கூறும் அடிகளார், அவற்றை தன் மனதில் வைக்காமல் அடுத்த நொடியே கனிந்த பார்வை பார்ப்பதும் இனிய சொல் பேசுவதும் அனைவரையும் ஆச்சரியப்படும் வகையில் காணப்படுவது. வெள்ளியங்கிரி கோயில், காலேஸ்வரர் கோயில், பூண்டி கோவில் முதலான கோயில்களில் திருக்குட நன்னீராட்டு நடக்கும் போது மகளிர் வேள்வி செய்யும் தன்மையையும் தமிழ் முறைப்படி திருக்குட நன்னீராட்டு பார்க்க முடியும். பெண்மையைப் போற்றும் பெண்மையை மதிக்கும் மிகப்பெரிய சான்றோராக நம் அடிகளார் அவர்கள் செயல்பாடுகள் வாயிலாக பிறருக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தது நினைவில் என்றும் போற்றுதற்கு உரியது ஆகும்.

கல்லூரியில் ஒன்பான் இரவுத் திருவிழா போது மகளிருக்கான நிகழ்வாக ஒரு நாள் முழுவதும் நடக்கும். அதில் பெண்களை

மையமாக வைத்த கருத்தரங்குகள். மகளிரும் சமயமும், மகளிரும் சடங்குகளும், மகளிரும் குழந்தையும் என்று பல்வேறு விதமான தலைப்புகளில் கருத்தரங்குகள் நடக்கும் இத்தலைப்புகள் அனைத்தும் இளைய சமுதாயத்தினருக்கு மிகப்பெரிய விழிப்புணர்வை ஊட்டும் வகையில் அமைவது என்பது கருத்தரங்கின் வெற்றியாகத் திகழும்.

தமிழ்க் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் மிகப்பெரிய அளவில் தமிழகமெங்கும் தமிழைப் பரப்புகின்ற வகையில் மிகச் சீரிய பணியாற்றி வருகிறார்கள். மிகப்பெரிய அளவில் ஆளுமை மிக்கவர்களாக எம் முன்னாள் மாணவர்கள் பலர் திகழ்கிறார்கள். கவிஞராக, எழுத்தாளராக, அரசியல் வல்லுநராக பல்வேறு விதமான துறைகளிலும் தலைமை சார்ந்தவர்களாக கல்லூரி மாணவர்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து பல துறைகளிலும் காணப்படுகிறார்கள்.

தமிழகத்தில் காணப்படும் பல்வேறு விதமான கோயில்களில் அறங்காவலர்களையும் அறங்காவலர் உறுப்பினர்களை சிறந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமனம் செய்கின்ற தன்மை உடையவராத் திகழ்ந்தவர். அதற்கு காரணமாக அமைந்தது பெரியசாமி அவர்கள் வகித்த பதவி ஆகும்

சாமிகள் இந்து அறநிலையத்துறை உயர்மட்ட குழுவில் இருந்த காரணத்தால் தமிழகக் கோயில்களில் தமிழ் முறைப்படி அர்ச்சனை செய்தல் தமிழ் முறைப்படி வழிபாடு செய்தல் முதலானவற்றில் சீரிய கவனம் செலுத்தியவர். தமிழகம் வாழ்வியல் நிகழ்வுகளில் தமிழ் முறைப்படியே அனைத்துச் சடங்களும் செய்ய வேண்டும் என்ற கொள்கை உறுதியுடன் தானும் செயல்படுத்தி பிறரையும் செயல்படுத்தச் செய்தவர். ஆயிரத்துக்கு மேற்பட்ட திருக்கோயில்களில் திருநெறிய வழிபாட்டையும், திருக்குடமுழுக்கையும் தமிழ் முறைப்படி செய்த பெருமை சான்றவர் ஆக திகழ்ந்தவர் நம் பேரூர் அடிகளார் ஆவார். உலக சைவப் பேரவை, உலக திருக்குறள் பேரவை முதலான பல அமைப்புகளில் தலைமை சான்றவராக இருந்து பொறுப்பு வகித்து பல மாநாடுகளை நடத்திய வித்தகர் அவர். அவர் 12க்கும் மேற்பட்ட

உலக நாடுகளில் சைவத்தையும் தமிழையும் சமூக நீதியையும் நிலைப்பாட்டிய பெருமைக்கு உரியவர்.

பேரூர் அடிகளாரை எண்ணுகின்ற பொழுது நம் நினைவிற்கு வருவது சைவமும் தமிழும், சமூக சமநீதியும் ஆகும். சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்களாகக் கொண்டு மாணவர் நலனே மேம்பட்ட நலன் என்பதை உணர்ந்து செயல்பட்ட அருள் நிறை வள்ளலாகத் திகழ்ந்தவர் நம்முடைய சீர் வளர் சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் ஆவார்.

100

தவத்திரு முத்து சிவ ராமசாமி அடிகள்
திருநாவுக்கரசர் திரு நந்தவனத் திருமடம்
தென்சேரிமலை - 641 669.

கயிலை குருமணி சீர் வளர்சீர்
பேரூர் அடிகளாரின் நூற்றாண்டு விழா

தமிழைத் துறக்காத துறவி
மண்ணினில் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்
அண்ணலார் அடியார் தமிழ் அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விலா பொலிவு கண்டார் தல்
உண்மையா எனில் உலகர்
முன் வருக என உரைப்பார்

சேக்கிழார் சுவாமிகளின் வாக்கிற்கேற்ப மண்ணில் பிறந்தவர் செய்யக்கூடிய செயலாவது அருளாளர்களுக்கும் அடியார்களுக்கும் அமுதுசெயாவித்தலும். நல்விழா பொலிவு கண்ட ஆறுதலும் ஆகும். அந்த வகையில் நமது பேரூர் 24 ஆவது குரு மகா சன்னிதானங்களாக வீற்றிருந்து அருளாட்சி செய்த சுவாமிகளின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடி மகிழ்ந்து வருகிறோம்.

சுவாமிகள் தமது இளம் வயதில் சிரவை ஆதீன குரு முதல்வரின் அணுகத் தொண்டராக இருந்து அருள் கல்வி கற்றார்கள். பின்னர் மயிலம் கல்லூரியில் தமிழில் இளங்கலை பட்டம் பெற்றவர்கள். பேரூர் ஆதீனத்தின் தவத்திரு ஆறுமுகசாமிகளால் அருட்கண் நோக்கம் பெற்று இளைய சன்னிதானமாக பொறுப்பேற்று, பள்ளிகளை விரிவுபடுத்தி, தரம் உயர்த்தி திருமடத்தின் வளர்ச்சியில் தன்னை

முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். 1967இல் பொறுப்பேற்ற பிறகு கல்லூரியைத் தொடங்கி வைத்தார்கள்.

திருக்கோயில்களில் திருத்தேரோட்டம் நடத்திட அரசிடம் ஆலோசனை வழங்கிச் சிறப்போடு செய்ய வழி வகுத்தார்கள். திருக்கோயிலில் திருப்பணி சிறப்புடன் நடத்திடவும் திருக்குட நன்னீராட்டு நடைபெறவும் சிரவை மூன்றாம் குரு மகா சன்னிதானங்களோடு இணைந்து செயல்பட்டார்கள். தமிழ் முறை வழிபாட்டை குன்றக்குடி ஆதீனங்களுடன் இணைந்து செயல்பட்டார்கள். நமது தென்சேரி மலை திருப்பணியில் ஆலோசனைகளை வழங்கி சிறப்பாக நடைபெற வழிவகை செய்தார்கள் நாம் இந்த திருமடத்தின் பொறுப்பு ஏற்பதற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி அருளாலும் பொருளாலும் தற்போது வரை வழிகாட்டி வருகிறார்கள் அத்தகைய பெருமைக்குரிய சுவாமிகளுக்கு, நாம் எல்லாம் இணைந்து இந்த விழாவை எடுப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

சுவாமிகள் காட்டிய வழியில் நாமும் சிறப்புடன் செயல்பட திருவருளும், குருவருளும் கூட்டி வைக்க வேண்டும் .சுவாமிகள் ஏழை எளிய மக்களுக்கு, மருத்துவ சேவை அளித்திட வேண்டும் என்று திருவுளம் கொண்டார்கள் .அதனை தற்போது உள்ள சுவாமிகள் சீரும் சிறப்புமாக நிறைவேற்றி நடத்தி வருகிறார்கள் .மிகவும் மகிழ்ச்சிக்குரியது இந்த விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்த திருவருளையும் குருவருளையும் போற்றி வணங்கி நிறைவு செய்கிறோம்.



கயிலை மாமுனி சீர்வளர் சீர்
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
108 போற்றி



1.ஓம் பேரூர் அடிகளே போற்றி

2.ஓம் அறம் வளர்க்கும் அன்னையே போற்றி

3.ஓம் கப்பிணித் தாயின் மகனே போற்றி

4.ஓம் எப்பிணியும் அறுப்பாய் போற்றி

5.ஓம் அன்பின் வடிவமே போற்றி

6.ஓம் ஆனந்தம் அருளும் வள்ளலே போற்றி

7.ஓம் சிவராமசாமியின் செல்வனே போற்றி

8.ஓம் தவத்தர் தம் தலைவனே போற்றி

9.ஓம் இன்பம் தருபவனே போற்றி

10.ஓம் இனிய வாழ்வு அருள்பவனே போற்றி

11.ஓம் கன்னல் மொழியே போற்றி

12.ஓம் மன்னல் புகழோய் போற்றி

13.ஓம் துன்பம் துடைப்பவனே போற்றி

14.ஓம் தூயநெறி காட்டுபவனே போற்றி

15.ஓம் எளியோர் குலதெய்வமே போற்றி

16.ஓம் களிப்பு மிக நல்குவாய் போற்றி

17.ஓம் கண்கண்ட தெய்வமே போற்றி

18.ஓம் கருணை வள்ளலே போற்றி

19.ஓம் புன்னகை முகத்தோய் போற்றி

20.ஓம் நன்நெறி படைத்தோய் போற்றி

21.ஓம் கொங்கு நாட்டு அப்பரே போற்றி
22.ஓம் குவலயம் போற்றும் அழகரே போற்றி
23.ஓம் கல்வியின் நாயகா போற்றி
24.ஓம் வல்வினை நீக்குவாய் போற்றி
25.ஓம் தமிழைக் கண்ணாய்க் கொண்ட முதல்வரே போற்றி
26.ஓம் தரணியில் தூயநெறி காட்டியோய் போற்றி
27.ஓம் முத்தமிழ் வித்தகா போற்றி
28.ஓம் நித்திலமாய் ஒளிர்வாய் போற்றி
29.ஓம் காணிபகம் ராமசாமி அடிகளே போற்றி
30.ஓம் தண்டமிழ் வளர்த்த நாயகா போற்றி
31.ஓம் குழந்தை மனத்தாய் போற்றி
32.ஓம் பழங்குடி பேணுவாய் போற்றி
33.ஓம் இன்தமிழ் வளர்த்த எளியோய் போற்றி
34.ஓம் ஞானசித்தி பெற்றோய் போற்றி
35.ஓம் நேர்மையின் இலக்கணமே போற்றி
36.ஓம் பார்போற்றும் முனிவரே போற்றி
37.ஓம் எளிமையில் இனிமை காட்டினோய் போற்றி
38.ஓம் அரிய செயல் பல செய்தோய் போற்றி
39.ஓம் அறக்கதிர் வளர்த்தாய் போற்றி
40.ஓம் புறப்பற்று அறுத்தாய் போற்றி
41.ஓம் சாந்தலிங்க குருவருள் பெற்றோய் போற்றி
42.ஓம் சாந்தம் அளிக்கும் தன்மையோய் போற்றி
43.ஓம் மகத்துவம் பெற்றாய் போற்றி
44.ஓம் அகத்தியன் ஆனாய் போற்றி
45.ஓம் குருவென உம்மைக் கொண்டோம் போற்றி

46.ஓம் திருவென எமக்கு ஆனோய் போற்றி
47.ஓம் பசிப்பிணி மருத்துவ போற்றி
48.ஓம் கசிவுடை உளத்தவ போற்றி
49.ஓம் தன்னிகரில்லா தலைவா போற்றி
50.ஓம் தத்துவம் கடந்த சோதியே போற்றி
51.ஓம் படிவராய்த் திகழ்ந்தாய் போற்றி
52.ஓம் குடிப்பெருமை காத்தாய் போற்றி
53.ஓம் இன்சொல் மாலை அளித்தோய் போற்றி
54.ஓம் அருமையில் எளிய உருவே போற்றி
55.ஓம் செய்தவப் பயனே போற்றி
56.ஓம் தெய்வமாய்க் காட்சி தந்தாய் போற்றி
57.ஓம் தாயாய் எமக்குத் திகழ்ந்தாய் போற்றி
58.ஓம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தாய் போற்றி
59.ஓம் சத்தியத்தின் தலைமகனே போற்றி
60.ஓம் பத்தியத்தால் வாழ்ந்தவனே போற்றி
61.ஓம் அன்பே வடிவாய் ஆண்டவா போற்றி
62.ஓம் இன்புறு கருணை கொண்டவா போற்றி
63.ஓம் தமிழ் வழிபாட்டுச் செம்மலே போற்றி
64.ஓம் அமிழ்தமாய் உரை தருவாய் போற்றி
65.ஓம் தெய்வம் நீ என்றுணர் என்று சொன்னவா போற்றி
66.ஓம் அன்பின் வழியில் அகிலத்தை ஆண்டவா போற்றி
67.ஓம் சாந்தலிங்கர் தாள் பணிந்தாய் போற்றி
68.ஓம் மாந்தர்கள் வணங்கும் மகான் ஆனாய் போற்றி
69.ஓம் பேரின்ப நிலை காட்டியவா போற்றி
70.ஓம் இன்பத்தமிழை ஊட்டியவா போற்றி

71.ஓம் காந்தமாய் மக்களைக் கவர்ந்தாய் போற்றி
72.ஓம் சாந்தமுடன் வாழ வழிவகுத்தாய் போற்றி
73.ஓம் தரணி போற்றும் உத்தமா போற்றி
74.ஓம் எங்கள் வாழ்வு சிறக்க வந்தவா போற்றி
75.ஓம் பயன்மரமாய் எங்கும் இருந்தாய் போற்றி
76.ஓம் நயனுடையார் உளம் நிறைந்தாய் போற்றி
77.ஓம் தமிழெனும் நாதம் தந்தவா போற்றி
78.ஓம் சங்கத்தமிழைத் தழைத்திடச் செய்தவா போற்றி
79.ஓம் தமிழ் அருச்சனை கொணர்ந்தவா போற்றி
80.ஓம் அமிழ்த மொழியை அருந்தச் செய்தவா போற்றி
81.ஓம் சைவம் தழைக்க வந்தவா போற்றி
82.ஓம் சன்மார்க்க நெறியில் நின்றவா போற்றி
83.ஓம் எங்கும் தமிழ் முரசு அறைந்தாய் போற்றி
84.ஓம் பொங்கும் தமிழுணர்வ புகட்டினாய் போற்றி
85.ஓம் ஒளிநெறி காட்டிட வந்தவா போற்றி
86.ஓம் ஓங்காரத்துப் பொருள் ஆனவா போற்றி
87.ஓம் காலத்தால் அழியாத காவியமே போற்றி
88.ஓம் சீலத்தவர் வணங்கும் தெய்வமே போற்றி
89.ஓம் நிலவென குளிர்ச்சி தருபவா போற்றி
90.ஓம் நிம்மதி அருளும் வள்ளலே போற்றி
91.ஓம் சிவம் வளர்க்கும் குருமணியே போற்றி
92.ஓம் நவமணியாய் விளங்கிடுவாய் போற்றி
93.ஓம் சாத்திர நெறிப்படி வாழ்ந்தவா போற்றி
94.ஓம் சத்திய நெறியைக் காட்டியவா போற்றி
95.ஓம் உலகெலாம் அறநெறியைப் பரப்பியவா போற்றி

96.ஓம் அலகில் சோதியனாய் அருள்தருவாய் போற்றி

97.ஓம் சந்திர சூரியன் ஆனவா போற்றி

98.ஓம் அமிழ்தத் தமிழானாய் போற்றி

99.ஓம் அறிவின் திருவே போற்றி

100.ஓம் அற்புதம் நிகழ்த்துவாய் போற்றி

101.ஓம் அடியவர்க்கு அருளுவாய் போற்றி

102.ஓம் உளப்பிணி மருத்துவா போற்றி

103.ஓம் கலைகளாய் வாழ்வாய் போற்றி

104.ஓம் சொல்லேர் உழவா போற்றி

105.ஓம் புவிபுகழ் புனிதனே போற்றி

106.ஓம் நிலவின் ஒளியைக் கொண்டவா போற்றி


107.ஓம் மருதாசல அடிகளைத் தந்தவா போற்றி

108.ஓம் குருவாக என்றும் வணங்குவோம் போற்றி போற்றி

ஆக்கம்

முனைவர் புவனா சீவானந்தம்

முனைவர் சந்திரா கிருட்டிணன்




போற்றி ஓம் நமச்சிவாய
காவாய் கனகத் திரளே போற்றி !
கயிலை மலையானே போற்றி ! போற்றி !!
திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம்